# நூறு
# பிரசங்கங்கள்



எஸ். பரமானந்தம்

# நூறு பிரசங்கங்கள்

எஸ். பரமானந்தம்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95A, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை-600 007
Tel. : 044-25323231, 26420173, 26420743
E-mail: elshq@elsindia.org, Website: www.elsindia.org
Online Store: www.christianbooksindia.com

Pub. No. 368 - TAMIL

First ELS Edition : August 2021

# ONE HUNDRED SERMONS

S. PARAMANANDAM

Print : Meipporul Achakam, 044 - 26741526
Email : meipporul@gmail.ocm

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிரசங்கி | ... | 7 |
| 2. | ஜீவ மார்க்கம் | ... | 12 |
| 3. | ஆதிச்சபை | ... | 16 |
| 4. | கடவுள் பிள்ளைகள் | ... | 20 |
| 5. | பாவத்தின்மேல் வெற்றி | ... | 24 |
| 6. | இருதயத்தில் கடவுள் | ... | 29 |
| 7. | பேதுருவின் நிழல் | ... | 35 |
| 8. | நடக்கும் வழி | ... | 38 |
| 9. | இன்னும் இல்லை | ... | 42 |
| 10. | ஒரு மைலுக்கு இரு மைல் | ... | 46 |
| 11. | குன்றாத நம்பிக்கை | ... | 50 |
| 12. | நெடுங்கால நோயாளி | ... | 55 |
| 13. | அடியாருக்கடியார் | ... | 60 |
| 14. | சவுல் மதியீனம் | ... | 64 |
| 15. | மூன்று கண்ணாடிகள் | ... | 68 |
| 16. | காகங்கள் | ... | 73 |
| 17. | "என் சமாதானம்" | ... | 76 |
| 18. | அறுப்புப் பண்டிகை | ... | 81 |
| 19. | கிறிஸ்துவின் மகிமை | ... | 85 |
| 20. | கிறிஸ்துவின் வெற்றி | ... | 89 |
| 21. | ஈகைப் பிரமாணம் | ... | 93 |
| 22. | இல்லாமை எடுபடல் | ... | 97 |
| 23. | "சேருங்கள், சேருவார்" | ... | 101 |
| 24. | வெளிப்படுத்தல் | ... | 105 |
| 25. | கடவுள் நினைவுகள் | ... | 110 |

26. கடவுள் ராஜ்யம் ... 114

27. முடிவில்லாக்கேள்வி ... 117

28. தோமா அறிக்கை ... 122

29. குருத்தோலை ஞாயிறு ... 127

30. செய்கையின் பாக்கியம் ... 131

31. முன் செல்லும் தெய்வம் ... 135

32. ஒருவனை இழுக்க அநேகர் பின்செல்ல ... 139

33. அத்திப்பழக் காலமில்லை ... 143

34. வல்லமையும் கிருபையும் ... 150

35. ஒன்றே ஒன்று ... 154

36. அதிசய அன்பு ... 160

37. சிலுவை மகத்துவம் ... 167

38. உயிர்த்தெழுதலின் ஜீவியம் ... 171

39. விடுவிக்காமற்போனாலும் ... 175

40. தேவ வெளிப்படுத்தல் (கிறிஸ்மஸ்) ... 181

41. நாகமான் மாத்திரம் ... 189

42. உயர்வு, தாழ்வு ... 193

43. வஸ்திர ஓரம் ... 198

44. இருதயக் கடினம் ... 203

45. ஜெபம் பண்ணுகையில் ... 209

46. பிழைக்கும் வழி ... 214

47. சுவிசேஷப் பிரசங்கி ... 220

48. மரணத்துக்கு மரணம் ... 224

49. அவர் அறிந்திருந்தும் ... 228

50. வழிகாட்டி நடத்துதல் ... 232

51. அன்பின் பலன் ... 236
52. முகத்தின் வேறுபாடுகள் ... 240
53. அந்தக் கல் ... 245
54. ஆண்டவர் பிரலாபம் ... 253
55. எங்கள் போர் ... 260
56. ஓடுவோம் ... 267
57. ஆண்டவர் பேரறிவு ... 271
58. நடவாத வழி ... 276
59. தேவ பராமரிப்பு ... 284
60. பிலாத்து ... 289
61. கிறிஸ்து வெளிப்படல் ... 295
62. சாந்தமுள்ள ராஜா ... 299
63. சரீரத்தின் நோக்கம் ... 304
64. தம்மை ரட்சிக்காத ரட்சகன் ... 308
65. வானவில் ... 313
66. கப்பர் நகூம் ... 317
67. காய்பா ... 325
68. புது உடன்படிக்கை ... 329
69. முடிந்தது ... 334
70. லோத்து தீர்மானம் ... 341
71. நன்மைபேசும் இரத்தம் ... 348
72. நமது எருசலேம் ... 351
73. பிலாத்துவின் மனைவி ... 355
74. கிறிஸ்துவின் முகம் ... 361
75. "நீ அறிந்திருந்தால்" ... 368

76. மாராவின் கசப்பு ... 372

77. சிரேனே ஊர் சீமோன் ... 377

78. கிறிஸ்துவின் சிநேகிதர் ... 384

79. ஜீவனுள்ளோர் கடவுள் ... 388

80. மாறாத கிறிஸ்து ... 392

81. நாலுவகைப் பாவிகள் ... 396

82. சாஸ்திரிகளும் மேய்ப்பரும் ... 401

83. பாதுகாப்பின் வாக்கு ... 405

84. அனுதாபமுள்ள கிறிஸ்து ... 410

85. ரட்சிப்பாவது என்ன? ... 414

86. மகதலேனா மரியாள் ... 420

87. எதுவரைக்கும் இருக்கும்? ... 427

88. உத்தமனான காலேப் ... 431

89. குருட்டாட்டம் ... 436

90. ஏற்றகாலத்தில் அறுப்பு ... 441

91. நல்ல போதகர் ... 445

92. தெய்வபக்தி ... 452

93. நன்றியுள்ள கிறிஸ்து ... 456

94. குயவன் வனைந்த பாத்திரம் ... 461

95. "ஆனால்" ... 467

96. கிறிஸ்துவை அறிகிற அறிவு ... 471

97. தேவசிநேகம் ... 478

98. "விசுவாசியாதிருந்தால்" ... 483

99. பவுலின் முள் ... 487

100. மறைவானவை வெளியானவை ... 493

# 1. பிரசங்கி

***"நான் பிரசங்கம் பண்ணவேண்டும்" (மாற்கு 1:38).***

*கடவுள் ராஜ்ஜியம் உலகில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமானால், கடவுள் இன்னாரென்றும், அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமின்னதென்றும், நம்மைக்குறித்த அவருடைய சித்தம் என்னவென்றும், நாம் அறிய வேண்டும். இதற்காகவே கிறிஸ்து உலகத்தில் வெளிப்பட்டார். அவர் மரிக்கும் வரை தமது ஜீவியத்தாலும் தாம் செய்த ஊழியத்தாலும் கடவுளை நமது பிதாவென்றும், தேவராஜ்ஜியத்தின் தன்மை இப்படிப்பட்டதென்றும், நாம் ராஜ்யத்தின் பிள்ளைகளாக வேண்டுமென்றும் போதித்தார். பன்னிருவரைத் தெரிந்து கொண்டு அவர்களைத் தம்மோடு வைத்து பக்குவப்படுத்தி வந்தார். பரிசுத்தாவி வந்தபோது திருச்சபை உண்டாயிற்று. ஆண்டவர் தமது ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கு திருச்சபையைக் கருவியாகக் கொண்டார். ஆவியால் நிறைந்த அவரது அடியார் எங்கும் புறப்பட்டுப்போய் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். தேவவசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ராஜ்யத்தின் புத்திரரானார்கள். மகிமையடைந்த ஆண்டவர் பவுலைத் தெரிந்து கொண்டு அவரையும் தமது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அப்போஸ்தலனாக அனுப்பினார். பவுலை பலவேலைகள் நெருக்குகையில் அவைகளால் இழுப்புண்டு போகாமல் "சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்" என்றார். மரணபரியந்தம் பிரசங்கவேலையை அப்போஸ்தலன் விட்டு விடவில்லை. அவர் எழுதியுள்ள நிருபங்களும் சுவிசேஷமும் சேர்ந்து புதிய ஏற்பாடு ஆகமமாயிற்று. தேவமக்கள் அதைச் சிறந்த பொக்கிஷமாகக் கண்டார்கள். கடவுளடியார் கிறிஸ்துவைப் படிப்பதிலும், புதிய ஏற்பாட்டை ஆராய்ச்சி செய்வதிலும் தங்கள் பலத்தையும், நேரத்தையும் செலவிட்டார்கள். அநேக அருமையான வியாக்கியானப் புஸ்தகங்களும் திரளான பிரசங்கங்களும் வளர்ந்து பெருகின. பரிசுத்தவான்கள் ஆவியின் பலத்தோடே செய்த பிரசங்கங்களால் ஆவிக்குரிய எழுப்புதல்கள் உண்டாயின. நிர்விசாரிகள் மனந்திரும்பி ரட்சிக்கப்பட்டார்கள்.*

திருச்சபையின் ஜீவன் சிறந்து விளங்கினது. தேவமக்கள் ஆவியினால் ஏவப்பட்டு உலகெங்கும் புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். உலகெங்கும் திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. சபைகள் பெருகவே பிரசங்கிகள் பெருகினார்கள்; பிரசங்கிகள் பெருகவே பிரசங்கங்களும் பெருகின.

## 1. பிரசங்கம்

பிரசங்கம், கிறிஸ்துவின் மகத்துவமான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது அவசியம். மனுஷருடைய மார்க்கம் அவரவருடைய நம்பிக்கைபோலவேயிருக்கும். ஒருவன் தான் விசுவாசிக்கிறபடியேதான் நடப்பான். அவமார்க்கமும் மூடபக்தியும், மனுஷர் வீண்கதைகளை நம்பினதின் பலனாகும். அவர்கள் சத்தியமின்னதென்று அறிந்து அதை ஏற்றுக் கொள்ளும்போது பொய்யிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பொய்யனால் வஞ்சிக்கப்பட்ட உலகத்தை ரட்சிக்கவே சத்தியமாகிய இயேசுகிறிஸ்து வெளிப்பட்டார். ஜனங்களை மூடியிருந்த அந்தகாரத்தையும் அறியாமையையும் கண்டு அவர் பரிதபித்தார். கிராமம் கிராமமாய் சுற்றி நடந்து சத்தியமாகிய ஒளியைப் பரவச் செய்தார். எக்காலத்திலும் மனுஷருக்கு தேவ தாகமுண்டு. ஆனால் அவர்கள் குடித்த தண்ணீரோ அவர்கள் தாகத்தைத் தீர்க்கவில்லை. அக்காலத்து யூதபோதகர்கள் பசித்து வந்த ஆத்துமாக்களுக்கு அப்பத்துக்குப் பதிலாக கல்லைக் கொடுத்தார்கள். அருள் நாதர் பிரசங்கிக்க ஆரம்பித்தவுடனே திரளான ஜனங்கள் அவரது ஜீவவார்த்தைகளைக் கேட்க ஆவலுடன் கூடினார்கள். தமக்கு எவ்வளவு நெருக்கமிருந்த போதிலும் அவர் பிரசங்கியாதிருப்பதில்லை. பிரசங்கம் செய்யாதபடி அவரை நிறுத்த முடியாது. ஓர் சமயம் பேதுரு அவரைத் தாமதிக்கும்படி கேட்டபோது “நான் மற்ற ஊர்களுக்கும் போய் பிரசங்கம் பண்ணவேண்டும், இதற்காகவே புறப்பட்டு வந்தேன்” என்றார். பிரசங்கமில்லாமல் சத்தியமின்னதென்றும் மனுஷர் அறிய முடியாது. சத்தியத்தை அறியாமலே ஜனங்கள் மடிந்து போகிறார்கள். அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களும் தாங்கள் பெற்றுக் கொண்ட சுவிசேஷத்தை பிரசங்கிக்காமலும், நிருபங்களாக எழுதியனுப்பாமலும் இருந்திருந்தால் நமது கதி எப்படியிருந்திருக்கும்? அதுமுதல் இதுவரை கடவுள் பக்தர்கள்

பிரசங்க வேலையில் நிலைத்திராதிருந்தால் திருச்சபையின் நிலைமைதான் எப்படியிருந்திருக்கும்? பிரசங்கத்தின் மூலமாய்க் கேள்வியும், கேள்வி அறிவால் கடவுள்பேரில் நம்பிக்கையும் உண்டாகின்றன. "பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்?" ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! அவர் தமது உண்மையுள்ள சாட்சிகளை எப்பொழுதும் வைத்திருக்கிறார். கடவுளை மறுக்கிறவர்களும் வேதவிரோதிகளும் எவ்வளவு திரளாய் எழும்பினாலும், "பிதாவாகிய கடவுளுக்கு அருமையான பிள்ளைகளும், கிறிஸ்துவின் உத்தம பிரசங்கிகளும் குறைவில்லாமலே இருக்கிறார்கள். "ஆண்டவர் வசனம் தந்தார், அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி" என்னும் வேதவாக்கு இன்றும் உண்மையே.

## 2. பிரசங்க ஆயத்தம்

பிரசங்கிகள் திரளாயிருப்பதினால் மாத்திரம் காரியம் பலிக்காது. எதையும் எப்படியும் பிரசங்கிக்கலாம் என்று நினைப்பது தவறு. உபதேசங்களை நாம் அறிந்திருப்பதால், சரித்திரம் நமக்குத் தெரிந்திருப்பதால், நினைத்த நிமிஷத்தில் பேசிவிடலாம் என்று எண்ணுவது துணிகரம். வாக்குச் சாமர்த்தியம் நமக்கிருப்பதால் நாம் கஷ்டமின்றி மளமளவென்று பேசிவிடலாம். ஆனால் ஆண்டவர் அதைத் தமது இருதயத்துக்கு உகந்த பிரசங்கமாக எண்ணுவாரா? வக்கீல்களையும், பிரசங்கிகளையும் ஒன்றாக நினைத்துவிடக்கூடாது. ஆண்டவருக்குப் பிரியமானதும் ஜனங்களுக்குப் பிரயோஜனமுமான பிரசங்கத்துக்குக் கட்டாயம் ஆயத்தம் அவசியம். கடமைக்காகச் செய்யப்படும் நோக்கமற்ற பிரசங்கங்கள் ஜனங்களுக்கு மனக்கடினத்தையும் நிர்விசாரத்தையும் உண்டாக்கும். அப்பேர்க்கொத்த சாரமில்லாத பிரசங்கங்களை சபையார் அடிக்கடி கேட்பதால் கடவுள் திருவார்த்தைக்கு இருக்கவேண்டிய பயபக்தி வரவரக் குறைந்துபோகும். இவ்வாறு கெட்டுப்போன சபைகள் பலவுண்டு. பிரசங்க வேலை விளையாட்டுக் காரியமல்ல. ஜீவனைக்கொடுக்க வேண்டிய பிரசங்கம், பிரசங்கியின் அஜாக்கிரதையால் மரணத்தை உண்டாக்கும். அனலை உண்டாக்கவேண்டிய பிரசங்கம், கவலையீனத்தால் குளிர்ச்சியை உண்டாக்கும் ஆகையால் பிரசங்க ஆயத்தம் மிகவும் அவசியம். சுருக்கமாகப்

பேசினாலும் விஸ்தாரமாகப் பேசினாலும் ஆவியின் அனலோடு பேசவேண்டும். பிரசங்கப் பொருள் குறிப்பாகவும் திட்டமாகவும் இருக்க வேண்டும். கேட்போர் லேசில் மறக்க முடியாதபடி அவர்கள் மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்க கருத்துள்ளதாயிருக்கவேண்டும். அறிவும் சாஸ்திரமும் தீவிரமாய் விர்த்தியாகும். இக்காலத்தில் நமது பொருளும் நடையும் காலத்தை அனுசரித்து இருக்கவேண்டும். நான் சொன்னதையே சொல்லுவேன், கேட்டால் கேளுங்கள் என்பதுபோல் பிரசங்கிக்கக்கூடாது. ஆண்டவரிடத்தில் தனித்திருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தேனீக்கள் பல புஷ்பங்களிலிருந்து தேன்சேர்க்கும் வண்ணமாய் கடவுளால் போதிக்கப்பெற்ற தேவ தாசர்களிடமிருந்து நாம் படிக்க வேண்டும். ஒருவனும் தன்னிலே பூரணமுள்ளவன் அல்ல. அப்போஸ்தலன் சொல்லுகிறபடி "சகல பரிசுத்தவான் களோடுங்கூடச்சேர்ந்து" ஆவிக்குரிய காரியங்களைக் கற்றறிய வேண்டும். நேரம் செலவிடாமலும் முயற்சியில்லாமலும் நல்ல பிரசங்கங்கள் வாய்க்காது. வாசிப்பதும் ஆராய்ச்சியும் ஆழ்ந்த தியானமும் பிரசங்க ஆயத்தத்துக்கு அவசியம்.

### 3. பிரசங்கி ஆயத்தம்

இதுவே எல்லாவற்றிலும் பிரதானம். பொதுவாய் நாம் அசட்டை செய்கிற காரியமும் இதுவே. பிரசங்கிப்பது லேசு என்று அநேகர் நினைப்பதற்குக் காரணமும் இதுவே. பிரசங்கம் ஆயத்தமாவது மாத்திரம் போதாது. பிரசங்கியும் ஆயத்தமாக வேண்டும். பிரசங்க ஆயத்தம் பேசும் விஷயத்தைப்பற்றினது. பிரசங்கி ஆயத்தம் ஆளைப்பற்றினது. இதைக் கவனியாததால் ஊழியத்தில் மிகுதியான தீமை நேரிடுகிறது. கூடியவரை பிரசங்கத்தை ஆயத்தம் செய்துகொண்டால் காரியம் முடிந்ததென்று நினைக்கிறோம். ஆயத்தம் செய்தபடி பிரசங்கித்து விட்டால் நன்றாக முடிந்ததாகச் சந்தோஷப்படுகிறோம். அப்படியல்ல. பிரசங்க ஆயத்தம் வேறே; பிரசங்கி ஆயத்தம் வேறே. பிரசங்கத்தைப் பார்க்கிலும் பிரசங்கியே விசேஷம். பிரசங்கியின் ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமானதாயிருக்கவேண்டும். பிரசங்கி கர்த்தர் உபயோகிக்கிற பாத்திரம். அசுத்தமான பாத்திரத்தை அவர் உபயோகிக்க மாட்டார். அவர் உபயோகிக்காவிட்டாலும் தாங்களாக

பிரசங்கிக்கிறவர்கள் அனந்தம். என்ன பிரயோஜனம்? கடவுளின் ஊழியரென்று நம்மை நாமே நினைத்துக் கொள்ளலாம். நாம் தேவ ஊழியத்தை நிறைவேற்றுகிறவர்களாக மற்றவர்களும் எண்ணிக் கொள்ளலாம். ஒருக்காலும் அது உண்மையல்ல. பிரசங்கியின் ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமானதாயிராவிட்டால் அவன் செய்யும் பிரங்கமும் பிரியமாயிராது. வார்த்தைகளும் சப்தமும் பிரசங்கமாகாது. பிரசங்கம் எவ்வளவு ஒழுங்கும், கருத்தும், சிறப்பும் பெற்றிருந்தாலும், பிரசங்கி ஆண்டவருக்கு உகந்த தாசனாயிராவிட்டால் அந்தப் பிரசங்கம் பலிக்காது. ஏன் பலிக்காது? அவர் நம்மை உபயோகிக்காததினாலே பலிக்காது. பிரசங்கத்தைப் பார்க்கிலும் நமது ஜீவியம் விசேஷம். நம்மை ஆசீர்வதிக்காத பிரசங்கம் பிறரை ஆசீர்வதிக்காது. நம்மை அனல் மூட்டாத பிரசங்கம் மற்றவர்களை அனல் மூட்டாது. நமது பிரசங்கம் முதலில் நமக்குள் கொழுந்து விட்டு எரிய வேண்டும். நமது ஜீவியத்தைப் பரவசப்படுத்த வேண்டும். நமது உள்ளத்திலிருந்து புறப்படும் வசனமே பிறர் உள்ளத்தில் பிரவேசிக்கும். நமது ஆவியிலிருந்து புறப்படும் பிரசங்கமே மற்றவர்கள் ஆவியை அசைக்கும். அனுபவத்தோடு புறப்படும் பிரசங்கம் வல்லமையோடு புறப்பட்டு மற்றவர்களுக்கு அனுபவத்தை உண்டாக்கும். கர்த்தருக்குச் சொந்தமான பிரசங்கியின் உள்ளத்திலிருந்து கர்த்தர் பேசுவார். வசனத்தைக் கேட்போருக்கு ஜீவன் உண்டாகும். பிரசங்கியின் ஆயத்தம் ஊக்கமான ஜெபத்தால் ஆகவேண்டியது. நமது குறைகளை நீக்கி, நம்மைச் சுத்திகரித்துத் தமது ஆவியால் நிரப்பும்படி ஜெபிக்க வேண்டும். ஆண்டவர் தமக்குச் சித்தமானபடி உபயோகிக்க நம்மை அவர் கையில் விட்டு விட வேண்டும். ஆண்டவர் மீதுள்ள அன்பும் ஜனங்கள் மீதுள்ள பரிதாபமும் நமது இருதயத்தை நிரப்பவேண்டும். இவ்வாறு பிரசங்கமும் பிரசங்கியும் ஆயத்தமாயிருக்கும்போது மிகுந்த பலனுண்டாகும். அவன் சுவிசேஷம் வெறும் வார்த்தைகளாயிராமல், அது "பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் முழு நிச்சயத் தாலும்" நிறைந்து அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கும். ஒருவேளை நமது பிரசங்கத்தை மறந்தாலும், பிரசங்கியின் ஜீவியம் என்றும் மறக்க முடியாத பிரசங்கமாக இருக்கும்.

# 2. ஜீவ மார்க்கம்

***"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" (சங். 16:11).***

**1. கடவுள் தாமாக நடப்பிப்பது மார்க்கமாகாது**

அவர் இப்பெரிய பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார். ஆனால் மனுஷன் சிருஷ்டிப்பில் விளங்கும் பிரமாணம், ஒற்றுமை, வல்லமை, ஞானம், மகிமை முதலானவைகளை உணர்ந்து, ஆனந்த பரவசமடைந்து, பகவானே! இவை யாவற்றையும் எவ்வளவு அதிசமாய்ப் படைத்தீரென்று சொல்லி, அவர் பாதத்தில் விழுந்து நமஸ்கரிக்கும் போதுதான் பக்தி மார்க்கத்தைக் கண்டடைகிறான். அவர் தமது குமாரன் மூலமாய் மகத்தான ரட்சிப்பை உண்டாக்கியிருக்கிறார். மனுஷன் சிலுவையின் ரகசியத்தை நன்குணர்ந்து கிறிஸ்துமூலமாய் பிதாவாகிய கடவுளோடு ஒப்புரவாகும்போதுதான் தேவமார்க்கத்தை அநுபவிக்கிறான். மனுஷ சம்பந்தமின்றி கடவுள் தாமாக நிறைவேற்றும் காரியங்கள் நமக்கு மார்க்கமாகாது. அதுபோலவே கடவுளின்றி மனுஷன் தானாக அநுஷ்டிக்கும் ஆசாரங்களும் மார்க்கமாகாது. இதை அநேகர் யோசிக்கிறதில்லை. மார்க்கத்தின் பேராலே ஏதோ சில கடமைகளை நிறைவேற்றிவிட்டால் அதுவே மார்க்கமென்று நினைக்கிறார்கள். கடவுள் இன்னாரென்று அவர்கள் அறிவதுமில்லை. அவரோடு ஐக்கியப்படுவதுமில்லை. கடவுளை அறியாமல் நாம் நிறைவேற்றும் கடமைகள் நமக்குத் திருப்தியாயிருந்தாலும் அது ஜீவமார்க்கமாகாது. மனுஷன் தானே செய்து கொள்ளும் காரியங்கள் செத்தமார்க்கமேயன்றி உயிருள்ள மார்க்கமாகாது. கடவுளும் மனுஷனும் ஐக்கியப்படுவதே மெய்மார்க்கமாகும்.

**2. பூர்வ பிதாக்களின் மார்க்கம் நமக்கு மார்க்கமாகாது**

அவர்கள் கடவுளைத் தேடினார்கள். அவரை நம்பினார்கள். அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். கடவுளோடு சஞ்சரித்தார்கள். வேதத்துக்காக கடவுளுக்கு ஸ்தோத்திரம். அங்குள்ள சரித்திரங்களால் போதிக்கப்படுகிறோம். எச்சரிக்கப் படுகிறோம். தைரியங்கொள்கிறோம். கடவுளைப்பற்றி அறிகிறோம். பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடுகளிலுள்ள

பக்தர்கள் சரித்திரமும், அங்குள்ள உபதேசமும் நமக்கு அதிகப் பிரயோஜனமானவை. விசேஷமாய் கிறிஸ்து மூலம் வெளிப்பட்ட கடவுளுடைய அளவில்லாத அன்பை அங்கே படிக்கிறோம். உலகத்தின் ஐசுவரியமெல்லாம் சேர்ந்தாலும் வேதத்துக்கு ஈடாகாது. அதை இடை விடாது ஆராய்ச்சி செய்வது நமது சிலாக்கியமும் முக்கிய கடமையுமாகும்.

அப்படியானால் பூர்வபக்தர்களின் மார்க்கம் நமது மார்க்கமாகாது என்பதின் கருத்தென்ன? உலகத்தில் பற்பல மார்க்கத்தார் மகா பூர்வ காலத்துக் கதைகளைப் படித்து, முன்னோர்கள் அப்படிச் செய்தார்கள், இப்படிச் செய்தார்கள் என்று பரவசத்தோடு பேசிக்கொள்வது வழக்கம். இப்பொழுது தங்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தமென்ன என்பதை யோசிக்கிறதில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தீர்க்கதரிசிகள், தாவீது, ஏசாயா, தானியேல் முதலான பக்தர்கள் சரித்திரம் நமக்கு எவ்வளவோ அருமையானது! அதுபோலவே அப்போஸ்தலர், பவுல் முதலான புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் சரித்திரமும் அருமையானதே. அவைகளை வாசிப்பதும் போதிப்பதுமே நமக்கு மார்க்க மாகுமா? அல்லது அவர்கள் திருநாட்களைக் கொண்டாடுவதே நமக்கு மார்க்கமாகுமா? அநேக அநேக வருஷங்களுக்கு முன்னிருந்த அவர்கள் அப்படிச் செய்தார்கள், இப்படிச் செய்தார்கள் என்று நாம் பெருமையாய்ப் பேசிக் கொள்வதே நமக்கு மார்க்கமாகுமா? அல்லது அவர்கள் தேடின கடவுளை நாம் தேடி, அவர்கள் நம்பின கடவுளை நாம் நம்பி, அவர்கள் கீழ்ப்படிந்த கடவுளுக்கு நாமும் கீழ்ப்படிந்து அவர்களை நடத்தின கடவுளால் நாமும் நடத்தப்படுவது மார்க்கமாகுமா? ஒருவர் எலியாவைப்பற்றி மகா உற்சாகத்தோடு பேசினபோது பக்கத்தில் நின்றவர்: அந்தப் பழைய கதை இருக்கட்டுமையா, கடவுளைப்பற்றி நீர் அறிந்ததைச் சொல்லும் என்று கேட்டார். யூதர்கள் முப்பிதாக்களாகிய ஆபிரகாம், மோசே, எலியாவைப்பற்றிப் பேசச் சலிக்கிறதில்லை. தாங்கள் ஆபிரகாமின் மக்கள் என்பதை எப்பொழுதும் மேட்டிமையாய்ப் பேசிக் கொள்வார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து: அந்தப் பெருமைக்கெல்லாம் குறைச்சலில்லை, ஆனால் ஆபிரகாமுடைய விசுவாசத்தைத் தான் காணோம் என்றார். கடவுளற்றவர்களாய் சகலவித பாவங்களுக்கும், அடிமைப்பட்டிருந்த யூதர் முற்பிதாக்களைப் பற்றிப் பேசுவதில்

என்ன பிரயோஜனம்? அவர்கள் மார்க்கம் இவர்களுக்கு மார்க்கமாகுமா? அவர்கள் பக்தி இவர்களுடைய பக்தியாகுமா?

ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே என்று வீணே சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. முற்பிதாக்களானாலும் அப்போஸ்தலர் பரிசுத்தவான்களானாலும், அவர்கள் கடவுளைத் தேடி, அவரை நம்பி, அவரால் நடத்தப்பட்டதுபோல, நாமும் நடத்தப்படும்படிக்கு, நமக்குத் திருஷ்டாந்தங்களாக கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். கடவுள் அவர்களுக்கு அப்படிச் செய்தார். இப்படிச் செய்தாரென்று நாம் பேசிக் கொண்டிருப்பதே மார்க்கமல்ல. வேதத்தை வாசித்து விட்டாலே பக்தியாகவும் வேத காரியங்களை ஒருவர் பிரசங்கிக்கக் கேட்டுவிட்டால் அதுவே பக்தியாகவும் நினைத்து மோசம் போகக்கூடாது. "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" மற்றவர் களுக்குத் தெரியப்படுத்தினதுபோல எனக்குத் தெரியப் படுத்துவீர். அவ்வாறு கடவுள் தெரியப்படுத்தும்போது ஜீவமார்க்கத்தின் அனுபவம் நமக்கு உண்டாகும். கடவுள் நம்மோடுகூடயிருந்து நம்மை நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர். அவ்வாக்கை நமது அனுபவத்தில் காண்பதே நமக்கு ஜீவமார்க்கமாகும். நமது தினசரி ஜீவியத்தில் கடவுள் நம்மை நடத்துவதே நமக்கு ஜீவமார்க்கம். தாவீது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொன்னவுடனே ஜீவ மார்க்கத்தைப் பற்றிப் பேசுகிறார். உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது புதிய ஜீவனாகிய பரிசுத்த ஆவியால் நம்மை நடத்துவதே நமக்கு ஜீவமார்க்கம். சாதாரணமான காரியங்களை நாம் வழக்கம்போல செய்து வருகிறோம். பசித்தால் புசிக்கிறோம். தாகித்தால் தண்ணீர் குடிக்கிறோம், வேண்டிய காரியங்களை கடைகளில வாங்கிக் கொள்கிறோம். இவை சாதாரணமென்றாலும் இவைகளிலும் தேவநடத்தல் நமக்கு வேண்டும். இவை தவிர, அநேக காரியங்களை நாமே நடத்திக் கொள்ளத் திராணியற்றவர்களாயிருக்கிறோம். இவைகளில் பரமபிதா நம்மை நடத்தவேண்டியது அவசியம். ஆபிரகாமை நடத்தின, இஸ்ரவேலை நடத்தின, தாவீதை நடத்தின, தேவனாக மாத்திரமல்ல, இன்றும் நம்மை நடத்தும் தேவனாக விளங்க வேண்டும். அவர் நம்மை நடத்துகிறார் என்பதை நாம்

திட்டமாயறிந்து அவரைப் போற்றவேண்டும். இதுவே ஜீவமார்க்கம். இதுவே அனுபவ மார்க்கம்.

### 3. கடவுள் நடத்துதல் நமக்கு எப்படிக் கிடைக்கும்?

**அ. தேவவசன ஆராய்ச்சி வேண்டும்.** "நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய மார்க்கத்தை உனக்குக் காட்டுவேன்" வேதம் நமது வழிக்கு ஒளி வேதத்தை அசட்டை செய்கிறவன் இருளில் நடக்கிறான்: தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் தீங்கில் சிக்கிக்கொள்கிறான். வேதத்தை ஒழுங்காய் நாள்தோறும் வாசித்து வருகிறவர்கள் தங்களுக்கடுத்த காரியங்களில் தேவசித்தமின்னதென்று அறிந்து கொள்கிறார்கள். வசனத்தின் மூலமாய் பிதா தமது சித்தத்தை நமக்குத் தெரிவிக்கிறார். அநேக பரிசுத்தவான்களுடைய அனுபவமும் இதுவே.

**ஆ. ஊக்கமான ஜெபம் அவசியம்.** நமது சங்கடங்களை உள்ளபடியே பிதாவுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு ஜெபிக்கையில், டெலிபோனில் பேசும்போதே பதில் கேட்பது போல, தேவசத்தம் உள்ளத்தில் தொனிக்கும். மயக்கமான விஷயங்களில் தெளிவுண்டாகும். ஒரு காரியத்தை நாம் செய்யலாம் அல்லது செய்யக்கூடாதென்பது நிச்சயப்படும். தேவன் தமது சித்ததை ஆவியினால் நமது உள்ளத்தில் வெளிப்படுத்துவது தவிர, புறம்பேயிருந்து மற்றவர்களைக் கொண்டு நமக்கு வெளிப்படுத்துவார், ஜெபிக்காவிட்டால் அவர் நடத்துதலை அறிய முடியாது.

**இ. தேவவாக்கில் நம்பிக்கை வைக்க வேண்டும்.** ஏராளமான வாக்குகளை பிதா நமக்குக் கொடுத்திருக்கிறார். அவை நாணயமாக மாற்றப்படாததால் காகிதச் செக்கு களாகவேயிருந்து தூங்குகின்றன. நம்பிக்கை என்னும் பாங்கியில் அவைகளை மாற்ற வேண்டும். இங்கே ஆபிரகாம் சரித்திரம் நமக்கு உதவி, அவர் நம்ப ஏதுவில்லாத சமயத்தில் கடவுள் வாக்கை நம்பி விசுவாசத்தில் வெற்றியடைந்தார். நமது காரியங்கள் சம்பந்தமான வாக்குகள் நமது உள்ளத்தில் தொனிக்கின்றன. அவைகளை உறுதியாய் நம்பிப்பிடிக்க வேண்டும். நாம் நம்பும்போது பிதா அவைகளை நமக்கு பலிக்கச் செய்வார். எத்தனை இடையூறுகள் நேரிட்டாலும் தேவவாக்கை உறுதியாய்ப் பிடிக்க வேண்டும்.

**ஈ. காத்திருக்க வேண்டும்**. ஊக்கமான ஜெபம் உத்தரவை கொண்டு வரும். தாமதித்தால் வாக்கை நம்ப வேண்டும். இன்னும் தாமதித்தால் "கர்த்தருக்காகப் பொறுமை யுடன் காத்திருக்க வேண்டும்" இவ்வாறு காத்திருந்த பக்தர்கள் தேவ நடத்துதலைக் கண்டார்கள். கடவுளை அறிந்த மக்களுக்கு ஆத்திரமும் அவசரமும் கூடாது. பிதா தம்மை நம்பிக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவர்கள் எதிர்பார்த்ததிலும் மேலான நன்மையை அருளுவார். "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்ற முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" (ஏசா. ***64:4***). இதுவே ஜீவ மார்க்கம். தேவனோடு சஞ்சரிப்பதே தேவமார்க்கம். கடவுள் நம்மை நடத்துவதை அறிந்து பிழைப்பதே ஜீவமார்க்கம். இதுவே அனுபவமார்க்கம். மற்றதெல்லாம் மனுஷமார்க்கம். ஜீவமார்க்கம் ஆசீர்வாதமும், வல்லமையும் நிறைந்தது.

# 3. ஆதிச்சபை

***"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்" (அப். 2:4).***

ஆண்டவர் மரிப்பதற்குமுன் திருச்சபையை ஸ்தாபிப்பதாகச் சொன்னார். அவர் மகிமையடைந்தபின் பெந்தெகொஸ்தே நாளில் அவர் சபை உண்டாயிற்று. இச்சபையைக் குழந்தைச் சபையென்று நாம் பேசுவதுண்டு. தற்காலத்துச் சபைகள் ஆதிச்சபையைப் பார்க்கிலும் அநேக விஷயங்களில் எவ்வளவோ வளர்ந்து பெருகியிருப்பதாகவும் எண்ணுகிறோம். ஒருவிதத்தில் இது உண்மையே. தற்காலம் உலகத்தில் ஏராளமான பெரிய ஆலயங்களும், திரளான தேவ ஊழியர்களும், பொன்முலாம் பூசின அலங்காரமான வேதாகமங்களும், ஜெபபுஸ்தகங்களும், இனிமையான கின்னரங்களும், பாடகர் வரிசையும், சிறப்பான ஆராதனை களும், வசதியான இருப்பிடங்களும், அனலைப் போக்கும் விசிறிகளும் விசேஷித்த கொண்டாட்டங்களும், பற்பல சங்கங்களும், நமது வேலைத்திறமைகளைக் கூறும் அறிக்கைப்பத்திரங்களும், இவை யாவற்றிற்கும் தேவையான

ஏராளமான பணங்களும் நமக்குண்டென்பது மெய்யே. ஆகையால் ஆதிச்சபையை குழந்தை என்று நாம் பேசுகிறோம். நாம் மேன்மை பாராட்டுகிற இவ்வளவு காரியங்களும் ஆதிச்சபைக்கு இல்லையென்பது வாஸ்தவம்தான். அதேசமயத்தில் அவர்களுக்குள்ளது நமக்கில்லையென்பதும் உண்மையே. ஆதிச்சபையை நாம் மறக்க முடியாது. கர்த்தர் மோசேயைப் பார்த்து "மலையில் நான் உனக்குக் காண்பித்த மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு" என்று கட்டளையிட்டதுபோல், நமதாண்டவரும் எம்மைப் பார்த்து: நான் பெந்தெகொஸ்தே நாளில் உங்களுக்குக் காண்பித்த மாதிரியின்படியே சபையைக் கட்டும்படி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார். இதை நினைத்துத்தான் பவுல்: "அவனவன் தான் அதன்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்" என்று எச்சரித்தார். ஆதிச்சபையின் முக்கிய லட்சணங்களைப் பார்ப்போம்.

## 1. அது ஆசீர்வாதத்தைப் பெற்ற சபை

"ரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" மற்றவர்கள் சபையோடு லேசாய் சேர்ந்து கொள்ள முடியாது. யார் யார் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப் பட்டார்களோ அவர்களே சபையின் அங்கங்களானார்கள். எல்லாரும் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமானார்கள். அவருடைய ஜீவனாலே அவர்களெல்லாரும் பிழைத்தார்கள். இரட்சிப்பின் நிச்சயத்தாலும் சந்தோஷத்தாலும் நிறைந்திருந்தார்கள். இதுவே ஆண்டவர் ஸ்தாபித்த சபை. அது உலகத்தில் பெருக வேண்டிய விதமும் அதுவே. இந்த மாதிரியின்படியே நாம் சபையைக் கட்ட வேண்டுமென்று ஆண்டவர் நம்மை எச்சரிக்கிறார். நமது சபைகளை ஆதிச்சபையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். இரட்சிக்கப்பட்டவர்களே நமது சபைகளிலிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மறுபிறப்பை அறியாதவர்களும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களும், அவரில் அன்பில்லாதவர்களும், தங்கள் மாம்சமும், மனதும் விரும்பினவைகளையே நடப்பிக்கிறவர்களும் நமது சபைகளில் இருக்கிறார்களே. இப்படிப்பட்டவர்களாலே எவ்வளவோ குழப்பங்களும், பிரிவினைகளும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. சபையின் தொகை பெருகவேண்டுமென்பது நமது ஆவல்.

யாராயிருந்தாலும் ஞானஸ்நானத்தைக் கொடுத்து வேதத்தில் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறோம். எல்லாம் நமது எண்ணமும் நமது முயற்சியுமாகவே இருக்கின்றன. ஆதிச்சபையிலோ ரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சேர்த்தார் என்று காண்கிறோம்.

## 2. ஆவிக்குரிய சபை

"எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்" பரிசுத்த ஆவியில்லாமல் சபையில்லை. ஆண்டவர் தமது ஜீவியமாதிரியாலும், உபதேசத்தாலும், கிரியைகளாலும், மரணம் உயிர்த்தெழுதலாலுமே சபையை ஸ்தாபிக்க முடியாது. தமது ஆவியினால் மாத்திரமே சபையை கட்டக்கூடும். ஆவியானவர் அருளப்படுவதற்கு அவர் நிறைவேற்றின கிரியைகள் யாவும் அவசியம். அவர் தமது ஊழியத்தில் மகிமையடைந்தபின் ஆவியை அனுப்பக்கூடியவரானார். அடியார் பரிசுத்த ஆவியால் நிறைந்தபோது திருச்சபை பிறந்தது. ஆவியினால் பிறந்த சபை ஆவியினால் வளர வேண்டும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல." அவன் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், இராப்போஜனம் சேர்ந்திருந்தாலும், ஆராதனைக்கு ஒழுங்காய் வந்தாலும் அவன் கிறிஸ்து சபையைச் சேர்ந்தவனல்ல. இதற்கு மறுபேச்சுக் கிடையாது. ஆண்டவர் பட்டபாடுகள் யாவும் தமது ஆவியை அடியாருக்கு அருளுவதற்காகவே. ஆவியானவர் சீஷர்களை நிரப்பவில்லையென்றால் அவர் பட்டபாடுகள் யாவும் வீணாகும். உலகத்தில் திருச்சபை இருக்காது. அவர்கள் ஆவியைப் பெற்றபோது அவர்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் பலத்தமாறுதல் உண்டாயிற்று. அவர்களுடைய முந்தின சகல குறைவுகளும் சுட்டெரிக்கப்பட்டு கிறிஸ்துவின் சாயலாக மாறினார்கள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வசித்து தம்மை அவர்கள் மூலமாய் உலகத்துக்கு வெளிப்படுத்தினார். தாம் தொடங்கின ஊழியத்தை அவர்கள் மூலமாய் நிறைவேற்றினார். இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைக்கிறார் என்றார்கள். அவர்கள் ஜெபத்தில், பேச்சில், பிரசங்கத்தில், நடக்கையில், எல்லாவற்றிலும் ஆவியின் வல்லமை காணப்பட்டது. நமது சபையாரைக் குறித்து அப்படிச் சொல்ல முடியுமா? திருச்சபை குழந்தைதான். நாமோ வளர்ந்து விட்டோம். எவைகளிலே

வளர்ந்து விட்டோம் என்பதை சபையாரே யோசித்துக் கொள்ள வேண்டியது.

### 3. ஆத்ம ஆதாயம் செய்த சபை

ரட்சிப்பின் நிச்சயத்தாலும், ஆவியின் சந்தோஷத்தாலும் பிழைத்த இவர்களுக்கு மற்றவர்களுடைய நிலைமை பரிதாபத்தை உண்டாக்கினது. புருஷர்களும் ஸ்திரீகளும் கிறிஸ்துவின் ஆவியினால் ஏவப்பட்டு, மற்றவர்களிடம் ஊக்கமாகப் பேசி அவர்களையும் ரட்சிப்பின் வழியில் நடத்தினார்கள். இவர்களை மேல்விசாரணை செய்ய அதிகாரிகள் இல்லை. இவர்களுக்கு மாதச் சம்பளமும் இல்லை. பாடுகளும் துன்பங்களுமே இவர்கள் பங்காயிருந்தன. என்ன நேரிட்டபோதிலும் கிறிஸ்துவின் ரட்சிப்பைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்லாதிருக்க அவர்களால் முடிய வில்லை. அவர்கள் அனுபவித்த ரட்சிப்பின் பாக்கியமே இதற்குக் காரணம். எங்கும் சபைகள் பெருகின. ரட்சிப்பைக் கூறினவர்கள் இழிவான நோக்கமின்றிப் பிரசங்கித்தது போலவே, வசனத்தை ஏற்றுக்கொண்டவர்களும் வேறு எவ்வித நோக்கமுமின்றி சபையில் சேர்ந்தார்கள். நமது சபைகளில் ஆத்ம வாஞ்சையுண்டா? கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர்கள் பிறர் தூண்டுதலின்றி கர்த்தருக்கு ஊழியஞ்செய்வார்கள். அவர்களை நாம் நிறுத்த முடியாது. இரட்சிப்பின் மாறுதலை அறியாதவர்களை நாம் கட்டாயப்படுத்துவது நியாயமல்ல. அப்படிப்பட்டவர்களின் ஊழியம் மாயமும் பொய்யுமாகும். சிலருக்கு அறிவும் பேசும் திறமையுமிருப்பதால் அவர்கள் கிறிஸ்துவின் சாட்சிகளாகமாட்டார்கள். ஆண்டவர் தம்மை அறியாதவர்களை, தம்மில் அன்புகூராதவர்களைத் தமது சாட்சிகளாக அனுப்பமாட்டார். ஜீவியத்தில் மாறுதல் இல்லாத மனுஷர் செய்யும் ஊழியத்தால் தேவராஜ்ஜியத்திற்கு இடையூறுதான் உண்டாகும்.

### 4. அன்புள்ள சபை

“விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்” சகோதர சிநேகத்தைக் குறித்தும், அவர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதைக் குறித்தும் ஆண்டவர் மகா முக்கியமாய்க் கட்டளையிட்டிருந்தார்.

கிறிஸ்துவின் சீஷரென்பதற்கு அதுவே அடையாளம் என்றும் சொன்னார். அந்தக் கட்டளை ஆதிச்சபையில் நிறைவேறினது. பற்பல சுபாவம், பற்பல குணம் உள்ள திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமாயிருந்தார்கள். இதற்கு ரகசியமென்ன? அவர்கள் ஜீவன் கிறிஸ்து, வாஞ்சை கிறிஸ்து, நோக்கம் கிறிஸ்து, பிரசங்கம் கிறிஸ்து, ஜெபம் கிறிஸ்து, இவ்வாறு திரளான கூட்டத்தாரின் எண்ணமும் ஏக்கமும் கிறிஸ்துவாயிருந்தால் ஏகசிந்தையும், அன்பையும், சகோதர சிநேகத்தையும் ஆதிச்சபையில் காண்கிறோம். அந்த மாதிரியின்படியே நாம் சபையைக் கட்டும்படி ஆண்டவர் நம்மை எச்சரித்திருக்கிறார். நாம் சபைகளில் காண்கிறதென்ன? ஆதிச்சபை குழந்தைச் சபை. நாமோ அறிவிலும் சாஸ்திரத் திலும் எவ்வளவோ வளர்ந்து விட்டோம். ஆதிச்சபை நமக்கீடாகுமா என்று நினைக்கிறோம். நமது சபைகளில் ஒரே இருதயமும் ஒரே மனமும் உண்டா? ஏக சிந்தையும் இணங்கும் சுபாவமும் உண்டா? சகோதர சிநேகமும் அன்பும் உண்டா? எதை ஆண்டவர் விசேஷித்துக் கூறினாரோ அது ஒன்றுதான் இல்லை. இது கர்த்தருடைய சபை என்று சொல்லவும் நமக்கு நியாயமுண்டா? தந்நயம், பெருமை, பொறாமை, மனமேட்டிமை, பகைவிரோதம், அவதூறு, தீமை செய்யும் சுபாவம், இவ்வாறு சாத்தானால் நாம் அவஸ்தைப்படும்போது சபையைக் குறித்து எப்படி மேன்மை பாராட்ட முடியும்? ஆவியால் நாம் நிறைந்தால் அல்லாமல் ஆதிச்சபைக்கு நாம் ஒப்பாக முடியாது. ஆவியினால் பிறந்த சபை ஆவியினாலேயே வளர வேண்டும்.

## 4. கடவுள் பிள்ளைகள்

***"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவா. 3:1).***

உலகிலுள்ள மனுஷரெல்லாரும் ஒருவிதத்தில் கடவுள் பிள்ளைகளே. அவர் நம்மைச் சிருஷ்டித்துப் பராமரித்து வருவதால் அவர் நமது பிதாவும் நாம் அவர் பிள்ளைகளுமாயிருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால்

கடவுளுக்கும் நமக்கும் சம்பந்தமற்றுப்போனால் சுதந்தரமும் மற்றுமுள்ள பாக்கியங்களும் அற்றுப்போகின்றன. இந்நிலையில் நாம் கடவுள் பிள்ளைகளென்று சொல்லிக் கொள்வதில் யாது பயன்? பாவத்தினால் நாம் பிதாவைவிட்டுப் பிரிந்து, தூரமாய் அகன்று, புத்தி சித்தம் ஆத்துமா கெட்டு, மகா தரித்திர நிலைமையிலிருக்கையில் கடவுள் பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன சுகம்? கெட்ட குமாரன் அந்தக் குடியானவனிடம் தான் ஒரு பெரிய சீமான் மகனென்றும், தன் தகப்பன் மகா ஸ்திதிபந்தரென்றும் சொன்னாலும், வயிற்றுக் கஞ்சிக்காகப் பன்றி மேய்க்கப் போகவேண்டியது தானே. நாம் சாத்தானுக்கு அடிமையாகித் தவிக்கும்போது நாங்கள் கடவுளின் பிள்ளைகளென்று சொல்வதில் யாதொரு பிரயோஜனமில்லை.

கிறிஸ்துமூலம் நமது பாவங்கள் மன்னிக்கப்பெற்று, பிதாவோடு ஒப்புரவாகி அவருடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்போமானால் நாம் கடவுள் பிள்ளைகள் என்பது பொருந்தும். இந்தப் பிதாபுத்திர ஐக்கியத்தை, அதன் பாக்கியத்தை, கெட்ட குமாரன் மனந்திரும்பி தகப்பனிடம் வந்தபோதுதான் அனுபவித்தான். இவ்வாறு ஒப்புரவானவர் களைக் குறித்தே: “நாம் கடவுளுடைய பிள்ளைகள்'' என்று யோவான் நிருபத்தில் சொல்லுகிறார். அதுமாத்திரமல்ல, இங்கே விளங்கும் கடவுளுடைய அதிசய அன்பை குறித்தும் புகழ்ந்து பேசுகிறார். “பிதா நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள்” என்று ஆச்சரியத்துடன் பேசுகிறார். அது எவ்வளவு பெரியதென்று சொல்ல நம்மால் முடியாது. கடவுள் யார்? நாம் யார்? நம்மைத் தமது அருமையான பிள்ளைகளாக அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அவரது அன்பு எப்படிப்பட்டது? தகப்பனது அந்தஸ்து, மேன்மை, உத்தியோகம், செல்வாக்கு, ஐஸ்வரியம் எவ்வளவு பெரிதோ அவ்வளவும் பிள்ளைகளுக்குச் சொந்தம். ஒரு பிச்சைக்காரன் பிள்ளைக்கு அந்தத் தகப்பனால் என்ன மேன்மை? ராஜாவின் குமாரனுக்கே ராஜமேன்மை உரியது. நாம் கடவுள் பிள்ளைகளென்பது உண்மையானால் அவர் மகிமையாவும் நம்முடையதே. இதை ஆழமாய் யோசித்துப் பார்த்த யோவான் கடவுள் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்கிறார்.

## கடவுள் பிள்ளைகள் யார்

### 1. கிறிஸ்துவை சொந்தமாக்கிக் கொண்டவர்கள் கடவுள் பிள்ளைகள் (யோவா. 1:12)

குமாரனிடத்தில் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கடவுளுடைய பிள்ளைகளாகும்படிக்கு அதிகாரம் கொடுக்கிறார். கிறிஸ்து மூலம் நாம் பாவ மன்னிப்பையும் பிதாவோடுள்ள ஐக்கியத்தையும் பெற்றுக்கொள்கிறோம். கடவுளுடைய பிள்ளைகளாகிய இயேசுவைச் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் யாவரும் கடவுளுடைய பிள்ளைகளே, பாவத்தால் தூரமாய் விலகிப்போன நமக்கு பிதாவைக் கண்டடையும் சிலாக்கியம் தேவ பிள்ளையாகிய கிறிஸ்துவால் கிடைக்கிறது. கடவுளைப் பிதாவே என்று ஒருவன் வாயினால் சொல்லுகிறதினாலே அவன் பிள்ளையாகமாட்டான். குமாரனை ஏற்றுக் கொள்ளும்போது, தேவபுத்திரனுடைய ஆவி நமக்குள் வந்து நாமும் கடவுளை அப்பா, பிதாவே! என்று கூப்பிடப்பண்ணுகிறார். புத்திர சுவிகாரத்தின் ஆவியையுடையவர்களே புத்திரர் ஆவார்கள்.

### 2. கடவுள் ஆவியால் நடத்தப்படுபவர்களை கடவுள் பிள்ளைகள் (ரோமர் 8:14)

குமாரனை ஏற்றுக்கொள்ளும்போது கடவுள் பிள்ளைகளாக அவர் குடும்பத்தைச் சேருகிறோம். அப்பா பிதாவே என்று உள்ளம் உருகி அவரை அழைக்கிறோம். இதுமுதல் கடவுளே தமது ஆவியால் நம்மை நடத்துகிறார். ஆகையால் "எவர்கள் தேவ ஆவியால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவ புத்திரராயிருக்கிறார்கள்" என்று பவுல் சொன்னார். இது தேவமக்களின் அனுபவம். முன்னே கடவுளுக்குத் தூரமாயிருந்து, தங்கள் மாம்சமும், சீர்கெட்ட மனதும் விரும்பினவைகளைச் செய்தவர்கள், இப்பொழுது பிதாவின் ஆவியால் நடத்தப்படுகிறார்கள். பிதாவின் ஆவியால் நடத்தப்படுவது அவர் சித்தம்போல் பிழைப்பதாகும். இதுவே தேவமக்கள் கீழ்ப்படிதல். பிதா புத்திர சம்பந்தம் கீழ்ப்படியும் ஜீவியத்தால் உறுதிப்படுகிறது. தாங்கள் கடவுள் பிள்ளைகள்தான் என்னும் நிச்சயமும் உண்டாகிறது. பவுல்தாமே மறுபடியும் சொல்லுகிறபடி "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நமது

ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" அதாவது கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, ஆவியானவர் நமக்குள் பிரவேசித்து நம்மை தேவசித்தப்படி நடத்துகிறார். அவ்வாறு நம்மை நடத்தும்போதே நாம் கடவுள் பிள்ளைகளாயிருக்கிறோம் என்ற நிச்சயத்தையும் அவரே நமக்குக் கொடுக்கிறார். நம்மில் அநேகருக்கு இந்த நிச்சயம் இல்லை. அப்படியிருந்தும் தங்களை தேவனுடைய பிள்ளைகளென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நாமே எண்ணிக்கொள்வதாலும் அல்லது மற்றவர்கள் சொல்வதாலும் நாம் கடவுள் பிள்ளைகளாவதில்லை. தேவாவியின் சாட்சியை உள்ளத்திலே பெற்ற மக்களே கடவுள் பிள்ளைகளாவார்கள்.

**3. மன்னிக்கும் சிந்தையுள்ளவர்கள் கடவுள் பிள்ளைகள்**

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர் களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக் காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரரா யிருப்பீர்கள்" ஏனென்றால் நமது பிதாவுக்கு அந்த சிந்தையுண்டு. பிதாவின் சிந்தையே பிள்ளைகளிடத்தும் இருக்கவேண்டும். மன்னிக்கும் சிந்தை நம்மிலுண்டா? நன்மைசெய்யும் குணமுண்டா? நமது பகைவிரோதம், கோபம், வைராக்கியம், பிடிவாதம், தீமைசெய்யும் சுபாவம் இவைகளைக் கவனிக்கும்போது நம்மை கடவுள் பிள்ளைகளென்று சொல்ல என்ன நியாயமிருக்கிறது? சகிக்க, மன்னிக்க, பொறுக்க நம்மால் முடியவில்லை. கிறிஸ்தவர்கள் என்கிற பேரையும் விட்டுவிட மனமில்லை. இவ்வாறு நம்மையே நாம் வஞ்சிக்கிறோம். கர்த்தருடைய ஜெபத்தில் "எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்று முன்பின்யோசியாமல் கிளிப்பிள்ளை மந்திரம்போல் சொல்லுகிறோம். உண்மையின்படி நாம் சொல்லுகிறதென்ன? எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னியாதிருக்கிறதுபோல எங்களுக்கும் மன்னியாதிரும் என்றே சொல்லுகிறோம். பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் எஜமானிடம் பூரணமன்னிப்புப் பெற்றுத் திரும்புகையில் தனக்கு நூறு வெள்ளிப்பணம் கொடுக்க வேண்டியவனைக் கண்டு,

அவன் எவ்வளவோ கெஞ்சியும் விடாமல், அவனைப் பிடித்து அவன் தொண்டையை நெரித்தான். எஜமான் அதை அறிந்து அவனை அழைத்து: பொல்லாத ஊழியனே, நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி அவனைத் தண்டித்தான். "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாதேபோனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்று ஆண்டவர் சொன்னார்.

கடவுள் பிள்ளைகள் திராளன மன்னிப்புப் பெற்றவர்கள். பிதா தங்களுக்கு இரங்கினதை லேசாய் மறக்கக்கூடியவர்கள் அல்ல. இந்த நன்றி எப்பொழுதும் அவர்களுக்குள் இருப்பதால், மற்றவர்களுக்கு மன்னிக்கும் சிந்தை அவர்களுக்குண்டு. என் பிதா எவ்வளவோ எனக்கு இரங்கினாரே, இன்னும் இரங்குகிறாரே, அப்படியிருக்க அவர் எனக்கு இரங்கினது போல் நானும் மற்றவர்களுக்கு இரங்கவேண்டுமே என்கிறார்கள். இந்த மன்னிக்கும் சிந்தை அவர்களுக்கிருப்பதால் அவர்கள் கடவுள் பிள்ளைகளாகிறார்கள்.

கடவுள் பிள்ளைகளுக்கு இன்னும் சில குறிப்புகளைச் சொல்லலாம். விரிவாகுமென்று நிறுத்துகிறோம். சுருக்கிச் சொன்னால் பிதாவைப்போல் பிள்ளை என்பதே நமது பிரமாணமாயிருக்க வேண்டும். பிதாவின் லட்சணங்களை கிறிஸ்துவில் காண்கிறோம். கிறிஸ்துவில் விளங்கின சிந்தையே நம்மிலும் இருக்க வேண்டும். இந்தச் சிந்தையில் நாளுக்கு நாள் நாம் வளரவேண்டும். அப்படியானால் ஆண்டவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருக்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

## 5. பாவத்தின்மேல் வெற்றி

***"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்" (1யோவா. 2:1).***

ஆண்டவர் நம்மை மேலான நிலைமைக்கு அழைத்திருக்கிறார். நமது பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும்.

நாம் பாவஞ்செய்யாதிருக்கவும் வேண்டும். கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் நாளுக்கு நாள் தேவசாயலுக்கொப்பாக மாறவும் வேண்டும். இவைகளில் ஒன்றைக் குறித்தும் கவலைப் படாதவர்களாயிருக்கிறார்கள். காலமெல்லாம் பாவமன்னிப்புக் கேட்பதே அநேகருடைய மார்க்கம். பாவமன்னிப்புக் கேட்பதே காலமெல்லாம் வேலையாயிருந்தால் பாவஞ்செய்யாமல் ஜீவிப்பது எப்போ? மற்றவர்கள் பாவமன்னிப்புப் பெற்றதோடு, பாவஞ்செய்யாமல் ஜீவிக்கவும் முயலுகிறார்கள். சிலர் பாவஞ்செய்யாமல் ஜீவிப்பதோடு கிறிஸ்துவின் சாயலுக் கொப்பாக மாறும்படி வாஞ்சிக்கிறார்கள். பிதா நம்மை அழைத்த முடிவான நோக்கம் நாம் கிறிஸ்துவுக்கொப்பாக மாறவேண்டு மென்பதே. இப்பொழுது நாம் கவனிக்கப்போகிற விஷயம் பாவஞ்செய்யாமல் பிழைக்க வழியென்னவென்பது தான். சில குறிப்புகளை மாத்திரம் பார்ப்போம்.

### 1. நினைவுகளைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்

சகல பாவங்களும் நினைவில் உற்பத்தியாகி, பேச்சில் வெளிப்பட்டு, செய்கையில் முடிகின்றன. மரத்தின் கிளைகளை வெட்டுவதில் பிரயோஜனமில்லை. சீக்கிரத்தில் ஏராளமான புதுக்கிளைகள் தோன்றும். மரத்தின் வேர் வெட்டப்பட்டால் கிளைகளை நாம் காணப்போவதில்லை. ஓர் செடியிலுள்ள மொக்குகளைக் கிள்ளிவிட்டால் கனிகள் உண்டாக வழியில்லை. தகாத எண்ணங்கள் நம்மனதில் தங்க இடம் கொடுத்தால், தகாத செய்கைகளுக்கு இடமுண்டாகும். நாம் செய்த பாவங்களைப்பற்றி யோசிப்போமானால் அவை ஏற்கனவே நமது மனதில் உண்டானவையென்று அறியலாம். மனம் எப்பொழுதும் சுத்தமாயிருக்க வேண்டும். சாத்தான் எய்யும் அக்னியாஸ்திரங்களுக்கு இடங்கொடுக்க கூடாது. அவைகள் நமது மனதில் தங்குமானால் திடீரென நமது பேச்சில் வெளிப்படும். செய்கையிலும் தோன்றும். நாம் பேசின புத்தியீனமான வார்த்தைகள் ஏற்கனவே யோசித்தவைகளே. "வீண்சிந்தனைகளை நான் வெறுத்து உமது வேதத்தில் மனதைச் செலுத்துகிறேன்" என்று சங்கீதக்காரன் சொன்னார். "எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குச் சிறையாக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும்."

**2. தேவ வசனத்தால் நிறைந்திருக்கவேண்டும்**

"உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119:11). ஆண்டவர் நமக்கு நேரிட்ட பலத்த சோதனைகளில் நமக்குள்ளிருந்த வேதவசனத்தைக் கைக்கொண்டு ஜெயம் பெற்றார். இது ஏராளமான வேதவசனத்தை மனப்பாடம் செய்து கொள்வதல்ல. வேத வசன அறிவு பூரணமாயிருந்தும் இடைவிடாமல் பாவஞ்செய்கிறவர்கள் அநேகர். வேத வசனத்தியானம் நமது இருதயத்தை ஆண்டுகொள்ளும் சக்தியாய் விளங்க வேண்டும். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" என்பதின் கருத்து அதுவே. கிறிஸ்து வேறே, வசனம் வேறே அல்ல. நாம் அறிந்து ஏற்றுக்கொண்டு தியானிக்கும் வசனம் கிறிஸ்துவின் மகிமையை நமக்கு வெளிப்படுத்தி நமது இருதயத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்கிறது. ஜீவ வசன ஆராய்ச்சியின் உள்ளான அனல் நம்மைப் பாவத்திலிருந்து தற்காக்கிறது. நமது உள்ளம் பரமகாரியங்களில் பரவசமடையும்போது நமது மனம் பாவத்தை நாடுகிறதில்லை. குளிர்ந்த இருதயமும், அசைவற்றுத் தூங்கும் சோம்பேறி மனமும், சோதனைகளுக்கிணங்கி பாவஞ்செய்கின்றன. தேவவசனத்தியானம் மிகவும் அவசியம்.

**3. கிறிஸ்துவில் நிலைத்திருக்கவேண்டும்**

யோவான் இதைத் தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறார். "அவரில் நிலைத்திருக்கிறவனெவனும் பாவஞ்செய்கிறதில்லை" என்கிறார். 'பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும்' கிறிஸ்துவில் பாவமில்லை. எவ்வளவுக்கு நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கு நாம் அவரைப் போலாகிறோம். அவர் நமக்குள் வசிக்க நாம் பூராவாய் இடங்கொடுக்கும்போது, அவர் தமது ஆவியால் நமக்குள் வசிக்கிறார். அவரே நமக்கு ஜீவனாகிறார். அவராலே நாம் போதிக்கப்படுகிறோம். நடத்தப்படுகிறோம். பாதுகாக்கப் படுகிறோம். அவரது அன்பு நமது உள்ளத்தை ஆண்டுகொண்டு பாவங்களிலிருந்து நம்மைத் தற்காக்கிறது. அவரில் நிலைத்திருப்பதற்குப் பிரதானமானவை இரண்டு. தேவ வசனத்தியானமும், தனிஜெபமும். வசனத்தின் வல்லமையைக் குறித்து சற்றுமுன் கவனித்தோம். ஜெபத்தைப் பற்றிப்

பார்ப்போம். பாவத்துக்கும் ஜெபத்துக்கும் ஒருக்காலும் பொருத்தமில்லை. பாம்பும் கீரியும்போல இரண்டும் ஒரு இருதயத்தில் தங்க முடியாது. ஜெபசிந்தை நமக்குள் இருக்கும்போது பாவஞ்செய்யமுடியாது. பாவசிந்தை நமக்குள்ளிருக்கும்போது உண்மையாய் ஜெபம் செய்ய முடியாது. இடைவிடாத ஜெபம் நம்மை ஆண்டவரோடு இணைக்கிறது. கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறவர்கள் ஜெபப்பிரியரே. ஜெபமற்ற மனுஷன் கிறிஸ்துவில் நிலைத்திருக்கமாட்டான். ஜெபம் என்று சொல்லும்போது கோவில் ஆராதனைகள், ஜெபக் கூட்டங்களில் நடக்கும் ஜெபமல்ல. ஒருவருமறியாத தனி ஜெபம். முழங்காலிலோ, உட்கார்ந்தோ, நடக்கும்போதோ, எப்பொழுதும் இடைவிடாமல் உள்ளத்திலிருந்து ஜெபதூபம் எழும்பிக்கொண்டேயிருக்க வேண்டும். நன்மையோ, தீமையோ, சந்தோஷமோ, துக்கமோ, லாபமோ, நஷ்டமோ, சகலத்தையும் குறித்து ஒன்றுவிடாமல் ஆண்டவரோடு சம்பாஷிப்பதே இடைவிடாத ஜெபம். வேத தியானமும், ஜெப வாஞ்சையு முள்ளவன் மெய்யாகவே கிறிஸ்துவில் நிலைத்திருப்பான். நிலைத்திருக்கும்போது பாவஞ்செய்யான். எப்போதாவது விலகுவானானால் தவறுவான். தவறினாலும் சோர்ந்து போகான். இன்னும் அதிகமாய் அவரைத் தாவிப் பிடிப்பான். கிறிஸ்து வெளிப்படும்போது இந்தப் போராட்டம் யாவும் நீங்கிப் பூரண வெற்றி காண்பான்.

### 4. தேவ மக்களோடு ஐக்கியம் வேண்டும்

ஒரு விறகு எரியும் விதமும், சில விறகுகள் சேர்ந்து எரியும் விதமும் நாம் அறியாதவர்கள் அல்ல. தனித்த பக்தி சோர்வடையும். ஆகையால்தான் "சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து கிறிஸ்துவின் அன்பை அறிய வேண்டும்" என்று பவுல் சொன்னார். தேவபக்தர்களோடு சேர்ந்து சம்பாஷிப்பதும் ஜெபிப்பதும் நாமறியாமலே நமக்குள் புதுப்பலத்தை, நம்பிக்கையை, உற்சாகத்தைக் கொடுக்கின்றன. இயல்பாய் நம்மை மேற்கொள்ளும் பாவங்களை கடவுள் தாசர்களோடு ஐக்கியப்பட்டபின் வெறுக்கிறோம். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது, நீங்களும் எங்களோடு ஐக்கியமாகும்படி அழைக்கிறோம்" என்றார் யோவான். எவ்வளவுக்கு

தேவமக்களோடு ஐக்கியப்படுகிறோமோ அவ்வளவுக்கு பாவத்தின்மேல் ஜெயம் பெறுவோம்.

## 5. முயற்சியுள்ள ஜீவியம் வேண்டும்

சோம்பேறி சாத்தானைச் சோதிக்கிறான். அதாவது, சோதனையைத்தானே இழுத்துக் கொள்ளுகிறான். அநேகரிடத்தில் காணப்படும் வீண் பேச்சுக்கும், சண்டை சச்சரவுக்கும், தீய காரியங்களுக்கும், பிறர் காரியங்களில் தலையிடுவதற்கும் காரணம் அவர்கள் வேலையற்றிருப்பதே. சோம்பேறிகளுக்கு சாத்தான் வேலை கொடுக்கிறான். தேவமக்கள் என்ற உண்மை சுறுசுறுப்பில் விளங்கவேண்டும். காலம் அவர்களுக்கு மிகவும் அருமை. நேரத்தை அவர்கள் ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, நேரம் அவர்களுக்காக காத்திராது. ஆண்டவர் இடைவிடாமல் வேலை செய்தார். பவுல் ஓயா வேலைக்காரனாயிருந்தார். பரிசுத்தவான்கள் யாவரும் சுறுசுறுப்புள்ளவர்களே. காலம் சுருக்கமாயிருப்பதால் தாங்கள் செய்யவேண்டியதைச் சீக்கிரம் செய்ய நாடுகிறார்கள். வாசிப்பதிலும், படிப்பதிலும், யோசிப்பதிலும், எழுதுவதிலும், மற்றவர்களோடு சம்பாஷிப்பதிலும் அவர்கள் முயற்சியாயிருப்பதால் பாவ ஜீவியம் அசாத்தியமாகிறது.

## 6. எதிரான காரியங்களில் மனதைச் செலுத்த வேண்டும்

இருளோடு மல்லுக்கட்டுவதால் இருள் நீங்காது. வெளிச்சம் உட்பிரவேசிக்கவே இருள் பறக்கும். என்னென்ன பாவங்கள் நம்மை மேற்கொள்கின்றதோ அவற்றிற்கு எதிரான காரியங்களில் மனதைச் செலுத்த வேண்டும். ஒரு துரை தமது குதிரை வண்டியில் உலாவப் போனார். வெகு தூரம் போய் ஒரு மூலை திரும்புகையில் குதிரைக்காரன் திடீரென சவுக்கினால் குதிரையை அடித்தான். ஓடுகிற குதிரையை ஏன் அடிக்கிறாயென்று துரை குதிரைக்காரனைக் கோபத்தோடு கேட்டார். அதற்குக் குதிரைக்காரன்: துரைகளே, இந்த மூலையில் வரும்போதெல்லாம் எதிரே நிற்கிற ஒரு வெள்ளைத்தூணைக் கண்டு குதிரை மிரளுவதைக் கவனித்தேன். ஆகையால் இந்த இடத்துக்கு வந்ததும் சவுக்கால் சுள்ளென்று ஒரு அடி கொடுத்தால் அடிபட்ட வேதனையை அது நினைக்கிறபடியால், தூணை முற்றிலும் மறந்து

செவ்வையாய் ஓடுகிறது என்றான். குதிரைக்காரன் யுக்தி துரைக்கு என்றும் மறக்க முடியாத பாடத்தைக் கற்பித்தது. அதுவே நமக்கும் பாடம். தீமையை நன்மையினாலே மேற்கொள்ள வேண்டும். பயத்தை தேவ நம்பிக்கையினாலே, பெருமையைத் தாழ்மையாலே, உலகச்சிந்தையை மறுமையினாலே, பாவஆசையை கிறிஸ்துவின் அன்பாலே, இவ்வாறு எதிரான காரியங்களில் கவனம் செலுத்துவதால் இழிவான காரியங்களை நாம் மேற்கொள்ளலாம்.

# 6. இருதயத்தில் கடவுள்

**"நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி ... அவர்கள் தேவனாயிருப்பேன்" (2 கொரி. 6:16).**

இது எவ்வளவு ஆச்சரியமான வாக்கு! கடவுள் யார்? நாம் யார்? அவர் நமக்குள் வாசம்பண்ண விரும்புகிறார். வாசம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர். கடவுள் நமக்குள் வாசம் பண்ணுவதை நம்புகிறோமா? அதை விரும்புகிறோமா? அதை அனுபவத்தில் அறிவோமோ? கடவுள் உன்னதமான சிங்காசனத்தில், நமக்கெட்டாத தூரத்தில் இருக்கிறாரென்றும், அங்கிருந்து சமயா சமயங்களில் நமக்கு உதவி செய்கிறாரென்பதும் நம்மில் அநேகருடைய எண்ணம். ஆனால் அவர் நம்மைப் பார்த்து "நான் தூரத்துக்கு மாத்திரமா தேவன், நான் சமீபத்துக்கும் தேவன் அல்லவோ?" என்று கேட்கிறார். நான் உன்னதத்தில் மாத்திரம் இருக்கிற கடவுளா? உங்கள் உள்ளத்திலும் வசிக்கிற பிதா அல்லவா? என்கிறார். கடவுள் நமக்கு வெகு தூரத்திலிருப்பவர் என்கிற எண்ணமே நமது சகல பாவங்களுக்கும் பலவீனங்களுக்கும் காரணம். அவர் நமக்குள் வசிப்பவர் என்பதை அறியும்போது நமது ஜீவியத்தில் ஆச்சரியமான மாறுதல் உண்டாகும்.

### 1. கடவுள் நம்மை ஏன் சிருஷ்டித்தார்?

இதைப்பற்றி அநேகர் யோசிக்கிறதில்லை. எங்கிருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? எங்குபோகிறோம்? என்னும் முக்கியமான விஷயங்களை மனுஷர் விசாரிக்கிறதில்லை.

சம்பாதிக்க வேண்டியது, சாப்பிட வேண்டியது, சாக வேண்டியது என்பதே அநேகருடைய நோக்கம். கடவுள் மேலான நோக்கமின்றி ஒன்றையும் சிருஷ்டிக்கவில்லை. தம்மை வெளிப்படுத்துவதே சிருஷ்டிப்பின் நோக்கம். சிருஷ்டிகள் யாவும் தங்கள் தங்கள் அளவுக்கேற்றதாய் சிருஷ்டிகளின் ஞானம் வல்லமை மகிமை முதலியனவற்றை வெளிப்படுத்தாமல் இல்லை. வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சிருஷ்டிப்புகளின் மூலமாக வெளிப்படும் தெய்வ மகிமையைக் கொஞ்சமும் உணராத மனுஷர் அநேகர் உலகிலுள்ளவகைளை அனுபவிப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்களேயன்றி, அவைகளை உண்டுபண்ணித் தந்தவரை நன்றியுடன் நினைக்கிறதில்லை. உணர்வுள்ள ஞானிகள் சிருஷ்டிப்பில் வெளிப்படும் கடவுள் மகிமையை ஒவ்வொன்றிலும் கண்டு ஆனந்திக்கிறார்கள். இவர்களில் ஒரு வகுப்பார் சகலமும் கடவுளே என்பார்கள். இவர்களுக்கு கடவுள் தூரத்திலிருப்பவர் அல்ல. சர்வமும் கடவுள் என்று சொல்வது சிருஷ்டியை கடவுள் என்று அழைப்பதாகும். சிருஷ்டிகரும், சிருஷ்டியும் ஒன்றல்ல. சிருஷ்டிக்கு கடவுள் முந்தினவர். சிருஷ்டி அவரால் வந்தது. குயவனும் அவன் உண்டுபண்ணும் பாத்திரமும் ஒன்றல்ல. பாத்திரம் குயவனல்ல. குயவனுடைய புத்தியை, நோக்கத்தை பாத்திரம் வெளிப்படுத்துகிறது. அதுபோலவே சிருஷ்டியும் சிருஷ்டி கருடைய வல்லமை ஞானம் மகிமையை வெளிப்படுத்துகிறது. சிருஷ்டிப்பு மனுஷன் கடவுளை அறியும்படி அவர் தந்த விசாலமான புஸ்தகம். சிருஷ்டிப்பிலுள்ள ஒவ்வொன்றும் தன் தன் அளவிலே கடவுளை வெளிப்படுத்துகிறது.

மனுஷனே சிருஷ்டிப்பின் கிரீடமாயிருக்கிறான். அவனை கடவுள் தமது சாயலில், தமது ரூபத்தில் உண்டாக்கினார். அவன் தம்மை அறிய, தம்மோடு பேச, தாம் அவனை நடத்தக்கூடிய மேலான சிருஷ்டியாக உண்டாக்கினார். கடவுள் மனுஷனுக்குள் வாசம்பண்ண வேண்டுமென்பதே அவர் மனுஷனை உண்டாக்கின நோக்கம். புறம்பேயிருந்து அவனைக் காப்பாற்றுகிறவராக அல்ல, அவனுக்குள்ளே வசித்து அவனை ஆசீர்வதிக்கும்படிக்கே அவனை உண்டாக்கினார். இப்பெரிய ஆசீர்வாதத்தை ஆதிமனுஷன் பெற்றிருந்தான். கடவுளே அவனுக்குச் சகலமுமாயிருந்தார். இந்த உள்ளான நிறைவில் அவன் தன்னை மறந்தான். நான் என்னும் பிரிவான

அகங்காரம் அவனுக்குள் இருந்ததில்லை. கடவுளே அவனுக்குள் ஞானமும் நீதியும் பரிசுத்தமும் ஜீவனும் ஒளியுமாய் விளங்கினார். அவன் சிருஷ்டிப்பை ஆளும் திறமையுள்ள அரசனாயிருந்தான். ஒன்றும் அவனுக்குக் குறைவாயிருந்த தில்லை. கடவுளைத் தன் இருதயத்தில் வசிக்கப்பெற்ற அனுபவம் அவனுக்குப் பாக்கியமான பரதீசாயிருந்தது. இதிலே அவன் நிலைத்திருந்தான். கடவுளோடுள்ள ஐக்கியத்தில் இதிலும் மேலான மகிமைக்கு அவன் ஆளாயிருந்திருப்பான்.

## 2. பாவமாவது என்ன?

விலக்கின கனியைப் புசித்ததே பாவம் என்றும், அந்தக்கனியில் ஏதோ தீமையிருந்திருக்க வேண்டுமென்றும் நாம் நினைப்பதுண்டு. அப்படியொன்றுமில்லை. நீ இந்த மண்ணைத் தொடாதே என்று கடவுள் சொல்லியிருக்க, அவன் தொட்டால். அதுவும் மீறுதலாகும். பாவம் செய்கையில் வெளிப்பட்டது உண்மையாயினும் அது உற்பத்தியான இடம் வேறே. கடவுளால் நிறைந்து தன்னை மறந்திருந்த மனுஷன் நான் என்று நினைக்க ஆரம்பித்தான். இது சத்துருவின் தூண்டுதல், கடவுளே உன்னை ஆண்டுகொண்டால் உனக்கு சுயாதீனமெங்கே? நீ அடிமைதானே, கடவுள் யாருக்காகிலும் அடிமைப்பட்டிருக் கிறாரா? அதல்லவா அவர் மேன்மை. நீயும் சுயாதீனனானால் கடவுளைப்போலிருக்கலாமே என்று ஓதினான். இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட நிமிஷத்தில் கடவுள் மறைந்தார். நான் என்பவன் இருதயத்தில் சிங்காசனம் ஏறினான். உலகத்தில் நாம் காண்கிற கணக்கற்ற பாவங்களும், பாடுகளும், வேதனைகளும், மரணமும் இந்த நான் என்னும் வித்திலிருந்து உண்டானவைகளே. சாத்தானைக் கெடுத்ததும் நான் என்னும் அகங்காரமே. மனுஷனில் ஊற்றப்பட்டதும் நான் என்னும் விஷமே. உலகத்தை நாலாதிசையிலும் அலைக்கழித்து நாசம்பண்ணி வருவதும் இந்த நான் என்னும் விக்கிரகமே. கடவுள் இருக்கவேண்டிய இடத்தில் நான் என்பவன் இருந்து கொண்டு தனக்கும் பிறருக்கும் அவன் செய்துவருகிற கொடுமைகள் கொஞ்சமல்ல.

## 3. ரட்சிப்பாவது என்ன?

எது மனுஷனைக் கெடுத்ததோ அந்தக் கேட்டை நீக்குவதே ரட்சிப்பாகும். நான் என்பவனை அகற்றி கடவுளை இருதயத்தில் திரும்பவும் ஏற்றுக்கொள்வதே ரட்சிப்பு. இந்த

ரகசியத்தை அறியாமல் நான் என்பவனை வைத்துக்கொண்டே பற்பல கிரியைகளினால் ரட்சிப்பைத் தேடுபவர் அநேகர். ஆராதனைகள், ஜெபக்கூட்டங்கள், பலவித ஆசாரங்களை அநுசரித்து ஆண்டவர் தயவைச் சாம்பாதிக்க முயல்பவர்கள் அநேகர். பாவமன்னிப்பையே ரட்சிப்பின் முடிவாக நினைப்பவர்கள் அநேகர். இவை யாவும் நல்ல காரியங்களே. இம்முயற்சிகள் ஆத்துமாவின் தாகத்தை வெளிப்படுத்துகின்றன. வேதாகமத்தைக் கருத்தாய்ப் படிப்போமானால் ரட்சிப்பாவது என்னவென்று திட்டமாயறியலாம். பாவத்தால் மனுஷன் கடவுளை இழந்தான். கடவுளும் மனுஷனை இழந்தார். கடவுளும் மனுஷனும் இணைக்கப்படுவதே ரட்சிப்பு. இதற்குக் குறைந்ததொன்றும் மனுஷனைத் திருப்தி செய்யாது. "இழந்துபோனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் உலகில் வந்தார்." மனுஷகுமாரனாகிய ஆண்டவர் நம்மை ரட்சிக்கவேண்டுமானால் அவர் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். முதலாவது, மனுஷனுக்குள் கடவுள் வசிக்கக்கூடும் என்பதை நமது ஜீவியத்தில் ரூபிக்க வேண்டும். இரண்டாவது கடவுள் மனுஷனுக்குள் வரமுடியாதபடி தடையாயிருக்கும் பாவத்தை அகற்றி அவர் மறுபடியும் மனுஷனுக்குள் வாசஞ்செய்யும்படி வழியை உண்டாக்க வேண்டும்.

மனுஷன் என்னும் பேருக்கு கிறிஸ்து ஒருவரே தகுதியாவார். ஏனென்றால் கடவுளைத் தனக்குள் பூரணமாய் வசிக்கப்பெற்றவனே மனுஷன். ஆதாமுக்கு மனுஷன் என்னும் பேர் வந்தது இந்த காரணத்தினாலேயே, மனுஷன் கெட்டுப்போனபோதிலும் அந்தச் சிறந்த பேராலேயே இன்னும் நாம் அவனை அழைக்கிறோம். ஆண்டவர் தம்மை முக்கியமாய் மனுஷகுமாரன் அல்லது மனுஷன் என்று அழைத்தது சரியே. பிதா அவருக்குள் பரிபூரணமாய் வாசஞ்செய்தார். ஆதாம் எப்படியிருக்கவேண்டுமென்று கடவுள் விரும்பினாரோ, அந்த விருப்பம் கிறிஸ்துவில் பரிபூரணமாய் நிறைவேறின. ஆண்டவர் தமது ஜீவியம், உபதேசம், கிரியைகள் யாவையும் குறித்து: நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பிதாவே இவைகளைச் செய்கிறார் என்றார். நான் அல்ல, என் சித்தமல்ல, என் பிரியமுமல்ல, என் மகிமையுமல்ல, என் ஆலோசனையல்ல, எனக்குள் வாசம்பண்ணுகிற பிதாவே என்னை ஆண்டு

நடத்துகிறார். "இவர் எனது நேசகுமாரன்" என்று பிதாவினால் நற்சாட்சி பெற்றார். முதல் மனுஷன் தவறினான், இரண்டாம் மனுஷன் நிலை நின்றார். இவ்வாறு கடவுள் மனுஷனுக்குள் வசிப்பதை ரூபித்துக் காட்டிய்பின், கடவுள் நமக்குள் வசிப்பதற்கு வழியை உண்டாக்கப் புறப்பட்டார். பாவமே தடை. உலகத்தின் பாவத்தைத் தமது சரீரத்தில் சுமந்து, படாத பாடுகள் பட்டு, சிலுவையிலேறி பாவத்தைத் தமது சரீரத்தோடு சேர்த்து ஆணியடித்து, பாவத்தை ஆக்கினைக்குள்ளாக்கினார் (தண்டித்தார்). புதிய சரீரத்தோடும் ஜீவனோடும் அவர் உயிர்த்தெழுந்ததே பாவத்தின்மேல் அவர் அடைந்த பூரண வெற்றிக்கு ஆதாரம். கடவுள் மனுஷருக்குள்ளத்தில் வசிப்பதற்கு வழியுண்டாயிற்று.

### 4. மனுஷன் இரட்சிக்கப்பட்டது எப்படி?

இழந்துபோன கடவுளைத் திரும்பக் கண்டடைந்ததே பாவிக்கு ரட்சிப்பாயிற்று. பெந்தெகொஸ்தே நாளில் கடவுள் மனுஷருள்ளத்தில் வசிக்கும்படி வந்தார். ஆவியானவரின் நிறைவே தேவ நிறைவு. "தேவன் ஆவியாயிருக்கிறார்." தமக்குள் வசித்த பிதா தமது அடியாருக்குள் வசிக்கவேண்டுமென்பதே ஆண்டவருடைய வாக்கும் வாஞ்சையுமாயிருந்தன. இதைப் பற்றிச் சீஷர்களுக்குச் சொல்லியிருந்தார். "அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை அறிவீர்கள்" என்றார். கிறிஸ்து சரீரத்தில் இருந்த நாட்களில் சீஷர்களோடு கூடயிருந்தார். அதாவது அவர்கள் பக்கத்தில் இருந்தார். பெந்தெகொஸ்தே நாளில் அவர் அவர்களுக்குள் வந்தபோதே கடவுள் அவர்களுக்குள் வந்தார். வந்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியானவர், கிறிஸ்துவின் ஆவி கடவுள் தமக்குள் வசிக்கப்பெற்ற ஆவி. அந்த ஆவி சீஷரை நிரப்பினதும் அவர்கள் கடவுளால் நிறைந்தார்கள். மனுஷனை இழந்த கடவுள் மனுஷனைக் கண்டார். கடவுளை இழந்த மனுஷன் கடவுளைக் கண்டடைந்தான். மனுஷன் ரட்சிப்பைப் பெற்றான். இதுவே ரட்சிப்பு. இதை நிறைவேற்றவே கிறிஸ்து உலகில் வந்தார். திரித்துவத்தைப் பிரிக்க முடியாது. ஆவியானவரை குமாரனைவிட்டும், குமாரனை பிதாவிலிருந்தும் பிரிக்க முடியாது. ஆவியானவர் எங்கேயிருக்கிறாரோ அங்கே பிதாவும் குமாரனும் இருக்க வேண்டும். இதை நினைத்துத்தான் "நாங்கள் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்று ஆண்டவர்

சொன்னார். இவ்வாறு தேவன் நமக்குள் வந்து வாசம்பண்ணுவதற்காகச் சொன்ன வாக்கு நிறைவேறினது. கடவுள் தங்களுக்குள் வசிக்கப்பெற்ற சீஷர்கள் எவ்வளவு அதிகமாய்த் தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் வெற்றியடைந்தார்கள் என்பதைப்பற்றி நாமே அறிந்திருக்கிறோம்.

"நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பார்கள்" என்ன அதிசயம்! எவ்வளவு பாக்கியம்! நமது அனுபவமென்ன? இன்றும் கடவுளைத் தூரமான உன்னத சிங்காசனத்தில் வைத்துத்தான் வணங்குகிறோமா? அல்லது அவர் நமக்குள் வசிக்கும் அநுபவத்தைப் பெற்றிருக்கிறோமா? நம்மைச் சூழ எத்தனையோ காரியங்கள், எத்தனையோ மனுஷர் இருந்தும் எல்லாவற்றிற்கும் நமது இருதயத்தில் இடமில்லை. ஆனால் நமது அருமையான காரியங்கள், அருமையான மனுஷருக்கோ நமது உள்ளத்தில் இடங்கொடுக்கிறோம். தாய் தான் நேசிக்கும் பிள்ளையை தன் இருதயத்தில் சுமக்கிறாள். இதுபோலவே கடவுளும் அன்பருள்ளத்தில் அமரும் தெய்வமாயிருக்கிறார். "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் நான் என்னை அவனுக்குள் வெளிப்படுத்துவேன்." என்றார். நாம் ஆண்டவரை அறிந்து அவரில் அன்பு வைக்கும்போது நமது இருதயம் அவருக்குத் திறக்கப்படுகிறது. ஆண்டவர் உட்பிரவேசிக்கிறார். அன்பற்றோர் இருதயத்தில் அவர் பலவந்தமாய்ப் பிரவேசிப்பதில்லை. தாழ்மைச் சிந்தையுள்ளவர்களிடத்திலும் கடவுள் வாசம் பண்ணுவார். "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்." என்கிறார். (ஏசா. **57:15**). நான் என்னும் அகங்காரியைக் குழியில் புதைத்தவர்களுக்கே நொறுங்குண்ட பணிந்த ஆவியுண்டாகும். தங்களுடைய ஒன்றுமில்லாமையை உணர்ந்து, தங்களைத் தூசியிலும் சாம்பலிலும் தாழ்த்துகிறார்கள். தங்களை ஒரு பொருட்டென்று அவர்கள் நினைக்கிறதில்லை. இவ்வாறு நான் என்பவன் கீழே தள்ளப்படவே, சகல கிருபையும் பொருந்திய தேவன் அவர்களுக்குள் வசித்து, தமது ஆசீர்வாதங்களால் நிரப்புகிறார். இவர்களே திருச்சபைக்கும் உலகத்துக்கும் ஜீவநிதிகளாவார்கள்.

# 7. பேதுருவின் நிழல்

***"பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்" (அப். 5:15).***

கடவுளடியாரைப்பற்றி மனுஷருக்குள் எக்காலத்திலும் மதிப்புண்டு. பேதுரு வேறு வேலையில் முயற்சியாயிருந்த படியால் வியாதியஸ்தருக்காக அவரிடம் பேச முடியவில்லை. ஒரு யோசனை செய்தார்கள். அவர் வெளியில் அங்குமிங்கும் போகும்போது அவர் நிழல் விழுமல்லவா? அந்த நிழல் நோயாளிகளின்மேல் படும்படி வைத்தால் அவர்கள் குணமாவார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை. அந்தப்படியே நோயாளிகளும் குணமானார்கள். இது பேதுருவின் விருப்பமல்ல, ஏற்பாடுமல்ல. ஆகிலும் அவர் அதைத் தடுக்கவில்லை. அதுபோலவே பவுல் விஷயத்திலும் காண்கிறோம். "அவருடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின" ***(அப். 19:12).*** தற்காலத்திலும், ஜெபம்பண்ணிக் கைக்குட்டைகளை அனுப்ப நோயாளிகள் குணமாவதைப்பற்றி அறிகிறோம். இவை யாவற்றிற்கும் காரணம் விசுவாசமே. ஆண்டவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட ஸ்திரீயின் விசுவாசம் அவளுக்குப் பூரண சுகத்தைக் கொடுத்தது. இவை யாவும் ஒரு முக்கியமான சத்தியத்துக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. பேதுருவின் நிழல் அவர் அறியாமலே மனுஷர்மேல் விழுந்ததுபோல, ஆவிக்குரிய நமது சக்தி, நமது மறைவான காந்தம் மற்றவர்கள்மேல் விழுகிறது.

## 1. நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் மறைவான காந்தம் அல்லது சக்தியுண்டு

அது ஒவ்வொருவரிடத்திலும் பல அளவாயிருக்கிறது. அது நாம் அறிந்தோ அறியாமலோ பிறர்மேல் பாய்கிறது. எத்தன்மையான சக்தி நம்மிலுண்டோ அத்தன்மையாகவே அது மற்றவர்களைத் தொடுகிறது. நன்மைக்கேதுவான சக்திகளும் தீமைக்கேதுவான சக்திகளும் மனுஷரிலுண்டு. நாம் செய்யும் வேலைகளின் சக்திகள் பகிரங்கமான பலனைத் தரும். நாம்

அறியாமலே நம்மிலிருந்து புறப்படும் சக்தியோ நிழலுக்கொப்பானது. அதுவே நமது உள்ளான மறைவான குணம் நாம் செய்கிறவைகள் அல்ல. நாமே அந்த மறைவான சக்தி. இயற்கை யாதொரு சப்தமுமின்றிப் பலத்த காரியங்களைச் செய்யும் காந்தமுடையதாயிருக்கிறது. அகண்ட ஆகாயத்தில் மனோவேகமாய்ச் சுற்றுகிற கிரகங்களின் சப்தத்தை நாம் கேட்பதில்லை. ஆனாலும் அவைகளின் வல்லமையை அறிய யாரால் முடியும்? ரோஜா புஷ்பங்கள் மௌனமாய்த் தங்கள் வாசனையை அனுப்பி நம்மை பூரிக்கச் செய்கின்றன. இதுபோலவே அசுத்தங்களிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் யாதொரு சப்தமுமின்றி நமக்கு மயக்கத்தை உண்டாக்குகிறது. நல்ல சக்தியும் தீய சக்தியும் கண்ணுக்குத் தெரியாமலே தன்தன் கிரியையை நடப்பிக்கிறது. ஆகையால் நமது வெளியரங்கமான வேலைகளைப் பார்க்கிலும் அந்தரங்கமான நமது ஜீவியத்தைக் குறித்து நாம் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஒன்றில் நமது ஜீவியம் பிறருக்கு ஆரோக்கியமாயிருக்கவேண்டும் அல்லது கேடாயிருக்கவேண்டும். பேதுருவைப்போல கிறிஸ்துவின் ஜீவனாலே நாம் பிழைப்பது மெய்யானால் நமது நிழலாகிய மறைவான சக்தி அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்பது நிச்சயம்.

## 2. நிழல் எப்படி உண்டாயிற்று?

நிழல் விழுவதற்கு சூரியன் வேண்டும். வெளிச்சமின்றி நிழல் இல்லை. கிறிஸ்துவே நமது சூரியன். அவர் பிரகாசிப்பதாலேயே நம்மில் நிழல் உண்டாகிறது. ஆகவே அவருக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்திற்குத் தக்கதாகவே, நமக்கும் மற்றவர்களுக்குமுள்ள சம்பந்தம் நிதானிக்கப்பட வேண்டும். சூரியன் பிரகாசித்தும் ஒருவன் மறைவில் இருந்தால் அவனில் நிழல் இல்லை. சூரிய ஒளியில் நாமிருக்கும்போது நமது பிரயாசமின்றி, யாதொரு சப்தமின்றி நமது நிழல் விழுவது போல, கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தின் பலனாக, நமது செல்வாக்காகிய நிழல் அநேகருக்கு ஆசீர்வாதமாக விழுகிறது. மனுஷன் தன்நிழலைத் தான் கவனிக்கிறதில்லை. மற்றவர்கள் அதைக் காண்பார்கள். அதுபோல நமது ஜீவியம் மற்றவர்களுக்கு எவ்வாறு பிரயோஜனப்படுகிறதென்பதை நாம் அறியமாட்டோம். ஒரு மனுஷனுடைய நிழல் அவன் சாயலே. பக்தனுடைய உத்தம ஜீவியமே அவன் நிழல். அவன் பேச்சல்ல, அவன் செய்வதல்ல, அவனே அந்த நிழல். நாம் வேலை

செய்யலாம், செய்யாதிருக்கலாம். ஆனால் நிழலுக்கோ ஓய்வில்லை. நமது நிழல் நம்மோடுகூடவே தொடரும். கிறிஸ்துவின் அடியாருடைய நிழலாகிய அன்பின் ஜீவியம் அவர்கள் எங்கேயிருந்தாலும் எங்கே போனாலும் பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்கும் சக்தியுள்ளதாயிருக்கிறது.

### 3. நமது நிழல் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும்

இதுவே தேவசித்தம். ஆண்டவரைப் பின் செல்லும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுவதுமன்றி, பிறருக்கும் ஆசீர்வாதமாகிறோம். நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு மாத்திரமல்ல. அவர் நிமித்தம் பாடநுபவிக்கும்படியாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். பாடுகளில்லாமல் நமது ஜீவியம் பூரணப்படுகிறதில்லை. நாம் பிறருக்கு ஆசீர்வாதமாயிருப்பதுமில்லை. இந்த நோக்கத்தோடேயே ஆண்டவர் நம்மை நடத்துகிறார். நமது பாடுகள் நமது ஜீவியத்துக்கு அவசியமாயிருப்பதுபோலவே பிறருக்கும் அவைகள் ஆசீர்வாதமாயிருக்கும். இதனாலேதான் பேதுரு: "துன்பப்பட வேண்டியது அவசியம்" என்று சொன்னார். நமக்கு நேரிடும் பாடுகளுக்குக் காரணம் நமக்குத் தெரியாதிருக்கலாம். இப்பாடுகள் இல்லாவிட்டால் நன்றாய் வேலை செய்யலாமே என்றும் நாம் நினைக்கலாம். அவைகள் நீங்காதது நமக்குச் சங்கடமாகவும் தோன்றலாம். ஆகிலும் ஆண்டவர் அறியாமலும் அவர் இடங்கொடாமலும் அவருடைய பிள்ளைகளுக்கு ஒன்றும் சம்பவிப்பதில்லை. ஆகவே தேவசித்தத்துக்கு நாம் மனப்பூர்வமாய்க் கீழடங்கி, அவைகளைப் பொறுமையாய்ச் சகிக்கும்போது நமக்கே அவைகள் ஆசீர்வாதமாயிருப்பதோடு, நம்மைக் கவனிப்பவர்களுக்கும் ஆசீர்வாதாமாயிருக்கும். "ஒருவனும் தனக்கென்று பிழைப்பதில்லையே" நாம் அறியாமலே நமது ஜீவியம் அநேகருக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது. கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் ரகசியமாய்ப் புளிப்பாக்குகிறதுபோல நமது நிழல் அநேகரில் பரவுகிறதென்பது நிச்சயம். சாதாரணமான காலத்தைப் பார்க்கிலும் பரீட்சை காலங்களிலே தான் நமது உண்மையான தன்மை வெளிப்படும்.

பரிசுத்தவான்களின் காந்தமாகிய நிழலை நாம் அறியாதவர்கள் அல்ல. நமது மனம் சோர்ந்து, ஜெபம் நின்று, தேவசந்தோஷத்தை இழந்து தவிக்கும் சமயத்தில் அவர்களைக் காண்பதும், அவர்கள் பேசக் கேட்பதும், நாம் அறியாமலே

நமது சோர்வை நீக்கி, நாம் இழந்த விசுவாசத்தைத் திரும்ப நமக்குக் கொடுக்கிறது. அவர்கள் சமுகம் நமது குறைவை நமக்கு உணர்த்தி, தேவபக்தியின் வாஞ்சையைத் திரும்பவும் நமக்குள் உண்டாக்குகிறது. இதை அவர்கள் அறிய மாட்டார்கள். இதுவே பக்திமான்களின் நிழல். அவர்களோடு சம்பந்தப்படுகிறவர்களை ஆரேக்கியமாக்கும் பெற்றாரின் நிழல் மக்கள்மீது விழுந்த வண்ணமாகவேயிருக்கிறது. அவர்கள் போதனைகளும், கண்டிப்புகளுமல்ல, அவர்கள் ஜீவியமே அந்த நிழல். நிழலாகிய ஜீவியமே பிள்ளைகள் மனதில் அழுந்தப் பதிகிறது. உபாத்தியார் நிழல் மாணாக்கர்மேல் விழுகிறது. போதனை எப்படியிருந்தபோதிலும் ஜீவியமாகிய நிழலை மாணாக்கர் மறக்கமாட்டார்கள்.

நாம் விருத்தாப்பியராகுங் காலத்தில் முன்னைப்போல் வேலை செய்யமுடியவில்லையே என்றும், பலம் குன்றிப் போய்விட்டதே என்றும் துக்கப்படலாம். அவ்வாறு துக்கிக்க அவசியம் இல்லை. மத்தியானத்தைப் பார்க்கிலும், மாலைப்பொழுதில் நிழல் நீளமாய் வெகுதூரம் விழும். சூரியன் மேற்கே போகப்போக நமது நிழல் வளர்ந்து கொண்டே போகும். கிறிஸ்துவுக்குள் பூரணமான விசுவாசிகள் ஜீவியம் அவர்கள் வேலைகளைப் பார்க்கிலும் சக்தியுள்ளது. அவர்களுடைய நிறைவான அனுபவம் மற்றவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம். பேதுருவின் நிழல் நோயாளிகளைக் குணமாக்கினதுபோல ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ந்த விருத்தாப்பியம் அநேகருக்கு ஆரோக்கியமாயிருக்கிறார்கள். முடிவாக ஒரு எச்சரிக்கை. சூரியனை மேகம் மறைத்தால் நமது சரீர நிழல் மறையும். பாவம் வரும்போது ஆண்டவர் முகம் மறையும். அவர் ஒளி நம்மேல் விழாததால் நமது ஆசீர்வாத நிழல் நின்று போகும். ஆகையால் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் இடைவிடாத பிழைப்பது அவசியம்.

## 8. நடக்கும் வழி

***"நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" (சங். 32:8).***

பரமபிதாவாகிய கடவுள் நம்மை நடத்தவேண்டியது மிகவும் அவசியம். மேய்ப்பன் இல்லாமல் ஆடுகள் தங்களையே

நடத்திக்கொள்ளத் துணிவது அவைகளுக்கு நிச்சயமாகவே ஆபத்தாகும். இவ்வுலக வாழ்வில் நம்மையே நாம் நடத்திக்கொள்ளத் திராணியற்றவர்களாக இருக்கிறோம். “தன் வழியை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்ல” நம்மைச் சிருஷ்டித்த இறைவனுக்கே நம்மை எவ்வாறு நடத்த வேண்டுமென்பது தெரியும். நாம் அறிவீனரும், பலவீனருமா யிருக்கிறோம். எந்த வழி நடப்பது, என்ன செய்வதென்று நமக்குத் தெரியவில்லை. உலகத்தில் அநேகர் தங்களைத் தாங்களே நடத்திக் கொள்வதுபோல் தோன்றும். கடவுளின்றித் தங்கள் சுயஞானத்தாலும், சுயசாமர்த்தியத்தினாலும், காரியங்களை வெகு அனுகூலமாய் நடத்திக் கொள்ளு கிறார்கள் என்றும் நாம் பேசலாம். அவ்வளவும் ஆபத்துதான். கடவுளற்ற மனுஷர் உலகத்தில் மேன்மையடை வதைக் கண்டு நாம் கலங்கி விடக்கூடாது. அவர்கள் ஆத்ம நிலைமை எவ்வளவோ பரிதாபம்! இம்மைக்காகவே அவர்கள் கவலைப்படுகிறார்கள். கடவுள் நம்மை நடத்தும்போது அது இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். அவர் நம்மை நடத்துவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். நடத்த வாஞ்சையாயிருக்கிறார். நடத்துகிறார். யார் யாரை நடத்துவார்?

### 1. தங்களைப் பூரணமாய் அவர் கையில் விட்டு விடுகிறவர்களை நடத்துவார்

மேய்ப்பன் சத்தத்துக்கு செவிகொடுத்து அவனைப் பூரணமாய்ப் பின்பற்றும் ஆடுகளை மேய்ப்பன் நடத்துகிறான். ஆடுகளை நடத்தவேண்டிய பொறுப்பு அவனுடையது. அவனே அவைகளின் மேய்ச்சல், தண்ணீர், இளைப்பாறல், பாதுகாப்பு முதலியவைகளுக்காக கவலைப்படுகிறான். இதுபோலவே நல்ல மேய்ப்பராகிய ஆண்டவரும் தங்களை முழுவதும் தமது பாதுகாப்பில் விட்டுவிட்ட பிள்ளைகளுக்காகக் கவலைப் படவும், அவர்களை ஜீவ பாதையில் நடத்தவும் பொறுப்புள்ள வராயிருக்கிறார். உத்தியோகம், சம்பாத்தியம், போஷிப்பு, உடுப்பு முதலான காரியங்களுக்காக நாம் எவ்வளவோ கவலைப்பட்டுக் கலங்குகிறோம். நமது கவலைகளால் உண்டாகிற பலன் ஒன்றுமில்லை. நம்மைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து நடத்தும் கரத்தை மறந்து போகிறோம். பிதா இருக்கிறார் என்கிற நிச்சயம் நமக்கு வேண்டும். அவரது அளவில்லாத கிருபையையும், அன்பையும், அனுதாபத்தையும், நம்மை ஆதரித்து வழிநடத்தும்படி

அவருக்கிருக்கிற வாஞ்சையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஜெபத்தின் மூலமாய் பரமபிதாவின் நடத்துதலுக்கு நம்மை முற்றிலுமாய் ஒப்புவித்து விட வேண்டும். இப்படிச் செய்ய மனமற்றவர்கள் பிதாமீது குறைகூற நியாயமில்லை.

**2. கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறவர்களை நடத்துவார்**

பரம பிதா இருக்கிறார். அவர் நமது கஷ்டங்களையும் கவலைகளையும் அறிந்திருக்கிறார். நாம் நம்மையும் நமது காரியங்கள் யாவையும் அவர் கையில் விட்டுவிடும்போது அவர் நமக்காகக் கிரியை செய்வார். இந்த நிச்சயம் நமக்குள் உண்டாகும்போது நமது இருதயம் அமர்ந்திருக்கும். ஆத்திரமும் பதஷ்டமும் நீங்கும். பொறுமை, சாந்தம் நம்மில் காணப்படும். இந்தச் சாந்தத்துக்கு காரணம் கர்த்தர் நடத்துவார் என்கிற நம்பிக்கையே. இந்த நம்பிக்கை ஆண்டவருக்கு அதிகப் பிரியம். சிறுபிள்ளைகள் தங்களுக்கு வேண்டிய யாவற்றையும் பெற்றார் கொடுப்பார்கள் என்று நம்பிக்கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண்போகிறதில்லை. தேவனுக்கு நாம் எக்காலமும் பிள்ளைகளே. பிள்ளைகளைப் பராமரித்து நடத்துவது பிதாவின் கடமை. இந்த நம்பிக்கை நம்மில் உறுதியாயிருக்க வேண்டும். அவரை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவர்கள் அவரையே இடைவிடாது நம்பிக்கொண்டிருப்பதால், அவர் அவர்களைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்கிறார். மேலும் "சாந்தகுண முள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர் களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" இந்தச் சாந்த இனம் ஆண்டவர் மீதுள்ள பூரண நம்பிக்கையினால் உண்டாகிறது. தங்களைத் தாங்களே நடத்திக் கொள்ளுகிறவர்களுக்கு சாந்தமும் அமரிக்கையுமான சுபாவம் கிடையாது. அந்தக் குடும்பங்களில் காலைமுதல் மாலைவரை ஓயாச் சத்தமும், ஒழியாத போராட்டமும், ஐயோ, அதற்கென்ன செய்வோம், இதற்கென்ன செய்வோமென லவ லவவென்று அடித்துக் கொள்ளுகிற இரைச்சலுமே கேட்கும். இதற்குக் காரணம் ஜீவனுள்ள ஆண்டவர்பேரில் நம்பிக்கையில்லை.

**3. தமக்குக் காத்திருக்கிறவர்களை நடத்துவார்**

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டிய அவசியத்தைக் குறித்தும், அதனாலுண்டாகும் ஆசீர்வாதங் களைக் குறித்தும் சங்கீதங்களில் திட்டமாய் வாசிக்கிறோம்.

முன் கவனித்தபடி கர்த்தருக்குத் தங்களை ஒப்புவித்தவர்கள், அவர் நடத்துவாரென்று நம்பியிருக்கிறார்கள். அவ்வாறு நம்பி யிருக்கிறவர்கள் அவருடைய வேளைக்காகப் பொறுமையுடன் காத்திருப்பார்கள். நாம் நினைத்தபடியல்ல. நாம் நினைத்த வேளையிலுமல்ல. கர்த்தர் நினைத்தபடி, அவருடைய வேளை வரும்போது நமது காரியங்களை நிறைவேற்றுவார். இதற்காக நாம் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். ஆத்திரமும் பதஷ்டமும் அவநம்பிக்கையின் குறிப்புகள். தேவனால் நடத்தப்படுகிறவர்கள் சில காரியங்களுக்காக நீண்டகாலம் காத்திருக்கவேண்டியது நேரிடும். நமது ஜெபம் கேட்கப்பட்டது. ஆனால் அதை நிறைவேற்றும் சமயமோ தாமதிக்கிறது. இது வீண் தாமதமல்ல, ஞானமுள்ள தாமதம். ஏற்றகாலத்தில் நமது உள்ளம் பூரிக்கத்தக்கதாக நாம் வேண்டிக்கொண்டதிலும் மேலான நன்மையைச் செய்வதற்காகவே பிதா தாமதிக்கிறார். "தேவரீர், உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றமுதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை. அவைகளைக் கண்டதுமில்லை.

## 4. குருடனை நடத்துவார்

தேவனுடைய பிள்ளைகள் குருடரோ? ஆம், நாம் குருடராயிருந்தால் நல்லது. குருடனுக்கு நடத்துகிறவன் வேண்டுமேயல்லாமல் காண்கிறவனுக்கு வேண்டியதில்லை. எனக்குப் புத்தியுண்டு, யோசனையுண்டு, நடத்தும் திறமையுண்டு என்று நினைக்கிறவனை ஆண்டவர் நடத்த முடியாது. தங்களையும் தங்கள் காரியங்களையும் நடத்திக் கொள்ள முடியவில்லையே என்றும், நடக்கவேண்டிய வழி தெரிய வில்லையே என்றும் உணருகிறவர்களை கர்த்தர் நடத்துகிறார். இந்த உணர்வு ஆண்டவருடைய உத்தம தாசர்களுக்கே உண்டு. "என் தாசனையல்லாமல் குருடர் யார்? என் உத்தமனை யல்லாமல் குருடர் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனை யல்லாமல் அந்தகன் யார்?" தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அவர்கள் காரியங்களைப்பற்றி விசாரித்தால் தெரியாதென்று சொல்லுவார்கள். அவர்கள் அனுபவித்த காரியங்களைப்பற்றி நன்றியுடன் பேசுவார்கள். மற்றக் காரியங்களுக்காக அவர்கள் கர்த்தருடைய நடத்துதலுக்கு காத்திருக்கிறபடியால் தெரியாதென்றே சொல்லுவார்கள். இது பொய்யல்ல. அவர்கள் ஆசீர்வதிக்கப்பெற்ற குருடர். இவர்களுக்கு அருமையான

தேவவாக்கைப் பாருங்கள். "குருடரை அவர்கள் அறியாத வழியில் நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன் இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்" "அறியாதவழி, தெரியாதபாதை" இதுதான் நம்மை மகிழ்ச்சியாக்கி ஆண்டவரைப் போற்றச் செய்கிறது. என் பிதா நான் எதிர்பாராத பெரிய காரியங்களை எனக்காகச் செய்தாரே என்று காணும்போது நமது உள்ளம் நன்றியால் பொங்குகிறது.

# 9. இன்னும் இல்லை

***"சகலத்யையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான். ... அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம். என்றாலும் ... இயேசு ... மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபி. 2:7–9).***

கடவுள் மனுஷனைச் சிருஷ்டித்தபோது பூமியையும் அதில் நிறைந்த யாவையும் அவன் ஆண்டுகொள்ள வேண்டுமெனக் கற்பித்தார். மனுஷன் சிருஷ்டிப்பின் கிரீடமாய் விளங்கின படியால் சங்கீதக்காரன்: சகலத்தையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று பாடினார். எபிரேயர் நிருபத்தாரோ அப்படியல்ல, சகலமும் அவன் பாதங்களுக்கு இன்னும் கீழ்ப்பட்டிருக்கவில்லை, ஆனால் அவ்வாறு சகலமும் கீழ்ப்பட்டிருக்குங்காலம் கிறிஸ்து மூலமாய் இனிவரப்போகிறது என்கிறார். அதாவது பூமியும் அதன் நிறைவும் மனுஷனுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்பது தேவதீர்மானம். நமது அனுபவமோ அதற்கு விரோதமாகயிருக்கிறது. என்றாலும் தேவதீர்மானம் கிறிஸ்துவின் மூலமாய் நிச்சயமாகவே நிறைவேறும். அப்பொழுது சகலமும் மனுஷனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.

**1. நமது அனுபவமென்ன?**

மனுஷன் தன்னைச் சுயாதீனன் என்று சொல்ல இடமில்லை. நாம் விரும்புங்காரியங்களைத் தாராளமாய்ச் செய்யமுடியவில்லை. எத்தனையோ காரியங்கள், எத்தனையோ

இடையூறுகள், எத்தனையோ தீய சக்திகள் புறம்பேயிருந்து நம்மை நெருக்குகின்றன. இந்த நெருக்கத்தின் மத்தியில்தான் நாம் நமது காரியங்களைக் கஷ்டத்தோடு நிறைவேற்றி வருகிறோம். நானே ஆளுகிறேன். சகலமும் என் பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதென்று நம்மில் யார் சொல்லக்கூடும்? இதன்றி, நமக்குள்ளேயே போராடும் சக்திகள் எத்தனை! நாம் தாராளமாய் ஒன்றை யோசிக்கவோ செய்யவோ கூடாதபடி உள்ளான தீயவல்லமைகள் நம்மோடு போராடுகின்றன. நாம் செய்த பாவங்கள் ஞாபகத்தில் வந்து நம்மை வெட்கப்படுத்துகின்றன. நாம் விரும்புகிற நன்மைகளைச் செய்யாமல் நாம் வெறுக்கிற தீமைகளை நாமே செய்கிற இரகசியம் என்ன? நமது சுயாதீனப் பேச்சு எங்கே? இவ்வாறு உள்ளேயும் புறம்பேயும் பலதீமைகளால் நாம் தத்தளிக்கும்போது சகலமும் நமது பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றனவென்று எப்படிச் சொல்லக் கூடும்? நம்மைப்பற்றிப் பிறர் கொண்டுள்ள தப்பெண்ணங்களை நாம் நீக்குவதெப்படி? சொன்னாலும் நம்ப மாட்டார்கள். நமக்குள் நாம் படும் அவஸ்தையைக் கண்டது யார்? இதுவரை கடவுள் நமக்குக் கற்பித்த ஆளுகை? இதுவா சங்கீதக்காரன் பாடின ராஜரீகம்? எபிரேயர் நிருபத்தார் சொன்னதே சரி. "சகலமும் இன்னும் அவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்."

## 2. நமது நம்பிக்கையும் முயற்சியும்

மனுஷன் இந்நிலைமையில் திருப்தியடையவில்லை. அவன் முறுமுறுக்கிறான், மோதுகிறான், புலம்புகிறான், புறம்பேயும் தனக்குள்ளேயும் போராடுகின்ற தீய வல்லமைகள் தன்னை மேற்கொள்வது அவனுக்குப் பிரியமேயில்லை. சகலத்தையும் தான் மேற்கொண்டு ஆளவேணுமென்கிற ஆத்திரம் அவனுக்குள்ளிருக்கிறது. ஆதியாகமத்தில் கடவுள் கொடுத்த வாக்கை அவன் நினைத்தானோ நினைக்கவில்லையோ? ஆனால் தான் பூமியை ஆளப்பிறந்தவன் என்கிற உணர்ச்சி மாத்திரம் அவனுக்குள் இருந்தே வருகிறது. இந்த நம்பிக்கையினாலே அவன் இடைவிடாது முயற்சிக்கிறான். கடந்த சில வருஷங்களுக்குள் அவன் அடைந்த வெற்றி கொஞ்சமல்ல. காலாகாலமாய் மனுமக்களை நடுங்க வைத்த சக்திகளை கைவசப்படுத்தித் தனக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்யப்பண்ணியிருக்கிறான். மின்சார சக்திப்

பிரமாணங்களை அறிந்து, அந்தப் பிரமாணங்களுக்கு இணங்கி, ஆச்சரியமான காரியங்களை நமது கண்காண நடப்பிக்கிறான். ஓர்காலம் நாம் பயந்து நடுங்கின சக்தி இப்போது நமது பணிவிடைக்காரனாயிருக்கிறது. திரளான மனுஷர், திரளான பணம் செய்த வேலைகளை ஏழைகளும் அனுபவிக்கத்தக்கதாக மின்சார மகிமையைக் குடிசைகளுக்குள்ளும் காண்கிறோம். பறவைகள் பறக்கும் ஆகாயத்தில் மனுஷர் பிரயாணம் செய்கிறார்கள். ஆயிரமாயிரமான மைல்களுக்கு அப்பால் பேசும் வார்த்தைகளை, பாடும் பாட்டுகளை நம் வீட்டுக்குள்ளிருந்து கேட்கிறோம். இவைகள் பழக்கத்தால் நமக்குச் சாதாரணமாகலாம். ஆகிலும் மனுஷன் இயற்கை சக்திகள்மேல் அடைந்த வெற்றியை நாம் பாராட்டாதிருக்க முடியாது. அதிமுதல் துஷ்ட மிருகங்களாலுண்டான அழிவு கொஞ்சமல்ல, மனுஷன் அவைகளை எதிர்க்க முடியாமல் தவித்தான். இப்பொழுதோ மனுஷன் மிருகங்களை நடுங்க வைத்திருக்கிறான். யானையோ, சிங்கமோ, புலியோ, அவன் சொன்னபடி ஆடவேணும். அவன் முகத்தைக் கண்டால் ஓடி ஒளிக்க வேணும். சாஸ்திர அறிவின் வளர்ச்சி அதிசயமான காரியங்களை நடப்பிக்கிறது. மலை தரையாக வேணும். தரை மலையாகவேணும். தரை தடாகமாகவேணும். தடாகம் தரையாகவேணும். இன்னும் சில வருஷங்களில் நாம் அதிசயிக்கத்தக்க காரியங்களை மனுஷன் நடப்பிப்பான். எப்படியிருந்தபோதிலும் மனுஷன் அடைந்துள்ள வெற்றி பூரணமுள்ளதல்ல. இவ்வளவு வெற்றிகளிலும் அவன் படும்பாடும் ஆபத்தும் கொஞ்சமல்ல. ஆகாயத்தில் பறக்கும் பிரம்மாண்டமான விமானம் எரிந்துவிழ அதிலிருந்த சாஸ்திர நிபுணர்கள் சாம்பலாகிறார்கள். சமுத்திரத்தின் அலைகளை ஆளுகிறோம் என்று சொல்லிப் புறப்பட்ட மகா பிரம்மாண்டமான, ஒன்றுக்கும் அஞ்சாத கப்பல் நிமிஷத்தில் பாதாளம் சேருகிறது. "சகலமும் இன்னும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்" ஆனால் ஒன்று நிச்சயம். ஆளவேண்டும் என்கிற நம்பிக்கையும் முயற்சியும் மாத்திரம் குறையவேயில்லை. நல்லகாலம் வரும் என்கிற நம்பிக்கை நமக்குள்ளிருக்கிறது. அரியசெயல்களை நிறை வேற்றின மனுஷரின் ஜீவியத்தை வாசிக்கும்போது நமக்குள் பரவசம் உண்டாவதற்கும், குரூரமான காரியங்களைச்

செய்தவன் சரித்திரத்தை நாம் வாசிக்கையில் வெறுப்புண்டா வதற்கும் காரணமென்ன? நம்மைக் கீழ்ப்படுத்தும் தீமைகள் ஒழிந்து சகலத்தையும் நாம் ஆளவேணும் என்ற ஆவல் அல்லவா? தேர்ந்த சித்திரக்காரன் செய்த படம் ஒன்று கெட்டுப் போனது. திரையிலிருந்த கேடே அதற்குக் காரணம். அவனோ சோர்ந்து போகாமல் சித்திரம் என் புத்தியிலிருக்கிறது. நான் அதை மறுபடியும் செய்யக்கூடும், திரை கெட்டதேயன்றி என் புத்தி கெடவில்லை. என் கைத்திறமையும் ஒழியவில்லை என்றானாம். சகலத்தையும் மனுஷனுக்குக் கீழ்ப்படுத்துவதாக கடவுள் தீர்மானித்திருக்கிறார். பாவம் அந்தத் தீர்மானத்தைக் கெடுத்தாலும் கடவுள் கடவுளாயிருக்கிறவரையில் தமது தீர்மானத்தை நிறைவேற்றாமல் விடமாட்டார். அவரைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை ஒன்றுமில்லை. அவர் சர்வத்துக்கும் மேலானவர்.

### 3. இது எப்படியாகும்?

சகலமும் மனுஷனுக்குக் கீழ்ப்பட்டிருப்பது எப்படி? எபிரேயர் நிருபத்தார்: இயேசுவைப் பாருங்கள் என்கிறார். அதுதான் அதற்கு உத்தரவு. அவர் தேவதூதரிலும் சற்று சிறியவராகி நமது மாம்சத்தையும் ரத்தத்தையும் சுதந்தரித்து நமது சகோதரனும் மனுமக்கள் பிரதிநிதியுமானார். ஆதாம் தவறினதுபோல் அவர் தவறாமல், பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றினதின் பலனாக இப்பொழுது "மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக்கிறார்." தமக்காகவல்ல, நமக்காகவே இந்த மகிமையை அவர் பெற்றிருக்கிறார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குண்டு. சகலமும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப் பட்டாயிற்று. காணப்படுகிறவைகளும் காணப்படாதவை களுமான சகலமும் அவருக்குக் கீழடங்கியிருக்கின்றன. அவர் நமது சிரசாயிருக்கிறபடியால் அவரடைந்த வெற்றி, ஆளுகை, மகிமை, கனம் யாவும் நம்முடையவைகளே. அந்த மகிமையின் காலம் இன்னும் வரவில்லையாகையால் ஆண்டவரைப்போல சகலமும் நமது பாதங்களுக்கு இன்னும் கீழ்ப்படுத்தப் படவில்லை. நமது தலையாகிய கிறிஸ்து வெளிப்படும்போது இப்பொழுது நம்மைக் கட்டுப்படுத்தி ஆளும் சகல வல்லமைகளிலிருந்தும் நாம் விடுதலையாகி, தேவ மக்களுக்குரிய பூரண சுயாதீனத்தைப் பெறுவோம்.

அக்காலத்தில் யாதொரு பிரயாசமில்லாமலே நாம் கடவுளுக்குப் பிரியமானவைகளைச் செய்வோம். பூச்செடிகள் புஷ்பித்து தங்கள் வாசனையை ஆகாயத்தில் பரவச்செய்வது அவைகளுக்கு இயல்பாயிருக்கிறதுபோல நாம் பரிசுத்தமாய் பிழைப்பது நமக்குக் கஷ்டமின்றி இயல்பாயிருக்கும். அந்தப் பாக்கியமான ராஜ்யத்தில் நாம் பிரவேசிக்கவேண்டுமானால் மகிமையடைந்திருக்கிற ஆண்டவரே அதற்கு வழி. இப்பொழுது நமக்கு அவரோடுள்ள நெருங்கிய ஐக்கியமே இனிவெளிப்படும் மகிமையில் சகலமும் நமது பாதங்களுக்கு கீழாக்கப்படும் என்பதற்கு ரகசியம். சகல இடறல்களையும் அவர் ஒழித்து நீதியும் சமாதானமும் வழிந்தோடும் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். கடவுளே சகலத்திலும் சகலமுமாயிருப்பார். பரலோகத்தி லுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் பூரண ஒற்றுமையாகி தேவசித்தம் ஒன்றே எங்கும் நடந்தேறும்.

# 10. ஒரு மைலுக்கு இரு மைல்

**"ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ"** ***(மத். 5:43).***

யூதர் ரோமரால் ஆளப்பட்டார்கள். ரோமை ராஜ்யம் மகாபலமுள்ளது. யூதர் இந்த ஆளுமையை வெறுத்தார்கள். ராஜ்யத்துக்கு விரோதமாக எழும்பிப் பலமுறை கலகஞ்செய்து அழிந்தார்கள். ரோமை அதிகாரிகள் சொல்லுக்கு மனுஷர் எதிர்பேசாது கீழ்ப்படியவேணும். தங்கள் ராஜ்யத்துக்கு அநுகூலமாக அவர்கள் இடும் வேலைகளைச் செய்யவேணும். இன்ன இடத்துக்குச் செய்தி கொண்டுபோ என்று கட்டளை கொடுத்தால் உடனே போகவேணும். இன்ன காரியத்தைச் செய் என்று சொல்லும்போது உடனே செய்யவேணும். இதன் உண்மையை சிரேனே ஊர் சீமோன் விஷயத்தில் காண்கிறோம். ஏழை மனுஷன் ஆப்பிரிக்காவிலிருந்து பஸ்காப்பண்டிகையை கொண்டாட எருசலேமுக்கு வந்தவன் நகரத்தில் இடமில்லாததால் பக்கத்துக் கிராமங்கள் ஒன்றில் தங்கியிருந்தான். வெள்ளிக்கிழமை காலையில் கடவுளை ஆராதிக்கும்படி பக்திவிநயத்துடன் எருசலேமை நோக்கி

வந்தான். அவன் நகரவாசலுக்குச் சமீபமாக வந்தபோது ஆண்டவர் தமது சிலுவையைச் சுமக்க முடியாமல் கீழே விழுந்தார். திரள்கூட்டம் அவரோடு போனது. சீமோன் அந்த இடத்தில் வரவே ரோமை அதிகாரிகள் அந்தச் சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள். ஐயோ, கர்த்தாவே, உம்மைத் தொழுது கொள்ளும்படி வெகுதூரத்திலிருந்து வந்தவனுக்கு இந்தக் கொடுமையா? என்று மனதில் எண்ணிக் கொண்டு மறுவார்த்தையின்றி சுமந்து கொண்டு போனான். ரோமர் பலவந்தமாய் தமது ஜனத்தை வேலை கொள்வது ஆண்டவருக்குத் தெரியும். ஆனால் ராஜ்ய விஷயங்களில் அவர் தலையிடவில்லை. யூதர் தேவ ராஜ்யத்தில் பிரவேசிப்பார்களானால் சகல அடிமைத்தனமும் தானே நீங்கும் என்பது அவர் துணிவு. இந்த இடத்தில் "ஒருவன் உன்னை ஒருமைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ" என்று அவர் சொன்ன போதுங்கூட அவர் கருத்து தேவராஜ்யத்தின் சம்பந்தமாகவே யிருந்தது. அது எப்படியென்று பார்ப்போம்.

### 1. நியாயப்பிரமாணத்தை அவர் விஸ்தரித்ததில் இதைக் காணலாம்

"கொலை செய்யாதே" என்பது நியாயப்பிரமாணம். ஒருவன் அதைக் கைக்கொள்வது ஒரு மைல் தூரம் போலானதாகும். ஆண்டவரோ கோபமே கூடாதென்கிறார். இது இரண்டுமைல் தூரம் போவது. 'விபசாரஞ்செய்யாதே' என்பது நியாயப்பிரமாணம். ஆண்டவரோ தீய நினைவுக் கூடாது என்கிறார். இது இரண்டு மைல் போவது. கண்ணைக் கொடுத்தால் அவன் கண்ணைக் கெடுக்க வேண்டும், பல்லை உடைத்தால் அவன் பல்லை உடைக்க வேண்டும் என்பது பூர்வ ஏற்பாடு. ஆண்டவரோ தீமைக்குத் தீமை செய்ய வேண்டாம். பாடுபடுத்தினால் சகித்துக்கொள்ள வேண்டும் என்கிறார். இதுவே இரண்டு மைல் தூரம் போவது. அதாவது, தேவராஜ்யத்தின் பிள்ளைகள் உலக முறைப்படி நடக்கிறவர்களாயிராமல் அதற்கும் மேலான ஆவிக்குரிய பிரமாணத்தால் ஆளப்பட வேண்டுமென்பதே 'இரண்டு மைல் தூரம் போ' என்று அவர் சொன்ன கருத்து.

### 2. இரண்டு மைல் பிரமாணத்தை ஆண்டவர் ஜீவியத்திலே காண்கிறோம்

அவர் தாம் செய்யாததை மற்றவர்களுக்கு கற்பிக்கிறவரல்ல. மனுமக்கள் நடுவில் எவ்வளவோ பரிசுத்தமாக அவர் நடந்து கொண்டார். நாம் அறிந்து கொள்ள வேண்டிய தேவ காரியங்களை எவரும் பேசியிராதபடி பேசி உபதேசித்தார். அவர் செய்த அற்புத கிரியைகளுக்கோ கணக்கில்லை. எவ்வளவு அன்பு! எவ்வளவு கிருபை! எவ்வளவு அனுதாபம்! எவ்வளவு இரக்கம்! எவ்வளவு மன்னிப்பு! எவ்வளவு ஞானம்! மனுமக்களுக்கு தேவையானதெல்லாம் அவரில் காண்கிறோம். அவர் பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து பிதாவின் கிரியைகளைப் பூரணாக நிறைவேற்றினபோது மலையிலே மறுரூப மகிமையை அடைந்தார். அங்கிருந்தே அவர் பிதாவிடம் போயிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அது அவருக்கு ஒரு மைல் ஆகும். அருள்நாதரோ இரண்டு மைல் தூரம் போக விரும்பினார். அந்த இரண்டாம் மைல் உலகத்தின் ரட்சிப்புக்காகத் தமது விலையேறப்பெற்ற ஜீவனைக் கொடுக்கும்படி அவர் தெரிந்து கொண்ட கல்வாரிமலைச் சிலுவையே. அவரது அளவற்ற அன்பையும் கிருபையையும் கிரகிக்கத்தக்கவன் யார்?

### 3. அவர் போதனையில் வெளிப்படும் இரண்டாம் மைல்

பிறர் நமக்குத் தீமை செய்யும்போது அதை பொறுமையையாய்ச் சகித்துக் கொள்வதே விசேஷித்த லட்சணந்தான். அது ஒரு மைலாகும். ஆனால் ஆண்டவரோ தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்யும்படி போதித்தார். இதுவே இரண்டு மைல் தூரம். மனத்தாழ்மை நல்லதே. ஆகிலும் மற்றவர்களை நம்மிலும் மேலானவர்களாகவும் எண்ண வேண்டும். சபிக்கும்போது நாம் சபியாதிருப்பதோடு அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டும். நம்மை நிந்தித்துத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ண வேண்டும். பிறரிடம் அன்பு கூறுவது மாத்திரமல்ல, ஜீவனையும் கொடுக்க வேண்டும். தேவராஜ்யத்தின் இந்த மேலான தன்மையை, உயர்வான நோக்கத்தை ஆண்டவர் போதனைகளெங்கும் காணலாம். நம்மை ஆராயும்போது ஒரு மைல் தூரம் கூடப் போனவர்களல்லவென்பது விளங்கும். அநேகர் ஆவிக்குரிய ஜீவியத்தில் கால் பர்லாங். அரை பர்லாங் தூரமே

போயிருக்கிறார்கள். இரண்டுமைல் தூரம் போனவர்கள் யார்? கிறிஸ்து நமக்குள் வசித்து நம்மை நடத்தாவிட்டால் நாம் இரண்டுமைல் தூரம் போகக்கூடியவர்கள் அல்ல.

**4. ஆண்டவர் நமக்கு செய்யும் நன்மைகளில் இரண்டு மைல் தூரம் போகிறார்**

அவர் நமக்கு மன்னிப்பது மாத்திரமல்ல. திரளான மன்னிப்புக் கொடுக்கிறார். கிருபை மாத்திரமல்ல, அளவில்லாத கிருபை அருளுகிறார். ஜீவன் மாத்திரம் அல்ல, பரிபூரண ஜீவனைக் கொடுக்கிறார். வெற்றி மாத்திரமல்ல, முற்றிலும் ஜெயங்கொள்ளச் செய்கிறார். தவறாமல் காப்பது மாத்திரமல்ல. மாசற்ற பரிசுத்தர்களாக்குகிறார். நாம் தேவமக்களாகிறது மாத்திரமல்ல, தமக்கொப்பாயிருக்கும்படி செய்கிறார். நம்மை ஆவியால் நிரப்புகிறது மாத்திரமல்ல. நம்மிலிருந்து மற்றவர்களுக்கு ஜீவதண்ணீர் பாயும்படி செய்கிறார். இவை யாவற்றிலும் அவர் நமக்கருளும் நன்மைகளில் ஒருமைல் தூரம் அல்ல. இரண்டு மைல் தூரமே போகிறார். நாம் பயந்துகொண்டு ஏதோ சில காரியங்களைக் கேட்கிறோம். அவரோ நாம் வேண்டிக் கொள்வதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் நமக்கு நன்மை செய்கிறார்.

## நமது இரண்டாம் மைலைக் கவனிப்போம்

**1. நமது ஜீவியம் தினசரி வேலைகளில் நாம் இரண்டு மைல் தூரம் போக வேணும்**

வீடுகளிலிருந்து சாதாரண வேலைகளைச் செய்கிறவர்களும், வெளியே போய்ப் பல துறைகளில் வேலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு நாம் தப்ப முடியாது. தாய் தகப்பன்மார் தங்கள் குடும்பத்துக்கு செய்யும் கடமைகளை விட்டுவிடமுடியாது. அவைகள் நாம் நிறைவேற்றும்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு மைலாயிருக்கிறது. இங்கே நாம் இரண்டு மைல் தூரம் போகும்படி ஆண்டவர் விரும்புகிறார். நாம் கிறிஸ்துவின் சிந்தையோடும், உற்சாகத்தோடும், கர்த்தருக்கென்று, நமது தினசரி கடமைகளை நிறைவேற்றுவதே இரண்டு மைல் தூரம் போவதாகும். இதுபோலவே பற்பல ஸ்தலங்களில் வேலை செய்பவர்களும் சம்பளத்தையே பிரதானமாய்க் கருதாமல், வேலையில் பிரியமுற்று அதை நன்றாய் கடவுளுக்குப் பிரியமாய் செய்வதே இரண்டு மைல் போவதாகும்.

**2. நமது சிநேக பழக்கங்களில் இரண்டு மைல் தூரம் போக வேணும்**

அன்புக்குப் பதில் அன்பு; விருந்துக்குப் பதில் விருந்து; எழுத்துக்குப் பதில் எழுத்து; சந்திப்புக்குப் பதில் சந்திப்பு என்பதாக நமது சிநேகத்தை அளவுக்குட்படுத்தக்கூடாது. நமது சிநேகத்தால் எவ்வளவு தூரம் நமது நண்பர்களைச் சந்தோஷப்படுத்தவும், ஆறுதல்படுத்தவும் கூடுமோ அவ்வளவு தூரம் நமது செல்வாக்கைத் தாராளமாக உபயோகிக்க வேண்டும். அவர்கள் ஒரு உதவியைத் தேடும்போது அவர்கள் தேடுவதிலும் அதிகமாகச் செய்யும் உற்சாக குணம் நமக்கிருக்க வேண்டும். அன்பு தாராளமாக நம்மிலிருந்து புறப்பட வேண்டும்.

**3. தேவகாரியங்களில் இரண்டுமைல்தூரம் போக வேண்டும்**

குறிப்பிட்ட ஆராதனைகள் ஜெபக்கூட்டங்கள் போதுமென்று நினைக்கக்கூடாது. கடவுளோடு இடைவிடாமல் சஞ்சரிக்கப் பழக வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் வேலைசெய்வது மாத்திரம் போதாது. எப்பொழுதும் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவேண்டும். ஆண்டவர் வேலைக்கு நாமே தொகையைத் திட்டம்பண்ணக்கூடாது. எவ்வளவு கொடுக்கும்படி ஆண்டவர் நம்மை ஏவுகிறாரோ அதை உற்சாகமாகக் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இரண்டுமைல் தூரம் போன கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகும்போது நாம் நமது ஜீவியத்திலும், ஊழியத்திலும், ஈகையிலும் உதாரமுள்ளவர்களாயிருப்போம்.

# 11. குன்றாத நம்பிக்கை

***"ஆகிலும் இன்னமும் உமது பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்" (யோனா 2:4).***

குருட்டுப் பக்தி மோசமானது. ஆராய்ச்சியோடு சேர்ந்த பக்தி உறுதியானது. நாம் விசுவாசத்தில் ஸ்திரமாயிருப்பதோடு நம்மிடத்தில் விசாரிப்பவர்களுக்கு தகுந்த உத்தரவு சொல்ல அறிந்திருப்பது நல்லது. தேர்ந்த வேதசாஸ்திரிகளுக்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். அவர்கள் வேத சாஸ்திரத்தை பிரபஞ்ச சாஸ்திர அறிவோடு விஸ்தரித்துக் காட்டுவது,

கடவுள்மீது நமக்குள்ள மதிப்பையும் பற்றுதலையும் அதிகப்படுத்துகிறது. கிறிஸ்துமார்க்கம் சுருங்கினதல்ல. கிறிஸ்து மார்க்கத்தில் உயர்ந்த தத்துவம் இல்லையெனச் சிலர் குறைகூறுவதுண்டு. காலமெல்லாம் நாம் போதிக்கிற பிரசங்கமுறையே அவ்வாறு குறைகூறுவதற்குக் காரணம். கிறிஸ்து நமக்காக மரித்தார். அவரை விசுவாசித்தால் பாவமன்னிப்பு மோட்சம் கிடைக்கும் என்று இவைகளையே காலமெல்லாம் பேசுவதால் கிறிஸ்து மார்க்கத்தில் விசாலம் மற்றவர்களுக்குத் தெரிகிறதில்லை. பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் சுருங்கினதல்ல. அவர் பார்வை மகா விசாலமானது. அது கடவுள் சிருஷ்டித்த பிரபஞ்சம் முழுவதுக்கும் மீட்பைக் கொடுக்க வல்லமையுள்ளது. நமது விசுவாசம் விசாலப்பட வேண்டுமானால் வானத்திலுள்ளவை களையும் பூமியிலுள்ளவைகளையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான சகலத்தையும் சேர்த்து இணைக்கும் சர்வகாந்தமுள்ள சிலுவையின் மகத்துவத்தை அறியவேணும். சிருஷ்டிப்பைக் குறித்து சங்கீதக்காரன் பாடினவைகளையும், யோபின் ஆகமப் போதனைகளையும் மறக்கலாகாது. இவ்விஷயத்தில் பக்தியுள்ள சாஸ்திரிகள் நமக்காகச் செய்திருக்கும் ஆராய்ச்சிகள் கொஞ்சமல்ல. ஆனால் அவர்களின் ஒரு வகுப்பார் ஆதியாகமத்திலுள்ள சிருஷ்டிப்பையும், ஜலப்பிரளயத்தையும் யோனாவின் சரித்திரத்தையும் இவை உண்மைச் சரித்திரமல்ல, வெறும் உவமானங்களே என்று கூறுவது நமக்குச் சஞ்சலமா யிருக்கிறது. அப்படி மறுப்பவர்கள் பின்னே இவை யாவும் எப்படியாயிற்று என்பதையும் சொல்லக்கூடாதிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சியிலுள்ள பல நல்ல காரியங்களை நாம் புகழ்ந்தாலும் இதுபோன்ற மறுப்புகள் உள்ளதையும் கெடுக்கின்றன. சிருஷ்டிப்பும், ஜலப்பிரளயமும், யோனாவின் சரித்திரமும் உண்மையென்பதற்கு நமதாண்டவர் வாக்குகளே நமக்கு ஆதாரம். யோனாவின் சரித்திரம் நமது ஜீவியத்துக்கு எச்சரிப்பும் தைரியமுமாயிருக்கிறது.

**1. யோனா தேவ சமுகத்தை விட்டு ஓடுதல்**

ஆ, என்ன சாமர்த்தியம்! எவ்வளவு ஞானம்! தேவசமுகத்தை விட்டு ஒரு மனுஷன் ஓடுகிறான். நாம் பாவவழியில் செல்லும்போது நமக்கு ஆலோசனை சொல்லிக்

கொடுப்பவன் சாத்தான். அந்தச் சமயத்தில் நாம் யோசிக்கிறதும் செய்கிறதும் நியாயம்போலவே நமக்குத் தோன்றும். பிந்தி யோசித்தால் வெட்கமாகவும் முட்டாள்தனமாகவும் விளங்கும். தேவ சமுகத்தைவிட்டு எவனாகிலும் ஓடமுடியுமா? கடவுள் வானத்தையும், பூமியையும் நிரப்பிக்கொண்டிருக்கிறவரல்லவா? அவரில்லாத இடம் எங்கே? பாவம் புத்தியின் கண்ணைக் குருடாக்குகிறது. நினிவேயின் அக்கிரமம் தேவசமுகத்தில் எட்டினது. கடவுள் தமது ஊழியக்காரனான யோனாவைப் பார்த்து; நீ நினிவேக்குப்போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி என்றார். யோனாவுக்கு இப்படிச் செய்வது பிரியமில்லை. ஆகையால் தேவ சமுகத்தை விட்டு ஓடிப்போய்விட்டால் காரியம் சரியாய்ப் போகுமென்று நினைத்து, யோப்பாவுக்குச் சென்று தர்ஷீசுக்குப்போகிற ஒரு கப்பலைக் கண்டு, பணங்கொடுத்துக் கப்பலில் ஏறிக் கொண்டார். தேவ சமுகத்துக்குத் தப்பிக்கொண்டோம். தொல்லை நீங்கிற்று என்பதாக அகமகிழ்ந்து பிரயாணஞ் செய்கிறார்.

யோனாவைப் பழிப்பதில் பிரயோஜனமில்லை. நமது கதை அதற்குக் குறைந்ததில்லை. ஒருமுறையல்ல, எத்தனையோ தரம் தேவசமுகத்திற்கு விலகத்துணிந்தோம். அவர் தெளிவான சித்தத்தைவிட்டுச் சுயசித்தப்படி நடந்தபோதெல்லாம் தேவசமுகத்திற்கு விலகினவர்களே. நாம் பாவஞ்செய்தபோ தெல்லாம் தேவசமுகத்தை மறந்தவர்களே. தீக்குருவியைப் போலவே நமது கதையுமாயிற்று. மனுஷர் காணாத மறைவு நமது பாவத்துக்கு ஏற்ற இடம். கடவுளுக்கும் மறைவுண்டோ? இருட்டு நமது பாவத்துக்கு அனுகூலம். தேவசமுகம் அங்கே இல்லையோ? "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உமது சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் போனாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் சமுத்திரக் கடையாந்தரங்களுக்கு ஓடிப்போனாலும் அங்கேயும் நீர் இருக்கிறீர். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது. உமக்கு இருளும் வெளிச்சமும் சரி." இதுவே பக்திமானுடைய அனுபவம். ஆகவே நாம் ஜெபிக்கும் போதும் தேவ சமுகத்தில் தான் இருக்கிறோம். பாவஞ்செய்யும்போதும் அவர் சமுகத்தில்தான் செய்கிறோம். "உமது கண்களுக்கு முன்பாகப்

பொல்லாங்கானதை நடப்பித்தேன்" என்று சங்கீதக்காரன் சொன்னது எவ்வளவு உண்மை! ஆகையால் தேவ சமுகத்துக்கு மறைந்து கொள்ளலாமென்று யோனா நினைத்ததும், நாம் நினைப்பது மதியீனமே.

**2. யோனாவுக்கு நேரிட்ட பாடுகள்**

தேவசமுகம் இல்லையென்று நினைத்த இடத்தில் தேவசமுகம் இருப்பதை யோனா கண்டார். பெருங்காற்றை வரவிட்டவரும், கடலைக் கொந்தளிக்கச் செய்தவரும், யோனாவைக் காட்டி கொடுத்தவரும், யோனாவை விழுங்கும்படி ஓர் பெரிய மீனை ஆயத்தஞ் செய்தவரும் கடவுளே. மீன் வயிற்றுக்குள் மூன்று நாள் யோனா புலம்புகிறார். ஆண்டவரே, சமுத்திர ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர். உமது வெள்ளங்களும் அலைகளும் என்மேல் புரண்டன. ஆழி என்னைச் சூழ்ந்தது; கடற்பாசி என் தலையைச் சுற்றிக் கொண்டது. பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன். பொய்யான மாயையைப் பற்றிக்கொண்ட நான் எனக்கு வரும் கிருபையைப் போக்கடித்தேன். இரங்கும் தெய்வமே என்று மன்றாடினார்.

யோனாவுக்கு நேரிட்ட பாடுகள் அவர் தம்முடைய தப்பிதத்தை உணர்ந்து கொள்ள ஏதுவாயிற்று. தேவ சமுகத்தை விட்டு விலகுகிறவர்கள் தங்கள் பாவத்தை உடனே உணரமாட்டார்கள். பாடுகள் வரும்போதுதான் உணருவார்கள். இந்தப் பாடுகள் தேவகோபத்தால் உண்டாகிறவைகளல்ல. தேவமக்கள் அனுபவிக்கும் சந்தோஷமும் சஞ்சலமும் அன்புள்ள பிதாவின் நடத்துதலாகவே இருக்கின்றன. ஷேமத்தைப்பார்க்கிலும் கஷ்டங்களே நமது ஆத்மாவுக்கு அனுகூலமாயிருக்கின்றன. பிதாவைவிட்டு அறிந்தோ அறியாமலோ படிப்படியாய் விலகிப்போனவர்கள் துன்பங்களால் ஜீவவழிக்குத்திரும்பினதை நாம் அறிவோம். பாடுகளில்லாமல் கெட்டகுமாரன் தகப்பனிடத்துக்கு வந்திருக்க மாட்டான். யோனா கடவுளை நினைக்கவும் இரக்கத்துக்காக கெஞ்சவும் நேரிட்ட பாடுகள் கிருபையின் எத்தனங்களாயிருந்தன. யோனா கடவுளை மறந்தாலும் கடவுள் யோனாவை மறக்கவில்லை. எவ்வளவு கிருபை!

**3. யோனாவுக்கு உதித்த ஓர் புதிய நம்பிக்கை**

"ஆகிலும் இன்னமும் உமது பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்" நான் என் புத்தியீனத்தால் என் ஆண்டவரை மறந்து, இவ்வளவு பாடுகளுக்கும் நானே என்னை ஆளாக்கிக் கொண்டபோதிலும், இன்னமும் உம்மை நோக்குவேன். இன்னமும் நோக்குவேன் என்ற சொல்லானது, இதற்கு முன் யோனா பலசமயங்களிலும் தப்பிதங்களைச் செய்து, கடவுளை நோக்கிப்பார்க்க, அவரிடமிருந்து இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றுக்கொண்ட பழைய அனுபவத்தை அவருக்கு ஞாபகப்படுத்தினது. அதிலிருந்து இந்தச்சமயம் ஆண்டவர் தனக்கு இரங்குவார் என்கிற புதிய நம்பிக்கை உண்டாயிற்று. நமக்கு இந்தச் சரித்திரம் எவ்வளவோ தைரியத்தைக் கொடுக்கிறது. நாம் எவ்வளவாகச் சீர்கெட்டுப் போயிருந்தாலும், பயப்படவேண்டியதில்லை. நமது நிலைமையை உணர்ந்து நம்மைத் தாழ்த்தி, இரக்கத்துக்காகக் கெஞ்சும்போது நமது பிதா நிச்சயமாகவே நம்மை அன்புடன் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிப்பார். நாம் இன்னும் அவரை நோக்கிப் பார்க்கலாம். "அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை."

**4. யோனாவுக்குக் கிடைத்த தேவகிருபை**

"கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார், அது யோனாவை கரையிலே கக்கிவிட்டது" தப்பி ஓடும்போது கப்பல் பிரயாணம்; கரைக்குத் திரும்பும்போதோ உயிருள்ள கப்பல் பிரயாணம். என்ன நடந்ததென்று யோனாவுக்குத் தெரியாது. எப்படித் தப்புவதென்றும் அவருக்குத் தெரியாது. அவரோடு பிரயாணம் பண்ணின கப்பல்காரர் அவர் மீனால் விழுங்கப்பட்டிருப்பார் என்று நினைத்திருப்பார்கள். அவர் இனத்தார் ஜனத்தாருக்கு அவர் உலகத்தில் இருக்குமிடமே தெரியாது. அப்படியிருக்க மனுமக்களில் யார்தான் அவரைத்தேடி ரட்சிக்கக் கூடும்? சமுத்திர ஆழத்தில் சென்று அந்தப் பெரிய மீன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கக் கூடியவன் யார்? "மனுஷரால் கூடாதவைகள் கடவுளால் கூடும்." வானத்தையும் பூமியையும் ஆளுகிறவர் என்னதான் செய்யமாட்டார்? தற்காலத்துச் சில சாஸ்திரிகள் அக்காலத்தில் இல்லாமலிருந்தது நற்காலம். இருந்திருந்தால் கடவுளே! இது உம்மால் முடியாத காரியம் என்று சொல்லியிருப்பார்கள். சிருஷ்டிப்பிலும்

ஜலப்பிராயத்திலும் இவர்கள் இல்லாமலிருந்தது நல்லவேளை. இருந்திருந்தால் கடவுளே! இது சாஸ்திர ஒழுங்குக்குப் பொருந்தாது என்று சொல்லியிருப்பார்கள். சாட்சாத் பகவானால் கூடாத காரியமுண்டோ? அவரை மட்டுப் படுத்தக்கூடிய வல்லமை எது? இவ்வாறு யோனாவைத் திரும்பவும் தம்மோடு ஐக்கியப்படுத்தித் தமது ஊழியத்தை நடத்தினார். பாவத்தில் ஆழ்ந்த ஆத்துமாவே, மனுஷ ரெல்லாராலும் கைவிடப்பட்டு மறக்கப்பட்ட ஆத்துமாவே, உன் பிதா உன்னை ஏற்றுக் கொள்ள ஆவலாயிருக்கிறார். உன் பாவங்களை அவருக்குச் சொல்லி அவர் திருப்பாதத்தில் விழு. மேலான வாழ்வுக்கு உன்னை உயர்த்த அவர் சித்தமும் வல்லமையுமுள்ளவராயிருக்கிறார்.

## 12. நெடுங்கால நோயாளி

***"சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?" (யோவா. 5:6).***

பெதஸ்தா குளத்துக்கு ஐந்து மண்டபங்கள் உண்டு. அங்கே அநேக நோயாளிகள் இருந்தார்கள். அது வைத்தியசாலையோ? அல்ல, அந்தத் தண்ணீர் சுகமளிப்பதாக நம்பிக்கை. என்றாலும் வியாதியஸ்தர் இருந்த வண்ணமாகவே காண்கிறோம். நகரத்துக்கு உதவாதவர்கள் புறம்பே போகவேண்டியது நியாயமே. நகரத்து அதிகாரிகள் இவர்களைக் குணமாக்கவும் முடியாது அல்லது இந்த நோயாளிகளால் நகரத்துக்கு யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது. ஆகையால் பலவீனரும் நோயாளிகளுமான இவர்கள் இந்த மண்டபங்களில் படுத்திருந்தார்கள். ஆண்டவர் எருசலேமுக்குப் போனபோது இந்த முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்த மனுஷனைக் கண்டு அவனைக் குணமாக்கினார்.

இவனைக் குணமாக்கினதிலிருந்தே ஆண்டவரைக் கொலை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் யூதருக்கு முதல் முதல் வந்தது. குணமான மனுஷன் ஓய்வுநாளில் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனதே பெரும்பாதகமாகி விட்டது. அவன் நெடுங்கால வியாதி அவர்களுக்குத் தெரியும் நல்ல சுகத்தோடு அவன் நடந்துபோகிறதை இப்பொழுது

பார்க்கிறார்கள். உடனே ஆச்சரியப்பட்டு, அப்பா! நீ எப்படிக் குணமானாய்? உன்னைக் குணமாக்கினவர் யார் என்றல்லவா கேட்கவேணும். அதொன்றுமில்லை. ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக்கொண்டுபோகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள். அந்த மனுஷன் பயந்து: என்னைக் குணமாக்கினவர் இப்படிப் போகச்சொன்னார் என்றான். அப்பொழுதாவது உன்னைச் குணமாக்கினவர் யாரென்று கேட்டார்களா? அதுவும் இல்லை படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உனக்குச் சொன்ன மனுஷன் யாரென்று கேட்டார்கள். இவர்களைப்போல் உணர்வற்ற மனுஷர் உண்டா? நீண்டகால வியாதி குணமானது பெரிய காரியமல்ல. ஓய்வு நாளில் படுக்கையை எடுத்து நடந்ததே பெரிய பாதகமாகிவிட்டது. ஆண்டவர்மேல் ஓய்வுநாளை மீறின குற்றத்தைச் சுமத்தினார்கள்.

பிந்தி ஆண்டவர் அவர்களைச் சந்தித்து: நான் ஓய்வுநாளை மீறினதாக என்னைக் குற்றப்படுத்துகிறீர்கள். நான் செய்தது குற்றமானால் கடவுளே அந்தக் குற்றத்தை செய்தவராவார். ஏனென்றால் “என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்.” அவரே என் மூலமாய் கிரியைசெய்து வருகிறார். மனுஷர் சஞ்சலப்படும்போது கடவுளுக்கு ஓய்வு ஏது? இந்த ஏழை மனுஷனுக்கு முப்பத்தெட்டு வருஷமாய் இளைப்பாறுதல் இல்லை. அப்படியிருக்க கடவுள் எப்படி இளைப்பாறுவார்? நீங்கள் என்னை ஓய்வுநாளை மீறினதாகக் குற்றப்படுத்துகிறீர்கள். நான் இந்த மனுஷனைக் குணமாக்கி அவனுக்கு இளைப்பாறுதல் கொடுத்தால் ஓய்வுநாளை உண்மையின்படியே கைக்கொண்டவன் நானல்லவா? மனுஷர் தங்கள் பாடுகளிலிருந்து நீங்கும்வரை என் பிதா ஓய்வுநாளை அறியார். “என் பிதா இதுவரை கிரியை செய்து வருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன்” என்றார். அவர் பேச்சில் ஒரு காரியத்தைத் திட்டமாய்க் கண்டு கொண்டார்கள். அதாவது, கடவுளைத் தமது சொந்தப்பிதா என்று சொல்லித் தம்மை கடவுளுக்கு சமமாக்கினார் என்பதே. ஓய்வுநாளை மீறினதுமன்றி, கடவுளுக்கு தம்மைச் சமமாக்கினபடியால் அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்துவிட்டார்கள்.

## இப்போது நோயாளியைக் கவனிப்போம்

### 1. அவன் உதவியற்றவன்

அவன் நீண்டகாலப் படுக்கையைக் கவனிக்கும்போது அவனுடைய திக்கற்ற, துணையற்ற, நாதியற்ற நிலைமை காணப்படுகிறது. மற்ற நோயாளிகளைப்பார்க்கிலும் அவன் நிலைமை மோசம். முப்பத்தெட்டுவருஷம் என்று லேசாய்ச் சொல்லிவிடுகிறோம். இரண்டொருநாள் படுக்கை நம்மால் சகிக்கக்கூடவில்லை. அந்த மனுஷனோ பதிமூவாயிரத்து எண்ணூற்று எழுபது நாட்களாக நோயாளியாயிருந்தான். தன் திக்கற்ற நிலைமையை அவன் உணராமலுமில்லை. "என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை" என்று ஆண்டவரிடம் சொல்லுகிறான். ஏன் ஒருவருமில்லை? கண்டுகண்டு பழக்கமாய்ப் போய்விட்ட படியால் அவன்பேரில் கவனம் செலுத்துவாரில்லை. நாம் முதல் முதல் ஒரு முடவனை, குருடனை அல்லது வேறொரு நோயாளியைக் காணும்போது ஏதோ சகாயம் செய்கிறோம். அவர்களை அதேயிடத்தில் அதேகுரலில் நாள்தோறும் பார்க்கப்பார்க்க முந்தின பரிதாபம் நீங்கி, அவர்களைக் கவனியாதே போய்விடுகிறோம். நெடுங்கால நோயாளியாகிய இவன் கதியும் அப்படியே ஆயிற்று.

### 2. அவன் நம்பிக்கையற்றவன்

உதவியற்றுப்போகவே நம்பிக்கையும் இழந்தான். கிருபாமூர்த்தி அவனைப் பார்த்து – நீ சொஸ்தமாகவேண்டு மென்று விரும்புகிறாயா? என்று கேட்டார். இவர் யாரென்று அவனுக்குத் தெரியாது. நாலுபேரைப்போலவே அவரும் ஒரு சாதாரண மனுஷனாகவே அங்கே நின்றார். நெடுங்கால வியாதிக் காரனைப்பார்த்து இந்தக் கேள்விகேட்டால் அவனுக்கு எப்படியிருக்கும்? இது ஏழை மனுஷனைப் பரியாசம் செய்வதா? அல்லது வாஸ்தவத்தில் இக்கேள்வியில் ஏதாவது பிரயோஜனம் உண்டா? அவன் என்ன சொன்னான்? ஐயா, என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுவார் யாருமில்லை. நான் திக்கற்றவன், நானே போக வேண்டுமென்றாலும் எனக்கு முந்தி வேறொருவன் இறங்கிவிடுகிறான். நான் என்னசெய்வது? எனக்கு நம்பிக்கை பூரணமாய்ப் போய்விட்டது. யாராகிலும் புண்ணியவான்கள் தர்மம் கொடுத்தால் அதை வாங்கிப் பிழைத்து என் ஆயுசை முடிப்பதே போது மென்றிருக்கிறேன்

என்கிறான். தன் பக்கத்தில் நிற்பவர் தன்னை சொஸ்தமாக்க வந்தவரென்று அவனுக்குத் தெரியாது. சொஸ்தமாவதைப் பற்றி அவர் கேட்டவுடன் அவன் குணத்தைப்பற்றிப் பேசின காரணம் அதுதான்.

**3. அவன் பாவமுற்றவன்**

ஆண்டவர் பிந்தி அவனை ஆலயத்திலே கண்டு, "இதோ நீ சொஸ்தமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப்பாவஞ் செய்யாதே" என்று சொன்னதைக் கவனிக்கும்போது, அவன் பாவஜீவியமே இந்த வியாதிக்குக் காரணம் என்பது தெரிகிறது. இதிலும் ஆண்டவர் கிருபையைப் பார்க்கிறோம். அவனுடைய பாவம் இன்னதென்று அவருக்குத் தெரிந்திருந்தும் அதை வெளியாக்காமல், அவன் அறிந்து கொள்ளத்தக்கதாகப் பொதுவாய்ப் பேசினது அவருடைய விவேகத்தைக் காண்பிக்கிறது. "அதிகக் கேடு உனக்கு வராதபடி இனிமேலும் பாவஞ்செய்யாதே" என்ற எச்சரிப்பானது, அவன் பாவத்தால் நோய் வந்ததுமன்றி அவன் நெடுகிலும் பாவமுள்ள வனாகவேயிருந்தான் என்பதை வெளிப்படுத்துகிறது.

## ஆண்டவர் அவனைக் குணமாக்கினதெப்படி?

ஆண்டவர் அவனைக் குணமாக்க விரும்புகிறார். ஆனால் அவனுக்குத் தெரியாமலும் அவன் சம்மதமில்லா மலும் அல்ல. இதை முக்கியமாய் நாம் மனதில் வைக்கவேணும். கடவுள் நம்மை இயந்திரங்களைப்போல பாவிக்காமல் மனுஷராகவே நடத்துகிறார். அவரிடத்தில் திரளான ஆசீர்வாதங்களிருந்தும், நம்மை ஆசீர்வதிக்க அவருக்குப் பூரண ஆவலிருந்தும், நாம் எவ்வளவுக்கு அவருக்கு இணங்கு கிறோமோ அவ்வளவுக்கே அவர் நம்மை ஆசீர்வதிக்கூடும். இந்த நோயாளியைக் குணமாக்கின விதமும் அதுபோலவே.

தனக்கு யாதொரு உதவியுமில்லை என்றிருந்தவனுக்கு உதவியுண்டென்று அறியச் செய்தார். இதுவரை எத்தனையோ மனுஷர் அவன் பக்கமாய்ப் போயிருப்பார்கள். யாராகிலும் ஒருவர் அவனைப் பார்த்து: நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டிருப்பார்களா? இல்லை. இதுவே அவனைத் திக்கற்றவனாக்கினது. ஆண்டவர் இப்படிக் கேட்டபோது, என்னைக் கவனிக்கவும் விசாரிக்கவும் ஒரு நல்ல

மனுஷன் இருக்கிறாரே என்கிற எண்ணம் அவனுக்குள் உண்டானது. அதுமாத்திரமல்ல, அந்தக் கேள்வி அவனுக்குள் புது நம்பிக்கையையும் உண்டாக்கினது. ஆண்டவர் வாக்கில் நம்பிக்கையை பிறப்பிக்கும் ஜீவனுண்டு. கப்பர்நகூம் ராஜாவின் மனுஷன் இருபத்தைந்து மைல் நடந்து கானாவூருக்கு வந்து, ஆண்டவரைப் பார்த்து: நீர் என்னோடு வந்து என் மகனைக் குணமாக்க வேண்டுமென்று கேட்டான். நீ திரும்பிப்போ, உன் மகன் பிழைத்திருக்கிறான் என்று அவர் சொன்னவுடனே அவன் திரும்பிப்போன காரணமென்ன? அவர் முகத்தோற்றம், அவர் பார்வை, அவர் சத்தம் அவனில் நம்பிக்கையை உண்டாக்கிற்று. ஆண்டவர் வார்த்தைகள் ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றன. நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று வேறுயாராகிலும் ஒருவன் அவனைக் கேட்டிருந்தால் நன்றாய் திட்டு வாங்கியிருப்பான். ஆண்டவர் கேட்டபோதோ–ஐயா, குளத்தில் இறங்கமுடியவில்லையே என்று தன் உள்ள நிலைமையைச் சொன்னான். ஆகவே தன் சுகத்தை விரும்புகிறவரும் தனக்காக கவலைப்படுகிறவருமான ஒருவர் தன் பக்கத்தில் நின்றது அவனது திக்கற்ற நிலைமையையும் அவநம்பிக்கையையும் அறவே ஒழித்தது. இவ்வாறு தமது சமுகத்தாலும், பேசின வார்த்தைக்காகவும் அவனுக்குள் யோசனையையும் நல்லுணர்ச்சியையும் உண்டாக்கின ஆண்டவர் அவனைப் பார்த்து, – "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்றார். முப்பத்தெட்டு வருஷம் அவன் செய்ய முடியாதிருந்த காரியத்தைச் செய்யும்படி சொல்லுகிறார். அப்படி எழுந்திருக்கக்கூடுமானால் அவன் அங்கே இவ்வளவு காலமாய்ப் படுத்திருக்க மாட்டானே. முடியாமல் தானே அங்கே படுத்திருக்கிறான். அவனால் முடியாததைச் செய்யும்படி ஆண்டவர் எப்படி கேட்கலாம்? அதுமாத்திரமல்ல. அவன் செய்வானோ செய்யமாட்டானோ அதுவும் தெரியாதே. அவனை எழும்பாமல் படுத்தபடியே இருந்தானானால் நாம் என்ன செய்கிறது? இவ்வாறு நாம் நமக்குள்ளே பலகேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அந்த நோயாளியைக் காணோம். அவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு வெகுதூரம் போய்விட்டான். இது எப்படியாயிற்று? ஆண்டவர் முதலாவது தமது அனுதாபத்தால் அவன் மனதை வசப்படுத்தி, தமது விசாரணையால் அவனை

யோசிக்கச் செய்து, அவன் சித்தத்தையும் ஆண்டுகொண்டார். அவன் சுகமானதை ஆண்டவர் விரும்ப, அவர் விருப்பத்துக்கு அவனும் இணங்க, அவர் எழுந்து நட என்று கற்பிக்க, அப்படியே செய்கிறேன் என்று அவன் எழும்பும்படி முயற்சிக்க, கடவுளுடைய ஜீவனும் பலமும் அந்நிமிஷமே அந்த மனிதனுக்குள் பிரவேசிக்க அவன் முற்றிலும் சொஸ்தமானான். அதேமாதிரி ஆண்டவர் நம்மையும் ஆசீர்வதிக்க நமது பக்கத்திலிருக்கிறார். அவருக்கு மனமுண்டு-நமக்கு மனமுண்டா? அவர் தமது வல்லமையை நமக்குள் அனுப்பி நம்மை ரட்சிக்கும்படி நாம் அவருக்கு இடங்கொடுப்போமா?

# 13. அடியாருக்கடியார்

**"நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு" (லூக். 7:8).**

யூதர் ரோமரின் அரசாட்சிக்குள்ளிருந்த காலத்தில் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. அகுஸ்துராயன் குடிமதிப்பு எடுத்த காலத்தில் கிறிஸ்து பிறந்தது முதல், அவரது அடியான் பவுல் ரோமாபுரிச் சிறையிலிருந்ததுவரை சுவிசேஷ சரித்திரம் ரோமர் ஆளுகையோடே சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. ராஜ்யத்திற்கு ராயனே தலை. அவனுக்குக்கீழ் பலவகுப்புள்ள அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் தேசாதிபதிகள், சேனாதிபதிகள், நூற்றுக்கு அதிபதிகள் என்றிருந்தார்கள். ஆறாயிரம்பேர் கொண்ட சேனைக்கு லேகியோன் என்று பேர். இதற்கு அறுபது நூற்றுக்கதிபதிகள் இருந்தார்கள். ஆயிரம்பேருக்கு அதிபதி சேனைத்தலைவனாவான். ஆண்டவரைத் தோட்டத்தில் பிடிக்க வந்தபோதும் பவுலைப் பிடித்தபோதும் இந்தச் சேனைத்தலைவர்களைப்பற்றி வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் எட்டு நூற்றுக்கதிபதிகளைக் காண்கிறோம். கப்பர்நகூம் நூற்றுக்கதிபதி, சிலுவையின் அடியில் நின்ற நூற்றுக்கதிபதி. செசரியாப் பட்டணத்து நூற்றுக்கதிபதி, பவுலை ரோமன் என்றறிந்து அடிகளுக்குத் தப்புவித்த நூற்றுக்கதிபதி, யூதர்கள் பவுலைக் கொலை செய்யும்படி தீர்மானித்திருந்தபோது, அவரைக் காப்பாற்றும்படி, இராவோடிராவாய் செசரியாவுக்கு பேலிக்ஸிடம்

கொண்டுபோன இரண்டு நூற்றுக்கதிபதிகள். பேலிக்ஸ் அனுமதிப்படி பவுலைச் சிறையில் பட்சமாய் நடத்தின நூற்றுக்கதிபதி கடைசியாக பவுல் ரோமாபுரிக்குப் போகும்போது, கப்பல் உடைய, போர்ச்சேவகர் எல்லாக் கைதிகளையும் கொன்றுபோட வேண்டுமென்று யோசனை சொன்னபோது, பவுலைக் காப்பாற்றின நூற்றுக்கதிபதி. இந்த எட்டு நூற்றுக்கதிபதிகளில் இருவருடைய பேர் மாத்திரம் நமக்குத் தெரியும். செசரியாப் பட்டணத்து நூற்றுக்கதிபதி கொர்நேலியு; பவுலைக் காப்பாற்றின யூலியு. இவர்களில் முதல் மூன்று நூற்றுக்கதிபதிகளும் நமக்கு விசேஷித்தவர்கள். தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரிடம் விண்ணப்பித்துக் கொண்ட கப்பர்நகூம் நூற்றுக்கதிபதி. அவன் சொன்ன வார்த்தைகளே நமது பிரசங்க வாக்கியம். இவனுடைய விசுவாசத்தைக் கண்டு ஆண்டவர் ஆச்சரியப்பட்டார். சிலுவையடியில் நின்ற நூற்றுக்கதிபதியின் அறிக்கை. "இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன்" என்றான். கொர்நேலியு முந்தின இருவரிலும் விசேஷித்தவன். இவன் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டதுமன்றி, பரிசுத்த ஆவியினால் நிறைந்த உத்தம கிறிஸ்தவனானான்.

**1. இந்த நூற்றுக்கதிபதிகளிடம் காணப்பட்ட நற்குணங்களுக்குக் காரணம் என்ன?**

நாம் கவனித்த அளவில் எல்லாரிடத்துமே நற்குணம் காணப்படுகிறது. கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்ட மூவரிடம் அந்த நற்குணம் அதிகமாய்த் துலங்குகிறது. இவர்கள் யூதரல்ல. கடவுளற்ற புறஜாதியாரென்று இகழப்பட்டவர்கள். யூதரோ தங்கள் கடவுளைக் குறித்தும், ஆலயத்தைக் குறித்தும், ஆராதனைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டினவர்கள். கப்பர்நகூம் நூற்றுக்கதிபதியைக் குறித்து அவனுடைய விசுவாசத்திற்கு ஒப்பான விசுவாசம் இஸ்ரவேலிலும் இல்லை என்று ஆண்டவர் தெளிவாய்ச் சொல்லிவிட்டார். இதற்குக் காரணமென்ன? நூற்றுக்கதிபதி சொன்ன வார்த்தைகளிலேயே அந்தக் காரணத்தைக் காண்கிறோம். "நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்வீரரும் உண்டு" மேல் அதிகாரத்திற்கு நான் கீழ்ப்படி வதற்குத்தக்கபடி என் கீழுள்ளவர்கள் எனக்குக் கீழ்ப்படி வார்கள். ஆகையால் என் கீழ்ப்படிதலும் நான் செலுத்தும்

அதிகாரமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது. இதுவே ரோமைப் போர்வீரர் வாழ்க்கையின் தத்துவம். இதற்கு முன் இந்த எண்ணம் அவனுக்குள் வந்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் அவன் கிறிஸ்துவின் காரியங்களை அறிந்த பின் மேலதிகாரத்திற்கும் கீழதிகாரத்திற்குமுள்ள சம்பந்தத்தைத் திட்டமாய்க் கண்டிருக்கலாம். அந்த உணர்ச்சியின்படியே அவன் இந்த வார்த்தைகளை ஆண்டவருக்குச் சொன்னான்.

"நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவன்" என்கிறான். ரோமைச் சேனையின் ஒழுங்கு நிகரற்றது. நூற்றுக்கதிபதிகள் இராயனுக்குக் கீழ்ப்பட்டவர்கள். இராயனுடைய ராஜ்யத்துக்காக உழைக்கவும் அதைக் காப்பாற்றவும் கடமைப்பட்டவர்கள். இராயனுடைய சித்தமே அவர்கள் சித்தமாயிருக்கவேண்டும். அவர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்க முடியாது. எப்போது சேனையில் அமர்ந்தார்களோ அதுமுதல் அவர்களுக்குத் தனிப்பட்ட சொந்த சுதந்தரம் என்றில்லை. இனஜனத்தோடு சம்பந்தம் கூடாது. எல்லாவற்றையும் விட்டுப்பிரிந்து ராயனுக்கென்றே பிழைக்க உழைக்கவேணும். அவர்கள் நேரம், பலம், உடை, போஜனம் சகலமும் ராயனுடையதே. ராஜ்யத்தின் யுத்தங்களை நடத்த அவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். கட்டளை பிறந்ததும் உடனே கீழ்ப்படிந்து முன் செல்ல வேண்டும். இந்தக் குறிப்புகள் யாவையும் கப்பர்நகூம் நூற்றுக்கதிபதியிடம் காண்கிறோம். மேலதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் போர்வீரன்.

இவன் இவ்வாறு மேலதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த தாலே, தனக்குக் கீழ்ப்பட்ட போர்வீரரை அதிகாரம் செலுத்தும் உரிமையுமுள்ளவனாயிருந்தான். ஆளும் அதிகாரம் கீழ்ப்படிதலின் உரிமை. இவன் ராயன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாலே இவனுக்குக் கீழ்ப்பட்ட சேவகர்கள் இவன் கட்டளைக்கு உடனே கீழ்ப்படிந்தார்கள். இவன் ராயனை மதிக்காமல் தன் இஷ்டப்படி நடந்தால் இவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் இவனை மதிக்கமாட்டார்கள். கீழ்ப்படிய மாட்டார்கள். மேலதிகாரத்தை இவன் மதிக்காவிட்டால் இவன் அதிகாரம் செல்லாது. ஆகவே நூற்றுக்கதிபதியின் கீழ்ப்படிதலும் அவன் செலுத்தும் அதிகாரமும் ஒன்றோ டொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆதலால் "நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக்

கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு" என்று அவன் சொன்னது உண்மையே.

## 2. இந்த உண்மையை அவன் கிறிஸ்துவில் கண்டான்

அவரை இன்னாரென்று இவன் பூரணமாய் அறிந்து கொண்டவன் அல்ல. ஆனால் அவர் கானாவிலிருந்து கொண்டு கப்பர்நகூம் ராஜாவின் மனுஷனுடைய மகனைக் குணமாக்கினது இவனுக்குத் தெரியும். தான் கட்டின ஜெப ஆலயத்திலே சூம்பின கையனைக் குணமாக்கி, அசுத்த ஆவியைத் துரத்தினதை அறிவான். திமிர்வாதக்காரன், பேதுரு மாமி சுகமானதையும் அறிந்திருந்தான். இவைகளை அவர் நடப்பித்த அதிகாரத்தைப்பற்றி யோசித்தபோது, இவர் ஏதோ ஓர் மேலதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவராயிருப்பதால்தான், தமக்குக் கீழ்ப்பட்டவைகளில் அதிகாரம் செலுத்துகிறார். நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருப்பதாலே எனக்குக் கீழ்ப் பட்டவர்கள்மேல் நான் அதிகாரம் செலுத்துகிறேன். ஒருவனைப் போவென்றால் போகிறான். மற்றொருவனை வாவென்றால் வருகிறான். என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான். ஆகையால் நீர் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் பிழைப்பான் என்று சொல்லி அனுப்பினான்.

நூற்றுக்கதிபதி ஆண்டவரைக் குறித்து நினைத்தது சரியே. அவர் மேலதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்தான். இதை ஆண்டவர் வார்த்தைகளில் தெளிவாய் காண்கிறோம். அவர் ஜீவியம், பேச்சு, உபதேசம், கிரியைகள், பிரயாணம், பாடுமரணம் சகலத்திலும் தமது பிதாவின் சித்தப்படியே பிழைத்தாரென்பது நிச்சயம். பிதாவுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். இந்தப் பூரண கீழ்ப்படிதலே அவரது அதிகாரத்துக்குக் காரணம். அவருடைய கீழ்ப்படிதலும் அதிகாரமும் ஒற்றுமைப்பட்டிருந்தது. ஒன்று போனால் மற்றது போய்விடும். இந்த இரகசியத்தை நூற்றுக்கதிபதி கண்டுகொண்டான். அவரிலிருந்து தன் கீழ்ப்படிதலையும் தான் அதிகாரம் செலுத்தும் விதத்தையும் நன்குணர்ந்தான். ஆண்டவர் என் வீட்டுக்கு வரவேண்டியதில்லை. அவர் ஒரு வார்த்தை சொன்னால் என் வேலைக்காரன் கட்டாயம் குணமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும்

நான் ஒருவார்த்தை சொன்னால் என் வேலைக்காரன் உடனே கீழ்ப்படிகிறானே என்றான். இந்த விசுவாசத்தை ஆண்டவர் பகிரங்கமாகப் புகழ்ந்தார். வேலைக்காரனும் குணமானான்.

### 3. நமக்குப் போதனை

நமது ஆண்டவர் அனுபவமும் நூற்றுக்கதிபதியின் அனுபவமும் நமக்கு மாதிரி. மேலதிகாரத்துக்கு நாம் எவ்வளவு கீழ்ப்படிகிறோமோ அவ்வளவுக்கே நம்மோடு சம்பந்தப் பட்டவர்கள் நமக்குக் கீழ்ப்படிவார்கள். கீழ்ப்படிதலுள்ள நூற்றுக்கதிபதியின் வார்த்தையை மீறுகிறவன் ராயனால் ஆக்கினையடைவான். ஏனென்றால் நூற்றுக்கதிபதியின் அதிகாரம் ராயனுடைய அதிகாரம். அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களே ஆளும் உரிமையுடையவர்கள். போதகர் தேவசித்தப்படி பிழைப்பதே பிரசங்கபீடத்தின் வல்லமைக்குக் காரணம். தேவ ஆளுகைக்குக் கீழ்ப்படியாதவர்களின் ஊழியத்தைச் சபையார் மதிக்கமாட்டார்கள். அவர்கள் போதனையில் சப்தமேயன்றி இருதயங்களைக் கீழ்ப்படுத்தும் அதிகாரம் இருக்காது. தமக்குக் கீழ்ப்படியாதவர்களிடமிருந்து தேவன் அதிகாரத்தை எடுத்து விடுவார். பெற்றார் தேவ ஆளுகைக்குப் பூரணமாய்க் கீழடங்கி நடப்பதே மக்களை ஆளும் ரகசியம். அடிதடியாலும் ஆயிரம் போதனையாலும் காரியம் பலிக்காது. ஓய்வு நாள் உபாத்திமார் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே பிள்ளைகளின் மனதை வசப்படுத்தும் ரகசியம். எஜமான்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே வேலைக் காரரை வேலைகொள்ளும் ரகசியம். மேலதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மனமற்றவர்கள் தம் கீழுள்ளவர்கள்மேல் அதிகாரம் செலுத்தும் உரிமையை இழந்து போவார்கள்.

## 14. சவுல் மதியீனம்

***"இதோ நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ் செய்தேன்" (1 சாமு. 26:21).***

சவுல் தாவீதைத் தீராப்பகையாய்ப் பகைத்தான் என்பது நமக்குத் தெரியும். கடைசியாக தாவீதைக் கொன்றுபோடும்படி சவுல் தீர்மானித்து தன் சேனையோடு சீப் வனாந்திரத்துக்குப் போனான். அங்கே அவனும் அவன் சேனையும் நித்திரை

செய்தார்கள். சவுல் தாவீதைக் கொல்லுவது போக சவுலே தாவீதின் கையில் அகப்பட்டுக் கொண்டான். தாவீது சவுலை லேசாய்க் கொன்றிருக்கக்கூடும். ஆனால் தாவீது அப்படிச் செய்யாமல் சவுலின் கொலைபாதகக்குணத்தை அவனுக்கு உணர்த்தினான். அச்சமயத்தில் சவுல் தாவீதைப் பார்த்து "இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ் செய்தேன்" என்றான். இது உண்மைதான். ஆகிலும் இது நிலையான அறிக்கையல்ல. ஒருவன் தன் மனதில் பலதடவைகளில் நினைத்ததைத் திடீரென அறிக்கை செய்ய நேரிடும். கொஞ்சம் யோசிப்பவனானால் அவன் அவ்வாறு வெளியிடமாட்டான். சில சமயங்களில் அவன் அறியாமலே அவன் உள்ளத்தின் நிலைமை வெளியே காணப்படும். சவுல் காரியமும் அப்படியே நீர் உம்மை மதியற்றவனென்று தாவீதிடம் சொன்னீரே என்று பிந்தி யாராவது சவுலைக் கேட்டால் நான் யோசிக்காமல் சொல்லிவிட்டேன், அதை நான் கருதவில்லை என்பான். சவுலுக்கு கர்த்தர் அயர்ந்த நித்திரையைக் கொடுத்தார். நித்திரை குணமாக்கும் தன்மையுள்ளது. எவ்வளவு கொலைபாதக நோக்கத்தோடு அவன் வந்திருந்தாலும் விழித்தபோது அவன் மனநிலை மாறியிருந்தது. தாவீது நியாயத்தோடும் உருக்கமாகவும் பேசின வார்த்தைகளைக் கேட்ட சவுலின் அமர்ந்த மனது தன் மதியீனத்தை உணர்ந்து அறிக்கை செய்தது. ஆகிலும் அது நிலையுள்ளதல்ல. கோபத்தோடும் மூர்க்கத்தோடும் நித்திரை செய்கிறவன் விடிந்தால் வெட்கமடைவான்.

**சவுலைக் கவனிப்போம்**

***1. நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்.*** பென்யமீன் கோத்திரம். கீசின் குமாரன். தகப்பனோ பராக்கிரமசாலி. அவன் வளர்ப்புக்கேற்ற அநுகூலங்கள் வீட்டில் இருந்தன.

***2. நல்ல சரீரமுள்ளவன்.*** சவுந்தரியமான வாலிபன். இஸ்ரவேலருக்குள் அவனைப்போல அழகுள்ளவர்கள் இல்லை. எல்லா மனுஷரைப்பார்க்கிலும் உயரமுள்ளவன்.

***3. நல்ல வாழ்க்கையுள்ளவன்.*** கிராம வாழ்க்கை சுகமான வாழ்க்கை. சமுசாரிவாழ்க்கை பலமுள்ள வாழ்க்கை. குடும்பக்காரியங்களைப்பார்ப்பதிலும், கழுதைகள் காணாமற்

போனால் அலைந்து தேடுவதிலும், காலதாமதமான போது தகப்பன் தனக்காகக் கவலைப்படுவார் என்று யோசிப்பதிலும் அவனுடைய நற்குணம் விளங்குகிறது.

***4. தன்னடக்கமுள்ளவன்.*** கழுதையைப்பற்றி விசாரிக்க சவுல் சாமுவேலிடம் சென்றபோது சாமுவேல் சவுலிடம் அவனுக்கு வரப்போகிற ராஜமேன்மையைப்பற்றிப் பேசினார். சவுல் அதை ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவனென்றுணர்ந்து தன் குடும்பம் அற்பமானதென்று தாழ்மையுடன் சொன்னான்.

***5. தைரியசாலி.*** இவன் ராஜாவான ஆரம்பத்தில் அம்மோனியனான நாகாஸ் யாபேசை முற்றிக்கைபோட்டு ஜனங்களைச் சித்திரவதை செய்வதாகக் கூறினான். வயலிலிருந்து வந்த சவுல் இதைக் கேள்வியுற்று, ஜனத்தைச் சேர்த்து, அம்மோனியரை சர்வ நாசஞ்செய்தான்.

**அவனுக்கிருந்த சிலாக்கியங்களைப் பார்ப்போம்**

***1. இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்.*** இந்தப்பதவி அவன் சகல ஜனங்களுக்கும் எவ்வளவோ ஆசீர்வாதமாயிருப்பதற்கு அனுகூலமாயிருந்தது. தான் ராஜாவாயிருந்து செய்யும் ஆளுகையால் கடவுள் எல்லாருக்கும் மேலான ராஜாவென வெளிப்படுத்தும் சிலாக்கியமிருந்தது.

***2. ராஜபதவிக்கேற்ற தகுதியும் அவனுக்குண்டு.*** கடவுள் அவனை ராஜாவாக்கினபோது அவனுக்கு வேண்டிய ஞானத்தையும் பலத்தையும் கொடுப்பாரென்பது மாத்திரமல்ல. அதற்கேற்ற தகுதியுள்ளவனையே அவர் அழைக்கிறார். மேற்கவனித்த ஐந்து குறிப்புகளும் அவனுக்கிருந்த தகுதியை காண்பிக்கின்றன.

***3. கடவுள் அவனோடிருந்தார்.*** "கர்த்தர் உன்னோடிருக்கிறார்" என்று சாமுவேல் சொன்னது உண்மை. கடவுள் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார். தேவ ஆவி அவன்மேல் பலமாய் வந்திறங்கினார். அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனோடு சேர்ந்து கொண்டது.

***4. நல்ல சிநேகிதர்கள் அவனுக்கிருந்தார்கள்.*** முதலாவது சாமுவேலே அவன் சினேகிதனாயிருந்தார்.

இதுதவிர, கடவுள் எவர்கள் மனதை ஏவினாரோ அவர்களும் சவுலுக்குச் சிநேகிதராயிருந்தார்கள். பொல்லாதவர்கள் இன்னாரென்பதையும் அறிந்து கொண்டான். இவை யாவும் சவுலுக்கிருந்த சிலாக்கியங்களே.

**சவுல் மதியீனம்**

*1.* ***ராஜாவாக அபிஷேகிக்கத் தேடினபோது அவன் ஒளித்துக் கொண்டது மதியீனம்.*** *கடவுள் அழைத்து, தீர்க்கதரிசி மூலம் அதை உறுதிப்படுத்தி, பல அடையாளங் களாலே ரூபித்துக் காட்டினபின் ஓடி ஒளிப்பதென்றால் மதியீனமே.*

***2. வீண்பெருமை.*** சவுல் மூவாயிரம் பேரைச் சேனையில் சேர்த்து, இரண்டாயிரத்தைத் தனக்கு வைத்துக்கொண்டு, ஆயிரத்தை யோனத்தானுக்குக் கொடுத்தான். யோனத்தான் பெலிஸ்தருக்கு விரோதமாகப் போராடி ஜெயம்பெற, சவுல் ஜெய எக்காளம் ஊதினான். இப்படிச் செய்தது தான் ஜெயித்ததாக ஜனங்கள் நினைக்கும்படிக்கல்லவா?

***3. துணிகரம்.*** *பலியிடுவது தீர்க்கதரிசியான சாமுவேலுக்கே உரியது. சாமுவேல் வரத்தாமதித்தபோது, நாம் ஏன் காத்திருக்க வேண்டுமென்று சொல்லி சவுல் பலியிடத்துணிந்தான்.*

***4. பதஷ்டமான ஆணை.*** பெலிஸ்தருக்கு விரோதமாகச் சண்டை நடந்தபோது, ஒருவனும் சாயங்காலம் வரை போஜனம் செய்யக்கூடாதென்றும், மீறிச் செய்கிறவன் சாக வேண்டு மென்றும் ஆணையிட்டான். ஜெயமடைந்த யோனத்தானோ அகப்பட்டான். அவன் கொஞ்சம் தேன் சாப்பிட்டதால் களைப்பு நீங்கினான். ஜனங்கள் தடுக்காவிட்டால் யோனத்தான் செத்திருப்பான்.

***5. கீழ்ப்படியாமையும், பொய்யும்.*** *அமெலேக்கியர் விஷயத்தில் சாமுவேலுக்கு சவுல் கீழ்ப்படியவில்லை. கேட்டபோது பொய்யும் சொன்னான்.*

***6. விடாப்பகை.*** *நல்ல தாவீதை குருவியை வேட்டை யாடுவது போல் வேட்டையாடினான். தாவீதின் பேரில் தீராப் பகையாயிருந்தான்.*

**7. குறிகேட்கப் போனான்.** கடவுள் இஸ்ரவேலருக்குள் குறிசொல்லுகிறவர்களை ஆக்கினைப்படுத்தியிருக்க, தேவ மனுஷனாயிருக்கவேண்டிய சவுல் ரகசியமாகக் குறிகாரியிடம் போய் விசாரித்தான்.

**இந்த மதியீனத்துக்குக் காரணம் என்ன?**

தன்னை இந்த மேலான பதவிக்கு அழைத்த கடவுளை மறந்தான். ஜனங்களுக்கு பரமராஜாவை வெளிப்படுத்தி, அவருக்கு பயந்து நடக்கும்படி போதிக்கவேண்டிய சவுல் கடவுளை விட்டுவிட்டதால் மதியீனத்தின்மேல் மதியீனமான காரியங்களைச் செய்து மடிந்தான். எவ்வளவோ தாழ்மை யோடும், நற்குணங்களோடும். நல்ல சிலாக்கியங்களோடும் ஊழியத்தை அரம்பித்த சவுல், கடவுளை மறந்து, தந்நயக்காரனாகி, இறுமாப்படைந்து, அசுத்த ஆவியால் ஆளப்பட்டு, செய்யத்தகாத மதியீனங்களைச் செய்து கடவுளால் புறக்கணித்துத் தள்ளப்பட்டான். பிறப்பின்படி எத்தனை நல்ல காரியங்கள் நமக்கிருந்தாலும், எத்தனை சிலாக்கியங்கள் நமக்கருளப்பட்டிருந்தாலும், நாம் பிரயோஜனமாயிருப்பதற்கு எத்தனை நல்ல சந்தர்ப்பங்கள் நமக்கு வாய்த்தாலும், தேவனை மறந்து, அவர் ஆளுகையைப் புறக்கணித்து, மனங்கொண்டபடி நடக்க ஆரம்பித்தால், எல்லாச் சிலாக்கியங்களும் வீணாகி, நாம் மதியீனராக மடிவோம் என்பது நிச்சயம்.

# 15. மூன்று கண்ணாடிகள்

***"கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷன்" (யாக். 1:23).***

கண்ணாடி மிகவும் பிரயோஜனமுள்ளது. அதிலே நமது சாயலைக் காண்கிறோம். பெரிய கடைக்குள் பிரவேசிப் பவர்கள் எதிரேயிருக்கும் கண்ணாடியில் திடீரென தங்கள் சாயலைக்க கண்டு பிரமிப்பதுண்டு. முகக்கண்ணாடி, பாதிச் சரீரத்தைக் காட்டும் கண்ணாடி, முழுச்சாயலையும் காண்பிக்கும் கண்ணாடியெனப் பல அளவுள்ள கண்ணாடிகள் இருக்கின்றன. முகவசீகரமுள்ளவர்கள் தங்கள் அழகைப் பார்க்கும்படி அடிக்கடி கண்ணாடிமுன் நிற்பார்கள். அழகில்லாதவர்கள் தங்கள் சாயலைக் கண்டமாத்திரத்தில்

கண்ணாடிக்கு விலகிக் கொள்வார்கள். இப்பொழுது நமது சரீர தோற்றத்தையல்ல, நமது உள்ளான குணத்தைக் காட்டும் மூன்று வகைக் கண்ணாடிகளைப் பார்ப்போம்.

**1. வசனக் கண்ணாடி**

கர்த்தருடைய திருவசனமே நமது உள்ளான நிலைமையைக் காட்டும் தெளிவான கண்ணாடி. அவ்வசனங்களை நாமே வாசிக்கும்போதும் அல்லது மற்றவர்கள் வாசிக்கக் கேட்கும்போதும், அல்லது மற்றவர்கள் வசனத்தை எடுத்துப் பிரசங்கிக்கும்போதும் நமது உள்ளான சாயலைக் காண்கிறோம். வேதபாரகனாகிய எஸ்றா சபையாருக்குமுன் நின்று, நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை வாசித்து, அவைகளை விளக்கிக்காட்டினபோது ஜனங்கள் யாவரும் அழுதார்கள். கர்த்தர் தமது வசனத்தின் மூலமாய் யோபோடு பேசத்தொடங்கினபோது, அவர் தன் சாயலைக்கண்டு தூசியிலும், சாம்பலிலும் தன்னைத் தாழ்த்தினார். சபையைப் பாழாக்கின சவுல் கர்த்தர் வார்த்தையைக் கேட்டு கீழே விழுந்து, பாவிகளில் பிரதான பாவியென்று அறிக்கையிட்டார். பேதுரு திருவசனத்தைக் கூறி அறிவித்தபோது மூவாயிரம் பேர் தங்கள் உள்ளான கேட்டைக் கண்டு ரட்சிப்புக்காக கதறினார்கள்.

நாம் இந்தக் கண்ணாடியை அடிக்கடி பார்க்க வேண்டும். இந்தக் கண்ணாடியை அசட்டை செய்தால் நமது இருதயத்தின் கேடுபாடுகளை அறியமாட்டோம். அந்தக் கேடுபாடுகள் நீங்கும்படி விரும்பவும் மாட்டோம். உள்ளம் சுத்திகரிக்கப்படவும் பரிசுத்தமாகவும் நாடமாட்டோம். முகத்தைக் காட்டும் கண்ணாடி அழுக்கைக் காண்பித்தபோதிலும், அவ்வழுக்கை நீக்கும் வல்லமை கண்ணாடிக்கில்லை. திருவசனக் கண்ணாடியின் சக்தியோ வேறே. அது நமது ஆத்ம கேட்டை காட்டுவதுமன்றி நம்மைச் சுத்திகரித்து ரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கிறீர்கள்" என்றும், "உமது சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம்" என்றும் ஆண்டவர் சொன்னார். நாம் திருவசனத்துக்கு வாஞ்சையோடு செவி கொடுக்கும்போது நமது பாவங்களைக் காட்டுவதோடு நம்மைச் சுத்திகரிக்கும் சக்தியும் வசனத்துக்கு உண்டு.

## 2. மனுஷக்கண்ணாடி

இந்தக் கண்ணாடியை ரோமர் 2:1இல் பார்க்கிறோம். "மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" மெய்யாகவே மற்ற மனுஷரில் நமது சாயலைக் காண்கிறோம். அவர்கள் நம்மை நமக்குக் காட்டும் கண்ணாடிகளாயிருக்கிறார்கள். தேவகிருபையினால் நாம் ரட்சிக்கப்பட்டு, அநேக பாவங்களுக்கு நாம் விலகினவர்களானாலும், மற்ற மனுஷர் நமது மறைவான நோயை வெளிப்படுத்தி நம்மை வெட்கத்துக்குள்ளாக்குகிற கண்ணாடிகளாயிருக்கிறார்கள். புறம்பான மனுஷருடைய ஜீவியத்தையும், சாடைகளையும், நோக்கங்களையும் கவனிக்கிற பக்தர்களுக்கு இது நன்றாய்த் தெரியும். ஒருவேளை நம்மை அவர்கள் அறியாதிருக்கலாம், என்றாலும் நமது உள்ளான பாவசுபாவத்தை அவர்கள் தங்கள் பேச்சினால் அல்லது செய்கையினால் உணர்த்துகிறார்கள். நாம் நம்மை கண்டோமென்பது அந்த மனுஷக் கண்ணாடிகளுக்குத் தெரியாது.

தேவபக்தியுள்ள ஒரு உபாத்தியார் தன் மாணாக்கரில் ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்தபோது அதே பலவீனம் தனக்குள்ளிருப்பதை உணர்ந்து, அக்குற்றத்தை விசாரிக்கத் தைரியமற்றுப்போனார். அந்த மாணாக்கனிடம் தன் சாயலைக்கண்டு தன்னைத் தாழ்த்தினார். முற்கோபி ஒருவன் தான் கோபத்துக்கு இடங்கொடாதிருந்தாலும் வேறொருவன் கோபத்தால் பெரும் பாதகத்தைச் செய்தானென்று கேள்விப்படும்போது தன் சுயசாயலை அந்தக் கண்ணாடியில் கண்டு கொள்ளுகிறான். இப்படியே மற்ற மனுஷர் தங்கள் செய்கைகளால் நமக்குள் மறைந்திருக்கும் தீய சுபாவத்தை வெளிப்படுத்தும் கண்ணாடிகளாயிருக்கிறார்கள்.

எல்லாருக்கும் இந்த உணர்ச்சியிருக்கிறதில்லை. மற்றவர்களில் தங்களைக் காண்கிறதில்லை. தங்கள் அக்கிரமங்களையும் உணருகிறதில்லை. ஆகையால் மற்றவர்களிடத்தில் தப்பிதத்தைக் காணும்போது அவர்களை ஆக்கினைக்குட்படுத்தத் தீவிரிக்கிறார்கள். அவர்கள்

மற்றவர்களைக் குற்றப்படுத்தும்போது தங்களையே குற்றப்படுத்துகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிகிறதில்லை. ஒரு கிராமத்தில் ஒரு மனுஷன் திருடினான் என்று குற்றஞ்சாற்றப்பட்டான். அவனை பிடித்தவர்கள் அவன் முகத்தில் துப்பி, மண்ணைவாரி அவன் தலைமேல் போட்டு சாணியைக் கரைத்து அவன்மேல் ஊற்றி, அவனைக் கீழே போட்டு உதைத்தார்கள். இவனுக்கு இவ்வாறு செய்தவர்கள் யாரென்று விசாரித்தால் அவனிலும் பொல்லாத பேர்வழிகளென்று தெரிந்தது. அவனோ ஒரு குற்றத்தைச் செய்தான். இவர்களோ காலமெல்லாம் துன்மார்க்கரே என்றாலும் தங்கள் கேட்டை அவர்கள் காணவில்லை. கண்ணாடியில் தன் சாயலைக்கண்ட புலி தானே அதுவென்று அறியாமல், அதை வேறே புலியென்று நினைத்துச் சீறிப்பாய்ந்து கண்ணாடியையும் உடைத்துத் தன்னையும் காயப்படுத்திக் கொண்டதுபோல இப்படிப்பட்டவர்கள் தங்களையே ஆக்கினைக்குட்படுத்திக்கொள்ளுகிறார்கள். பக்தனுடையே காரியமோ வேறே. விலங்கிடப்பட்டுக் கொண்டுபோன இரு குற்றவாளிகளை ஒருவர் பார்த்தார். பக்கத்தில் நின்றவர்கள் அவரைப் பார்த்து: ஐயா, அக்கிரமக்காரர் அகப்பட்டுக் கொண்டதைப் பார்த்தீராவென்று பரியாசமாய்ப் பேசினார்கள், அதற்கு அவர்: அப்படியல்ல, தேவகிருபை என்னைக் காக்காவிட்டால் நானும் அவர்களில் ஒருவனாயிருந்திருப்பேன் என்றார். பிறருடைய தவறுதல்களைக் குறித்து நாம் கேள்விப்படும்போது நாம் சந்தோஷப்படாமலும், தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று சொல்லாமலும், "நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்" என்று தாழ்மையோடு சொல்லுவோமாக.

### 3. மக்கள் கண்ணாடி

இது நாம் பெற்ற நமது சொந்தக் கண்ணாடிகள். "தாயைப்போல மகள்" (எசே. 16:44). ஆதாம் தன் சாயலின்படியும் ரூபத்தின்படியும் ஒரு குமாரனைப் பெற்றான். பெற்றோர் தங்கள் சாயலைத் தங்கள் பிள்ளைகளில் காண்கிறார்கள். பிள்ளைகள் சில வேளைகளில் தாய் தகப்பன் சாயலில் பிறக்கிறதுண்டு. சிலவேளைகளில் இரு சாயலும் சேர்ந்து

பிறக்கிறதுண்டு. சிலவேளைகளில் தாய்வழி, தகப்பன் வழியைச் சேர்ந்த இனத்தார் சாயலிலும் பிறக்கிறதுண்டு. நாம் இப்பொழுது பிரதானமாய்க் கவனிக்கிற சாயல் சரீர சாயல் அல்ல. உள்ளான சாயலைப்பற்றியே பேசுகிறோம்.

ஆதாம் பாவம் செய்தபோது மனைவிபேரில் குற்றத்தைப் போட்டான். தன் மகன் காயீன் ஆபேலைக் கொன்றபோது ஆதாம் தன் சுபாவத்தைக் கண்டான். யாக்கோபு தன் எத்தைத் தன் மக்களிடம் கண்டான். தாவீது தன் பாவத்தைத் தன் பிள்ளைகளிடம் கண்டான். பெற்றோர் தேவ கிருபையால் தேவபக்தராக நடந்தாலும் அடிக்கடி தங்கள் சாயலை மக்களிடம் கண்டு தங்களைத் தாழ்த்த வேண்டியிருக்கிறது. பிள்ளைகளைப் பெற்றார் கடிந்துகொள்ளும்போது பிள்ளைகள் பெற்றாரைப் பார்த்து: நாத்தான் தாவீதுக்குச் சொன்னதுபோல்: “நீயே அந்த மனுஷன்” என்று சொல்வது போல் இருக்கிறது. தேவ ஊழியன் ஒருவர் தன் சிறுமகன் கோபமாய்ப் பேசினபோது, இது என்ன கோபம் அப்பா என்றார். பக்கத்தில் நின்ற அவரது தாயார் மகனைப் பார்த்து, அது நீர்தானே மகனே, சிறுவனாயிருந்தபோது உமது கோபத்துக்கு எல்லையுண்டோ என்றார்கள். கடவுளுக்குப் பயந்தவரும் ஜனங்களுக்குப் பிரியமானவருமான ஒருவர் இருந்தார். அவருடைய மகனைப்பற்றி இன்னின்னபடி உங்கள் மகன் செய்தானென்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே அவர் முகம் துக்கத்தால் நிறைந்தது. தன் தலை கவிழ்ந்தவண்ணமாயிருந்தார். ஒருவரும் அவரோடு பேசாது நின்றார்கள். கண்ணாடியாகிய தன் பிள்ளையில் தன்னைக் கண்டாரோ? நமது பிள்ளைகள் பிறக்கும்போதே ஆவிக்குரியவர்களாக பிறக்கிறதில்லை. பெற்றாரின் ஜென்ம சுபாவத்தோடே பிறக்கிறார்கள். கிருபையுள்ள பிதா ஏற்றகாலத்தில் அவர்களைத் தமக்குச் செந்தமாக்கிக் கொள்ளுகிறார். அவர்கள் ஜீவியம் நிச்சயமாகவே மாற்றப்படுகிறது. கடவுளுக்கென்று அவர்கள் பிழைக்கிறார்கள். சட்டங்களும், பிரமாணங்களும், அடிதடியும், ஓயா அதட்டலும், கட்டாயப் போதனைகளும் பிள்ளைகள் மனதைக் கடினப்படுத்தி தேவகாரியங்களில் வெறுப்படையச் செய்யும். பெற்றாரின் கிறிஸ்துவுக்கொப்பான ஜீவியமே பிள்ளைகளை ஆதாயப்படுத்தும் சக்தியுள்ளது. போதனைகளை மறப்பார்கள். நல்ல ஜீவியத்தையோ மறக்க முடியாது.

# 16. காகங்கள்

**"காகங்களைக் கவனித்துப் பாருங்கள்" (லூக்.12:24).**

காகங்களை ஏன் ஆண்டவர் தெரிந்து கொண்டார்? அவைகளைப் பார்க்கிலும் அழகான பறவைகள் இல்லையா? கழுகுகளைக் கவனித்துப்பாருங்கள் என்று சொல்லக்கூடாதா? அன்னப்பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் என்று சொல்லக்கூடாதா? காகங்களை மனுஷர் புகழ்வதில்லையே. காகத்தின் நிறம் கறுப்பு, நடைசரிவு, பார்வை கோணல், மனம் கபடு, வேலை திருட்டு, தின்பது பிணம், அதைக்காண்பது கெட்டசகுணம். இவ்வாறு மனுஷர் காகத்தைப்பற்றிக் குறைவாக நினைத்திருக்க ஆண்டவர் காகத்தை ஏன் திருஷ்டாந்தமாகத் தெரிந்து கொண்டார்? வேறொன்றுக்கு மல்ல. காகம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நாள்தோறும் காண்கிற பட்சி. கடவுள் காகத்தைப் போஷிக்கும்போது அதைப்பார்க்கிலும் எவ்வளவோ விசேஷித்த மனுஷனைப் போஷிக்க மாட்டாராவென்பதைப் போதிக்கவே அதைத் தெரிந்துகொண்டார்.

மேலும் நாம் நினைக்கிறபடி காகம் அவ்வளவு இழிவானதுமல்ல. ஓர் காலத்தில் பட்சிகளை வரிசைப் படுத்தினவர்கள் கழுகை முதலிலும் காகத்தைக் கடைசியிலும் வைத்தார்கள். தற்கால ஆராய்ச்சிக்காரரோ காகத்துக்கே முதல் ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். காகத்தின் உடலமைப்பு மற்றெல்லாப் பட்சிகளைப்பார்க்கிலும் பூரணமாய் அமைந்திருக்கிறதாம். அதன் மூளை பெரிதாகவும் நரம்புகள் ஒழுங்காகவும் இருக்கிறதாம். அதன் பார்வையில் தந்திரமும் அறிவும் காணப்படுகிறதாம். அது பூமியில் நிறைவேற்ற வேண்டிய வேலைக்குத் தகுந்த அமைப்பு அதன் சரீரத்தில் இருக்கிறதாம். சாஸ்திரிகள் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ளுவோமானால் ஆண்டவர் காகத்தைத் தெரிந்து கொண்டதில் அதிருப்தி கொள்ளமாட்டோம்.

## காகத்தைப்பற்றி வேதத்தில் நாம் வாசிக்கிறதென்ன?

### 1. நோவாவும் காகமும்

ஜலம் பூமியின்மேல் *150* நாட்கள் பிரவாகித்துக் கொண்டிருந்தது. கடவுள் பூமியின்மேல் காற்றை

வீசப்பண்ணினார். ஜலம் வற்ற ஆரம்பித்தது. சுத்தமாக ஜலம் வற்றினதோ என்பதை அறிய நோவா ஒரு காகத்தை வெளியே விட்டான். அது போகிறதும் வருகிறதுமாயிருந்தது. பேழைமேல் வந்து உட்கார்ந்ததேயன்றி நோவாவிடம் வரவில்லை. காகத்தின் மூலமாய் நோவா பூமியின் நிலைமையை அறிய முடியவில்லை. ஒரு புறாவை வெளியே விட்டான். எங்கும் ஜலமிருந்தபடியால் அது நோவாவிடம் வந்து சேர்ந்தது. அதைப் பிடித்துப் பேழைக்குள் வைத்துக்கொண்டான். காகம் திருட்டுக் காகமாகவேயிருந்தது. அதைக்கொண்டு நோவா நிச்சயமாய் ஒன்றும் அறிய ஏதுவில்லை. ஒருவாரம் கழித்து மறுபடியும் புறாவை வெளியே விட்டான். அது அன்று மாலையிலேயே ஒலிவமரத்திரன் இலையை வாயில் வைத்துக்கொண்டு நோவாவிடம் வந்து சேர்ந்தது. ஜலம் வற்றினதை நோவா அறிந்து சந்தோஷப்பட்டான். காகம் மாம்சத்துக்குரியவர் களுக்கும், புறா ஆவிக்குரியவர்களுக்கும் அடையாளம். காகம் பிணங்கள்மேல் கண்ணாயிருந்தபடியால்தான் நோவாவிடம் வராமல், போகிறதும் வருகிறதுமாயிருந்தது என்று சிலர் நினைக்கிறார்கள். ஒலிவ இலை சமாதானத்துக்கு அடையாளம். ஆகவே காகத்தை ரட்சிக்கமாட்டாத நியாயப்பிரமாணத்துக்கும், பேழையிலேயன்றி வேறெங்கும் இளைப்பாறுதல் அறியாத புறாவை ரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கும் ஒப்பிட்டுப் பேசுவதுண்டு.

**2. எலியாவும் காகங்களும்**

தேசத்தில் மூன்றரை வருஷப் பஞ்சம். யேசபேல் எலியாவின் பிராணனை வாங்கத் தேடுகிறாள். எலியாவை கர்த்தர் தனிமையான இடத்தில் வைத்துக் காப்பாற்றுகிறார். எலியா கேரீத் ஆற்றண்டை இருக்கிறார். அங்கே ஜனசஞ்சாரமில்லை. ஆகையால் அவரைப்போஷிப்பாரில்லை. அப்பேர்க்கொத்த இடத்தில் எலியா பிழைக்க முடியாது. எங்கேயிருந்தால்தான் என்ன? கடவுள் தமது தாசனை மறப்பாரோ? அன்றுமில்லை இன்றுமில்லை. காகங்கள் எலியாவிடம் வந்து காலையும் மாலையும் அவரைப் போஷித்தன. காகங்கள் கொண்டுவந்த அப்பத்தையும் இறைச்சியையும் அவர் புசித்து ஆற்றின் தண்ணீரைக் குடித்தார். அங்கே தங்கியிருந்த காலமெல்லாம் இனிச் செய்யவேண்டிய ஊழியத்துக்காக தியானத்திலும் ஜெபத்திலும்

தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டார். அவருடைய வேலைக்காரர் காகங்களே. அப்பமும் இறைச்சியும் யார் சமைத்தது? எங்கேயிருந்து வந்தது? தெரியாது. நாள் தவறாமல் காலையும் மாலையும் வந்தது மாத்திரம் தெரியும். சிம்சோனுக்கு பட்சிக்கிறவனிடமிருந்து பட்சணம் கிடைத்ததுபோல, பஞ்ச காலத்தில் பட்சிக்கிற காகங்கள் மூலமாய்ப் போஷிப்புக் கிடைத்தது என்ன ஆச்சரியம்! காகமாவது மற்றவர்களுக்குக் கொடுக்கிறதாவது? தாங்களும் தின்னாமல் வாய் திறந்து கத்தும் தங்கள் குஞ்சுகளுக்கும் கொடாமல், தாங்கள் கீழானவைகளைத் தேடிப் புசித்துக்கொண்டு, முதல்தரமான ஆகாரத்தை எலியாவுக்கு ஒழுங்காய்க் கொடுத்துவந்தது கடவுள் செயலே. சர்வசிருஷ்டிப்புக்கும் மேலானவர் நமது பரமபிதா. அவர் விரும்புகிற எதையும் செய்யவல்லவர். சாஸ்திரிகள் பிரமாணக் கட்டுப்பாடெல்லாம் இங்கு தவிடு பொடியாகவேணும். நமது புத்தி மகா அளவுக்குட்பட்டது. கடவுள் ஞானம் அளவில்லாதது. பிரமாணத்தை உண்டாக்குகிறவர் பிரமாணத்துக்கு மேற்பட்டவர். நமது அறிவுக்கு மிஞ்சினது நமக்கு அற்புதம்; கடவுளுக்கு அது சாதாரணம். கடவுள் தம்மை நம்பிக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவர் செய்வதை அவரேயல்லாமல் வேறு அறிந்தவர்கள் யார்? நோவாவுக்கு காகத்தை விட புறா அருமை. எலியாவுக்கு காகம் அருமை.

### 3. ஆண்டவரும் காகங்களும்

காகத்துக்கு அழகா இறகுகள் இல்லை. இனிமையான குரலுமில்லை. அழகான பட்சிகள் அங்குமிங்கும் பறந்து, மகா துரிதமாய்த் தங்கள் ஆகாரத்தை கண்டடைகின்றன. செடிகளில் உட்கார்ந்து விதைகளைப் பொறுக்கியும், புல்லுக்குள் வேகமாய் நடந்து போகும்போதும், பறக்கும் சமயத்திலும் சிறு பூச்சிகளைப் பிடித்து தங்கள் வயிற்றை நிரப்பும். காகமோ அப்படியல்ல. அது ஓரிடத்திலிருந்து கொண்டு, தூரத்திலும் போகாமல் கா, கா, என்று கத்துவதே அதன் பசிக்கொடுமைக்கு அடையாளம். மற்ற பட்சிகள் காலையில் இன்பாகப் பாடி, பின்பு ஆகாரம் உண்டு. பகலில் அமைதியாய் இருக்கும். காகத்தின் சத்தமோ ஓய்ந்தபாடில்லை. கழுகு வைரி முதலிய பறவைகள் மற்ற பட்சிகளை அடித்துப் புசிக்கின்றன: அடித்துப் புசிக்கும் வழக்கம் காகத்துக்கு இல்லை. பட்சிகள் சாகுந்தரு வாயிலிருந்தால் அல்லது செத்து விழுந்தால் அதைத்

தூக்கிக்கொண்டு போய் புசிக்கும். நாள்தோறும் பட்சிகள் சாவதில்லை. அப்படியானால் பலநாட்கள் காத்திருக்க வேண்டியதும் வரும். கடவுள் இவ்வாறு காகங்களைப் படைத்து அசுத்தங்களை உடனே அகற்றும் ஊர்த்தோட்டிகளாக வைத்திருக்கிறார். ஆகாரத்துக்கு இவ்வாறு ஓயாமல் கத்தினபோதிலும் கடவுள் அவைகளைச் சாகாதபடி போஷிக்கிறார். மனுஷனைப்பார்க்கிலும் காகம் அதிகக் காலம் உயிரோடிருக்கிறது. காகத்துக்கு வயது நூறு.

சரீரத்துக்கு வேண்டிய காரியங்களுக்காகக் கவலைப்படும் மனுஷருக்கு தேவபராமரிப்பின் நம்பிக்கை பிறக்கும்படி, காகங்களைப் போஷித்துக் காப்பாற்றுகிற பரமபிதா உங்களுக்குத் தேவையான நன்மைகளைக் கொடாதிருப்பாரா என்கிறார். காகங்களைப்போல் கதறிக்கொண்டிருப்பதற்கு நாம் காகங்கள் அல்ல. கடவுள் நம்மை வைத்திருக்கும் நிலைமையில், நாம் பிதாவுக்குப் பிரியமான பிள்ளைகளாக நடந்து கொண்டு, அவர் சித்தப்படி பிழைத்து, நமது வேலைகளை உண்மையோடும் சுறுசுறுப்போடும் செய்து வருவோமானால், பிதா நம்மை நடத்தும் அதிசயமான ஆசீர்வாதமான நடத்துதலை நாம் நிச்சயமாகவே காண்போம். நாம் பிதாவை மறந்து, சுயஇஷ்டம்போல் நடந்து, நமக்கு அடாத காரியங்களில் தலையிட்டுக் கொண்டு திரிவோமானால் நாம் தத்தளிக்கும்படி நேரிடும் என்பது நிச்சயம்.

## 17. "என் சமாதானம்"

**"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவா. *14:27*).**

மனுஷர் மரிக்கும்போது நிலங்கள், வீடுகள், ஆஸ்திகள், நகைகள், உறுப்புகள் முதலானவைகளை தங்கள் மக்களுக்குப் பின்வைத்துப்போவது வழக்கம். சமாதானத்தை வைத்துப் போவாரில்லை. ஆனால் மக்களுக்குள் பாகத்தைக் குறித்த அதிருப்தியால் பொறாமையும் வாக்குவாதமும் சச்சரவும் ஏற்படுவதுண்டு. ஆண்டவர் மரிப்பதற்கு முந்தின இரவில்

தமது அடியாருக்கு ஆஸ்தியை பின்வைத்துப் போனார். உலக ஆஸ்தியல்ல: என்றும் அழியாத செல்வமாகிய சமாதானமே.

## 1. சமாதானமே நிகரற்ற செல்வம்

ஒருவனுக்கு எல்லாமிருந்தும் சமாதானமில்லையென்றால் அதைவிடப் பரிதாபம் எது? ஐசுவரியமிருந்தும் மனச்சமாதான மற்ற அநேகரை நாம் காண்கிறோம். ஏழைகளாயிருந்தும் சமாதானமாய் வாழுபவர்களையும் அறிவோம். நமது ஆத்துமா சமாதானத்தையே நாடுகிறது. ஆத்ம சமாதானம் உலகத்தால் கிடையாது. இதை அறியாமல் மனுஷர் உலகத்திலுள்ளவை களில் மெய்ச்சந்தோஷத்தைத் தேடி அலுத்துப் போகிறார்கள். ஒன்றும் அவர்களைத் திருப்தி செய்வதில்லை. கானலைக்கண்ட மான்போல் ஏமாந்து போகிறார்கள். தேவசமாதானத்தை அனுபவிப்பவர்களுக்கு குறைவென்பதில்லை. அவர்களுக்கு குடிசை மாளிகையாகும். கஞ்சி ராஜ விருந்தாகும். சாதாரண உடை உயர்ந்த வஸ்திரமாகும், குறைந்த செல்வம் நிறைந்த செல்வமாகும். அவர்கள் மனரம்மியமான வாழ்க்கைக்கு முன் ஐசுவரியவான்கள் வெட்கப்பட வேண்டும். ஆகையால் ஆண்டவர் தமது அடியாருக்கு வைத்துப்போன ஒப்பற்ற அழியாச் செல்வம் சமாதானமே.

## 2. "என் சமாதானம்" என்று அவர் சொன்னதின் கருத்தென்ன?

ஆண்டவர் உலகத்தில் சஞ்சரித்த காலத்தில் அவருக்கு அவசியமும் பிரயோஜனமுமாயிருந்த அதே சமாதானத்தைத் தமது அடியாருக்கு அருளுகிறார். ஓர் பேர்போன பிரசங்கி தன் வேதாகமத்தை எடுத்துத் தன் மகனுக்குக் கொடுத்து. எனக்கு மிகவும் அருமையானதும் அநேகருடைய ரட்சிப்புக்கு உதவியுமாயிருந்த என் வேதாகமத்தையே உனக்கு கொடுக்கிறேன் என்பதுபோலவும், அல்லது ஓர் போர் வீரன் தன் பட்டயத்தை எடுத்துத் தன் சிநேகிதனுக்கு கொடுத்து: அநேக யுத்தங்களில் நான் வெற்றியடைந்த என் பட்டயத்தையே நான் உனக்குக் கொடுக்கிறேன் என்பது போலவும் ஆண்டவர்தாமே அனுபவித்த சமாதானத்தை நமக்கருளுகிறார்.

### அ. பாடுகளின் மத்தியில் அனுபவித்த சமாதானம்

நோய், துன்பம், கஷ்டமில்லாத வாழ்வை நாம் சமாதானம் என்று எண்ணுகிறோம். ஆண்டவர் கருத்து முற்றிலும் வேறே.

அவரைப்போல பாடனுபவித்தவர்கள் யார்? தரித்திரம், பசிதாகம், தப்பெண்ணம், அவமானம், அகோரபாடு, கொடியமரணம் இவையாவற்றிலும் அவர் சமாதானம் நிறைந்தவராயிருந்தார். அவர் மன அமைதலை சாந்தத்தை, சமாதான தோற்றத்தை சத்துருக்களும் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். அதே சமாதானத்தை அவர் நமக்குக் கொடுக்கிறார். காரியங்கள் நமது மனம்போல் நடந்தால் நாம் சந்தோஷப்படுகிறோம். கஷ்டங்கள் நேரிட்டால் கலங்கித் தவிக்கிறோம். ஆண்டவர் அருளும் சமாதானமோ உபத்திரவங்களின் மத்தியில் நமது இருதயத்தை அமைதலாய் காத்துக்கொள்ள வல்லமையுள்ளது. இதுவே அவர் அனுபவம். அதே சமாதானத்தை நாம் அனுபவிக்கும்படி விரும்புகிறார்.

**ஆ. உலகம் கொடுக்கமுடியாத சமாதானம்**

இந்தச் சமாதானம் தெய்வீகமானது. உலகம் கொடுக்கவோ அல்லது எடுக்கவோ முடியாத சமாதானம். ஆண்டவர் தமது சமாதானத்தை உலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. அவமானமும் பாடுகளும் மரணமுமே உலகத்தால் அவருக்குக் கிடைத்தன. தேவசமாதானமே அவர் உள்ளத்தை நிரப்பியிருந்தது. அதன் பலத்தாலே சகல பாடுகளையும் மேற்கொண்டார். உன்னத சமாதானத்தை நாம் உலகத்தில் தேடி வஞ்சிக்கப்படுகிறோம். நிலையற்ற உலகத்தில் நிலையான சமாதானம் எது? பிதா அருளும் சமாதானமே நிலையான சமாதானம். உலக சந்தோஷம் அதைக் கொடுக்கவும் முடியாது: உலக பாடுகள் அதை எடுக்கவும் முடியாது. இதுவே ஆண்டவர் அனுபவித்த சமாதானம்.

**இ. ஆண்டவர் தாமே சம்பாதித்த சமாதானம்**

தமது அருமையான உயிரைக்கொடுத்து நமக்குச் சமாதானத்தை சம்பாதித்தார். "துன்மார்க்கருக்குச் சமாதான மில்லை" நாம் சமாதான வழியை அறியாதவர்களாயிருந்தோம். கிறிஸ்துவின் மரணம் நமது பாவம் நீங்கவும், கடவுளோடு நாம் ஒற்றுமைப்படவும் கூடிய வழியை உண்டாக்கினது. அவர் மூலமாய் தேவசமாதானத்தைப் பெற்றுக் கொள்ளுகிறோம். "என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று ஆண்டவர் சொன்னது சரியே. இவ்வுலகில் அவருக்கே அவசியமும் பிரயோஜனமுமாயிருந்த சமாதானம். சகல

பாடுகள் மத்தியில் அவர் உள்ளத்தைப் பலப்படுத்தின சமாதானம். உலகம் அவருக்குக் கொடுக்கமுடியாததும், எடுக்கமுடியாததுமான உன்னத சமாதானம். பாவிகளான நமக்கு அவர் தாமே சம்பாதித்த சமாதானம்.

**3. இப்பேர்க்கொத்த மேலான சமாதானம் கண்டடைந்த விதம் எப்படி? என்பதை ஆண்டவர் கூறுகிறார்**

***அ. பிதாவின் அன்பில் பூரண நிச்சயமுள்ளவரா யிருந்தார்***

அதற்குச் சந்தேகமில்லை. எவ்வளவு தீமைகள் நம்மைச் சூழ்ந்திருந்தபோதிலும், அன்பின் பிரவாகத்தில் சஞ்சரித்தார். இந்த இடைவிடாத அன்பின் அனுபவமே சகல பாடுகளையும் சகிக்கும் உள்ளான சக்தியாக விளங்கினது. இந்த அன்பின் நிச்சயத்தால் அவர் ஆத்திரமும், பதஷ்டமுமின்றி மகா அமைதலும் சாந்தமுமுள்ள புருஷராய் விளங்கினார். கடவுள் நம்மீது வைத்திருந்த அன்பை, அற்ப சொற்ப கஷ்டங்கள் கனத்த காரிருள்போல் மறைக்கின்றன. நாம் கலங்கித் தவிக்கிறோம். சமாதானத்தை இழந்து நமது உள்ளம் சஞ்சலப்படுகிறது. சூரியன் இடைவிடாமல் பிரகாசிப்பதுபோல கடவுள் அன்பு நம்மீது பிரகாசிக்கிறது. தமது குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல, நம்மிடத்திலும் அன்பாயிருக்கிறார். இந்த அன்பில் நமக்குப் பூரண நிச்சயம் வேண்டும். இதுவே சமாதானத்துக்கு ஆதாரம்.

***ஆ. பிதாவின் வல்லமையில் பூரண நிச்சயமுள்ளவரா யிருந்தார்***

தேவ பலம் தம்மைத் தாங்குவதை உணர்ந்தார். என்னென்ன தீமைகள், என்னென்ன பாடுகள் தமக்கு நேரிட்டபோதிலும் தேவ வல்லமையே வெற்றியடையும் என்கிற நிச்சயம் அவருக்கு இருந்தது. இதுவே அவர் உள்ளத்தில் சமாதனத்துக்கும் அமைதலுக்கும் காரணம். தேவ வல்லமை நமக்காகவே இருக்கிறது. அவரைப் பூரணமாய் நம்பியிருக்கும் பிள்ளைகளுக்கு அவர் வல்லமை பூரணமான அடைக்கலம். அவர்கள் ஒருக்காலும் கைவிடப்படுவதில்லை. மிகுந்த போராட்டத்திலும் உன்னத பலம் அவர்களைத் தற்காக்கும். தேவவல்லமையை சார்ந்து பிழைத்தல் சமாதானத்துக்கு ஆதாரம்.

**இ. பிதாவின் சித்தத்தில் பூரண நிச்சயமுள்ளவரா யிருந்தார்**

தமக்கு என்னென்ன நேரிட்டாலும், யாராலே நேரிட்டாலும் தமது அன்புள்ள பிதா அறியாமலும் அவர் இடங்கொடாமலும் ஒன்றும் சம்பவிப்பதில்லை என்பது அவரது உறுதியான நம்பிக்கை. பிதாவின் சித்தம் தம்மைக் கஷ்டமான பாதையில் நடத்தினாலும் அது நன்மையாகவேயிருக்கும் என்று திட்டமாய் அறிவார். பிதாவின் சித்தத்தைத் தமது சித்தமாக்கிக் கொண்டதே அவர் அனுபவித்த சமாதானத்துக்குக் காரணம். சுயசித்தப்பிழைப்போ சகல குழப்பத்துக்கும் காரணம். சுய இஷ்டம்போல் நடக்கிறவர்கள் தேவசமாதானத்தைக் கண்டடையமாட்டார்கள். தேவசித்தப்படி பிழைக்கிறோம் என்கிற நிச்சயம் நமக்கிருக்கும்போது, என்ன நேரிட்டாலும் அது நன்மையாகவே முடியும் என்கிற நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை நமக்குள் அமைதியையும் சமாதானத்தையும் காத்துக்கொள்ளும்.

**ஈ. இந்த சமாதானம் எப்படிக் கிடைக்கும்?**

ஆண்டவர் வாக்குப்பண்ணின சமாதானத்தை சீஷர்கள் உடனே பெற்றுக்கொள்ளவில்லை. அவர் உயிர்த்தெழுந்த பின்பும் அவர்கள் பயந்து கலங்கினார்கள். அப்படியானால் சமாதானத்தை அவர்கள் கண்டடையவில்லையோ? நிச்சயமாகவே கண்டடைந்தார்கள். எப்போ? ஆண்டவர் மகிமையடைந்து தமது ஆவியால் அவர்களை நிரப்பினபோது தேவசமாதானம் அவர்களை நிரப்பினது. கிறிஸ்துவே ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்தார். அவரே அவர்களுக்கு தேவசமாதானமானார். ஆண்டவர் சமாதானத்தைப் பிரசங்கித்தது மாத்திரமல்ல, வாக்குப்பண்ணினது மாத்திரமல்ல, சம்பாதித்தது மாத்திரமல்ல, அவரே அவர்களுக்குச் சமாதானமானார். சகல பாடுகள் துன்பங்கள் மத்தியில் எவ்வளவோ பொறுமையோடும், அமைதியோடும், சாந்தத்தோடும் அவர்கள் நடந்துகொண்டார்கள். ஆண்டவருக்குள்ளிருந்த சமாதானமே அவர்கள் சமாதான மாயிற்று. இந்தச் சமாதானத்தைச் சுவிசேஷமாகக் கூறினார்கள். நிருபங்களில் எழுதினார்கள். நமக்குச் சமாதானம் வேண்டுமானால் சமாதானகாரணரும், சமாதானமுமாகிய கிறிஸ்து நமது உள்ளத்துக்குச் சொந்தமாக வேண்டும்.

அப்போது தேவசமாதானம் நமது இருதயத்தையும் சிந்தையையும் ஆண்டுகொள்ளும்.

# 18. அறுப்புப் பண்டிகை

**"கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்" (யாத். 35:29).**

இது பூர்வகாலத்துச் சரித்திரம். கடவுள் மனுமக்களுக்கு வேண்டிய சகல நன்மைகளையும் தாராளமாய்க் கொடுக்கிறவர். அவருக்குத் தேவையானது ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் ஒரு குழந்தை கொடுக்கும் அற்ப வெகுமதியை தகப்பன் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வதுபோல, நமது பரமபிதாவும் தமது ராஜ்யவிருத்திக்காக நாம் உற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளை அன்புடன் அங்கீகரிக்கிறார். தாவீது சொன்னதுபோல அவரிடத்தில் பெற்றே அவருக்குக் கொடுக்கிறோம். எல்லாம் அவருடையதே. கர்த்தர் மோசேயிடம் ஆசரிப்புக் கூடாரம் செய்யப்படவேண்டிய மாதிரியையும், அதற்காக அவர் சேகரிக்க வேண்டிய சகல பொருட்களையும் விவரமாய் அறிவித்தார். மோசே அதை ஜனங்களுக்கு அறிவித்தார். உடனே ஜனங்கள் ஏகோபித்து தேவனுடைய வேலை நடப்பதற்கு அவசியமான சகல பொருட்களையும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஆசரிப்புக்கூடாரம் அலங்காரமாய் முடிந்து, பரிசுத்த ஊழியமும் சிறப்பாய் நடந்தது.

## 1. மனப்பூர்வமாய்க் காணிக்கை கொடுத்தார்கள்

இங்கே நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான காரியமுண்டு. காணிக்கை கொடுத்தவர்கள் கடமைக்காக அல்ல, வெறுப்போடு அல்ல, முறுமுறுப்போடு அல்ல, மனப்பூர்வமாய், உற்சாகமாய், சந்தோஷமாய்க் கொடுத்தார்கள். கர்த்தர் மோசேயிடம் இதைப்பற்றித் திட்டமாய்ச் சொல்லியிருந்தார். "மனமுள்ளவன் எவனோ அவன் அதைக் கொண்டுவரட்டும்" "எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பினவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ" அவர்கள் கொண்டுவந்தார்கள். "மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும் கொண்டு வந்தார்கள்." இந்த வார்த்தைகள் காணிக்கை கொடுத்தவர்களின் இருதய நிலைமையைக்

காண்பிக்கின்றன. நாம் அதிகம் கொடுக்கிறோம் கொஞ்சம் கொடுக்கிறோம் என்பதல்ல. விலையுயர்ந்த பொருளைக் கொடுக்கிறோம். அற்பப் பொருளைக் கொடுக்கிறோம் என்பதல்ல. எப்படிப்பட்ட ஆவியோடு கொடுக்கிறோம் என்பதே கேள்வி. கர்த்தருடைய வேலைக்குக் காணிக்கை கொடுக்கவேண்டும் என்று நமது இருதயம் நம்மை ஏவுகிறதா? நமது ஆவி உற்சாகம் கொள்ளுகிறதா? நாம் சந்தோஷத்தோடு கொடுக்கிறோமா? அல்லது யாதொரு யோசனையுமின்றி வருடத்துக்கு ஒரு முறை கொடுக்கவேண்டியதுதானே என்கிற கடமைக்காக மாத்திரம் கொடுக்கிறோமா? "விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, அவனவன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்"

## 2. எல்லாரும் கொடுத்தார்கள்

ஆண்டவர் ஊழியத்துக்கு எல்லாரும் உதவி செய்ய விரும்புகிறார். தனவந்தர் மாத்திரமல்ல, ஏழைகளும், ஆண்கள் மாத்திரமல்ல, ஸ்திரீகளும் பிள்ளைகளும் எல்லாரும் காணிக்கை கொண்டு வருவது அவருக்குப் பிரியம். ஆசரிப்புக்கூடார வேலையைக் கவனிக்கும்போது எல்லாரும் உதவி செய்யக்கூடிய சிலாக்கியம் பெற்றார்கள். ஏனென்றால் பற்பலவகையான காணிக்கைகள் வேலைக்கு அவசியமாயிருந்தன. அதன் விவரத்தை இந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஸ்திரீ புருஷர் யாவரும் அஸ்தகடங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான பொன்னாபரணங்களைக் கொடுத்தார்கள். ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினான். வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கொடுத்தார்கள். சித்தீம் மரத்தை வைத்திருந்த யாவரும் அதைக் கொடுத்தார்கள். ஸ்திரீகள் தங்கள் கைகளால் நூற்ற இளநீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், மெல்லிய பஞ்சு நூல் முதலிய நூல்களைக் கொடுத்தார்கள். பிரபுக்கள் கோமேதகம் முதலிய இரத்தினங்களைக் கொடுத்தார்கள். மற்றவர்கள் பரிமளவர்க்கம், விளக்கெண்ணெய், அபிஷேக தைலம், சுகந்தவர்க்கம் முதலியவைகளைக் கொடுத்தார்கள். இவைகளைக் கவனிக்கும்போது ஒருகாரியம் விளங்குகிறது. ஒருவனிடத்தில் இல்லாததை, அவனால் கொடுக்கமுடியாததை

கர்த்தர் கேளாமல், அவர்கள் தம்தம் நிலைமைக்கேற்றவைகளை, தங்களுக்குள்ளவைகளையே காணிக்கையாகச் செலுத்தும்படி ஆண்டவர் விரும்புகிறார்.

இந்த ஒழுங்கு சபையிலுள்ள எல்லாருமே காணிக்கை கொடுக்கலாம் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. இன்னின்ன காணிக்கைதான் கொண்டு வரவேண்டும், இவ்வளவு தொகைதான் செலுத்தப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிடுவாரானால் அநேகரால் செலுத்த முடியாமற்போகும். அவரவர் தங்களிடத்தில் உள்ளவைகளை, தங்கள் திராணிக்கு ஏற்ற காணிக்கையை ஆண்டவர் செலுத்தும்படி கேட்டது அவரது காருண்ய இருதயத்தைக் காட்டுகிறது. இந்த நாளில் தனவான்களை இங்கே காண்கிறோம். கிராமங்களிலிருந்து வந்த ஏழைகளையும் காண்கிறோம். இங்கே வந்திருக்கிற காணிக்கைகளைப் பார்க்கும்போது பலவகுப்பாருடைய நிலைமை விளங்குகிறது. ரூபாய்களைக் காண்கிறோம். ஆடுகள், கோழிகள், வாத்துகள், புறாக்கள் வந்திருக்கின்றன. வெங்கலப் பாத்திரங்களையும் காண்கிறோம். தேங்காய், இளநீர் வாழைக்குலைகள், கத்திரிக்காய், பூசணிக்காய், சுரைக்காய், வாழைக்காய், மிளகாய் வந்திருக்கின்றன. பழவகைகளையும் காண்கிறோம். சகோதரிகள் உண்டுபண்ணின பலவித உடுப்புகளைக் காண்கிறோம். அகப்பை, பிரிமனை, துடப்பம் முதலான வீட்டுச் சாமான்களும் வந்திருக்கின்றன. இதுதான் ஆண்டவருக்குப் பிரியம். தங்களிடத்தில் இல்லாததையல்ல, அவரவரிடத்தில் உள்ளவை களை ஆண்டவர் விரும்புகிறார். இந்த ஒழுங்கு சபையார் எல்லாருமே காணிக்கை கொடுக்க ஏதுவாயிருக்கிறது.

### 3. கர்த்தருக்குக் கொடுத்தார்கள்

அவரவர் தங்களுக்கு உள்ளவைகளிலே கொடுத்தார்கள். அவைகளை உற்சாகமாய் மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள். மூன்றாவதாக நாம் கவனிக்கும் விஷயம் முந்தின இரண்டிலும் விசேஷம். கர்த்தருக்குக் கொடுத்தார்கள். இந்த அதிகாரத்தில் ஏழு முறை கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்தார்கள் என்பது திரும்பத் திரும்ப வருகிறது. நமது சபை முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய காரியம் இதுதான். அநேகர் இதை யோசிக்கிற தில்லை. மோசேக்கல்ல, கர்த்தருக்கு. காணிக்கைப் பை வரும்

போது கையை நீட்டி, ஏதோ காசைப் போடுகிறார்கள். காணிக்கைப் பையிலல்ல. கர்த்தரின் கையிலே போடுகிறோம் என்கிற உணர்வு நமக்கிருந்தால் இப்பொழுது போடுகிறது போல் அல்ல. உதாரமாய்க் கொடுப்போம். ஆண்டவரை நினைத்து உற்சாகமாய்க் கொடுப்போம். சபை ஆசரிப்புக்காக நாம் கொடுக்கும் காணிக்கை பரிசுத்த ஊழியம் என்பதை மறக்கக்கூடாது. பிரசங்கம் பண்ணுவது மாத்திரம் ஊழியமல்ல. பிரசங்கம் நடந்தேறும்படி நாம் செய்கிற உதவியும் ஊழியமே. பரிசுத்த பவுல் இதைத் "தர்ம ஊழியம்" என்றழைக்கிறார். காணிக்கை கொடுப்பது பரிசுத்த ஊழியம் என்பதை நம்மில் அநேகர் யோசிக்கிறதேயில்லை. ஆகையால் தர்ம சகாயம் குறைவுபடுகிறது. வேண்டாவிருப்போடு கொடுக்கப்படுகிறது. தேவஊழியத்துக்குப் பொருள் சேகரிப்பதே நமக்குப் பெருத்த தொல்லையும் கவலையுமாகிவிடுகிறது. இதனால் பற்பல உபாயங்களை கையாள வேண்டியதாகிறது. நாடகம் ஆடி கர்த்தருக்குக் காணிக்கை சேர்த்தல், சங்கீதக் கச்சேரி, ருசிகரமான பலகார வியாபாரம், ஏலம் முதலான பல ஏற்பாடுகளின் மூலமாய்ப் பணம் சேகரிக்கும் அவசியம் உண்டாகிறது. ஏன் இந்த உபாயம்? கர்த்தருக்கென்று கேட்டால் பணம் வராது. ஆகையால் அவர்கள் அறியாமலே அவர்கள் பணத்தை கைவசப்படுத்த வேண்டும். நாடகம், பாட்டு என்றால் யாவரும் பிரியமாய் வருவார்கள். இரண்டு அணா, நாலணா டிக்கெட்டுகளென்றால் லேசாய்க் கொடுத்து விடுவார்கள். அவர்களும் காட்சி பார்த்தால் போலிருக்கும். நமக்கும் பணம் கிடைத்தாற்போலிருக்கும். ஆ! இது எவ்வளவு விசனமான காரியம், அப்புறம் இந்தப் பணத்தைக் கொண்டுபோய் மேஜையில் வைத்து, கர்த்தாவே, உமது ஜனங்கள் உமக்குக் கொடுத்த காணிக்கை என்று நாம் சொல்வோமானால் அவர் நம்மைப் பார்த்து, இது எனக்குக் கொடுத்ததல்ல, நாடகம் பாட்டுக்குக் கொடுத்த பணம். நீ எனக்கென்று கேட்டபோது கொடுக்காததினால்தானே இந்த உபாயத்தைக் கையாடினாய் என்று சொல்லமாட்டாரா?

ஜனங்களைக் குற்றப்படுத்தவும் ஏதுவில்லை. நமது ஊழியம் உண்மையாகவும் ஆவியின் பலத்தோடும் நடந்து, சபையார் ஆசீர்வதிக்கப்படுவார்களானால் கர்த்தருக்குக் கொடுக்கும் விஷயத்தில் அவர்கள் வஞ்சகம் செய்ய

மாட்டார்கள். கர்த்தர் தமது ஊழியத்தைக் கைவிடமாட்டார். கர்த்தரை அறிந்து அவரால் இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருக்கென்றே காணிக்கை கொடுப்பார்கள்.

# 19. கிறிஸ்துவின் மகிமை

**"நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக, அவர் உங்களை அழைத்தார்" *(1 தெச. 2:14).***

மகிமை என்றவுடனே மோட்சத்தை நினைக்கிறோம். அது ஒருவிதத்தில் சரியே. இன்னார் மகிமையில் பிரவேசித்தார் என்றெழுதிய வாசகத்தை கல்லறைகளிலும் காண்கிறோம். பரம மகிமையே நமது முடிவான நோக்கம். ஆண்டவர் அந்த மகிமைக்குள் பிரவேசித்திருக்கிறார். ஆனால் அவர் சென்ற வழியை நாம் கவனிக்க வேண்டும். உடனேயல்ல. படிப்படியாய் அவர் தமது மகிமைக்குட்பிரவேசித்தார். மகிமையின்மேல் மகிமையடைந்து பூரண மகிமையைப் பெற்றார். அதுவே நமக்கும் வழி. இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்படி தேவன் நம்மை அழைத்திருக்கிறார். தமது மகிமையில் மனுஷன் பங்கடைய வேண்டும் என்பதே கடவுள் மனுஷனைச் சிருஷ்டித்த நோக்கம். இது இடையில் உண்டான எண்ணமல்ல. இது தேவனுடைய அநாதி தீர்மானம். பாவத்தால் உலகம் கெட்டாலும், கடவுள் தமது தீர்மானத்தை நிறைவேற்றாது விடார். "நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்த தேவன்" என்றும், "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்க" என்றும் அப்போஸ்தலர் எழுதினார்கள். இந்த மகிமைக்கு வழியென்னவென்பதை கிறிஸ்துவில் காண்கிறோம்.

## 1. குமாரனாயிருக்கும் மகிமை

"அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே யிருந்தது" *(யோவா. 1:14).* கடவுளுடைய குமாரனாயிருப்பதிலும் மேலான மகிமையுண்டா? கிறிஸ்துவின் மகிமை இன்னதென்பதை உலகம் அறியவில்லை. அவர் ஏழையாயிருந்தார். அவருக்கு நிலங்கள், வீடுகள், ஐசுவரியம்,

வேலையாட்கள் இல்லை. உலகம் மேன்மை பாராட்டுகிறவைகள் அவருக்கில்லை. ஆனால் கடவுள் மனுஷரைப்போல் புறம்பான காரியங்களைக் கொண்டு மதிக்கிறவரல்ல. உலகத்தில் மேன்மையாய் எண்ணப்படுகிறவைகள் கடவுளுக்கு அருவருப்பு. அவர் பணத்தையல்ல குணத்தைப் பார்க்கிறவர். வெளித்தோற்றத்தையல்ல உள்ளத்தைக் கவனிக்கிறவர். அப்படிக் கவனித்தபோது அவர் திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தவர் மனுஷரால் அற்பமாய் எண்ணப்பட்ட கிறிஸ்து. இனம் இனத்தை விரும்பும். யாருக்குள் தேவ சாயலுண்டோ, அவர் சிந்தை உண்டோ அவர்களே அவருக்கு அருமையானவர்கள். கிறிஸ்துவில் தமது சாயலைக் கண்டார். மனுஷருக்குள் தகப்பனைச் சரியாய்க் காட்டும் பிள்ளைகள் இல்லை. முகத்தில் ஒத்திருந்தால் குணத்தில் பேதமிருக்கும். குணத்தில் ஒத்திருந்தால் தோற்றத்தில் சத்தத்தில் பேதமிருக்கும். இவன் சகலவிதத்திலும் தகப்பனுடைய தற்சொரூபம் என்று சொல்ல முடியாது. கிறிஸ்துவோ பிதாவை வெளிப்படுத்தும் தற்சொரூபமாயிருந்தார். குமாரனைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அவரது ஜீவியம் பிதாவை வெளிப்படுத்தின ஜீவியம். அவர் வார்த்தைகள் பிதாவின் வார்த்தைகள். அவர் கிரியைகள் பிதாவின் கிரியைகள். அவர் சித்தம் பிதாவின் சித்தம். சகலத்திலும் பிதாவின் அசலாயிருந்த குமாரன். அதுவே அவரில் மற்றவர்கள் கண்ட மகிமை. இந்த மகிமைக்கு கடவுள் நம்மையும் அழைத்திருக்கிறார். நாம் கடவுள் பிள்ளைகளானால் அவர் சாயல் நம்மில் உண்டா? நம்மைக் கவனிக்கிறவர்கள் பிதாவின் தன்மையை அறிந்து கொள்ளுகிறார்களா? நாம் ஏழைகளாயிருந்தாலும், உலகம் நம்மை மதிக்காமற்போனாலும், பிதாவுக்குப் பிரியமான குமாரர் குமாரத்திகளாய் நாம் நடந்து கொள்வோமானால் அதுவே நமக்கு நிலையான மகிமை.

### 2. பணிவிடை செய்யும் மகிமை

ஆண்டவர் தமது ஊழியத்தைப் பணிவிடையோடு ஆரம்பித்து பணிவிடையில் முடித்தார். மனுமக்கள் நடுவில் அவர் ஊழியக்காரனாயிருந்தார். கானா ஓர் சிறிய கிராமம். மரியம்மாளுக்குச் சொந்தமான கலியாணம் ஒன்று அங்கு நடைபெற்றது. ஆண்டவரும் சீஷர்களும் அங்கேயிருந்தார்கள். மிகச் சஞ்சலமும் அவமானமுமான காரியம் விருந்தில் சம்பவித்தது. திராட்சரசம் குறைந்தது. அம்மாள் அடைந்த

கலக்கம் கொஞ்சமல்ல. பலரிடம் பேசினார்கள். ஆண்டவர் தண்ணீரை ரசமாக மாற்றி எல்லாரும் திருப்தியாகப் பானம் பண்ணும்படி செய்தார். கானாவூரில் இந்த "முதல் அற்புதங்களைச் செய்து, தமது மகிமையை வெளிப்படுத்தினார்" அற்புதம் விசேஷமானாலும் அந்தச் சங்கடமான சமயத்தில் அவர் நடப்பித்த இந்தப் பணிவிடையே மகிமையானது. இதுமுதல் கடைசிவரை பணிவிடை செய்வதையே மகிமையாகக் கொண்டார். அவர் சரித்திரத்தைப் படிக்கும்போது இடைவிடாது அவர் நிறைவேற்றிய பணிவிடைகளைக் காண்கிறோம். பாவிகளை இரட்சிக்கிற வராய், நோய்களை நீக்குகிறவராய், பசியைப் போக்குகிறவராய், ஆறுதல் படுத்துகிறவராய், மனுஷருடைய ஆவி, ஆத்மா, சீரத்துக்கு ஓயாது பணிவிடைச் செய்கிறவராய் விளங்குகிறார். "ஊழியங் கொள்ளும்படி அல்ல, ஊழியம் செய்யவே வந்தேன்" என்றும் "உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப் போலிருக்கிறேன்" என்றும் அவரே சொன்னார். மரிப்பதற்கு முந்தின நாள் இரவில் பந்திக்குமுன் கால்களை கழுவச் சீஷரில் ஒருவருக்கும் மனதில்லாமல், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஆண்டவரே தமது உடுப்பு களைக் களைந்து வைத்து, ஓர் சிறுதுணியை அரையிலே கட்டிக்கொண்டு முழங்காலில் நின்று அடியாரின் கால்களைக் கழுவித் துடைத்தார். ஆ! என்ன அதிசயம்!

பணிவிடையை உலகம் இழிவாய் நினைக்கிறது. வேலை கொள்ளுகிறவனே பெரியவன்; வேலை செய்கிறவனோ அடிமை. அநேக வேலையாட்களை வைத்து அதிகாரத்துடனே வேலை வாங்குகிறவனே மகிமையுள்ளவன். தேவ பார்வையில் வேலைகொள்வதல்ல. வேலை செய்வதே மகிமை. கடவுள் பெரிய பணிவிடைக்காரன். இந்தப் பணிவிடை செய்யும் மகிமையில் பங்கு பெறும்படி ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார்.

### 3. ஜீவனைக் கொடுக்கும் மகிமை

ஆண்டவர் தமக்கு நேரிட்ட பாடுகள், மரணத்தை அவமானமாக எண்ணாமல் மகிமையாகவே மதித்தார். "பிதாவே, வேளை வந்தது, நீர் உமது குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு .......... உமது குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு உமது

குமாரனை மகிமைப்படுத்தும்." சிலுவையின் வேளை வந்தது. மகிமைப்படுத்தும். உலகம் இரட்சிக்கப்படுவதற்கு தமது மரணம் அவசியமாயிருந்ததால், சிலுவையை அவமானமாக எண்ணாமல் மகிமையாகவே எண்ணினார். பாடுகள் இல்லாமல் பலனில்லை. ஒருவருக்குத் துன்பமில்லாமல் மற்றவர்களுக்கு இன்பமில்லை. விதைகள் மண்ணில் விழுந்து சாகும்போதே மிகுந்த பலனைக் கொடுக்கின்றன. உலக சரித்திரத்தைப் பார்ப்போமானால், தங்கள் பிராணனை அருமையாக எண்ணாமல் தியாகஞ் செய்தவர்களாலேயே மனுமக்கள் ஷேமத்தை அடைந்திருக்கிறார்கள். தங்கள் சுகம் பெரிது, தங்கள் உயிர் பெரிது, தங்கள் லாபம் பெரிது என்று நினைக்கும் தந்நயக்காரர் உபயோகமற்றவர்கள். அவர்களால் உலகத்துக்குப் பிரயோஜனமில்லை. அவர்கள் தானும் பிரயோஜனமடையார்கள். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான். ஆண்டவருக்காகத் தன் ஜீவனைத் தத்தஞ் செய்கிறவனோ அதைக் கண்டடைவான். "நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்" நாம் சிலுவையில் உடனே மரிப்பதில்லையென்றாலும் பிறருடைய இரட்சிப்புக்காக நமது ஆவி, ஆத்துமா, சரீரம், நேரம், பலம், சுகம் யாவையும் தத்தஞ்செய்து, ஜீவபலியாகப் பிழைப்பதே நமது மகிமை. இந்த மகிமையில் பங்குபெறும்படி ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார்.

### 4. இனி வெளிப்படும் மகிமை

ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் தமது மகிமையைப்பற்றி சீஷரிடம் பேசினார். "கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" அவர் உலகத்தில் வந்தபோது தமக்குரிய மகிமையை வெறுமையாக்கி அடிமையாக வெளிப்பட்டார். ரட்சிப்பின் கிரியையை அவர் நிறைவேற்றினபின்பு, தமது மகிமையைத் திரும்பவும் பெற்றுக்கொண்டார். அது மாத்திரமல்ல, அவர் தமது மகிமையோடும், பிதாவின் மகிமையோடும், தூதர்கள் மகிமையோடும் வெளிப்படுவதாக அவரே சொல்லியிருக்கிறார். அவர் அவ்வாறு வெளிப்படும்போது அவரது அடியாரும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவார்கள். "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடு கூட மகிமையில் வெளிப்படுவீர்கள்" இதுவே முடிவான பரம

மகிமை. இந்த மகிமையில் நாம் பங்குபெற வேண்டுமென்று ஆண்டவர் பிதாவிடம் ஜெபித்தார். இந்த மகிமையை நாம் பெற்றுக்கொள்வதற்காகவே ஆண்டவர் சகல பாடுகளையும் அனுபவித்தார். நாம் அவருக்கொப்பாயிருப்பதே அந்த மகிமை. முதல் மூன்று மகிமையிலும் பங்கடைபவர்கள் முடிவான நித்திய மகிமையிலும் பங்கடைவார்கள். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் ஆவியானவரே. "நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்".

## 20. கிறிஸ்துவின் வெற்றி

**"அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப். 2:24).**

பெந்தெகொஸ்தே நாளில் திரளான ஜனங்களுக்கு பேதுரு செய்த பிரசங்கம் நிகரற்றது. ஆண்டவருக்கு மரணமே கூடாது என்று கடிந்த கொண்ட பேதுரு, அவர் அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு மறுதலித்த பேதுரு, மரணத்தின் அவசியத்தையும், அதன் இரகசியத்தையும் எடுத்துரைத்தது ஆவியானவரின் செயலேயன்றி மற்றப்படியல்ல. இன்னும் ஆவிக்குரிய அனுபவத்தில் பூரணப்படுமுன், முதல்நாளிலேயே இவ்வளவு நிகரற்ற போதனையை அவர் வெளிப்படுத்தக் கூடுமானால் இது கிறிஸ்துவின் உள்ளான வெளிப்படுத்தல் என்பதற்குச் சந்தேகமேயில்லை. முதலாவது கிறிஸ்துவைப்பற்றி யூதர்கள் மறுக்கமுடியாத சில காரியங்களை எடுத்துக் காண்பிக்கிறார். நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்தசெய்கை களையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் நீங்கள் அவரைக் கொலைசெய்தீர்கள். அந்த மரணத்தின் ரகசியத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். நீங்களே வெற்றியடைந்ததாக நினைக்கிறீர்கள். அப்படியல்ல. அவர் மரிக்கவேண்டுமென்பது கடவுள் தீர்மானம். அந்தத் தீர்மானத்தின்படி ஒப்புக் கொடுக்கப்பட்ட இயேசுவை நீங்கள்

பிடித்து சிலுவையில் அறைந்து கொலைசெய்தீர்கள். கடவுளோ, அவருடைய மரணத்தின் கட்டுகளிலிருந்து விடுவித்து மறுபடியும் உயிரோடே வரச்செய்தார். அவர் மரணத்தால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது என்று சொன்னார். இதற்கு ஆதாரமாக பதினாறாம் சங்கீதத்தை தீர்க்கதரிசன நிறைவேறலாக கூறினார். என் மரணத்தால் அவர் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது என்பதற்கு அந்தச் சங்கீதத்திலிருந்து மூன்று காரணங்களைக் காட்டுகிறார்.

### 1. ஆண்டவர் தமக்குள்ளே தோன்றக்கூடிய தீமையின்மேல் வெற்றியடைந்தார்

"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்து நோக்கிக்கொண்டிருக்கிறேன்" இதுவே அவரது உள்ளான வெற்றிக்குக் காரணம். அவருக்குள் பாவமில்லாதிருக்க அவர் எப்படிப் பாவஞ் செய்யக்கூடும் என்று கேட்கலாம். பாவஞ்செய்வதற்கு ஏற்கனவே உள்ளானத் தீமையிருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் பாவமற்றவர் என்பது உண்மைதான். ஆனால் பாவஞ்செய்யாதிருப்பதற்கு அதுவே போதுமென்று நினைக்கவேண்டாம். சித்தம் கடவுளைவிட்டுக் கோணுவதே பாவமாகும். பரிசுத்த தூதர்கள் எப்படிப் பாவஞ்செய்தார்கள்? அவர்களுக்குள் பாவமிலலை. ஆனால் எந்த நிமிஷத்தில் அவர்கள் சுயசித்தப்படி நடக்க விரும்பி கடவுளுக்கு முதுகைக் காண்பித்தார்களோ அந்த நிமிஷமே பாவிகளானார்கள். கடவுளை இடைவிடாது தங்களுக்கு முன்பாக வைத்துப் பணிந்தவர்கள் எந்த நேரத்தில் வேறுசிந்தை கொண்டார்களோ அந்த நேரத்தில் தங்களுக்குரிய மகிமையை இழந்து இருண்ட பிசாசுகளானார்கள். தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு எவ்வளவோ போராட்டத்தின் மத்தியில் பிழைக்க வேண்டியவராயிருந்தார். தேவ ரூபமானவர் அடிமைரூபமானார். ஆளுகை செய்தவர் பணிவிடைக் காரனானார். ஆவியாயிருந்தவர் மாம்சமானார். பரிசுத்த லோகத்தில் சஞ்சரித்தவர் பாவிகள் மத்தியில் வந்தார். இந்தப் பெரிய மாறுதலில் அவர் தம்மைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்வது லேசல்ல. அவர் வந்த நிலைமையிலே தான் அவருக்குள் தீமைதோன்றக்கூடிய சோதனையிருந்தது. தேவசித்தத்தை விட்டுவிலகக்கூடிய பயங்கரமான போராட்டம் இருந்தது. ஆனால் கடைசிவரை கடுகளவாவது அவர்

விலகவில்லை. தேகத்தின் வேர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாக விழ நேரிட்டாலும்கூட பிதாவை எப்பொழுதும் நோக்கின பார்வையும், அவர் சித்தத்தையே தமது சித்தமாக்கிக் கொண்ட திறமையும், அவர் உள்ளான ஜீவியத்தில் அவருக்கு வெற்றியளித்தது.

**2. புறம்பேயிருந்து வந்த தீமைகளிலும் வெற்றியடைந்தார்**

இதற்கு ரகசியம் "அவர் என் வலது பரிசத்திலிருக்கிற படியால் நான் அசைக்கப்படுவதில்லை" என்கிறார். முந்தினது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்து நோக்கிக் கொண்டிருக்கிறபடியால் உள்ளாக நான் அசைக்கப் படுவதில்லை. பிந்தினது: அவர் என் வலது பாரிசத்திலிருக்கிற படியால் நான் புறம்பேயும் அசைக்கப்படுவதில்லை. அதாவது, என் சுய இஷ்டப்படி நடந்து உள்ளான மறைவான பாவத்துக்கும் இடங்கொடுக்கவுமாட்டேன்; அல்லது புறம்பேயிருந்து என்னை மோதும் சோதனைகளுக்கு இணங்கி புறம்பான பாவத்துக்கும் இடங்கொடுக்க மாட்டேன். என் கண்முன் நான் எப்பொழுதும் வைத்திருக்கிறவரும், என் வலதுபாரிசத்திலிருக்கிறவருமான பிதாவால் நான் வெற்றியடைவேன் என்கிறார்.

தேவதூதர்கள் செய்த பாவத்துக்கும் ஆதி மனுஷன் செய்த பாவத்துக்கும் வித்தியாசமிருக்கிறது. புறம்பே தூண்டுதல் இல்லாதிருந்தும் தங்கள் சுயசித்தப்படி நடந்து தூதர்கள் பாவஞ் செய்தார்கள். மனுஷனோ தனக்குள்ளிருந்தல்ல, புறம்பேயிருந்து வந்த சாத்தானுடைய தூண்டுதலுக்கு இணங்கி பாவஞ் செய்தான். இந்த இரண்டு மோசங்களிலும் ஆண்டவர் பூரண வெற்றியடைந்தார். அவரது உள்ளான இருதய நிலைமை எப்போதும் பிதாவின் இருதயத்தோடு பூரண ஒற்றுமையி லிருந்தது. புறம்பே அவருக்கு நேரிட்ட சோதனைகள் அனந்தம். அவைகள் மகாபயங்கரமும் கொடூரமுமானவைகள். ஆகிலும் ஒன்றாகிலும் அவரை மேற்கொள்ளவில்லை. பிதா அவர் வலது பாரிசத்தில் இருந்தபடியால் அவர் அசைக்கப் படவில்லை.

**3. தாமே ஏற்றுக்கொண்ட லோக பாவத்தின் உத்திரவாதத்திலும் வெற்றியடைந்தார்**

ஆண்டவர் நிறைவேற்ற வந்த ஊழியம் லேசானதல்ல. அநேகர் அவரைச் சிறந்த குருவாக மதிக்கிறார்கள். அவரது

மலைப்பிரசங்கத்தை மெச்சுக்கொள்ளுகிறார்கள். காலாகாலங்களில் ஏற்பட்ட குருக்களைப்போல் இவர் சீஷர்களைச் சேர்க்கவும், உபதேசங்களைக் கற்றுக்கொடுக்கவும், ஒருமார்க்கத்தை ஸ்தாபிக்கமாத்திரம் வந்தவரல்ல. பாவத்தால் தூரமாய் விலகிக் கெட்டுப்போன மனுமக்களை கடவுளோடு ஐக்கியப்படுத்த வந்தவர். கடவுள் நமது பிதாவாகவும் நாம் அவரது அருமைப்பிள்ளைகளாகவும், அன்பிலே ஒற்றுமைப்பட்டுப் பிழைக்கும்படி செய்ய வந்தவர் இவர். இந்த மகத்தான வேலைக்கு மனுபுத்திரரில் எவன் தகுதியுள்ளவன்? கடவுளுக்கு கடவுளாக மனுஷனுக்கு மனுஷனாக விளங்கும் ஓர் அதிசய புருஷனைத் தவிர கடவுளோடு ஒப்புரவாகுதலை உண்டாக்கத் தகுந்தவர்கள் யார்? அவ்வாறு கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கி ரட்சிக்கவேண்டுமானால் இருபட்சத்தாரையும் பிரிக்கிற பாவமலை உடைபடவேணும். இவை யாவற்றிற்கும் மூலகாரணனான சாத்தான் மேற்கொள்ளப் படவேணும். இந்த நிகரற்ற உத்திரவாதத்தை "நசரேயனாகிய இயேசு ஏற்றுக்கொண்டாரே. அவருக்கு வெற்றி கிடைக்குமா?"

முந்தின இரண்டு வெற்றிகளும் இந்த மூன்றாம் வெற்றிக்குப் பலத்தையும் உற்சாகத்தையும் அவருக்குத் தந்தது. வெற்றியடைவதில் அவருக்கு யாதொரு சந்தேகம் இருந்ததில்லை. அதைப்பற்றி என்ன சொல்லுகிறார்? "என் இருதயம் பூரித்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சம் (கல்லறையில்) நம்பிக்கையோடே தங்கியிருக்கும், உமது பரிசுத்தரை அழிவைக் காணவொட்டீர்" என்கிறார். அவர் மரித்தபோது சீஷர்கள் பார்வையிலும் சத்துருக்கள் பார்வையிலும் தோல்வியடைந்ததுபோல் தோன்றினபோதிலும் அவர் மரணமே நமது மரணத்தை மரணத்துக்குள்ளாயிற்று என்ற ரகசியத்தை ஒருவரும் அந்நேரம் அறிந்ததில்லை. அவரோ: "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயமெங்கே" என்கிற ஆரவாரத்தோடு கல்லறை சென்றார். ஏசாயா சொன்னபடி மரணம் அவரை விழுங்குவதற்குப் பதிலாக "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்கினார்" நம்பிக்கையோடு தங்கியிருந்த அவர் சரீரம் சற்றும் அழியாமல் புதிய ஜீவனோடும் மேன்மையான சரீரத்தோடும் வெளியேறினது. "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" அவர் உயிர்த்தெழுதலே அவர் நமது பாவத்தை அகற்றினார் என்பதற்கும், மரணத்தில் வெற்றியடைந்தார் என்பதற்கும்,

சாத்தானை ஜெயித்தார் என்பதற்கும் ஒப்பற்ற ஆதாரம். இந்த மூன்று வெற்றிகளின் பலன்: "உமது சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உமது வலது பாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு" என்று அவரை மகிழ்ச்சியுடன் துதிக்கச் செய்தது.

# 21. ஈகைப் பிரமாணம்

**"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலேபோடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக். 6:38).**

நாசரேத்தூர் தச்சனுக்கு இந்த ஞானம் எங்கேயிருந்து வந்ததென்று அவருடைய உபதேசத்தைக்குறித்து அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் போதனைக்கு அவர்கள் இணங்கி யிருப்பார்களானால் அந்த இரகசியத்தையும் அறிந்திருப் பார்கள். எவ்வளவு வேதசாஸ்திரங்கற்றும் அறியக்கூடாத இரகசியங்களை அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதாயிருப்பவர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். ஆண்டவர் போதனைகளை அறியவும், அதன் பலனை அனுபவிக்கவும் அவருடைய சிந்தை நமக்குவேண்டும். மேற்கூறிய வசனத்தில் இரண்டு மூன்று குறிப்புகளைக் கவனிப்போம்.

### 1. கொடுப்பதும் கிடைப்பதும்

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" நம்மெல்லாருக்கும் நன்மையான ஈவுகளைப் பெற்றுக் கொள்ளவே பிரியம். கொடுப்பதைப் பார்க்கிலும் வாங்கவேண்டுமென்பதே நமது பிரமாணம். நமக்குக் கிடைக்கவேண்டுமானால் நாம் கொடுக்கவேண்டும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஓர் சந்நியாசி மடமிருந்தது. பல சந்நியாசிகள் அங்கு வசித்தார்கள். தலைமையான ஒருவர் சிறந்த பக்தனும் பரோபகாரியுமாயிருந்தார். திக்கற்றவர்கள் ஏழைகள் அவர் மூலமாய் பராமரிக்கப்பட்டார்கள். யாவருக்கும் உதாரமாய்க் கொடுத்தார். பிரபுக்களிடமிருந்து ஏராளமான சகாயம் அவருக்குக் கிடைத்தது. அந்த மடத்தில் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அவர் நீங்க, வேறொருவர் அவர்

ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டார். இவர் மகா சிக்கனக்காரன். தர்மவிஷயம் யாவற்றையும் சமூலமாய் ஒழித்தார். அதற்கென்று நியமிக்கப்பட்டிருந்த ஆட்களையும், வேலையை விட்டு நீக்கினார். கொடிய தரித்திரம் அந்த மடத்தை ஆண்டுகொண்டது. ஒரு ஏழை மனுஷன் அங்கே வந்தான். அவனை அவர் துரத்தியடித்தார். வாசற்காப்போன் அவனை இரககசியமாய்த் தன்னிடம் ஏற்றுக்கொண்டான். நன்றாயிருந்த இந்த மடம் தரித்திரப்பட்டது எப்படி என்று அந்த மனுஷன் வாசற்காப்போனைக் கேட்க, அவன் தெரியாது என்றான். நான் சொல்லுகிறேன் என்று சொல்லி இந்த மடத்தில் "கொடுங்கள்" என்றும் "கொடுக்கப்படும்" என்றும் இரு சகோதரர் இருந்தார்கள். கொடுங்கள் என்ற சகோதரனை நீக்கிவிடவே கொடுக்கப்படும் என்ற சகோதரனும் கூடவே போய்விட்டான்; தரித்திரம் ஆண்டுகொண்டது என்றான்.

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" இது தேவனுக்கும் மனுஷருக்கும் பொதுப்பிரமாணம். உலகம் தேவனுக்குச் சொந்தம். உலகமோ தேவனைப் புறம்பே தள்ளிவிட்டது. நாம் நம்மை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று தேவன் எவ்வளவோ வாஞ்சை கொண்டார். தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பேசினார். என்னென்னமொ செய்து பார்த்தார். காரியம் பலிக்கவில்லை. கடைசியாக தமக்கு அருமையான ஒரே குமாரனை நமக்குக் கொடுத்தார். நடந்ததென்ன? ஆயிரம் பதினாயிரமான மனுஷர் தங்களை முழுவதுமாய் தேவனுக்குக் கொடுத்தார்கள். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பது கடவுள் விஷயத்திலும் உண்மையாயிற்று. மற்றவர்கள் நமக்கு எவைகளைச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அவைகளை நாமும் அவர்களுக்குச் செய்யவேண்டும். நமது நிலைமைக்கும், அந்தஸ்துக்கும், அறிவுக்கும், செல்வாக்குக்கும் தக்கதாக நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது தேவன் அந்த நன்மைகளைத் திரும்ப நமக்குக் கொடுக்கிறார். நம்மாலியன்றமட்டும் மற்றவர்களுடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் நன்மைசெய்யவே நாம் நியமிக்கப் பட்டிருக்கிறோம். பணச்சகாயத்தை மாத்திரம் இது குறிக்காது. நமது பட்சம், அன்பு, அனுதாபம், இரக்கம், ஆறுதல் முதலான ஆவிக்குரிய நன்மைகளையும் குறிக்கும். நாம் கொடுக்கும்போது, அவைகளைத் திரும்பபெற்றுக் கொள்ளுகிறோம். நாம்

இரங்காதிருக்க நமக்கு இரங்குபவர் யார்? நாம் நேசிக்காதிருக்க நம்மை நேசிப்பவர் யார்? நாம் உதவாதிருக்க நமக்கு உதவுபவர் யார்? "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்" எவ்வளவு உண்மை.

## 2. கொடுப்பதிலும் கிடைப்பது அதிகம்

"அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்" ஐந்து அப்பம் இரண்டு மீன்களை ஆண்டவர் கையில் கொடுத்ததால் ஐயாயிரம் பேர் சாப்பிட்டு ஏராளமாய் மீந்துபோகும்படி செய்தாரே. நாம் ஆண்டவருக்காக உத்தம வாஞ்சையோடு செய்யும் எந்தக் காரியமும் மிகுதியான பலனைக் கொண்டுவராமலிராது. சொற்ப உபகாரம் செய்து மிகுதியான பலனைப் பெற்ற அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. இவர்கள் பதில் கிடைக்கும்படி எதிர்பார்த்துச் செய்தவர்கள் அல்ல. ஆச்சரியப்படத்தக்கதாக பெரிய நன்மைகளை அடைந்தார்கள். அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி அவர்கள் மடியிலே போடப்பட்டது. மலையில் தனித்து வசித்த ஒரு துரை வியாதியாயிருந்தார். கிராமத்தில் வசித்த ஒரு வைத்தியர் அனுதாபத்தினால் அங்கே போய் துரைக்கு வைத்தியஞ் செய்தார். பதில் உபகாரத்தை இவர் எதிர்பார்த்தவரல்ல. சிலநாட்கள் சென்று வைத்தியர் ஆச்சரியப்படத்தக்கதாக மலையிலிருந்து வேண்டிய வெகுமானங்கள் அவர் வீட்டில் வந்திறங்கின. சமுசாரி விதையை சிறு கூடையில் கொண்டுபோய் மண்ணில் தூவுகிறான். சிலகாலத்துக்குள் தானியத்தை மூட்டை மூட்டையாக வண்டியில் கொண்டு வருகிறான். ஒருகலசம் தண்ணீரும் தன் பலனைக் கொண்டுவராமலிராது. ஆண்டவரின் அன்பினால் ஏவப்பட்டு மற்றவர்களுக்கு நாம் செய்யும் சரீர ஆத்தும நன்மைகள் மிகுதியான பலனை நமக்குத் தரும் என்பது நிச்சயம். சிறிய உபகாரம் பெரிய நன்மைகளைக் கொண்டுவரும். ஆகையால் கொடுப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பது மாத்திரமல்ல, கொடுப்பதிலும் மேன்மையானவைகளை ஆண்டவர் நமக்குக் கொடுக்கிறார். கொடுப்பதிலும் கிடைப்பது அதிகம்.

## 3. அளவுபோல் அளவு

"நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்." இதிலே நமக்கு

எச்சரிப்பு இருக்கிறது. அளவுபோல் அளவு. அளந்து கொடுத்தால் அளந்தே கொடுப்பார்கள். எண்ணிக்கொடுத்தால் எண்ணியே கொடுப்பார்கள். இது இயற்கையே. இதில் அநியாயம் ஒன்றுமில்லை. ஆனால் ஆண்டவருடைய கருத்தை அறியவேண்டும். இத்துடன் சம்பந்தப்பட்ட முந்தின வசனங்களிலே காண்கிறோம். நமது ஈகையில் உதாரம் இருக்கவேண்டும். அதாவது நாம் செய்யும் நன்மைகளைப் பிரதானமாக எண்ணாமல் அந்தச் செய்கையில் நாம் சந்தோஷிக்கவேண்டும். "தனக்குப்போகத்தான் தர்மம்" எண்ணும் பிரமாணம் ஆண்டவர் நமக்குக் கற்பித்ததல்ல. நமது நிலைமைக்கேற்றாற்போல் பிறருக்கு ஒத்தாசை செய்யும்போது நாம் கொடுப்பதையே பிரமாதமாக எண்ணாமல், அந்த ஒத்தாசையினால் மற்றவர்களுக்கு உண்டாகும் ஆறுதலை நினைத்துச் சந்தோஷிக்கிறோம். ஈகை விஷயத்தில் மனுஷர் வெகுகண்டிப்பாய் இருப்பதுண்டு. எத்தனை வருடங்கள் கடந்தாலும் தாங்கள் செய்ததைச் சொல்லிக்காட்டாதிருக்க மாட்டார்கள். தாங்கள் கொடுத்ததைப்பற்றியே எப்பொழுதும் ஞாபகம், எவ்வளவு சிக்கனம்! எவ்வளவு கையிறுக்கம்! கொடுப்பதில் மகா கண்டிப்பு. கடவுளால் எவ்வளவோ உலகபாக்கியம் அடைந்திருந்தும் ஈகையில் மகா பிசினித்தனமாய் நடப்பவர் உண்டு. அவர்கள் அளக்கிற அளவே அவர்களுக்கும் அளக்கப்படும். எல்லாமிருந்தும் அவர்களைப்போல் தரித்திரரில்லை. தேவ சமாதானத்தை அவர்கள் அறியார்கள். "உன் வலது கை செய்வதை இடது கை அறியாதிருப்பதாக" என்றார். மேலான பாக்கியத்தை கிறிஸ்துவுக்குள் கண்டவர்கள் பூமிக்குரிய விஷயங்களிலே மகா உதாரமாயிருக்கிறார்கள். "வாரியிறைத்தும் விருத்தியடைவாருண்டு. பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாருமுண்டு" நாம் அளப்பது போலவே நமக்கும் அளக்கப்படும். கண்டிப்பான அளவுக்குக் கண்டிப்பானஅளவே. உதாரமான அளவுக்கு உதாரமான அளவே.

இன்னொருகாரியம் உண்டு. எத்தன்மையாக அளக்கிறோமோ அத்தன்மையாகவே அளக்கப்படும். கேழ்வரகு அளந்துகொடுக்க, கோதுமையை எதிர்பார்க்கக்கூடுமோ? கோபத்தை அளந்து அன்பை எதிர்பார்ப்பதெப்படி? மூர்க்கத்தை

அளந்து இரக்கத்தை எதிர்பார்ப்பது எப்படி! பகையை அளந்து மன்னிப்பை எதிர்பார்ப்பதெப்படி? எத்தன்மையாக நாம் அளக்கிறோமோ அத்தன்மையாகவே நமக்கும் அளக்கப்படும். நமது ஜீவியம் எதிரொலிக்குச் சமானம். அடே! என்றால் அடே! என்று திரும்பக் கேட்கிறது. முட்டாளே! என்றால் முட்டாளே! என்று தொனிக்கிறது. அன்பனே! என்றால் அன்பனே! என்று கேட்கிறது. நாம் எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவினால் நமக்கும் அளக்கப்படும். தேவனுடைய தயவையும் மனுஷருடைய அனுதாபத்தையும் நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் நமதாண்டவரைப்போல, நம்மாலியன்ற மட்டும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமும் ஆசீர்வாதமுமாயிருக்க நாடுவோமாக.

## 22. இல்லாமை எடுபடல்

***"இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப் படும்" (லூக். 8:18).***

மனுக்குலத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். உள்ளவர்கள், இல்லாதவர்கள், இல்லாதிருந்தும் உள்ளவர்களாக நினைக்கிறவர்கள். உள்ளவர்கள் தங்களுக்கு உண்டென்று நினைப்பது சரியே. இல்லாதிருந்தும் தங்களுக்கு இல்லையென்று நினைப்பது சரியே. இல்லாதிருந்தும் தங்களுக்கு உண்டென்று நினைப்பதோ மோசம். சரீர நன்மைகளானாலும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களானாலும் தங்களுக்கு இல்லாதிருந்தும் இருக்கிறது என்கிற எண்ணம் வஞ்சகமே. ஆண்டவர் உண்மையில் பிரியப்படுகிறார். உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறார். மாயத்தை முழுப்பகையாய்ப் பகைக்கிறார். நம்மை இருக்கிறபடி அறிந்துகொள்வது நல்லது. கிறிஸ்துவுக்கு முன்பாக நம்மை நிறுத்தி அவரது குணலட்சணங்களோடு நம்மை ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் எவ்வளவு குறைவானவர்கள் என்பது விளங்கும். நம்மை இருக்கிறபடி அறிவதும், கர்த்தருக்கு அதை அறிக்கையிடுவதும், மனுஷர் முன்பாகப் பணிந்த சிந்தையோடு நடந்து கொள்வதே ஆசீர்வாதத்துக்கு வழி.

## இல்லாதிருந்தும் உண்டென்று நினைப்பது வஞ்சகம் இதற்குக் காரணமென்ன?

### 1. அறிவு

அறிவுக்கும் அனுபவத்துக்கும் வித்தியாசம் மிகுதி. அறிவையே அனுபவமாக நினைப்பது வஞ்சகம். கிறிஸ்துவைப்பற்றியும், அவரோடுள்ள ஐக்கியத்தைப்பற்றியும், விசுவாசம், பாவமன்னிப்பு, நீதி, சமாதானம், நித்தியஜீவன், பரிசுத்தம், கிறிஸ்துவின் சிந்தை முதலான ஆசீர்வதங்களைப் பற்றியும் நாம் நெடுங்காலமாக அறிந்திருக்கலாம். இந்த அறிவையே நாம் அனுபவமாக எண்ணி மோசம் போகலாம். இதுபோலவே மனத்தாழ்மை, சாந்தம், சகிப்பு, பொறுமை, மன்னிப்பு, இரக்கம், அன்பு, அனுதாபம் முதலிய குணங்களைப் பற்றிநாம் அறிந்திருக்கலாம், பேசலாம். இவைகளைப்பற்றிய அறிவை அனுபவத்தில் இருப்பவைகளைப்போல நாம் நினைக்கும்போது வஞ்சிக்கப்படுகிறோம். காலம் செல்லச் செல்ல நமக்குண்டு என்று நாம் நினைத்த இவைகள் இல்லையென்றாகும் பரீட்சை காலம் அதை வெளிப்படுத்தும்.

### 2. பிறர் புகழ்ச்சி

மற்றவர்கள் பேசும் புகழ்ச்சியான வார்த்தைகளால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். பெற்றோர் தங்கள் மக்களை கண்ணே, பொன்னே, துரையே, சக்கரவர்த்தியே என்று கொஞ்சுவது இயல்பு. மக்கள் மீதுள்ள பாசத்தால் அரிய பெரிய நாமத்தாலே அவர்களை அழைத்துப்போற்றுவது வழக்கம். மக்கள் இந்தப் புகழ்ச்சியை உண்மையாக நம்பி ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஐயோ, பாவம்! காலம் வரும்போது தாங்கள் கண்ணுமல்ல, பொன்னுமல்ல, துரையுமல்ல, சக்கரவர்த்தியுமல்ல, துன்பத்துக்கும் தொல்லைக்கும் ஆளாகப் பிறந்தோமே என்று புலம்புகிறார்கள். இதுபோலவே சிநேகிதர் சிநேகிதரால் வஞ்சிக்கப்படுகிறார்கள். சிநேகிதி தன் சிநேகிதியைப் பார்த்து: உன் அழகுக்கு நிகரில்லையென்றும் உன்னைப்போல் அழகாய் உடுத்துகிறவர்கள் இல்லையென்றும் போற்றலாம். சிநேகிதன் தன் சிநேகிதனைப் பார்த்து: உன் அறிவுக்கும் பலத்துக்கும் தைரியத்துக்கும் நிகரில்லையென்று சொல்லலாம். இவை முகஸ்துதி அல்ல. பாசத்தால் பிறக்கும் வார்த்தைகள். புகழ்ச்சியான வார்த்தைகளை அடிக்கடி நாம் கேட்கும்போது நாம் அப்படியிருப்பதாகவே நம்பிக் கொள்கிறோம். உள்ளபடி

பார்த்தால் நாம் அவ்வளவு சிறந்தவர்கள் அல்ல. இல்லாதிருந்தும் உண்டென்று நினைத்து வஞ்சிக்கப்படுகிறோம்.

**3. நிலைமை அந்தஸ்து**

நாம் செய்து வரும் உத்தியோகம் உலகமே நமது கைக்குள்ளிருப்பதுபோல் நம்மை நினைக்கச் செய்யலாம். நாம் உடுப்பு உடுத்திப் புறப்படும்போது கவர்னருக்கும் நமக்கும் வித்தியாசமென்ன என்று நினைக்கச் செய்யலாம். நாம் அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் நாமே ராஜ பெருமாட்டி என்பதுபோல் நினைக்கச் செய்யலாம். நமது யதார்த்த நிலைமையை நாம் மறந்து வேறு விதமாய் எண்ணிக் கொள்வதற்கு இந்தப் புறம்பான காரியங்கள் சோதனைகளா யிருக்கின்றன. எவ்வளவோ தாழ்மையாய் அடக்கமாய் யாவரோடும் பட்சமாய் நடந்து வந்த மனுஷர், திடீரெனக் கையில் கொஞ்சம் காசு சேர்ந்தவுடனே முற்றிலும் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்களது மேட்டிமையான நடையும், கைவீச்சும், எடுப்பானபார்வையும், அதிகாரச்சத்தமும் நம்மைகளங்கச் செய்கின்றன. அவர்களை நாம் குற்றப்படுத்துவதில்லை. ஏழை ஆத்துமாக்கள் புறம்பான அழிந்துபோகிற காரியங்களாகவே ஏமாந்து போகிறார்கள். இது அவர்கள் பலவீனம். நாம் வெட்டியெடுக்கப்பட்ட துரவையும், தோண்டியெடுக்கப்பட்ட குழியையும் மறப்பதால் உண்டாக்கும் மோசம் இது. உண்மையாய் உள்ளது எதுவென்று நாம் அறியவேண்டும்.

**4. சங்கத்தின் கூட்டுறவு**

இங்கே ஒருசக்தியுண்டு. தேக்கச்சேரி முதலான கொண்டாட்டங்களுக்குப் பலரும் அழைப்புப் பெறுவதுண்டு. அங்கே பற்பல அந்தஸ்துள்ளோர் கூடுவார்கள். தனவான்கள், சீமான்கள், கற்றோர், பெரியோர் முதலான பலரும் ஓரிடத்தில் கூடுவதும், கைகுலுக்குவதும், ஒன்றாய் உட்கார்ந்து பேசுவதும், சிரிப்பதும், ஒன்றாய் பானம் பண்ணுவதும் பெரிய மகிழ்ச்சியாயிருக்கும். அவ்வேளையில் சிரிக்க முடியாதவனும் சிரிப்பான். பேசாதவனும் பேசுவான். கொஞ்சநேரத்துக்குள் நாமும் பெரியோருக்கொத்த சீமான்கள் போலும் பிரபுக்கள்போலும் தோன்றும். நமது யதார்த்த நிலைமையை மறந்துபோகிறோம். யாரோடு சம்பந்தப்படுகிறோமோ அவர்களைப்போலவே நம்மையும் அவ்வேளையில் பாவித்துக்

கொள்ளுகிறோம். வாஸ்தவத்தில் நாம் சீமான்களோ அல்லது தரித்திரரோ என்பது வீட்டுக்குத் திரும்பின பிறகுதான் தெரியும். இது சபை சங்கத்தின் கூட்டுறவு சக்தியினால் நமக்குள் உண்டாகிற நினைவேயல்லாமல், உண்மையில் நாம் அப்படியல்ல. இவ்வாறு பலவிதத்திலும் நாம் வஞ்சிக்கப்பட்டு, நமக்கில்லாதிருந்தும் உண்டென்று நினைத்துக்கொள்ளுகிற மோசத்துக்குள்ளாகிறோம்.

## உண்டென்று நினைத்ததும் எடுபடும்.

இல்லாததை உண்டென்று நினைத்தாலும் அது இல்லாததே. அப்படியிருக்க இல்லாதது ஈடுபடும் என்பதின் அருத்தமென்ன?

### 1. சோதனைகள் இந்த இல்லாமையை வெளிப்படுத்தும்

இருக்கிறதென்று நாம் நினைத்தவைகள் சோதனைகள் நேரிடும்போது இல்லையென்று விளங்கும். யோசேப்பு சோதிக்கப்பட்டபோது அவன் உள்ளவன் என்று விளங்கினான். தாவீது சோதிக்கப்பட்டபோது இல்லாதவன் என்பது வெளிப்பட்டது. பெருமை கொள்ளும்படியான சோதனை நேரிடும்போதுதான் தாழ்மை உண்டோ என்பது வெளிப்படும். கோபமூளும்படியான சோதனை வரும்போதுதான் சாந்தம் உண்டோ என்பது வெளிப்படும். தீமை நேரிடும்போதுதான் சகிப்புண்டோ என்பது தெரியும். பாடுகள் உண்டாகும்போது தான் பொறுமை உண்டோவென்று தெரியும். பாவம் செய்யத்தக்க தூண்டுதல் வரும்போதுதான் பரிசுத்தம் உண்டோவென்பது தெரியும். நாம் உண்டென்று நினைத்தவைகள் உண்மையோ பொய்யோவென்பது சோதனைகளாலே விளங்கும். சோதனைகளில் நாம் தவறும்போது உண்டென்று நினைத்த வஞ்சகம் எடுபட்டுப் போகும்.

### 2. பரீட்சை நமது இல்லாமையை வெளிப்படுத்தும்

பொன்னோ, பித்தளையோ என்பதை உரசிப் பார்ப்பார்கள். லோகங்களின் தன்மையை புடத்தின் பரீட்சை வெளிப்படுத்தும். பாடுகள், துன்பங்கள், நோய்கள், மரணங்கள், அவமானங்கள் நேரிடுங்காலம் நமக்குப் பரீட்சை காலம். நமது விசுவாசம், பொறுமை, தேவபக்தி பரீட்சையில் நிற்குமோ நிற்காதோ? நாம் பரீட்சையில் தவறிப்போனால் நாம்

உண்டென்று நினைத்தது இல்லையென்றாகும். அந்த வஞ்சகமான நினைவு அடிபட்டுப் போகும். உண்டென்று நினைத்த நினைவு பொய்யாவதே இல்லாமை எடுபடுவதாகும்.

### 3. மரணம் தமது இல்லாமையை வெளிப்படுத்தும்

உண்மையில் நமக்குள்ளவைகளை அசைக்க மரணத்துக்கு வல்லமையில்லை. ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்கில்லாதிருந்தும் உண்டென்று நினைத்துக்கொண்டிருந்த வஞ்சகத்தை மரணநேரம் உடைத்தெறியும். உயிரோடிருக்கையில் மாயமாகப் பிழைத்தாலும் மரணவேளை வரும்போது மாயம் என்னத்துக்காகும்? மரணவேளையிலும் மாயமா? முடியாது. மரணத்தைப்போல் மனுஷனுடைய உண்மையான நிலைமையை வெளிப்படுத்துவது வேறெதுவுமில்லை.

"இல்லாதவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் எடுத்துக்கொள்ளப்படும்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். இல்லாதது இல்லாததுதானே, அது எப்படி எடுத்தக் கொள்ளப்படும் என்று கேட்கலாம். ஒருவன் தனக்கில்லாததை இருப்பதாக நினைத்துப் பெருமையடைகிறான். இது வஞ்சகம். ஆனால் சோதனை, பரீட்சை, மரணம் வரும்போது அவன் தானே தனக்கில்லை என்பதை கண்டு கொள்ளுகிறான். உண்டென்று அவன் நெடுகிலும் வீணாக நம்பியிருந்த எண்ணம் அடிபட்டுப்போவதால், நினைவிலிருந்ததையும் அவன் இழந்தான். இதுவே இல்லாமை எடுபடல் என்பதின் கருத்து.

## 23. "சேருங்கள், சேருவார்"

**"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" (யாக். 4:8).**

கடவுளும் மனுஷனும் சம்பந்தப்படுவதே மார்க்கம். கடவுள் மாத்திரம் செய்வதல்ல, அல்லது மனிதன் மாத்திரம் செய்வதல்ல. கடவுளும் மனுஷனும் சம்பந்தப்படும் அனுபவமே பக்திமார்க்கம். கடவுள் இருக்கிறார் என்ற உணர்ச்சி மனுமக்கள் யாவருக்கும் உண்டு. கடவுள் இல்லையென்று ரூபிப்பதைப்பார்க்கிலும் அவர் இருக்கிறார் என்று நம்புவதே லேசு. ஒரு மனுஷனுக்குத் தகுந்த மரியாதை செய்வதற்கு அவன் அந்தஸ்தை அறியவேணும். கடவுளை நாம் ஏற்றபடி தொழுது

கொள்வதற்கு அவர் இன்னாரென்பதை அறியவேணும். அநேகருடைய மார்க்கம் கடவுளை அறியாத மார்க்கம் கடவுள் இருக்கிறார் என்று தெரியும், அவர் எப்படிப்பட்டவர், அவர் தன்மை என்ன, குணமென்ன என்பது தெரியாது. ஆகிலும் ஆராதனைகள் சடங்குகள் மும்முரமாய் நடக்கின்றன. ஏதோ சில நியமங்களை நிறைவேற்றினால் ஒரு திருப்தி. நமக்குள்ளும் அநேகருடைய காரியம் இதுபோலவே. ஏதோ சில முறைமைகளை நிறைவேற்றிவிட்டால் அதுவே நமது மார்க்கம். கடவுளும் மனுஷனும் சந்திக்காத வரையில் நாம் செய்கிற சகல முயற்சிகளும் மனுஷமார்க்கமேயன்றி தேவமார்க்கமல்ல. கடவுளும் மனுஷனும் சந்திப்பதே உண்மையான பக்திமார்க்கம்.

### மனுஷருடைய காரியங்களில் ஒருபக்கம் என்பது கிடையாது

உபாத்திமார் கற்பிக்க மாணாக்கர் கற்றுக்கொள்ள; எஜமான்கள் சொல்ல வேலைக்காரர் செய்ய; வியாபாரம் கொடுக்க வியாபாரம் வாங்க; பெற்றார் அழைக்க பிள்ளைகள் வர; சிநேகிதர் கொடுக்க சிநேகிதி பெற்றுக்கொள்ள; இவ்வாறு எல்லாக் காரியங்களிலும் இருபட்ச முயற்சிகளைக் காண்கிறோம். கடவுள் காரியத்தில் மாத்திரம் நாமே எல்லாம் செய்கிறதாகத் தோன்றுகிறதேயன்றி கடவுள் கிரியையைக் காண்கிறோமா? நாம் ஆலயம் சென்று, வாசித்து, ஜெபித்து, பாடித் திரும்பிவிட்டால் திருப்தியடைகிறோம். அது தேவமார்க்கமாகுமா? நமது பிதாவைத் தரிசிக்கிறோமா? அவர் கிரியைகளை உள்ளத்தில் உணருகிறோமா? கடவுளும் மனுஷனும் சந்திப்பதே மெய்மார்க்கம். "தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்."

### நமது அனுபவமென்ன?

தேவன் நம்மிடத்தில் சேர்ந்தது மெய்யானால் நாம் அதை அறியாதிருக்கமுடியாது. குருட்டுப்பக்தி நமக்கு வேண்டாம். நமது சகல காரியங்களிலும் நமது பிதாவை நாம் காணவேண்டும். நமது ஆராதனை ஜெபங்களில் மாத்திரமல்ல, நமது தினசரி ஜீவியத்தில் ஒவ்வொரு காரியத்திலும் அவர் கரத்தை நாம் காணவேண்டும். நிமிஷந்தோறும் அவர் நம்மை நடத்தவேண்டும். நமது காரியங்களை உறுதிப்படுத்த, நமது கலக்கங்களைப்போக்க, நமது தப்பிதங்களைக் கடிந்துகொள்ள, நமது மனதைப் பலப்படுத்த, நமது குறைகளை நிவிர்த்திக்க,

நமது வாஞ்சையைத் திருப்திசெய்ய, நம்மை ஜீவ பாதையில் நடத்த, நமக்குத் தேவையான நன்மைகளைக் கொடுக்க, நமது முயற்சிகளை ஆசீர்வதிக்க அவர் கிருபையுள்ள சமுகம் நம்மோடிருக்கவேண்டும். இதுவே அவர் வாக்கு. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." பக்தனான தாவீது இவ்வாறு கடவுளால் நடத்தப்பட்டதாக அநேக சங்கீதங்களில் பாடியிருக்கிறார். பரிசுத்த பவுல் கர்த்தர் தம்மோடிருந்து இடைவிடாது தம்மை நடத்தினாரென்று அறிக்கை செய்திருக்கிறார். பிதாவை அறிந்து அவரோடு சஞ்சரிக்கும் பிள்ளைகள் யாவருடைய அனுபவமும் இதுவே. இதுவே தேவ மார்க்கம். நாம் அவரைச் சேர அவர் நம்மைச் சேருகிறார். இது ஒருபக்க முயற்சியல்ல. இருபக்க முயற்சி. தேவனும் நாமும்.

**ஏன் இந்த அனுபவம் நமக்கில்லை?**

நாம் ஆவியோடும், உண்மையோடும் பிதாவைத் தேடவில்லை. நமது இருதயம் ஆண்டவருக்குத் தூரமாயிருக்க நமது சரீரம் ஆலயத்திலிருந்து என்ன பிரயோஜனம்? நமது ஜீவியத்தில் பாவத்தை வைத்துக்கொண்டு வாயினால் பாடுவதால் என்ன பிரயோஜனம்? உண்மையில் ஆண்டவரைத் தரிசிக்கவேணும் என்கிற வாஞ்சையில்லாமல், கர்த்தாவே எங்களை ரட்சிக்க விரைவாய் வாரும் என்று ஜெபிப்பதால் என்ன பிரயோஜனம்? உண்மையாய் நாம் தேவனிடத்தில் சேர்ந்தால் உண்மையாய் தேவனும் நம்மிடத்தில் சேருவார். வீணாராதனைகளாலும் வீண் ஜெபங்களாலும் யாதொரு சுகமில்லை. நமது ஜீவியத்தில் மிகுதியான பாகம் இவ்வாறே நஷ்டமாயிற்று. கணக்கற்ற ஆராதனைகளை, கணக்கற்ற ஜெபக்கூட்டங்களை நாம் நடத்தியும் நமது ஆத்தும நிலைமை எவ்வளவோ பரிதாபமாயிருக்கிறது. "உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" "நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு என்னைத் தேடுவீர் களானால் தேடும்போதே என்னைக் கண்டுபிடிப்பீர்கள்" என்று சொன்ன கடவுள் உண்மையுள்ளவர். யார் யாருடைய இருதயம் கடவுளை வாஞ்சையோடு தேடி அவரைக் கிட்டிச் சேர்ந்ததோ, அவர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்தாதிருந்த தில்லை. "என்னை விருதாவிலே தேடுங்கள் என்று நான் சொன்னதில்லை" என்று ஆண்டவரே சொல்லுகிறார்.

"தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்" என்று நமது ரட்சகரும் சொல்லியிருக்கிறார். ஆகையால் கடவுளின் இடைவிடாத சமுகத்தையும் நடத்துதலையும் நாம் கண்டடைய வில்லையானால் அது நமது குற்றமே. "தேவனிடத்தில் சேருங்கள்; அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" என்பது தேவவாக்கு.

அப்பொழுது என்கிற வார்த்தையை நாம் கவனிக்க வேண்டும். நாம் கடவுளைச் சேர்ந்தால் அப்பொழுது அவர் நம்மிடத்தில் சேருவார் என்பதின் கருத்தென்ன? இதுபோலவே மற்றவாக்கியங்களும் கூறுகின்றன. "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" "என்னில் நிலைத்திருங்கள், அப்பொழுது நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" ஒருகாரியத்தை இங்கே கவனிக்கவேண்டும். நாம் சேர்ந்தால்தான் அவர் சேருகிறார். நாம் கேட்டால்தான் அவர் கொடுக்கிறார். நாம் தேடினால்தான் அவர் தென்படுகிறார். நாம் தட்டினால்தான் அவர் திறக்கிறார், நாம் நிலைத்திருந்தால்தான் அவர் நிலைத்திருக்கிறார். நாமே எல்லாவற்றையும் முந்திச் செய்ய வேண்டியதாயிருக்கிறது; அவர் பிந்திச் செய்கிறதாகத் தோன்றுகிறது. நாம் சேர்ந்தால்தான் அவர் நம்மைச் சேருகிறாரோ? நாம் தேடினால்தாம் அவர் தம்மை வெளிப்படுத்துவாரோ? நாம் தட்டினால்தான் அவர் திறப்பாரோ! நாம் நிலைத்திருந்தால் தான் அவர் நிலைத்திருப்பாரோ? அவர் மனம் அவ்வளவு கடினமா? நாம் இவ்வளவு முயற்சியெடுத்தால்தான் அவருக்கு நம்மீது இரக்கம் உண்டாகுமோ? ஒருபோதும் அப்படி அல்ல. காரியம் முழுவதும் வேறே. பரமபிதா நமது பக்கத்திலேயே இருக்கிறார். நாம் அவருக்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். அவர் கிருபையும் அன்பும் சமுத்திரம்போல் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. அவருடைய சம்பூரண ஆசீர்வாதங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. அவர் கிருபையின் வாசல் எப்பொழுதும் திறந்திருக்கிறது. அவர் எப்போது மாம்சத்தில் வந்தாரோ அப்போதே நம்மோடிணைக்கப்பட்டார். ஆனால் இவைகள் ஒன்றையும் காணாதபடி நமது கண்கள் அந்தகாரப்பட்டிருக்கின்றன. நமது ஆசை மண்ணைப்

பற்றிக்கொண்டிருக்கிறது. பற்பல பாவங்கள் நமது ஆத்துமாவை மூடிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் அசைவு முந்தி நம்மிடத்தில் ஆரம்பிக்கவேண்டியது நியாயம். நமது மனக்கண்கள் பிரகாசிக்கப்பட்டால் பிதா பக்கத்திலிருப்பதைக் காணலாம். அவர் தூரமாயிருந்து வரவேண்டியதில்லை. நமக்கு ஆவிக்குரிய வாஞ்சையுண்டாகி, தேவாசீர்வாதங்களைத் தேடும்போது அவை நமக்குள்ளிருப்பதைக் காணலாம். நமது அன்பு கிறிஸ்துவின்மேல் பாயும்போது அவர் நம்மில் ஏற்கெனவே நிலைத்திருப்பதைக் காண்போம். கிணற்றைத் தூர்வையெடுங்கள் அப்பொழுது நல்ல ஜலத்தைக் காண்பீர்கள் என்றால் ஜலம் வேறே எங்கிருந்தும் வரவேண்டியதில்லை. கிணற்றுக்குள் மூடப்பட்டிருக்கிற ஜலம் ஊறி வருவதையே நாம் காண்கிறோம். ஜன்னலை திறப்பது வெளிச்சத்தை உண்டாக்குவதல்ல. உள்ளே பிரவேசிக்க ஆயத்தமாயிருந்த வெளிச்சத்துக்கு வழியுண்டாக்குவதாகும். ஆகையால் நாம் முந்திச் சேருவதும், கேட்பதும், தட்டுவதும், தேடுவதும், நிலைத்திருப்பதும் கடவுளையும் அவர் ஆசீர்வாதங்களையும் கிட்டக்கொண்டு வருவதாயிராமல் நமக்குள்ளும் நம்மோடும் இருக்கும் ஆண்டவரையும் அவர் ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்வதற்கு, நம்மிலுள்ள தடைகளை நீக்கி, ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கத்தக்க நிலைமைக்கு நம்மைகொண்டு வருவதாகும்.

# 24. வெளிப்படுத்தல்

***"அவர் வெளிப்படும்போது" (1 யோவா. 3:2).***

ஆண்டவர் உலகத்துக்கு தம்மைப் படிப்படியாக வெளிப்படுத்தினார். வெளிப்படுத்தல் என்பது மறைவா யிருப்பவைகளை பார்க்கும்படி செய்வது ஆவிக்குரிய தேவகாரியங்கள் மறைவானவைகளே. அவைகள் வெளிப் படுத்தப்படும்போது ஆவிக்குரிய பார்வையுள்ளவர்கள் கண்டு மகிழ்கிறார்கள். கிறிஸ்துவில் வெளியான தேவகாரியங்களைக் காண நமக்கு ஞானக்கண்கள் வேண்டும். ஜென்ம சுபாவத்தின் கண்கள் பாவத்தால் அந்தகாரப்பட்டிருப்பதால் கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுள் மகிமையை அவர்கள் காண்பதில்லை.

**1. சரீரத்தில் வெளிப்படுத்தல்**

"கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டார்." இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். ரகசியத்திலும் ரகசியம். ஆனால் தம்மை நமக்கு வெளிப்படுத்துவதற்கு கடவுள் தெரிந்துகொண்ட வழி அதுதான். அரசர் குமாரனாக மாளிகையில் வெளிப் படுவாரோ? ஆசாரியக்குலத்திலிருந்து ஆலயத்தில் வெளிப்படுவாரோ? சந்நியாசி கோலம் பூண்டு வனாந்தரத்தில் தோன்றுவாரோ என்பது உலகத்தின் அபிப்பிரயாம். ஆனால் கடவுளோ சாதாரணத்திலும் சாதாரணமான வழியைத் தெரிந்து கொண்டார். சாதாரணமே கடவுளுக்குப் பிரியம். எல்லா மனுஷருக்கும் ஏற்ற வழி அதுவே. உலகம் இதை எதிர்பார்க்கவில்லை. பெத்லகேம் முதல் நாசரேத் வரை ஆண்டவர் வாழ்க்கை எவ்வளவு சாதாரணம்! ஆச்சரியமான தொன்றையும் அங்கே நாம் காண்பதில்லை. தச்சனாக வளர்ந்த நாசரேத்தில் அவரது அற்புதமோ, அதிசயமோ, அடையாளமோ ஒன்றுமில்லை. சாதாரண குடியானவனாகவே அவர்கள் நடுவில் சஞ்சரித்தார். இக்காலத்தில் தச்சனைத் தேடிப்போவதைப்போலவே, அவரவர் வேலை விஷயமாய் மனுஷர் அடிக்கடி அவரிடம் போனார்கள். அவரும் ஒரு வேலைக்காரனாகவே காணப்பட்டாரேயன்றி மனுஷர் பிரமிக்கத்தக்கதோற்றமாய்க் காணப்படவில்லை. ஆகிலும் அவரே மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள். தங்கள் நடுவில் வளர்ந்த பிள்ளையின் ரகசியத்தை பெற்றார் மாத்திரம் மங்கலாக அறிந்திருந்தார்கள். அவர் வாழ்வு பதினொன்றில் பத்துப்பாகம் மகா சாதாரண ஜீவியமே. இதன் ரகசியத்தை நாம் யோசிக்கவேணும். சாதாரணத்தை அற்பமாய் நினைக்கக்கூடாது. சாதாரணத்திலேதான் கடவுள் இருக்கிறார். மேட்டிமையான காரியங்களை நாடாதிருப்போமாக. சாதாரண ஏழை நிலைமையில் கடவுளைக் காண்பிப்போமாக.

**2. அடையாள வெளிப்படுத்தல்**

வெளிப்படுத்தல் வளருகிறது. அவர் தமது ஊழியத்தில் பிரவேசித்ததும், கானாவூர் கலியாணத்தில் தமது முதலாம் அடையாளத்தைச் செய்து தமது மகிமையை வெளிப் படுத்தினார். அவர் நடப்பித்த சகல அடையாளங்களுக்கும் இது ஆரம்ப அடையாளம். மறைவான தொன்றை வெளிப்படுத்தும் ரூபகாரத்துக்கு அடையாளம் என்று பேர்.

முப்பது வருஷமாக தமக்குள் மறைந்திருந்த தெய்வீகமகிமைக்கு அந்த அடையாளம் ரூபகாரமாயிருந்தது. உல்லாசமாக ஜனங்களைப் பிரமிக்கச் செய்வதற்காக, தமது சுய பெருமைக்காக ஆண்டவர் அற்புதம் செய்தவரல்ல. அவ்வாறு செய்யும்படி அதிகாரிகள் கேட்டபோது மகாவெறுப்போடு அவர்களைக் கடிந்து கொண்டார். அவர் செய்த அற்புதங்களைக் கவனிப்போமானால் மனுமக்களை ஆண்டுகொண்டிருந்த தீமைகளை நீக்கி ஆசீர்வதிக்கும் காருண்ய கிரியைகளாகவேயிருந்தன. அவ்வாறு நன்மை செய்வதோடு அவைகள் அவருடைய மகிமையை வெளிப் படுத்தும் சாதனங்களாகவுமாயிருந்தன.

### 3. ஆணை வெளிப்படுத்தல்

கடவுள் மகிமையில் பங்கு பெறமனுஷன் சிருஷ்டிக்கப் பட்டான். பாவம் அவனைக் கெடுத்தது. தேவசாயலும் தேவரூபமும் மங்கிமறைந்தன. பாவிகளை மகிமையில் சேர்க்க இந்த மனுஷன் வெளிப்பட்டார். பலத்த சோதனைகளும் கொடிய போராட்டங்களும் அவர் ஆத்மாவைச் சூழ்ந்து கொண்டன. ஆகிலும் சகலத்தையும் மேற்கொண்டு தேவசாயல் தேவரூபம் என்னவென்பதைத் தமது ஜீவியத்தில் விளங்கக் காட்டினார். மனுஷன் எப்படியிருக்கவேண்டும் என்று கடவுள் விரும்பினாரோ, அவ்வாறு பூரண மனுஷனாகப் பிழைத்தவர் இவர் ஒருவரே. அவரைக் கண்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஜீவியம் நிகரற்றது. உபதேசம் நிகரற்றது. கிரியைகள் நிகரற்றது. ஆ! இவர் யாரோ! எப்படிப்பட்டவரோ? என்று திகைத்தார்கள். ஆள் இன்னார் என்று தெரியவில்லை. அவர் தமது ஊழியத்தின் முடிவில் உயர்ந்த மலையிலேறி ஜெபிக்கையில், உள்ளான ஜோதி அவர் சரீரம் உடுப்பு யாவையும் பிரகாசிப்பித்தது. மின்சாரக் கம்பியின் பிரகாசம் அதன் மூடியை ஜோதி மயமாக்குவதுபோல, அவருக்குள்ளிருந்த தெய்வீக மகிமை அவர் சரீரமுழுவதையும் ஜொலிக்கச் செய்தது. இந்தக் காட்சியைக் கண்ட சீஷர் மூவரில் பேதுருவும் யோவானும் கடைசிவரை இதை மறக்கமுடியாமல்; "அவருடைய மகிமையைக் காண்டோம், அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே இருந்தது" என்றும், "நாங்கள் தந்திரமானகட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக்

கண்ணாரக் கண்டவர்களாகவே உங்களுக்கு அறிவித்தோம்" என்றும் எழுதி வைத்தார்கள்.

## 4. புதிய ஜீவனை வெளிப்படுத்தல்

ஆண்டவர் உயிர்த்தெழுந்தபின் தமது சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். அவர் உயிரோடெழும்புவார் என்று சீஷர் எதிர்பார்க்கவில்லை. உயிரோடெழுந்த ரட்சகர் தங்களைச் சந்தித்தபோதும் அவரை இன்னார் என்று கண்டுகொள்ளவும் முடியவில்லை. அதே ஆண்டவர்தான் மூன்று நாட்களுக்குமுன் தங்களோடிருந்தவர்தான். ஆனால் தோற்றத்தில் வித்தியாசம். உயிர்த்தெழுதலின் ஜீவன் ஓர் ரகசியமான புதிய ஜீவன். ஆகையால் தாம் உயிரோடிருப்பதை அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்தி வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது. அவர் தம்மை வெளிப்படுத்தும்போது அந்தந்த இடத்துக்கும் சமயத்துக்கும் ஏற்றபடி வெளிப்படுத்தினார். தோட்டத்தில் தோட்டக்காரனைப்போல, பிரயாணத்தில் பிரயாணியைப் போல, கடற்கரையில் செம்படவனைப்போல இவ்வாறு வெவ்வேறு ரூபமாய் அவர்களுக்குத் தம்மை வெளிப் படுத்தினார். அந்த நாற்பது நாட்களில் அவர் எங்கே போனார், எங்கே வந்தார் என்று கேட்பாருமுண்டு. அவர் எங்கும் போகவுமில்லை எங்கும் வரவுமில்லை. அவர்களோடு கூடவேதான் இருந்தார். அவர் தம்மை வெளிப்படுத்தினபோது மாத்திரம் அவரைக் கண்டதாகச் சந்தோஷித்தார்கள். தாம் சகல நாட்களிலும் கூடவேயிருப்பவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்காகவே இவ்வாறு அவர்களைப் பயிற்றுவித்தார்.

## 5. உள்ளத்தில் வெளிப்படுத்தல்

ஆண்டவர் தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தின போதிலும், அற்புத அடையாளங்களை வெளிப்படுத்தின போதிலும், தாம் தேவகுமாரன் என்னும் மகிமையை வெளிப்படுத்தினபோதிலும், தமது உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனை வெளிப்படுத்தினபோதிலும், அவர் தம்மை நமது உள்ளத்துக்கு வெளிப்படுத்தாவிட்டால் மற்ற யாவும் வீணாகும். கிறிஸ்து மார்க்கம் உண்டாவதற்கும் இடமில்லை. திருச்சபை ஸ்தாபிக்கப்படமாட்டாது. ஆகையால் சகல வெளிப்படுத்துதல் களிலும் பிரதானம். அவர் தம்மை நமக்குள் வெளிப் படுத்துவதே. இதை அநேகர் கவனிக்கிறதேயில்லை.

அப்படியிருந்து, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே வராமல் திருச்சபை உண்டாவதில்லை. கிறிஸ்து நமது உள்ளத்தில் வெளிப்படாமல் நாம் கிறிஸ்தவர்களாவதில்லை. ஆவியானவர் வந்தபோது கிறிஸ்துவே அடியார் உள்ளத்தில் வெளிப்பட்டார். இந்த நாளுக்காகவே ஆண்டவர் சகலத்தையும் சகித்தார். அவ்வாறு உள்ளத்தில் தம்மை வெளிப்படுத்துவதாக வாக்குப் பண்ணினார். "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவனுக்கு நான் என்னை வெளிப்படுத்துவேன். அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை அறிவீர்கள்" அப்படியே அடியார் அறிந்து மகிழ்ந்தார்கள். "இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார்கள். "தேவன் தமது குமாரனை எனக்குள் வெளிப்படுத்தினார்" என்பதே பவுலின் கிறிஸ்துமார்க்கம். ஆண்டவர் தம்மை நமக்குள் வெளிப்படுத்தியிருக்கிறாரா? கிறிஸ்துவை புறம்பே வைத்து அவரைப்பார்த்து நடப்பதல்ல. அவர் போதனையைக் கேட்பதல்ல, அவர் உதவியைத் தேடுவதல்ல, அவரே நமக்குள் பிழைக்கிறவராய், நமக்குள் போதிக்கிறவராய், நமக்குள் வல்லமையாய்க் கிரியை செய்கிறவராய் இருக்கிறாரா?

### 6. கடைசி வெளிப்படுத்தல்

ஆண்டவர் மகிமையாய் வெளிப்படப்போவதை அப்போஸ்தலரும் ஆதிச்சபையும் திட்டமாய் எதிர்பார்த்தார்கள். இந்த வெளிப்படுதலைப்பற்றி புதிய ஏற்பாட்டில் தாராளமாய்ப் படித்திருக்கிறோம். "அவர் வெளிப்படும்போது நாம் அவருக்கு ஒப்பாயிருப்போமென்றும்" "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவோம்" என்றும் "ஆடுகளின் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது" என்றும், "தமக்காகக் காத்துக்கொண்டிருக் கிறவர்களுக்கு ரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் வெளிப்படுவார்" என்றும் வாசிக்கிறோம். நாமாத்திரமல்ல, அடிமைத்தனத்துக்குட்பட்டிருக்கும் சர்வசிருஷ்டியும், தங்களுக்கும் விமோசனம் கிடைக்கும் என்று நம்பி, தேவபுத்திரர் வெளிப்படும் அந்த மகிமையின் காலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொணடிருக்கிறது. உலகத்துக்கு நல்ல காலம் தானாக வரப்போவதில்லை. கல்வி அறிவும், சாஸ்திரப் பெருக்கமும், சமுதாயவேலைகளும், ராஜ்ய தந்திரமும் அந்த நல்ல காலத்தைக் கொண்டுவரும் என்று

அநேகர் கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள். நாகரீகம் என்னும் விஷயம் மிலேச்சத்தனமாயிற்று. சாஸ்திர அறிவு அழிவுக் கேதுவாயிற்று. அலங்காரமென்பது அலங்கோலமாயிற்று. ஆலோசனைக் கூட்டங்கள் வீண்காலப் போக்காயிற்று, ஆண்டவர் மனுஷர் உள்ளத்தில் தம்மை வெளிப்படுத்துவதோடுகூட, சகல இடறல்களும் அக்கிரமங்களும் அகற்றப்பட்டு, நமது சரீரமீட்பாகிய மறுரூப மகிமையை நாம் பெற்றுக்கொள்வதற்கும், தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு தேவசித்தமே செய்யப்படுவதற்கும், ஆண்டவர் வெளிப்படாமல் முடியாது.

## 25. கடவுள் நினைவுகள்

***"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல" (ஏசா. 55:8).***

திரித்துவம் என்பது கடவுளில் மாத்திரமல்ல, ஆராய்ந்து பார்த்தால் அநேகமாய் அது எங்குமிருப்பதைக் காணலாம். மறைவான வேர், காணப்படும் மரம், நாம் அனுபவிக்கும் கனிகள் இவை மூன்றும் சேர்ந்தே விருட்சமாகிறது. ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் சேர்ந்தவனே மனுஷன். கடவுள் ஒருவர். அவரை பிதா, குமாரன், ஆவி என்றழைக்கிறோம். நினைவு, வார்த்தை, செய்கை இம்மூன்றையும் கவனிக்கும்போது பிதா, குமாரன், ஆவிக்கு ஒத்திருக்கின்றன. நினைவு மறைவானது. ஒருவரும் அதைக் காணமுடியாது. அந்த நினைவு வார்த்தையின் மூலமாய்த் தன்னை வெளிப்படுத்துகிறது. வார்த்தை புறப்பட்டபின் காரியங்கள் நடக்கின்றன. இந்தக் காரியங்களை நாம் அனுபவத்தில் காண்கிறோம். இந்தக் காரியங்கள் ஆதியில் நினைவிலே மறைந்திருந்தன. வார்த்தையில் வெளிப்பட்டன. கிரியையில் நிறைவேறின. சிருஷ்டிப்பு மீட்பு இவைகளைப்பற்றிய ஆலோசனை, நினைவுகள், பிதாவுக்கே உரியன. அந்த மறைவான நினைவுகள் ஆலோசனைகள் "வார்த்தை"யாகிய குமாரனில் வெளிப்பட்டன. வார்த்தை நினைவுகளில் வெளிப்படுத்துவதுபோல, குமாரன் மூலமாய் பிதாவின் நினைவுகள் எப்போதும் வெளிப்பட்டபடியால் அவருக்கு "வார்த்தை" என்னும் நாமம் உண்டாகிறது. இவ்வாறு குமாரன் மூலமாய் வெளிப்பட்ட பிதாவின்

நினைவுகளை நிறைவேற்றி வைப்பவர் ஆவியானவர். சிருஷ்டிப்பின் வேலைகளை நிறைவேற்றுகிறவரும், ரட்சிப்பின் கிரியைகளை விசுவாசிகள் இருதயங்களில் பலிதப்படுத்து கிறவரும் ஆவியானவரே. செய்கை ஆவிக்குரியது. மூன்று தேவர்கள் இல்லை. கடவுள் ஒருவரே. அவர் ஆவியாயிருக் கிறார். மனுஷன் நினைக்கிறவனும், பேசுகிறவனும், பேசினதை முடிக்கிறவனுமாயிருக்கிறான். மனுஷன் ஒருவனே. மனுஷனைப் பற்றிய மூன்று சாஸ்திரங்கள் உண்டு. சரீரக் கூறுபாடுகளின் சாஸ்திரம். மனோசாஸ்திரம். ஆவிக்குரிய சாஸ்திரம். ஆவிக்குரிய சாஸ்திரமே கிறிஸ்து மார்க்கம். மனதும் சரீரமும் ஆவிக்குக் கீழடங்கவேண்டும். இப்போது நினைவுகளைப்பற்றி சில குறிப்புகளைக் கவனிப்போம்.

நமது நினைவுகளைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நினைவுகளே மனுஷனை உண்டாக்குகின்றன. நினைவு எப்படியோ அப்படியே மனுஷன் இருக்கிறான். நினைவாகிய பிதா எப்போதும் நல்லவராயிருப்பதாலேயே அவரது காரியங்கள் யாவும் நன்மையாயிருக்கின்றன. நமது நல்ல நினைவுகள், நல்ல வார்த்தைகளாக வெளிப்பட்டு, நல்ல செய்கைகளாக விளங்கும். அதுபோலவே தீய நினைவும். நல்ல கனிகள் வேண்டுமானால் நல்லமரம் வேண்டும். நமது நினைவுகளை யாரும் அறிய முடியாததால், நினைவுகளைப் பற்றி நாம் ஜாக்கிரதையாயிருக்கிறதில்லை. ஆகிலும் எப்பொழுதும் நினைவுகள் மறைந்திருப்பதில்லை. நாம் அறியாமலே திடீரென நமது வார்த்தைகள் அவைகளை வெளிப்படுத்தும். கிரியையிலும் காணப்படும். மனுஷர் அறியாவிட்டாலும் கடவுள் அறியாத நினைவுகள் உண்டோ? உன் நினைவுகளை நான் அறிந்திருக்கிறேன் என்கிறார். “என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல” என்கிறார். கடவுள் நினைவும் மனுஷன் நினைவும் ஒன்றல்ல. கடவுள் நினைவுக்கும் கடவுளற்ற நினைவுக்கும் பூமிக்கு வானம் எவ்வளவு தூரமாயிருக்கிறதோ அவ்வளவு வித்தியாசமிருக் கிறது.

மனதை நல் விஷயத்தில் பழக்குவது நல்லது. யோசிக்கிற வழக்கம் அநேகருக்கு இல்லை. காற்றில் இங்குமங்கும் அலசடிப்படுகிற துரும்புகளைப்போல், மனஉறுதியின்றி, சுயயோசனையின்றி மற்றவர்களால் இழுப்புண்டு

அலைகிறார்கள். இன்னும் அநேகருடைய நினைவுகள் பிரயோஜனமற்ற வீண் நினைவுகள். ஆழமாய் யோசிக்கிறவர்களாலேயே இந்த உலகம் நடந்தேறுகிறது. ரெயில் வண்டி ஓடுவதையும், கப்பல் போவதையும், ஆகாய விமானம் பறப்பதையும் கண்டு சந்தோஷப்படுகிறோம். ஆனால் மனுஷனுடைய புத்தி, யோசனையிலிருந்து அவைகள் உண்டாயினவென்பதை நாம் உணருகிறோமா? பூமிக்குரிய காரியங்களில் என்றாலும், ஆவிக்குரிய காரியங்களில் என்றாலும் யோசிக்கிற மனுஷர் இல்லாமற்போனால், இந்த உலகம் என்னத்துக்கு ஆகும்? 100–க்கு 8–பேர் யோசிக்கிறதின் பலனாக 92 பேர் உலகில் பிழைக்கிறார்கள். காரியங்களை யோசித்து ஆராயும்படிக்கே கடவுள் நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார். நமது தலை தொப்பிகள் தலைப்பாகை மாட்டும் மரக்கட்டையல்ல. புத்திமான் பலவானாவான். காரியங்களை யோசிக்கிறவன் ஞானியாவான். யோசனை விலையேறப் பெற்றது. 10–ரூபாய்க்கு இரும்பு வாங்கின மனுஷன் தன் புத்தியால் அதை லாடம் செய்து 40–ரூபாய் சம்பாதிக்கிறான். இதில் இரும்பு 10–ரூபாய், புத்தி சம்பாதித்தது 30 ரூபாய். அந்த 10 ரூபாய் இரும்பைச் சுத்தி செய்வானானால் 100 ரூபாய் சம்பாதிப்பான். இதிலே இரும்பு 10 ரூபாய், புத்தி சம்பாதிப்பது 90 ரூபாய். இன்னும் ஆழமாய் யோசித்துப் பிரயாசப்பட்டு அந்த இரும்பைக் கடிகார வில்களாக செய்வானானால் 500 ரூபாய் சம்பாதிப்பான். இதிலே இரும்பு 10 ரூபாய், புத்தி சம்பாதித்தது 490 ரூபாய். ஆவிக்குரிய ராஜ்யத்தின் பிரமாணமும் இது போலவே. “உள்ளவனுக்குக் கொடுக்கப் படும், பரிபூரணமும் அடைவான்” கிறிஸ்துவுக்கடுத்த காரியங்களை ஆழமாய் யோசித்து எழுதப்படும் புஸ்தகங்கள் அநேகருக்கு அருஞ்செல்வமாக விளங்குகின்றன. ஆழ்ந்த யோசனையும் புத்தியும் சேராத போதனைகள் தற்காலத்தில் உபயோகமற்றவை. ஆகையால் நமது யோசனை, நினைவுகளை நல்வழியில் விருத்தி பண்ணவேண்டும்.

## நமது நினைவுகளை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்

### 1. தீயநினைவுகள்

“அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே” (ஆதி. 6:5). அக்கிரமம் பூமியிலே பெருகினது. காரணமென்ன? வேர் சரியில்லை. பொல்லாத

நினைவுள்ள மனுஷரால் பூமிக்குக்கேடே. நாடு நன்றாயிருக்கவேண்டுமென்றால் நமது நினைவுகள் நன்றாயிருக்கவேணும். மனம்போலதான் வாழ்வு. துன்மார்க்கரின் யோசனைகளை கடவுள் அறிவார். அவர்களைத் தப்பவிடமாட்டார். தேவபக்தர்களின் நினைவுகளையும் அறிவார். அவைகளை வாய்க்கச் செய்வார். மனுஷருடைய பொல்லாத நினைவுகளை கடவுள் நியாயந்தீர்ப்பார். கடவுளுக்கு விரோதமாகவோ, மனுஷருக்கு விரோதமாகவோ தீய நினைவுகளை வைத்திருக்கிறவர்கள் உருப்படமாட்டார்கள். அரிபிளவையைப்போல அவைகள் அவர்கள் வாழ்வை அழிக்கும். தீயநினைவுள்ளவன் தனக்கே சத்துருவாயிருக்கிறான்.

### 2. போராட்டநினைவுகள்

*"நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளினால் குந்திக் குந்தி நடப்பீர்கள்?" (1 இரா. 18:21).* ஆண்டவரை அறியாத பிள்ளைகளிடத்தில் இந்தப் போராட்டம் காணப்படலாம். இது நன்மை, இது தீமை என்று அவர்களுக்குத் தெரியும். தீமைக்கு முற்றிலும் சாய்கிறதுமில்லை. நன்மைக்கு முற்றிலும் சாய்கிறதுமில்லை. இதுவும் வேண்டும், அதுவும் வேண்டும். இந்த இரு நினைவுகளாலும் சஞ்சலப்படுகிறார்கள். ஒரு நொண்டி குந்திக் குந்தி நடப்பதுபோல அவர்கள் ஜீவியமும் இருக்கிறது. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யமுடியாது" என்றும் ஆண்டவர் திருவாக்கை உணர்ந்து தீமையைவிட்டு நன்மையை இவர்கள் பிடிக்கவேணும். இதே போராட்டம் தாவீதுக்கும் இருந்தது. "வீண் நினைவுகளை நான் வெறுத்து உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்" என்று சொன்னார்.

### 3. நினைவுகளின் பொருத்தம்

கடவுள் நினைவோடு நமது நினைவு பொருந்துவதே நமக்கு ஆசீர்வாதம். "எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." என்று பவுல் சொன்னதோசரி. கடவுள் எண்ணம் கிறிஸ்துவில் வெளிப்பட்டது. அந்த எண்ணத்துக்கு நமது எண்ணம் கீழடங்குவதே நமக்கு ரட்சிப்பு. இதுவே நமது இருதய சமாதானத்துக்கும் கடவுளால் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் வழி.

# 26. கடவுள் ராஜ்யம்

***"எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மாற். 10:15).***

**1. தேவராஜ்யம் என்றால் என்ன?**

இது ஆதிமுதல் அறிவிக்கப்பட்டதும், வாக்குப்பண்ணப் பட்டதும், எதிர்பார்த்ததுமான ராஜ்யம். ஸ்நானகன் பரலோகராஜ்யம் சமீபம் என்று அறிவித்தான். நமதாண்டவரும் தேவராஜ்யம் சமீபித்திருக்கிறதென்று பிரஸ்தாபித்தார். ராஜாவாகிய கிறிஸ்து மனுமக்கள் நடுவில் வந்தபோதே ராஜ்யமும் அவர்கள் மத்தியில் வந்ததெனக்கூறலாம். அதற்குரிய அடையாளங்களும் கிறிஸ்துவின் கிரியைகளில் வெளிப்பட்டன. என்றாலும் ராஜ்யம் இன்னமும் ஸ்தாபிக்கப் படவில்லை. ஆண்டவரது சீஷர்களும் புறப்பட்டுப்போய் "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றே பிரசங்கித்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் ஆண்டவர் தம்மைச் சூழ்ந்து நின்றவர்களைப் பார்த்து: "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவராஜ்யம் பலமாய் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" என்று கூறினார். ராஜ்யம் வரவேண்டும் என்பதைக் காண்கிறோம். ஆண்டவர் சொன்னபடியே பெந்தெகொஸ்தே நாளில் ராஜ்யம் வந்தது. பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் இருதயங்களில் தேவராஜ்யத்தைப் பலத்துடன் கொண்டுவந்தார். அவர்கள் புறப்பட்டு இந்த "ராஜ்யத்தின் சுவிசேஷத்தை" எங்கும் கூறி அறிவித்தார்கள். தேவராஜ்யம் சமீபமென்றாவது, வருகிற தென்றாவது கூறாமல் வந்திருக்கிறதென்று கூறினார்கள்.

**2. தேவராஜ்யம் வந்ததென்பதற்கு அடையாளங்கள் எவை?**

மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரியவர்களாகமாறி, ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தார்கள். முதலாவது, ராஜாவைத் தங்களுக்குள் கண்டார்கள். முன்னே புறம்பே சரீரத்திலிருந்த கிறிஸ்து, இப்போது தமது ஆவியின் மூலமாய்த் தம்மை அவர்களுக்குள் வெளிப்படுத்தினார். "அந்நாளில் நான் உங்களுக்குள் இருப்பதை அறிவீர்கள்" என்று ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறினது. குமாரனோடுள்ள உள்ளான

ஐக்கியத்தால் பிதாவையும் கண்டடைந்தார்கள். இதுவே அவர்கள் கண்ட முக்கியமான ஆசீர்வாதம். கிறிஸ்து அவர்களுக்குள் பிரத்தியட்சமானதே தேவராஜ்யம் பலமாய் வந்ததென்பதற்கு அடையாளம். இரண்டாவது, ராஜாவின் ஆளுகை. "கர்த்தரின் ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது." முன்னே சீஷர்களிடத்தில் எத்தனையோ குறைவுகளும் பலவீனங்களும் காணப்பட்டன. தேவ ஆளுகை அவர்களுக்குள் வந்தபோது சகலமும் மாறினது. பரத்தில் தேவசித்தம் செய்யப்பட்டதுபோல, அவர்கள் ஜீவியத்திலும் செய்யப்பட்டது. "உமது ராஜ்யம் வருவதாக, உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்படி ஆண்டவர் அவர்களுக்குக் கற்பித்திருந்தார். ராஜ்யம் அவர்களுக்குள் வந்தபோது தேவசித்தமும் செய்யப்பட்டது. தேவஆவியானவர் அவர்களைப் பூரணமாய் ஆண்டு நடத்தினார். அவர்கள் தேவசித்தப்படியே பிழைத்தார்கள். தேவராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறதென்பதை அனுபவத்தில் கண்டு ஆனந்தித்தார்கள். மூன்றாவது அடையாளம் வல்லமை. அதாவது உன்னதபலம். தேவராஜ்யம் வெறும் பேச்சில் அல்ல, தேவபலத்திலே என்பது அவர்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. ஆண்டவர் தெரிந்துகொண்ட சீஷர்கள் யார்? உலகத்தில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி அவர் தெரிந்துகொண்ட கருவிகள் எப்படிப்பட்டவர்கள்? ஞானிகளா? பிரபுக்களா? ஐசுவரியவான்களா? தத்துவ சாஸ்திரிகளா? ராஜகுடும்பத்தைச் சார்ந்தவர்களா? இல்லை. ஏழைகளான செம்படவர். கடவுள் இந்த அற்பமான பாத்திரங்களைக் கொண்டு உலகத்தில் நிறைவேற்றியிருக்கிற மகத்துவமான மாறுதல் எவ்வளவு! இது தேவராஜ்யத்தின் பலமேயல்லாமல் மற்றப்படியல்ல. எத்தனையோ ஆயிரமாயிரமான பாவிகள் சாத்தான் கையிலிருந்து விடுவிக்கப்பட்டு பரிசுத்தவான்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்! தேவராஜ்யத்தின் பலம் இதிலே விளங்குகிறதல்லவா?

### 3. தேவராஜ்யத்தில் பிரவேசிப்பதென்றால் என்ன?

பிரவேசிப்பது என்பது சுதந்தரிப்பது அல்லது அனுபவிப்பது என்று அர்த்தம். ஒருசேனை ஒரு பட்டணத்தில் பிரவேசித்தால் பட்டணத்தைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள் என்று அர்த்தம். இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்தபோது

அதைச் சுதந்தரமாக்கிக்கொண்டார்கள். நோவாவும் அவர் குடும்பமும் பேழைக்குட் பிரவேசித்தபோது பேழைக்குள் இருந்தவைகளை அனுபவித்தார்கள். தேவராஜ்யத்தில் பிரவேசிக்கும்போது, ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறோம். அதாவது முன் கவனித்தபடி தேவசமுகம் கிறிஸ்துவின் மூலமாய் ஆவியினாலே நமது உள்ளத்தில் பிரத்தியட்சமாகிறது. தேவ ஆவியானவர் தம்மை ஆளுகைசெய்வதால் நாம் தேவசித்தப்படி பிழைக்கிறோம். உன்னத தேவபலம் நமக்குக் கிடைப்பதால் நமது ஜீவியம் மாற்றப்பட்டு ஊழியத்தில் பலன் காண்கிறோம். இவ்வாறு ராஜ்யத்துக்குரிய ஆசீர்வாதங்களை நாம் அனுபவிப்பதே நாம் ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதாகும். தேவ ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதென்பதை அநேகர் மரித்தபின் மோட்சம் சேருவதாக நினைக்கிறார்கள். அப்படியல்ல, சீஷர்கள் உயிரோடிருந்தபோதே, தேவராஜ்யத்தின் பாக்கியங்களை அனுபவித்தார்கள். நீதியும் சமாதானமும் தேவ ஐக்கியமும் பரிசுத்தாவியால் வரும் சந்தோஷமும் நமக்கு இப்போதே கிடைக்கின்றன.

### 4. ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன?

ராஜ்யத்தை ஏற்றுக்கொள்கிறவனே அதில் பிரவேசிக்கிறவன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இதனாலே பிரவேசிக்குமுன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது தெரிகிறது. ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது, பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே. நாம் ராஜ்யத்துக்குள் பிரவேசிக்குமுன் ராஜ்யம் நமக்குள் பிரவேசிக்கவேண்டும். நாம் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்குமுன், அதை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். ஒன்று எனக்குச் சொந்தமாகாவிட்டால் நான் அதை அனுபவிப்பதெப்படி? ஆண்டவர்கொடுக்கிறார், நாம் நன்றியுடன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். சீஷர்கள் தங்கள் சுயபிரயாசத்தால் ரா்ஜ்யத்தைத் தங்களுக்குள் கொண்டு வந்தவர்கள் அல்ல. அவர்கள் கிறிஸ்துவின் வாக்கை நம்பி ஆவலோடு காத்திருந்தார்கள். பிதா கொடுக்க அவர்கள் பெற்றுக்கொண்டு ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தார்கள். பிதா கிருபையாய்க் கொடுக்க அதை நாம் விசுவாசத்தால் பெற்றுக்கொள்ளுகிறோம். "பயப்படாதே சிறுமந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்."

இவ்வாறு அவர் கொடுப்பதும் நாம் பெற்றுக்கொள்வதும் மெய்யானால் ஏன் அநேகர் இந்த ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாதிருக்கிறார்கள்? கடவுள் பக்கத்தில் தடையில்லை. புஷ்பங்களை அலங்கரித்து அழகு பார்ப்பவர் தமது பிள்ளைகளை ஆவியினால் அலங்கரிக்கமாட்டாரா? தடை நம்மிடத்தில் தான் இருக்கிறது. தேவராஜ்யமாகிய அவரது ஆளுகை நமக்குள் வர நாம் இடங்கொடுக்கிறதில்லை. நமது சுயபலம், சுயஞானம், சுயநம்பிக்கை நமது இருதயத்தின் வாசலை அடைத்துவிடுகின்றன. ராஜ்யத்தின் பிரகாசம் உட்பிரவேசிக்க வழியில்லை. ஆகையால்தான் ஆண்டவர் "சிறுபிள்ளையைப்போல" ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றார். ஒரு அரசனுக்குப் பிறந்த பிள்ளை அந்த ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளியாகிறான். அந்தப் பிள்ளைக்கு அதுபிறப்புச் சுதந்தரமாயிருக்கிறது. அதற்கென்று அவன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்கு ராஜ்யத்தின் மதிப்பும் சிறப்பும் இன்னும் தெரியாதிருக்கலாம். என்றாலும் அந்தச் சிறுவயதிலே ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுகிறான். வளரவளர அவன் ஏற்றுக்கொண்ட ராஜ்யத்தின் மகிமையை அறிவான். சிறுபிள்ளைகளுக்கு நம்பும் குணமும் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளும் சுபாவமும் உண்டு. ஆவியினால் மறுபடிபிறந்த பிள்ளைகளே ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகள். பிதாவின் ராஜ்யம் பிள்ளைகளுக்குரியது. சிறுபிள்ளை களைப்போல நமது பலவீனத்தை உணர்ந்து, தேவவாக்கை நம்பி, நமது இருதய வாசலைத் திறக்கும்போது, ஆவியானவர் திடீரென நமக்குள் பிரவேசித்து நம்மை ஆண்டுகொள்கிறார். தேவராஜ்யம் இருதயத்தில் ஸ்தாபிக்கப்பட்டு தேவஆளுகை நடக்கிறது. ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கிறோம்.

## 27. முடிவில்லாக்கேள்வி

***"கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?" (மத். 22:42).***

ஆண்டவர்பேச்சில் குற்றங் கண்டுபிடிக்கவேண்டு மென்பதே சத்துருக்கள் தீர்மானம் வரியைப்பற்றிக் கேள்வி கேட்ட ஏரோதியரை வாயடைத்தார். உயிர்த்தெழுதலைப்

பரியாசம்பண்ணின சதுசேயரை வாயடைத்தார். பிரதான கற்பனைகளை எதுவென்று கேட்ட நியாய சாஸ்திரிக்கு உத்தரவு சொன்னார். அச்சமயம் கூடியிருந்த பரிசேயரைப் பார்த்து: கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன் என்று கேட்டார். தாவீதின் குமாரன் என்றார்கள். அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினால் அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறதெப்படி? நான் உமது சத்துருக்களைப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னாரென்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க அவனுக்கு அவர் குமாரனாயிருப்பதெப்படி என்று கேட்டார். பரிசேயர் திகைத்து ஒன்றுமே பேசமுடியவில்லை. கிறிஸ்துவைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்கிற கேள்வி எக்காலத்துக்கும் உரியது. ஆதிமுதல் இதுவரை அவரைஆராய்ச்சி செய்யாத வர்கள் இல்லை. அவரைப் பூரணமாய் அறிந்தவர்களுமில்லை. வேதசாஸ்திரிகளுக்குள் இது முடிவில்லா விசாரணையா யிருக்கிறது.

மனுஷர் தம்மை இன்னாரென்று அறியவேண்டு மென்பதே கிறிஸ்து வெளிப்பட்ட நோக்கம். அவர் ஜீவியத்தைப் பார்த்து அவரை மெச்சுக்கொள்ளும்படி அல்ல. அவர் உபதேசத்தைக் கேட்டு ஆச்சரியப்படும்படி அல்ல. அவரது அற்புத அடையாளங்களைக்கண்டு பிரமிக்கும்படி அல்ல. இவைகள் மூலமாய் தம்மை இன்னாரென்று அறிந்து கொள்ளவேண்டுமென்பதே அவர் நோக்கம். அந்த அறிவே நமக்கு நித்திய ஜீவன் அவரை இன்னாரென்று அறியும் போதுதான், அவரது மற்றக்காரியங்களின் மேன்மையையும் ரகசியத்தையும் நாம் காணக்கூடும். அவரை இன்னாரென்று அறிந்தால்தான் அவர் சிலுவையின் அர்த்தமும் மகத்துவமும் விளங்கும்.

ஆண்டவர் தமது தெய்வீகத்தைப்பற்றியும் நமக்கும் பிதாவுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் ஊழிய ஆரம்பத்தில் சொல்லாததால், அந்த உணர்ச்சியும் அறிவும் அவருக்குப் படிப்படியாகவே வந்ததென்பது வேதசாஸ்திரிகளில் பலருடைய அபிப்பிராயம். ஆண்டவருக்கும் ஆலோசனை சொல்லக்கூடிய வேதசாஸ்திரிகள் தோன்றியிருக்கிறார்கள்.

ஞானக்களஞ்சியமாகிய அவரையே திருத்தவேண்டுமானால் அவருக்கும் மேற்பட்டவர்களாகத்தானே இருக்கவேண்டும். ஆண்டவர் ஆரம்பத்தில் தம்மை தேவகுமாரன் என்று வெளிப்படையாகச் சொல்லாதது உண்மைதான். அதற்குக் காரணமுண்டு. அவர் மற்ற மனுஷரைப்போல் சாதாரண மனுஷனாகத்தோன்றினார். மேலும் மற்ற மனுஷரைப் பார்க்கிலும் ஏழையாகவும் இருந்தார். இதை எல்லாரும் திட்டமாய் அறிவார்கள். அப்படியிருக்க அவர் அவர்களைப் பார்த்து: நான் கடவுளாக்கும், இப்படி மனுஷனாக வந்திருக்கிறேன். உங்களைச் சிருஷ்டித்தவர் நான் தான் என்று சொல்லுவாரானால் எப்படியிருக்கும்? எல்லாரும் ஏகமாய்ச் சேர்ந்து அவரைப் பரியாசஞ்செய்து இவன் கடவுளாம், கடவுள் குமாரனாம். இவனைப்போல் பைத்தியக்காரன் உண்டா என்று சொல்லுவார்கள். அதுமாத்திரமா, அவர் பேசுவதை ஒருவனும் கேட்கமாட்டான். முதற்கோணல் முற்றுங்கோணலாகும். தமது ஊழியத்துக்குத் தாமே முட்டுக்கட்டையைப் போட்டவராவார். ஆகையால் ஆரம்பத்தில் தம்மை இன்னாரென்று அவர் வெளிப்படையாகக் கூறாதது அவருடைய ஞானமே. பன்னிரண்டு வயதுப் பையனாயிருக்கும்போதே தமக்கும் பிதாவுக்குமுள்ள சம்பந்தத்தை உணர்ந்து பேசினவருக்கு அவர் பெரியவரானபோது தாம் யாரென்று தெரியாதிருக்குமா? தம்மை இன்னாரென்று அவர் அறிந்திருந்தார், ஆனால் அதை ஆரம்பத்தில் அறிவிக்கவில்லை.

மனுஷர் தாங்களாகவே அதைக் கண்டுபிடிக்கவேண்டும் என்பது அவர் தீர்மானம். அவருடைய தெய்வீக ரகசியம் சொல்லிக்கொடுப்பதால் வரமாட்டாது. அவர் சொன்னாலும் அதை நம்பவுமாட்டார்கள், ஏற்றுக்கொள்ளவுமாட்டார்கள். இது மனுஷன் தானாகவே யூகித்து அறியவேண்டிய காரியம். அவர்கள் தாங்களே கண்டறியும்படி விட்டுவிட்டார். ஜனங்கள் மத்தியில் மாசற்ற பரிசுத்தராகச் சஞ்சரித்தார். அவர் நிகரற்ற ஜீவியத்தைக் கவனித்தார்கள். எல்லா இடங்களிலும் கூடிவந்த ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்தார். அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். ஒருவனும் ஒருக்காலும் இவர் பேசுவதுபோல் பேசினதில்லை என்றார்கள். அவர்செய்த அற்புத கிரியைகளைக் கண்டு பிரமித்துப் போனார்கள். மகாபெரிய தீர்க்கதரிசி நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றார்கள். ஊழியத்தில் மிகுதியான

காலத்தை இதே போக்கிலே நடத்திக்கொண்டு போனார். நாம் இன்னாரென்பதை ஜனங்கள் தாங்களாகவே யூகிக்கவேணு மென்பது ஆண்டவருடைய தீர்மானம். அவர் எதிர்பார்த்த படியே அவரது ஜீவியமும், உபதேசமும், கிரியைகளும் ஜனங்களுக்குள் விசாரணையை உண்டாக்கின. இவர் யாரோ? இந்த மனுஷன் எப்படிப்பட்டவரோ? என்று பலதிறத்தாரும் கேட்க ஆரம்பித்தார்கள். அவரைப்பற்றிய பேச்சே எல்லார் வாயிலும் இருந்தது. ஒருதிறத்தார் இவர் எலியா என்றார்கள். மறுதிறத்தார் இவர் எரேமியா என்றார்கள். மற்றவர்கள் யோவான்ஸ்நானகன் எழுந்து வந்துவிட்டான் என்றார்கள். வேறுசிலர் இவர் பூர்வகாலத்து தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றார்கள். இவ்வாறு எங்கே பார்த்தாலும் இவர் யாராயிருக்கலாம் என்பதைப்பற்றியே விசாரணை நடந்தது. ஆனால் ஒன்று நிச்சயம். அவரைச் சாதாரணமான மனுஷன் என்றுசொல்ல அவர்களால் முடியவில்லை. இப்படிப்பட்ட விசாரணை ஜனங்களுக்குள் தானாகவே உண்டாகவேண்டு மென்பதே ஆண்டவர் எதிர்பார்த்த காரியம். சீஷர்கள்கூட அவரைத் திட்டமாய் அறிந்துகொண்டவர்கள் அல்ல. இவர் யாரோ? எப்படிப்பட்டவரோ? என்பது தான் அவர்கள் விசாரணையுமாயிருந்தது. பிலிப்பு செசரியாவின் திசைகளில் அவர்கள் போனபோது ஆண்டவர் சீஷர்களைப் பார்த்து, பலரும் பலவிதமாய்ப் பேசிக் கொள்ளுகிறார்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, பேதுருவும் மற்றவர்களும்: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்டார்கள். ஆனால் இது அவர்கள் அறிந்துசொன்ன காரியமல்ல. பிதா சொல்லிக்கொடுத்துச் சொன்னதேயன்றி அனுபவத்திலிருந்து சொன்னதல்ல. கிறிஸ்து இன்னாரென்பதைக் கடைசிவரை சீஷர்களும் அறிந்தவர்கள் அல்ல. ஆண்டவருடைய காரியம் அதிகாரிகளுக்கும் திகைப்பை உண்டுபண்ணிற்று. அவர் நிகரற்ற ஜீவியத்தையோ, உபதேசத்தையோ, கிரியைகளையோஅவர்கள் மறுக்கமுடியாது. ஆனால் அவர்மீதுள்ள பொறாமையினால் வேறு வியாக்கி யானம் செய்தார்கள். இவன் சாத்தானைக் கைவசமாக்கி இப்படிப்பட்ட பலத்த காரியங்களைச் செய்கிறான் என்றார்கள்.

இவ்வாறு எங்கும் தீராத விசாரணை நடந்த சமயத்தில் ஆண்டவர் தம்மை இன்னாரென்று வெளிப்படுத்த ஆரம்பித்தார். நான் பிதாவிடமிருந்து புறப்பட்டுவந்தேன். நான்

பேசுவது, செய்வது யாவும் பிதாவின் செயல்களே. நானும் பிதாவும் ஒன்று. வழியும் சத்தியமும் ஜீவனும் நானே. வானத்திலிருந்த வந்த ஜீவ அப்பம் நானே. நல்ல மேய்ப்பன் நானே. முட்செடியில் மோசேக்குத் தோன்றினவர் தம்மை "நானே நான்" என்று அறிவித்தார். கிறிஸ்து யூதரைப் பார்த்து: நானே அவரென்று நீங்கள் நம்பாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார். ஆபிரகாம் உண்டாவதற்கு முன் நான் இருக்கிறேன் என்றார். கடைசி விசாரணையில் தாம் தேவகுமாரன்தான் என்றும், தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பவர் என்றும் பகிரங்கமாக அறிக்கையிட்டார். ஆனால் ஏற்கனவே பகையும் பொறாமையும் நிறைந்த அதிகாரிகளுக்கு ஆண்டவர் தம்மை இவ்வாறு வெளிப்படுத்தினது நன்மையாயிராமல், அவர்கள் மூர்க்கங்கொண்ட அவரைக் கொலை செய்வதற்கே ஏதுவாயிற்று. உள்ளத்தில் அறியவேண்டிய கிறிஸ்துவின் தெய்வீகம் சொல்லிக் கொடுப்பதால் வராது.

சீஷர்களாவது இன்னும் அவரைஅறிந்தவர்கள் அல்ல. வியாழன் இரவில் ஆண்டவர் பேசும் சமயத்தில் பிலிப்பு ஒரு கேள்வி கேட்டார். ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும். அதுவே எங்களுக்குப் போதும். பிதாவைப்பற்றியும் பிதாவுக்கும் தமக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றியும் ஆண்டவர் திரும்பத்திரும்பப் பேசியதே இந்த கேள்விக்குக் காரணம். சீஷர் தம்மை இன்னும் அறியாதிருப்பதை ஆண்டவர் கண்டு துயரத்தோடு: பிலிப்புவே நான் இவ்வளவு காலம் உங்களுடனே கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிக் கேட்கலாம்? ஆவியாயிருக்கிற பிதாவை நான் எப்படிக் காட்டமுடியும்? அன்பை, ஞானத்தை, வல்லமையை, கிருபையை, அனுதாபத்தை நான் எப்படி உன் கண்களுக்குக் காட்டுவது? ஆவிக்குரிய காரியங்களைக் கண்ணால் காண்பதெப்படி? அவைகளைக் காண வேண்டுமானால் சரீரத்தில்தான் காணவேண்டும். என்னில் நீ காண்கிற அன்பு, கிருபை, மன்னிப்பு, அனுதாபம், வல்லமை பிதாவை உங்களுக்குக் காண்பிக்கின்றன. நீ அதை அறியாதிருக்கிறாய். என்னை அறிவதே பிதாவை அறிவது. நான் என் பிதாவிலும் பிதா என்னிலும் இருப்பதை நம்புங்கள். அப்படி நம்புவது கஷ்டமாயிருந்தால் என் கிரியைகளினி

மித்தமாவது நம்புங்கள். நான் பிதாவிடம் போய் ஆவியை உங்களுக்கு அனுப்புவேன். அப்போது நம்பவேண்டிய கஷ்டமிராது. நான் யார் என்பதை நீங்கள் அனுபவத்தில் அறிவீர்கள் என்றார். கிறிஸ்து தமது ஆவியால் தம்மை நமது உள்ளத்துக்கு வெளிப்படுத்தினாலன்றி அவருடைய தெய்வீகத்தை நாம் அறியமுடியாது. இது ஆண்டவருக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் சீஷர்கள் தம்மை அறியவில்லையே என்று ஆண்டவர் கோபித்துக்கொள்ளாமல் பெந்தெகொஸ்தே நாளுக்காக வாஞ்சையோடு காத்திருந்தார். அந்த நாள் வரும்வரை எவ்வளவோ நெருக்கப்பட்டர். அடியார் ஆவியினால் நிறைந்தபோது கிறிஸ்துவே அவர்களுக்குள் வந்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். முன்னே வெளியிலிருந்து என்னை யாரென்று நினைக்கிறீர்கள் என்று கேட்டவர் இப்போதே அவர்களுக்குள்ளே வந்து தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தினார். வெளியே மாதிரியாக நடந்தவர் உள்ளே பலமாயிருந்து நடத்தினார். வெளியேயிருந்து போதித்தவர் உங்களுக்குள் தேவரகசியங்களை வெளிப் படுத்தினார். ஆச்சரியமான மாறுதல். "பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்கிற கேள்வி ஒழிந்தது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"என்னும் வாக்கு நிறைவேறினது. பொதுவாய் எல்லாரும் இயேசுவை கர்த்தரென்றும் கடவுளென்றும் சொல்லுவார்கள். இது ஞானோபதேசப்பாடம். விசுவாசப்பிரமாணப் பழக்கம். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தர் "என்று ஒருவனும் அறியவும் முடியாது. உண்மையாய்ச் சொல்லவும் முடியாது." இந்த அனுபவ அறிவு அநேகருக்கில்லை.

# 28. தோமா அறிக்கை

**"தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்" (யோவா. 20:28).**

மனுஷர் வெவ்வேறு சுபாவமுள்ளவர்கள் ஆண்டவர் பற்பல குணமுள்ள மனுஷரிடத்தில் நடந்துகொண்ட மாதிரி கவனிப்புக்குரியது. சுவிசேஷத்தை வாசிக்கும்போது இது நன்றாய் விளங்கும். அவர் நிக்கொதேமுவிடம் பேசின மாதிரி வேறே, சமாரியா ஸ்திரீயிடம் பேசின மாதிரி வேறே. அவர்

பேதுருவிடம் பேசின மாதிரி வேறே. நாத்தான்வேலிடம் பேசின மாதிரி வேறே. உயிர்த்தெழுந்த பின்னும் அவர் சந்தித்த ஆட்களிடம் அவரவர் நிலைமைக்கேற்றபடியே பேசியிருக்கிறார். மரியாள் அன்புள்ளவள். அவளைப் பேர்சொல்லி அன்புடன் அழைத்தார். மறுதலித்து மனங்கசந்த பேதுருவைச் சந்தித்து அவர் நிலைமைக்கேற்றபடி பேசினார். எம்மாவூருக்குப் போனவர்கள் ஆராய்ச்சிக்காரர். ஆண்டவர் அங்கு அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார். பயத்தோடிருந்த சீஷரைச் சந்தித்தபோது உங்களுக்குச் சமாதானம் என்றார். தோமாவைச் சந்தித்தபோது ஆண்டவர் கேட்டகேள்வி தோமாவின் அவிசுவாசத்தை நிராகரித்து விட்டது. ஒருவரை மற்றவரைப்போல் அல்ல. அவரவருடைய தன்மையையும் பலவீனத்தையும் அறிந்து அன்பாய் நடத்திவரும் எம்பெருமானுக்கு ஸ்தோத்திரம்.

### 1. தோமா அடியார் கூட்டத்தைவிட்டுப் பிரிந்து போயிருக்கக்கூடாது

வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே சீஷரெல்லாரும் பயத்தினால் கதவுகளைப் பூட்டிக்கொண்டிருக்கையில் அருள் நாதர் அங்குதோன்றி அவர்களுக்குச் சமாதானம் கூறினார். தோமாவைக் காணோம். தோமா எங்கே போனார்? தெரியாது. அவர் சுபாவத்தைக் கவனிக்கும்போது அவர் இவ்வாறு மறைந்துபோனது ஆச்சரியமல்ல. அவர் லேசில் இளக்கரித்துப் போகிற தன்மையுள்ளவர். நாம் யூதேயாவுக்குப் போவோம் என்று ஆண்டவர் சொன்னவுடனே, அவரோடேகூடச் சாகும்படி நாமும் போவோம் வாருங்கள் என்று தோமா சொன்னார். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்று ஆண்டவர் சொல்ல, உடனே தோமா நீர் போகிற இடமே தெரியாதே வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றார். இவர் பேச்சில் சோர்வும் அவநம்பிக்கையும் காணப்படுகின்றன. கிறிஸ்து மரித்துப் போனார் என்பதை அறிந்தவுடனே இவருக்கு எப்படியிருந்திருக்கும்? தமக்கு ஏற்பட்ட இப்பெரும் நஷ்டத்தை நினைத்து அழும்படி தனித்த இடம் தேடிப்போய் விட்டார். மனம் நொறுங்கின தோமாவுக்கு மற்றவர்களோடிருக்கவோ பேசவோ முடியவில்லை. பக்தர்கள் தனித்திருப்பது அவர்கள் தியானத்துக்கு அனுகூலம். ஆனால் தோமா தணித்துப்போனது

நல்லதல்ல. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் தரிசனத்தை இழந்தார். இவரும் கூடயிருந்திருப்பாரானால் அந்த வாரமுழுவதும் அவரை வதைத்த அந்தகாரம் நேரிட்டிருக்க மாட்டாது. ஆலய அசட்டை பெரிய நஷ்டமாகும். சபை கூடுதலைவிட்டு விடக்கூடாது.

### 2. அவிசுவாசியின் நிபந்தனை

கர்த்தரைக் கண்ட சீஷர்கள் அதை தோமாவுக்குச் சொன்னார்கள். அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. "எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்ற உண்மையின்படியே, ஆண்டவர் உயிர்த்தெழுந்தாரென்று ஸ்திரீகள் சொன்னபோது. சீஷர்கள் அதை நம்பவில்லை. இப்போது சீஷர்கள் சொன்னதை தோமா நம்பவில்லை. அவர்கள் சொன்னது தோமாவுக்கு வீண் பேச்சாகத் தோன்றினது. ஆகையால் தோமா ஒரு நிபந்தனை போட்டார். "அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" என்று கூறிவிட்டார். தோமாவை சந்தேகி என்று நாம் பேசுகிறோம். சந்தேகம் அவ்வளவு மோசமானதல்ல. கிறிஸ்தவ ஜீவியத்தில் நெடுகிலும் சந்தேகம் வரலாம். நீங்கலாம். சந்தேகமில்லாமல் விசாரணையில்லை. விசாரணையில்லாமல் அறிவில்லை. அறிவில்லாமல் அனுபவமில்லை. தோமாவோ பலத்த, பிடிவாதமான அவிசுவாசி. அவரைக் கண்டால் நம்புவேன் என்று அவர் சொல்லாமல், கைபோட்டுப் பார்த்தாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்கிறார்.

### 3. தரிசனமும் மேலான அறிக்கையும்

எட்டுநாளைக்குப் பின்பு மறுபடியும் ஆண்டவர் சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். ஏன் எட்டு நாளைக்குப்பின்பு? ஆண்டவர் அவர்களோடு கூடவேயிருந்து பேசிக்கொண்டிருந்தால் அவர்கள் விசுவாசம் பலப்படாதா? அது அவர்களுக்கு அதிகம் பிரயோஜனமாயிராதா? இல்லை. ஒருதாய் தன் பிள்ளையைவிட்டு சற்று தூரம் போய் நிற்பதுஅந்தப் பிள்ளையை நடக்கச் செய்வதற்காகவே. இது முதல் அவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து

நடக்கவேண்டியவர்கள். மேலும் இக்காரியங்களைப்பற்றி அவர்கள் தாங்களே யோசிப்பதற்கு சமயம் கொடுக்கவேணும். அவர் திடீரென்று மறைவதாம் திடீரென்று தோன்றுவதாலும். அவர் போகிறதும் வருகிறதுமில்லை. தங்களோடுகூடவேயிருக்கிறார் என்கிற உண்மையை அவர்கள் அறியவேணும். இதற்காகவே ஆண்டவர் எட்டுநாளைக்குப் பின்பு வெளிப்பட்டார். இந்தச் சமயத்தில் தோமாவும் அங்கேயிருந்தார். தோமா தாமாக வந்தாரோ, அல்லது சீஷரில் ஒருவர் அவர்மேல் பரிதபித்து அழைத்து வந்தாரோ தெரியாது. முன்னே தரிசனமான ஆண்டவர் மறுபடியும் தரிசனமாகலாம். நீ தனித்திராமல் எங்களோடுகூடயிருப்பது நல்லதென்று சொல்லி ஒருவர் அவரை அழைத்து வந்திருக்கலாம். திடீரென அவர்கள் மத்தியில் தோன்றின ரட்சகர். அவர்களுக்குச் சமாதானங் கூறி, ஒருவரும் பேசுமுன்னே தோமாவைப் பார்த்து, "நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலேபோடு, அவிசுவாசியிராமல் (சந்தேகியாயிராமல் அல்ல) விசுவாசியாயிரு என்றார்." ஒருவன் கோபத்தில் பேசின புத்தியீனமான வார்த்தைகள் அமர்ந்த நேரத்தில் அவனுக்கு வெட்கத்தை உண்டாக்கும். தான் சொன்ன அவிசுவாச வார்த்தைகளையே ஆண்டவர் சொல்லக்கேட்டது தோமாவுக்கு எப்படியிருந்திருக்கும்? ஆச்சரியமும் பயமும் அவரை ஆண்டுகொண்டன. நான் சொன்னது இவருக்கு எப்படித் தெரியும்? அவர் இங்கே தானே இருந்திருக்கவேண்டும். என் மதியீனமான நிபந்தனைக்கும் சம்மதிக்கிறாரே. இவ்வளவுதான். அவிசுவாசமும் நிபந்தனையும் மறைந்தன. ஆனந்த பரவசமடைந்து! "என் ஆண்டவரே! என் தேவனே" என்று போற்றினார் தோமா.

இதுவரை ஒருவரும் இவ்வாறு அறிக்கை செய்ததில்லை. இது மேலானஅறிக்கை என்பதில் சந்தேகமில்லை. "என் ஆண்டவரே! என் கடவுளே!" கிறிஸ்து இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டார். தோமாவே, நீ என்னைக் கடவுள் என்று சொல்லலாமா? இது பெரிய தேவதூஷணமாச்சுதே என்று அவர் தோமாவைக் கடிந்துகொள்ளவில்லை. இந்த அறிக்கையைக் கேட்டதும் ஆண்டவர் சொன்னதென்ன? "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்

என்றார்." இங்கே ஆண்டவர் பேசுகிற விசுவாசம் எது? தமது உயிர்த்தெழுதலை தோமா விசுவாசித்தார் என்பதா? அல்ல. ஒருவன் தான் காண்பதை விசுவாசிக்க வேணடியதென்ன? அவர் உயிரோடிருப்பதைக் காணும்போது உயிரோடிருக்கிறார் என்று விசுவாசிக்க அவசியமேயில்லை. தமது தெய்வீகத்தைப் பற்றி தோமா அறிக்கையிட்ட விசுவாசத்தைப்பற்றியே ஆண்டவர் பேசுகிறார். நீ என்னைக் கண்டபின் அல்லவா கடவுளே என்று அறிக்கைசெய்கிறாய். என்னைக் காணாதிருந்தும் எனது தெய்வீகத்தை விசுவாசிப்பவர்களே பாக்கியவான்கள் என்கிறார். அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

திடீரென தோமாவில் வெளிப்பட்ட இந்த மேலான அறிக்கைக்கு காரணமென்ன? தோமாவின் காரியம் கனத்த இருளுக்குப்பின் ஜொலித்த பிரகாசம் போலாயிற்று. ஆண்டவர் உயிரோடு வந்ததினால் மாத்திரம் கடவுளே என்று அவர் சொல்லவில்லை. அப்படியானால் உயிரோடெழுந்த லாசருவும் கடவுளா? தோமா கிறிஸ்துவை கடவுள் என்று அறிக்கை செய்ததற்கு தகுந்த காரணம் இருக்கவேண்டும். சீக்கிரத்தில் மனசோர்ந்துபோவது தோமாவின் சுபாவம் என்பதை ஏற்கனவே கவனித்தோம். ஆண்டவர் சிலுவையில் மரித்துப்போனாரென்பது தோமாவுக்குத் திட்டமாய்த் தெரியும். அவர் மரித்தபோதே தோமாவின் நம்பிக்கை முற்றிலும் அழிந்தது. ஆனால் அவர் தனித்துப் புலம்பிக் கொண்டிருந்த வாரத்தில் ஆண்டவர் ஜீவியம், அவரது நிகரற்ற உபதேசம், அவர் தேவராஜ்யத்தைப்பற்றிக் கொடுத்த வாக்குகள், அவர் நிறைவேற்றின அரிய செயல்கள் இவைகளைப்பற்றியே யோசித்துக்கொண்டு, இப்பேர்க்கொத்த ஒருவர் மரிக்கக்கூடுமா? மரித்துப்போய்விட்டாரே என்பதாக தமக்குள்ளே பலவாறு சிந்தித்துக் கொண்டேயிருந்தார். இந்தச் சிந்தனைதான் அவர் விதித்த பலத்த நிபந்தனைக்குக் காரணம். இப்போது அவர் உயிரோடே வந்து விட்டாரென்பதைக் கண்டவுடன், இவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுளே யல்லாமல் மற்றப்படியல்ல என்கிற மேலான அறிக்கையை வெளியிட்டார். தோமாவின் பலத்த அவிசுவாசத்துக்காகவும் அவர் செய்த மேலான அறிக்கைக்காகவும் நன்றி பாராட்ட திருச்சபை என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

# 29. குருத்தோலை ஞாயிறு

***"அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுதார்" (லூக். 19:41).***

பஸ்காப் பண்டிகை யூதனுக்கு மகாவிசேஷம். நாலா திசைகளிலிருந்தும் ஆபிரகாமின் மக்கள் திரள் திரளாகக் கூடுவார்கள். தொகை முப்பது லட்சமெனக் கணக்கு. எருசலேமுக்கு வருகிறவர்கள் எல்லாரும் பக்தர்களல்ல. ஒரே ஜாதியான அவர்கள் பற்பலநோக்கங்களோடு பண்டிகைக்குப் போனார்கள். குடும்ப விஷயமாகவும் வியாபார விஷயமாகவும் கண்டுபேசுவதற்கு அது ஏற்ற சமயம். ஆனால் இந்தப் பண்டிகையில் எல்லாருடைய நோக்கமும் இயேசுவைக் காணவேண்டுமென்பதே அவர் கீர்த்தி தொலை தூரங்களுக்குப் பரவியதால் அவரைப் பார்க்கும்படியாகவே அநேகர் வந்தார்கள். அவர் பண்டிகைக்கு வருவாரா? வருவாரா? என்பதே எல்லாரும் கேட்ட கேள்வி. ஆம் ஆண்டவர் தம்மைப் பகிரங்கமாய் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டு நகரத்தில் பிரவேசித்தார்.

## 1. நகரத்தின் சிறப்பு

"அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்தார்." ஒலிவ மலையில் தென்பாகமாய்ச் சுற்றிவரும்போது நகர முழுவதும் கண்களுக்குள் சிறப்பாய்த் தோன்றும். காலைச் சூரிய வெளிச்சம் நகரத்தில் விழவே கோபுரங்களும் பளிங்குக்கற்களும் ஜோதி மயமாய்ப் பிரகாசிக்கும். அந்த இடத்துக்கு வரும்போது எந்த யூதனுடைய இருதயமாவது, எந்தப் பிரயாணியின் இருதயமாவது பரவசமடையாதிராது. அந்த இடத்தில் ஆண்டவர் நின்று நகரத்தைப் பார்த்தபோது தீர்க்கதரிசிகள் ராஜாக்கள் பிதாக்களின் பூர்வ சரித்திரங்கள் அவர் ஞாபகத்தில் வந்தன. எருசலேம் சரித்திரம் மகாமேன்மைபெற்றது. எருசலேம் என்றாலே யூதனுடைய உள்ளம் பூரிக்கும். அவனுடைய சகல மகிழ்ச்சிகளிலும் முக்கியமான மகிழ்ச்சி எருசலேம் (சங். **122:3,6**) பக்தியுள்ள யூதர் மோட்சத்தைப் புதிய எருசலேம் என்றழைப்பார்கள். ஆண்டவர் எருசலேமை அவ்விதமாக மதித்தார். அவர் "எருசலேமே! எருசலேமே!" என்று சொன்ன துயரமான வார்த்தைகளே அதற்கு ஆதாரம்.

**2. நகரத்துக்காகக் கண்ணீர்**

கஷ்டம், துன்பம், வேதனை. அவமானம், நஷ்டம் அடைந்தவர்கள் கண்ணீர்விடுவார்கள். நமக்காகவேநாம் அழுகிறோம். பாவியான ஸ்திரீ, நாயினூர் விதவை, மார்த்தாள் மரியாள், பேதுரு, மகதலேனாமரியாள் முதலானாவர்கள் தங்களுக்காவே அழுதார்கள். ஆண்டவர் அவர்கள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்படுத்தினார். ஆண்டவர் மூன்று முறை அழுததாக வாசிக்கிறோம். லாசரு கல்லறையில்; அது அனுதாபக் கண்ணீர். கெத்சமேனேயில்; இது உலகத்தின் பாவத்துக்காகச் சிந்தினபோராட்டக்கண்ணீர்! இங்கே எருசலேம் நகரத்துக்காக; இது எருசலேமுக்கு வரப்போகிற அழிவை நினைத்து அழுத கண்ணீர். பஸ்காப் பண்டிகை எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷமான பண்டிகை. அவ்வாறே அவர்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஆண்டவரோ அவர்களுக்காகக் கண்ணீர் விட்டழுதார். எருசலேம் குமாரத்திகளைப் பார்த்து நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளை களுக்காகவும் அழுங்கள் என்றார். தம்மை இன்னாரென்று அவர்கள் அறியாமல் தம்மைப் புறக்கணிப்பதால் அவர்களும் அவர்கள் சிறப்பான நகரமும் பாழாய்ப் போவதைக் கண்டு அவர்களுக்காக கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார் பகவான்.

**3. நகரத்தின் சமாதானம்**

"துன்மார்க்கருக்குச் சமாதனமில்லை" கிறிஸ்து சமாதானப்பிரபு. சமாதானக்காரணர், அவரே நம்முடைய சமாதானம். பாவத்தால் கடவுளைவிட்டுப் பிரிந்த மனுஷன் மறுபடியும் பிதாவோடு ஒப்புரவாகும்வரையில் சமாதானத்தைக் காணமாட்டான். நோவா விட்டபுறாவுக்குப் பேழையிலேயன்றி வேறெங்கும் இளைப்பாறுதல் இல்லை. ஆண்டவர் பிறந்தபோது பூமிக்குச் சமாதானம் கூறப்பட்டது. அவர் கூறிய சுவிசேஷம் சமாதானத்தின் சுவிசேஷம் தம்மை நம்பின பாவிகளுக்குச் சமாதானம் அருளினார். சகல ஐசுவரியங்களைப் பார்க்கிலும் சமாதானமே நிறைந்தசெல்வம். எல்லாமிருந்தும் ஒருவனுக்குச் சமாதானமில்லையென்றால் அவன் நிர்ப்பந்தனே. தாம் மரிப்பதற்கு முந்தின நாளிரவில் தமதடியாரைப் பார்த்து: "என் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்"என்றார்.

இதுவே ஆண்டவர் தமது மக்களுக்கு எழுதிவைத்த சுதந்தரம். அதை அனுபவிப்பவர்களுக்கே அதன் மேன்மை தெரியும். உலகில் உள்ள ஒன்றும் இந்தச் செல்வத்துக்கு ஈடாகமாட்டாது. “ஆண்டவர் உயிர்ப்பித்த பின்பும் அவர் தமதடியாருக்குக் கூறினது சமாதானமே. இந்தச் சமாதானத்தை ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்துச் சம்பாதித்தார். அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் இந்தச் சமாதானத்தை அனுபவிக் கிறார்கள். எருசலேமோ இந்தச் சமாதானத்தை விரும்பவில்லை. ஆண்டவர் எடுத்துகொண்ட முயற்சிகள் யாவும் அவர் களுக்கு வீணாயிற்று.

எவ்வளவோ வாஞ்சையோடும் கிருபையோடும் அவர்களைச் சந்தித்தார். அவர் ஊழிய ஆரம்பத்தில் வேறெங்கும் போகாமல் அவர்களுக்கே தம்மை வெளிப்படுத்தச் சித்தக்கொண்டு ஒரு வருஷக்காலம் யூதேயாவிலேயே வேலை செய்தார். எருசலேம் நகரத்தை ரட்சிக்கவேண்டுமென்பது அவரது பேராவல். அங்கே தங்கினார், உபதேசித்தார். அநேக அற்புதங்களைச் செய்தார். அவர்களோ அவரைப் பகைத்து வெறுத்தார்கள். ஆகையால் ஆண்டவர் கலிலேயா நாட்டிலும் மற்ற இடங்களிலும் சுற்றிவேலை செய்யவேண்டியதாயிற்று. என்றாலும் எருசலேமை அவர் மறக்காமல் பண்டிகைகளில் அங்கே போய் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்த முயன்றார். அவர்களோ தங்கள் கண்களை இறுக மூடிக்கொண்டார்கள். அவரைக் கொலைசெய்வதே சரியெனத் தீர்மானித்துவிட்டார்கள். ஆகையால் கடைசியாக அவர்களைச் சந்திக்கப்போகும் இவ்வேளையில் நகரத்தைப்பார்த்துக் கண்ணீர்விட்டழுது. “உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக் கேற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவா யிருக்கின்றன” என்றார். சமாதான வழியை அறியாதவர்கள் நம்மிலும் உண்டு. அவர்கள் அழிவின் பாதையில் செய்வதைக் கண்டு ஆண்டவர் பரிதபித்துக் கண்ணீர்விடுகிறார்.

### 4. நகரத்தின் அழிவு

“உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற் போனபடியால்” உன் சிறப்பான நகரமும் நீங்களும் அழிவீர்கள்

என்றார். இது பழிக்குப்பழிவாங்கும் தேவகோபாக்கினை கூறல் அல்ல. அவர்களுக்காக பரிதபித்து அழுத ஆண்டவர் அவர்கள் அழிந்து போவதை எப்படி விரும்புவார்? ஒளியை வெறுக்கிறவன் இருளுக்கு ஆளாவது போல தங்களைச் சந்தித்த கிருபையை அவர்கள் புறக்கணித்தபடியால், தங்களுக்கு தாங்களே அவர்கள் அழிவைத் தேடிக் கொண்டார்கள். இப்படி நடந்தால் நீ கெட்டுப் போவாய் என்று தகப்பன் மகனுக்குக் கண்ணீரோடே சொல்வது அவனைக் கெட்டுப்போக விரும்புவதல்ல. மனுஷர் தங்கள் சீர்கேட்டால் கஷ்டங்களுக்குள்ளாகும்போது கடவுளைக் குறைகூறுவது நியாயமல்ல. முரட்டாட்டமும் கலகக்குணமுமுள்ள யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மெய்ச் சமாதானத்தை அனுபவிக்கக்கூடாமற்போனார்கள். தங்களிலுள்ள கலகக்குணத்தால் ரோமரை எதிர்த்தார்கள். அந்த வல்லமையுள்ள ராஜ்யத்தை எதிர்ப்பதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ரோமைச் சேனை எருசலேமை வளைந்து கொண்டது. நகரம் அழிந்தது. ஆலயம் தரைமட்டமானது. ஆயிரம் பதினாயிரமாய்ச் சிலுவையில் அறையப்பட்டார்கள். அநேகர் பட்டயத்துக்கு இரையானார்கள். மற்றவர்கள் சிறைகளானார்கள். "இவனுடைய ரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருக்கட்டும்" என்று சொன்னவர்களும் இவர்களே. நாற்பது வருஷங்களுக்குள் இந்த மகா கொடிய பயங்கரமான அழிவு யூத ஜாதிக்கு நேரிட்டது. ஆண்டவர் கண்ணீரோடு சொன்ன இந்த அழிவை அந்நேரத்தில் கேட்ட சிறுவர், வாலிபர், புருஷரானவர்கள். எருசலேமுக்குச் சம்பவித்ததைத் தங்கள் கண்களால் கண்டார்கள்.

ஆண்டவர் பலவிதமாய் நம்மைச் சந்திக்கிறார். நாம் அவரை அறிந்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய வாஞ்சை. தமது வசனத்தின் மூலமாகவும், தமது ஆவியாலும், தமது பிள்ளைகளைக் கொண்டும் ஆண்டவர் நம்மைச் சந்திக்கிறார். நமக்கு அவர் செய்யும் தயவாலும், நமக்கு நேரிடும் கஷ்டங்களாலும் ரட்சகர் நம்மைச் சந்திக்கிறார். அவர் நம்மைச் சந்திக்கிறார் என்பதை நாம் உணர்ந்து அவர் சத்தத்துக்குச் செவிகொடுக்க வேண்டும். யூதரைப்போல் நமது

இருதயத்தைக் கடினப்படுத்தி, அவர் சந்திக்கிறார் என்பதை அறியாமற்போவோமானால் அவர்கள் முடிவைப்போலவே நமது முடிவும் ஆகும். ஆண்டவரல்ல, நமக்கு நாமே சத்துருக்களாவோம்.

# 30. செய்கையின் பாக்கியம்

***"என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்" (மாற். 14:6).***

பெத்தானியா கிராமத்திலுள்ள மார்த்தாள், மரியாள், லாசரு என்பவர்களிடத்தில் ஆண்டவர் அன்பாயிருந்தார். மரியாளுக்கு ஆண்டவர்மீது அதிகப் பற்றுதலுண்டு. அவர் அவர்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் மரியாள் அவர் பாதத்தில் உட்கார்ந்து அவர் திருவாக்கைக் கேட்பது வழக்கம். தன் இனத்தானான சீமோனை குஷ்டரோகத்திலிருந்து ஆண்டவர் குணமாக்கி, தன் சகோதரன் லாசருவையும் உயிரோடெழுப்பினதாலே அவள் இருதயம் நன்றியால் நிறைந்திருந்தது. தன்னிடத்திலிருந்த விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தால் அவரை அபிஷேகம்பண்ணக் காத்துக் கொண்டிருந்தாள். கடைசியாக ஆண்டவர் பெத்தானியாவுக்கு வந்தபோது, அன்றிரவு அவருக்கு விருந்து நடந்தது. அந்தச் சமயத்தில் மரியாள், அந்த விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தைக் கொண்டு வந்து ஆண்டவரை அபிஷேகம் பண்ணினாள். அப்பொழுது யூதாஸ் கோபமடைந்து இந்தத் தைலத்தை முன்னூறு பணத்துக்கு விற்று தரித்திரருக்கு கொடாமற்போனதென்னவென்று மரியாளோடு போராடினான். அவனோடு வேறு சிலரும் சேர்ந்து கொண்டார்கள். உடனே ஆண்டவர் அவர்களைத் தடுத்து, அவளை விட்டு விடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள் என்றார். ஆண்டவர் இந்த ஸ்திரீயைப்பற்றிச் சொன்னவைகளில் மூன்று காரியங்களைக் கவனிக்கிறோம்.

**1. இவள் நற்கிரியை செய்தாள்**

அறிவு நல்லது, விரும்பம் நல்லது, தீர்மானமும் நல்லது, செய்கையோ யாவற்றிலும் சிறந்தது. ஆண்டவர் செய்கையைப்

புகழுகிறார். இந்த ஸ்திரீயைக் குறித்து: "இவள் நற்கிரியை செய்தாள்" என்றும்; "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்றும்; "உலகத்தில் இவள் செய்ததும் சொல்லப்படும்" என்றும்; அவளுடைய செய்கையை முக்கியப்படுத்திப் பேசுகிறார். நாம் கேட்டு அறிந்த சத்தியங்களை நமது செய்கையில் அதாவது அனுபவத்தில் காட்டவேண்டுமென்பதே ஆண்டவருடைய முக்கிய போதனை. அவரைக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லியும் அவர் சொல்லுகிறபடி செய்யாதவர்கள் அவருடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்கிறார். அவரிடத்தில் வந்து, அவர் வார்த்தையைக் கேட்டு, அதன்படி செய்கிறவர்கள் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் என்றும், அப்படிச் செய்யாதவர்கள் மணலின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாயிருக் கிறார்கள் என்றும் சொன்னார். அனுபவம் உறுதியுள்ளது. அனுபவமில்லாத அறிவு மோசமானது. நமக்குள் கேள்வியும், அறிவும், பேச்சும் மிகுதி; செய்கையோ கொஞ்சம். ஆகாரத்தைப் பற்றிய சாஸ்திர அறிவு பசியாற்றாது. ஆகாரத்தை உட்கொள்ளும் செய்கையே உயிரைக் காப்பாற்றும். இதனாலே ஆண்டவர் தமது சீஷர்களைப் பார்த்து: "இவைகளை நீங்கள் அறிந்திருக்கிறபடியால் இவைகளின்படி செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்றார். ஆண்டவருடைய எண்ணங்களும் தீர்மானங்களுமல்ல. அவருடைய அருஞ்செயலே உலகத்துக்கு ரட்சிப்பாயிற்று. தமது அறிவு செய்கையாக மாறும்போதுதான் அது நமக்கும் பிறருக்கும் ஆசீர்வாதமாயிற்று.

## 2. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்

"ஒரு தாலந்தை வாங்கினவன் தன் ஆண்டவனைப் பார்த்து; நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்" என்றான். இந்தச் சோம்பேறி தன் எஜமானைக் குற்றப்படுத்தினான். நமது ஆண்டவர் கடினமான எஜமான் அல்ல. ஒவ்வொருவருடைய நிலைமையையும், தகுதியையும் அவர் திட்டமாய் அறிந்திருக்கிறார். அவரவரை அவர்களுடைய நிலைமைக் கேற்றபடியே நடத்துகிறார். அவரவரிடத்தில் அவர்களுடைய தகுதிக்கேற்ப பலனையே எதிர்பார்க்கிறார்.

ஒருவனை இன்னொருவனைப்போல இருக்கும்படி அவர் எதிர்பார்க்கிறவரல்ல. பவுல் செய்த காரியங்களைப் பேதுரு ஏன் செய்யக்கூடாதென்றும், யோவானைப்போல் பேதுருவும் ஏன் ஒரு மகத்தான சுவிசேஷத்தை எழுதக்கூடாதென்றும், அவர் கடிந்துகொள்ளுகிறவரல்ல. அவரவர் தம் தம் நிலைமைக் கேற்றவாறு நற்கிரியைகளைச் செய்வதே அவருக்குச் சந்தோஷம். இந்த ஸ்திரீயைக் குறித்து: "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்று சொன்னதைக் கவனித்தால் அவருடைய காருண்யம் விளங்கும். இரண்டு காசைக் காணிக்கையாகப் போட்ட ஏழை விதவையை அவர் மெச்சிக்கொண்டதும் இதுபோலவே நமக்கு இல்லாததின்படி யல்ல, நமக்குள்ள அறிவு, வரங்களுக்கேற்றபடி நாம் நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். நம்மால் இயன்றதை நாம் மனப்பூர்வமாகச் செய்வதே ஆண்டவருக்குப் பிரியம். நம்மில் அநேகர் அப்படிச் செய்கிறதில்லை. கடவுள் நமக்கருளிய பலத்துக்கும், அறிவுக்கும், வரத்துக்கும் ஏற்றாற்போல் நாம் நடக்கிறதில்லை. நாம் செய்யக்கூடியதைத் தானும் முழு பலத்தோடே, முழு மனதோடே நாம் செய்கிறதில்லை. இது விஷயத்தில் நாம் குற்றவாளிகளே. நமக்குள்ளதையும் இழந்துபோகும்படி நேரிடும். தேவமக்கள் ஒவ்வொருவரும் இந்த ஸ்திரீயைப்போல் தம்மால் இயன்றதைச் செய்வார் களானால் அவரது ராஜ்யத்துக்கு எவ்வளவோ அநுகூலமாகும். நமக்கு மிஞ்சினதை நாம் செய்ய முடியாது. ஆண்டவரும் அப்படி எதிர்பார்க்கிறதில்லை. நம்மால் கூடியதை நாம் செய்யத்தான் வேண்டும். வீண் அறிவும், வீண் பேச்சும் பிரயோஜனப்படாது. நற்செய்கையே பிரயோஜனமாகும். "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்".

### 3. இவள் ஏற்ற சமயத்தில் செய்தாள்

அவள் நற்கிரியை செய்தது மாத்திரமல்ல, தன்னால் இயன்றதைச் செய்தது மாத்திரமல்ல. ஏற்ற சமயத்தில் செய்தாள். இதைக்குறித்து ஆண்டவர் "என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" என்கிறார். ஆண்டவர் நமது வீட்டுக்கு எப்பொழுதும் வருகிறவர்தானே, இன்னொரு சமயம் வரும்போது இந்தப் பரிமளதைலத்தைப் பூசலாம் என்று நினைத்திருப்பாளானால் அந்த நற்சமயம் ஒருபோதும்

அவளுக்கு கிடைத்திருக்கவேமாட்டாது. இதுவே ஆண்டவர் அவள் வீட்டுக்கு வந்த கடைசி சமயம். இது அவளுக்குத் தெரியாது. ஆண்டவர் இந்த வாரத்தில் மரிக்கப்போகிறார் என்பதை அவள் அறியாள். என்றாலும் அவர்மீதுள்ள அன்பினால், தனக்கு அருமையாய் வைத்திருந்த தைலத்தை அன்றிரவே அவருக்குப் பூசவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். தீர்மானித்தபடியே அதைச்செய்து முடித்தாள். அவள் தாமதியாமற் செய்தது அவளுக்கு நற்காலமெனலாம். ஆண்டவரும் அப்படியே கருதினார். “நான் அடக்கம்பண்ணப் படுவதற்கு எத்தனமாக இவள் என் சரீரத்தில் தைலம்பூச முந்திக் கொண்டாள்” என்கிறார். அது மாத்திரமல்ல, இவள் செய்த இந்த நற்கிரியை உலகமெங்கும் இவளை நினைப் பதற்காகச் சொல்லப்படும் என்றார். அப்படியே ஆயிற்று.

### 4. நாம் ஆண்டவருக்காக நற்கிரியைச் செய்யவேணும்

நம்மால் இயன்றதைச் செய்யவேணும். செய்வதைக் காலதாமதமின்றிச் செய்யவேணும். கடவுள் நம்மை ஆசீர்வதிக்கிற அளவுக்கு நாம் அவருடைய ராஜ்ய விருத்திக்காக உழைக்கவேணும். அவர் தந்த காலம், சுகம், பலம், செல்வாக்கு, பொருள், அறிவு, வரம் யாவையும் மனுமக்களுடைய ஆத்ம க்ஷேமத்துக்காக உற்சாகத்துடன் செய்யப்பட வேண்டும். இது விஷயத்தில் காலதாமதம் கூடவே கூடாது. நாம் நற்கிரியை செய்ய விரும்பலாம். இன்னின்ன காரியங்களைச் செய்வதாகத் தீர்மானிக்கலாம். செய்யா விட்டால் நமது விருப்பத்தாலும் தீர்மானங்களாலும் யாது பயன்? தங்கள் ஆஸ்திகளை தேவ ஊழியத்துக்குக் கொடுப்போம் என்று வாக்குப் பண்ணினவர்களை நாம் அறிவோம். அவர்கள் அடிக்கடி தாங்கள் செய்யப்போவதைக் குறித்துப் பேசினார்கள். தீர்மானித்தார்கள். ஆனால், அதை நிறைவேற்றாதபடி காலதாமதஞ் செய்தார்கள். திடீரென மாண்டார்கள். அவர்கள் ஆஸ்தி அந்நியர் கைவசமாயிற்று. அவர்கள் விருப்பத்தாலும், வாக்காலும், தீர்மானத்தாலும் கடுகளவு பிரயோஜனமுண்டா? இல்லை. ஆண்டவர் நம்மைக் கொண்டு செய்ய ஏவுகிற காரியங்களை உடனே தானே செய்ய வேண்டும். இன்று செய்யக்கூடியதை இன்றே செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது நமக்கே அது பாக்கியம்; பிறருக்கு ஆசீர்வாதம். ஆண்டவர் நாமம் அதினால் மகிமைப்படும்.

# 31. முன் செல்லும் தெய்வம்

**"நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" (ஏசா. 45:2).**

நமது ஜீவியம் ஒரு பிரயாணம். நாம் எல்லாரும் போகிறோம். போகப் பிரியமோ? பிரியமில்லையோ? நாம் போகத்தான் வேண்டும். குழந்தை பையனாகவும், பையன் வாலிபனாகவும், வாலிபன் புருஷனாகவும், புருஷன் விருத்தாப்பியனாகவும் பிரயாணம் போகவேண்டியதே. நிற்கிறவர்கள் யாருமில்லை.

போகிறது சரிதான் எப்படிப் போகிறோம்? தேவனோடு போகிறோமா? தேவனற்றுப் போகிறோமா? மனுஷன் தேவனைப் பார்த்து; நீர் என் முன் செல்லவேண்டியதில்லை; நானும் உம்மைப் பின் செல்ல வேண்டியதில்லை என்று சொல்லலாம். எனக்கு அறிவுண்டு, ஆலோசனையுண்டு, என் காரியங்களை நானே நடத்திக்கொள்ளத் திராணியுண்டு என்றும் சொல்லலாம். அவ்விதமாகவே அநேகர் நடக்கிறார்கள். தேவன் தங்களை நடத்தவேணும் என்கிற மகா பிரதானமான விஷயத்தை அவர்கள் கவனிக்கிறதில்லை. தங்களைத் தாங்களே நடத்திக் கொள்ளுகிறார்கள். எல்லாம் அவர்கள் யோசனையும், அவர்கள் செய்கைகளுமாகவே இருக்கின்றன. மேய்ப்பனற்ற ஆடு தன்னை ஷேமமாய் நடத்திக் கொள்ளக்கூடுமானால், தேவனற்ற மனுஷனும் தன்னை நடத்திக் கொள்ளக்கூடும். ஒரு விஷயத்தை நாம் மறக்கக் கூடாது. அது என்னவென்றால், நமது ஜீவிய ஒழுங்கு முழுவதும் தேவ கரத்தில் இருக்கிறது. முதலிலிருந்து கடைசிவரை நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்கிற ஒழுங்கு ஏற்கனவே பிதாவின் ஆதீனத்திலிருக்கிறது. அந்த ஒழுங்குப் பிரகாரம் நாம் நடத்தப்படுவோமானால், அதுவே நமது ஜீவியத்துக்குப் போதுமான ஆசீர்வாதமும், தேவனுக்கு மகிமையுமாயிருக்கும். நமது பாவத்தால் நமது புத்தி அந்தகாரப்பட்டு, நம்மைக் குறித்த தேவசித்தம் இன்னதென்று அறியாமல், பலவிதத்திலும் வழி தவறி, நமக்கு நாமே தீங்கை வரவழைத்துக்கொண்டோம். தேவன் ஏற்கனவே ஒழுங்கு செய்திருக்கும் பாதையில் தவறாது நடந்த மனுஷன் ஒருவனாகிலுமில்லை. இயேசு கிறிஸ்து

ஒருவரே தேவன் தமக்கு ஏற்படுத்தின பாதையில் கடுகளவு விலகாது நடந்தவர். பிதாவின் சித்தமே அவர் சித்தம். மற்றெல்லா மனுஷரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்.

கிருபையுள்ள தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தமக்குச் சொந்தமாக்கி, ஜீவபாதையில் நம்மை நடத்தச் சித்தங் கொண்டார். "நான் உனக்கு முன்னே போய்க் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" என்பது அவர் திருவாக்கு. நாம் அவரைப் பின்செல்வோமா? செல்லமா மாட்டோமாவென்பதை நாம் தீர்மானிக்கவேண்டியது. அவர் நம்மைப் பலவந்தமாய் இழுக்கிறவரல்ல. சுயாதீன சித்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். எது சுயாதீனம் என்று நமக்குத் தெரிகிறதில்லை. ஒரு மனுஷன் தன் மனங்கொண்டபடி நடப்பதைச் சுயாதீனம் என்கிறோம். ஒருக்காலும் அது சுயாதீனம் அல்ல. அதை அடிமைத்தனம் என்றே கூறவேண்டும். பலவித ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு, அங்குமிங்கும் இழுக்கப்படுவது ஒருக்காலும் சுயாதீனமாகாது. தேவ சித்தத்துக்குப் பூரணமாய்த் தன்னை ஒப்புவித்துப் பிழைப்பவனே சுயாதீன சித்தமுள்ளவன். அவரைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம். அவரை இடைவிடாமல் பின்செல்ல விரும்புவோருக்கு அவர் முன்செல்லும் தெய்வமாயிருக்கிறார்.

தேவன் ஏன் நமக்கு முன்செல்ல வேண்டும்? நமது வழியில் கோணலானவைகள் இருப்பதாலேயே. நமது ஜீவியமே கோணல். நம்மோடு சம்பந்தப்பட்டவர்கள் கோணல். நமது வேலைகளில் கோணல். நமது குடும்பக் காரியங்கள் கோணல் இதை அதிகம் விஸ்தரிக்கவேண்டியதில்லை. நமக்கிருக்க வேண்டிய சந்தோஷம், மனச்சமாதானம் எங்கே? நமது முகம் வாடி, நமது தேகம் மெலிந்திருப்பானேன்? நமது சக்தி குன்றி, நமது சத்தம் மங்கிப்போனதென்ன? நமது ஜீவிய பாதை செவ்வையாயிருந்தால் இப்பேர்க்கொத்த குறைவுகள் இருக்கவேண்டியதில்லையே. இதன்றி எவ்வளவு பெருமூச்சுகள், அந்தரங்க வேதனைகள்! பாடு துயரங்கள்! கஷ்டம் கண்ணீர்! இவையாவும் நமது வழியின் கோணல்கள் அல்லவா? ஆகையால் தேவன் "நான் உனக்கு முன்னே போய்க் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" என்கிறார்.

அவர் கோணல்களை நேராக்குவதெப்படி? சிறு பிள்ளையைக் கேட்போம். பிள்ளையே இந்தக் கோணல் குச்சியை நேராக்குவதெப்படி? அதை வளைத்தால் நேராகிவிடும் என்று உடனே சொல்லும். இதுவே மனுஷர் முறை. தேவமுறை அதல்ல. கோணல்களை அகற்றாமலே வழியை நேராக்குவது தேவ முறை. சில சமயங்களில் கோணலை, இடையூறை அவர் நீக்கிவிடுவதுமுண்டு. ஆனால் அநேகமாய் அவர் கோணல்களை நீக்காமலே வழியை நேராக்குகிறார். ஆண்டவர் அறியாத கோணல்கள் இல்லை. அவர் இடங்கொடுக்காத துன்பங்கள், பாடுகள், அவமானங்கள் நமக்கில்லை. நமது பாதைகளில் கோணல்கள் இருக்கவே யிருக்கும். அப்படியிருப்பதாக ஆண்டவரே சொல்லுகிறார். "நான் உனக்கு முன்னே போய் கோணல்களை" என்கிறார். அப்படியானால் அவர் அவைகளை நேராக்கும் முறை என்ன? நம்மை நேராக்குவதே கோணல்களை நேராக்குவது. நமது பாடுகளைச் சகிக்கக்கூடாமல், ஆண்டவர் பாதத்தில் விழுந்து: ஐயா, எனக்கு ஏன் இப்பாடுகள்? அநியாயமாய் நான் கஷ்டப்படுகிறேனே, ஆகிலும் என் சித்தப்படியல்ல. உமது சித்தம்போல் என்னை நடத்தும், என்று நம்மை ஒப்புவிக்கும்போது தேவசமாதானமும் அமைதலும் நமது இருதயத்தில் உண்டாகின்றன. கோணலானவைகளாலே நாம் அமிழ்ந்துபோகாமல், அவைகளைப் பொறுமையாய்ச் சகிக்கும் கிருபையைப் பெற்று, அவைகளை மேற்கொள்கிறோம். இவ்வாறு நமது ஜீவியம் அதிகமதிகமாய் ஆசீர்வதிக்கப் படுவதற்கும், நமது சித்தம் தேவசித்தம்போல பிழைப்பதற்கும் நாம் வெறுத்த கோணலான காரியங்கள் கிருபையின் எத்தனங்கள் போலாகின்றன. தேவன் கோணல்களை நேராக்குகிற ரகசியம் இதுவே. பாடுகளின் காரணம் நமக்குத் தெரியாவிட்டாலும் அவர் சித்தத்துக்கு கீழடங்குவதால் கிறிஸ்துவின் சிந்தை நம்மில் உண்டாகிறது. நம்மைப்போல் பாடுபடும் மற்றவர்களுக்கு, ஆறுதல் சொல்லும் திராணியுண்டாகும். மேலும் தனித்தனியாகப் பார்த்தால் எல்லாமே கோணலானவைகளாகவே தோன்றும். மொத்தமாகப் பார்க்கும்போதுதான் அதன் ரகசியம் விளங்கும். பூமியை எங்கிருந்து பார்த்தாலும் தட்டையாகவே தோன்றும்; ஏன் என்றால் நாம் கொஞ்ச தூரத்தை மாத்திரம் பார்க்கிறோம். முழுவதுமாய்ப் பார்த்தால் பூமியின் வடிவம் உருண்டையெனத் தெரியும். நமது கோணல்கள் யாவும் சேர்ந்து நமக்குப் பெருத்த

ஆசீர்வாதமாகும். இஸ்ரவேலர் பிரயாணம் முழுவதும் கோணலே. தேவன் அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினாரென சங்கீதத்தில் வாசிக்கிறோம். அது உண்மையே. யாக்கோபின் ஜீவியத்தில் எவ்வளவு கோணல்கள்! சகலமும் ஆசீர்வாதமெனப் பிந்திக் கண்டார். யோசேப்பின் ஜீவியத்தில் எவ்வளவு அநியாயம், எவ்வளவு கோணல்கள்! எல்லாம் நன்மையே என்று பிந்தி அறிக்கையிட்டார். கிறிஸ்துவின் ஜீவியமும் அதுபோலவே நமது கோணல்களும் அப்படியே விளங்கும். ஆனால் தேவன் முன்செல்ல நாம் பின்செல்ல வேண்டும். அவர் நமக்கு முன்னேபோகிறார். பின்னேயல்ல. இரகசிய போலீசார் நமக்குப் பின்னாலயே வந்துபிடித்து அடைப்பார்கள். நம்மில் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து நம்மை நாசமாக்கும்படி அவர் நம்மைப் பின்தொடர்ந்து வரும் போலிசல்ல. நம்மோடு சேர்ந்து நடப்பவருமல்ல. அவர் யார்? நாம் யார்? கையோடு கைகோர்த்து நடப்பதற்கு நாம் இன்னும் அருகரல்ல. நாம் அவருக்கொப்பாகிறவரை சரிசமனமாய் பக்கத்துக்குப் பக்கம் சேர்ந்து நடப்பதற்கு நமக்குத் தகுதியல்ல. நமக்கு முன்னே கோணல்கள் குவிந்திருக்கின்றன. நம்மை அவற்றின் வழியாக நடத்தும் கர்த்தர், நமக்கு முன் செல்வதே சரி. கபோதியை வழிநடத்துகிறவன் முன் நடப்பானேயன்றி அவனைப் பின்செல்லமாட்டான். அவர் நமக்கு முன்செல்லும் தேவன். இதனாலே அவர் நமக்குப் பின்னும், நம்மோடும் இல்லை என்பது நமது கருத்தல்ல. நாம் சிந்திக்கிற விஷயத்துக்கேற்றபடி, அவர் நமக்கு முன் செல்வதே சரி முன்செல்லுதல் என்னும் வார்த்தை நமக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கிறது. குழந்தையை நடத்தும் தாய் முன் நடப்பது, குழந்தைக்கு உற்சாகமளித்து, பின்தொடர ஏவுகிறது. முன்செல்லுதல் ஆயத்தஞ்செய்வதையும் குறிக்கும். யோவான்ஸ்நானகன் முன்செல்லுகிறவனாக வந்து கர்த்தருக்கு வழியை ஆயத்தஞ்செய்தான். தேவன், இஸ்ரவேலர் பிரயாணத்தில் முன்சென்று, அவர்கள் எங்கே தங்கவேணும், எங்கே கூடாரங்களை அடிக்க வேணும் என்று நல்ல இடத்தை ஆயத்தம் செய்தார். நமக்கு முன் தேவன் செல்லுகிறார் என்பது, நமக்காகவே அவர் செல்லுகிறார் என்றும், நமக்கானவைகளை அயத்தம் செய்யும்படி செல்லுகிறார் என்றும் நமக்குப் போதிக்கிறது. "நமக்கு முன் தேவன்" என்பது உண்மையானால் நமது கவலைகள் ஓயவேண்டும். அமரிக்கையும் நம்பிக்கையும் நமது பலமாக விளங்க வேண்டும்.

நமது காரியங்களை நமக்காக முடிப்பவர் அவரே. வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர். இந்த வாக்கை நாம் நம்பவேண்டும். நம்பிக் காத்திருக்கவேண்டும். ஆத்திரமும், பதஷ்டமும் அவநம்பிக்கையின் பிள்ளைகள். மலைபோன்ற தேவன் முன்செல்லுகையில் நாம் ஏன் கலங்க வேண்டும்? அவருடைய தாமதம் மறுதலிப்பல்ல.

# 32. ஒருவனை இழுக்க அநேகர் பின்செல்ல

**"என்னை இழுத்துக்கொள்ளும் உமக்குப் பின்னே ஓடிவருவோம்" (உன். *1:4*).**

நாம் கடவுளை நினைப்பதும் தேடுவதும் அவர் செயலாகும். பாவத்தால் கடவுளுக்குத் தூரமாகி அவரை மறந்தோம். கிருபையுள்ள தேவன் தமது ஆவியால் நம்மை உயிர்ப்பிக்கிறார். அவர் பேச நாம் பதில் பேசுகிறோம். அவர் அன்பு பாராட்ட அதை அறிந்து பதில் அன்பு பாராட்டுகிறோம். அவரது அன்பின் கரம் நம்மை இழுத்துக்கொள்ளாவிட்டால் நாம் பாவத்திலேயே அமிழ்ந்து போவோம். இவ்வாறு கடவுள் கிரியை முந்தி, ஆரம்பித்தாலும், நாம் அதற்கு இணங்கவோ அல்லது எதிர்க்கவோ கூடிய சுயசித்தம் நமக்குண்டு. இணங்குகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். எதிர்க்கிறவர்கள் கெட்டுப்போகிறார்கள். கடவுள் வல்லவராயிருந்தும் நமது சித்தத்திற்கு விரோதமாய் அவர் நம்மைப் பலவந்தம் பண்ணுகிறவரல்ல. அப்படிச் செய்யக்கூடுமானால் ஒரு நிமிஷத்தில் உலகத்தை இரட்சித்து தேவராஜ்யத்தை ஸ்தாபித்திருப்பார். நாமாக அவரன்பின் சத்தத்திற்கு இணங்கவேண்டுமென்பதினாலேதான் அவர் இவ்வளவு நீடிய பொறுமையுடன் காத்திருக்கிறார். அநேகரைத் தமது அன்பின் கயிற்றினால் இழுத்துக்கொள்கிறார்.

### 1. இழுப்பின் மூலகாரணம்

பிதா "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்துக்கு வரான்" ஆண்டவர் யூதர்கள் நடுவில் சஞ்சரித்தார். அவரது ஒப்பற்ற ஜீவியத்தை அவர்கள்

கவனித்தார்கள். அவர் நிகரற்ற உபதேசங்களைக் கேட்டார்கள். அவர் செய்த அற்புத அடையாளங்களைக் கண்டார்கள். ஆகிலும் அநேகர் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வில்லை. தமது அன்பின் கரத்தால் அவர்களை இழுக்கிறார். அவர்களுக்கோ அவரை ஏற்றுக்கொள்ளமனதில்லை. பன்னிருவரை நம்பியிருந்தார். அவர்களில் ஒருவன் துரோகியானான், இவைகளைப்பற்றி ஆண்டவர் யோசித்த போது; "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்தில் வரமாட்டான்" என்று சொன்னார். இந்த வித்தியாசம் எப்போதும் நமக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது. கடவுள் அன்பும் கிருபையும் ஒன்றுபோல் எல்லார்மேலும் இறங்கும்போது சிலர் இணங்குவதும் சிலர் இணங்காமற்போவதும் எப்படி என்கிற ரகசியம் நமது புத்திக்கு விளங்கவில்லை. ஆனால் ரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் தங்கள் சாமர்த்தியத்தினால் அல்ல. பரம பிதாவே தங்களை இழுத்துக்கொண்டார் என்று அறிக்கையிடுகிறார்கள். "இரக்கம் பெற்றேன்" என்று பவுல் சொன்னார்.

இந்த மூலகாரணத்தை அறியாமல் அநேகர் தங்கள் குணப்படுதலை வேறு காரணங்களுக்குச் சாட்டுகிறார்கள். நான் கடவுளை அறியாதிருந்தேன், பலத்த வியாதி வந்து அவஸ்தைப்பட்டபோது, மனந்திரும்பிக் குணப்பட்டேன் என்றும், வேறு சிலர் தாங்கள் பெரிய ஆபத்துக்குத் தப்பினதால் குணப்பட்டோம் என்றும் சொல்லுகிறதுண்டு. லூத்தரும் அவர் சிநேகிதரும் நடந்துபோக. இடிவிழுந்து சிநேகிதர் மரித்ததே லூத்தர் குணப்படுதலுக்கு காரணமாயிருந்ததென்று சொல்லப் படுகிறது. மற்றவர்கள் எழுப்புதலான பிரசங்கங்களைக் கேட்ட சமயத்தில் குணப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவை யாவும் ஒரு விதத்தில் சரிதான். ஆனால் இவைகள் மூலமாய் நம்மைத் தம்மிடம் இழுத்துக் கொண்ட மூலகாரணரை நாம் அறிய வேண்டும். "என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடம் வரான்" இதை யோசிக்கும்போது நமக்கு எவ்வளவு சந்தோஷமும், தைரியமும், நிச்சயமும் உண்டாகின்றன. நமது இரட்சிப்பு பிதாவால் உண்டானது. அவர் இரட்சித்தவர்களை இடையில் கைவிடமாட்டார். "பிதாவே நீர் எனக்குத்தந்தவர்கள்" என்று ஆண்டவர் சொன்னது எவ்வளவு உண்மை!

## 2. உபகாரணம்

கிறிஸ்து, பிதா நம்மை இழுப்பது மெய்யாயினும் தமது குமாரன் மூலமாகவே இழுக்கிறார். வேறு வழியில்லை. சீனாய் மலையைக் கண்டு ஜனங்கள் பயந்து ஓட்டம் பிடித்தார்கள். கல்வாரியைக் கண்டு பாவிகள் இழுக்கப்பட்டார்கள். சங்கீதக்காரன் அறிவித்தபடி கல்வாரிச் சிலுவையிலே "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்தித்தது; நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்தது" கடவுள் தமது நீதியையும் அன்பையும் சிலுவையில் வெளியரங்கமாக்கினார். அவரது அளவில்லாத கிருபையின் ஐசுவரியம் சிலுவையிலிருந்து பிரவாகித்தது. சிலுவைக் காட்சியைப்போல் பாவியின் உள்ளத்தை உருக்கக் கூடியது வேறெதுவுமில்லை. எத்தனை அரிய உபதேசங்களைச் செய்தாலும், எவ்வளவு ஆழமான தத்துவங்களைப் பொழிந்தாலும், கடவுளைப்பற்றிய எவ்வளவு உயர்வான கொள்கைகளைப் போதித்தாலும், சிலுவை ஒன்றில்லையானால் ஒருவனும் ரட்சிக்கப்படமாட்டான். ஆண்டவரின் நிகரற்ற பரிசுத்த ஜீவியம் நம்மை ரட்சிக்காது; அந்தப் பரிசுத்தம் நம்மை வெட்கப்படுத்தும். அவரது உபதேசம் நம்மை ரட்சிக்காது; அந்த உபதேசம் நம்மைக் கலங்கச் செய்யும். அவரது அற்புதங்கள் நம்மை ரட்சிக்காது. அந்த அற்புதங்கள் நம்மைப் பிரமிக்கச் செய்யும். சிலுவைக்காட்சி ஒன்றே நம்மை இரட்சிக்கும். ஆகையால் ஆண்டவர் "நான் உயர்த்தப்பட்டிருக்கையில் எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்றார். ஆகையால் பிதா நம்மை தமது குமாரன் மரணத்தின் மூலமாய் இழுக்கிறார் என்பது நிச்சயம்.

## 3. இழுப்பின் பலன்

ஓடிவருவோம். "என்னை இழும் நாங்கள் ஓடி வருவோம்" இது இலக்கணப் பிழையல்லவா? என்னை இழுத்துக் கொள்ளும் நான் ஓடிவருவேன் என்றிருக்க வேண்டும். மொழி பெயர்த்தவர்கள் செய்த தப்பிதமோ? அச்சுக்காரர் செய்த பிழையோ? ஒருவரும் இதில் பிழை செய்யவில்லை. ஆவியானவர் உண்மையை அறிவித்திருக்கிறார். 'ஒருவனை இழுக்க அநேகர் பின்செல்ல' என்பது தேவ ஒழுங்கு. அதுவே நமது அனுபவமாகும். ஆபிரகாமை ஆசீர்வதிக்க அவருக்குள் உலகம் ஆசீர்வதிக்கப்படும் என்னும் பழையவாக்கும்; என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்

களாக்குவேன் என்னும் புதிய வாக்கும் இந்த உண்மைக்கு ஆதாரம். கர்த்தர் ஒரு பவுலை இழுக்க அவரால் எத்தனையோபேர் இழுக்கப்பட்டார்கள். ஒரு பேதுருவை இழுக்க அந்த முதல் நாளிலேயே மூவாயிரம்பேர் இழுக்கப்பட்டார்கள். ஒரு ஸ்பர்ஜனால் எத்தனை ஆயிரம்பேர், ஒரு மூடி பிரசங்கியால் எத்தனை ஆயிரம்பேர் இழுக்கப் பட்டார்கள். இதைப்போல் கணக்கற்ற திருஷ்டாந்தங்களைக் கூறலாம். இதுவே தேவ ஒழுங்கு. ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை. தனக்கென்று மரிக்கிறதுமில்லை. பிறருடைய நன்மைக்கோ தீமைக்கோ ஒவ்வொருவனும் காரணமாயிருக்கிறான். ஒன்று பிதாவிடம் சேர்க்கவேண்டும் அல்லது பிதாவை விட்டு சிதறடிக்க வேண்டும். ஒருவனும் சும்மாயிருப்பதில்லை. எப்பக்கம் இழுக்கிறான் என்பது அவனவனுடைய ஜீவியத்தை பொறுத்திருக்கிறது.

பிதா ஒருவனை இழுத்துக்கொண்டாரென்பதற்கு வேறே சாட்சி வேண்டியதில்லை. அவன் தன் அறிவுக்கும் சமயத்துக்கும் தக்கதாக மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பான். நெருப்பு தான் பற்றின இடத்தில் நிற்காமல் எங்கும் பரவும் சுபாவமுள்ளதாயிருப்பதுபோல, தேவன்பின் அக்கினி பெற்றவன் அநேகரை இழுத்துக்கொள்ளும் காந்தமா யிருப்பான். சிலர் இதை ஆட்சேபித்து: எங்களுக்கு இதுதானா வேலை; அதற்குப் போதகன்மார் பிரசங்கிகள் இல்லையா? எங்கள் மட்டுக்குப் பக்தியாய் இருந்தால் போதாதா? என்பார்கள். எங்கள் மட்டுக்குப் பக்தியாயிருக்கமுடியாது. பக்தி தனித்திருக்குமானால் அது சாகும். ஆண்டவர் ஒரு மனுஷனை ரட்சிக்கும்போது அவன் மற்றவர்களுக்கு ரட்சிப்பாயிருக்கும்படிக்கே ரட்சிக்கிறார். அவர் ஒருவனை ஆசீர்வதிக்கும்போது அவன் பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமென்பதே அவர் நோக்கம். 'உன் மட்டுக்குப் பக்தியாயிரு' என்று அவர் ஒருபோதும் சொன்னதில்லை. எங்கள் மட்டுக்குப் பக்திக்காரி ஒருத்தி ஆண்டவரிடம் அந்தரங்கமாக வந்து, ரகசியமாய் அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு ஆரோக்கியமானாள். அப்படியே மறைந்து வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்பது அவளது தீர்மானம். ஆண்டவரோ அவளை வெளியரங்கமாக்கி அவளைத் தைரியப்படுத்தி எல்லாருக்கும் முன்பாக தான் பெற்ற நன்மையை அறிக்கையிடவைத்தார். விளக்கு தனக்காகக் கொளுத்தப்படுகிற

தில்லை. மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கவே கொளுத்தப்படுகிறது. எங்கள் மட்டுக்கு எரிவோம் என்று அது மரக்காலால் மூடப்பட்டால் விளக்கு அவிந்து சாகும். இரைக்கிற கிணறு ஊறும். நீர்ப்பாய்ச்சுகிறவனுக்கு நீர்ப்பாய்ச்சப்படும். உள்ளவனுக்குக் கொடுக்கப்படும். பிறருக்கு ஆசீர்வாதமாயிருக் கிறவன் மேலும் மேலும் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தரால் இழுக்கப்பட்டவன் தனிமையாக மோட்சம் போகான். ரட்சிக்கப்படாதவன் தனிமையாக நரகம் போகான். குணப்பட்ட கள்ளன் யாரையும் ரட்சிக்கவில்லையென்று நினைக்க வேண்டாம். "இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிலிருப்பாய்" என்ற வசனப் பிரசங்கம் அநேகரை ஆண்டவரண்டை இழுத்ததை அவன் காண்பான். "என்னை இழுத்துக்கொள்ளும் நாங்கள் ஓடிவருவோம்."

## 33. அத்திப்பழக் காலமில்லை

***"அத்திப்பழக் காலமாயிராதபடியால் அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை" (மாற்கு 11:13).***

மரணத்தீர்ப்பின் நாள் நெருங்கவே ஆக்கினைக்குள்ளான மனுஷன் அங்கலாய்த்துத் தவிக்கிறான். மரணத்திகில் அவனை ஆண்டு கொள்கிறது. அவன் யாதொன்றும் செய்யக்கூடாமற் போகிறான். நமதாண்டவருடைய காரியமோ அப்படியல்ல. சீக்கிரத்தில் தமக்கு நேரிடப்போகிற கடும்பாடுகளையும், குரூரமான மரணத்தையும் அவர் அறிந்திருந்தும் மறைவான இடந்தேடி ஒளித்துக்கொள்ளவில்லை. தமது கிரியையில் சற்றும் தளரவுமில்லை. ஜனங்களுக்கு உபதேசிக்கவும் நோய்களைக் குணமாக்கவும், வாஞ்சையுள்ளவராகக் காலைதோறும் அவர் எருசலேமுக்கு வருகிறதும், மாலையில் பெத்தானியாவுக்குத் திரும்புகிறதுமாயிருந்தார். திங்கள் காலையில் அவர் எருசலேமுக்கு வரும் வழியில் ஒரு அத்திமரத்துக்குச் சம்பவித்ததை மாற்கு எழுதி வைத்திருக்கிறார். மார்க்க விரோதிகளும் மற்றவர்களும் ஆண்டவர் இந்த அத்திமரத்தைச் சபித்ததைக் குறித்து இந்நாள்வரை தர்க்கிக்கிறதுண்டு. கனிகாலமில்லாதபோது கனியைத் தேடுவதும், கனியில்லாததற்காக மரத்தைச் சபிப்பதும்

நியாயமாவென்று கேட்கிறார்கள். இந்த அற்புதத்திலிருந்து இரண்டு மூன்று குறிப்புகளைக் கவனிப்போம்.

### 1. இயேசுவின் பசி

"அவருக்குப் பசியுண்டாயிற்று" பெத்தானியாவிலிருந்து புறப்பட்டவர் ஒன்றும் சாப்பிடாமலே வெளியேறிவிட்டதாகத் தோன்றுகிறது. 'வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்' என்று அந்தப் பரிசேயன் சொன்னதுபோல, யூதரில் ஒரு வகுப்பார் திங்களையும் வியாழனையும் உபவாச நாட்களாக ஆசரித்து வந்தார்கள். இது தேவ ஏற்பாடாகயிராமல் அவர்களுடைய சுய ஏற்பாடாயிருந்தது. நமதாண்டவர் இந்த ஆசாரத்துக்குக் கீழடங்கி சாப்பிடாதிருந்தார் என்று நாம் நினைக்கக்கூடாது. கப்பர்நகூமில் பேதுருவின் வீட்டை விட்டு, அதிகாலையில் புறப்பட்டு வனாந்தரமார்க்கமாகச் சென்று ஜெபித்ததுபோல, இங்கேயும் ஜெபம்பண்ணும்படியாக இருட்டோடே பெத்தானியாவை விட்டு வயல்வெளிக்கு வந்திருக்கலாம். அப்படி வந்தவர் சாப்பாட்டை மறந்து ஆத்துமாக்களின் பேரிலுள்ள வாஞ்சையினால் நகரத்தை நோக்கி நடந்திருக்கலாம். "பகற்காலமிருக்குமட்டும் என்னை அனுப்பினவருடைய கிரியையைச் செய்ய வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது, என்ற அவருடைய சொந்தப்பிரமாணம் இப்போது அவரை அதிகமாய் நெருக்குகிறது. இராப்போஜனத்தில் சேருகிறவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் உபவாசத்தோடு சேருகிற வழக்கம் நமக்குண்டு. ஜெபவேளையும் காலைப்பலிசெலுத்தும் நேரமும் வருமுன்னே யூதர்கள் பொதுவாய் சாப்பிட மாட்டார்கள். நமதாண்டவர் சாப்பிடாதிருந்தது இது காரணமோ என்னவோ தெரியாது. ஒருவேளை காலைப் போஜனத்திற்கு வழிவகையில்லாத அவருடைய தரித்திரந்தான் காரணமோ சொல்லமுடியாது. காரணம் எதுவாயிருந்தாலும் ஒன்று நிச்சயம். அன்று காலையில் அவருக்குப் பசியுண்டாயிற்று. அந்தப்பசியினால் தூரத்தில் நின்ற ஒரு அத்திமரத்தண்டை போய் ஆசையோடு அண்ணாந்து பார்த்து அதன் கிளைகளில் கனியைத் தேடினார்.

ஆண்டவரே! இங்கே என்ன தேடுகிறீர் என்று ஒருவன் கேட்டால்: பசிக்கிறது, நாலைந்து பழங்கள் அகப்பட்டால்

சாப்பிடலாமே என்று பார்க்கிறேன் என்று அவர் சொல்லுவார். சகலத்தையும் உண்டாக்கின, சர்வத்துக்கும் மேலான கடவுள் அவர். சமுத்திரம் அவருடையது, ஆறுகள் அவருடையவை. கனிவர்க்கங்கள் அவருடையவை. போஜன வகைகள் அவருடையவை. நான் தாகமாயிருந்தால் உனக்குச் சொல்லேன். ஆறுகள் யாவும் என்னுடையவைகளே. நான் பசியாயிருந்தால் நான் உனக்குச் சொல்லேன். வனாந்தரத்திலுள்ள யாவும் என்னுடையவகைளே என்று அவர் சொல்லக்கூடும். இவ்வளவு ஐசுவரியமுள்ளவராயிருந்தும் அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான் களாகும்படிக்கு நமது நிமித்தம் அவர் தரித்திரரானாரே. இது எவ்வளவு கிருபை! பாவம் ஒன்று தவிர மற்றெல்லாவற்றிலும் நமக்கொப்பாகி சரீரத்தின் பாடுகள், தவிப்பு, பசி, தாகம், கண்ணீர் முதலிய யாவற்றையும் அவர் அனுபவித்திருக் கிறபடியால் நமக்காகப் பரிதபிக்கவும் நமக்கு உதவிசெய்யவும் அவர் பசியுள்ள ரட்சகராயிருக்கிறார்.

## 2. அத்திமரங்களின் விபரம்

பலஸ்தீனாவில் அத்தி மரங்கள் ஏராளம். பெத்தானியா, பெத்பகே, ஒலிவமலை, எருசலேம் முதலான இடங்கள் அத்திமரங்களால் நிறைந்த ஒரு பெருஞ்சோலையாகத் தோன்றும். தீத்துராயன் எருசலேமை முற்றிக்கைபோட்டு அதின் சோலைகளை அழிக்குமுன்னே தேசம் மிகவும் செழிப்பாக யிருந்தது. அத்திமரத்தின் நிழல் மகா குளிர்ச்சியாகவும், அதன் கனி மதுரமாகவுமாயிருக்கும். 'அவரவர் தங்கள் தங்கள் திராட்சச் செடியின் நிழலிலும் அவரவர் தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய் குடியிருந்தார்கள்' என்பது யூதருக்குள் வழங்கிவந்த ஒரு சுலோகம். நமது தேசத்தில் ரஸ்தாமார்க்கமாய் இரு பக்கங்களிலும் மரங்கள் நிற்பதுபோல, பலஸ்தீனாவில் முக்கியமாக ரஸ்தாமார்க்கமாய் இவ்வத்தி மரங்கள் நின்றன. அவைகளில் படியும் தூசி மரங்களின் வளர்ச்சிக்கு அனுகூலமென்றென்னப்பட்டது அவைகளில் உண்டாகும் கனிகள் யாவருக்கும் பொது.

நமதாண்டவர் தூரத்தில் ஒரு அத்திமரத்தைக் கண்டு அதில் கனியைத் தேடிப்போனார். அநேக அத்திமரங்கள் அவர் அருகில் நின்றன. அவைகளில் இலைகள் இல்லாததினாலே

அவைகளை அவர் நோக்கவில்லை. இந்த மரத்தில் இலைகளிருந்தபடியால் கனிகளும் இருக்குமென்று எண்ண இடமிருந்தது. அத்திமரங்களுக்கும் மற்ற மரங்களுக்கும் வித்தியாசம் இதுதான். மற்ற மரங்களில் முன்பு இலைகளும், பின்பு பூவும், அப்புறம் காயும், அப்புறம் கனியுமண்டாகும். அத்தியிலோ முதன் முறையான பூவும், அப்புறம் காயும், அப்புறம் இலையுமுண்டாகும். 'அத்திபூத்தாற்போல' என்கிற பழிமொழியுமுண்டு. காய்கள் சூரிய உஷ்ணத்தால் வெதும்பி உதிர்ந்து போகாதபடி, இலைகள் காய்களை மூடி அதன் கனிகளைப் பாதுகாக்கும். கடவுளுடைய ஞானம்தான் என்ன! 'கனி முந்த இலை பிந்த' என்று இவ்வத்திகளைக் குறித்துச் சொல்லப்படும்.

'அத்திப்பழக்காலமாயிராதபடியால்' என்று மாற்கு சொன்னது இயேசுவானவர் கனியைத் தேடிப்போனது தப்பிதம் என்று காட்டும்படிக்கல்ல. இதுவரை அவருடைய மகத்துவங்களைக் கண்ணாரக்கண்டு, அவர் வாக்கிலும் செய்கையிலும் வல்லமையும் ஞானமுள்ள ஆண்டவரென நிச்சயித்திருந்த சீஷர்கள் இந்த விஷயத்தில் அவர் தப்பிதம் செய்தாரென்று சொல்லத் துணிவார்களா? அத்திமரங்களைக் குறித்துச் சரித்திரக்காரர் சொல்லுகிறதைக் கவனித்தால் ஆண்டவர் கனியைத் தேடிப்போனது நியாயமெனத் தெரியவரும். வருஷத்தில் ஜனவரி, பெப்ரவரி மாதங்கள் தவிர மற்றக்காலமெல்லாம் அத்திமரத்தில் கனிகள் காணப்படும். வருஷத்தில் இருமுறை கனிகளைச் சேர்ப்பார்கள். ஒருமுறை திரளாகச் சேர்த்தபின் மறுபடியும் கனிசேர்க்குங்காலம் வரும்வரை அந்த மரம் முற்றிலும் கனியற்றிருக்கமாட்டாது. ஏதோ சொற்பமாய் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் கனிகள் இருக்கிறதுண்டு. இதற்குப் பின்கனி என்று பெயர். இந்தப் பின்கனி முற்றிலும் அற்றுப்போகுமுன்னே மறுபடியும் கனிகொடுக்க ஆரம்பிக்கும். இதில் முன்பு தோன்றும் கனிகளுக்கு முதல் கனி என்று பெயர். இந்த முதல் கனியில் ஜனங்களுக்கு அதிகப்பிரியம். "அது கையிலிருக்கும்போதே விழுங்கும்படியான முதல்கனி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அத்திமரத்தின் முதல்தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்." என்று கர்த்தரும் சொல்லுகிறார். (ஏசா. 28:4, ஓசி. 9:10).

மேலும் நமதாண்டவர் பலஸ்தீனா தேசத்திற்கு அந்நியரல்ல. அவர் அங்கே பிறந்து வளர்ந்தவராவார். அத்திப்பழங்களின் விஷயம் அவருக்கு நன்றாகத் தெரியும். 'அத்திப்பழக்காலமாயிராதபடியால்' என்று மாற்கு சொன்னது சரிதான். விரோதமாகச் சொல்லாமல் உண்மையைச் சொன்னார். அத்திப்பழங்களைத் திரளாகச் சேர்க்குங்காலம் இன்னும் வரவில்லை என்பதே அவர் கருத்து. ஆண்டவர் கூடை கூடையாகக் கனிகளைச் சேர்க்கும்படி மரத்தண்டை போகாமல் பசியைக் கொஞ்சம் தீர்த்துக்கொள்ளும்படிக்கு 'அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார்.' ஊதா நிறம் போன்ற பின்கனி ஏதாகிலும் இருக்கலாம் அல்லது இலைகளிருந்தபடியால் முன் கனியாவது தோன்றியிருக்கலாம். இரண்டுமில்லை. இது முன் ஒருபோதும் கனி கொடுத்தது மில்லை. இப்போது கனி கொடுக்கிறதுமில்லை. இனி கனிகொடுக்கப்போகிறதுமில்லை. ஆகையால் அது கனியற்ற மலட்டு மரமென்பது வெட்ட வெளிச்சம்.

### 3. இயேசு மரத்தைச் சபித்தல்

"இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது" என்றார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று (மத். 21:19) தமிழ் வேதாகமத்தில் 'இயேசு அந்த மரத்தைப் பார்த்து' என்றிருக்கிறது. ஆங்கிலத்தில் அந்த மரத்துக்குப் பிரதியுத்தரமாக அவர் சொன்னது என்றிருக்கிறது. அதாவது, அந்த மரம் தன்னிடத்தில் கனியிருக்கிறதென்று சொல்லி அவரை அழைத்ததுபோலவும், தம்மை ஏமாற்றின அந்த மரத்தோடு அவர் பேசி அதைச் சபித்ததுபோலவும் நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

பசிதாங்காக் கோபத்தினால் ஏழை மரத்தைச் சபித்தது நியாயமாவென்று விரோதிகள் கேட்கிறார்கள். மரத்தைச் சபித்ததற்குக் காரணம் பசியல்ல. ஆண்டவர் தமக்காகக் கவலைப்படுகிறவரல்ல. வனாந்தரத்திலே அவருக்குப் பசியுண்டானபோது சாத்தான் அவரைத் தந்திரமாய்ச் சோதித்தும் அவனுக்கு அவர் இணங்கவில்லை. நாவரண்டு தாகத்தோடிருந்த சமயத்திலுங்கூட தன் போஜனபானத்தை மறந்து, என் பிதாவின் சித்தப்படி செய்வதே எனக்குப் போஜனம் என்றார். இங்கே பசிமிஞ்சி நடக்கக்கூடாமல்

மரத்தடியில் அவர் படுத்துக்கொள்ளவில்லை. எப்போதும் போல நகரத்துக்குப்போய் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றி மலைப்பாதை நடந்து பெத்தானியாவுக்குத் திரும்பினார். எத்தனையோதரம் பசியோடும் தாகத்தோடும் இருந்திருக்கிறார். யாரைச் சபித்தார்? யாரைக் கெடுத்தார்? ஆகையால் மரத்தைச் சபித்ததற்குக் காரணம் பசியல்ல. வேறே மேலான ஒரு நோக்கம் இருக்க வேண்டும்.

மேலும் தனக்கும் பிரயோஜனமற்று, பிறருக்கும் பிரயோஜனமற்று, நிலத்துக்கும் கேடான இந்த மலட்டுமரம் பட்டுப்போனால்தான் என்ன? லூக்கா 13–ல் மூன்று வருஷமாய்க் கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையும், காணவில்லை. நிலத்தையும் கெடுக்கிறது. இதை வெட்டிப் போடு என்கிற உவமையைச் சொன்னபோது அது அநியாயம் என்று ஒருவரும் எதிர்க்கவில்லை. கோடாரியானது மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று யோவான் பிரசங்கித்தபோது அது நியாயம்தான் என்று ஜனங்கள் ஒத்துக்கொண்டார்கள். அது தப்பிதமென்று ஒருவரும் சொல்லவில்லை. 'கர்த்தராகிய நான் பச்சையான மரத்தைப் பட்டுப்போகப் பண்ணுவேன்' என்று தீர்க்கதரிசி சொன்னபோது ஒருவனும் எதிர்த்துப் பேசவில்லை. சில சமயங்களில் இடி இடித்துப் புசலடித்துப் பெருமழை பெய்து அத்திமரங்களில் அநேகம் அழிந்து போகிறபோது கடவுளோடு சண்டை போடுகிறவனைக் காணோம். மரத்தினடியில் நிற்கிறவர் இன்னார் என்று அறிந்தவன் வாய்திறக்க மாட்டான். சங்கடமெல்லாம் இங்கேதான் இருக்கிறது. அவர் உண்டாக்கின மரத்தைப் பட்டுப்போகப்பண்ண அவருக்கு அதிகார மில்லையா? மேலும் விளையாட்டுக்காக அதைச் சபிக்காமல் சர்வ ஜனத்துக்கும் பெரிய எச்சரிப்பாக அந்த மலட்டு மரத்தைச் சபித்தாரானால் அவரைக் குற்றப்படுத்துகிறவன் யார்?

ஆண்டவர் செய்த அற்புதங்கள் அநேகமுண்டு. அவைகள் ஜனங்களுக்கு நன்மையுண்டாக அவருடைய கிருபையிலிருந்து சுரந்தவைகள். இந்த அற்புதமோ அவரை நியாயாதிபதியாகக் காட்டுகிறது. பாவிகளை இரட்சிக்கிறது மாத்திரமல்ல, குணப்படாதவர்களை ஆக்கினைக்கேதுவான நியாயத்தீர்ப்புச்

செய்யும் அதிகாரம் அவருக்குண்டென்று இந்த அற்புதம் வெளிப்படுத்துகிறது. அத்திமரம் யூதஜனங்களுக்கு அடையாளம். இந்தப் பட்டுப்போன அத்தியின் மூலமாய் ஆண்டவர் அப்பொழுதிருந்த யூதச்சபையோடு பலமாய்ப் பேசினார். நாங்கள் மாத்திரம் தேவனுடைய ஜனங்களென்றும், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளென்றும் சொல்லி மற்றவர்களை மகா தீழ்ப்பாய் நினைத்தார்கள். மனுஷருடைய பார்வைக்குத் தங்களை நீதிமான்களாகக் காட்டினார்கள். அவர்களுடைய சிறப்பான ஆலயமும், ஆராதனைகளும், பண்டிகைகளும், புறம்பான ஆசாரங்களும் தூரத்திலுள்ள மனுஷரைக் கவர்ந்து கொண்டன. ஆண்டவர் இந்த யூத அத்தியைப் பார்த்து அதில் கனிகளிருக்குமென்று ஆவலோடு தேடிவந்தார். ஐயோ! ஏமாற்றமடைந்தார். எல்லாம் இலைகளேயன்றி கனிகளொன்றுமில்லை. உள்ளத்தில் உண்மையில்லை, ஜீவனில்லை, அன்பில்லை, விசுவாசமில்லை, வேத அறிவில்லை, மேசியா வந்தபோது அவரை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அவர்களுடைய ஆசாரங்களாகிய இலைகளையும், மாயமாகிய மரத்தையும், சுயநீதியாகிய வேரையும் அடியோடே பட்டுப்போகப் பண்ணினார். ரோமருடைய கோடாரியால் அவர்கள் வெட்டுண்டு உலகமெங்கும் சிதறுண்டுபோனார்கள். ஆலயமும் பட்டணமும் அடியோடே அழிக்கப்பட்டன. மாயமும் சுயநீதியுமாகிய அவர்களுடைய மார்க்கம் வேரோடே பட்டுப்போக வேண்டியது நியாயமே. அந்த மரத்தின் கனியை ஒருவனும் ஒருக்காலும் புசிக்கக்கூடாது என்று திருவுளம் பற்றினார். இந்த அற்புத உவமானத்தின்படி யூதஜாதி வெகுகாலமாய்ப் பட்டுப்போன நிலைமையிலிருந்தாலும் அந்த மரத்தைப்போல முற்றிலுமாய் அழிந்து போவார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்பும் காலம் வருகிறது. கர்த்தர் அவர்களுக்கு இரங்குவார். அப்பொழுது 'மரித்தோரிலிருந்து ஜீவனுண்டானது போலிருக்கும்' யூத அத்தி துளிர்க்கும் காலம் மகா சமீபம்.

இது நமக்கும் எச்சரிப்பல்லவா? நாம் திருச்சபையில் அங்கங்கள், நமக்கு ஞானஸ்நானமுண்டு, விசுவாசப் பிரமாணமுண்டு, வேதாகமமுண்டு. தேவாராதனைகளுண்டு, விசேஷித்த கூட்டங்களுண்டு, இன்னும் அநேக சிலாக்கியங்களுண்டு. நம்மிலே கனிகள் உண்டா? ஆண்டவர் புசிக்கத்

தேடுகிறது இலைகளல்ல, கனிகளே, நாம் கனியற்றிருந்தால் நமது முடிவு பயங்கரம். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்குச் சீஷராயிருப்பீர்கள்" என்றார்.

# 34. வல்லமையும் கிருபையும்

***"நானோ உமது வல்லமையைப் பாடி, காலையிலே உமது கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்" (பாடுவேன்) (சங். 59:16).***

ஆங்கில வேதாகமத்தில் சங்கீதங்களை வாசிக்கும்போது கிருபை (Grace) என்ற வார்த்தை மகா அபூர்வமாக வருகிறது. ஆனால் இரக்கம் (Mercy) என்ற வார்த்தையோ ஏராளமாக வருகிறது. தமிழில் சங்கீதங்களை வாசிக்கும்போது கிருபை என்ற வார்த்தை அடிக்கடி வருவதைக் காணலாம். (Mercy) என்ற வார்த்தை சிலவிடங்களில் இரக்கம் என்றும் வேறு இடங்களில் கிருபையென்றும் திருப்பப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். ஆகிலும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமான வார்த்தைகளில்லை. கிருபையை விஸ்தரிக்கப் போனால் அறியாமலே இரக்கம் என்ற சொல் வாயில் வரும். இரக்கத்தை விஸ்தரிக்கப்போனால் கிருபை என்ற சொல் வரும். (Mercy Seat) என்பதைக் கிருபாசனம் என்று சொல்லுகிறோம். அதுவே இரக்காசனமுமாகயிருக்கிறது.

அற்ப அறிவுடையோராகிய நமக்கு கடவுள் தம்மைப் பல லட்சணங்களினாலே வெளிப்படுத்தியிருக்கிறார். அவைகளில் ஒரு இலட்சணத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டு இதுதான் கடவுள் என்று நாம் சாதிக்காமல், எல்லா லட்சணங்களுக்கும் பொருந்தினவரே கடவுள் எனக்கொள்ள வேண்டும். சூரிய வெளிச்சத்தில் ஏழு நிறங்களுண்டு. அதில் மஞ்சளையோ, சிவப்பையோ பார்த்து அதுதான் சூரியன் என்று சொல்வது பொருந்தாது. ஏழு நிறமும் சேர்ந்தாலல்லவோ வெளிச்சம். தேவசமூகத்தில் நிற்கும் தூதர்கள் அவரைப் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்றுப் போற்றுகிறார்கள். நமது குறைந்த

அறிவுக்கு அவர் தம்மை கிருபை, ஞானம், சத்தியம், வல்லமை முதலிய குணங்களுடையவராக வெளிப்படுத்தியிருப்பது, நாம் ஒன்றை மாத்திரம் பிடித்துக்கொண்டு மற்ற இலட்சணங்களை மறந்து போகும்படிக்கல்ல. ஒருவன் அவருடைய இரக்கத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டு அவருடைய வல்லமையை மறந்து போவானானால் அவன் ஜீவியம் பலவீனப்பட்டுப் போகும். வேறொருவன் அவருடைய வல்லமையை மாத்திரம் பிடித்துக்கொண்டு, அவருடைய கிருபையை மறந்து போவானானால் அவனுடைய ஜீவியம் பயத்துக்கும் நடுக்கத்துக்கும் உரியதாகும்.

சங்கீதக்காரனோ கடவுளுடைய இலட்சணங்களைப் பிரிக்காமல் அவைகளைச் சேர்த்தே பாடியிருக்கிறார். தேவனே நான் உமது வல்லமையையும், கிருபையையும் குறித்துப் பாடுவேன் என்கிறார். **62**ம் சங்கீதம் **11,12**–ல் தேவன் ஒருதரம் விளம்பினார். இரண்டு தரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது. கிருபையும் உம்முடையது. (நியாயத்தீர்ப்பும் உம்முடையது) ஏனென்றால் தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர் என்று பாடியிருக்கிறார். கடவுளை அவருடைய சர்வ லட்சணங்களில் தியானித்துப் பாடுவது அவருக்கு ஆனந்தமாகயிருந்தது. ஆண்டவரே, உமது வல்லமையைக் குறித்து மாத்திரமல்ல. உமது கிருபையைக் குறித்து மாத்திரமல்ல. உமது வல்லமையையும், கிருபையையும் சேர்த்துப் பாடுவேன் என்கிறார்.

## 1. கிருபையற்ற வல்லமை எப்படிப்பட்டது?

கிருபையற்ற வல்லமை சர்வ வல்லமையாயிருந்தாலும் யார் அதற்கு முன் நிற்க விரும்புவான்? யார் அதைக் குறித்து மகிழ்ச்சியாகப் பாடுவான்? பூமியதிர்ச்சியினால் உண்டாகும் பயங்கரங்களும், உயிர் நஷ்டங்களும், பொருள் நஷ்டங்களும் எவ்வளவு! யார் அதன் வல்லமையைக் குறித்து மகிழ்ச்சியாய்ப் பாடுவான்? அக்கினிமலை கக்கி, அதன் பெருக்கினால் நகரங்கள் அழிந்து, உயிர்கள் மாளும்போது, யார் அதன் வல்லமையைப் பாடுவான்? பெரும் புசலடித்து மரங்கள் யாவும் வேரோடு பிடுங்கப்பட்டு, தேசம் நாசமாகி ஆயிரக்கணக்கான மனுஷரும், மிருகங்களும் மாண்டு போகும்போதுயார் அதன் வல்லமையைப் பாடுவான்? இப்படிப்பட்ட வல்லமைக்கு முன்பாக மனுஷர் பயந்து

நடுங்குவார்களேயன்றி மகிழ்ச்சியோடு பாடமாட்டார்கள். இவ்வுலகம் இரக்கமற்ற வெறும் சக்தியினால் ஆளப்படுமானால் இந்த உலகத்திற்கு ஐயோ! வல்லமையுள்ள பிசாசினால் ஆளப்பட்டதுபோலிருக்கும். சாத்தான் வல்லவன்தான். அவனில் இரக்கம், கிருபை கிடையாது. ஆகையால் அவன் வல்லமையினால் அழிவும், நாசமும், நரகமும் உண்டாகிறதேயன்றி யாதொரு பாக்கியமுமில்லை. சாத்தானுடைய கிருபையற்ற வெறும் வல்லமையைக் குறித்து நாம் மகிழ்ச்சியாய்ப் பாட முடியாது. கிருபையற்ற வல்லமைக்கு பாட்டில்லை.

## 2. வல்லமையற்ற கிருபை எப்படிப்பட்டது?

கிருபையற்ற வல்லமையைப்போல் வல்லமையற்ற கிருபை பயப்படத்தக்கதல்ல. கிருபையற்ற வல்லமை பயங்கரம்! வல்லமையற்ற கிருபையோ பிரயோஜனமற்றது. இரக்கம் இருந்தும் நன்மை செய்யும் சக்தி அதற்கில்லையென்றால் அப்படிப்பட்ட வெறும் கிருபையைக் குறித்து யார் மகிழ்ச்சியோடு பாடுவான்? அதே செடியின்கீழ் பிள்ளை தாகத்தினால் கதறுகிறது. ஆகார் என்ன செய்வாள்? இரக்கமில்லையோ? உருக்கமில்லையோ? எல்லாம் உண்டு. குழந்தையின் நாவை நனைக்க அவளுக்குச் சக்தியில்லை. எத்தனையோ நல்ல தாய்மார் அருமைப்பிள்ளைகள் வியாதியால் அவஸ்தைப்படும்போது இராப்பகலாய் கண்விழித்து, வேண்டிய பிரயாசம் எடுத்தும், மனதுருகி கண்ணீர் சொரிந்தும், பிள்ளை தவறிப்போகும்போது எவ்வளவாய் அங்கலாய்க்கிறார்கள். இரக்கம் உண்டு. காப்பாற்றும் சக்தி இல்லை. தேவன் கிருபையுள்ளவராயிருந்தும் அக்கிருபையின்படி நமக்கு நன்மை செய்ய வல்லமை அவருக்கில்லையென்றால் அப்படிப்பட்ட பிரயோஜனமற்ற வெறுங்கிருபையைக் குறித்து நாம் எப்படிப் பாடுவோம்?

## 3. வல்லமையும் கிருபையும் சேர்ந்திருப்பதின் மகத்துவம்

இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும்போது ஒன்று மற்றொன்றுக்குப் பலமாகிறது. வாக்கியத்தின் பின்பாகத்தைப் பாருங்கள். உமது வல்லமையையும் உமது கிருபையையும் குறித்துப் பாடுவேன். ஏனென்றால் "எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீ எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்"

என்று பாடுகிறார். தேவன் நமக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்க வேண்டுமானால் கிருபையோடு வல்லமையும், வல்லமையோடு கிருபையும் சேர்ந்திருக்க வேண்டும். கிருபை நமக்குத் தஞ்சமும் அடைக்கலமுமாயிருக்க விரும்புகிறது. வல்லமை அந்த விருப்பத்துக்கு சக்தி கொடுக்கிறது. வல்லமைக்கு தஞ்சமாயிருக்கக்கூடிய சக்தியிருந்தாலும் கிருபை அதை ஆண்டு நடத்த வேண்டும். நாம் பாடுவது வல்லமையற்ற கிருபை அல்ல, கிருபையற்ற வல்லமையுமல்ல. சங்கீதக்காரனோடு நாமும் சேர்ந்து கடவுளுடைய வல்லமையையும் கிருபையையும் குறித்துப் பாடலாம். தேவவல்லமை கிருபையோடு சேர்ந்திருப்பதால் அவருடைய வல்லமை நமக்கு ஆசீர்வாதமாகயிருக்கிறது. மின்னலிலிருந்து பாயும் மின்சார வல்லமையால் மரங்கள் முறிந்து விழும். ஆனால் அந்த மின்சார சக்தி தந்திக்கம்பியின் மூலமாய் வரும்போது பெற்றாரிடத்திலிருந்தும், சிநேகிதரிடத்திலிருந்தும் நமக்குச் செய்தியைத் துரிதமாய் கொண்டு வருகிறது. தேவவல்லமை அவருடைய கிருபையாகிய தந்திக்கம்பியின் மூலமாக வரும்பொழுது நமக்கு அவ்வளவும் ஆசீர்வாதமே.

அப்படியே அவருடைய கிருபையும் அவருடைய வல்லமையோடு சேரும்போது அவ்வளவும் நமக்கு ஆசீர்வாதமே. தேவகிருபையை வற்றிப் போகப்பண்ண யாரால் கூடும்? அது வற்றாக் கிருபையல்லவா? அது சர்வ வல்லமையால் தாங்கப்பட்ட கிருபையல்லவா? எவ்வளவு ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொண்டாலும் இன்னும் அது குறையாத கிருபையே. யாரோ ஒரு உபகாரி பக்தனாகிய ரோலண்டு ஹில் என்பவரிடத்தில் 100 பவுண்டு கொடுத்து இவர் அறிந்த ஒரு தேவ ஊழியனுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். ரோலண்டு ஹில் என்பவர் 100 பவுனையும் மொத்தமாய் அனுப்புவது உசிதமல்லவென்று கண்டு, 5 பவுனை மாத்திரம் தபால் மூலம் அனுப்பி வேறொன்றும் சொல்லாமல் 'இன்னும் வரும்' என்று மாத்திரம் உள்ளே எழுதி வைத்தார். கர்த்தரை நம்பிப் பிழைத்த அந்த ஏழை ஊழியன் நன்றியோடு அதைப் பெற்றுக் கொண்டு ஆண்டவரை ஸ்தோத்தரித்தார். சிலநாட் பொறுத்து மறுபடியும் 5 பவுன் வந்தது. முன்போல் 'இன்னும் வரும்' என்று உள்ளே

எழுதப்பட்டிருந்தது. இப்படியாக 100 பவுண்டுகளையும் அவர் பெற்றுக் கொள்ளுகிறவரை 'இன்னும் வரும்' என்கிற வாக்கு வந்து கொண்டேயிருந்தது. அந்த ஊழியன் அவ்வார்த்தைகளை தன் ஜீவ காலத்தில் ஒரு போதும் மறந்து போகவில்லை.

கடவுள் நமக்கு ஒரு நன்மை செய்யும்போது இன்னும் உனக்கு கிடைக்கும் என்று வாக்களிக்கிறார். உன் பாவங்களை மன்னித்தேன், இன்னும் உன்னை ஆசீர்வதிப்பேன். உன்னை சுத்தமாக்கினேன். இன்னும் உன்னைப் பரிசுத்தமாக்குவேன். உன்னை எனக்குப் பிள்ளையாக்கினேன். இன்னும் உன்னை என்னைப் போலாக்குவேன். உனக்கு வரம் தந்தேன். இன்னும் மேன்மையான வரம் அருளுவேன். உன்னைப் பலப்படுத்தினேன். இன்னும் உன்னை வல்லவனாக்குவேன். உனக்கு ஆத்துமாக்கள் தந்தேன். இன்னும் ஏராளமாய் கொடுப்பேன். உன்னை வழி நடத்தினேன். இன்னும் கடைசி வரை நடத்துவேன், உன்னை விடுவித்தேன், இன்னும் அநேக தீமைகளுக்கு விடுவிப்பேன். உன்னோடு பழகிக்கொண்டேன். இன்னும் அதிகமாய் என்னை உனக்கு வெளிப்படுத்துவேன். உன் குடும்பத்துக்கு நன்மை செய்தேன், இன்னும் திரளாகச் செய்வேன். ஆ! அவருடைய கிருபை சமுத்திரம். அவருடைய வல்லமையும் சமுத்திரம். இரு சமுத்திரங்களும் சேரும்போது என்ன ஆனந்தம்! நான் உமது வல்லமையைக் குறித்துப் பாடுவேன்! உமது கிருபையையும் பாடுவேன். உமது வல்லமை கிருபை சேர்ந்த வல்லமை. உமது கிருபை வல்லமை சேர்ந்த கிருபை.

# 35. ஒன்றே ஒன்று

**"தேவையானது ஒன்றே" (லூக். 10:42).**

பெத்தானியாவூர் எருசலேமுக்குச் சமீபமாயுள்ளது. தேவபக்தியுள்ள ஓர் குடும்பம் அங்கேயுண்டு. பரமபோதகர் வந்தால் போனால் அங்கே தங்குவார். அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டு உபசரிப்பார்கள். அவரும் அவர்களிடத்தில் அன்பாயிருந்தார். ஒருநாள் அவர் அங்கே வந்திருந்தபோது, மார்த்தாள் என்னும் சகோதரி பற்பல வேலைகளைச் செய்வதில் தன்னைக் கஷ்டப்படுத்திக்கொண்டாள். மரியாளோ

அவர் பாதத்தருகே உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளுக்கு இது பிரியமில்லை. அவள் ஆண்டவரைப் பார்த்து; “நான் தனியே வேலை செய்கையில் என் சகோதரி எனக்கு உதவி செய்யாமல் சும்மாயிருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா” என்றாள். இயேசு அவளைப் பார்த்து, “மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே” என்றார்.

‘தேவையானது ஒன்றே’ என்பதைப் பலரும் பலவிதமாய் அர்த்தம் பண்ணுவார்கள். பந்திக்கு அநேக பதார்த்தங்கள் என்னத்துக்கு, ஒன்று போதாதா என்பாரும் உண்டு. ஆனால் இதன் கருத்தை தேவனுடைய பிள்ளைகள் அறிவார்கள். நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கை நாம் பிரதானமாய்த் தேடவேண்டுமென்பதே நம் ஆண்டவருடைய கருத்து. உலகத்தார் பற்பல காரியங்களைக் குறித்துத் தங்களைப் பாரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பரமபிதாவின் மக்களுடைய மேலான நோக்கமும், வாஞ்சையும் ஒன்றே. அவர்கள் எந்த நிலைமையிலிருந்தாலும், எந்த உத்தியோகம் செய்தாலும், அவர்கள் பிரதானமாய்த் தேடுவதும் நினைப்பதும், பேசுவதும் ஒன்றே. மற்றெல்லாக்காரியங்களும் இதற்குக் கீழடங்கியும் இதற்கு அனுகூலமுமாகவேயிருக்கும்.

**1. பக்தனுடைய மேலான வாஞ்சை ஒன்று**

“கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன். அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும் படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்” *(சங். 27:4)*. தாவீதரசன் ஜெப பக்தன். ஆண்டவரிடத்தில் அவர் செய்த விண்ணப்பங்கள் ஏராளம். பெற்றுக்கொண்ட நன்மைகளும் ஏராளம். கர்த்தர் என் ஜெபத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டபடியினால் அவரில் அன்பு கூருவேன் என்று பாடினார். அந்த ஜெபங்களெல்லாம் அவசரத்திலும் ஆபத்துகளிலும் செய்யப்பட்டவைகள். ஆனால் இந்த ஜெபமோ அவருடைய ஜீவியத்தின் பிரதான வாஞ்சையாயிருந்தது. அதையே அவர் கேட்டார். அதையே அவர் தேடினார். ஜீவகாலமெல்லாம் அதையே நாடினார். தனக்கு மகிமையான அரமனை உண்டு.

சகல வசதிகளும் அங்கே இருந்தன. ஆனால் கர்த்தருடைய பணிவிடைக்காரர் தங்குகிற ஆலயத்தில் தாமும் தங்க விரும்புகிறார். அங்கே தனித் தியானம்பண்ணவும், வேத ஆராய்ச்சி செய்யவும் அதன் மூலமாய்க் கர்த்தருடைய மகிமையை காணவும் வாஞ்சிக்கிறார். உத்தம பக்தர்கள் கர்த்தரிடத்தில் அநேக நன்மைகளைக் கேட்டுப் பெற்றிருந்தாலும், அவைகளிலே திருப்தி அடையாமல் அவரையே அறிந்து கொள்ளவும், அவருடைய மகிமையைக் காணவும் வாஞ்சை கொள்வது இயல்பு.

பக்தனாகிய மோசேயைப்போல கர்த்தரோடு நெருங்கிச் சஞ்சரித்தவர்கள் யார்? அவரைப்போல அதிசயமான காரியங்களைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டவர்கள் யார்? என்றாலும் வெகுகாலம் அவருக்குள் மறைந்திருந்த வாஞ்சை ஒரு நாள் வெளிப்பட்டதல்லவா? ஆண்டவரே, 'உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்' என்று ஜெபித்தார். பரிசுத்த பவுலுக்கும் அப்படிப்பட்ட வாஞ்சையிருந்தது. "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன், குப்பையுமாக எண்ணுகிறேன்." என்றார். நமதாண்டவர் செய்த ஜெபத்தில் "பிதாவே நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூடயிருக்க விரும்புகிறேன்" என்றார். பக்தனுடைய மேலான வாஞ்சையும் ஜெபமும் அதுதான். ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல. ஆசீர்வதிக்கும் கர்த்தரையே அறியவும், அவரோடு பழகவும், அவருடைய மகிமையைக் காணவும் நாடுவதே உத்தம பக்தியின் லட்சணமாயிருக்கிறது.

## 2. பக்தனுடைய மேலான ஊழியம் ஒன்று

"நான் குருடனாயிருந்தேன். இப்போது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (யோவா. 9:25). பிறவிக்குருடனாயிருந்து பார்வையடைந்தவனை பரிசேயர் பிடித்து பல கேள்விகளைக் கேட்டு அவனோடு தர்க்கித்தார்கள். அவன் எவ்வளவு நேர்மையாய் உத்தரவு சொன்னபோதிலும் அந்தக் குருடர் அவைகளை

ஏற்றுக்கொள்ளாமல் நீ தேவனை மகிமைப்படுத்து, இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள். அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்போது காண்கிறேன். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான். விரோதிகளின் வாயை அடைப்பதற்கு இதைப்பார்க்கிலும் மேலான பிரசங்கம் உண்டா? அவன் வேறே எவ்வளவோ பேசலாம். எவ்வளவோ செய்யலாம், ஆகிலும் அவன் அனுபவ சாட்சியாய் அவர்களுக்கு முன் நிற்பதைப்போல் அவர்களை உணர்த்தக்கூடியது வேறொன்றுமில்லை.

இப்படிப்பட்ட சாட்சிகளே நம் சபைகளுக்குத் தேவை. கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்துக்கு நன்மைசெய்யும்படி எத்தனையோ பிரயத்தனங்களை கையாடி வருகிறோம். ஆஸ்பத்திரிகளை வைத்து நடத்தி வருகிறோம். பாடசாலைகளை வைத்துக் கற்றுக்கொடுக்கிறோம். ஆராதனைகளை நடத்திப் போதிக்கிறோம். வெளிப்பிரசங்கம் செய்கிறோம். அநேகப் புஸ்தகங்களையும் பிரதிகளையும் கொடுத்து வருகிறோம். இது தவிர, தாய்மார் கூட்டங்கள், வாலிபர் கூட்டங்கள், சகோதரிகளின் கூட்டங்கள், ராஜ குமாரத்திகளின் கூட்டங்கள், பிள்ளைகளின் கூட்டங்கள், ஓய்வுநாள் வகுப்புகள் முதலான அநேக முயற்சிகள் நடந்து வருகின்றன. இவைகள் யாவும் நல்லதே. ஆனால் ரட்சிப்பின் வல்லமையை மற்றவர்கள் கண்டு உணர்த்தப்பட வேண்டுமேயானால் 'முன்னே குருடனாயிருந்தேன், இப்போது காண்கிறேன்' என்று சொல்லக்கூடிய சாட்சிகள் நமக்கு வேண்டும். இந்த ஒன்று நமக்குத் தெரிந்திருந்தால் அதுவே போதும். பேச்சுத்திறமையும் பிரசங்கவல்லமையும் நமக்கில்லாதிருக்கலாம். இந்த ஒன்று தெரிந்தால் போதும். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் ரட்சிப்பின் அனுபவமுடையவர்களாயிருப்பார்களானால் எவ்வளவு மாட்சிமையாயிருக்கும்! முன்னே நான் உலகத்தான், இப்போது பரலோகத்தான். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும். முன்னே நான் செத்தவன். இப்போது நான் ஜீவன் பெற்றவன். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும். முன்னே நான் சத்துரு. இப்போது சமாதானம் பெற்றவன். இது ஒன்றுதான் எனக்குத் தெரியும். முன்னே பிசாசின் பிள்ளை. இப்போது தேவனுடைய பிள்ளை. இது ஒன்றுதான் எனக்குத்

தெரியும் என்று தேவன் நமது ஆத்துமாவுக்குச் செய்த நன்மைகளைக் குறித்து நாம் சாட்சி கொடுப்போமானால் அதற்கு நிகரொன்றுமில்லை. பக்தன் செய்யக்கூடிய மேலான ஊழியம் இதுதான். நாம் கிறிஸ்துவின் வல்லமையையும் அவர் ரட்சிக்கக்கூடியவர் என்பதையும் எவ்வளவு சாமர்த்தியத்தோடு எடுத்துக் கூறினாலும் நம்முடைய கண்கள் திறக்கப்படாதிருக்குமானால் அவ்வூழியத்தினால் என்ன பிரயோஜனம்? தற்கால ஊழியத்தில் அநேகம் அறிவின் ஊழியமேயல்லாமல் அனுபவ ஊழியமல்ல. அனுபவ ஊழியமே அப்போஸ்தலர் ஊழியம். அனுபவ ஊழியமே ஆசீர்வாதமே ஊழியம்.

### 3. பக்தனுடைய மேலான பார்வை ஒன்று

"நான் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி. *3:13–14*). பந்தய ஓட்டம் ஓடுகிறவன் தாறுமாறாய் ஓடமாட்டான். வலதுபக்கம் இடதுபக்கம் சாயவே மாட்டான். கொஞ்சம் ஓடி, கொஞ்சம் நின்று, கொஞ்சம் உட்கார்ந்து ஓடவுமாட்டான். ஒரே ஓட்டமாய் நேராக ஓடுவான். இவ்வளவு ஒழுங்காய் ஓடும்படி அவனை இழுக்கிறதென்ன? அவனுக்குமுன் வைக்கப்பட்டிருக்கிற பந்தயப்பொருள் அல்லவா? பக்தனுடைய மேலான பார்வை பிதாவின் வீடு, அங்கே அவனுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கும் நன்மைகளை அவன் வாஞ்சையோடு பார்க்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக தன் ஜீவனாகிய கிறிஸ்துவையும் அங்கே காண்கிறான். இந்த மேலான பார்வை ஒருபோதும் அவனை விட்டு விலகுகிறதில்லை. நட்சத்திரம் சாஸ்திரிகளை வழிநடத்தினாற்போல் இந்தப் பரம அழைப்பின் பந்தயப்பொருள் பக்தனை ஜீவபாதையில் வழிநடத்துகிறது. அவன் ஜெபத்தில் வாஞ்சைகொள்வது இந்தப் பார்வையினாலேயே அவன் அடிக்கடி வேதத்தைத் திறப்பது இந்தப் பார்வையினாலேயே அவன் ஊக்கமாய் உழைப்பது இந்தப் பார்வையினாலேயே. அவன் உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகிப்பது இந்தப் பார்வையினாலேயே. இக்காலத்துப் பாடுகள் இனி அவனில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று அறிந்திருக்கிறான். அவன் சோர்ந்து நின்றுவிடாமல் முன்னேறிச் செல்வதற்குக் காரணம்

இந்த மேலான பார்வையே. அவன் ஜீவியம் மறுரூபமாவது இந்தப் பார்வையினாலேயே, ஸ்தேவானைப்போலும் மற்றப் பக்தர்களைப்போலும் இவன் சமாதானமாய் மரிப்பதும் இந்தப் பார்வையினாலேயே, பந்தயப்பொருளை நோக்காதவன் சரியாய் ஓடமாட்டான். நாம் எங்கே போனாலும் இந்தப் பரம பார்வையை விட்டு கண்களை விலக்காதிருப்போமாக.

## 4. அவபக்தனுடைய வாஞ்சையும் ஒன்றே

*"நான் ஒன்று செய்வேன்" (லூக். 12:18).* நாட்டமும் வாஞ்சையும் பக்தர்களிடத்தில் மாத்திரமல்ல. அவபக்தர்களிடத்திலும் உண்டு. ஆனால் அது மேலான வாஞ்சையல்ல. மதிகெட்ட ஐசுவரியவானுடைய தீர்மானத்தைப் பாருங்கள். 'நான் ஒன்று செய்வேன்.' என்று அப்போஸ்தலன் சொன்னதுபோலவே இவனும் சொல்லுகிறான். ஆனால் அப்போஸ்தலன் மோட்ச பேரின்பத்தை நாடினார். இவனோ இவ்வுலகத்தையே நாடினான். களஞ்சியங்களை இடிப்பேன், பெரிதாகக் கட்டுவேன், என் தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைப்பேன் என்கிறான்.

தன் ஆத்துமாவை நோக்கி: ஆத்துமாவே! உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைத்திருக்கிறேன். இனி நீ இளைப்பாற வேண்டியதும் புசிக்க வேண்டியதும், குடிக்க வேண்டியதும் பூரிக்க வேண்டியதுமே தவிர உனக்கு வேறே வேலையில்லை என்கிறான். இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் திடீரென ஒரு சப்தம் உண்டாயிற்று. மதிகேடனே! உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரி எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்று தேவன் கேட்டார். அவனுக்கு என்னமாயிருந்திருக்கும், ஐயோ, உலகத்தாரில் அநேகர் இப்படியே மாண்டு போகிறார்கள். அவர்கள் இந்த உலகத்தின் மகிமையை, உலக இன்பங்களை, உலகக் கல்விகளை, உலக ஐசுவரியத்தை, இவ்வுலகத்திலுள்ளவைகளையே முழுவாஞ்சையாய்த் தேடுகிறார்கள். அதற்கென்றே பிழைக்கிறார்கள். அதற்கென்றே பாடுபடுகிறார்கள். அவர்கள் தேடுகிறது அவர்களுக்குக் கிடைப்பதும் உண்மையே. அந்த ஐசுவரியவானுடைய நிலம் நன்றாய் விளைந்ததேயன்றி பட்டுப்போகவில்லை. பக்தியற்றவர்கள் இவ்வுலகில்

கைவிடப்பட்டவர்களென்று நாம் எண்ணக்கூடாது. பார்க்கப்போனால் பக்தர்களைப்பார்க்கிலும் அவர்களே உலக விஷயத்தில் மேன்மையையும் செல்வத்தையும் அடைந்திருக்கிறார்கள். 'இவ்வுலகில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கும் உலக மக்கள்' என்று ஆவியானவர் சொல்லுகிறார். ஆனால் பக்தர்களுக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசமென்னவென்றால், பக்தர்களுடைய கொஞ்சமும் கிறிஸ்துவும், அவபக்தர்களுடைய ஐசுவரியமும், கிறிஸ்து இல்லாமையும். கிறிஸ்துவற்ற ஐசுவரியத்தைப்பார்க்கிலும் கிறிஸ்துவோடுகூடிய கொஞ்சமே நல்லது. 'கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவா' என்று நாம் சொல்லக்கூடுமானால் அதுவே பாக்கியம்.

## 36. அதிசய அன்பு

***"பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்" (யோவா. 15:9).***

கர்த்தராகிய இயேசுவின் அன்பு ஆச்சரியம். ஏனென்றால் நம்மை ரட்சிக்கும்படிக்கு அவர் அடைந்த கஷ்டங்களும் பட்ட பாடுகளும் அதிகம். வானைவிட்டு இப்புவியில் வந்தார். மகிமையை அகற்றி தரித்திரரானார். பசியிலும் தாகத்திலும் இருந்தார். தாபரிக்க இடமற்று வனாந்தரங்களில் தங்கினார். நிந்திக்கப்பட்டார், துப்பப்பட்டார், அடிக்கப்பட்டார், சிலுவை மரத்தில் அறையப்பட்டு மகா குரூரமும் வேதனையுமான மரணம் அடைந்தார். இவைகளைப்பார்க்கும்போது அவர் அன்பு அதிசயமே என்று பேசிக்கொள்ளுகிறோம். ஆனாலும் அது எவ்வளவு பெரிய அன்பென்று நாம் கண்டதுண்டா? அதைத்தான் ஆண்டவர் இங்கே சொல்ல விரும்புகிறார். "என் பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல" என்கிறார். பிதாவுக்கும் நித்திய சுதனுக்கும் உள்ள அன்பின் பெருக்கத்தை அறிந்தவன் யார்? அது இவ்வளவு தான் என்று சொல்லக்கூடியவன் யார்? பிதா தமது அருமைக்குமாரன் பேரில் வைத்திருக்கும் நேசத்திற்கு அளவுண்டோ? அது சமுத்திரம் போன்றதோ அல்லது அதிலும் விசாலமோ? என்

பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல என்கிறார். பிதா குமாரன்பேரில் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு பெருக்கமோ, அதே பெருக்கமாய் அவர் நம்மிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதல்லவா வசனத்தின் கருத்து. இந்த நீசப்பாவியை இவ்வளவு நேசிக்க இவன் எம்மாத்திரம்? கர்த்தரே இதைச் செய்யாவிட்டால் வேறே யார் இதைத் துணிந்து சொல்லக்கூடும்? வேறே யார் சொன்னபோதிலும் நாம் எப்படி நம்பக்கூடும்? ஆக பாவிக்கு தேவன் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியது.

கிறிஸ்துவின் மூலம் விளங்கின இந்த அதிசய அன்பில் நாம் நிலைத்திருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நிலைத்திருப்பது என்றால் சோர்ந்துபோவதல்ல, குளிர்ந்து போவதல்ல, பிரிந்துபோவதல்ல, மாறிப்போவதல்ல. எக்காலத்திலும் செடியில் கொடி ஒட்டிக்கொண்டிருக்கும் வண்ணமாய் அவரது பேரன்பில் வேரூன்றி நிலைபெற்றிருக்க வேண்டும். அந்த அன்பு எப்படிப்பட்டதென்று பார்ப்போம்.

### 1. அது பகைவரை மேற்கொண்ட பலத்த அன்பு

நாம் அவரை நினைக்கவில்லை. நாம் அவரைத் தேடவில்லை. நாம் பக்தியாய் நடக்கவில்லை. அக்கிரமத்திலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்தோம். நமது துர்கிரியைகளினால் தேவனுக்குச் சத்துருக்களாயிருந்தோம். தேவனோ இவைகள் ஒன்றையும் எண்ணாமல் எப்படியாவது நம்மை இரட்சிக்கும்படி சித்தமானார். "குறித்தகாலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" இப்படி 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.'

அன்பைப்போல் பாவியின் நெஞ்சை உருக்கக்கூடியது வேறொன்றுமில்லை. அன்று சீனாய் மலையில் இடிமுழக்கத் தோடும், மின்னலோடும், அக்கினி புகைக்காடோடும், பலத்த சத்தத்தோடும், பூமியதிர்ச்சியோடும், கர்த்தர் தமது ஜனங்களைச் சந்திக்க வந்தபோது ஜனங்கள் எல்லாரும் பயந்து நடுநடுங்கிப் போனார்கள். தேவனைச் சந்திக்கவோ, அவர் சத்தம் கேட்கவோ ஜனங்களுக்குப் பிரியமில்லை. இதோ நாங்கள் பாளையத்திற்கு ஓடிப்போகிறோம் என்றார்கள். அன்று

ரட்சிப்பைத் தேடினவன் யார்? அக்காட்சி அவ்வளவு பயங்கரமாயிருக்கும்போது கர்த்தரை எவன் கிட்டிச் சேருவான்?

அன்பு ஜெயித்தது! நான் பெருந்தோஷியாயிருக்க அவர் என்னை வெறுத்துத் தள்ளாமல் என்னை மீட்கத் தம் உயிரை விட்டாரே! இது அதிசய அன்பல்லவா!! நான் இனி எப்படி அவரை மறப்பேன்? என் அன்பருக்கு விரோதமாக நான் எப்படிப் பாவம் செய்வேன் என்று விசுவாசி அவருடைய அன்பில் மயங்கிப் போகிறான். ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பையன். இளையது பெண். பையன் பொல்லாதவன். தன் தங்கையை அடிப்பதும் அது அழுகிறதைப் பார்ப்பதும், அவனுக்கு மிகச் சந்தோஷம். தாய் மகனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லியும் பிரயோஜனமில்லை. ஒருநாள் வெளியே விளையாடிக்கொண்டிருக்கும்போது தங்கையை அடித்தான். பிள்ளை அழுதுகொண்டு தாயண்டை வந்தது. தாய்க்கு மிகவும் வருத்தம். ஆகிலும் ஒரு உபாயம் செய்தாள். மகளைப் பார்த்து: அம்மா உன் அண்ணனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லியும் பிரயோஜனப்படவில்லை. நீ ஒன்று செய்வாயானால் ஒருவேளை அவன் உள்ளம் உருகி உன்னை அடிப்பதை நிறுத்துவான் என்று எண்ணுகிறேன். நீ இப்படியே அழுதுகொண்டு போய் உன் அண்ணன் கழுத்தைக் கட்டி அவன் முகத்தில் முத்தமிடு; அப்படியாவது அவனுக்குப் புத்தி வரலாம் என்று சொன்னாள். பிள்ளை அப்படியே போய் கண்ணீர் நிறைந்த தன் முகத்தை அவன் முகத்தில வைத்து அவனை முத்தமிட்டது. கல்லான அவன் உள்ளம் அன்று உடைந்தது. தங்கையை அடிப்பதை அன்றே விட்டான். அன்பு ஜெயித்தது. சகோதரனே, சகோதரியே, உன் அருமை இரட்சகரின் அன்பு உன்னை ஜெயித்ததா? அவர் கண்ணீரினால் மாத்திரமல்ல, முள்முடியிலிருந்து தமது முகத்தில் வடிந்த திருஉதிரத்தோடு உன்னை முத்தமிட்டாரே. உன் உள்ளம் உருகவில்லையா? அவர் பேரன்பு உன்னை மேற்கொள்ளவில்லையா? யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார். ஆம், ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். இதை வாசிக்கும் சகோதரனே! நீயும் அப்படிச் சொல்லக்கூடுமா?

**2. அது சற்றும் மாறாத அன்பு**

சாத்தானுக்கு வேதம் தெரியும். ஆனால் அவன் அதைத் தந்திரமாய், தப்பிதமாய் உபயோகிப்பான். அவன் வேதவாக்கியங்களை எடுத்து நமது ஆண்டவரிடம் பேசினான். அவைகளை எவ்வளவு மாற்றிச் சொன்னான் என்பதைக் கவனியுங்கள். வேதவாக்கியங்களை நாம் தியானிக்கும்போது ஆவியானவர் அதின் கருத்தை விளக்குகிறாரா? அல்லது சாத்தான் அதற்கு வியாக்கியானம் சொல்லுகிறானா என்பதைப்பற்றி நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பைக் குறித்து, நமக்குத் தப்பான எண்ணத்தை உண்டாக்குகிறவன் சாத்தான். நாம் வேதம் வாசித்து, ஜெபம்பண்ணி, கொஞ்சம் பக்தியாய் நடக்கும்போது ஆண்டவர் நமது பேரில் அன்புள்ளவராயிருப்பதுபோல் காட்டுவான். நாம் ஏதோ ஒரு தப்பிதத்தைச் செய்து மனம் சோர்ந்து வாசிக்கவும், ஜெபிக்கவும் கூடாமலிருக்கும் போது கர்த்தர் நமது பேரில் கோபமாயிருப்பதாக மனதுக்குக் காட்டுவான். வேறே ஏதாவது ஒரு கஷ்டம், ஒரு நஷ்டம் நமக்கு நேரிடுமானால் உடனே ஆண்டவர் உன்னை மறந்தார். உன் பேரில் கோபமாயிருக் கிறார், உன்னைக் கைவிட்டார் என்று மனதில் பேசுவான். நாமும் அப்படிப்பட்ட எண்ணங்களை நம்பி மனம் சோர்ந்து போவதுண்டு. நம்மை இன்னும் அதிகமாய்க் கெடுப்பதற்கு சாத்தான் செய்கிற உபாயம் இது.

ஆனால் ஆண்டவரின் அன்போ ஒருபோதும் குறைவதில்லை. அவருடைய அன்பு மாறுவதுமில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் தமது கிருபையில், அன்பில், உருக்கத்தில் மாறாதவராகவேயிருக்கிறார். நாம் அடிக்கடி மாறிப்போகிறமேயன்றி அவர் ஒருபோதும் மாறுகிறதில்லை. கெட்ட குமாரன் தகப்பனுடைய ஆஸ்தியை துன்மார்க்கத்தில் அழித்து, பஞ்சத்தில் வறுமையடைந்து, பசியினால் தவிக்கும் காலத்தில் தகப்பனை நினைத்துப் புறப்பட்டு வந்தான். வருகிறவழியில் தகப்பனைப்பற்றி எத்தனையோ தகாத நினைவுகள் அவன் உள்ளத்தில் வந்தன. என் தகப்பன் என்னை ஏற்றுக்கொள்ளுவாரோ என்னவோ? மகன் என்று சொல்வாரோ என்னவோ? குற்றத்தை மன்னிப்பாரோ என்னமோவென்று சந்தேகத்தோடும் பயத்தோடும் வந்தான். தகப்பனண்டை வந்தபோதோ தான் நினைத்த நினைவெல்லாம்

சுத்தத் தப்பென்றும், தகப்பன் அன்பிலும், உருக்கத்திலும் சற்றும் மாறாதவராயிருந்தார் என்றும் கண்டு ஆச்சரியப்பட்டான்.

சகோதரனே, நீ பலதரமும் மாறுகிறாய். கொஞ்சநாள் பக்தியும், கொஞ்சநாள் அவபக்தியும்; கொஞ்சநாள் ஜெப ஜீவியமும் கொஞ்சநாள் பாவ ஜீவியமும்; கொஞ்சநாள் வேதவாசிப்பும் கொஞ்சநாள் கதைகள் வாசிப்பும்; கொஞ்சநாள் பக்தர் சகவாசமும் கொஞ்சநாள் துஷ்டர் சகவாசமும்; இப்படியாக உன் ஆண்டவர் பார்வையில் உன் ஜீவியம் மாறிமாறிப் போகிறது. ஆனாலும் உன் ஆண்டவருடைய அன்போ, உன்பேரில் மாறவில்லை. நீ இன்று அவரிடம் போய் கால்மணி நேரம் அவரோடு பேசிப்பார். அப்போது அன்பாயிருக்கிறாரோ கோபமாயிருக்கிறாரோ என்பதை நீயே கண்டு கொள்வாய். அவரிடத்தில் போகாமலிருந்து கொண்டு அவருடைய அன்பைச் சந்தேகிப்பது சரியல்ல.

பூரண சந்திரன் பிரகாசித்த ஓர் இரவில் இரண்டு பையன்கள் ஒரு கிணற்றண்டை போனாாகள். கிணற்று ஜலத்தின்மேல் சந்திரனுடைய சாயல் அழகாய்க் காணப்பட்டது. ஒருவன் அதைக் கண்டவுடனே, ஆ! இது எவ்வளவு அழகான சந்திரன் பார் என்றான். மற்றவனோ குனிந்து ஒரு சிறு கல்லை எடுத்து கிணற்று தண்ணீரில் போட்டான். போட்டவுடனே சந்திரன் சாயல் உடைந்து மறைந்து போய்விட்டது. ஐயோ! சந்திரன் உடைந்து போய்விட்டதே! அது காணாமற்போய் விட்டதே! என்று அந்தப் பையன் கதறினான். மற்றவனோ அவன் தலையைப் பிடித்து மேலே நிமிர்த்தி, சந்திரன் உடைந்து போய்விட்டது என்கிறாயே, அதோ பார் ஆகாயத்தில் அழகான சந்திரன் அப்படியே இருக்கிறது என்று காட்டினான். இதற்குள்ளாக கல்லால் கலங்கின தண்ணீர் அமர்ந்தது. மறுபடியும் முன்போலவே சந்திரனின் அழகான சாயல் தண்ணீரில் காணப்பட்டது. நமது இருதயம் கர்த்தருக்கு முன்பாக அமர்ந்திருக்கும்போது அவருடைய அன்பின் சாயல் நமது உள்ளத்தில் பிரகாசிக்கும். நாம் அதினால் எவ்வளவோ சந்தோஷப்படுகிறோம். ஆனால் ஒரு சிறு பாவமாகிய கல் உள்ளத்தில் விழுந்தவுடனே பெரிய குழப்பமுண்டாகி சமாதானத்தை இழந்து போகிறோம். அவருடைய அன்பை அனுபவிக்கக்கூடாமல் சற்று நேரம் தத்தளிக்கிறோம். ஆனால் இயேசுவோ அன்பின்மயமாகவேயிருக்கிறார். நாம் பாவம்

செய்வதினால் நமக்குள் மாறுதலைக் காண்கிறோமேயன்றி அவர் மாறுகிறதில்லை. நாம் அவரிடம் போய் தப்பிதத்தை அறிக்கையிட்டுச் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது மறுபடியும் அவருடைய அன்பின் வடிவவை நமது உள்ளத்தில் காணலாம்.

### 3. அது முற்றுமுடிய இரட்சிக்கும் அன்பு

"அவர் தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தம் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" சீஷர்களிடத்திலும் எவ்வளவோ குறைவுகள் காணப்பட்டன. அவரிடத்தில் அவர்கள் வைத்த விசுவாசமும் அன்பும் குறையக்கூடியதும், மாறக்கூடியதுமாயிருந்தது. ஆகிலும் அவரோ அவர்களிடத்தில் பூரணமாய் அன்பு வைத்தார். முடிவு பரியந்தம் அப்படியே அன்பாயிருந்தார். அவர் மாறாத அன்பராயிருக்கிறபடியினாலே நம்மை இடையில் கைவிட்டு விடாமல் முற்றுமுடிய ரட்சிக்கக்கூடியவரா யிருக்கிறார்.

இங்கிலாந்திலிருந்து ஒரு மனுஷன் அமெரிக்காவுக்குப் போனான். கொஞ்சநாள் சென்று ஸ்பானியருடைய நாடாகிய கியூபா என்னும் இடத்துக்குச் சென்றான். அங்குள்ளவர்கள் இந்த மனுஷனை ஒரு வேவுகாரன் அல்லது ஒரு திருடன் என்று நினைத்துப் பிடித்துக் கொண்டார்கள். நான் திருடனுமல்ல, வேவுகாரனுமல்லவென்று அவன் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அங்கே ஆங்கிலேய ஸ்தானாதிபதியும், அமெரிக்க ஸ்தானாதிபதியும் இருந்தார்கள். அவர்களிடத்தில் இந்த ஏழை மனுஷன் போய் தனக்கு நேரிட்டிருக்கிற ஆபத்தை அறிவித்து அவர்களுடைய உதவியைத் தேடினான். அவர்கள் ஸ்பானிய அதிகாரி களிடத்தில் சென்று இந்த மனுஷன் யாதொரு குற்றமற்றவ னென்று நாங்கள் அறிவோம், நீங்கள் இவனுக்கு யாதொன்றும் செய்யக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி யிருந்தும் அந்த மனுஷனைக் கொன்றுபோடும்படி ஒரு நாளைக் குறித்து அந்நாளில் அவனைக் கொலைக்களத்திற்குக் கொண்டு போனார்கள். ஏழை மனுஷன் மரணத்திகிலால் வேர்வை கொண்டு மயங்கித் தவித்தவனாக குண்டுக்கு எதிர்பார்த்து நிற்கிறான். இத்தருணத்தில் இரண்டு ஸ்தானாதிபதிகளும் வண்டியில் வேகமாக வந்து, அதிகாரிகளிடத்தில் யாதொன்றும் பேசாமல் சாவை எதிர்நோக்கித் தூரத்தில் உட்கார்ந்திருக்கும்

அந்த ஏழை மனிதனிடத்தில் ஓடி, ஆங்கிலேய கொடியினாலும், அமெரிக்க கொடியினாலும் அந்த மனுஷனை மூடிவிட்டு, அதிகாரிகளைப் பார்த்து; உங்களுக்குத் தைரியமுண்டானால் இப்போது அந்த மனுஷனை சுடுங்கள் பார்க்கலாம் என்றார்கள். எவன் சுடத்துணிவான்? பெருந்திகில் அவர்கள்மேல் விழுந்தது. கொடியில் குண்டுபடாமல் மனிதன் பேரில் குண்டு படப்போகிறதில்லை. கொடிகளைச் சுட்டால் இரண்டு பெரிய ராஜ்யங்களின் விரோதம் உண்டாகி தங்களுக்கு அழிவு நேரிடும். ஆகையால் போர்வீரரும், அதிகாரிகளும் அப்படியே திரும்பிப் போய்விட்டார்கள். அந்த மனிதன் இவ்விதமாய் அந்த இரண்டு நாடுகளின் கொடிகளினால் இரட்சிக்கப்பட்டான்.

நாம் இரட்சிக்கப்பட இரண்டு கொடிகள் நமக்கும் உண்டு. ஏசாயா **58:19**இல் வருகிற ஆவியின் கொடி. வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார். "என்னை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார். என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே" **(உன். 2:4)**. கர்த்தராகிய இயேசு தமது வல்ல ஆவியினாலும் தமது அதிசய அன்பினாலும் நம்மைப் பாதுகாக்கும்போது நமக்குப் பயமேன்? அவருடைய வல்ல இருகரங்களுக்குள் நாம் தங்கும்போது நமக்குச் சேதமேது? அவருடைய கொடியின் கீழ் தங்கும்போது நம்மை ஜெயிப்பவன் யார்? நம்மைக் குற்றப்படுத்துகிறவன் யார்? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? அவருடைய பேரன்பு நம்மைத் தேடிக் கண்டுபிடித்தது. நமது திரளான பாவங்களை மூடிவிட்டது. நம்மை நீதிமான்களாக்கிவிட்டது. நம்மை தேவ மக்களாக்கிவிட்டது. நம்மை உன்னதத்திற்கு உயர்த்திவிட்டது.

சகோதரனே, உன்னை நேசித்த ஆண்டவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார். மனுஷரால் உனக்கு என்ன நேரிட்டாலும், சாத்தானால் உனக்கு என்ன நேரிட்டாலும் நீ சோர்ந்து போகாதே. அன்பின் ஆண்டவர் உன்னை முற்றுமுடிய ரட்சிக்க வல்லவராயிருக்கிறார். இப்பேர்ப்பட்ட அன்பரில் நீ நிலைத்திருப்பாயாக. வேதவாசிப்பினாலும், ஜெப தியானத்தினாலும், பிறருக்கு அவரை அறிவிப்பதினாலும், பக்தர்களோடு கூடிய சகவாசத்தினாலும் கிறிஸ்துவின் அன்பில் நீ வளர்ந்து பெருகுவாயாக.

# 37. சிலுவை மகத்துவம்

***"சிலுவையைப்பற்றிய உபதேசம்" (1 கொரி. 1:18).***

சிலுவையென்றால் அவமானம் நிந்தை என்று அர்த்தம். அப்படியிருக்கச் சிலுவையில் மகிமை உண்டென்று எவன் சொல்லுவான். கிறிஸ்துவின் சிலுவை யூதருக்கு இடறல்: கிரேக்கருக்குப் பைத்தியம். சிலுவையில் வெளிப்பட்ட தேவஞானத்தை அறிந்து ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கோ அதுவிலை மதிக்கப்படக்கூடாத பொக்கிஷம். கிறிஸ்துவின் மரணம் சரித்திர சம்பவம். அந்த மரணத்தின் பலன் அனுபவத்திற்கு வரும்போது உபதேசமாயிற்று. எவ்வளவு அனுபவம் வருகிறதோ, அவ்வளவுக்கு விஸ்தரிப்பு வளரும். பவுலிடத்தில் நாம் காண்கிற விஷயம் இதுவே. மற்றவர்களுக்கு அவமானமாகத் தோன்றின சிலுவை அவருக்கு மகா மேன்மையாயிற்று. அவர் சிலுவையைப்பற்றி ஆழமாய்ப் பேசினதுண்டானால் அவருடைய அனுபவமே அதற்குக் காரணம். புறம்பேயுள்ளவர்கள் சிலுவையைப்பற்றி பலவாறு பேசலாம். தீயோர் நடுவில் அவர் நல்லவராய்த் தோன்றினதால் தீமை நன்மையைக் கொன்றதென்பார் சிலர். தற்செயலாகச் சம்பவித்த மரணத்தை இவ்வளவு பிரமாதமாக பேச வேண்டியதென்ன என்று கேட்பார் சிலர். கிறிஸ்துவின் மரணம் தற்செயல் அல்ல. நாம் பிறந்தபடியால் மரிக்கிறோம். அவர் மரிப்பதற்காகவே பிறந்தவர். சத்துருக்கள் தாங்கள் நினைத்தபடியே அவருக்குச் செய்தார்களென்பதல்ல. அவர் உலகத்தில் நிறைவேற்றும்படி தீர்மானித்து வந்த மரணத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள். அவர் ரத்தச்சாட்சியாக மரித்தார் என்பார் சிலர். நாமும் அவரைப்போல் சத்தியத்திற்காக மரிக்க அவர் மாதிரியானார் என்கிறார்கள். கிறிஸ்துவின் மரணம் ரத்தச்சாட்சிகளோடு ஒப்பிடக் கூடியதல்ல. ரத்தச்சாட்சிகள் இவர் மரணத்தின் மூலமாய்த் தாங்கள் அடைந்த இரட்சிப்பைக் கூறி அறிவிப்பதில் அவர் நாமத்திற்காக தங்கள் உயிரையும் கொடுத்தார்கள். பாவங்களை நீக்கும்படி அவர்கள் மரிக்காமல், பாவமன்னிப்பைக் கூறி அறிவித்ததில் மரித்தார்கள். உலகத்தின் பாவத்தை நீக்கும்படி தமது ஜீவனைக் கொடுப்பதாக ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அவர் மரணத்தைத் தற்கொலை என்பாரும் உண்டு. ஏனென்றால் அவர் தப்பித்துக் கொள்ளக்கூடிய வல்லமை

தமக்கு இருந்தும் வலியப்போய் மரணமடைந்தார் என்கிறார்கள். ஆண்டவர் யூதாசைப்போல் மரத்தில் நான்று கொண்டு செத்தவரல்ல, அல்லது சத்துருக்களை வெட்கப்படுத்தும்படி அவர்கள் தம்மை பிடிப்பதற்குமுன் தம்மை வாளலே வெட்டிக் கொன்றவருமல்ல. அவர் ஊழியம் முழுவதும் தேவ ஒழுங்குப்படியே நடந்தது. அவர் கடைசியாக எருசலேமுக்குப் போனபோதும் தேவ ஒழுங்குப்படியே போனார். அவர் செய்த கிரியைகள் யாவும் தேவசித்தப்படியே நடந்ததுபோல, எருசலேமுக்குப் போவதும் சத்துருக்களால் கொல்லப்படுவதும் தேவசித்தமாகவேயிருந்தன. மேலும் சத்துருக்கள் அவரைக் கொலைசெய்யும் உத்திரவாதத்தை ஏற்றுக்கொண்டு இவன் இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொல்லி வேலையை நடத்தினார்கள். தற்கொலை என்று பேச இங்கே என்ன இடமிருக்கிறது. இவ்வாறு பலரும் பலவிதமாய்ப் பேசும்போது, விசுவாசிகளுக்குச் சிலுவை மகத்துவ சாட்சியாயிருக்கிறது.

சிலுவையின் மகத்துவத்தை விவரிக்க இடம் போதாது. அதுவே சர்வ சக்தி. சர்வத்திற்கும் மத்தி, சர்வத்தையும் இணைக்கும் காந்தம். சத்துருவால் விளைந்த சகல இடறல்களையும் சுட்டெரிக்கும் அக்கினி. சகலத்தையும் விளக்கிக் காட்டும் பரம ஒளி. பாவம் மனுஷரை மட்டுமல்ல, சர்வத்தையும் காலாகோலமாக்கிற்று. பாவத்தின் கறை சர்வத்தையும் தாவினது. தேவனுக்கும் மனுஷனுக்கும் பகை. மனுஷனுக்கும் மனுஷனுக்கும் பகை. மனுஷனுக்கும் சிருஷ்டிப்புக்கும் பகை. பரத்திற்கும் இகத்திற்கும் பகை. சர்வத்திலும் பிரிவினையும் குதர்க்கமும் ஏற்பட்டது. பாவத்தால் விளைந்த கேட்டை நாம் சரியாய் அறிந்தவர்கள் அல்ல. "இயேசுவே என் பாவத்தை மன்னியும்" என்று சொல்ல மாத்திரம் தெரியும். ஆனால் சிலுவையின் பலன் எங்கெல்லாம் வியாபித்திருக்கிறதென்று. நாம் கண்டவர்கள் அல்ல. பரலோகத்துள்ளவைக்கும் பூலோகத்துள்ளவைக்கும், காணப்படுகிறதும், காணப்படாததுமான சகலத்திலும் சிலுவை வெற்றியடையும். சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டு, பூரண ஒற்றுமை பெறும். ஆண்டவர் சர்வத்திற்கும் நடுநாயக ஜீவனாக விளங்குவதுபோல அவரது மரணமும் சர்வத்திற்கும் நடுநாயகமாக விளங்கும். சிலுவையின் முடிவான வெற்றியைக்காணும் நாளில் அல்லவோ அதன்

மகத்துவம் இன்னதென்று விளங்கப்போகிறது. புதிய வானம் புதிய பூமி என்ற பாக்கியமான காலம் இந்தச் சிலுவையின் வெற்றியாகும். இதை அறிந்தல்லவோ திரளான தூதர்கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருக்கு கனமும், மகிமையும், வல்லமையும், ஸ்தோத்திரமும், சதாகாலமும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

கிறிஸ்துவின் மரணம் இரகசியமே. அவர்மேலுள்ள விசுவாசத்தால் நாம் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை பெற்றபோதிலும் அவருடைய மரணத்தை விளக்கிக் காட்டுவது கஷ்டம். விஷயத்தை விசாரிக்காமல் இருக்கும் வரையில் நாம் அறிவாளிகள்தான். ஒன்றை அறியும்படி பிரயாசப்படாத வரையில் நாம் அதை அறிந்தவர்களே. அது எப்படி என்று ஒருவர் நம்மை கேட்டவுடன்தான் நாம் யோசிக்க ஆரம்பிக்கிறோம். நாம் அறிந்திருப்பது எம்மாத்திரம் என்பதும் அப்போதுதான் வெளியாகிறது. ஆண்டவர் நமது பாவத்துக்காக மரிக்க வேண்டும் என்று சொன்னதைத் தவிர அவர் விஸ்தரித்து ஒன்றும் சொல்லவில்லை. நீர் மரிக்கவேகூடாது என்று சொன்ன சீஷர்களிடம் அதற்கு மேல் பேசுவதில் பிரயோஜனமில்லை. சொல்லவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு. ஆவியானவர் வந்தபின் வெளிப்படுத்துவார் என்று ஆண்டவர் கூறினதில் அவருடைய மரணமும் ஒன்று. சீஷர்கள் ஆவியைப் பெற்றவுடனே சிலுவையின் வல்லமையை தங்கள் அனுபவத்தில் கண்டார்கள். ஆண்டவர் மரித்தபோது சீஷர்களுக்கு அது பெரிய அவமானமும் தோல்வியுமாகத் தோன்றினதேயன்றி வேறொரு விசேஷத்தையும் அவர்கள் கண்டதில்லை. தங்கள் ஜீவியம் ஆசீர்வதிக்கப்பட்டபின் சிலுவையின் மகத்துவத்தைக் கூறி அறிவித்தார்கள். அதன் இரகசியம் இன்னதென்று ஆராயவேண்டுமென்பது அவர்கள் கருத்தல்ல. ஆனால் சாஸ்திரியாகிய பவுலோ தாம் ரட்சிப்பைப்பெற்றதும் தவிர சிலுவையின் இரகசியத்தை ஆராய்ச்சி செய்கிறவராயுமிருந்தார். அவர் மூலமாய் சிலுவையின் மகிமை அதிகமாய்ப் பிரகாசித்தது. என்றாலும் அந்த ஆராய்ச்சி முடிந்தபாடில்லை. நாளதுவரை தேவபக்தர்கள் சிலுவையைக் குறித்து அதிகமாக யோசிக்கிறார்கள். காலத்துக்கேற்றபடி புதுக்கருத்துகளை வெளியிடுகிறார்கள். முற்றிலும் கண்டறிந்தவர்கள்

யாருமில்லை, கண்டறியவும் முடியாது. வேதசாஸ்திரத்தில் சிலுவையைப்போல் கஷ்டமான உபதேசம் வேறெதுவுமில்லை. அதை ஆராய்ச்சி செய்வதே நமக்குக் கிடைத்த பாக்கியம்.

கடவுள் நித்திய அன்பு. அன்பில் பரிசுத்தமும் நீதியும் உண்டு. பரிசுத்தம் பாவத்தோடிணங்காது. நீதி பாவத்தையும் கண்சாடையாக விடாது. அன்பு பாவியைக் கைவிடாது. பாவத்தைக் கவனியாது விட்டுவிட்டால் தேவ நீதிக்குப் பங்கமாகும். பாவியைக் கைவிட்டுவிட்டால் அன்புக்குப் பங்கமாகும். தேவன் குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், குற்றவாளியின் குற்றத்தை மன்னிக்கிறவர் (யாத். 34:7). இது எப்படியாகும் என்பதோ வெளிப்படாதிருந்தது. மன்னித்தால் பாவி தப்பித்துக் கொள்வான். நீதி விளங்க ஏதுமில்லை. தண்டித்தால் பாவி தொலைந்து போவான். அன்பு விளங்க ஏதுமில்லை. இந்தப் படுமுடிச்சை அவிழ்க்க தேவனால்தான் கூடும். பாவமன்னிப்பு லேசான காரியமல்ல. இந்த உத்தரவாதமான பொறுப்பை தேவனே ஏற்றுக் கொண்டார் "மீறுதலை மன்னிக்கிற தேவனுக்கு ஒப்பான தேவன் யார்?" அவர் நம்மைப் பெற்ற பிதா. பிள்ளையின் மேன்மை தகப்பனுக்கு மேன்மை. பிள்ளையின் அவமானம் தகப்பனுக்கு அவமானம். பாவம் தோன்றினபோதே அவர் அவமானத்துக்கும் வேதனைக்கும் பாடுகளுக்கும் ஆளானார். நமது இரட்சிப்புக்கேதுவான நீதியையும், அன்பையும் அவர் தாமே கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றினார். பொந்திய பிலாத்துவின் காலத்திலேதான் அவர் பாடுபட்டாரென்றல்ல. ஆவியாயிருக்கிற அதரிசனமான தேவன் நமது பாவத்தினிமித்தம் தமக்குள் ஆதிமுதல் அடைந்த பாடு, வேதனை, அவமானம், மரணம் என்னவென்பதை மனுஷர் கணகாண ஓர் நாளில் சிலமணிநேரங்களில் சிலுவையில் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். தேவன் கிறிஸ்துவின் ஜீவியத்தில், உபதேசத்தில், கிரியையில் எப்படித் தம்மை உலகத்துக்கு வெளிப்படுத்தினாரோ அதுபோலவே பாவத்தின் சம்பந்தமாகத் தமக்குள்ள பாடுகளைச் சிலுவையில் வெளிப்படுத்தினார். அவர் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்டவர் என்பதின் கருத்தும் இதுவே. இவ்வாறு நாம் பட்டபாடு மரணத்தால் தமது நீதியையும், அந்த மரணத்தின் மூலமாய் பாவிகள் ரட்சிக்கப்படுவதால் தமது அன்பையும் திருஷ்டாந்தப் படுத்தினார். கிறிஸ்துவின் மரணம் தேவகோபத்தை நீக்கிற்று

என்பது தவறான உபதேசம். கடவுள் நித்திய அன்பு, அன்பு தீமையில் அவஸ்தைப்படும். உலகம் எவ்வளவாகக் கெட்டுப் போனாலும் அதை ரட்சிக்கவேண்டுமென்பதே அவர் வாஞ்சை "தேவன் தமது குமாரனைத் தந்து உலகத்தில் அன்புகூர்ந்தார்". நாம் அவரை ஒப்புரவாக்க வேண்டிய தில்லை. அன்பும் கிருபையும் மன்னிப்பும் தேவனிலிருந்தே முதலில் ஆரம்பித்தது. கிறிஸ்துவில் நாம் அதைக் கண்டு தேவனோடு ஒப்புரவாகிறோம். தேவனே கிறிஸ்துவுக்குள் நமது பாவத்தை ஏற்றுக்கொண்டு, மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினால் பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று சிலுவையில் முத்தஞ்செய்தது. இவ்வளவு அதிசயமான அன்பை அசட்டை செய்கிறவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? வேறு வழியேது?

# 38. உயிர்த்தெழுதலின் ஜீவியம்

**"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து" (கொலோ. 3:4).**

### 1. உலக ரட்சிப்புக்குக் கிருபை அவசியம்

அந்த மரணம் ஓர் பெரிய இரகசியம். அந்த மரணத்தால் உண்டான வெற்றி நிகரற்றது. ஆண்டவர் அடைந்த மரணத்தால் நமது சகல சத்துருக்களையும் ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்து ரட்சிப்பின் வழியை வெளியரங்கமாக்கினார். சிலுவை இவ்வளவு மேன்மையுற்றிருந்தபோதிலும் ஆண்டவர் உயிரோடெழும்பப்படாவிட்டால் சிலுவையைப் போல் தோல்வி வேறொன்றுமில்லை. மரணமே கிறிஸ்துவுக்கு முடிவா யிருந்தால் நாம் அவர்மீது வைத்த நம்பிக்கைக்கும் மரணம் வந்ததாகும். சிலுவையைப் பற்றிய உபதேசமும் அப்போது இல்லை; சிலுவையின் ஆசீர்வாதங்கள் என்று பேசவும் வழியில்லை. ஆண்டவர் மரித்தவுடனே சீஷர்களிலிருந்த நிலைமை என்ன? அச்சமயத்தில் சிலுவை மூலம் கடுகளவு நன்மையாவது கிடைக்கும் என்று அவர்கள் நம்பினதில்லை. அப்படியிருக்க அவர்கள் முற்றிலுமாய் மாற்றப்பட்டு வல்லமையோடும் சந்தோஷத்தோடும் சுவிசேஷத்தைப் பிரங்கிக்கக் காரணமென்ன? மரித்தக கிறிஸ்துவை மறுபடியும் கண்டார்கள். அவர் உயிர்த்தெழுந்த ஜீவன் முந்தின ஜீவனுக் கொப்பானதல்ல. அதே கிறிஸ்துதான். ஆனால் புதிய

ஜீவனோடு எழுந்தார். திருச்சபை மரித்த கிறிஸ்துவின்பேரில் அல்ல, புதிதான ஜீவனோடு எழுந்த கிறிஸ்துவில் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் திருச்சபையின் தலையாயிருந்து, சரீரமாகிய சபைக்காக பார்க்கிறவரும், கேட்கிறவரும், பேசுகிறவரும், யோசிக்கிறவரும், சரீரத்தை நடத்துகிறவருமா யிருக்கிறார். நம்மில் இன்னும் எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் கிறிஸ்துவுக்குள் நாம் மேலான பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பது நிச்சயம். ஏனென்றால் தலையடைந்த மகிமையே சரீரத்துக்கும் மகிமை. நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருப்பதால் அவரடைந்த வெற்றியும், மகிமையும் நமக்குச் சொந்தமாகின்றன. இந்த மேலான நிலைமைக்கு ஏற்றபடி நாம் பிழைக்கத்தக்கதாக உயிர்த்த இரட்சகர் தமது ஆவியின் மூலம் நமக்குள் தாராளமாக வசிக்க நாம் அவருக்கு இடங்கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

### 2. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் நாம் இணைக்கப்பட்டதின் பலனாக தமது நிலைமை எவ்வளவு மேலானதென்பதை அப்போஸ்தலன் மூன்று விதமாகக் காண்பிக்கிறார்

அதை கொலோசேயர் மூன்றாம் அதிகாரம், முதல் நாலு வசனங்களின் காணலாம். (அ) எழுந்த ஜீவன் (ஆ) மறைந்த ஜீவன் (இ) வெளிப்படும் ஜீவன்.

#### அ. எழுந்த ஜீவன்

"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்தீர்கள்" எப்போது? எப்படி? எந்தக் கருத்தில் நாம் எழுந்தோம்? இதை மூன்று விதமாய் விளக்கலாம். முதலாவது, அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கினதின் சம்பந்தமாக அவர் எழுந்தபோதே நாமும் அவரோடே எழுந்தோம். அவர் தமக்காகவல்ல, நமக்காகவே மரித்து நமக்காகவே எழுந்தார். ஆகையால் அவர் உயிர்த்தெழுதலின் புதிய ஜீவன் நமது ஜீவன். தேவ பார்வையில் நாம் அவரோடு எழுந்தவர்கள். இரண்டாவது, நமது ஜீவனாகிய கிறிஸ்துவை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது உண்மையில் அந்தப் புதிய ஜீவன் நமக்கு அருளப்படுகிறது. இதுவே மறுபிறப்பு. மூன்றாவது நாம் பெற்றுக்கொண்ட இந்தப் புதிய ஜீவனாலே நாம் பிழைக்கும்போது, நமது அனுபவத்தில் உயிர்த்தெழுதலின் ஜீவனாவது என்னவென்பதைக் கண்டறிகிறோம். இந்த

ஜீவனாவது என்ன, அது எவ்வாறு நமக்குள் வந்ததென்பதைக் கண்டுபிடிக்க எந்தச் சாஸ்திரத்தாலும் முடியாது. அந்த ஜீவனைப் பெற்றவன் தனக்குள் அதை அறிவான். அவனுடைய புறம்பான கிரியைகளும் அதை வெளிப்படுத்தும். கிரியைகள் ஆசாரங்கள் நம்மை கிறிஸ்தவர்களாக்காது. இந்தப் புதிய ஜீவனைப் பெற்றவர்களே கிறிஸ்தவர்கள். உள்ளான ஜீவன் மூலமாகவே புறம்பான முயற்சிகள் காணப்படவேண்டும். அப்போஸ்தலன் அனுபவமும் அதுவே. "எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவர் பலத்தின்படி நான் போராடிப் பிரயாசப்படுகிறேன்" (கொலோ. **1:29**).

### ஆ. மறைந்த ஜீவன்

"உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" விசுவாசியின் ஜீவன் மறைந்த ஜீவன். அதன் உற்பத்தி கண்ணுக்குத் தெரியாது. அது எங்கிருந்து ஆரம்பித்தது. எவ்விதம் கிரியை நடப்பிக்கிறதென்பது மறைந்தேயிருக்கிறது. அந்த ஜீவனால் பிறக்கும் கிரியைகள் புறம்பே தோன்றின போதிலும் அந்த ஜீவன் மனுஷருக்கு இரகசியமே. ஏனென்றால் அந்தப் புதிய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஒருவனுடைய ஜீவியத்தில் வல்லமையும் ஆசீர்வாதமும் காணப்படுமானால் நமக்கு ஆச்சரியம் வேண்டாம். மனுஷனில் ஒரு விசேஷமுமில்லை. நான் ஒன்றுமில்லை என்றுணர்ந்து கிறிஸ்துவை ஜீவனாக உள்ளத்தில் பெற்ற மனுஷனில் கிறிஸ்துவே தமது ஆவியால் வசித்து, தம்மை அவன் மூலம் வெளிப்படுத்துகிறார். ஆகையால் கிறிஸ்துவின் சிந்தை, அவர் சாயல், அவர் வாஞ்சை ஓரளவாய் அவனில் காணப்படுகின்றன. எத்தனை கஷ்டங்கள், போராட்டங்கள், தவறுதல்கள் நேரிட்டாலும் மனம் சோராது அவன் இலக்கை நோக்கித் தொடருகிறான். அவனைக் கவனிப்பவர்களுக்கு அவன் விசேஷித்தவனாகத் தோன்றலாம். அந்த விசேஷத்துக்குக் காரணம் அவனுக்குள் வசிக்கும் ஜீவனாகிய கிறிஸ்துவே. புதிய ஜீவனோடெழுந்த கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக அவனுக்குள் வசிக்கிறார். புறம்பாக அவனில் காணப்படும் நல்ல ஜீவியமும், ஆசீர்வாதமான ஊழியமும், அவனுக்குள் கிரியை நடப்பிக்கும் மறைவான ஜீவனின் பலனேயாகும். மரத்தின் செழிப்புக்கும், கனிகளுக்கும் காரணம் கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் வியாபித்துக்

கிரியை செய்கிற வேர்களின் ஜீவனே. இந்த அமர்ந்த, ஆழமான, உள்ளான ஜீவனை நாம் வாஞ்சையோடு தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் பேரைச் சொல்லிக் கொண்டு நாம் எத்தனையோ வேலைகளைச் செய்யலாம். அவைகளிலே திருப்தியும் அடையலாம். "அவை உள்ளான கிறிஸ்துவின் ஜீவனால் நடப்பிக்கப்பட்டவைகளா அல்லது மாம்சத்தின் புறம்பான முயற்சிகளா என்பதுதான் கேள்வி. அவர் ஜீவனின் பலத்தால் செய்யப்படாத கிரியைகள் யாவும் பாழாகும். ஆ, இது எவ்வளவு விசனமான காரியம்! நமது மிகுதியான காலமும் பலமும் எவ்வளவோ நஷ்டமாயிருக்கிற தல்லவா? நமது சுயபலத்தில் செய்யும் ஆயிரம் காரியங்களை விட அவர் பலத்தால் செய்யும் ஒரே காரியம் நித்தியகாலம் நிலைநிற்கும்.

### இ. வெளிப்படும் ஜீவன்

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" கிறிஸ்து மறுபடியும் வெளிப்படுவது வேதாகமத்தின் மொத்தச்சாரம். பூமியில் அவர் நடப்பித்து வரும் கிரியைகள் நின்று போகவில்லை. உலகத்தில் அநேக காரியங்கள் நமது நோக்கத்துக்கு விரோதம்போல் தோன்றினாலும் சகலத்திலும் அவர் கரம் இருக்கிறதென்பது நிச்சயம். தேவன் தமது ராஜ்யத்தின் சம்பந்தமாய் கிறிஸ்துவுக்குள் தீர்மானித்திருக்கிற அவருடைய ஆலோசனைகள் யாவும் முற்றுப்பெறாமல் போவதில்லை. நான் உமது சத்துருக்களை உமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என் வலது பாரிசத்தில் அதாவது என் வல்லமைக்குள் உட்காரும் என்று சொன்னவர் உண்மையுள்ளவர். ஆண்டவர் தாமே சொன்னபடி தமது பூரண மகிமையோடு வெளிப்படும் நாள் சமீபித்து வருகிறது. தேவ ஆளுகையை பூமியில் ஸ்தாபிப்பதே அவர் வெளிப்படும் நோக்கம். சாத்தானுடைய சகல தீமைகளும் இடறல்களும் நீங்காமல், பரலோகத்தில் அவரது சித்தம் செய்யபப்படுவது போல் பூலோகத்திலும் செய்யப்படுவது முடியாத காரியம். நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது ஒன்றன்பின் ஒன்றாக பலத்த மாறுதல்கள் சம்பவிக்கும். சிலுவை அடைந்த பூரண வெற்றி என்னவென்பது அப்போதுதான் வெளிப்படும். விசுவாசிகளின் பூரண ரட்சிப்பு என்னவென்பதும்

அப்போதுதான் தெரியும். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடே கூட மகிமையில் வெளிப்படுவீர்கள். அந்த மகிமை எப்படிப் பட்டதென்று யார் சொல்லக்கூடும்? இப்போது அவர் உயிர்த்தெழுதலின் ஜீவனால் புது ஜீவனடைந்து, அந்த ஜீவன் மூலமாய் உள்ளான மனுஷனில் நாளுக்குநாள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மறுரூபமடைந்து வருகிறார்கள். ஜீவனாகிய கிறிஸ்து மகிமையில் வெளிப்படும்போது, ஓர் நிமிஷத்தில் அவருடைய மகிமைக் கொப்பான மகிமையை அடைவார்கள். இந்தச் சரீரத்தில் குடியிருக்குமளவும் நமது ஜீவியம் போராட்டமாகயிருக்கிறது. எவ்வளவுக்கு அவரை நெருங்குகிறோமோ அவ்வளவுக்கு நமது குறைவுகள் காணப்படுகின்றன. இதுவே வளர்ச்சிப்பிரமாணம். சிலர் பேசும்போது இத்தனை வருஷங்களாக தாங்கள் பாவமே செய்யவில்லை என்று பேசுவார்கள். ஒருவேளை அவர்கள் அறிந்த பெரும் பாவங்களைச் செய்யாமலிருக்கலாம். ஆயினும் என்ன? ஒளியாகிய கிறிஸ்துவில் நாம் பிழைத்து, சகலத்திலும் அவருக்குப் பிரியமாய் நடக்க விரும்பும்போதுதான் நமது மனது, வாக்கு, எழுத்து, செய்கைகளில் எவ்வளவு தவறுகிறோம் என்பது நமக்குத் தெரியும். எப்பொழுதும் ஆண்டவரோடு ஜீவிக்கிற பரிசுத்தவான்களே தங்கள் குறைவுகளை அதிகமாய் உணருகிறவர்கள். ஆம், நாம் இந்தச் சரீரத்தில் குடியிருக்கிற பரியந்தம் இந்த போராட்டமும் வெற்றியும் நமது பங்காயிருக்கும். அவர் வெளிப்படும்போது நமது அற்பமான சரீரம் அவர் மகிமையான சரீரத்திற் கொப்பாக மாற்றப்படும். அப்போது நாம் "பரிசுத்தரும் குற்றமற்றவர்களும் கண்டிக்கப்படாதவர்களுமாக அவருக்கு முன் நிறுத்தப்படுவோம்" என்ற வாக்கு நிறைவேறும்.

## 39. விடுவிக்காமற்போனாலும்

***"எங்கள் தேவன் எங்களை விடுவிப்பார், விடுவிக்காமற்போனாலும்" (தானி. 2:17,18).***

இது பூரணமான வாக்கியமல்ல; ஆகிலும் விசுவாச வெற்றியைக் காட்டும் வார்த்தையாகும். நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.

அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். அவ்வாறு விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்பது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.

பாபிலோன் தேசத்து நேபுகாத்நேச்சார் பராக்கிரமம், வல்லமை, மகிமையில் நிகரற்ற அரசன். அவன் சொப்பனத்தில் ஒரு பெரிய சிலையைக் கண்டு கலங்கினான். அதன் அர்த்தத்தைச் சொல்ல அவனுடைய ஞானிகளில் ஒருவனு மில்லை. தானியேல் அதன் அர்த்தத்தை வெளிப்படுத்தி அந்தச் சிலையின் பிரகாசமான பொன்னான தலை நேபுகாத்நேச்சாரே என்றான். பெருமை சரப்பணியைப்போல ராஜாவை ஆண்டுகொண்டது. அவன் மகா உயரமான பொற்சிலையை உண்டுபண்ணி தன் மாகாணத்திலுள்ள சர்வ ஜனங்களும் சங்கீத வாத்தியங்களின் தொனி கேட்ட மாத்திரத்தில் தாழ விழுந்து அதை வணங்கும்படி கட்டளையிட்டான். இந்தச் சிலையை தெய்வமாக அவன் உண்டுபண்ணவில்லை. அவர்கள் வணங்கி வந்த தேவர்கள் பலவுண்டு. இதுவோ தன் பெருமையை வெளிப்படுத்தும் நோக்கமாக அவன் நிறுத்தின சிலை. சர்வ ஜனங்களும் ராஜாவின் கட்டளைப் படியே தாழ விழுந்து வணங்கினார்கள். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூவருமோ அதை வணங்கவில்லை. இந்த இடத்தில், தானியேலின் பேர் வரக்காணோம். ஆகிலும் தானியேல் அம்மூவரோடு ஜெபத்திலும் சம்பாஷணையிலும் ஐக்கியப்பட்டிருந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை.

இவர்கள் சிலையை வணங்காததைக் கண்ட கல்தேயரில் சிலர் ராஜாவிடம் பிராது செய்தார்கள். ராஜாவே! சர்வ ஜனங்களும் சிலையை வணங்கவேண்டுமென்றும், எவனாவது வணங்காமற்போனால் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படவேண்டுமென்றும், ராஜாவே நீர் கட்டளை யிட்டிருந்தீரே. இம்மூவரும் உம்மை மதிக்கவுமில்லை; நீர் உண்டுபண்ணின பொற்சிலையை வணங்கவுமில்லை என்றார்கள். ராஜா உக்கிரகோபங்கொண்டு மூவரையும் பார்த்து: நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நான் நிறுத்தின பொற்சிலையை வணங்காமலுமிருந்தது

மெய்தானா? என்று கேட்டான். அவன் உடனே அவர்களைத் தண்டித்திருக்க வேண்டியது, என்றாலும் அவர்கள்மீதுள்ள மதிப்பினால் அப்படிச் செய்யாமல் மறு தவணை கொடுத்தான். நல்லது; இப்போது மறுபடியும் சங்கீத வாத்தியங்கள் தொனிக்கும். நீங்கள் தாழவிழுந்து சிலையைப்பணிந்து கொண்டால் நல்லது. பணிந்து கொள்ளாமற்போனால் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள். உங்களை என் கைக்குத் தப்புவிக்கிற கடவுள் யார் பார்ப்போம் என்று சபதம் கூறினான்.

மூன்று தாசரும் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, அந்தக் காரியத்தைக் குறித்து உமக்குப் பதில் சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. எங்கள் காரியம் பட்டப்பகல் போல் இருக்கிறது. நாங்கள் தொழுதுகொள்ளுகிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களைத் தொழுதுகொள்வதுமில்லை; நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்பது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.

நாம் ஒரு நல்விஷயத்தில் உறுதியாயிருக்கும்போது அதிலிருந்து நம்மை அசைக்கப் பார்ப்பதே சோதனை அல்லது பரீட்சையாகும். இம்மூவருக்கும் நேரிட்ட பரீட்சை லேசானதல்ல. நேபுகாத்நேச்சாரே மகா பெரிய ராஜன். அவன் சொல்லுக்குச்சகலமும் அடங்கவேணும். சர்வ ஜனங்களும் ஏகோபித்து அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். பக்கத்தில் பயங்கரமான அக்கினிச் சூளை எரிந்த வண்ணமாயிருக்கிறது. கீழ்ப்படியாமற்போனால் அக்கினிக்குத் தப்ப முடியாது. அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் உறுதியிலிருந்து விலகவில்லை. ஜீவனுள்ள யெகோவாவைத் தவிர வேறொன்றுக்கும் யூதன் கையெடுப்பதில்லை. தங்கள் பிதாக்களின் தேவனை மறந்து வேறு தேவர்களையோ அல்லது ஒரு சிலையையோ அவர்கள் எப்படி வணங்குவார்கள்? அவர்கள் ராஜாவுக்குச் சொன்ன உத்தரவில் அவர்கள் விசுவாசத்தின் சிறப்பு விளங்குகிறது. நீர் எங்களை அக்கினிச் சூளையில் போட்டாலும் எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். இப்படிச் சொல்வது இலேசான

காரியமல்ல. தாங்கள் அக்கினியில் போடப்பட்டாலும், தேவன் தங்களைக் காப்பாற்றுவார் என்று வெளிப்படையாய்ச் சொல்லுகிறார்கள். அவர்கள் விசுவாசம் இம்மட்டோடே நிற்கவில்லை. தேவன் எங்களை விடுவிப்பார்; அவ்வாறு விடுவிக்காமற் போனாலும் நாங்கள் ஒருபோதும் உம்முடைய சிலையை வணங்கமாட்டோமென்பதை ராஜாவாகிய நீர் திட்டமாய் அறிந்து கொள்ளும். இதுவே விசுவாச மகத்துவம்! விடுதலையை விரும்புவது இயல்பு. அந்த விடுதலை தேவனால் தங்களுக்குக் கிடைக்கக்கூடுமென்று நம்பினார்கள். அவ்வாறு கிடைக்காமற்போனாலும் நாங்கள் எங்கள் தேவனுக்குத் துரோகம் பண்ணமாட்டோம். தேவனை மறுதலித்து நாங்கள் உயிரோடிருப்பதிலும், அவருக்கு உண்மையாயிருந்து சாவது நலமெனத் தீர்மானித்தார்கள். இந்த விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்.

விசுவாச மார்க்கத்தில் நெடுங்காலமாய் பயிற்றுவிக்க பட்டிருக்கிற நமது காரியமென்ன? நமது அனுபவத்தைக் கொஞ்சம் ஆராய்வோமானால் நாம் வெட்கப்படுவோம். சகலமும் நமது விரும்பம்போல் நடந்தால் விசுவாசத்தில் நாம் சிறந்தவர்களைப் போல தோன்றும். ஆலயம், வேதம், ஜெபக்கூட்டம், ஊழியம் நமக்குப் பிரியமாயிருக்கும். ஆயினும் நமது உள்ளான நிலைமையை பரீட்சை நாட்கள் அல்லவோ வெளிப்படுத்துகிறது. தூர நின்று கொண்டு வீரம் பேசுவதல்ல; அக்கினிச்சூளையின் பக்கமாய் நிற்கும்போதல்லவா நமது விசுவாச பலம் எத்தன்மையானதென்று விளங்கும். துன்பமாகிய காரிருள் சூழ்ந்து சத்துருவின் பெரும்புசல நம்மீது மோதியடிக்கும்போது நமது மனநிலை என்ன? நாம் எதிர்பார்த்த நன்மைகள் கிட்டாமல், முற்றிலும் மாறான காரியங்கள் சம்பவிக்கும்போது தேவனைப்பற்றி நாம் நினைக்கிற நினைவுகள் எவை? எவ்வளவு அற்பசொற்பக் காரியங்களில் நாம் தடுமாறிப் போகிறோம்! அவர் விடுவித்தாலும் விடுவிக்காமற்போனாலும் நான் இன்னும் கர்த்தர்பேரிலேயே நம்பிக்கையாயிருப்பேன் என்று சொல்வதே மேலான விசுவாசம். காரியம் வாய்த்தாலும் வாய்க்காமற் போனாலும்; பணம் கிடைத்தாலும் கிடைக்காமற்போனாலும், உத்தியோகம் வந்தாலும், வராமற்போனாலும்; சுகமானாலும், நோயானாலும்; மேன்மையானாலும், அவமானமானாலும்;

சிநேகிதர் இருந்தாலும் தனித்து விடப்பட்டாலும்; குழந்தை பிழைத்தாலும் ஒருவேளை மரிக்கநேரிட்டாலும்; வாழ்விலும் தாழ்விலும்; எல்லாக் காலங்களிலும், எல்லா மாறுதல்களிலும்; நான் கர்த்தரையே நம்பியிருப்பேன், அவரை மறுதலிக்க மாட்டேன், அவருடைய நடத்துதல்களைக் குறித்து முறுமுறுக்க மாட்டேன் என்று சொல்லக்கூடிய விசுவாசம் நமக்கில்லையே. இதற்குக் காரணமென்ன? கடவுளைப்பார்க்கிலும் அவரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளுகிற ஈவுகள்மேல் நாம் அதிகக் கவனம் செலுத்துவதினால்தானே. கொடுக்கிறவரை மறந்து அவர் கொடுக்கிறவைகளையே நாம் பிரதானமாய் நாடுகிறோம். அவைகளிலேயே மாறுதல் அல்லது குறைவு காணப்படும்போது நமது பக்தி பறந்து போகிறது. ஆண்டவரை அறிகிற அறிவில் வளர்ந்து அவருடைய அன்பில் நிலைத்திருப்பதே சிறந்த பக்தியாகும். அவரே சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று என்றும், அவருடைய நடத்துதல் பல சமயங்களில் நமது எண்ணத்துக்கும் விருப்பத்துக்கும் விரோதமாகத் தோன்றினாலும், தம்மிடத்தில் அன்புகூரும் பிள்ளைகளுக்கு சகலத்தையும் நன்மைக்கேதுவாக எப்போதும் நடத்துகிறவரென்றும் நம்பி அவரில் நிலைத்திருப்பதே உத்தம விசுவாசமாகும். தேவன்மீது எக்காலத்திலும் நல்லெண்ணங் கொண்டிருப்பது லேசான காரியமல்ல. நம்மை முற்றிலுமாய் அவர் கையில் ஒப்புவித்து அவர் தமது சித்தப்படியே நம்மையும் நமக்குள்ள யாவையும் நடத்தும்படி விட்டுவிடுவதே பரீட்சை காலங்களில் நாம் நிலைநிற்பதற்கு இரகசியம். நமது சுய ஆலோசனைகளையும், விருப்பங்களையும் பிரதானப்படுத்து வோமானால் அதற்கு மாறாகக் காரியங்கள் சம்பவிக்கும்போது நாம் மனஞ்சோர்ந்து தேவனுக்கு விரோதமாகக் கடினமான எண்ணங்கொள்ள நேரிடும். விடுவித்தாலும் விடுவிக்காமற் போனாலும் அவர்மீது நான் பற்றுதலாயிருப்பேன் என்று சொல்லக்கூடிய சிறந்த விசுவாசத்தை ஆண்டவர் நமக்குத் தருவாராக. யோபு சகலத்தையும் இழந்தார். சரீரத்தில் கொஞ்சம் உயிர் மாத்திரம் இருந்தது. அச்சமயத்தில்; நீர் என்னைக் கொன்றாலும் நான் உமது பேரில் நம்பிக்கையாயிருப்பேன் என்று தேவனைப் பாாத்துச் சொன்னார். ஆபகூக் தீர்க்கதரிசியின் விசுவாசமும் இதுபோன்றதே. பஞ்சமுண்டாகிச் சகல வஸ்துக்களும் அழிந்துபோகத்தக்கதாயிருந்தன. “அத்திமரம் துளிர்விடாமற்

போனாலும், திராட்சைச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவிக்காமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்தில் மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியா யிருப்பேன், என் ரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" என்றார். விசுவாச மகத்துவத்தை இங்கேயும் காண்கிறோம். பிதாவாகிய தேவனை அறியும் அறிவே இந்த விசுவாச உறுதிக்குக் காரணம். நாம் பிதாவோடும் நெருங்கி ஜீவிக்க வேண்டும்.

நல்லது, கர்த்தருடைய கையில் விட்டுவிட்ட அந்தத் தாசருடைய கதி என்னவாயிற்று? அவர்கள் அக்கினியில் போடப்பட்டார்கள். நமது ரட்சகர் நாலாம் ஆளாக அங்கே தோன்றினார். தேவகுமாரனுடைய சமுகம் அவர்களை ரட்சித்தது. ராஜா பிரமித்து அவர்களை வெளியேற்றி இஸ்ரவேலின் தேவனுக்கு நிகரான தேவன் இல்லையென்றும், சர்வ ஜனங்களும் அவருக்கு அடங்க வேண்டுமென்றும், எவனாவது அவரை அசட்டை செய்தால், அவன் அழிந்து போக வேண்டுமென்றும் கட்டளையிட்டான். விசுவாச வெற்றியின் பலன் இதுவே. அடியார் இரட்சிக்கப்பட்டார்கள். கடவுள் மகிமைப்பட்டார். ஆண்டவர் நம்மை அந்தகாரமான வழியில் நடத்துகிற நோக்கம் இதுவே. அவரது அதிசய ரட்சிப்பை நாம் காணவும், அதன் மூலமாய்த் தமது நாமம் மகிமைப்படவுமே. நாம் இதற்கு இடங்கொடுக்கிறதில்லை. உபத்திரவமாகிய குகையில் நாம் வைக்கப்படும்போது நாம் கலங்கி முறுமுறுத்து அதிசயமான அவருடைய செயலைக் காணாமற்போகிறோம். அவருடைய நாமமும் நமது மூலமாய் மகிமைப்பட ஏதுவில்லை. கர்த்தர் நம்மை அந்தகாரமும் தத்தளிப்புமான பாதைகளில் நடத்துவது மெய்யானால் நாம் பொறுமையோடு அவருடைய சித்தத்திற்குக் கீழடங்கவேண்டும். ஆண்டவரே, இதிலிருந்து நீர் என்னை விடுவித்தாலும் விடுவிக்காமற்போனாலும் நீர் என் தேவன், நான் உம்மை நம்புவேன்; நீர் என் பிதா, நான் உம்மில் அன்பாயிருப்பேன் என்று சொல்லுவோமாக. மரணத்தினின்று ஜீவனையும், இருளிலிருந்து வெளிச்சத்தையும் வெளிப்படுத்துகிற தேவன் நிச்சயமாகவே நமக்கு இரங்குவார். பெரிதான காரியங்களை

நாம் கண்டு அவரை ஸ்தோத்தரிப்போம். அவருடைய பரிசுத்த நாமமும் அதனால் மகிமைப்படும். "விடுவித்தாலும் விடுவிக்காமற்போனாலும்"

# 40. தேவ வெளிப்படுத்தல் (கிறிஸ்மஸ்)

***"தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" (1 தீமோ. 3:16).***

இரகசியம் மறைவானது. அது வெளிப்படுத்தப்படும்போது நாம் அறிகிறோம். ஏழு இரகசியங்களைப்பற்றி பவுல் பேசுகிறார். அவைகளில் ஒன்று கிறிஸ்து. கிறிஸ்து தேவ ரகசியம் (கொலோ. 2:2). இரகசியம் வெளிப்படுத்தப் பட்டாலன்றி, நாம் அதை அறிவது கூடிய காரியமல்ல. அவ்வாறு வெளிப்படுத்தப் பட்டாலும் நாம் அதைப் பூரணமாய் அறிந்து கொள்ளக்கூடும் என்று சொல்ல இடமில்லை. நமது ஆவிக்குரிய வளர்ச்சியின் அளவுக்கு ஏற்றாற்போல் மாத்திரம் நமது அறிவிலும் நாம் வளரக்கூடும். மனுஷஞானம் உண்டுபண்ணுகிறவைகளை மனுஷன் அறிவது கஷ்டமல்ல. தேவஞானம் ஆலோசித்து செய்கிற விஷயங்களை அவர் கிருபையாய் வெளிப்படுத்தினாலன்றி, நாம் சுயமாய் அறிய முடியாது. கிறிஸ்து தேவ இரகசியமாயிருக்கிறார். அவரைப் பூரணமாய் அறிந்தவன் ஒருவனுமில்லை. ஆகிலும் நாம் அவரை அறியக்கூடிய அளவுக்கு அவரை அறிய வேண்டுமென்பதே தேவ விருப்பம். கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்ட நோக்கம் அதுவே. தேவ ரகசியமாகிய கிறிஸ்துவைக் குறித்து எவ்வளவுதரம் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ, அவைகளை நாம் உறுதியாய் பிடித்து அவைகளின் மூலமாய் நம்மை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே தேவ தீர்மானம்.

## கிறிஸ்துவில் வெளிப்பட்ட பிரதான மூன்று காரியங்கள்

### 1. தேவன் வெளிப்பட்டார்

எப்பேர்ப்பட்ட மனுஷனானாலும் அவனை தேவதூதர்கள் ஒருக்காலும் வணங்கமாட்டார்கள். பெத்லகேம் மாட்டுத்

தொழுவத்தில் ஒரு ஏழைக் குழந்தையைக் காண்கிறோம். தற்காலத்தில் தாய்மார் தங்கள் குழந்தைகள் பிறக்குமுன்னமே, அவைகளுக்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்கனவே உண்டுபண்ணிவைத்துக் கொள்வார்கள். இந்தக் குழந்தையோ, எதிர்பாராத விதமாய், எதிர்பாராத இடத்தில் பிறந்தது. பிரயாணிகள் இருவரும் அலைந்த அலைச்சல்களையும் பட்டபாடுகளையும் சொல்ல வேண்டியதில்லை. குழந்தை பிறந்து கிடத்தப்பட்டிருக்கிற நிலைமையை மனதினாலே கண்டாற்போதும். இந்தக் குழந்தை யார் என்று அறிய வேண்டுமானால் தேவதூதன் அறிவிப்பையும், பவுல் பிலிப்பியர் நிருபத்திலும் மற்றும் நிருபங்களில் கூறியிருப் பதையும்; யோவான் தன் சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் சொல்லியிருக்கிற புத்திக்கெட்டாத உன்னத வார்த்தைகளையும் உள்ளபடி உணர்ந்து கொண்டால் போதும். கிறிஸ்மஸ் பண்டிகையின் விசேஷம், புசிப்பிலும், குடிப்பிலும், உடுப்பிலும் இல்லை. அந்த நாளில் வெளிப்பட்ட தேவ இரகசியத்தை அறிந்தவர்களாய் நாம் ஆனந்தம் கொள்வது நல்லது. மனுஷர் பார்வையில் அது ஏழைக்குழந்தையாயினும் கடவுள் பார்வையில் அது ஏழையல்ல. "தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது; தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள்" என்றார் (எபி. 1:6). தேவதூதர் யாரை வணங்குவார்கள்? அப்படியானால் இந்தக் குழந்தையில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமே. ஆம் இந்தக் குழந்தை எந்தக் குழந்தையோடும் ஒப்பிடமுடியாத தேவ இரகசியமாயிருக்கிறது. இவர் தேவன் மாத்திரமல்ல; அல்லது மனுஷன் மாத்திரமல்ல; அல்லது தேவன் மனுஷனாக மாறிப்பிறந்தவருமல்ல. இவர் மாம்சத்தில், அதாவது சரீரத்தில் வெளிப்பட்ட தேவன். தெய்வீகமும் மனுஷீகமும் பூரணமாக பொருந்தின கிறிஸ்து. இவ்வித அமைப்புள்ள ஒரு புருஷன் முன் பின் உலகத்தில் தோன்றாததினாலே கிறிஸ்து தேவரகசியம் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர் இரு தன்மையின் அமைப்பை பூரணமாக நாம் அறிந்து கொள்வதற்கு நமக்குப் புத்தி போதாது. ஆகிலும் அவரை ஏற்றுக்கொண்டு அவரிடம் கற்றுக்கொள்வதினால் அவரைப் படிப்படியாய் அறியவும், அவராலே ஆசீர்வதிக்கப்படவும் கூடும். அவர் இவ்வாறு வந்த நோக்கமென்ன? அதரிசனமான தேவனை நமக்கு வெளிப்படுத்தலே. பூர்வ காலத்தில் தேவன் கூடாரத்தில் வசித்து தம்மை தம் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். காலம்

நிறைவேறினபோது, தேவன் தாமே அற்புதமாய் ஆயத்தப்படுத்தின ஓர் சரீரத்தில் வந்து வசித்துத் தம்மை மனுப்புத்திரருக்கு வெளிப்படுத்தச் சித்தமானார் (எபி. 10:5). கடவுள் தாம் இருக்கிற பிரகாரமாக தமது பூரண மகிமையுடன் வெளிப்பட்டால் ஒருவனும் அவர் கிட்ட நெருங்க முடியாது. கடவுளைக் கண்டவன் பிழைக்க மாட்டான் என்பது எபிரேயருடைய பயம். தேவன் தமது பூரண மகிமையோடு வெளிப்பட்டால் அவர் உலகத்தில் வந்த நோக்கம் பலிக்காது. மனுஷன் தேவனை அறிந்து கொள்ளவுமாட்டான், ரட்சிக்கப்படவுமாட்டான். ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசித்த நோக்கத்திற்கிசையத் தம்மை அளவுக்குட்படுத்திக் கொண்டார். இதுவே பிலிப்பியர் இரண்டாவது அதிகாரத்தின் கருத்து. மனுஷன் தேவனை அறிந்து இரட்சிக்கப்பட வேண்டுமானால் அவனுடைய நிலைமைக்கேற்ற பிரகாரம் அவர் தம்மைத் தாழ்த்த வேண்டும். அவன் அவரைப் பார்க்கவும், கிட்ட நெருங்கவும், அவரோடு பேசவும், சிநேகம் பாராட்டவும்கூடிய நிலைமையில் அவர் தம்மை வெளிப்படுத்த வேண்டும். வேறு எந்த வகையினாலும் தேவன் தம்மைத் திருப்தியாக மனுஷனுக்கு வெளிப்படுத்த முடியாததால், மனுஷனாக வெளிப்படச் சித்தங்கொண்டார். அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கித் தம்மை அடிக்கடி மனுஷகுமாரன் என்னும் பேரால் அழைத்தது கவனிக்கத் தக்கது.

அவர் மனுஷன் என்பதை ஒருவனும் சந்தேகிக்கவில்லை. "நீ மனுஷனாயிருக்க" என்று சத்துருக்களும் சொன்னார்கள். நடந்ததென்ன? மனுஷனாயிருந்த அவர்தான் தேவனை வெளிப்படுத்தினார். அவருடைய மாசற்ற ஜீவியம், அவரது நிகரற்ற உபதேசம், அவரது கிருபை நிறைந்த செயல்கள், மனுக்குலத்தார் பேரில் அவருக்கிருந்த மனதுருக்கம், அனுதாபம், அன்பு, அவர் சிந்தின கண்ணீர், அவர் பட்ட பாடுகள் சகலமும் தேவனுடையவைகளே. அதாவது ஆவியாயிருக்கிற தேவனை, அவரது போதனைகளை, அவரது வல்ல செயல்களை, பாவிகள் மீதுள்ள அவரது கருணையை, அதிசய அன்பை "பாவிகளை இரட்சிக்கும்படி அவர் தமக்குள் அடைந்த அவஸ்தையை மனுஷனாக வந்த கிறிஸ்துவில் பிரத்தியட்சமாகக் காண்கிறோம். கிறிஸ்து தேவரகசியம் என்பது இதுதான். ஒருவனும் ஒருக்காலும் கண்டிராத தேவனை இவர் வெளிப்படுத்தினார் என்று யோவான் நிச்சயமாய்ச் சொன்ன

இரகசியமும் இதுதான். ஆம், கிறிஸ்து உலகத்தில் வந்த நோக்கங்களில் ஒன்று. தேவனை நமது அன்புள்ள பிதாவாக வெளிப்படுத்துவதே. தேவனைக் கண்டாலன்றி மனுஷனுடைய தாகம் தீராது. பிலிப்பு அதிகம் பேசமாட்டார். சுருக்கமாகப் பேசுகிறவர்களின் வார்த்தைகள் அருமையானவை. "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்" என்றார். உடனே ஆண்டவர் என்ன சொன்னார்? "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூடயிருந்தும் நீ என்னை அறியவில்லையா! என்னைக் கண்டவன் பிதாவைக் காண்டான். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டார். கடவுள் எவ்வளவு பெரியவர்! எவ்வளவு அதிசயமானவர்! கிறிஸ்துவில் கடவுள் தம்மை வெளிப்படுத்தினது உண்மைதானா? அவர் ஜீவியத்தை வாசிக்கையில் அவ்வளவு அதிசயமாய்த் தெரியவில்லையே என்று சிலர் சந்தேகிக்கலாம். தேவன் தமது சர்வ பரிபூரண இலட்சணங்களைக் காண்பித்து, மனுஷனைத் திடுக்கிடச் செய்யும்படி வராமல், தமது அன்பின் கரத்தை நீட்டி நம்மைத் தூக்கி இரட்சிக்கும்படி வந்ததால் அந்த நோக்கம் நிறைவேறுகிறதற்கேற்றாற்போல் தம்மை வெளிப்படுத்தினார் என்று அறிய வேண்டும்.

## 2. மனுஷன் வெளிப்பட்டான்

கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறவராக மாத்திரமல்ல. அவர் மனுஷனை வெளிப்படுத்துகிறவராகவும், வந்தார். அவர் ஒருவரே தேவ பார்வையில் பூரணமான மனுஷனாகயிருந்தார். நாம் மனுஷர் என்று அழைக்கப்பட்டாலும் மனுஷன் என்னும் பேருக்குத் தகுதியுள்ளவர்களல்ல. பாவம் மனுஷனைப் பலவிதத்திலும் கெடுத்து விட்டது. எவ்வளவு தூரம் நாம் கெட்டுப்போனோம் என்பது முதலாய் நமக்குத் தெரிகிறதில்லை. இந்தக் கெட்டுப்போன நிலைமையில் நாம் நம்மைக் குறித்து எவ்வளவோ பெருமை பாராட்டிக் கொள்கிறோம். பாவத்தால் விளைந்த அறிவீனமே இவை யாவற்றிற்கும் காரணம். மனுஷன் தேவனை வெளிப்படுத்தவேண்டியவன். வானங்கள் தேவ மகிமையை வெளிப்படுத்துகின்றன. மற்றெல்லாச் சிருஷ்டிப்பு களைப் பார்க்கிலும் மனுஷன் தேவனைப் பூரணமாக வெளிப்படுத்தவேண்டியவன். இதற்காகவே தேவன்

மனுஷனைத் தமது சாயலாகவும், தமது ரூபமாகவும் உண்டாக்கினார். மனுஷன் தம்மோடு ஐக்கியமாயிருக்கவும், தம்மை அறிந்து தம்மில் அன்புகூரவும் தமது சித்தம்போல் அவன் பிழைக்கவும், தமது மகிமையை அவன் சுதந்தரித்துக் கொள்ளவும் சிருஷ்டிகர் விரும்பினார். பாவம் மனுஷனைத் தேவனை விட்டுப் பிரித்தது. அவன் புத்தி அந்தகாரப்பட்டது. அவன் சித்தம் பலவீனப்பட்டது. அவன் ஆவியாகிய தீபம் அவிந்தது. ஆகாயத்திலன்றி பட்சி பறக்கமாட்டாதது போலவும். ஜலத்திலன்றி மீன் நீந்தமாட்டாததுபோலவும், தேவனை விட்டுப் பிரிந்த மனுஷனுடைய சகல தத்துவங்களும் குழம்பித் தத்தளித்தன. அவன் ஆவி, தேவனில் ஊன்றித் தழைத்தோங்குவதற்குப்பதிலாக, அவன் தன் ஆவி, ஆத்மா, சரீர முழுவதும் பூமியில் வேரூன்றி விட்டன. இவ்வாறு மனுஷன் தான் வேரூன்றிப் பிழைக்கவேண்டிய கடவுளை விட்டு விலகி, தன்னைச் சகல விதத்திலும் கெடுத்துக் கொண்டான்.

நசரேயனாகிய இயேசு தோன்றினார். மனுஷருக்குள் மனுஷனாகச் சஞ்சரித்தார். ஆ! எவ்வளவு வித்தியாசம்! தமக்கொரு சித்தமிருந்தும், தமது சித்தம்போல் நடவாமல் பிதாவின் சித்தப்படியே பிழைத்தார். ஒருபோதும் தமக்குப் பிரிமானதைத் தேடாமல், பிதாவுக்குப் பிரியமானதையே தேடினார். ஒன்றையும் சுயமாய்ச் செய்யாமல் பிதா கற்பித்தபடியே செய்தார். நான் அல்ல, பிதாவே இவைகளைப் பேசுகிறார்; பிதாவே இவைகளைச் செய்கிறார் என்றார். ஒருவருக்கும் தீமை செய்யாமல் எங்கும் எப்பொழுதும் எல்லாருக்கும் நன்மையையே செய்துகொண்டுவந்தார். முதலிலிருந்து கடைசி வரை இதுபோலவே நடந்து கொண்டார். இவ்வாறு சகல விஷயத்திலும் பிதாவின் பிரியம்போல் அவர் நடந்தபடியால் பிதாவைப் பூரணமாய் மகிமைப்படுத்தினார். தேவன் மனுஷனை உண்டாக்கின நோக்கம் இதுதான். அந்த நோக்கம் நசரேயனாகிய இயேசுவில் பூரணமாய் நிறைவேறிற்று. “தேவசாயல் தேவரூபம்” என்பது அவரால் பிரத்தியட்சமாக விளங்கிற்று. மனுஷன் தேவபார்வையில் எப்படிப்பட்ட வனாயிருக்கவேண்டும் என்பதை கிறிஸ்து தெளிவாய்க் காண்பித்தார். மனுஷ குமாரனுக்கு முன்பாக நம்மை நிறுத்தும்போது நாம் வெட்கமடைகிறோம். எக்ஸ்ரே என்னும் கருவி சரீரத்திற்குள் மறைந்திருக்கும் பாகங்களை

வெளிப்படுத்துவதுபோல, அவர் திருமுகப்பார்வை நமது அந்தரங்களை வெளிப்படுத்துகிறது. பேதுரு சொன்னாற்போல்; ஐயா, நான் பாவியான மனுஷன்; நீர் என்னை விட்டுப் போகவேண்டும் என்று நாம் புலம்ப வேண்டியதாயிருக்கிறது.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களானாலும், ஏற்றுக் கொள்ளாதவர்களானாலும், கிறிஸ்து நிகரற்ற புருஷன் என்பதும், அவருக்கொப்பான மனுஷன் இல்லை என்பதுமே அவருடைய ஏக வாக்கு. தூய்மையான வெண்வஸ்திரம் மற்ற வஸ்திரங்களின் அழுக்கை வெளிப்படுத்துவதுபோல, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த இந்த மாசற்ற மனுஷன் வெளிப்பட்டதில் சகல மனுஷரும் தங்கள் கேட்டை அறிந்து கொள்ள ஏதுவாயிற்று. கிறிஸ்துவின் வெளிச்சத்தில் ஒருவன் தன்னை நிறுத்தி நோக்கும்போது ஐயோ! அவரும் மனுஷன், நானும் மனுஷனோ! நான் மனுஷனல்ல என்றே புலம்ப நேரிடும். கிறிஸ்து மனுஷனை மனுஷனுக்கு வெளிப்படுத்தினார்.

### 3. மீட்பு வெளிப்பட்டது

அவர் உலகத்தில் வந்த நோக்கம் முந்திர இரண்டு வெளிப்படுத்தல்களினால் மாத்திரம் நிறைவேறாது. அவர் உலகத்தில் வந்தபோது "தேவனே உமது சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்; ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தப்படுத்தினீர்" என்று சொல்லிக்கொண்டு வந்தார். அந்தச் சரீரத்தின் மூலமாய் தேவனை வெளிப்படுத்தினார். அந்தச் சரீரத்தின் மூலமாய் மனிதன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும் என்று வெளிப்படுத்தினார். அந்தச் சரீரத்தில் வெளிப்படவேண்டிய இன்னொரு காரியமுமுண்டு. அதைக் குறித்து எபிரேயர் நிருபத்தில் "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒருதரம் பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" என்று வாசிக்கிறோம். நாம் பிதாவாகிய தேவனோடு இணைக்கப்படுவதே நமது இரட்சிப்பு. நம்மை தேவனோடு ஐக்கியப்படுத்தவே கிறிஸ்து வந்தார். இது அவரது ஜீவியத்தால் ஆகிற காரியமல்ல. அவருடைய உபதேசத்தாலும் ஆகிற காரியமல்ல. அவரது மாசற்ற ஜீவியம் என்னை நிர்ப்பந்தனாக்கினது. அவரது தெய்வீக உபதேசம் எனக்கு எட்டாத உயரமாயிற்று. இம்மட்டோடு நின்று போனால்

நான் இரட்சிக்கப்படுவது எப்படி? நான் பாவத்தால் தேவனுக்கு தூரமாய்ப் போய்விட்டேன். என் புத்தி அந்தகாரப்பட்டது. என் சித்தம் பலவீனப்பட்டது. என் மாம்சம் என்னை ஆளுகிறது. என் இருதயம் சகல கேடுகளுக்கும் ஊற்றாயிருக்கிறது. நான் முடவனைப்போல் நடக்கக் கூடாதிருக்கிறேன். இந்த நிலைமையில் கிறிஸ்துவின் ஜீவியமும் அவருடைய உபதேசமும் எனக்கு வெறுப்பாயிருக்கிறது. நான் தேவனோடு ஐக்கியப்படுவதெப்படி?

சிலுவையை நோக்க வேண்டும். "பாவம் பெருகின இடத்தில் கிருபை மிகவும் ஏராளமாய்ப் பெருகின" இடம் சிலுவையே. தேவகுமாரனை மனுஷன் சிலுவையில் அறைந்ததற்கு ஒப்பான பாவம் வேறெதுவுமில்லை. பாவத்தின் உச்சியையும் சிலுவையில் காண்கிறோம்; கிருபை அடைந்த வெற்றியையும் சிலுவையில் காண்கிறோம். மனுஷன் தேவனைத் தள்ளிவிட்டாலும், தேவன் மனுஷனைத் தள்ளிவிட வில்லை. கிறிஸ்துவுக்கு மரணம் அவசிமில்லை. பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றி, அவரைப் பூமியில் மகிமைப்படுத்தினவர், தாமதமின்றி மகிமைக்குள் பிரவேசிப்பதே நியாயம். அவரோ பரிசுத்த பர்வதத்திலிருந்து கீழே இறங்கி, சிலுவையை நோக்கி எருசலேமுக்குச் செல்லுகிறார். தமது மாம்ச சரீரத்தில் அடையும் மரணத்தின் மூலமாய் நம்மை தேவனோடு ஒப்புரவாக்கும்படி, அவர் சிலுவையை ஏற்றுக்கொண்டார். சிலுவையின் இரகசியம் பெரிது. அவர் பாவ மாம்சத்தின் சாயலில் வந்தது மாத்திரமல்ல. நமது பாவத்தை சுமந்தது மாத்திரமல்ல, நமக்காக அவர் பாவமானார். "அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்" என்பது மிகவும் ஆழமான கருத்துள்ளது. அவர் தம்மை நம்மோடு ஒன்றாக்கி, தமது சரீரத்தில் நமக்கு விரோதமாயிருந்த சகல இடறல்களையும் சாபத்தையும் ஏற்றுக்கொண்டு, தமது சரீரத்தை சிலுவையிலறைந்தபோதே நமது சகல சத்துருக்களையும் அந்தச் சரீரத்தோடு சேர்த்து அறைந்தார். இவ்வாறு பாவத்தின் கேட்டை அவர் அகற்றி வெற்றியாய் உயிர்த்தெழுந்தார். அவருடைய உயிர்த்தெழுதலே அவர் அடைந்த வெற்றிக்கு அடையாளம். நமது பாவங்கள் அகற்றப்படவும், நாம் தேவனோடு ஐக்கியப்படவும், "அவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு

பண்ணினார்" நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு இணைக்கப்படும்போது, அவர் மூலமாய் பிதாவாகிய தேவனோடும் இணைக்கப்படுகிறோம். தேவனோடுள்ள ஐக்கியமே நமது இரட்சிப்பு. அந்த ஐக்கியம் கிறிஸ்துவின் மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது. "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று யோவான் சொன்னது போல நாமும் சொல்லக்கூடிய அனுபவம் நமக்கு வேண்டும். நாம் கிறிஸ்தவர்களாக அநேக காரியங்களைச் செய்யலாம். பிதாவோடு நமக்கு ஐக்கியமில்லையென்றால் சிலுவையின் அர்த்தத்தை நாம் இன்னும் அறிந்தவர்கள் அல்ல.

சிலுவை, தேவனுடைய அளவற்றை அன்பை வெளிப்படுத்துகிறது. மனுஷன் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைய முடியாது. தேவன் தமது முன்னாலோசனைப்படியும் தீர்மானப்படியும் தமது குமாரனைச் சிலுவையின் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தபடியால் மனுஷர் அவரைப் பிடித்து அடித்தார்கள். அவருடைய மரணத்தின் மூலமாய் நாம் பிழைக்க வேண்டுமென்பது தேவ ஞானம். விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் சிலுவை அளவில்லாச் செல்வமாயிருக்கிறது. கிறிஸ்துவின் "அளவற்ற ஐசுவரியத்தை" சிலுவை மூலமாய்க் காண்கிறார்கள். பாவத்தால் விளைந்த சகல கேடுகளும் நீங்கி, கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டியாகிறார்கள். சித்தம் பலப்படுகிறது. புத்தி தெளிவாகிறது. ஆவி அனல் கொள்ளுகிறது. இருதயத்தில் தேவ அன்பு பொங்குகிறது "தேவ சாயல், தேவரூபம்" என்னவென்பதை அனுபவத்தில் காண்கிறார்கள். கிறிஸ்துவின் ஜீவியம் அவர்களைப் பலப்படுத்தினதுபோல, அவர் தமது புதிய ஜீவனாக அவர்களைப் பலப்படுத்துகிறார். அவருடைய உபதேசம் எட்டாத உயரமாயிருந்ததுபோல, அவைகளைக் கைக்கொண்டு நடப்பது அவர்களுக்கு இலேசாயிருக்கிறது. கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வாசம்பண்ணித் தமது சாயலுக்கு ஒப்பாக அவர்களை மறுரூபமாக்கி வருகிறார். இன்னும் அவர்களின் குறைவுகள் உண்டு. நிறைவானது வருங்காலத்தில் இந்தக் குறைகள் யாவும் நீங்கி அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒப்பாயிருப்பார்கள். இதுவே மீட்பின் இரசகியம். தேவ வெளிப்படுத்தல். மனுஷ வெளிப்படுத்தல்;

மீட்பின் வெளிப்படுத்தல். இந்த மூன்று சத்தியங்களையும் மனதில் எண்ணி, கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவோமாக. தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவாகிய கிறிஸ்துவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

# 41. நாகமான் மாத்திரம்

**"எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தனாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை" (லூக். 4:27).**

ஏன் நாகமான் மாத்திரம்? இஸ்ரவேலருக்குள் இருந்த ஏராளமான குஷ்டரோகிகள் ஏன் சுத்தமாக்கப்படவில்லை? நாகமான் சுத்தாங்கத்தை வாஞ்சையோடு தேடிவந்தபடியால் அதைப் பெற்றுக்கொண்டான்.

மகத்துவம் பொருந்திய தேவன் மனுமக்களை ஆசீர்வதிக்கும்படி மாம்சத்தில் வெளிப்பட்டகாலத்தில் தம் ஜனத்தினுடைய நிர்விசாரத்தையும் அவிசுவாசத்தையும் கண்டு அவர்களுக்கு எச்சரிப்பாக இந்தத் திருஷ்டாந்தத்தைச் சொன்னார். நம்மை ஆசீர்வதிக்கும்படி தேவன் எவ்வளவு வாஞ்சையும், வல்லமையும் உள்ளவராயிருந்தபோதிலும், நாமும் வாஞ்சையோடு அவரைத் தேடாவிட்டால் நமக்குப் பிரயோஜனமென்ன? நம்மைச் சகல விஷயத்திலும் ஆசீர்வதிக்கும்படி ஆண்டவர் பூரணகிருபையும் தயவும் உள்ளவராயிருக்கிறார். நாம் அவரைத் தேடாமல், கேளாமல், அவருக்கு இணங்காமல் அவர் நம்மை ஆசீர்வதிக்க முடியாது. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு வந்ததே நம்மை ஆசீர்வதிக்கும்படி அவருக்குள்ள பூரண வாஞ்சையைக் காட்டுகிறது. அப்படியிருந்தும், கிறிஸ்துவின் ஜீவியத்தைப் படிக்கும்போது அவருடைய வாஞ்சை பூரணமாய் நிறைவேறவில்லை என்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணமென்ன? தங்களை நம்பி வந்தவரை ஜனங்கள் நம்பவில்லை. தங்களில் அன்பு வைத்து வந்தவரிடத்தில்

ஜனங்கள் அன்பு வைக்கவில்லை. தங்களைத்தேடி வந்தவரை ஜனங்கள் தேடவில்லை. தங்கள் இருதயத்தைக் கேட்டு வந்தவருடைய இருதயத்தை ஜனங்கள் அறியவில்லை. சுருக்கிச்சொல்ல வேண்டுமானால் ஜனங்கள் அவருக்கு இணங்கவில்லை. அவருக்கு இணங்காதவர்களை அவர் ஆசீர்வதிக்க முடியவில்லை. இதன் உண்மையை ஆண்டவருடைய ஊழியத்தின் திட்டமாய்க் காண்கிறோம். இஸ்ரவேலின் அத்தனை குஷ்டரோகிகள் இருந்தும், வாஞ்சையோடு தேடின நாகமானே சுகம் பெற்றான்.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு வந்தது மகா பெரிய இரகசியமும், மகா பெரிய தயவும், மகா பெரிய அதிசயமு மானது. பாவிகளை இரட்சிக்க வேண்டுமென்கிற தீராத வாஞ்சை அவருக்கில்லாதிருந்தால் தம்மை இவ்வளவு தூரம் தாழ்த்தியிருக்கமாட்டார். ஆகிலும் கிறிஸ்துவின் ஜீவியத்தில் நாம் காண்கிறதென்ன? ஆத்துமாக்களைச் சேர்த்துக் கொள்வதில் நமக்கிருக்கிற வாஞ்சைகூட அவருக்கு இல்லாதது போல் தோன்றுகிறதல்லவா? மற்றவர்களைக் கிறிஸ்தவர் களாக்கும்படி நாம் எத்தனை நடை நடக்கிறோம்; எவ்வளவெல்லாம் பேசுகிறோம்; எத்தனையோ முறைகளைக் கையாடுகிறோம்; நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்குக் கணக்கில்லை. இவைகள் சரியே! ஆகிலும் ஆத்துமாக்களை மீட்டுக்கொள்ளும்படி, தமது தெய்வீக ஜீவனைத் தத்தஞ் செய்ய வாஞ்சைகொண்டிருந்தவரிடத்தில் நாம் காண்கிறதென்ன? அவரது அடக்கமும் மௌனமுமே. நம்மைப்பார்க்கிலும் அவருக்கு அளவில்லாத ஆத்ம வாஞ்சையுண்டு. என்றாலும் தமது ஊழியத்தில் அவர் ஆத்திரப்பட்டதில்லை. பாவத்தின் கேட்டை அவரைப்போல் கண்டது யார்? அப்படியிருந்தும் கண்டவிடமெல்லாம், கண்ட மனுஷரோடெல்லாம் அவர் வலியப் போய்ப் பேசினவரல்ல. தம்மிடத்தில் பேசினவர் களுக்குப் பதில் சொன்னார்; தம்மைத் தேடினவர்களுக்குச் சகாயம் புரிந்தார். தம்மை அழைத்தவர்கள் வீடுகளுக்குச் சென்றார். இதை ஆரம்பமுதலே அவரில் காணலாம். தம்மைத் தேடிவந்த சீஷர்கள் இருவர் விசாரித்தபோது; வந்து பாருங்கள் என்றார். தாம் பேசுவதற்கும் கிரியை நடப்பிப்பதற்கும் தருணம் வாய்க்கக் காத்திருந்தார். அவ்வாறு தருணங்கள் கிடைத்தபோதெல்லாம் அவர் கிரியையை நடப்பிக்காமல் இருந்ததில்லை. அப்பொழுது "அவர் பிரதியுத்தரமாகச்

சொன்னது" என்று அடிக்கடி சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். அவர் எங்கேயிருந்தாலும் எங்கே போனாலும் தம்மைத் தேடிவந்தவர்களுக்கு நம்மை செய்கிறவராயும், கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறுகிறவராயும், தம்மிடம் வந்த நோயாளிகளைக் குணமாக்குகிறவராயும் விளங்கினார். தமது போதனைகளையாவது குணமாக்குதலையாவது பலவந்தமாக ஒருவர் பேரிலும் அவர் சுமத்தினவரல்ல. யாரையாகிலும் தேடிப்போய் அவர் நன்மைசெய்ததாக நாம் வாசித்தால், அவர்களுடைய இருதயத்தின் மறைவான விருப்பத்தைக் கண்டே அவ்வாறு நன்மை செய்தார் என்று அறியவேண்டும். இவ்வாறு அவர் தன்னடக்கமாயிருந்தது நம்மைப்பற்றிய நிர்விசாரமல்ல; தற்பெருமையுமல்ல. அவருடைய இருதயம் நமது மீதுள்ள பரிதாபங்களால் நிறைந்திருந்தன. நமது குறைவுகளைப் போக்கி நம்மை ஆசீர்வதிக்க அவர் சம்பூரண வல்லமையும் வாஞ்சையுமுள்ளவராயிருந்தார். ஆனால், வான மழை பெய்தாலும் அது மேட்டில் நிற்காமல் பள்ளத்தில் மாத்திரம் தங்குவதுபோல, தவணமுள்ள ஆத்துமாக்களுக்குமே. அவருடைய ஆசீர்வாதம் கிடைத்தது. வழியோரங்களில் எத்தனையே குருடர்களை அவர் அடிக்கடி கடந்துபோயிருப்பார். அவர்களைக் குணமாக்க அவருக்கு மனதில்லையோ? உண்டு. ஆகிலும் தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும் என்று கேட்டவனே பார்வையடைந்தான். எத்தனையோ குஷ்டரோகிகள் அங்கேயிருந்தார்கள்: பத்துப்பேரும் இன்னும் சுத்தமாக்கும்படி கேட்டுக்கொண்டவர் களுமல்லவோ சுகம்பெற்றார்கள். எத்தனையோ நோயாளிகளை அவர் கடந்து போயிருப்பார். அவர் பாதத்தைக் கிட்டிச் சேர்ந்தவர்களே ஆரோக்கியம் அடைந்தார்கள். ஏன் எல்லாரையும் ஒன்றுபோல் குணமாக்கிவிடக்கூடாது? அது தேவ முறையல்ல. நமக்கு மனமிருந்தாலும், மனமில்லாமற் போனாலும் அவர் நம்மை ரட்சிக்கக்கூடுமானால் ஒரே நிமிடத்தில் உலகிலுள்ள பாவிகள் எல்லாரையும் பரமகதி சேர்த்திருப்பார். இவ்வளவு பாடுகளேன்? இத்தனை நூற்றாண்டுகள் தாமதமேன்? இவ்வளவு போராட்டமேன்? இத்தனை போதனைகள் பிரசங்கங்கள் ஏன்? எருசலேமியரைப் பார்த்து; உங்களைச் சேர்த்துக்கொள்ள நான் மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்றென்று. அவர் புலம்ப வேண்டியதென்ன? மனமில்லாதவர்களை இரட்சிக்க கடவுளலாலும் முடியாது. இதுவரை நாம் கவனித்ததின் முடிவு

இதுதான். அவர் எவ்வளவு அன்பும் கிருபையுமுள்ளவராயிருந் தாலும், நாம் இணங்குகிறவரை அவர் நமக்கு நன்மை செய்ய முடியாது. ஆகையால் அவருடைய ஊழிய நாட்களில் அப்படிப்பட்ட தருணங்களுக்காகக் காத்திருந்தார், எங்கே யாரிடத்தில் தம்மைத் தேடும் வாஞ்சையைக் கண்டாரோ, உடனே அவர்களுக்கு அவர் நன்மை செய்யாதிருந்ததில்லை.

எத்தனையோ அதிசயமான காரியங்களை அறிவும் உணர்வுமற்ற சிருஷ்டிப்புகளில் வலிய நடத்திவரும் தேவன், மனுஷரிடத்தில் மாத்திரம் அவர்கள் சம்மதத்திற்குப் பொறுமையுடன் காத்திருக்கிறார். அவர்கள் தம்மை விரும்பத்தக்க காரியங்களையும் நடப்பிக்கிறார். அவருடைய சிலுவைக்கு நிகரான அன்பின் காந்தம் எது? அப்படியிருந்தும் மனுஷன் அவரை வாஞ்சையோடு தேடாவிட்டால் அவர் அவனை ஆசீர்வதிக்கமுடியாது. தேவன் தம்மை பலவந்தப்படுத்தாதது அவருக்கு நம்மீதுள்ள மதிப்பே. மரம், கல்லைப்போல் நம்மைப் பாராட்டாமல் அறிவும் உணர்வுமுள்ள மனுஷராக மதித்து நடத்த விரும்புகிறார். இது விஷயத்தில் நமது நன்மை அல்லது தீமைக்கு நானே உத்திரவாதிகள். ஒரு நோயாளி அவரிடம் சென்று குணமானாலும், ஒரு பாவி அவரைத் தேடி ரட்சிப்பைப் பெற்றாலும், அவர்களுக்கு அவர் சொல்லும் வார்த்தை கவனிக்கத்தக்கது; “மகனே, மகளே, உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது” என்பதே.

தேவனுடைய ஆளுகை நமக்கு விளங்கவில்லை. உலகத்தின் காரியங்களையும், சபைகளில் தத்தளிப்பையும் கவனிக்கும் போது, தேவன் ஏன் சும்மாயிருக்கிறார்? ஏன் பேசாமலிருக் கிறார்? தாம் இருப்பதை பிரத்தியட்சமாய் வெளிப்படுத்துகிறது தானே. சகலமும் தன் தன் இஷ்டம்போல் நடக்கிறதே. தேவன் இவைகளை விசாரிக்கக்கூடாதா? இப்படி அவர் பேசாமல் ஊமைப்போலிருந்தால் யார் அவரை மதிப்பான்? யார் அவருக்கு பயப்படுவான்? எல்லாம் மனுஷர் நடவடிக்கைகளாயிருக்கிறதேயன்றி கடவுள் கிரியை செய்வது போல் தோன்றவில்லையே என்று நாம் பலவாறாய்ப் புலம்புகிறோம். இப்படிப்பட்ட தருணங்களில் கலிலேயாவில் நடமாடின கிறிஸ்துவை நினைத்துக்கொள்ள வேண்டும். மனுஷர் சம்பந்தமாக கடவுள் எப்படியிருக்கிறார் என்பதை

கிறிஸ்துவில் காண்கிறோம். சகல பரிபூரணமும் நிறைந்த திருக்குமாரன், பாவிகளுடைய மனக்கடினம், நிர்விசாரத்தினிமித்தம் தாம் பொழியும்படி கொண்டு வந்த ஆசீர்வாதங்களைக் கொடுக்கக்கூடாமற்போனார். இன்னும் அந்தக் கஷ்டம் அவரை விட்டு நீங்கவில்லை. தேவன் கிறிஸ்துவுக்குள்ளாக அந்நாளில் தம்மை வெளிப்படுத்தினதுபோலவே இன்னும் வெளிப்படுத்துகிறார். எத்தனையோ குஷ்டரோகிகள் இருந்தும் நாகமான் மாத்திரம் குணமானதுபோல், யார் யார் அவரை வாஞ்சையோடு தேடுகிறார்களோ, அவர்களே ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவருக்கு மனமுண்டு. நமக்கு மனமுண்டோ?

# 42. உயர்வு, தாழ்வு

***"தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக். 18:14).***

ஆலயத்துக்கு ஜெபம்பண்ணும்படிபோன பரிசேயன், ஆயக்காரன் என்ற இருவரைப்பற்றிய உவமையை பலர் சொல்லி, அதன் போதனையாக முடிவில் இந்த வார்த்தைகளை ஆண்டவர் சொன்னார். ஆலயம் அழிந்தது, ஆராதனைகள் ஒய்ந்தன. பரிசேயன், ஆயக்காரன் என்னும் பேர்களும் மாறின. ஆனால் உவமையில் சொல்லப்பட்ட சத்தியமோ நாளதுவரை நிலைநிற்கிறது. தேவனுக்குமுன் தங்களை உயர்த்துகிறவர்களை இந்நாளிலும் காண்கிறோம். தேவனுக்கு முன் தங்களைத் தாழ்த்துகிறவர்களையும் இன்றைக்குக் காண்கிறோம். இவ்விருதிறத்தாரையும் கவனிக்கும் கர்த்தர் கூறும் தீர்ப்பும் மாறாமலேயிருக்கிறது. "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."

உயர்த்தப்படவேண்டும், முன்னுக்கு வரவேண்டும், மேன்மையடைய வேண்டும் என்கிற ஆசை எல்லாருக்குள்ளும் உண்டு. அநேகர் முன்னுக்கு வர எவ்வளவோ பிரயாசப்பட்டும் முடியாமல் மனஞ்சோர்ந்திருக்கிறார்கள். அநேகர் எது மேன்மை, எது சரியான உயர்வு என்பதை அறியாதிருக்கிறார்கள். மற்ற அநேகர் முன்னுக்கு வரும்படி தகாத

இழிவான முறைகளைக் கையாளுகிறார்கள். ஒன்று நிச்சயம், எல்லாருக்குமே உயர்த்தப்படவேண்டுமென்கிற ஆசை இருக்கிறது. ஒருவருக்காகிலும் தாழ்த்தப்பட, சிறுமைப்பட, கைவிடப்பட பிரியமேயிராது. நல்லது, சரியான உயர்வுக்கு ஆண்டவர் காட்டும் வழியைக் கவனிபோம்.

மனுஷன் தன்னைத்தான் உயர்த்துவதே சகல பாவங்களுக்கும் வேர் கொலை, களவு, விபசாரம் முதலான பெரும்பாவங்களையே நாம் கவனித்துத் தீர்ப்பிடுகிறோம். ஆனால் சகல பாவங்களுக்கும் ஊற்று, ஒருவன் தன்னைத் தான் உயர்த்துகிற பெருமையே என்பதை அறிய வேண்டும். தோற்றத்தின்படி தீர்ப்பிடுவது நமது இயற்கை; தேவனோ நீதியின்படி தீர்ப்பிடுகிறார். அவர் மனுஷனுடைய உள்ளான நிலைமையை அறிந்து அதன்படி தீர்ப்பிடுகிறார். நல்ல பரிசேயனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, சண்டாளன் ஆயக்காரனை நீதிமானாக்கினதென்னவென்று நாம் கேட்போம். மனுஷர் அறிய கொலைபாதகனும் விபச்சாரக்காரனுமாகிய தாவீதை: “என் உள்ளத்திற்கு உகந்த தாசன்” என்று தேவன் சொன்னது நியாயமாவென்று கேட்போம். ஆண்டவருடைய தீர்ப்பு நீதியாயிருக்கும். ஒருவனிடத்தில் சமயாசமயங்களில் காணப்படும் தவறுதல்களைக் கொண்டல்ல, அவனுடைய ஜீவியத்தின் பிரதானமான, நிலையான பாவமென்ன என்பதைக்கொண்டே தேவன் மனுஷரைத் தீர்ப்பிடுகிறார். கிறிஸ்துவை மறுதலித்ததும், சபித்ததும் சின்ன பாவமா? அப்படிப்பட்ட ஒருவனை நாம் அப்போஸ்தலர் வரிசையிலும் சேர்ப்போமா? ஆண்டவரோ பேதுருவில் அன்புவைத்து பன்னிருவர் மத்தியில் அவரை சிரேஷ்ட ஊழியனாக்கினார். மனுஷன் பார்வை வேறே, கடவுள் பார்வை வேறே.

### 1. பரிசேயனுடைய பாவம் என்ன?

அவன் தன்னைத்தானே உயர்த்தினான். தன்னை உயர்த்துகிறவனுடைய ஜீவியத்தில் தேவன் இல்லை. தேவனை அறிந்தவன் தன்னை ஒருபோதும் உயர்த்தமாட்டான். இவனிடத்தில் பல குறிப்புகளைக் காணலாம். ஆனால் இரண்டே இரண்டை மாத்திரம் எடுத்துக் கொள்வோம். அவன் தன்னை உயர்த்தினான் என்பதற்கு அவை இரண்டும் போதும். அவன் சுயநீதி உள்ளவன். தன்னைப் பற்றி பெருமையான எண்ணமுடையவன். தன்னை அளந்து பார்க்கும்படி தேவன்

தந்த அளவு கோலைக் கொண்டு தன்னை அளக்காமல், தன்னைப் பார்க்கிலும் கோணலான அளவு கோல்களைக் கொண்டு தன்னை அளந்து பார்த்து மோசம் போனவன். அவன் சொன்ன வார்த்தைகளே நமக்கு ஆதாரம். "தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினாலே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்." தன் ஜீவியத்தை மற்ற மனுஷரோடு ஒப்பிட்டுப்பார்த்து அவர்களைப் பார்க்கிலும் தான் எவ்வளவோ பெரிய நீதிமான் என்று சொல்லி தேவனுக்கு முன்பாக தன்னை உயர்த்துகிறான். அவனுடைய ஸ்தோத்திரம் மகா அருவருப்பு. அது முழுப்பொய். தேவநீதியை அடையாமல் தன்னைத்தானே நீதிமானாக்கிக் கொண்டவன் தன்னை ஸ்தோத்தரிக்க வேண்டுமேயன்றி, தேவனை ஸ்தோத்தரிக்க என்ன நியாயமுண்டு?

இரண்டாவது, அவன் சுய நம்பிக்கையுள்ளவன். தேவன் தனக்குச் செய்தவைகளையல்ல, தான் செய்தவைகளைப் பிரமாதமாகச் சொல்லுகிறான். "வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்துகிறேன். அவன் அப்படிச் செய்யவில்லை என்று நாம் சொல்லுகிறதில்லை. அவன் அநேக ஆசாரங்களைக் கைக்கொண்டு நடந்திருப்பான். தன் சுய கிரியைகளிலேதான் அவன் நம்பிக்கை வைத்திருந்தான். அவன் கடவுளிடத்திலிருந்து ஏதாகிலும் நன்மையைத் தேடி வந்தவனல்ல. தான் நீதிமானென்றும் தான் அநேக நற்கிரியைகளைச் செய்தவனென்றும் தேவனுக்கு விளம்பரஞ் செய்ய வந்தவன். அவன் ஜீவியத்திலாவது அவன் கிரியைகளிலாவது கடவுள் இல்லை. அவனே அவனுக்குக் கடவுள். இவைகளிலே அவனுடைய இருமேட்டிமையையும், தேவசமுகத்தில் அவன் தன்னை உயர்த்துவதையும் காண்கிறோம். நம்மை நாமே உயர்த்துகிற மோசத்துக்கு நாம் தப்ப வேண்டும். தேவ அளவு கோலாகிய கிறிஸ்துவுக்குமுன் நம்மை நிறுத்தும்போது நமது நீதி என்று பேச எங்கே இடமுண்டு? வெட்கமும் துக்கமும் அவமானமுமே நமது பங்காகின்றன. மேலும் நாமும் நமக்குள்ள யாவும் அவர் கொடுக்க நாம் பெற்றவைகளாதலால் மேன்மை பாராட்ட இடமேது? இந்த உணர்வு பரிசேயனுக்கு இல்லை. ஆகையால் தேவன் அவனைத் தாழ்த்தினார். அவன் நீதி

அழுக்கான கந்தையாயிற்று. அவன் சுய கிரியைகள் ஆக்கினைக் குள்ளாயிற்று. தேவனை மறந்து, தன்னை உயர்த்தின நேபுகாத் நேச்சார் மிருகமாகத் தாழ்த்தப்பட்டான். "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்?" நமக்குள் பெருமை அதிகம். அது ஆதி சர்ப்பத்தின் விஷம். பலகாரியங்களைக் குறித்து நாம் மேட்டிமையடைகிறோம். ஆ! இது எவ்வளவு பயங்கரம்! எவ்வளவு அறிவீனம்! கிறிஸ்துவை நெருங்க நெருங்க இந்தப் பெருமைக்கு இடமிராது. தங்களை உயர்த்துகிறவர்கள் கட்டாயம் தாழ்த்தப்பட்டுப்போவார்கள்.

## 2. ஆயக்காரன் அடைந்த உயர்வென்ன?

அவன் எவ்வளவு பயபக்தியோடு தேவசமுகத்தில் காணப்படுகிறான் என்பதை ஆண்டவர் முந்திச் சொல்லிப் பின்பு அவனுடைய ஜெபத்தைப்பற்றிப் பேசுகிறார். "தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்றான். இங்கே சில குறிப்புகளைக் கவனிப்போம். சரியான இடத்தில் தன்னை நிறுத்தினான். "தேவனும் நானும்" மூன்றாம் பேர்வழிக்கு இடமில்லை. குருவோ, பிரசங்கியோ, அங்கேயில்லை. இதுவே பெரிய இரகசியம். ஆராதனைகளுக்கு, ஜெபக்கூட்டங்களுக்கு உற்சாகமாகப் போகிறார்கள். தேவனைத் தனித்துச் சந்திக்க அவர்களுக்குத் தைரியமில்லை. தீராத பாவரோகங்கள் தீர்வதற்கும், அவிழ்க்கமுடியாத படுமுடிச்சுகள் அவிழ்க்கப் படுவதற்கும் தேவனைத் தனித்துச் சந்திப்பதே ரகசியம். அவன் செய்த அறிக்கை தேவனே நான் பாவி, இந்த ஒரே வார்த்தையில் அவனுடைய சகல பாவங்களும் அடங்கியிருக் கின்றன. அவனுடைய ஜெபம் "என் மேல் கிருபையாயிரும்." உம்மிடத்திலிருந்து யாதொரு நன்மையாகிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதி எனக்கில்லை. உமது இலவசமான கிருபைக்கு அபயமிடுகிறேன். அவனுடைய விசுவாசம். இந்த வார்த்தை வாக்கியத்தில் வரவில்லை. என்றாலும், அவனுக்கு விசுவாசமில்லாதிருந்தால் தேவசமுகத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வந்திருக்கமாட்டான். "தேவனிடத்தில் சேருகிறவன், அவர் உண்டென்றும் தம்மைத் தேடுகிறவர் களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" ஆகவே இவன் தன் பாவங்களை உணர்ந்து, தேவ சமுகத்தில் தன்னை நீசனாகத்தாழ்த்தி, இரக்கத்துக்காக கெஞ்சினான். பரிசேயனல்ல, இவனே உயர்த்தப்பட்டான்.

உயர்த்தப்பட்டான் என்றால் என்ன? பரிசேயனுக்கொப்பான மேலான நிலைமைக்கு, அந்தஸ்திற்கு, ஐசுவரியத்திற்கு உயர்த்தப்பட்டானோ? அப்படிப்பட்டவைகளை உயர்வு என்று தேவன் மதிக்கிறாரோ? அல்ல. தேவபார்வையில் உயர்த்தப்பட்டவன் யார்? நீதிமானாக்கப்பட்டவனே. தேவன் அவன் பாவங்களை மன்னித்து, கிறிஸ்துவின் நீதியினால் அவனை மூடி, தம்முடைய பிள்ளையாகச் சேர்த்துக் கொண்டார். இதுவே ஆயக்காரன் அடைந்த உயர்வு. உலகத்தில் உயர்வு என்று கொண்டாடும் காரியங்கள் பலவுண்டு. உயர்ந்த கல்வி, சர்க்காரில் மேலான பதவி, உயர்ந்த அந்தஸ்து, ஐசுவரியம், வீடுவாசல்கள், தோட்டம் துரவுகள், இப்படிப் பட்டவைகளினிமித்தம் மனுஷரை உயர்ந்தவர்கள் என்று உலகம் போற்றுகிறது. கிறிஸ்தவர்களுக்குள்ளும் இந்த பட்சபாதமான மதிப்பு காணப்படுவது எவ்வளவு பரிதாபம்! தேவனற்ற ஐசுவரியவான்களை நாம் மதிக்கிறோம். தேவபக்தரான ஏழைகளை அசட்டை செய்கிறோம். மெய்யான உயர்வு எதுவென்று இன்னும் நாம் கற்றுக்கொள்ளவில்லை. நாம் ஆவிக்குரியவர்களாயிருந்தால் இந்தச் சோதனைக்கு இடங்கொடுக்க மாட்டோம். நமக்கும் உலக நாட்டம் இருப்பதால் இவ்வுலகத்தில் தங்கள் பங்கை பெற்றவர்களை நாம் மதிக்கிறோம், போற்றுகிறோம், வாழ்த்துகிறோம். அவர்களை அசட்டை செய்ய வேண்டுமென்பது நமது கருத்தல்ல. எது மெய்யான உயர்வு என்பதனை நாம் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே நமது கருத்து. அதோ ஒரு மனுஷன். அவன் ஆண்டி, உடை ஒட்டகமயிர். ஆகாரம் வெட்டுக்கிளியும் தேனும். அவனுக்கு வீடு வாசல் இல்லை. சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் இல்லை. அவன் ஏறிச் செல்ல வாகனம் இல்லை. அவனைத் தொடர்ந்து செல்ல வேலைக்காரர்கள் இல்லை. எல்லாரும் அவனைப் பார்த்தபோது அற்பனாக காணப்பட்டான். ஆனால் "அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவன்" என்பது தேவன் கொடுத்த சாட்சி. உலகத்தில் மேன்மை பெற்றவர்களை நாம் பாக்கியவான்கள் என்று வாழ்த்துகிறோம். வேதவாக்கியத்தின்படி தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனோடு ஐக்கியமாகி ஜீவிக்கிறவனே பாக்கியவான். "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்" (சங். 32:1). அவனே பெரியவன். அவனே உயர்ந்தவன்.

உலகமுழுவதும் ஒருவனுக்கிருந்தாலும், அதினாலே அவன் உயர்ந்தவனல்ல. தேவனை நம்பி, அவரில் அன்பு கூர்ந்து, அவரைத் தன் பங்காக்கிக் கொண்டவனே உயர்ந்தவன். ஆகையால் எந்தக் காரணத்தினிமித்தமாகிலும் பெருமைக்கு நாம் இடங்கொடாதிருப்போமாக. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் சத்துரு. எப்பொழுதும் எல்லாக்காரியங்களிலும் மனத் தாழ்மையை அணிந்து கொள்வோமாக. "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்" என்றார். நமது அருமை மீட்பர். அவர் சர்வத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்ட காரணம் அதுதான். நாம் நடக்கவேண்டிய வழியும் அதுவே.

## 43. வஸ்திர ஓரம்

***"வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்" (லூக். 8:44).***

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீலநாடாவைக் கட்டவேண்டுமென்று கர்த்தர் கட்டளை யிட்டிருந்தார். அவர்கள் தங்கள் தலைமுறைதோறும் அந்தக் கட்டளையைக் கைக்கொள்ளவேண்டும். இது அவர்கள் தேவனுடைய ஜனம் என்பதற்கும், அவரோடுள்ள உடன் படிக்கைக்கும் அடையாளமாயிருந்தது. ஆண்டவர் தரித்திருந்த வஸ்திரம் இதைப் போன்றதாயிருக்கலாம்.

அற்புதமூர்த்தி யவீரு வீட்டுக்குச் செல்கிறார். திரளான ஜனங்கள் அவரை நெருக்கிக் கொண்டு போகிறார்கள். பன்னிரண்டு ஆண்டு கொடிய நோயால் அவஸ்தைப்பட்ட ஓர் ஸ்திரீ அங்கே வருகிறாள். அவள் சரித்திரமோ மிகவும் பரிதாபம். தன் வியாதி நீங்கும்படி அநேக வைத்தியரிடம் மருந்து சாப்பிட்டாள். தன் ஆஸ்திகள் யாவையும் வைத்தியர்களுக்கு இறைத்தாள். நோய் சற்றும் நீங்காமல் கேடே அதிகரித்தது. ஆண்டவர் நோய்களை நீக்கும் வல்லவரென்றும், அன்பும் கருணையுமுள்ளவரென்றும், யாரையும் புறக்கணியாதவ ரென்றும் கேள்விப்பட்டு அவரிடம் போகத் தீர்மானித்தாள். அவள் போனவிதமோ நூதனம். எல்லா நோயாளிகளும் அவருக்கு முன்பாக வந்து, அவரோடு பேசி, சுகம் பெற்றுப் போக, இவளோ தான் குணமாகும் வழியைத் தானே தனக்கு

உண்டு பண்ணிக்கொண்டாள். இவள் ஆண்டவரை இதற்கு முன் கண்டவளல்ல. ஜனத்திரள் மிகவும் ஏராளம். நெருக்கம் அதிகம். ஒருவருக்குமே தெரியாமல் சுகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அவள் கோரிக்கை. நான் அவருக்குப் பின்னாலே போய், அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டுவிட்டால் குணமாவேன் என்பது அவள் உண்டுபண்ணிக்கொண்ட விசுவாசப்பிரமாணம். விசுவாச வழிக்கு அளவு திட்டம் இல்லை. அது பலரிடமும், பலவிதமாய்த் தோன்றி பலன் செய்கிறது. இவள் தெரிந்து கொண்டது ஆண்டவர் ஏற்படுத்தின முறையல்ல. சீஷர்கள் போதித்த மார்க்கமுமல்ல. பலவீனமும் வேதனையும் நிறைந்த ஏழை ஸ்திரீ, தனக்குத்தானே உண்டாக்கிக் கொண்ட விசுவாசமிது. சமுத்திர அலைகள் துரும்பைக் கரைசேர்ப்பது போல, நடந்துசென்ற திரள் கூட்டத்திற்குள் பிரவேசித்து என்னவிதமாகவோ படிப்படியாய் திவ்ய இரட்சகர் பின்னே வந்துவிட்டாள்! நெருக்கத்தின் இடையில் தன் கரத்தை நடுக்கத்துடனே நீட்டி அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். தொட்ட நிமிடத்தில் அற்புதம் நடந்தது. இது வஸ்திர ஓரத்தின் அந்தரங்க வல்லமை.

வேறொரு இடத்தில் அவர் வஸ்திர ஓரத்தின் வெளியரங்க வல்லமையைப்பற்றிப் வாசிக்கிறோம். அவர் கடலைக் கடந்து கெனசரெத்து நாட்டுக்குச் வந்தார். அவரை அறிந்தவர்கள் சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகள் எல்லாரையும் வரவழைத்து, அவர் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவு பெற்றுக்கொண்டு, ஆண்டவர் அறிய, சீஷர்கள் பார்க்க, கூடியிருந்தவர்கள் கவனிக்க, நோயாளிகள் சாவகாசமாய் அவர் வஸ்திர ஓரத்தைத் தொட்டுக் குணமானார்கள். இது பகிரங்க ஏற்பாடு. இரண்டுக்கும் வித்தியாசம் எவ்வளவு; இவளை ஒருவரும் அறிந்ததில்லை. அவள் வந்தது அந்தரங்கம், தொட்டது அந்தரங்கம். சுகமானது அந்தரங்கம். நடந்த சங்கதி இன்னதென்று ஆண்டவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஜீவியத்தில் அநேக காரியங்கள் இதுபோலவே நடக்கின்றன. கிறிஸ்துவின் உத்தம அடியார்களேயன்றி மற்றவர்களுக்கு இந்த அந்தரங்க வல்லமையின் ரகிசயம் என்ன தெரியும்?

இந்தச் சரித்திரத்தில் இரண்டொரு குறிப்புகளைச் சுருக்கமாகக் கவனிப்போம். விவரித்துப்பேச இடம்போதாது.

### 1. இலேசான வழியிலே பெரிய ஆசீர்வாதம்

முழு வஸ்திரமல்ல, வஸ்திரத்தின் ஓரந்தான். அதன் வல்லமையை என்ன சொல்ல? அவள் செய்தது சின்னக் காரியம். பெற்றதோ பேராசீர்வாதம். பேதுரு, யோவானைப் போல் இவள் கிறிஸ்துவை நெருங்கி அறிந்தவளல்ல. அவர் முகத்தைப் பார்த்தவளல்ல. அவரோடு பேசினவளல்ல. தன்நோய் நீங்கும்படி அவர் கையைப் பலமாய்ப் பிடித்தவளல்ல. அவர் திருமேனியைக் கட்டித் தழுவினவளு மல்ல. அவர் வஸ்திரத்தின் ஓரத்தை மாத்திரம் தன் விரல்களால் தொட்டாள். அந்தத் தொடுதல், அவர் திருமேனியிலிருந்த தேவவல்லமையை வெளியேற்றி, அவள் பாழான சரீரத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. அதிசய மாறுதலைத் தன் சரீரத்தில் கண்டாள். தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதை ஆண்டவரும் அறிந்தார். ஒருவன் உண்மையாய் ஆசீர்வதிக்கப்பட்டால் அது அவனுக்கும் தெரியும், ஆண்டவருக்கும் தெரியும். அவரிலிருந்து வல்லமை புறப்படாமல் நமக்கு ஆசீர்வாதமேது? அநேகர் இதைச் சிந்திக்கிறதில்லை. நம்மை நாமே ஆசீர்வதித்துக் கொள்ளுகிறதா? நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் கர்த்தரிடத்திலிருந்து நமக்குள் வந்தாலொழிய நாம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டோம். ஆராதனை ஜெபக் கூட்டங்களின் உற்சாகத்தை ஆசீர்வாதமாக எண்ணிக் கொள்ளக்கூடாது. ஜீவியத்தை மாற்றாத ஆசீர்வாதம் தேவனுடையதல்ல.

"என்னைத் தொட்டது யார்" என்று கேட்டார். பேதுருவும் மற்றவர்களும் அவரைப் பார்த்து: திரள் ஜனம் உம்மை நெருக்கிக் கொண்டிருக்க, என்னைத் தொட்டது யாரென்று நீர் கேட்பது விந்தையாயிருக்கிறது என்றார்கள். "இல்லை, ஒருவர் என்னைத் தொட்டதுண்டு; என்னிலிருந்து வல்லமையும் புறப்பட்டது" என்றார். இனி மறைந்திருக்க முடியாது என்று கண்டு, அந்த ஸ்திரீ ஆண்டவர் முன் வந்து சகல காரியங்களையும் விவரமாகச் சொன்னாள். ஆண்டவர் அவளைத் தைரியப்படுத்தி; "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்துடன் போ" என்றார். அவள்

ஆண்டவரைப் பார்க்குமுன்னே, அவரோடு பேசுமுன்னே, அவரும் அவளோடு பேசுமுன்னே, அவள் ஆரோக்கிய மடைந்தாள். அறிவும் அனுபவமும் பிந்திக் கிடைத்தது. பெற்ற ஆசீர்வாதம் பெரிது, அதைப் பெற்ற வழியோ சிறிது. இரட்சிப்பு எவ்வளவு பெரிது! இரட்சிப்பில் அடங்கியிருக்கும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு மேலானவை! வழியென்ன? விசுவாசம். நாம் கிறிஸ்துவில் வைக்கும் பற்றுதல் பெரிய நன்மைகளை நமக்குக் கொண்டு வருகிறது. தேவ வல்லமை நமது ஜீவியத்தில் வெளிப்பட நாம் தொடவேண்டியது வஸ்திர ஓரம்தான். தேவனுக்கு பெரிய வேலை; நமக்கோ சின்ன வேலை. கிறிஸ்தவ ஜீவியம் முழுவதும் இப்படியேயிருக்கிறது. அந்த வஸ்திர ஓரத்தையாவது நாம் சரியாய்த் தொடுகிறோமா என்பதுதான் கேள்வி.

**2. உலக சாஸ்திரத்திலாகிலும் வேத காரியங்களிலாகிலும் மனுஷர் இதுவரை கண்டு பிடித்ததென்ன?**

***அ. வஸ்திர ஓரந்தான்***

அந்த ஓரத்தின் மகத்துவத்தைக்கூட மனுஷன் பூரணமாய் அறிந்தவனல்ல. சாஸ்திர ஆராய்ச்சி பெருகுவது மெய்யே. அதனாலுண்டாகும் அனுகூலங்கள் மிகுதி. சாஸ்திர ஆராய்ச்சிதான் கண்டடைந்ததென்ன? வஸ்திர ஓரந்தான். பூச்சக்கர முழுவதும் தேவனுடைய வஸ்திரமாயிருக்கிறது. பூமியில் மாத்திரமல்ல. உன்னதமும் விசாலமுமான எல்லை யில்லா ஆகாயத்தில் நிறைந்துள்ள் அதிசயங்கள் எவ்வளவு! அவைகளைக் கண்டறியும் தூரதிருஷ்டிக் கண்ணாடி எங்கேயுண்டு? இயற்கைப் பிரமாணங்களில் தோன்றும் செயல்களை அறிந்து, அவைகளை உபயோகத்திற்குக் கொண்டு வருவதேயன்றி, அதன் மூலகாரண இரகசியத்தை கண்டவன் யார்? தேவன் மனுஷனைச் சிருஷ்டித்தபோதே அவனுக்குள் அறிவு என்னும் ஒளியை வைத்தார். அது காலக்கிரமத்தில் படிப்படியாய் வெளிப்பட்டு, ஆச்சரியமான காரியங்களை மனுஷன் கண்டறிகிறானே தவிர, நூதனங்களைக் கண்டு பிடித்தானென்பது வெறும் பேச்சு. இவ்வுலக வாழ்வுக்கு வஸ்திர ஓரத்தை அறிந்தாலே போதும். சமுசாரிகளில் அநேகருக்கு வானசாஸ்திரமும், விதைகள் முளைக்கிற சாஸ்திரமும் தெரியாது. அவர்கள் பயிர்வேலை செய்யாமலும் சாப்பிடாமலும் இருக்கிறார்களா? ஏராளமான அறிவல்ல;

கிடைத்த கொஞ்ச அறிவை உபயோகப்படுத்துவதே பெருத்த அனுகூலம்.

ஆவிக்குரிய ராஜ்யத்தின் காரியங்களில் நாம் கண்டதென்ன? வஸ்திர ஓரமே. அந்த வஸ்திர ஓரத்தையாவது நாம் சரியாய்த் தொட்டால் நமக்கு எவ்வளவோ பாக்கியம்! கிறிஸ்துவை நாம் அறிந்ததெவ்வளவு! எத்தனை நூற்றாண்டு களாக ஆராய்ச்சி நடக்கிறது. கண்ட பலன் என்ன? வஸ்திர ஓரம்தான். கிறிஸ்து ஓர் ரகசிய புருஷன். எவ்வளவாய்க் கற்றாலும் கற்று முடியாத எல்லையில்லாச் சமுத்திரம்! நான் உங்களுக்கே அநேக காரியங்களைச் சொல்ல வேண்டும். இப்போது அவைகளைத் தாங்கிக் கொள்ள மாட்டீர்கள். ஆவியானவர் வந்தபின் சகலத்தையும் அறிவீர்கள் என்றார். ஆவியானவரும் வந்தாயிற்று. நாம் அறிந்ததென்ன? வஸ்திர ஓரந்தான். ஆவியின் நிறைவைப் பெற்ற அப்போஸ்தலன் முப்பது வருஷங்களுக்குப்பின், தான் இன்னும் கிறிஸ்துவை அறிய வேண்டுமென்று நாடினார். கிறிஸ்துவின் அன்பைக் குறித்து: அது அறிவுக்கெட்டாத அன்பு என்றார். ஆண்டவர் செய்த யாவற்றையும் எழுதப்போனால் உலகம் கொள்ளாதென்று யோவான் சொன்னார். அவ்வாறு எழுதப்பட்டு நாம் படித்தாலும் நாம் அறியக்கூடியதென்ன? வஸ்திர ஓரந்தான். நாம் சமுத்திரக்கரையில் நிற்கிறோம். அலைகள் நமது பாதங்களை நனைக்கின்றன. சமுத்திரத்தின் ஆழம், அகலம், நீளமோ நமது கண்களுக்கு மறைந்திருக்கின்றன. இதனால் நாம் சோர்ந்து போவதில்லை. ஏனென்றால் இவ்வுலக வாழ்வுக்கு நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய சகல ஆசீர்வாதங் களும் இந்த வஸ்திர ஓரத்தில் அடங்கியிருக்கின்றன. நமது பெரும்பாடுகள் நீங்கிப் பேராசீர்வாதம் பெறுவதற்கு ஆண்டவருடைய வஸ்திர ஓரம் போதாதா? நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு தேவரகசியங்கள் யாவும் அறிந்து விட வேண்டுமென்றல்ல; வேதசாஸ்திரத்தில் நிபுணராக வேண்டுமென்றல்ல இப்படிப்பட்ட நிபுணர் அநேகர் தேவஜீவனுக்கு அந்நியராயிருந்து, பிறருக்கு ஆசீர்வாதமா யிராமலும் தேவனை மகிமைப்படுத்தாமலும் இருக்கிறார்களே. அவரை நெருக்கினவர்கள் கடுகளவு நன்மையடையாதிருக்க, வஸ்திர ஓரத்தைத் தொட்டவள் அல்லவோ ஆசீர்வாதம்

பெற்றாள். அவர் வல்லமையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவரைத் தொடும் ரகசியத்தை நாம் அறியாவிட்டால், நமது அறிவு யாவும் வீணாகும். நமது சிலாக்கியங்கள் பாழாகும். கவனிக்க வேண்டிய விஷயமென்னவென்றால் நமக்குக் கிடைத்திருக்கும் சொற்ப அறிவை ஆசீர்வாதமாக்கிக் கொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவோ அறிந்திருந்தும் அவைகளை கைநெகிழ விட்டு, புதிது புதிதான அறிவைத் தேடிப்போவது கொடிய வஞ்சகமாகும். நமக்குக் கிடைத்திருப்பது வஸ்திர ஓரம்; அதை உண்மையாய்த் தொடுவதின் பலனோ அதிசயம். நெருக்கினவர்கள் அநேகர்; தொட்டவளோ ஒருத்தி. நமது சபைகளின் காரியமும் இதுபோலவே இருக்கிறது.

# 44. இருதயக் கடினம்

***"உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி. 3:15).***

இக்கடைசிக்காலம் கொடிய காலமென்று எங்குமுள்ள தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் உணருகிறார்கள். மனுஷனுடைய அக்கிரமும் பாவமும் காலத்தைக் கெடுத்ததே யல்லாமல் மற்றப்படியல்ல. பாவத்துக்கு முன் தேவன் எல்லாவற்றையும் பார்த்து நன்றாயிருக்கிறதென்று மகிழ்ந்தார். பாவத்துக்குப் பின்போ சகலமும் கெட்டுப் போனதாகக் கண்டு மனஸ்தாபப்பட்டார். பாவத்தினால் மனுஷனுக்குண்டான கேடுகள் அதிகம். அவன் தேவனை விட்டுப்பிரிந்தான். அக்கிரமத்திற்கு அடிமையானான். புத்தியின் கண்களைக் குருடாக்கிக்கொண்டான். சமாதான ஜீவியத்தைப் போக்கடித்தான். தன் சரீரத்தையும் கெடுத்துக் கொண்டான். இவைமாத்திரமல்ல, தன் இருதயத்தையும் கடினப்படுத்திக் கொண்டான். ஆ, இருதயக் கடினம் எல்லாவற்றிலும் மோசம். ஆகையால் ஆவியானவர் இருதயக் கடினத்தைக் குறித்துப் பேசும்போது இஸ்ரவேலரை திருஷ்டாந்தமாக எடுத்துக் காண்பிக்கிறார். அவர்கள் தேவனுடைய அதிசயங்களையும் நடத்துதல்களையும் அவருடைய மகிமையையும் கண்ணாரக் கண்டிருந்தும் அவருக்குப் பயப்படாமலும் அவரை

விசுவாசியாமலும் கீழ்ப்படியாமலும் தங்கள் இருதயங்களை அதிகமாய்க் கடினப்படுத்தி தேவகோபத்துக்குள்ளானார்கள். இச்சிக்கப்படத்தக்க நல்ல தேசத்தை இழந்து வனாந்தரத்தில் மாண்டுபோனார்கள். சகோதரரே! இன்று நாம் அவருடைய சத்தத்தைக் கேட்போமாகில் நமது இருதயத்தை கடினப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

## இருதயக்கடினம் எப்படி உண்டாகிறது?

### 1. கிருபையில் ஆவிக்கு எதிர்த்து நிற்பதினால்

"என் ஜனமோ என் சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்" (சங். *81:11,12*). ஆவியானவர் மனுஷனோடு போராடுகிற காலமுமுண்டு. அவர் போராட்டம் நிற்கிற காலமுமுண்டு. இதை வாசிக்கிற என் சகோதரனே! இதை மறந்து போகாதபடிக்கு உன்னைப் பணிவாய்க் கெஞ்சுகிறேன். பூர்வ உலகத்தாரோடு வெகுகாலம் போராடினார். அப்புறம் போராட்டம் நின்றது. அவர்கள் தேவசத்தத்திற்கு செவிகொடாமற் போனபடியால் ஆவியானவர் அவர்களை விட்டு விலகினார். "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடு போராடுவதில்லை" என்று கர்த்தர் சொன்னார். பார்வோனோடு தேவன் பலமாய்ப் பேசினார். பலத்த செய்கைகளினால் அவனோடு போராடினார். தேவகரம் தனக்கு விரோதமாக நிற்கும்போது ஒருவிதமாகவும், அது நீங்கும்போது வேறுவிதமாகவும் தன்னைக் காண்பித்தான். அவன் தேவனை விரும்பவில்லை. அவர் சத்தத்திற்கு செவி கொடுக்கவுமில்லை. கிருபை அவனைவிட்டு விலகிற்று. கல்லைப்போல கடினப்பட்டுப்போனான். சகோதரரே! உங்கள் இருதயங்களின் நிலைமை எப்படி இருக்கிறது? ஆண்டவர் பலவிதமாய் உங்களோடு பேசுகிறாரே! உங்களை இரட்சிக்கவும், பரிசுத்தமாக்கவும் தமக்கு உத்தம ஊழியர்களாக்கவும் எவ்வளவோ பிரயாசப்படுகிறாரே. அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்தீர்களா? அல்லது கர்த்தரை விரும்பாமல் அவருடைய ஆவிக்கு எதிர்த்து நிற்கிறீர்களா? இந்த நேரத்தில் உங்கள் இருதயம் ஆண்டவருடைய பார்வையில் எப்படியிருக்கிறதென்று சோதித்துப்பாருங்கள்.

## 2. அறிந்த சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற்போவதினால்

மாற்கு மூன்றாம் அதிகாரத்தில் நமதாண்டவரை ஓர் ஜெப ஆலயத்தில் பிரவேசிக்கக் காண்கிறோம். சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் அங்கேயிருந்தான். அது ஒரு ஓய்வு நாளாயிருந்தது. இவனைச் சொஸ்தப்படுத்தினால் அவரைக் குற்றப்படுத்தலாமென்பது அவர்களுடைய நோக்கம். அவர்களைப் பார்த்து: ஓய்வு நாட்களில் நன்மை செய்வதோ தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம் என்று கேட்டார். அவர்கள் ஒன்றும் பேசவில்லை. அவர்களுடைய இருதயம் எவ்வளவு தூரம் கடினப்பட்டதாயிருந்ததென்று அவர் அறிந்தபோது அவர் விசனப்பட்டுக் கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, சூம்பின கையையுடைய மனுஷனைச் சொஸ்தமாக்கி அனுப்பினார். இந்தக் கிருபையின் ஐசுவரியத்தைப் பட்டப்பகலைப் போல் அவர்கள் பார்த்திருந்தும், மனக்கடினப்பட்ட பாவிகள் அவரைக் கொலைசெய்யும்படி புறப்பட்டுப் போனார்களென்று வாசிக்கிறோம்.

நம்முடைய தனி ஜீவியமானாலும், சபை ஜீவியமானாலும் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வேறே நூதனமான போதனைகள் வேண்டுமென்றல்ல. இதுவரை நாம் அறிந்ததும் உபதேசிக்கக் கேட்டதுமான சத்தியங்களுக்கு நாம் கீழ்ப்படிவது மெய்யானால் அதிசயமான மாறுதலை நம்மில் காணலாம். நாம் கீழ்ப்படியும் ஒரு சத்தியம் நம்மில் எவ்வளவோ மாறுதலை உண்டாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. கீழ்ப்படிவது அதாவது சத்தியத்தைக் கைக்கொள்ளுவது ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், கீழ்ப்படியாமற்போவது இருதயக் கடினத்திற்கும் ஏதுவாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக; நாம் வேதத்தை வாசிக்கும் போது 'நீங்கள் மனந்திரும்பாமற் போனால் கெட்டுப்போவீர்கள்' என்கிற வசனத்தை வாசிக்கிறதாக வைத்துக்கொள்ளுவோம். அந்தச் சத்தியம் நமது செவியில் தொனித்தும் நாம் பாவத்தில் நிலைத்திருப்போ மானால் அவ்வசனத்திற்கு கீழ்ப்படியாமற்போவதினாலே இருதயம் கடினப்பட ஏதுவாகிறது. இப்படியே ஏராளமான சத்தியங்கள் தங்களிலே வல்லமையுடையதாயிருந்தும் நாம் அவைகளுக்குக் கீழ்ப்படியாமற்போவதினாலே அவைகள் நமது விஷயமாய் வல்லமையற்றதுபோலாகின்றன. இந்தச் சபை எப்படிப்பட்டது

என்று ஒருவர் இன்னொருவரைக் கேட்க; அதற்கு அவர் இது திருவசனத்தைக் கேட்டுக்கேட்டு கடினப்பட்ட சபை என்றார். வசனத்தைக் கேட்டதினாலே அல்ல. வசனத்தைக் கேட்டும் அதற்குக் கீழ்ப்படியாமற் போவதினாலேயே இருதயக்கடினம் உண்டாகிறது.

### 3. பாவத்தின் வஞ்சனையினால்

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதேயுங்கள்" என்று ஆவியானவர் எச்சரிக்கிறார் (எபி. 3:13). பாவத்தினால் உண்டாகக்கூடிய பலகேடுகளில் இருதயக் கடினமும் ஒன்று. சூரிய உஷ்ணம் மண்ணிலுள்ள ஈரத்தை இழுத்துக் கொள்ள களிமண் கல்லாய் இறுகிப் போவதுபோல் பாவமானது மனுஷனுடைய உள்ளத்திலுள்ள நல் உணர்ச்சிகளை மாற்றி மனதைக் கல்லாக்கிப் போடுகிறது. எத்தனையோபேர் விஷயத்தில் இன்று இதைக் காண்கிறோம். ஓர் காலத்தில் இயேசு என்றால் உள்ளம் உருகும். வேதத்தில் அவ்வளவு வாஞ்சை, ஜெபத்தில் அவ்வளவு ஊக்கம், ஜீவியத்தில் அவ்வளவு சுத்தம். இன்று அவர்களுடைய இருதயம் கல்லைப்போல கடினமாயிருக்கிறது. அவ்வளவு நல்ல ஜீவியம் இவ்வளவு மோசமாய்ப் போனதின் காரணமென்ன என்று விசாரிக்கப்போனால் ஏதோ பாவத்தினால் இப்படியாயிற்று என்று தெரியவரும். சகோதரரே! பாவம் நுழைந்து இருதயம் கடினப்பட்டுப் போகாதபடி வேதத் தியானத்தையும் ஜெபத் தியானத்தையும் கையாடி வாருங்கள்.

## இருதயக் கடினத்தால் உண்டாகும் நஷ்டங்கள் எவை?

அவைகள் மிகுதியாயிருக்கின்றன. சிலவற்றை மாத்திரம் கவனிப்போம்.

### 1. வேதப்பிரியமற்றுப் போகுதல்

வேதமானது மதிப்பில் பொன்னிலும் பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கது. ருசியில் தேனிலும் தெளிதேனிலும் மதுரமானது. அது நமது வழிக்கு ஒளி. சத்துருவை மேற்கொள்ளக் கருக்கான பட்டயம். ஆத்ம உயிரும், ஞானப்பிரகாசமும், நம்பிக்கை விசுவாசமும், ஆறுதலும் தேறுதலும், சமாதான சந்தோஷமும், சகல நல் ஈவுகளும் வேதத்தின் பலனாயிருக்கிறது. தேவமக்கள் இந்தப் பாலில்

எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறார்கள்! தேவ ஊழியர் இந்த ஆகாரத்தில் எவ்வளவோ பிரியமாயிருக்கிறார்கள்! இருதயம் கடினப்பட்டவர்களுக்கு இந்தப் புஸ்தகம் கசப்பு. வாசிக்கவும் விரும்பார்கள். வாசித்தாலும் அறியார்கள். வேதம் இருதயத்திற்குரியதேயன்றி வாய்குரியதல்ல.

**2. ஜெப வாஞ்சையற்றுப் போகுதல்**

பக்தர்களுக்கு ஜீவனாயிருக்கிற ஜெபம் இவர்களுக்கு மகா பாரம். ஜெபம் செய்வது மகா கஷ்டம். ஜெபிக்க நேரிட்டாலும் வெறும் வார்த்தையேயல்லாமல் வல்லமையிராது. எத்தனை ஜெபம் செய்தாலும் பதிலைக் காணார்கள். இவர்கள் செய்கிற மற்றப் பாவங்களோடு இவர்களுடைய ஜெபமும் பாவமாக எண்ணப்படுகிறது.

**3. ஊழியம் நஷ்டமாகுதல்**

இருதயம் கடினமாயிருக்கும்போது ஆத்தும வாஞ்சை ஏது? ஆத்தும வாஞ்சையில்லாவிட்டாலும் கடமைக்கு ஊழியம் செய்வார்கள். இது எவ்வளவு பரிதாபம்! வேதத்தைப் பிரசங்கிப்பது எவ்வளவு அற்பமாகப் போய்விட்டது. இருதயத்திலிருந்து இருதயத்திற்குப் பேசாமல் வாயிலிருந்து காதுகளுக்குப் பேசுகிறார்கள். கடினப்பட்டவர்களின் ஊழியம் வீண் நேரமும் பெரும் நஷ்டமுமாம்.

**4. ஜீவியம் கெட்டுப்போகுதல்**

"தேவனுக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?" (யோபு 9:4). 'எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவன் தீங்கில் விழுவான்' "அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்" (நீதி. 28:14; 29:1). இவ்வாக்கியங்கள் சத்தியமென்பதற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்கள் உண்டு.

**5. இளைப்பாறுதல் அற்றுப் போகுதல்**

தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தின இஸ்ரவேலரைக் குறித்து: "என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" என்றார். உப்பானது சாரமற்றுப்போனால்

எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமேயொழிய மற்றொன்றுக்கும் உதவாது. கிருபையை இழந்த இருதயத்தைக் கடினப்படுத்து வோரின் நிலைமை எவ்வளவு பயங்கரம்! கடினப்பட்ட எகிப்தியர் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்தார்கள். கடினப்பட்ட இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மாண்டார்கள். கடினப்பட்ட கிறிஸ்தவர்கள் என்னத்தைக் காண்பார்கள்? தேவனிடத்தில் பட்சபாதமில்லை. கேட்டுக்குப்போகிற வழியும் நம்முன்னிருக்கிறது. ஜீவனுக்குப் போகிற வழியும் நம்முன்னிருக்கிறது. தெரிந்து கொள்ளவேண்டியது நமது கடமை.

## இருதயக் கடினம் எப்படி நீங்கும்?

இது நம்மால் கூடிய காரியமல்ல. மனுஷன் தன்னைக் கெடுப்பான், ரட்சிக்கமாட்டான். தன்னைக் கறைப்படுத்துவான்; கழுவமாட்டான். பாவம் செய்வான்; மன்னிக்கமாட்டான. இழந்துபோவான்; சம்பாதிக்கமாட்டான். நன்மையானதொன்றும் மனுஷனில் இல்லை. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அப்படியே கடினப்பட்ட பாவியும் தானே தன் கடினத்தை நீக்கிக்கொள்ளமாட்டான். மனுஷனால் கூடாதது தேவனால் கூடும். அப்படிச் செய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" என்கிறார். (எசே. 36:26). மனுஷன் தன் இருதயத்தைக் கெடுக்கிறான். தேவனோ அந்தக் கேட்டை நீக்குகிறார். இதற்காக நாம் செய்ய வேண்டியதின்னதென்று 37-ம் வசனத்தில் சொல்லியிருக்கிறது. "நான் இதை அனுக்கிரகம் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்கிறார். அவருடைய வாக்கை நம்பி அவருக்கு முன் முழங்காலூன்றி இந்தக் கல்லான இருதயம் எடுபடவும் நொறுங்குண்ட சதையான இருதயம் அருளப்படவும் ஜெபிப்போமாக.

# 45. ஜெபம் பண்ணுகையில்

***"ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார், அவர் ஜெபம் பண்ணுகையில்" (லூக். 9:28,29).***

சுவிசேஷகர் எழுதினவைகள் மாத்திரந்தான் இயேசு வானவர் ஜெபித்த நேரங்கள் என்று நாம் எண்ணலாகாது. அவர்களுக்கு முன்பாக அவர் ஜெபித்த நேரங்களுமுண்டு. அவர்களை விட்டுப் பிரிந்துபோய் ஜெபித்த நேரங்களுமுண்டு. அவர்கள் கண்டவைகளையும் அறிந்தவைகளையும் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆகிலும் அவர் உள்ளத்திலிருந்து ஜெபதூபம் எழும்பாத நேரமிருந்ததில்லை. வீட்டிலும் வழியிலும், கடலிலும், மலையிலும், சிலரோடும், திரள் ஜனத்தின் நடுவிலும், இரவும், பகலும், இடைவிடாமல் அவர் இருதயம் பிதாவை வாஞ்சித்துக் கொண்டேயிருந்தது. இந்த ஜெபசிந்தை நம்மிலுமிருப்பதாக.

அவர் ஜெபம்பண்ணுவதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார் என்று இங்கே சொல்லியிருக்கிறது. அது உயர்ந்த மலை என்று மத்தேயு சொல்லுகிறார். தனித்திருக்கும்படி மலையிலேறுவது மனதிற்கு எவ்வளவோ பரவசத்தைக் கொடுக்கிறதென்பது நமக்குத் தெரியும். உலகத்தையும் அதன் சந்தடியையும் காலின் கீழே விட்டு, உன்னத சிகரத்திலேறி பிதாவோடு சம்பாஷிப்பது அவரோடு முகமுகமாய் பேசுவது போலிருக்கும். அடிக்கடி மலையிலேறி ஜெபிக்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைக்காவிட்டாலும் நமது ஜெப அறையிலிருந்து மனதின் மூலமாய் உன்னதத்திற்கு ஏறுவோமானால், அதுவே பாக்கியம். ஆண்டவருக்கு ஜெபம் அவசியமானால் அவரடியாருக்கு அது எவ்வளவு அவசியம்! அவர் ஜெபம் பண்ணுகையில் நடந்த இரண்டு மூன்று குறிப்புகளைச் சுருக்கமாய்க் கவனிப்போம்.

**1. அவருடைய முகரூபம் மாறிற்று**

"அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது, வெளிச்சத்தைப் போல் அவருடைய வஸ்திரம் வெண்மையாயிற்று" என்று மத்தேயு எழுதுகிறார். அம்மலைச் சிகரத்தில் ஜெபிக்க முழங்காலூன்றினவுடனே அவர் முகம்

மாறிவிடவில்லை. ஆனால் அவர் ஜெபிக்க ஜெபிக்க வரவர முகத்தில் மகிமை தோன்றிச் சூரியப்பிரகாசம் போலானது. மோசே நாற்பது நாள் முகமுகமாய் தேவனோடு சம்பாஷித்து மலையிலிருந்து இறங்கினபோது அவர் முகம் தேவமகிமையினால் பிரகாசமடைந்திருந்தது. மற்றவர்கள் அவர் முகத்தைப் பார்க்கக்கூடாதிருந்தது.

ஜெபம் முகத்தை மாற்றுவது மெய்யே. முகத்தில் தோன்றும் ஒருவித அழகினாலே ஜெபபக்தர் இன்னாரென்று நாம் கண்டுகொள்ளலாம். தேவனுடைய பிள்ளை ஒருவரை நான் அறிவேன். அவர் சில வருஷங்களுக்கு முன் சொன்னது இப்போது என் ஞாபகத்துக்கு வருகிறது. ஒருநாள் அவர் தேவனோடு வெகுநேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்தாராம். அப்படியிருக்கும்போது பரம சந்தோஷம் அவர் உள்ளத்தை நிரப்பினதினால் அடக்கக்கூடாமல் தேவ சமுகத்தில் மிகுந்த பூரிப்படைந்தாராம். பின்பு கோவிலுக்குப் போகும்படியாக உடுத்திக்கொள்ளும்படி கண்ணாடிக்குமுன் அவர் நின்றபோது தன் முகரூபம் மாறிப் பரம அழகு கொண்டிருந்ததைக் கண்டதாகச் சொன்னர்.

நம்முடைய முகத்தில் தேவ அழகு குடிகொண்டிருப்பது நல்லது. அதைப் பார்க்கிலும் நமது ஜீவியம் மறுரூபமடைவதே விசேஷம். ஒருவேளை நமது முகங்கள் இயேசுவைப் போலும் மோசேயைப்போலும் பிரகாசிக்கிறதாகயிருந்தால் மற்றவர்கள் பயந்து நமது முகங்களைப் பார்க்காதபடி முக்காடு போட்டுக் கொள்ள வேண்டியதாயிருக்கும். நமது முகங்கள் மாத்திரமல்ல, நமது முழுச்சரீரமும், மறுரூபமாகிப் பிரகாசிக்கிற காலம் சீக்கிரம் வருகிறது. இப்போது நாம் பிரதானமாய்த் தேட வேண்டியது உள்ளான மறுரூபமே. “உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். இயேசுவின் முகம் பிரகாசிக்கும் முன்னே அவருடைய அகம் பிரகாசித்தது. அகத்தின் அழகு முகத்தில் தோன்றிற்று. உள்ளத்தை மறுரூபபடுத்தும் வல்லமை ஜெபத்திற்குண்டு. நமது முகங்களில் கவலை, மூர்க்கம், பெருமை, பேராசை இப்படிப்பட்ட சாயல்கள் காணப்படு கின்றன. அவைகள் நமது இருதயத்தை ஆண்டுகொண்டு அங்கே தங்கும்படி இடங்கொடுத்த படியினாலே படிப்படியாய் அச்சாயல்கள் நமது முகத்துக்கு வந்துவிட்டது. தேவன்

இருதயத்திலுள்ள எல்லா விக்கிரகங்களையும் உடைக்கவும் நம்மைச் சுத்திகரிக்கவும் அவரை நோக்கிக் கெஞ்சுவோமாக. நமது உள்ளமும் முகமும் தேவ அழகு பொருந்தியிருக்கத் தக்கதாக தனி ஜெபத்தில் அதிகநேரம் செலவிடுவோமாக.

**2. பரிசுத்தவான்களோடு ஐக்கியம் உண்டாயிற்று**

மோசே, எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவருடனே சம்பாஷணைபண்ணிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவருடைய முகரூபம் மாறினது மாத்திரமல்ல, அநேக வருஷங்களுக்கு முன் சென்றுபோன பரிசுத்தவான்கள் அவரோடு பேசுகிறதும், அவர் அவர்களோடு பேசுகிறதுமான காட்சியைக் காண்கிறோம். ஜெப மனுஷன் பரத்தில் வசிக்கிறான். அவனுடைய குடியிருப்பு பரலோகத்தி லிருக்கிறது. பரலோகவாசிகள் அவன் தோழர்கள். அவர்களுடைய ஐக்கியம் மரணத்தினால் பிரிந்து போகிற தில்லை.

பரிசுத்த பவுல் ஜெப பக்தன். ஜெபம் அவருக்கு ஜீவனாயிருந்தது. அவர் எவ்வளவுக்கு ஜெபித்தாரோ அவ்வளவுக்கு பரத்துக்குரியவரானார். அவருடைய சரீரம் பூமியிலிருந்தாலும் அவர் தமது ஆவியில் பரத்தில் உலாவினார். அவருடைய நிருபங்களில் இதைக் காணலாம். அவர் மூன்றாம் வானம் வரை போனதும் ஆச்சரியமல்ல. அவர் உலகத்திலிருந்த பக்தர்களை மறந்தவரல்ல. பாவிகளை இரட்சிக்கும்படி போராடாதவரல்ல. ஆகிலும் எல்லாவற்றிலும் மேலாக சென்றுபோன பரிசுத்தவான்களை எவ்வளவோ நினைக்கிறார்! எபிரேயர் **11**–ல் வெகு காலத்துக்கு முன்னுள்ள விசுவாசிகளை ஆபேல் தொடங்கி ஒவ்வொருவராக அவர் சொல்லி விஸ்தரிக்கிற விதம் எவ்வளவு எழுப்புதலாயிருக்கிறது! பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விபரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது என்கிறார். அவர்களுடைய விசுவாசத்தையும் அதனால் அவர்கள் அடைந்த ஜெப பலன்களையும் விஸ்தரித்தபின், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறபடியினால் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு

ஓடக்கடவோம் என்கிறார். சென்றுபோன தேவ பக்தர்கள் யாவரையும் கண்ணாரக் கண்டவர்போல் அவர்களுடைய ஜீவியத்தில் விளங்கின முக்கியமான இலட்சணங்களைப் பின்பற்றினவராக இப்படிப் பேசுகிறார்.

தற்காலத்தில் பரிசுத்தவான்கள் எவ்வளவு சீக்கிரமாக மறக்கப்பட்டுப்போகிறார்கள். நாம் கண்ணாரக்கண்ட பக்தர்கள் திடீர் திடீரென நம்மை விட்டுப் பிரிந்துபோகிறார்கள். அவர்களை நினைப்பாரில்லை. இனம் இனத்தை விரும்புவது இயல்பு. சபையின் நிலைமை எப்படிப்பட்டதென்று அறிய வேண்டுமானால் அது நாடுகிற ஆட்கள் எப்படிப்பட்டவர்கள் என்று விசாரிக்க வேண்டும். உலகத்தில் உயர்ந்தோர், கல்வியில் உயர்ந்தோர், பணத்தில் உயர்ந்தோர், விசேஷித்த பிரக்யாதி பட்டம்பெற்றோர் இப்படிப்பட்டவர்களைத் தேடுவதும், இப்படிப்பட்டவர்களை பீடத்தில் ஏற்றுவதும் சபைகளுக்கு வழக்கமாயிருக்கிறது. பக்தியும் கல்வியுமுள்ளவர்களை நாம் கனம் பண்ணவேண்டியதே. அவர்களை அடிக்கடி அழைத்து அவர்களுடைய ஆழமான நற்போதனைகளை கேட்க வேண்டியது நியாயமே. இரட்சிக்கப்படாத உலகமக்களை அவர்களுடைய உலக அதிகாரத்தினிமித்தமாக பீடத்தில் ஏற்றுவோமானால் உலக ஆவி நம்மையும் ஆண்டுகொண்டதென்பதற்குச் சந்தேகமில்லை.

நாம் ஜெபத்தில் வளருவது மெய்யானால் உலகசிந்தை நீங்கிப் பரலோக சிந்தையுண்டாகும். நம்முடைய ஐக்கியம் உலகத்தாரோடல்ல, பூமியிலுள்ள விசுவாசிகளோடும் சென்றுபோன திரளான பரிசுத்தவான்களோடும் இருக்கும். அவர்களை மறக்க முடியாது. அவர்கள் வரிசையாய் நமது கண்முன் வருவார்கள். அவர்களுடைய தேவபக்தியான ஜீவியமும் ஊக்கமுள்ள ஊழியமும் நமக்குச் சிறந்த மாதிரியாயிருக்கும். அவர்கள் எவ்வளவு காலத்துக்குமுன் இவ்வுலகைவிட்டுப் போயிருந்தாலும் நாம் ஜெப மனிதராயிருந்தால், தேவன் அவர்களை நமது மனதின் கண்களுக்கு அவ்வளவு பிரத்தியட்சமாகக் காட்டுவார். சென்றுபோன பக்தர்களையும் உயிரோடிருக்கிற விசுவாசிகளையும் நாம் மறந்து விட்டது மெய்யானால் ஜெப ஜீவியம் நம்மை விட்டுப் பறந்து விட்டது என்பதும் மெய். அவர் ஜெபம் பண்ணுகையில் மோசேயும் எலியாவும் தோன்றி அவரோடு பேசினார்கள்.

**3. சீஷர்களிடத்தில் பயபக்தி உண்டாயிற்று**

இதுவரை இப்படிப்பட்ட அதிசயமான காட்சியை அவர்கள் கண்டவர்கள் அல்ல. அவரைப் பின்பற்றினது முதல் அவருடைய ஜீவியம், உபதேசம், கிரியைகளைப் பார்த்து அவர்மேல் விஷேத்த ஒரு மதிப்பு அவர்களுக்கு இருந்தபோதிலும், இச்சமயத்தில் அவருடைய முகம் சூரியனைப் போல் பிரகாசித்ததையும், வெளிச்சத்தைப்போல் அவருடைய வஸ்திரம் வெண்மையாய் மாறினதையும், அது மாத்திரமல்ல, உன்னதத்திலிருந்து பிதாவாகிய தேவன் : "இவர் என்னுடைய நேச குமாரன். இவருக்குச் செவிகொடுங்கள்" என்று திருவுளம் பற்றினதையும் கேட்டபோது மிகுந்த பயபக்தியுள்ளவர்களாகி முகங்குப்புற விழுந்துவிட்டார்கள். இந்தப் பயபக்தி ஒருக்காலும் அவர்கள் ஞாபகத்தை விட்டு நீங்கவில்லை. இதைக் குறித்து யோவானும் பேதுருவும் வெகுகாலத்துக்குப்பின் எழுதியிருக்கிறார்கள். "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. **1:14**) "அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டோம்; இவர் என்னுடைய நேச குமாரன் இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்தில் இருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்" (**2**பேதுரு **1:16,18**). தங்களோட கூடயிருந்தவர் சாதாரணமானவரல்ல. அவர் தெய்வத்துக்குத் தெய்வமானவர் என்பதை அன்று அறிந்து கொண்டார்கள்.

சகோதரரே! இந்த மூன்றாம் குறிப்பில் நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. நமதாண்டவரிடத்தில் விளங்கிய வல்லமை அவரடியாரிடத்திலும் ஒருவாறு விளங்குகிறது. நாம் ஜெபத்தின் மூலமாய் தேவனோடு உறவாடி உன்னதத்தோடு ஐக்கியப்படும்போது அவ்வல்லமை மறைந்திருக்கமாட்டாது. நான் பக்திமான். நான் ஜெபம்பண்ணுகிறவனென்று பறைசாற்றத் தேவையில்லை. மற்றவர்கள் தாமாய் அறிந்து கொள்வார்கள். சிநேகிதர்கள் கண்டு கொள்ளுவார்கள். ஜெப பக்தர்களைப்பற்றிய பயபக்தியை தேவன் அவர்களில் உண்டாக்குகிறார். பொல்லாத துஷ்டரும்கூட எப்போதும்

வணங்கிப் போகத்தக்கதான ஒரு அச்சத்தை ஆண்டவர் அவர்களில் உண்டாக்குகிறார். ஒருவேளை சில துணிகரக்காரர் ஜெப பக்தர்களுக்கு விரோதமாய் எழும்பலாம். அப்படி எழும்புவது அவர்கள் அழிவிற்கே ஏதுவாயிருக்கும்.

மற்றவர்கள் பயபக்தியுள்ளவர்களாவது மாத்திரமல்ல, இவர்களிடத்தில் வந்து, இவர்களிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற ஆசையை தேவன் அவர்களில் உண்டாக்குகிறார். தங்களிடத்திலில்லாத அநேக நல்ல விஷயங்கள் ஜெப பக்தர்களிடத்திலிருக்கிறதற்காக தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தும்போது தேவ சித்தத்தையும், ரட்சிப்பின் வழியையும், தேவபக்தியின் பாக்கியமின்ன தென்பதையும் அறிந்து கொள்ள வாஞ்சைகொள்ளுகிறார்கள். இந்த மூன்று அடையாளங்களும் ஜெபத்தின் பலனாக நம்மில் நிறைவேற தேவன் கிருபை செய்வாராக.

# 46. பிழைக்கும் வழி

***"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்போது அவர் உன் பாதைகளைச் செவ்வை படுத்துவார்" (நீதி. 3:6).***

இவ்வாழ்க்கை மிகவும் கஷ்டமானது. மனுஷர் முகங்களைக் கவனித்தால் தெரியும். கஷ்டமும் கவலையும் நிறைந்த ஜீவியமிது. பிழைக்கும் வழி அறியாமல் தவிப்போர் அநேகர், மக்களைக் காப்பாற்றி வளர்ப்பதிலும், அவர்கள் பிழைக்கும் வழியை நிதானிப்பதிலும் மனுஷர் படும் பாடு கொஞ்சமல்ல. மோட்சத்தைப்பற்றிப் பேசினால், இப்போ என் வயிற்றுக்குச் சொல்லைய்யா என்கிறார்கள். உத்தியோகங்கள் லஞ்சத்தில் சிக்கிக்கொண்டன. வேலையில்லாத் திண்டாட்டம் பார்க்கப் பரிதாபம். கர்த்தாவே, மனுஷரை நீர் வீணாய்ச் சிருஷ்டிக்க வேண்டியதென்னவென்று சங்கீதக்காரனோடு சேர்ந்து புலம்புவோர் அநேகர்.

கலங்குவோரைத் தேற்றும் கர்த்தன் நமது பக்கத்தில் வந்து; ஏன் கவலைப்படுகிறீர்கள்? கவலைப்பட்டு ஆவதென்ன? உங்களுக்கு இன்னது தேவையென்பதை உங்கள் பரம பிதா

அறிந்திருக்கிறார். “உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்போது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்” என்கிறார்.

பிழைக்கும் வழிக்கு ரகசியம் இதுதான். உண்டு பண்ணினவரே வழி நடத்துகிறவர். உலகத்தில் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தபோதிலும் தமது பிள்ளைகளை நடத்துவது பிதாவுக்குப் பெரிய காரியமல்ல. நல்ல நிலைமையை விரும்புவதும், பெரிய காரியங்களை எதிர்பார்ப்பதும் மனுஷன் இயல்பு. தாய்பக்கம் நிற்கும் சிறுவன் இன்னும் பள்ளிக்கூடம் போகாமலிருக்கும்போதே நான் டாக்டர் ஆவேன், நான் லாயர் ஆவேன், நான் ஐயர் ஆவேன் என்று குளறிக் குளறிப் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். அதற்கு வழி எவ்வளவு தூரம் என்பதைச் சிறுவன் அறியான். வாலிபருக்கும் இவ்வித ஆசையுண்டு. மலைச்சிகரத்தில் நிற்க ஆசைதான் போகிற வழியோ கஷ்டமும் சுற்றுமானது. வழியறியாமல் குறுக்கே ஏறினால் ஆபத்தும் அழிவும் நேரிடும். கர்த்தர் வழி காட்டாவிட்டால் நமது ஆசைகள் வீணாகும். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்போது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். வசனத்தில் ஒரு கட்டளையும் ஒரு வாக்கும் இருக்கிறது. நமது வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்ளவேண்டியது கட்டளை; அவர் நமது பாதைகளைச் செவ்வைப்படுத்துவது வாக்கு. பிழைக்கும் வழி இதிலேதான் இருக்கிறது.

வழிகள் என்பது நமது முழுஜீவியத்தையும் குறிக்கும். நாம் பலர், நமது நிலைமை பல, நமது குடும்பங்கள் பல. நமது உத்தியோகம், சம்பாத்தியம் பல, நமது கஷ்டம் கவலைகள் பல. இவையாவும் சேர்ந்து நமது வழிகளாகும். நமது வழிகளிலெல்லாம் நமது பிதாவை நினைத்துக்கொள்ள வேண்டியது. அவரை மறக்கக்கூடாது. சகல காரியங்களிலும் நமது இருதயம் அவரைத் தொட்டுக்கொண்டே இருக்க வேண்டும். நாஸ்திகரை தேவனற்றவர்களென்று சொல்லி விடக்கூடாது. ஒருவிதமாய் அவர்களைப் போல கடவுளை நினைத்துக்கொண்டிருக்கிறவர்களில்லை. தங்கள் நினைவுகளில் கடவுளை மறந்து விடுகிறவர்களே நாஸ்திகர். அதுவும் லேசான காரியமல்ல. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்.

நினைத்துக் கொள் என்றால் அர்த்தமென்ன? சுவாமியை நினைக்காமலிருக்க முடிமாவென்று நாம் சொல்லுவோம். ஆங்கிலத்தில் (acknowledge him) என்று வருகிறது. அதுவே சரியான கருத்து. சும்மா நினைத்துக்கொள்ளுதல் அல்ல. (acknowledge) என்பதற்கு ஒப்புக்கொள், அறிக்கையிடு, ஏற்றுக்கொள், பெற்றுக்கொண்டதாகத் தெரிவி என்று அர்த்தமாகும். நமது காரியங்களிலெல்லாம் இடைவிடாமல் தேவன் கூடவே இருப்பதை உணர்ந்து ஜீவிக்க வேண்டும். அவர் சமூகத்தைப் பயபக்தியுடன் ஏற்றுக்கொண்டு அவரைப்பெற்றுக்கொண்டதாக நமது ஜீவியம் தெரிவிக்க வேண்டும். ஆலயத்தில் மாத்திரமல்ல எங்கும்; ஜெபக்கூட்டத்தில் மாத்திரமல்ல எல்லா இடங்களிலும், ஞாயிற்றுக்கிழமை மாத்திரமல்ல, எல்லா நாட்களிலும்; மற்றவர்களோடு இருக்கும்போது மாத்திரமல்ல, தனித்தும்; பகலில் மாத்திரமல்ல இரவிலும்; வேலையில் மாத்திரமல்ல ஓய்விலும் இவ்வாறு ஆண்டவர் சமுகத்தை உணர்ந்து, ஒப்புக்கொண்டு நிச்சயப்படுத்தி, பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து ஜீவிப்பதை வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்வதாகும்.

இவ்வளவு நிச்சயத்தோடு அவர் சமுகத்தில் நாம் ஜீவிக்கும்போது அது நம்மை வீணரும் கனியற்றவர்களுமா யிருக்கவொட்டாது. தேவ சமுகத்தில் என்ன குறைவுண்டு? கர்த்தரை கண்டடைந்த ஜீவியம் முயற்சியுள்ளது. முயற்சியுள்ள ஜீவியம் கனி நிறைந்தது. ஏக்கத்துக்கும், மனச்சோர்வுக்கும் வீண் கவலைகளுக்கும் அங்கே இடமில்லை. காட்டுப் புஷ்பங்கள் ஆகாயத்துப் பறவைகளைப்பற்றி ஆண்டவர் சொன்னதை அநேகர் தப்பாக அர்த்தப்படுத்தக் கூடும். "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை. நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை. ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறது மில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்." ஆகையால் நாமும் சும்மாயிருந்தால் பிதா நம்மைப் பிழைப்பூட்டுவாரென்பது அர்த்தமல்ல. உழைக்கவும், நூற்கவும்,

தெரியாத புஷ்பங்களை அலங்கரிக்கும் பரம பிதா, உழைக்கவும் நூற்கவும் தெரிந்த உங்களை உடுத்துவது எவ்வளவு நிச்சயம்! விதைக்கவும் அறுக்கவும் தெரியாத பட்சிகளைப் போஷிக்கும் பிதா, அவைகளை அறிந்திருக்கிற உங்களைப் போஷிப்பது எவ்வளவு நிச்சயம்! ஆகையால் நமது வழிகளில் தேவனை ஒப்புக்கொள்வது சோம்பலையல்ல, துணிகரத்தையல்ல, முயற்சியை நம்மில் உண்டாக்கும். பிதாவின் சமுகத்தில் இடைவிடாமல் தங்கின ஆண்டவர் இடைவிடாமல் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். நமது வழிகளில் அவரை ஒப்புக்கொள்வது நமது வரங்களை அவருக்காக உபயோகிக்கச் செய்யும், நாம் எந்தெந்த நிலைமையிலிருந்தாலும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். தேவபக்தி ஜீவியம் இதுவே. தேவபக்திக்குரிய முயற்சியோ இம்மையின் வாழ்வுக்கும் மறுமையின் வாழ்வுக்கும் வாக்கும் ஆதாரமுமா யிருக்கிறது. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அவர் உன் பாதைகளைச் செவ்வைபடுத்துவார்.

**குடும்பம்:** வீட்டில் பிள்ளைகள் தங்கள் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்ள வேண்டும். அவர் சமுகத்தில் பிழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோருக்குக் கீழ்படிந்து யாவருக்கும் நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ள வேண்டும். தேவன் நிச்சயமாகவே அவர்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

**கல்வி:** கல்வி மக்களுக்கு அவசியம். ஆகையால் எல்லாருமே கல்வியில் கம்பராவார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. பெற்றோருக்குப் பிள்ளைகள் ரகசியம். அவர்கள் எவ்விதமாவார்கள் என்று பெற்றார் அறியமாட்டார்கள். பையன் சிறுவனாயிருக்கையில் என் மகன் அப்படியாவான் இப்படியாவான் என்று பெருமையாய் பேசும் பெற்றோர், அதற்கு மக்கள் நேர்மாறாக இருக்கக் கண்டார்கள். பிள்ளைகள் நமக்குச் சொந்தமாயினும் அவர்களை நடத்தும் பாதை கடவுள் கரத்திலிருக்கிறது. ஒரு பிள்ளையைப்போல் இன்னொரு பிள்ளை இல்லை. அதுவே ரகசியம். அவர்கள் என்னென்ன பாதையில் செல்வார்கள் என்பது தேவ தீர்மானத்திலிருக்கிறது. நாம் அறியோம். அப்படியிருக்க எல்லாருமே கலாசாலை பண்டிதராவார்களென்று நினைத்து பெற்றார் படும்பாடு

கொஞ்சமல்ல. பொதுவான கல்வி எல்லாருக்கும் வேண்டியதே. ஆகிலும் தேவன் அவரவருக்கு அருளினவரம் வெவ்வேறாய் இருக்குமே. அந்தந்த வழிகள் அல்லவோ அவர்கள் பிழைக்கும் வழியும் கடவுளை மகிமைபப்படுத்தும் வழியுமாகமிருக்கும். இதை உணராமல் படி படி என்று அடித்து காலத்தை வீணாக்கி பணத்தையும் நஷ்டப்படுத்தினவர்கள் எத்தனை பேர்! புஸ்தகக் கல்வி மாத்திரமா தேவன் தந்த ஈவு? அவனுக்கு ஆண்டவர் தந்திருக்கிற வரம் என்ன? எந்த வழியில் அவன் துலங்குவான் என்று அறிந்து அந்த வழியில் அவனை நடத்துவதல்லவோ தேவவழி. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அவர் உன் பாதைகளைச் செவ்வைபடுத்துவார்.

**உத்தியோகம்:** மனுஷன் தான் தெரிந்து கொள்ளும் வேலையில் தேவ நடத்துதல் வேண்டும். அவர் காட்டும் பாதையே நமக்குப் பிரயோஜனமும் பிறருக்கு ஆசீர்வாதமுமா யிருக்கும். மற்றப்படி தண்ணீரை விட்டு வெளியேறின மீனைப்போல தவிக்க வேண்டியதுதான். மேலான உத்தியோகம் யாவருக்கும் பிரியமே. ஆனால் ஆண்டவர் நம்மை அதற்குத் தெரிந்து கொண்டாரா என்பது தான் கேள்வி. தேவனை மறந்து சுய இஷ்டப்படி நடக்கிறவர்கள் தங்களுக்கு மிஞ்சின இடங்களில் உத்தியோகம் செய்யலாம். அது அவர்களுக்குச் சங்கடமே; பிறருக்கும் அதிருப்தியே. ஆண்டவர் குறித்த வேலையே அவரவருக்கு இன்பமானது. வரமும், திறமையும் ஒரு உத்தியோகத்திற்கு ஏற்றாற்போலிருக்க, வழிதவறி வேறு உத்தியோகத்தில் பிரவேசிப்பது, தேவ ஏற்பாட்டிற்கு விரோதமானதால் காலமெல்லாம் அவர்கள் வாழ்வு சஞ்சலமாகவேயிருக்கும். உன்வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது உன் உத்தியோகத்தை அவர் உனக்குக் காட்டுவார்.

**விவாகம்:** இது மகா முக்கியம். அநேக தேவ பக்தியுள்ள பெண்கள் தேவனற்ற மனுஷரைக் கட்டிக்கொண்டு படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அதுபோலவே அநேக தேவ பக்தியுள்ள ஆண்கள் பக்தியற்ற பெண்களைக் கட்டிக்கொண்டு அடையும் சஞ்சலம் கொஞ்சமல்ல. இது விஷயத்தில் கர்த்தரின் நடத்துதல் மிகவும் அவசியம். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; நீ சம்பந்தங் கொள்ள வேண்டிய

குடும்பத்தை அவர் உனக்குக் காட்டுவார். இதுபோலவே சகல காரியங்களிலும் தேவ சமூகத்தை ஒப்புக்கொண்டு ஜீவிப்பது அவசியம்.

"அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்" என்பது வாக்கு. நமக்குரிய சகல காரியங்களிலும் அவர் நம்மை வழி நடத்துவதே நமது பாதைகளை அவர் செவ்வைப் படுத்துவதாகும். அவர் நடத்துதலை நாம் எப்படி அறிவது? "நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன் பேரில் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" என்கிறார். நமது ஜீவியம் முழுவதும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டு தேவமனதி லிருக்கிறது நாம் அதை அறியாமல் சுயசித்தப்படி நடந்து, அடிக்கடி வழிவிலகி, நமக்கு நாமே நம் சங்கடங்களை வருவித்துக் கொள்ளுகிறோம். ஆகிலும் தடுத்தாட்கொள்ளும் கிருபையுள்ள தேவன் நம்மைக் கைவிட்டுவிடவில்லை. நமது குறைவுகளை கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நிறைவாக்கியிருக் கிறார். நம்மை முற்றிலும் அவர் சித்தத்துக்கு ஒப்புவித்து அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய வேண்டும். நமக்கும் குடும்பத்திற்கும் உரிய வழக்கமான காரியங்களை அவர் சமூகத்தில் நாம் நடப்பிக்கலாம். இன்னும் பல காரியங்கள் சமயம்போல் தோன்றும். தீர்மானிக்கவேண்டியது இன்ன தென்று நமக்குத் தெரியவில்லை. அவ்விஷயங்களை ஆண்டவரிடத்தில் சொல்லி, அவைகளை அவருக்கு ஒப்புவித்துக் காத்திருக்கவேண்டும். நாம் செய்ய வேண்டியதின்னவென்று பலவிதத்தில் ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்துவார். தினசரி தியானப் புஸ்தகத்தின் மூலமாகவோ, அன்றாடக வேதவாசிப்பிலிருந்தோ வருங் கடிதங்களினாலோ, திடீரென நம்மிடத்தில் வந்து யோசனை சொல்லும் சிநேகிதர் மூலமாகவோ நமது மனத்தில் ஆவியானவர் ஏவும் நிச்சயத்தினாலோ நாம் செய்யவேண்டியது என்னவென்பதை வெளிப்படுத்துவார். இதுவே அவர் நமது பாதைகளைச் செவ்வை பண்ணுவதாகும். இதுவே பிழைக்கும் வழி. "உன் வழிகளிலெல்லாம் அவரை ஒப்புக்கொள்: அப்போது அவர் உன் பாதைகளைச் செவ்வை பண்ணுவார்."

# 47. சுவிசேஷப் பிரசங்கி

***"என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம்" (கலா. 1:11).***

*கலாத்தியர் நிருபம் கண்டிப்பானது. பவுல் சரியான அப்போஸ்தலன் அல்லவென்றும், அவர் பிரசங்கித்த சுவிசேஷம் சரியானதல்லவென்றும், சடங்குகளையும் அனுசரிக்க வேண்டுமென்றும் சிலர் போதித்து கலாத்தியா சபையாரைக் கலக்கிவிட்டார்கள். இதனால் பவுல் வைராக்கியங்கொண்டு தமது அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றியும், தமது சுவிசேஷத்தைப்பற்றியும் அவர்களுக்கு விவரிக்க வேண்டியதாயிற்று. தாம் பன்னிருவரில் ஒருவராயிராமற்போனாலும், இயேசுகிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாக நியமிக்கப் பட்டவரென்றும் தாம் பிரசங்கித்த சுவிசேஷம் கிறிஸ்துவிடம் பெற்றுக்கொண்ட தென்றும் ரூபிக்கிறார். யூதாஸ்காரியோத்து தவறினபின், அவன் ஸ்தானத்துக்குச் சீட்டுப்போட்டு மத்தியாவைத் தெரிந்துகொண்டது எவ்வளவு தூரம் சரியோ? பன்னிருவரை அப்போஸ்தலராகத் தெரிந்து கொண்டவர் கிறிஸ்துவே. யூதாஸ் கெட்டுப்போனால், பதில் ஆளைத் தெரிந்து கொள்ள வேண்டிய சபையின் நாயகனும் அவரே. சீஷரை காத்திருக்கச் சொன்னாரேயன்றிச் சீட்டுப்போடச் சொல்லவில்லை. ஆண்டவருக்குச் சாட்சிகளாகப் புறப்பட இன்னும் அவர்கள் தகுதியுள்ளவர்கள் அல்ல. அவர்கள் ஆவியானவரைப் பெற்றபின்பே, சகல முயற்சிகளும் சகல ஆலோசனைகளும் ஆரம்பிக்கவேண்டியது. அதற்கு முந்தி ஆத்திரப்பட்டு பேதுரு இரண்டு பேருக்குச் சீட்டுப்போட்டால் ஒருவன் பேருக்கு விழுவது ஆச்சரியமல்ல. மறுபடியும் குலுக்கிப்போட்டால் ஒருவேளை யோசேப்பின் பேருக்கு விழுந்தாலும் விழலாம். சீட்டோடு கண்ட மத்தியாவைத் திரும்பக் காணவே இல்லை. மேலும் உயிர்த்தெழுந்த ஆண்டவரைத் தரிசித்தவர்களே, உத்தம அப்போஸ்தல ராவார்கள். பவுல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை மெய்யாகவே சந்தித்தார். பவுலைக் குறித்து : "நான் தெரிந்து கொண்ட பாத்திரம்" என்று ஆண்டவரும் சாட்சி பகர்ந்தார். மத்தியாவின் விஷயத்தில் ஆண்டவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.*

இது ஒரு பக்கம் இருக்க, அப்போஸ்தலன் தமது சுவிசேஷமும் தேவ அதிகாரம் பெற்றதென ரூபிக்கிறார். இந்த முதல் அதிகாரத்தில் மாத்திரம் சுவிசேஷம் என்கிற வார்த்தை பத்துமுறை வருகிறது. நாம் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு ஆதாரமாக மூன்று முக்கியமான குறிப்புகளை பவுல் எடுத்துக் காண்பிக்கிறார்.

**1. பவுலின் சுவிசேஷம் கிறிஸ்துவிடம் இருந்து பெற்றது**

"நான் அதை ஒரு மனுஷனாலும் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்." வச. *12*. எங்கே? எப்பொழுது? சவுல் பக்திவைராக்கியமுள்ள யூதன். ஒரு கூட்டத்தார் சிலுவையில் அறையுண்டு செத்தவரை மேசியா என்றும், கிறிஸ்து என்றும் நம்பிப் பிரசங்கித்தது அவரால் சகிக்கக்கூடவில்லை. அவர்களை நிர்மூலம் பண்ணுவதே சரியென்றும், அதுவே தேவனுக்குப் பிரியமான ஊழியமென்றும் தீர்மானித்து, மகா கோபத்தோடே கிறிஸ்துவின் அடியார்களை நாசம் பண்ணினார். நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாக அவர் எருசலேமில் நடப்பித்த கொடுமைகள் காணாதென்று, சுற்றுப் பட்டணய்களில் உள்ளவர்களையும் உபத்திரவப்படுத்த துணிந்தார். இயேசு என்னும் நாமம் அவருக்கு எவ்வளவோ அருவருப்பு. தமஸ்குவுக்குப் போகிற வழியிலே வானத்திலிருந்து ஓர் தேவ பேரொளி பிரகாசிக்கவே கீழே விழுந்தார். சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்னும் சப்தம் தொனித்தது. "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்டார். நான்தான் மேசியா என்று சத்தம் கேட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? சவுலுக்கு அளவில்லாத சந்தோஷமுண்டாயிருக்கும். மற்றவைகளை மறந்து மேசியா என்ற வார்த்தையைப் பிடித்துக் கொள்ளுவார். பார்த்தாயா! கடவுள் என் பட்சத்தில் இருக்கிறார். நான் செய்கிறது சரிதானே. மேசியா பரத்தில் அல்லவோ இருக்கிறார். அவர் இன்னும் உலகத்திற்கு வரவில்லையே, அப்படியிருக்க இந்த அறிவில்லாத மனுஷர் நசரேயனாகிய இயேசுவை மேசியாவென்றும், கிறிஸ்துவென்றும் நம்பி மோசம் போனார்களே. சிலுவையிலறையுண்டு செத்துப்போன இயேசுவையல்லவோ இரட்சகர் என்று கட்டி அழுகிறார்கள். என் வேலையை உறுதிப்படுத்த அல்லவோ அவர் தோன்றினார் என்று எண்ணி

முன்னிலும் அதிகமாய்ச் சபையைப் பாழாக்கத் துணிந்திருப்பார். ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டதற்குப் பிறந்த உத்தரவென்ன? "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றார். இடிவிழுந்தது. சக்கரம் சுழன்றது. தெற்கத்தி வெள்ளம் திரும்பினது. சகலமும் தலைகீழானது. மூடனுக்கு ஆயிரம் வார்த்தை; ஞானிக்கு ஒரு சொல் போதும். சவுலே நான்தான் நசரேயனாகிய இயேசு. சிலுவையிலறையப்பட்டுச் செத்தவர். நீ பாழாக்கி வருகிறவர்கள் என் தாசர்கள் என்றார். நடந்ததென்ன? சவுல் பவுல் ஆனார். அவர் குணப்படுகிறதற்கு நீண்ட பிரசங்கம் அவசியமில்லை. அற்புத மாறுதல் ஒரு நிமிஷத்தில் நடந்தது. இயேசுவைப்பற்றிய சகல காரியங்களிலும் பரம ஒளி பிரகாசித்தது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தரிசித்ததே அவர் சுவிசேஷத்திற்கு ஆதாரம். அவரால் உண்டான மாறுதலே ஊழியத்தின் வல்லமைக்கு ஆதாரம். மனுஷர் மூலமாயல்ல. இயேசு கிறிஸ்துவிடமிருந்தே சுவிசேஷத்தைப் பெற்றார். வேறொரு சுவிசேஷத்தை வேறெவனாவது, வானத்தின் தூதனாவது பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனென்று முழங்குகிறார். மனுஷரிடத்திலிருந்தும், வேதபாடசாலைகளிலிருந்தும் மாத்திரம் சுவிசேஷத்தைக் கற்றவர்கள் கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கிக்கலாம். கிறிஸ்து மூலம் ஜீவன் பெற்றவர்களோ, அவர் சுவிசேஷத்தை அனுபவசாட்சிகளாகப் பிரங்கிப்பார்கள்.

### 2. பவுலின் சுவிசேஷம் தமக்குள் வெளிப்படுத்தப்பட்ட தேவ குமாரனால் உறுதிப்பட்டது

"நான் சுவிசேஷத்தை அறிவிக்கும் பொருட்டாக தேவன் தமது குமாரனை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தார்." (வச. 16). பவுல் தமஸ்கு போய்ச் சேர்ந்தார். பார்வையில்லை, சாப்பிட மனமில்லை. அளவிட முடியாத துக்கமும் சஞ்சலமும் அவரை ஆண்டுகொண்டன. இச்சமயத்தில் அனனியா வந்து அவர்மேல் கைகளை வைத்தார். பவுல் பார்வையடைந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். நடந்ததென்ன? இயேசு தேவகுமாரன் என்னும் சத்தியம் உள்ளத்தில் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவை உள்ளத்தில் வெளிப்படுத்துவதே ஆவியானவரின் வேலை. ஆவியானவர் தம்மை வெளிப்படுத்தமாட்டார். ஆவியினால் நிறைந்தவன் ஆவியானவரைப்பற்றிப் பேசாமல் கிறிஸ்துவைப்

பற்றிப் பேசுவான். இப்படியிருக்க ஆவியானவரைப் பற்றிய சுவிசேஷமும், தர்க்கங்களும், கொள்கைகளும், உபதேசங்களும் கிறிஸ்துவைப்பார்க்கிலும் முக்கியப்படுவது வேத ஒழுங்கல்ல. பவுல் ஆவியானவரைப் பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் புறப்படாமல் ஆவியின் பலத்தினாலே ஆவியானவர் தனக்குள் வெளிப்படுத்தின தேவகுமாரனையே சுவிசேஷமாகப் பிரசங்கிக்கப் புறப்பட்டார். இயேசுவை தேவகுமாரனென்று தம் உள்ளத்தில் அறிந்ததே அவர் சுவிசேஷ ஊழியத்தின் வல்லமைக்கு இரண்டாம் காரணம். சுவிசேஷகர்களாகிய நமக்கு இந்த அனுபவம் உண்டா? அவர் சொன்னார், இவர் சொன்னார், என்றல்ல. அல்லது வேதத்தில் அவரை தேவகுமாரன் என்று சொல்லியிருப்பதினாலுமல்ல, மாத்திரமல்ல, தேவ ஆவியினால் அவர் நமது உள்ளத்திற்கு வெளிப்படுத்தப்பட்டு நாம் ஆனந்த பரவசமடைந்து மகிமையின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோமா?

## 3. பவுலின் சுவிசேஷம் தேவனுக்கு மகிமையை உண்டாக்குவது

"யூதேயா தேசத்தில் கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன், முன்னே நம்மைத் துன்பப் படுத்தினவனே, தான் அழிக்கத் தேடின விசுவாசத்தை இப்போது பிரசங்கிக்கிறான் என்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து "என்னைப்பற்றி தேவனை மகிமைப் படுத்தினார்கள்" (வச. *22-24*). பவுலை நினைத்தவுடன் சபைகள் நடுங்கின காலம்போக, இப்போது பவுலை நினைத்து தேவனை மகிமைப்படுத்தும் காலம் வந்து விட்டது. அவர் பிரசங்கித்த சுவிசேஷம் இருதயங்களை நொறுக்கி, அவர்கள் தங்கள் பாவங்களையும் விக்கிரகங்களையும் விட்டு, ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்ய திரும்பிவிட்டார்கள் என்னும் செய்தி, தேவனுடைய பிள்ளைகளை மகிழ்ச்சியாக்க, அவர்கள் ஏகோபித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். கிறிஸ்துவுக் கென்று ஜீவிக்கிற ஒரு மனுஷனைக்கொண்டு தேவன் செய்யக்கூடிய காரியங்களை அளவிடமுடியாது. உத்தம விசுவாசிகள் ஜீவ தண்ணீருள்ள நதிகள். அவர்கள் ஊற்று ஜீவனாகிய கிறிஸ்து. அவர்கள் ஊழியத்தின் வல்லமை சமீபத்திலுள்ளவர்களை மாத்திரமல்ல. தூரத்திலுள்ள முகமறியாதவர்களையும் எட்டுகிறது. அவர்கள் ஆசீர்வதிக்கப் படும்போது தங்கள் ஜெபங்களில் நம்மை நினைத்து நமக்காக

தேவனை ஸ்தோத்தரிக்கிறார்கள். உத்தம ஊழியத்தால் தேவனுக்கு மகிமை உண்டாகிறது.

# 48. மரணத்துக்கு மரணம்

***"மரணத்துக்கு அதிகாரியான பிசாசைத் தமது மரணத்தால் அழித்தார்" (எபி. 2:14).***

*மரணம் கொடிய சத்துரு. மரணத்துக்குப் பயப்படாதவர்கள் யாருமில்லை. "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்துக்குள்ளானவர்கள்" என்று எபிரேய நிருபத்தார் கூறுகிறார். சர்வ மனுஷரும் மரணத்தை வெறுப்பதற்குக் காரணமென்ன? மறுமையைப்பற்றிய நிச்சயமுள்ள விசுவாசிகளுங்கூட, மரணத்துக்குப் பயப்படுவதின் காரணமென்ன? காரணங்கள் உண்டு. அறிந்த இடத்தை விட்டு அறியாத இடம்போவதும், அருமையானவர்களையும், இனத்தாரையும், சிநேகிதரையும், வீடுவாசல்கள், ஆஸ்திபாஸ்திகளையும் விட்டுப்பிரிவதும் நமக்குப்பிரியமில்லை. நமது யோசனைகள், ஒழுங்குகள், தீர்மானங்கள் நடந்தேறாதபடி ஒரு சனியனைப்போல மரணம் சம்பவிக்கிறது. நமது வேலைகள், சம்பாத்தியம், குடும்பப்பராமரிப்பு இவைகளை முற்றிலும் நாசமாக்கும் சத்துருவாயிருக்கிறது. இதுபோன்ற பல காரணங்களால் நாம் மரணத்தை வெறுக்கிறோம். வியாதி வரும்போது நம்மாலியன்றமட்டும் ஆபத்து நேரிட்டுவிடாபடி வேண்டிய பிரயத்தனங்களைச் செய்கிறோம். எவ்வளவோ துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறவர்களுங்கூட மரணம் என்றால் அஞ்சுகிறார்கள். அதை முழுப்பகையாய்ப் பகைக்கிறார்கள். மரணத்தால் சம்பவிக்கும் குழப்பங்களை எண்ணியே நாம் மரணத்தை வெறுக்கிறோம்.*

*இந்தக் காரணங்களுக்கு மூலகாரணமென்ன? "மரணத்தின் கூர் பாவம்" கூர் என்றால் கொடுக்கு என்று அர்த்தம். தேள் கொடுக்கில் விஷமுண்டு. அது கொட்டினால் கொடிய வேதனையுண்டாகிறது. மரணத்துக்குக் கொடுக்கு பாவம். பாவமே மரணத்தைப் பயங்கரமும், வேதனையுமாக்குகிறது. மற்றக் காரணங்கள் இரண்டாம் காரணங்கள். பாவத்தால் மனுஷன் தேவ நோக்கத்துக்கு விரோதமாக ஜீவிக்கிறான்.*

மரணம் நெருங்கினவுடனே, தான் மறுமைக்குட் பிரவேசிக்க வேண்டுமென்கிற உணர்ச்சி உண்டாகிறது. பிரவேசிக்கவோ அவன் ஆயத்தமில்லை. அத்தோடு பூமிக்குரிய சம்பந்தம் அழிந்துபோகிறதை அவன் தாங்கக் கூடவில்லை. ஆகவே, இந்தப் பாவ ஜீவியத்தின் பலனாகவே மற்றக்காரணங்கள் அவனை வாதிக்கின்றன. அவன் மாத்திரம் தேவசித்தப்படி பிழைத்திருந்தால் தன் சம்பந்தம், யோசனைகள், தீர்மானங்கள், வேலைகள் அழிந்துபோகாமல் தொடர்ந்து வருவதை அவன் காண்பான். இம்மையும் மறுமையும் ஒன்றாய் இணைக்கப் பெற்றிருப்பதையும், தான் ஒன்றையும் இழந்து போகவில்லை என்பதையும் அறிவான்.

"பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்" அந்த மரணத்தைப் பரிகரிக்க எந்த மனுஷனாலும் முடியாது. பாவத்துக்குரிய மனுஷன் மரணத்துக்குரியவனாயிருக்கிறான். மரணம் இவனை விழுங்குமேயன்றி, மரணத்தை இவன் மேற்கொள்வதில்லை. மரணம் இவனைப் பரிகரிக்குமேயன்றி, இவன் மரணத்தைப் பரிகரிப்பதில்லை. ஒரே மனுஷன் உண்டு. அவர் நாசரேத்தூர் தச்சன். "அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" **(2 தீமோ. 1:10)**. இது எப்படியாகும்?

அவரில் பாவமில்லை, ஆகையால் அவருக்கு மரணமில்லை என்றாலும் ஜீவகாலமெல்லாம் மரணத்தால் பாழான நம்மை இரட்சிக்க விரும்பி, மரணத்தோடு போராட வெளிப்பட்டார். இதற்காகவே, அவர் மாம்ச சரீரத்தில் வந்தார். அவர் மரணத்தைப் பரிகரித்தது எப்படி? பரிகரித்தல் என்பது இல்லாமலே அழிப்பது என்று அர்த்தம். நல்ல பாம்பை அடித்துப் போட்டால், அது செத்துக் கிடக்கும். என்றாலும் அதைப் பார்ப்பவர்கள் அதன் சாயலைக் கண்டு இன்னும் பயப்படுவார்கள். ஆகையால் அதைப் புதைத்துப் போடுகிறார்கள்; அல்லது நெருப்பில் போட்டு எரித்து இல்லாமல் அழித்துவிடுகிறார்கள். ஆண்டவர் மரணத்துக்குச் செய்த வேலை அதுதான். மரணத்தை இல்லாமலே அழித்தார். இது எப்படி நடந்தது? அவர் மரணமற்றவராயிருந்தும் மரணத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு மரித்தார். மற்றவர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள் என்ற பேச்சை முற்றிலும் விட்டு விடவேண்டும். இது அவரே வலியத் தாமாக

ஏற்றுக்கொண்ட மரணம். என் பிள்ளைகள் பயந்து தவிக்கிற இந்த மரணமாவது என்ன பார்ப்போம், அதன் கொடுமைதான் என்ன? அதன் பயங்கரந்தான் என்ன? நான் அதற்குப் பூரணமாக இடங்கொடுத்து அதன் சக்தியை அறிய வேண்டும் என்று சொல்லி, மரணக்கசப்பை மனப்பூர்வமாய் ருசி பார்த்தார். அவர் ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. அவரே தம்மை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தவர். ஆவி பிரிந்தது; சரீரம் பிரேதமாகத் தொங்கினது. சரீரத்தை அடக்கஞ் செய்தார்கள். மூன்று நாள் கல்லறைக்குள் பிரேதம். சாத்தானின் ஆரவாரம் கொஞ்சமல்ல. மரணத்தின் அட்டகாசம் கொஞ்சமல்ல. கல்லறையைச் சுற்றி பிசாசுகளின் நடனம் கொஞ்சமல்ல. எங்களை அழிக்க வந்தவரை அழித்தோம் என்று பாடினார்கள். சரீரத்தில் வசித்த, ஆண்டவர் அழிவாரா? அவர் தமது சரீரத்திற்குள் மறுபடியும் பிரவேசித்து, கல்லறையை விட்டு வெளியே சரீரத்திற்குள் மறுபடியும் பிரவேசித்து, கல்லறையை விட்டு வெளியே புறப்பட்டார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? பிசாசுகளே உங்கள் வீரம் எங்கே? மரித்தவர் எழும்பவே மரணம் மரித்தது. அவர் தமது சிலுவை மரணத்தாலே மரணத்தை ஆணியடித்தார் என்பது உண்மையே. ஆகிலும் அவர் அழியா ஜீவனோடு எழுந்ததே, மரணத்தை அவர் பரிகரித்ததற்குத் திருஷ்டாந்தமாயிற்று. முந்தின சரீரமல்ல; ஆவிக்குரிய சரீரத்தோடெழுந்தார். “மரித்தோரிலிருந்தெழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை” இவ்வாறு தமது மரணத்தால் மரணத்தை அழித்து, ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்.

பேதுருவும் யோவானும் கல்லறையைப் பார்த்தார்கள். தேகத்தில் சுற்றின மாதிரியே, சீலைகள் கலையாமல் இருப்பதையும், தலையில் சுற்றியிருந்த சீலை தலைப்பக்கமாய் இருப்பதையுங் கண்டு, சரீரம் திருட்டுப்போகவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தார்கள். இது பாம்பு சட்டை கழற்றினது போலிருந்தது. மேலும் தேவதூதன் தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக உட்கார்ந்திருந்தார்கள் என்பது அவர் சரீரத்தில் சுற்றியிருந்த சீலை ஆள்வடிவமாகயிருந்ததென்பதை ரூபிக்கிறது. கல் மூடியிருந்தபோதே அவர் போய்விட்டார். தேவதூதன் வந்து மற்றவர்கள் பார்க்கும்படி கல்லைப் புரட்டித் தள்ளினான்.

உயிர்த்தெழுந்த ரட்சகர் நாற்பது நாள் சீஷரோடு தங்கி, மரணபயத்திற்குக் காரணமாயிருப்பவைகளை நிவிர்த்தி செய்தார். இம்மைக்குரியவர்கள் சீஷர், மறுமைக்குரியவர் இயேசு. இருபட்சத்தாரும் முன்போலவே பேசிக்கொள்ளு கிறார்கள். அன்பும் ஐக்கியமும் மரணத்தால் மாறுவதில்லை. மேரி என்கிறார், போதகரே என்கிறாள். மேரி நமது ஐக்கியம் மரணத்தால் அழிவதில்லை என்கிறார். ஆலோசனை, தீர்மானங்கள், ஒழுங்குகள் மாறவில்லை. முன்போலவே தேவராஜ்யத்திற்குரிய காரியங்களைத் தொடர்ந்து பேசிக்கொண்டு போகிறார். முன்போலவே வேலையும் நடந்தன. கலிலேயா போங்கள், எருசலேமில் தங்குங்கள், ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், என் நாமத்தின் பாவமன்னிப்பைப் பிரங்கியுங்கள். என் சரீரம் மறைந்தாலும் நான் கூடவேயிருந்து கிரியை நடப்பிப்பேன் என்றார். ஆகையால் மரணம் இம்மையையும் மறுமையையும் பிரிக்கவில்லை. அன்பையும், ஐக்கியத்தையும் அழிக்கவில்லை. ஆலோசனை, ஒழுங்கு, வேலைகளை நிறுத்தவில்லை. சகலமும் தொடர்ந்தே போகிறது என்பதை ஆண்டவர் ரூபித்தார்.

பரிசுத்தவான்களின் ஐக்கியம். கிறிஸ்துவுக்கும் நமக்கும் எப்படியோ, அதுபோலவே கிறிஸ்துவோடு இருப்பவர்களுக்கும் நமக்கும் ஐக்கியம் உண்டு. அவர்களை நாம் காண்பதில்லை. அவர்களோடு பேசுவதில்லை. அவர்களும் நமது கண்களுக்குத் தென்படுவதில்லை. அவர்கள் நம்மோடு பேசுவதில்லை. ஆவிகளோடு பேசும்படி மனுஷர் முயற்சிப்பது தேவ ஏற்பாட்டிற்கு விரோதம். லாசரு போக வேண்டியதில்லை என்றார். சொப்பனத்தில் மனைவிக்குப் புருஷன் தோன்றி ஒரு விஷயத்தைச் சொல்ல, அது அப்படியே நடந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆண்டவர் இடங்கொடுத்தால் அப்படி யிருக்கலாம். அவர்கள் நம்மை மறக்கவில்லை. ஒரு மெல்லிய திரை அவர்களையும் நம்மையும் பிரிக்கிறது. நமது மரணப்படுக்கையில், பூமிக்குரிய காரியங்கள் கண்களுக்கு மறையும்போது கிறிஸ்துவையும் நமக்கு அருமையானவர் களையும் காண்கிறோம். விசுவாசியின் முடிவு மரணமல்ல. கிறிஸ்து மரணத்தில் தோன்றுகிறார். நாம் எதிர்பார்க்குதல் கல்லறையல்ல, கிறிஸ்துவே. மறுமைக்குட்பட்டவர்கள் இன்னும் பூரணராகவில்லை. நாமும் பூரணராகவில்லை. "நம்மை

யல்லாமல் அவர்கள் பூரணராகக்கூடாது" (எபி. 11:40). உயிர்த்தெழுதலில் இருபாகத்தாரும் சேர்ந்து பூரணராவார்கள். இவ்வளவு நம்பிக்கைக்கும் ஆறுதலுக்கும் காரணம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே. ஒருவன் உயிர்த்தெழுதலை மறுப்பானானால் அவனுக்குக் கல்லறையும் அழிவுமே முடிவாயிருக்கும். நமது மரணத்தைத் தமது மரணத்தாலே கொன்று, ஜீவனையும், அழியாமையையும் ஸ்தாபித்த ஆண்டவருக்கு மகிமையுண்டாவதாக.

# 49. அவர் அறிந்திருந்தும்

***"தாம் செய்யப்போகிறதை அவர் அறிந்திருந்தும்" (யோவா. 6:6).***

மனுஷன் செய்பவைகள் யாவும், அவனுடைய ஆராய்ச்சி, புத்தி, பலத்துக்குள் அடங்கினவைகள் என்பது நிச்சயம். இதன் உண்மையை நமது அனுபவத்தில் கண்டு வருகிறோம். அவனவனுடைய அறிவு எவ்வளவோ, சாமர்த்தியம் எவ்வளவோ, திராணி எவ்வளவோ, அதற்கேற்றபடி காரியங்களை நடப்பிக்கும் செயலுடையவனாயிருக்கிறான். எவ்வளவு பிரமாதமான காரியங்களை மனுஷன் செய்தாலும், அவைகள் மனுஷ செயல்களேயன்றி வேறல்ல. ஆகவே மனுஷன் இவ்வாழ்வை விட்டுப் பிரியும் காலத்தில் தான் செய்து முடித்த பல காரியங்களைக் குறித்து ஒருவித திருப்தியும் அடையலாம். மற்ற மனுஷரும் அவன் செய்த பெரிய காரியங்களைக் குறித்து அவனைப் போற்றலாம். இது சரியே. ஆனால் நாம் இயற்கையாய்ச் செய்யக்கூடிய காரியங்கள்தானா? அல்லது இயற்கைக்கு மேலான காரியங்களும் நமது ஜீவியத்தில் நடக்கக்கூடுமா என்பதுதான் கேள்வி. புறம்பே நாம் கவனிக்கும்போது, மனுஷன் தானே செய்யக்கூடியதும் மனுஷனுக்கு மிஞ்சின காரியங்களும் நடந்தேறுவதைக் காண்கிறோம். அதாவது மனுஷன் செய்யும் கிரியையோடு தேவனும் சேர்ந்து கிரியை செய்வதைக் காண்கிறோம். அப்படிப்பட்ட செயல்கள், நமக்கு அற்புதமாகத் தோன்றுகின்றன. மனுஷன் நிலத்தைப் பண்படுத்தி விதைகளை விதைக்கிறான். தண்ணீர் பாய்ச்சுகிறான். தேவனோ, விதைகளை முளைக்கச் செய்து நற்பலனை அருளிச் செய்கிறார். மனுஷன்

விருட்சங்களை நாட்டி தண்ணீர் பாய்ச்சுகிறான். வாய்க்கு ருசியும் சரீரத்துக்குச் சுகமுமுள்ள விதம் விதமான கனிவகைகளை தேவன் நமக்குக் கொடுக்கிறார். மனுஷனால் கூடாத செயல்களை இவை யாவற்றிலும் காண்கிறோம். மண்ணிலிருந்து நமக்கு ஆகாரத்தையும் மதுரமான கனிவர்க்கங்களையும் தாராளமாய்க் கொடுக்கிற அவருடைய அற்புதச் செயல்களை யார் மறக்கக்கூடும்? ஆகவே மனுஷனுடைய அற்பக் கிரியைகளில் தேவன் சேர்ந்து செய்யும் அவரது அதிசய செயல்கள் பிரத்தியட்சமாயிருக்கின்றன. இதே பிரகாரம் நமது சாதாரண ஜீவியத்திலும் அவரது மேலான செயல்கள் விளங்கவேண்டுமென்பது அவருடைய சித்தம். "கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்தார்" என்று அப்போஸ்தலரைப்பற்றி மாத்திரமல்ல, தேவனுடைய பிள்ளைகளான நம் ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் அவருடைய கிரியை வெளிப்பட வேண்டும். பரிசுத்த பவுலின் ஜீவியத்தையும், நிருபங்களையும், அவர் செய்த சிறந்த ஊழியத்தையும் குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். அதற்கு இரகசியமின்னதென்று அவர் தாமே சொல்லுகிறார். "நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்கிறார் (கொலோ. **1:29**).

ஆண்டவர் கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார். திரளான ஜனங்கள் அவரைப் பின்சென்றார்கள். மேலும் யூதருடைய பஸ்காப் பண்டிகையும் சமீபித்திருந்ததால் பிரயாணிகளும் அவரைப் பார்க்க விரும்பி அங்கே திரளாய்க் கூடினார்கள். ஜனங்கள் தம்மைத் தேடிவருவதைக் கண்ட ஆண்டவர், அவர்களைப் போஷிக்கும்படி விரும்பி, பிலிப்புவைப் பார்த்து: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்? என்று கேட்டார். பிலிப்பு கணக்கன். உத்தேசம் என்ன செல்லும் என்பதைக் குறித்து மதிப்புப் போட ஆரம்பித்தார். அவர் மதிப்பின்படி கூட்டத்தில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலுங்கூட இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்று பெருமூச்சுவிட்டார். அந்தக் கொஞ்சத்தையும் நாலு துண்டுகள் போட்டுக் கொடுத்தால் எவ்வளவு பணம் பிடிக்கும் என்பதை மதிப்புப்போட மறந்து போனாராக்கும். கணக்கன் பிலிப்பு கால் வயிறு கஞ்சிகூட

வார்க்கமாட்டார் போலிருக்கிறது. இந்தச் சமயத்தில் ஆண்டவரின் புன்னகையை நாம் கவனிக்க வேண்டும். இது நிற்க, ஆண்டவர் அந்திரேயாவைப் பார்த்தார். அந்திரேயாவே நீர் என்ன சொல்லுகிறீர்? என்று ஆண்டவர் கேட்டது போலிருந்தது. அந்திரேயா! அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்? என்றார். ஆகவே இந்தத் திரள் ஜனத்தைப் போஷிப்பது முடியாத காரியம் என்பதை இருவரும் சொல்லி விட்டார்கள். பிலிப்புவின் காசுக்கணக்கும் ஒப்பேறவில்லை; அந்திரேயாவின் கையிருப்பும் பலிக்கவில்லை.

பின்னே ஏன் ஆண்டவர் இக்கேள்வியை அவர்களிடம் கேட்டார்? அவர்களைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டதாக யோவான் சொல்லுகிறார். அதாவது தங்களுடைய குறைவு இன்னதென்பதையும், ஆண்டவரிடத்தில் விளங்கும் வல்லமை எப்படிப்பட்டதென்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டாக இக்கேள்வியை அவர்களிடம் கேட்டார். “தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும்” என்று சொல்லியிருக்கிறது. “தாம் செய்யப் போகிறதை அவர்தாமே அறிந்திருந்தும்” என்றிருக்க வேண்டும்.

ஆண்டவர் தமது பிள்ளைகளை நடத்துகிற விதமும் இதுபோலவே, நமது ஜீவியத்தில் அடிக்கடி சிக்கலான காரியங்கள் சம்பவிக்கின்றன. என்ன செய்வதென்று நமக்குத் தெரிகிறதில்லை. அது செய்யப்பட வேண்டியது அவசியம்; ஆனால் அதைச் செய்து முடிக்க நமக்கு வகையில்லை. கணக்குப்போட்டுப் பார்த்தாலும் மதிப்புக்குமேல் போகிறது; கையிலுள்ளதைக் கொண்டு காரியத்தை முடிப்பதும் அசாத்தியமாகிறது. ஆண்டவருக்காக இவைகளைச் செய்ய வேண்டும், அவைகளைச் செய்ய வேண்டும் என்கிற விருப்பங்கள் நமது மனதில் உண்டாகின்றன. கொஞ்சதூரம் யோசனை செய்து அவைகளை முடியாதென்று விட்டுவிடு கிறோம். இவ்வாறு நமது ஜீவியத்தில் நாம் நழுவ விட்ட காரியங்கள் அனந்தம். தீர்மானித்த நல்விஷயங்களை நாம் செய்யாமல் விட்டதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று நமது உள்ளத்தில் வரும் நல்விருப்பங்களை நாமே யோசித்துக் கொண்டதாக விட்டு விடுகிறோம். ஆனால் அவைகள் ஆண்டவரால் வருகின்றன என்பதை அறியவேண்டும்.

இவர்களை எப்படிப் போஷிக்கலாம் என்று பிலிப்புவைக் கேட்ட ஆண்டவர், நம்முடைய இருதயங்களிலும் அநேக நல்ல கேள்விகளைப் போடுகிறார். நாம் அவைகளைச் செய்து முடிக்க வேண்டுமென்பது அவர் நோக்கம். இந்த விருப்பங்கள் அவரால் வந்தது என்கிற நிச்சயம் காரியம் கைகூடிவரும் என்பதற்கு ஆதாரம். "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." *(பிலி. **2:13**)*. இரண்டாவது காரணம்: அதைச் செய்து முடிக்க நம்மால் முடியுமாவென்று ஆலோசித்து முடியாதென்று விட்டு விடுகிறோம். ஆனால் நாமே செய்ய முடியாததை ஆண்டவர் நம்மைக் கொண்டு செய்ய முடியும் என்பதை நாம் உணர வேண்டும். ஏனென்றால் நாம் தேவனுக்கு உடன் ஊழியராயிருக்கிறோம். ஒரு சமுசாரி நிலத்தில் தான் செய்யக் கூடியதைச் செய்கிறான். தேவன் அவனோடு சேர்ந்து கிரியை செய்வதினாலே, சமுசாரியின் வேலை பூரண பலனைக் கொடுக்கிறது. ஐயாயிரம் பேர் போஷிக்கப்பட்டதும், அது போலவே, சீஷர் தங்கள் கையிலுள்ளதை ஆண்டவர் கையில் கொடுத்தார்கள். ஆண்டவர் தமது வல்லமையின்படி திரள் கூட்டத்தைப் போஷித்தார். இந்த ஊழியத்தில் உடன்படும் சிலாக்கியம் சீஷருக்குக் கிடைத்தது. ஆண்டவருக்கு மகிமை உண்டாயிற்று. ஜனங்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள்.

இதுவே, ஆண்டவருக்குத் தங்களை ஒப்புவித்து ஜீவிக்கிற பிள்ளைகளிடத்தில் நடக்கும் அற்புதச் செயல்கள். நமது சுய அறிவு, சுயபலம், சுய சாமர்த்தியத்தால் தேவனுக்கு மகிமை வராது. ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கிட்டாது. தேவன் நம்மைக் கொண்டு பங்கிடும் அற்புத அப்பத்தால் அவருக்கு மகிமை உண்டு. ஆகையால் நமது மனதில் ஆண்டவருக்காக நல்ல காரியங்களை செய்ய வேண்டும் என்ற ஆசை வரும்போது, அந்த ஆசை ஆண்டவரால் வந்ததென்றும், அது நமது பலத்துக்கு மிஞ்சின காரியமாயிருந்தாலும், அந்த ஆசையை நமது மனதில் போட்ட ஆண்டவர் "தாம் செய்யப்போகிறதை அவர்தாமே அறிந்தவராய்" நமது பக்கத்தில் இருக்கிறார் என்றும் உணர்ந்து அதைப்பற்றி அவரோடு அடிக்கடி பேசவேண்டும். ஆண்டவரே! இன்னின்ன காரியங்கள் என் மனதில் பலமாய் வந்துகொண்டேயிருக்கின்னறன அவைகளைச் செய்து முடிக்க எனக்குப் பிரியந்தான்; ஆனால் செய்யவோ

எனக்குச் சக்தியில்லை, எனக்குள்ளதை உமது கையில் விட்டுவிடுகிறேன். இது எப்படி முடியுமென்று என் புத்திக்கு தோன்றவில்லை. அதை அறியவேண்டுமென்ற ஆத்திரமுமில்லை. தேவரீரோ அது எப்பொழுது எவ்விதமாய் முடியுமென்று அறிந்திருக்கிறீர். உமது ஞானத்தினால் என்னை நடத்தி, ஏற்ற காலத்தில் உமக்கு மகிமையாக நான் அவைகளைச் செய்து முடிக்க எனக்குக் கிருபை செய்தால் அதுவே எனக்குப் போதும் என்று சொல்வோமாக. இந்த நிலைமைக்கு நமது ஆத்துமா வரும்போது மனதிலுள்ள சகல குழப்பங்களும் சந்தேகங்களும் அடங்கி, நமது ஜீவியத்தில் அமைதியும், சமாதானமும் காணப்படும். இது என்ன அதிசயமாயிருக்கிறது என்று நாம் சொல்லத்தக்கதான காரியங்களை ஆண்டவர் நமக்குச் செய்ததில்லையா? "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்கிறார். நம்மால் கூடிய காரியத்தைச் செய்து முடிப்பது பெரிய காரியமல்ல. நமக்கு மிஞ்சின காரியங்களை ஆண்டவர் நம்மைக் கொண்டு செய்வதே மாட்சிமையாகும். அதுதான் தேவ ஊழியம். நமது சுய எண்ணங்களும், பேச்சுகளும், ஆரவாரங்களும் தேவ ஊழியமாகாது. நாம் அவரது கையின் கருவியாயிருக்கும்போது, அவர் மகிமையைக் கென்றே ஜீவிக்க விரும்பும்போது, ஆண்டவர் நம்மைக்கொண்டு பலத்த காரியங்களைத் தமது ராஜ்யத்துக்கென்று நடப்பிப்பார். "மனுஷனால் கூடாதவைகள் தேவனால் கூடும்". இது உண்மை.

# 50. வழிகாட்டி நடத்துதல்

***"உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்" (சங். 31:3).***

ஒரு காரியம் நிச்சயம். அது ஒவ்வொருவருக்கும் தீராத அவசியம். இவ்வுலக வாழ்வில் நாம் தேவனால் நடத்தப்பட வேண்டும். நமது ஜீவியத்திலும், நமது பற்பல வேலைகளிலும், நமது சகல காரியங்களிலும் ஆண்டவர் நமக்கு வழிகாட்டி நம்மை நடத்த வேண்டும். ஆடுகளை மேய்ப்பன் நடத்த வேண்டியது அவசியம். குருடரைப் பார்வையுள்ளவர்கள் நடத்தவேண்டியது அவசியம். பலவீனரைப் பலமுள்ளோர் நடத்த வேண்டியது அவசியம். பேதைகளை அறிவுள்ளோர் நடத்த வேண்டியது அவசியம். சிறுவரை, மாணாக்கரை

உபாத்திமார் நடத்த வேண்டியது அவசியம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி அவனவன் தன்தன் வழியிலே போனோம். இவ்வாறு வழிவிலகி நாம் ஏகமாய்க் கெட்டோம். வழி விலகினவர்களின் காரியங்களை தேவன் வெறுக்கிறார். தேவனற்ற பாதை மோசமான பாதை. நமது வழிகள் நமக்குச் செம்மைபோல் காணப்படலாம். அநேகர் தங்கள் சுய ஆலோசனைப்படி காரியங்களை நடப்பித்து மேன்மையடைவது போலவும் தோன்றலாம். தேவனால் நடத்தப்படாதவர்கள் முடிவு மோசமே. "தன் வழியை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்ல" என்று கர்த்தரே சொல்லியிருக்கிறார். ஒன்றில் நாம் தேவவழியில் செல்ல வேண்டும். அல்லது சுய வழியில் செல்ல வேண்டும். தேவவழியும் நமது வழியும் ஒன்றல்ல. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல: உங்கள் வழிகள் என் வழிகளுமல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்."

தேவன் நம்மை நடத்த விரும்புகிறார். நடத்துவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். "நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காண்பிப்பேன்" வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர். தாம் சொன்னபடியே செய்வார். பாவத்தால் நமது புத்தி அந்தகாரப்பட்டு, மனக்கண்கள் குருடாயிருக்கும்போது நம்மை நாமே நடத்திக் கொள்வது எப்படி? அநேகர் காண்கிறோம் என்கிறார்கள். தங்கள் காரியங்களைத் தாங்களே நடத்திக் கொள்ளத் திராணியும், சாமர்த்தியமும் உண்டென்று நினைக்கிறார்கள். தேவனை அறிந்து அவரைப் பிதாவாகக் கொண்டவர்களோ தங்களைக் குருடரென்று அழைக்கிறார்கள். "என் தாசனையல்லாமல் குருடன் யார்?" என்று ஆண்டவர் சொன்னதும் சரியே. அவர்கள் சகல காரியங்களுக்கும் தேவனையே நோக்கிக் காத்திருக்கிறார்கள். சுய இஷ்டப்படி ஒன்றைச் செய்யப் பயப்படுகிறார்கள். "ஆண்டவரே! நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்பதே அவர்கள் இடைவிடாமல் கேட்கும் கேள்வி. "நீர் எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்" என்பது அவர்கள் செய்யும் ஜெபம். இந்த இரகசியத்தை தங்கள் மீட்பராகிய கிறிஸ்துவினிடம் கற்றுக் கொண்டார்கள். பூமியில் தோன்றின அவர், எந்தச் சமயத்திலாவது, எந்த விஷயத்திலாவது, தமது இஷ்டம்போல் நடவாமல் பிதாவின் சித்தப்படியே பிழைத்து, பிதாவின்

சித்தப்படியே உழைத்து, பிதாவின் சித்தப்படியே மரித்து, உயிர்த்து, மகிமையடைந்தார். அவரே நமக்கு வழியுமானார்.

ஆனால் நமது ஜீவியத்தில் மிகுதியான பாகம் சுயசித்த வழியே. நாம் அனுபவித்ததும் அனுபவிக்கிறதுமான சகல சங்கடங்களுக்கும் பாடுகளுக்கும் காரணமும் அதுவே. ஆண்டவர் சித்தம்போல நாம் பிழைத்ததுண்டானால் அதுவும் அரைகுறையே. இது காரணத்தினாலேயே நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டிய அளவுக்கு ஆசீர்வதிக்கப்படவில்லை. மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்க வேண்டிய அளவுக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்கவில்லை. சுய சித்த ஜீவியம் தேவன் நம்மை ஆசீர்வதிக்கவும், நம்மைத் தாராளமாய் உபயோகிக்கவும் கூடாதபடி அவர் வல்ல கரத்தைத் தடுக்கிறது. கிறிஸ்துவின் பேராலே நாம் எவ்வளவு காரியங்களைச் செய்தாலும் அவர்தாமே நமக்கு வழிகாட்டி நம்மை நடத்தாத காரியங்கள் வீண் பிரயாசமும் அபத்தமுமாகும். சுய சித்தம்போல் செய்யும் பதினாயிரம் காரியங்களைவிட, அவர் சித்தம்போல் செய்யும் சொற்பக்காரியங்கள் நித்திய பலனைக் கொண்டுவருமென்பது நிச்சயம் "மனுஷருடைய யோசனைகள் வீண் என்று கர்த்தர் அறிந்திருக்கிறார்" கர்த்தருடைய ஆலோசனையோ நித்திய காலமாய் நிலைநிற்கும்.

தேவன் நம்மை உலகத்தில் அனுப்பினபோது ஓர் விசேஷித்த நோக்கத்தோடே அனுப்பினார். நமது ஜீவியத்தின் முழு ஒழுங்கும் அவர் கையில் இருக்கிறது. நம்மைக் குறித்த ஜாதகம் முழுவதும் ஏற்கனவே அவரிடத்தில் இருக்கிறது. அது கிறிஸ்துவுக்குள் ஒழுங்கு செய்யப்பட்ட ஜாதகமே. தேவன் அதை நமக்கு காண்பிக்கவில்லை. எந்த மனுஷனும் அதை அறியான். நாம் தேவசித்தத்துக்கு இணங்கி அவர் வழியில் நடக்கும்போது அந்த ஒழுங்கு படிப்படியாய் நம்மில் நிறைவேறுவதை காணலாம். மீதியான பாகம் இன்னும் மறைவாகவே இருக்கும். அவர் சித்தத்திற்கே பூரணமாக ஒப்புவித்துப் பிழைப் போமானால், இப்பொழுது நமது கண்களுக்கு மறைவாயிருக்கிற தேவ ஒழுங்கை இன்னும் காணலாம். கிறிஸ்துவினால் மீட்கப்பட்ட பிள்ளைகளுடைய ஜீவியத்தில் தேவன் ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்கை நிறைவேற்றும்படி ஆவியானவர் அனுப்பப்பட்டிருக்கிறார். இவரே நம்மை தேவ வழியில் நடத்துகிறவர். யார் யாரை

எவ்விதமாக நடத்தவேண்டும் என்று அறிந்திருப்பவர் அவரே. காகிதத்தில் மறைந்திருக்கும் பிளான் கட்டிடத்தில் பிரத்தியட்சமாய் தோன்றுவதுபோல, தேவ ஆலோசனையில் மறைந்திருக்கும் நமது ஜீவியத்தைக் குறித்த ஒழுங்கு ஆவியானவர் மூலமாய் நம்மில் வெளிப்படுகிறது. அநேகர் இதை அறியாமல் தங்கள் சுய இஷ்டப்படியே நடந்து, தங்கள் சுய ஞானத்தின்படியே காரியங்களை நடப்பித்து, தேவ ஒழுங்கை இழந்து போகிறார்கள். தேவ பக்தர்களுங்கூட சகல விஷயங்களிலும் தேவ ஆலோசனைப்படியே நடந்து கொண்டவர்கள் அல்ல. நசரேயனாகிய இயேசு கிறிஸ்து ஒருவரே கிஞ்சித்தேனும் வழிவிலகாமல் தேவவழியில் நடந்து தேவ ஒழுங்கைத் தமது ஜீவியத்தில் பூரணமாக நிறைவேற்றினார். அச்சுப்பதிந்தாற்போல் இவர் ஒருவரே தேவனுடைய தற்சொரூபமானவர். பூரணரான இவருக்குள் அரைகுறையான தேவனுடைய பிள்ளைகள் பூரணராவார்கள்.

தேவ நடத்துதலுக்கு ஆதாரம் எது? "உமது நாமத்தினிமித்தம்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நாமம் என்பது பேர். ஆளை இன்னாரென்று வெளிப்படுத்துவது நாமம். ஒருவன் பேச்சைக் கேட்டவுடனே நடுங்குகிறோம்; அவன் பொல்லாதவன். ஒருவன் பேரைக் கேட்டவுடனே வெறுக்கிறோம்; அவன் காரியங்கள் வெறுப்புக்குரியவை. ஒருவன் பேரைக் கேட்டவுடனே உற்சாகம் உண்டாகிறது. அவன் மகா வீரன். ஒருவன் பேரைக் கேட்டவுடனே மதிக்கிறோம். அவன் தேவ பக்தியுள்ளவன். இவ்வாறு மனுஷனுடைய பேர் அவன் எத்தன்மையானவனென்று வெளிப்படுத்துகிறது. தேவனுடைய நாமம் அவருடைய தன்மையையும் அவரது குணாதிசயங்களையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. "ஆண்டவரே, உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்" தேவன் தமது பேருக்கேற்றாற்போல் நடக்க உண்மையுள்ளவர். அவரது நாமம் அவருடைய அன்பு, கிருபை, நீதி, இரக்கம், வல்லமை, ஞானம் முதலான இலட்சணங்களை நமக்கு அறிவிக்கிறது.

"உமது நாமத்தினிமித்தம்" வழிகாட்டி நடத்தும் என்று ஜெபித்த சங்கீதக்காரன் சரியான பிடி பிடித்தார். இந்த சங்கீதத்தில் தமக்கு நேரிட்டிருக்கிற இக்கட்டுகளையும் பாடுகளையும் குறித்துப் புலம்பி, ஆண்டவர் தனக்கு வழிகாட்டி

நடத்தும்படி கேட்கிறார். அதற்கு ஆதாரமாக, "உமது நாமத்தினிமித்தம்" என்கிறார். தனது பாடுகளைப்பார்க்கிலும் ஆண்டவருடைய நாமத்துக்கு மகிமை வரவேண்டும் என்பதே சங்கீதக்காரன் வாஞ்சை கிறிஸ்து தமது சிலுவைப்பாடுகளைக் கண்டபோது – "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றார். இஸ்ரவேலர் அக்கிரமத்தைச் செய்து தேவ தண்டனைக்குரியவர்களாயிருந்தபோது, யோசுவா தேவனைப்பார்த்து: நீர் இவர்களை அழித்தீரானால் "உமது மகத்தான நாமத்துக்கு என்னசெய்வீர்?" என்று கேட்டார். ஆண்டவர் ஜெபித்தபோது: "பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்களுக்கு உமது நாமத்தை வெளிப்படுத்தினேன்" என்றார். தேவ நாமத்தின் சகல லட்சணங்களும் சரீரப்பிரகாரமாக இயேசுவில் வெளிப்பட்டன. இயேசு என்னும் நாமமே நமக்குக் கிடைக்க மேலான நாமம். அந்த நாமத்தாலேயே அவரது அடியார்கள் தேவ வழியில் நடத்தப்பட்டு மகத்துவமான கிரியைகளை நடப்பித்தார்கள். இந்த நாமத்தினிமித்தமே தேவன் நமக்கு வழகாட்டி நம்மை நடத்துகிறார். இந்த நாமத்துக்கு மகிமையாகவே அவர் சகலத்தையும் செய்கிறார். ஆகையால் நமது யோசனைகள் பலிக்கவேணும், நமது காரியங்கள் வாய்க்கவேணும் என்பதையே நாம் பிரதானமாகக் கருதாமல் ஆண்டவரே உமது நாமத்தினிமித்தம், உமது நாமம் மகிமைப்படத்தக்க விதமாக எங்களை நடத்தியருளும் என்று ஜெபிப்பதே ஆசீர்வாதம் பெறுவதற்கு வழி.

## 51. அன்பின் பலன்

***"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால்" (யோவா. 14:23).***

கடவுள் நமது அன்புக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறார். தமது அன்பை முந்தி நமக்குக்கொடுத்து பதில் அன்பை நம்மிடத்தில் நாடுகிறார். அன்பு பலவந்தத்தால் வராது. வேறு எந்தக் காரியத்தையும் பலவந்தத்தால் நிறைவேற்றலாம். ஒருவனைக் கட்டாயப்படுத்த அவன் போவான். வாவென்றால் வருவான். இதைச் செய்யென்றால் செய்வான். அன்போ அப்படியல்ல. ஒருவனை அடித்துக் கட்டாயப்படுத்தி என்னிடத்தில் அன்பாயிரு என்று சொன்னால் அதைப்போல்

வேடிக்கை ஒன்றில்லை. அன்பு இருதயத்துக்குரியது. அது உள்ளத்திலிருந்து தானாக உண்டாக வேண்டியது. ஆண்டவர் தமது அன்பின் மூலமாய் நமக்குள் அன்பை உண்டாக்குகிறார். அவர் தமது அன்பைப் பூரணமாய் வெளிப்படுத்தியபின் பேதுருவைப் பார்த்து – "நீ என்னில் அன்பாயிருக்கிறாயா?" என்று கேட்டார். பிரசங்க வாக்கியத்திலும் "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால்" என்று சொல்லுகிறார். கட்டாயம் பண்ண முடியாது. ஒருவர் மீது மதிப்பும் பிரியமும் உண்டாகும்போது அன்பு தானாகவே புறப்படும். அப்படிப்பட்ட அன்பையே ஆண்டவர் எதிர்பார்க்கிறார். நாம் அவரில் அன்பாயிருந்தால் அவர் நமக்குச் செய்வதென்ன?

## 1. பாவமன்னிப்பு

இது நமது பிரயாசம், கிரியையால் நாமே சம்பாதிப்பதல்ல. ஆண்டவர் தமது அரும்பாடுகளால் ரட்சிப்பைச் சம்பாதித்தார். நாம் அவரிடம் அன்பாயிருந்தால் ரட்சிப்பை நமக்கு அருளுகிறார். விசுவாசித்தால் ரட்சிக்கப்படமாட்டோமா? அன்பில்லாத விசுவாசம் செத்தது. ஆண்டவரை அறிந்து அவரை நாம் நம்பும்போது எப்படி அவரிடத்தில் அன்பு பாராட்டாதிருக்க முடியும். பாவத்தால் தன் ஜீவியத்தைப் பாழாக்கின ஒரு ஸ்திரீ ஆண்டவரிடம் சென்று, அவர் பாதத்தருகே நின்று அழுது அவர் பாதத்தை முத்தஞ்செய்தாள். அவர் ஒன்றுமே பேசவில்லை. ஆண்டவர் அவள் இருதய நிலையை அறிந்தார். "இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது, இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே" என்று சொல்லி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. சமாதானத்தோடே போ என்றார். "அன்பு திரளான பாவங்களை மூடும்." இது நமது அனுபவத்துக்கு விரோதமானதல்ல.

## 2. வெளிப்படுத்தல்

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன்." கடவுள் அன்பருக்குத் தம்மை வெளிப்படுத்தும் அன்பர். சங்கீதம் தன்னை விரும்புகிற வனுக்கே தன்னை வெளிப்படுத்தும். தாபர ரகசியம் தன்னை விரும்புகிறவனுக்கே தன்னை வெளிப்படுத்தும். வான சாஸ்திரம் தன்னை விரும்புகிறவனுக்கே தன்னை வெளிப்படுத்தும். கடவுள் ரகசியங்களை அன்பென்னும் கருவியால் அறிய வேண்டும். கிறிஸ்துமார்க்கம் இருதய

மார்க்கம். புறம்பாக நாம் ஆயிரங்காரியங்களைச் செய்தாலும் பிரயோஜனமில்லை. ஆண்டவர் சீஷர்களோடு இருந்தபோது மார்க்கம் உண்டாகவில்லை சபை ஸ்தாபிக்கப்படவில்லை. அவர் மகிமையடைந்து தமது ஆவியால் சீஷர்கள் உள்ளங்களில் வந்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினபோதே திருச்சபை பிறந்தது. கிறிஸ்துமார்க்கம் உண்டாயிற்று. கிறிஸ்துவை உள்ளத்தில் பெற்றவர்களே கிறிஸ்தவர்கள். சகல பரிபூரணமும் நிறைந்த கிறிஸ்து நமது உள்ளத்தில் வந்து வாசம் பண்ணித் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். நமது மூலமாய்க் கிரியை செய்கிறார். அவர் புறம்பேயிருந்து நம்மை ஆசீர்வதிக்க முடியாது. அவரே நமக்குள்ளே ஜீவனும் ஒளியும் ஞானமும் நீதியும் பரிசுத்தமும் ரட்சிப்புமாக வேண்டும். அவரில் அன்புள்ளவர்களுக்கே இந்த உள்ளான வெளிப்படுத்தல் கிடைக்கும்.

### 3. ஆயத்தம் பண்ணியிருக்கிறார்

நம்மை நாமே நடத்திக்கொள்ள திராணியற்றவர் களாயிருக்கிறோம். எதைச் செய்வது, எவ்வழி நடப்பதென்று தெரியவில்லை. இதன் காரணமாக மனக்குழப்பங்களும் கவலைகளும் ஏற்பட்டு நமது ஜீவியத்தைப் பாரப்படுத்துகின்றன. அன்பர்களுடைய காரியம் அப்படியிருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் "தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணின நன்மைகள்" என்று வாசிக்கிறோம். (1 கொரி. 2:9). இனிமேல் அவர் ஆயத்தம் பண்ணப்போகிறதல்ல. ஏற்கனவே ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். தமது பிள்ளைகளுக்காக அவர் கவலைப்படுகிறவரும் அவர்களை விசாரிக்கிறவருமாயிருக்கிறார். அவர்கள் நடக்கவேண்டிய வழியை அவரே அவர்களுக்காக ஆயத்தம்பண்ணுகிறவர். இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பிரயாணம் செய்த காலத்தில் ஆண்டவரே அவர்களுக்கு முன்னாகப்போய் அவர்கள் தங்குவதற்கு வசதியானதும், கூடாரங்கள் அடிப்பதற்கு ஏற்றதுமான இடத்தைத்தாமே ஆயத்தஞ்செய்தார். நம்மை ஒருபோதும் அவர் மறக்கமாட்டார். நமது காரியங்கள் அவர் காரியங்கள். நம்மைப்பற்றி நமது குடும்பங்களைப்பற்றி என்ன செய்வதென்று நமக்குத் தெரியாவிட்டாலும், ஆண்டவரிடத்தில் அன்புவைத்து அவரைப் பின்செல்லும்போது, அவர் நமக்காக ஆயத்தம்பண்ணின ஆசீர்வாதமான பாதையைக் கண்டடைவோம். அன்பரை வழிநடத்தும் தெய்வம் அவர்.

**4. சகலத்தையும் நன்மைக்கேதுவாக நடத்துவார்**

மனுஷன் தனிமையாயிருக்கும்போது அவன் கவலை ஒருவிதம். அதை அவனே சுமந்து கொள்வான். விவாகமானபின் அவன் கவலை இரட்டிக்கும். சில மக்களுக்குத் தகப்பனானவுடனே அவன் கவலை பெருகி விடும். நன்மை தீமை, லாப நஷ்டம், சந்தோஷம் துக்கம், நோய் சுகம், இவ்வாறு பல மாறுதல்களும் தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கையை அவன் அநுபவிக்க வேண்டும். இது தவிர, தன் சுய தப்பிதத்தால் உண்டாகும் கஷ்டங்கள், மற்றவர்களால் நேரிடும். அவமானம், பாடுகள் முதலான உபத்திரவங்களுக்கும் ஆளாவான். ஜீவியமே கசந்து போகும். ஆனால் அன்பருக்கு ஆண்டவர் கொடுத்த வாக்கு நாம் மறக்கத்தக்கது அல்ல. "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் சேர்ந்து நன்மைக்கேதுவாக நடக்கின்றன" (ரோ.8:28). தீமைகள் தீமைகளே. கஷ்டங்கள் கஷ்டங்களே. அவமானங்கள் அவமானங்களே. இவைகள் எப்படி நன்மையாகுமென்பது நமது கேள்வி. எப்படியாகுமென்று சொல்ல நமக்குத் தெரியாது. அவை நன்மையாக முடியும் என்று ஆண்டவர் உரைக்கிறார். இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிக்கச் செய்கிறவர், மரணத்திலிருந்து ஜீவன் வரச் செய்கிறவர், மாராவின் கசப்பை மதுரமான தண்ணீராக்கினவர், நமது தீமைகள் யாவையும் தமது வல்ல செயலால் நன்மையாக மாற்ற முடியும். தீமை என்று சொன்ன நமது நாவே அதை நன்மை என்று ஒப்புக்கொள்ளும் காலம் வரும். யோசேப்புக்கு நடந்ததெல்லாம் தீமைகளே. ஆனால் சற்று பிந்தி கடவுள் அவைகளை நன்மையாக முடியப் பண்ணினார் என்று அந்த யோசேப்பே அறிக்கையிட்டார். தாவீதும் தமக்கு நேரிட்ட தீமைகளை நன்மையாக முடிந்ததென்று சொல்லுகிறார். இது எல்லாருக்கும் அல்ல. தேவனிடத்தில் அன்புகூரும் பிள்ளைகளுக்கே இப்படியாகும்.

கிறிஸ்து மார்க்கத்துக்கு மறுபேர் அன்பின் மார்க்கம். பிதா அன்பு, குமாரன் அன்பு, ஆவியானவர் அன்பு. அன்பே கிறிஸ்தவர்களுக்கு அடையாளம். கடவுள்மீது அன்பு, அதன் பலனாக மனுஷர்மீது அன்பு. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதினாலே நீங்கள் என் சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" இதை நினைக்கும்போது நமக்கு அதிகத் துக்கமுண்டாகிறது. அன்பு தவிர மற்றதெல்லாம்

நமக்குண்டு. என்ன பிரயோஜனம்? எபேசு சபையைப் பார்த்து ஆண்டவர் சொன்னது நமக்குப் பெரிய எச்சரிக்கை. அங்கு நடந்த முயற்சிகள் யாவையும் ஆண்டவர் அறிந்திருந்தார். உன் கிரியை, உன் பிரயாசம், உன் பொறுமை, நீ பொல்லாதவர்களை சகிக்கக் கூடாதிருத்தல், கள்ள அப்போஸ்தலரை நீ சோதித்து அறிதல், உன் சகிப்பு, என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் நீ பிரயாசப்பட்டது, இவையாவும் அறிந்திருக்கிறேன். ஆனால் உன் பேரில் எனக்குக் குறையுண்டு. நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய். மனந்திரும்பிப் பழைய அன்புக்கு வா. இல்லாவிட்டால் உள்ளதும் போய்விடும். இப்போது உனக்குள்ளது விளக்குத்தண்டு மாத்திரம். எரிந்து பிரகாசிக்கும் விளக்கல்ல வெறும் விளக்குத் தண்டு. இதுவும் போய் விடும் என்கிறார். எபேசு சபையின் கிரியைகள் போற்றத்தக்கவை. ஆனால் அன்பொன்றுதான் இல்லை. அதனால் சகலமும் வீணாயிற்று. அவர்கள் முயற்சிகள் எல்லாம் சேர்ந்து வெறும் விளக்குத் தண்டுக்கு சமானமாயிற்று. அன்பாகிய ஒளியோ இல்லை. அன்பற்ற பெரிய விருந்து வெறுப்புக்குரியது. அன்புள்ள கஞ்சி அமிர்தமாகும். ஆண்டவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நமக்காகப் பெரிய ரட்சிப்பை நிறைவேற்றியிருப்பதால், அவர் நம்மிடத்தில் பிரதி அன்பை எதிர்பார்ப்பது நியாயமே. நாம் அவரிடம் அன்பு வைக்கும்போது நம்மைச் சகல விதத்திலும் ஆசீர்வதிக்கிறார். இவ்வளவு அன்புள்ள ஆண்டவரை நாம் அசட்டை செய்வதால் முடிவு எப்படியிருக்கும்? பவுல் பயங்கரமான ஒரு வார்த்தை கூறுகிறார். "ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார்" (1கொரி. 16:22).

# 52. முகத்தின் வேறுபாடுகள்

***"உன் முகம் ஏன் வேறுபட்டது?" (ஆதி. 4:6).***

மனுஷனுக்கு அவன் முகமே பிரதானம். முகத்தால் மனுஷரை இன்னாரென்று அறிகிறோம். முகம் மறைந்தால் ஆளை இனங்கண்டுபிடிப்பது கஷ்டம். இதனாலே கொலைகாரர் கொலைசெய்தபின் தலையை மறைத்து

விடுகிறார்கள். திருடர்கள் முகங்களில் கருப்புப்பூசியோ அல்லது முகமூடிகள் போட்டுக்கொண்டோ களவு செய்கிறார்கள். மனுஷனுக்கு முகம் பிரதானமாயிருப்பதால் முகத்தில் துப்புவதோ, அடிப்பதோ பெருத்த அவமானமாகும். சரீரத்தில் முகம் சிறியதொரு பாகமாயிருந்தாலும் மனுஷர் உடம்பையல்ல. முகத்தைப் பார்த்தே பேசுகிறார்கள். முகமே மனுஷன். பவுல் கடைசியாக எபேசியரை விட்டுப் பிரியும் சமயத்தில் "நீங்கள் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள்" என்று சொன்னார். மனுஷனுக்கு எப்படியோ அப்படியே தேவனுக்கும் முகம் அடையாளமாயிருக்கிறது. "என் முகத்தைத் தேடுங்கள்" என்றார்.

ஒருவன் இப்படிப்பட்டவன் என்பதை அநேகமாய் அவன் முகத்தைக் கொண்டு அறியலாம். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" அவன் நல்லவனோ கெட்டவனோ என்பதை அவன் முகம் வெளிப்படுத்தும். இருதயத்திற்கும் முகத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. மறைவான குணம் முகச்சாயலை உண்டாக்குகிறது. ஒருவனுடைய குணம் நல்லதோ தீயதோ நெடுங்காலம் அவனிலிருக்கும்போது அது அவன் முகத்தில் பதிகிறது. உள்ளத்தில் பகை, பெருமை, எரிச்சல், சூது, தந்திரம், இறுமாப்பு, குரூரம், பொருளாசை, மதியீனம் முதலான துர்க்குணங்களிருந்தால் அவைகளை முகம் காட்டும். அதுபோலவே அன்பு, சாந்தம், தாழ்மை, பொறுமை, அனுதாபம், இரக்கம், ஞானம், அறிவு, யோசனை முதலிய சிறந்த இலட்சணங்களிருந்தால் அவைகளும் முகத்தில் விளங்கும். இதுதவிர பயம் தைரியம், கவலை திருப்தி, திகில் வீரம், துக்கம் சந்தோஷம் முதலான உணர்ச்சிகளும் முகத்தில் தோன்றும். ஆனால் உள்ளத்தை மறைத்து முகத்தில் வேறுவிதமாய்த் தோன்றும் சாமர்த்தியமும் மனுஷருக்குண்டு. இதற்கு மாயம் என்று பேர். வேதபாரகர் பரிசேயர் இந்த வேலையில் சமர்த்தர். அவர்கள் இருதயத்தில் எவ்வளவோ கேடுபாடுகள் இருந்தும், மனுஷர் தங்களை நீதிமான்கள் என்று நம்பும்படியான முகத்தைக் காண்பித்தார்கள். ஆகையால் முகத்தைப் பார்த்தே குணத்தை நிதானிப்பது எப்போதும் சாத்தியமல்ல. இருதயங்களை அறியும் சக்தி நமக்கு இல்லாததால் முகத்தைப் பார்த்து குணத்தை நிதானிப்பது எப்பொழுதும் சாத்தியமல்ல.

இருதயங்களை அறியும் சக்தி நமக்கு இல்லாததால் முகத்தைப் பார்த்து நாம் மோசம் போகவும் நேரிடும். பகவானை ஏமாற்றக்கூடிய முகம் உலகில் இல்லை. அவர் ஒருவனை அறிவதற்கு முகம் அவசியமில்லை. அவர் எல்லா இருதயங்களையும் உள்ளபடி அறிந்திருக்கிறார். ஆகையால் நமது முகங்களை அவர் கவனிக்கிறதில்லை என்று நாம் சொல்லக்கூடாது. "உன் முகரூபத்தை எனக்குக் காண்பி. உன் சத்தத்தை நான் கேட்கட்டும்" என்று நமது தனி ஜெபத்தைக் குறித்துப் பேசுகிறார். எம்மாவு கிராமத்துக்குப் போன இருவரைப் பார்த்து "நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய்ப் பேசிக் கொள்ளுகிற காரியங்கள் எவையென்று கேட்டார்" "உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு" என்று உபவாசிக்கிறவர்களுக்குச் சொன்னார். ஏனென்றால் "எண்ணெய் முகக்களையை உண்டுபண்ணும்" அவர் நல்லார் பொல்லார் எல்லாருடைய முகங்களையும் கவனிக்கும் கடவுள். சிறிய முகத்தில் உள்ள சில உறுப்புகளான கண், மூக்கு, வாய், காது முதலியவை குறிப்பட்ட இடங்களில் அமைக்கப் பெற்றிருந்தும் ஒருவர் முகம்போல் இன்னொருவர் முகம் இல்லாதது ஆச்சரியமே. கோடிக்கணக்கான உலக மக்களில் குழப்பம் உண்டாகாதபடி முகத்தோற்றத்தில் வித்தியாசங்களை அமைத்ததும் திருவுளச் செயலே. இப்பொழுது சில முகங்களையும் அவற்றின் போதனைகளையும் கவனிப்போம்.

**1. காயீன் முகம்**

ஒரு வாலிபனுக்கு இருக்க வேண்டிய மகிழ்ச்சி, நம்பிக்கை, அழகு காயீன் முகத்தில் இல்லை. கோபமும் எரிச்சலும் அவன் முகத்தில் தோன்றின. அது காயீனுக்குச் சொந்தமான முகமல்ல. சாத்தான் அவனுக்குள் புகுந்து அவன் முகத்தை அவலட்சணமாக்கி விட்டான். தன் சகோதரன் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கடவுள் ஏற்றுக்கொண்டு தன்னைத் தள்ளிவிட்டாரே என்று எண்ணி சகோதரன்மேல் பொறாமை கொண்டான். அவன் முகநாடி வேறுபட்டது. கடவுள் அவனைப்பார்த்து: காயீனே! உன் முகநாடி ஏன் வேறுபட்டது என்று கேட்டார். இவ்வாறு கேட்டும் அவன் தன் துர்க்குணத்தை உணராமல் தன் சகோதரனை அழைத்துப் போய்கொலை செய்தான். "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சல் அடையாதே, நியாயக் கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே" இவனோ பொல்லாதவர்கள்,

நியாயக்கேடு செய்தவர்கள் பேரில் அல்ல, நல்லவனும் நீதிமானுமான தன் சொந்தச் சகோதரனை கொலை செய்தான். காயீன் முகம் கோபம், எரிச்சல், பொறாமை, கொலை நிறைந்த முகம். நம்மில் அநேகருடைய முகங்கள் காயீனைப்போலவே இருக்கின்றன. அநேகர் தங்கள் முகங்களை எரிச்சல், பொறாமை, பழிவாங்கும் சிந்தையால் அவலட்சணமாக்கிக் கொள்ளுகிறார்கள். காயீனைக் கேட்டதுபோலவே ஆண்டவர் அவர்களைப் பாரத்து: உங்கள் முகங்கள் வேறுபட்டிருக்கிற தென்னவென்று கேட்கிறார். அந்தச் சத்தத்தை அவர்கள் கேட்பதில்லை. பொறமையும் எரிச்சலுமுள்ள முகம் கடவுளுக்கு வெறுப்பு; மனுஷருக்கு கொள்ளை நோய். தங்களுக்கு நரகம்.

பெல்ஷாத்சார் முகம் : “ராஜாவின் முகம் வேறுபட்டது” (தானி. **5:6**). இது காயீனைப்போல் பெறாமை எரிச்சலால் உண்டான வேறுபாடல்ல. கடவுளுடைய கோபாக்கினை அவன்மேல் வந்தது. அவன் பயந்து நடுங்கினான். அவன் முகம் திகிலால் வேறுபட்டது. பெல்ஷாத்சார் செய்ததென்ன? தன் பிரபுக்கள் ஆயிரம்பேருக்கு ஒரு பெரியவிருந்து நடத்தினான். அதற்கு எருசலேம் ஆலயத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்த பரிசுத்த பொற்பாத்திரங்களை உபயோகித்தான். அவனும், அவனுடைய பிரபுக்களும், அவன் மனைவிகளும், வைப்பாட்டி களும் அவைகளிலே திராட்சரசம் குடித்தார்கள். மகா பூரிப்பான அந்நேரத்தில் கைவிரல்கள் தோன்றி சுவரிலே எழுதின. எழுதின அந்தக் கையை ராஜா கண்டான். அவ்வளவுதான் உடனே ராஜாவின் முகம் வேறுபட்டது. அவன் நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணின. அவன் இடுப்பின் கட்டுகள் தளர்ந்தன. அவன் முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அவன் கடவுளை மறந்து துன்மார்க்கமாய் நடந்ததே இந்தப் பயங்கரத்துக்குக் காரணம். அன்று இரவே அவன் கொலையுண்டான். தேவன் பயங்கரமாய்ப் பூமியைச் சந்திக்கும்போது பட்டணங்கள் நடுங்கவேண்டும். பலத்த நகரங்கள் தத்தளிக்க வேண்டும். கடவுளற்ற மனுஷர் முகங்கள் திகிலால் வேறுபடும். அவருடைய நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்பவன் யார்? பெருமையும் மேட்டிமையுமுள்ள முகங்கள் பயமும் அவமானமும் நிறைந்து நடுங்கும். ஆண்டவர் நமது தனி அறையின் சுவரில் நம்மைக் குறித்து என்ன எழுதுவார்? நமது முகம் வேறுபடுமோ? அல்லது நீ எனக்குப் பிரியமான தாசன். உன்னில் பிரியமாயிருக்கிறேன் என்று எழுதுவாரா?

### 2. நெகேமியா முகம்

துக்கம் நிறைந்த முகம். இவர் சூசான் அரமனையில் அர்தசஷ்டா ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தார். யூதேயாவிலிருந்து போன மனுஷர் எருசலேம் அலங்கம் இடிபட்டு அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப் பட்டனவென்று நெகேமியாவுக்கு அறிவித்தார்கள் இதைக் கேட்டதும் நெகேமியா அழுது துக்கசாகரத்தில் அமிழ்ந்தார். அவர் ராஜாவுக்கு திராட்சை ரசம் கொடுக்கையில், எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிற நெகேமியாவின் முகம் மாறுபட்டிருப்பதைக் கண்டு: "நீ துக்கமுகமாயிருக்கிறதென்ன?" என்று கேட்டான். அதன் பேரில் நெகேமியா ஆலயத்தைப் பற்றியுள்ள தன் மனவியாகுலங்களை ராஜாவுக்குத் தெரிவித்து, உத்தரவு பெற்று எருசலேமுக்கு வந்து அலங்கத்தைக் கட்டின விபரத்தை நாம் அறிவோம். நெகேமியாவின் துக்கமுகம் தனக்காகவல்ல. ஆண்டவர் காரியத்துக்காக. இந்தத் துக்கமே நமக்குவேண்டும். "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்று எழுதின பவுலே: "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது" என்றார். தமக்காக அல்ல. தமது ஜனமாகிய இஸ்ரவேலர் ரட்சிக்கப்படாதிருக்கிறார்களே என்று துக்கம். சபைகளைப் பற்றிய கவலையும் அவரைப் பாரப்படுத்தினது. நமது ஆண்டவர் துக்கம் நிறைந்தவரா யிருந்தார். உலகத்தின் பாவம் அவர் திருமுகத்தைத் துக்கமயமாக்கிற்று. ஜனத்தின் பாவங்களுக்காக எரேமியா துக்கம் நிறைந்து அழுதவண்ணமாயிருந்தார். நமது முகங்களில் அடிக்கடி துக்கங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைகளுக்குக் காரணம் நமது சுயநலங்களே. ஆண்டவர் ராஜ்யத்துக்காக, மற்றவர்கள் ரட்சிக்கப்படாததற்காக நாம் துக்கிக்கிறோமா? நமது துக்கம் தேவனுக்கேற்ற துக்கமா? (2 கொரி. 7:10).

### 3. ஸ்தேவான் முகம்

ஸ்தேவானை ஆலோசனைச் சங்கத்துக்குமுன் இழுத்துக்கொண்டுபோய் விசாரிக்கையில் "அவன் முகம் தேவதூதன் முகம்போல் இருக்கக் கண்டார்கள்" ஸ்தேவான் விசுவாசத்தாலும், பரிசுத்த ஆவியாலும், வல்லமையாலும் நிறைந்தவர். அவர் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் முடியவில்லை. உள்ளான தேவமகிமை,

விளக்கு கண்ணாடி மூலம் பிரகாசிப்பதுபோல், அவர் முகத்தில் பிரகாசித்தது. மோசே தேவசமுகத்தில் இருந்ததின் பலனாக அவர் முகம் பிரகாசித்தது. நமதாண்டவர் தேவசித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றி மலையில் ஜெபித்தபோது அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது. "நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போல பிரகாசிப்பார்கள்." நிறம் முகவசீகரத்தைக் குறித்து நாம் பெருமை அடையலாம். ஆனால் திடீரென தோன்றும் வைசூரி முதலிய வியாதிகள் அழகைக் கெடுக்கும். தேவபக்தியாலுண்டாகும் முகவழகே ஆண்டவருக்குப் பிரியம். அதுவே அழியாத அழகு.

## 53. அந்தக் கல்

**"அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற் கேதுவான கன்மலையுமாயிற்று" *(1 பேதுரு 2:7).***

ஒரு போதகர் பிரசங்கம் செய்தபோது அந்தச் சபையின் உற்பத்தியையும், அதின் வளர்ச்சியையும் பற்றிச் சொல்லிக் கொண்டு போனார். அங்கேயிருந்த ஒருவரை பேர் சொல்லி, அவர் முதல்முதல் அச்சபையைச் சேர்ந்தவராகையால் இந்தச் சபையைக் கட்டுவதற்கு எனக்குக் கிடைத்த முதல்கல் இவர்தான் என்று சொன்னார். ஆராதனை முடிந்தவுடனே கல்லென்று சொல்லப்பட்டவர் போதகரோடு சண்டைக்கு வந்து விட்டார். சபைக்கு முன்பாக, இன்று நீர் என்னை அவமானப்படுத்தினதென்ன? நான் மனுஷனாயிருக்க நீர் என்னைக் கல்லென்று எப்படிச் சொல்லலாம் என்று வாதாடினார். அதற்குப் போதகர் அப்படியல்ல, நான் உம்மை மேன்மைப்படுத்திப் பேசினேனேயன்றி எந்தவிதத்திலும் நான் உம்மை அவமானப்படுத்தவில்லை என்றார். என்ன சொன்ன போதிலும் அவர் கேட்காமல் நான் மனுஷனாயிருக்க என்னைக் கல்லென்று சொல்லவே கூடாது என்று கூறி கோபத்தோடு போய் விட்டார்.

கல் எனப்பெயர் கொண்ட அப்போஸ்தலனாகிய பேதுரு நமதாண்டவரைக் கல்லென்று அழைக்கிறார். யூதர்களுக்கு இது விளங்காத வார்த்தையல்ல. அவர்கள் ஆதிமுதல் இப்படிப்பட்ட

உவமானங்களில் நன்றாய்ப் பழகினவர்கள். மோசேயின் காலத்திலும் தீர்க்கதரிசிகளின் காலங்களிலும் தேவன் மேசியாவைக்குறித்து அவர்களோடு உவமானங்களைக் கொண்டும், அடையாளங்களைக் கொண்டும் பேசி வந்தார். ஏசாயா 28-16ல் "இதோ, அஸ்திபாரமாக ஒருகல்லை நான் சீயோனில் வைக்கிறேன்." என்று அவர் தெளிவாய் அறிவித்திருக்கிறார். ஆகையால் பேதுருவும் பவுலும் இயேசுவே அந்தக்கல் என்று தைரியமாய்ப் பிரசங்கித்திருக்கிறார்கள். இயேசுவானவரும் தாமே அந்த மூலைக்கல்லென்று திட்டமாகச் சொன்னார். இந்தக் கல்லுக்கு அப்போஸ்தலன் கொடுத்திருக்கிற பேர் மூன்று. அந்த மூன்றையும் முறையே பார்ப்போம்.

### 1. மூலைக்கல்

பூர்வத்தில் ஆலயத்தைக் கட்டுவோர் அதற்கு அஸ்திபாரமான மூலைக்கல்லை நன்றாய்ப் பரீட்சித்து தெரிந்து கொள்வார்கள். அதன் நீளம் 17 முதல் 19 அடியும், கனம் 7 அடியுமாயிருக்கும். அந்த மூலைக்கல் இரு சுவரையும் நன்றாய் இணைத்து அவைகளுக்கு உறுதியாயிருக்கும். திருச்சபையாகிய பெரிய மாளிகைக்குத் திட அஸ்திபாரம் இயேசுவே. இவர் தேவனால் பரீட்சிக்கப்பட்டவரும் உலகத்தோற்றத்துக்குமுன் தெரிந்துகொள்ளப்பட்டவருமான மூலைக்கல்லாயிருக்கிறார். இவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. வீடுகட்டு கிறவர்கள் இந்த அருமையான கல்லை ஆகாத கல்லென்று தள்ளிப்போட்டார்கள். தேவனுடைய சபையை கட்டும்படி ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரரான பிரதான ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர் என்பவர்கள் இந்தக் கல்லை ஆகாது என்று தள்ளினதற்குக் காரணமென்ன? சுயநீதியில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு விசுவாசக்கல் ஆகுமோ? வெளியே வேஷங்களையும் வீண் சடங்குகளையும் பற்றிக்கொண்டவர் களுக்கு மெய்ப்பொருளாகிய கல் ஆகுமோ? முற்றிலும் மாயத்தால் நிறைந்தவர்களுக்கு சத்தியமான கல் ஆகுமோ? உள்ளத்தில் அசுத்தத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்தவர்களுக்கு பரிசுத்த கல் ஆகுமோ? உலக ராஜ்யத்தையும் உலக மகிமையையும் நாடினவர்களுக்கு ஆவிக்குரிய கல் ஆகுமோ? அவர்கள் கட்டின வீட்டுக்கு

இந்தக்கல் ஒருபோதும் பொருந்தாது. ஆகையால் அவர்கள் இவரை அசட்டை செய்து தள்ளிப்போட்டார்கள். வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று; அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

திருச்சபை முழுவதுக்கும் திடஅஸ்திபாரம் இயேசுவே. யூதர்களையும் புறஜாதிகளையும் ஒரே நாமத்தில், ஒரே விசுவாசத்தில், ஒரே ஆவியில் ஒன்றாய் இணைக்கிற உறுதியான கல் இவரே. இவருடைய நாமமேயன்றி வானத்தின் கீழே வேறே நாமம் கட்டளையிடப்படவில்லை. பவுல் அப்போஸ்தலன் எபேசியர் **2:20**–ல் அப்போஸ்தலர் தீர்க்கத்தரிசிகளை அஸ்திபாரமென்று அழைத்திருக்கிறது உண்மைதான். ஆனால் எந்தக் கருத்தில் அப்படிச் சொன்னாரென்பதை நாம் விசாரிக்க வேண்டும். இவர்களுடைய உபதேசத்தின் மூலமாய் நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவர்மேல் ஊன்றக் கட்டப்படுவதற்கு அவர்கள் ஏதுவாயிருந்தபடியால் அப்படிச் சொன்னார். அவர்களை அஸ்திபாரமென்று சொல்லும்போதே மற்றவர்கள் அதைத் தப்பாய் அர்த்தப்படுத்துவார்கள் என்றெண்ணி "அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்." என்று அவ்வசனத்திலேயே சொல்லியிருக்கிறார். இயேசுவானவர் பேதுருவைப் பார்த்து: இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்று சொன்ன வார்த்தையை வைத்துக்கொண்டு பேதுருவே அந்தக் கல்லென்று ரோமைச் சபையார் சொல்லுகிறார்கள். அங்கேயும் கல் என்பது பேதுருவையல்ல, பேதுரு செய்த அறிக்கையையே குறிக்கும். நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று ஆண்டவர் சீஷரைக்கேட்க: பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். அப்பொழுது இயேசு சீமோனே, மாம்சமும் ரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார்.

திருச்சபைக்கு நான்தான் மூலைக்கல் என்று பேதுரு சொல்லத் துணிவாரா? யாராகிலும் அப்படிச் சொன்னால் அந்த வார்த்தைகளைச் சகிப்பாரா? பேதுரு விசேஷித்த அப்போஸ்தலன்தான். ஆனால் அவர் தம்மைப்பற்றிச்

சொன்னதென்ன? கொர்நெலியு தன்பாதத்தில் விழுந்து பணிந்தபோது "எழுந்திரு நானும் ஒரு மனுஷன்தான்" என்று சொல்லி அவனைத் தூக்கி எடுத்தார். கிறிஸ்துவைக் குறித்து அவர் யூதர்களிடத்தில் பேசினபோதும், நிருபத்தை எழுதினபோதும் கிறிஸ்துவே பிரதான மூலைக்கல் என்று பலமாய்ச் சாட்சி கொடுத்திருக்கிறார். அவர் எண்ணாததை மற்றவர்கள் அவருக்கு ஸ்தாபித்து, அவரோடு நிறுத்தாமல் மற்ற மனுஷரையும் அப்படிப்பட்ட மூலஸ்தானத்தில் ஏற்றி வைப்பது என்ன விபரீதம்! பாப்புவை சபைக்குத் தலையாகப் போற்றுவது எவ்வளவு தப்பிதம்? தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு பரீட்சிக்கப்பட்டு சீயோனில் வைக்கப்பட்ட கல் பாப்புவா? "இந்தக் கல்லின்மேல் நம்பிக்கை வைக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை." என்று தேவன் பாப்புவைக் குறித்தா சொன்னார்? இவர்களோ பலவீனரும் குறைவுள்ளவர்களும் மாறிப்போகக்கூடியவர்களுமான மனுஷர். காலஞ்சென்ற பாப்புவானவர் யுத்தம் நடவாதபடி நாம் எவ்வளவோ பிரயாசப்பட்டும் முடியாமற் போயிற்றென்றும், பாப்புகளுக்கு ஓர் காலத்திலுண்டாயிருந்த செல்வாக்கு தனக்கில்லாமற் போயிற்றென்றும் புலம்பி மரித்தார். இயேசுவோ என்றும் மாறாத நித்திய கன்மலையாயிருக்கிறார். "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது" இந்தக் கல்லின்மேல் நம்பிக்கை வைக்கிறவன் ஒருக்காலும் வெட்கப்பட்டுப்போவதில்லை. இதை வாசிக்கும் சகோதரனே! யார் பேரிலே அல்லது எதன் பேரிலே நம்பிக்கை வைத்திருக்கிறாய்? இயேசுகிறிஸ்துவே என் நம்பிக்கை, என் ரட்சிப்புக்காக நான் அவரையே பற்றிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லக்கூடுமா? உன் முழு இருதயத்தோடும் அவரை நீ பற்றிக்கொண்டிருப்பது உண்மையானால் அவர் உன்னை ஒருபோதும் கைவிட மாட்டார். "உம்மை உறுதியாய் பற்றிக்கொண்டமனதை யுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." (ஏசா. 26:3).

**2. விலையேறப்பெற்ற கல்**

எதினாலே இந்தக் கல் விலையேறப்பெற்றதென்பதைப் பார்ப்போம். அது எல்லாவற்றிற்கும் மேலான நிகரற்ற

கல்லாயிருப்பதால் அது விலையேறப்பெற்றது. எபிரேயர் நிருபத்தில் **13** அதிகாரங்கள் உண்டு. அந்த நிருபத்தை எழுதினவருடைய முக்கிய நோக்கம் இயேசுவானவர் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்று காண்பிப்பதே. முதலாம் அதிகாரத்தில் இவர் தேவதூதர்களுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். இரண்டாம் அதிகாரத்தில் இவர் ஆதாமுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். மூன்றாம் அதிகாரத்தில் இவர் மோசேக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். நாலில் அவர் யோசுவாவுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். ஐந்தில் இவர் ஆரோனுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். ஆறில் இவர் ஆபிரகாமுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். ஏழில் இவர் மெல்கிசேதேக்குக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். எட்டில் இவர் எல்லா ஆசாரியர்களுக்கும் மேலானவர் என்று காண்பிக்கிறார். ஒன்பதில் இவர் சடங்காச்சாரங்களுக்கு மேலானவர் என்று காண்பிக்கிறார். பத்தில் இவர் எல்லாப் பலிகளுக்கும் மேலானவர் என்று காண்பிக்கிறார். பதினொன்றில் இவர் விசுவாசத்தில் நற்சாட்சி பெற்ற முன்னோர்கள் யாவருக்கும் மேலானவர் என்று காண்பிக்கிறார். பன்னிரண்டில் இவர் சகல பிரமாணங்களுக்கும் மேலானவர் என்று காண்பிக்கிறார். பதிமூன்றில் இவர் சகல போதகர்களுக்கும் மேலானவர் என்று காண்பிக்கிறார். எப்படி மேலானவர் என்பதை அந்தந்த அதிகாரத்திலேயே விளக்கியுங் காண்பித்திருக்கிறார். அவ்வதிகாரங்களை நாம் வாசிக்கும்போது கண்டு கொள்ளலாம். எவ்வளவு மேலானவர் என்பதை நிருபத்தின் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டார். இவர் தேவனுடைய குமாரனும், அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் உண்டாக்கி, சர்வத்தையும் தாங்கி, சர்வத்துக்கும் சுதந்தரவாளியாகி, சர்வத்துக்கும் மேலாக உயர்ந்தவருமாயிருக்கிறார். இவ்விதமாய் அவருடைய மகத்துவங்களை ஆராய்ந்து அறிந்தவர்களுக்கு அவர் விலையேறப்பெற்ற கல்லல்லவோ?

இன்னும் அவருடைய அதிசய பிறப்பைப் பார்த்தால் அவரைப்போல் பிறந்தவர்கள் யார்? அவருடைய ஜீவியத்தைப் படித்தால் அவரைப்போல் பரிசுத்தர் யார்? அவருடைய உபதேசங்களைக் கேட்டால் அவரைப்போல் பேசக்கூடியது

யார்? அவருடைய கிரியைகளைக் கவனித்தால் அவரைப்போல் கிரியை செய்யக்கூடியது யார்? நிகரற்ற பிறப்பு! நிகரற்ற ஜீவியம்! நிகரற்ற உபதேசம்! நிகரற்ற கிரியை! ஆகையால் அவர் விலையேறப்பெற்ற கல்லல்லவோ?

அவருக்குள்ளான ஆசீர்வாதங்களை நோக்கினால் இன்னும் எவ்வளவோ அருமையாயிருக்கிறாரே. பாவிக்கு வேண்டிய சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் உண்டு. நான் இன்ன நன்மைக்காக அவரிடத்தில் போனேன். அந்த நன்மை அவரிடத்தில் இல்லையென்று சொல்லக்கூடியவன் யார்? இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சகல ஆசீர்வாதங்களும் அவரிடத்தில் உண்டு. சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையான சகல நன்மைகளும் அவருக்குள்ளிருக்கின்றன. நரகத்துக்குத் தப்புதல் அவருக்குள்ளே. பாவமன்னிப்பு அவருக்குள்ளே. பரிசுத்தமாகுதல் அவருக்குள்ளே. சந்தோஷம் சமாதானம் அவருக்குள்ளே. நித்திய ஜீவன் அவருக்குள்ளே. நீதிமானாகுதல் அவருக்குள்ளே. தேவனிடத்தில் சேருதல் அவருக்குள்ளே. ஜெபத்துக்கு உத்தரவு அவருக்குள்ளே. ஞானம் அறிவு அவருக்குள்ளே. ஆறுதல் சாந்தம் அவருக்குள்ளே. ஊக்கம் உற்சாகம் அவருக்குள்ளே. வெற்றியும் கீர்த்தியும் அவருக்குள்ளே. ஊழியத்தின் சித்தி அவருக்குள்ளே. வாக்குகள் பலிதம் அவருக்குள்ளே. பாக்கியமான மரணம் அவருக்குள்ளே. முதல் உயிர்த்தெழுதலில் பங்கு அவருக் குள்ளே. மறுரூப மகிமை அவருக்குள்ளே. பரம சிங்காசனம் அவருக்குள்ளே. நித்தியமோட்சம் அவருக்குள்ளே. நீடூழி வாழ்வு அவருக்குள்ளே. மனைவி மக்கள் அவருக்குள்ளே. சுகமும் பலிதம் அவருக்குள்ளே. ஆகார வஸ்திரம் அவருக்குள்ளே. உத்தியோகம் சம்பாத்தியம் அவருக்குள்ளே. சுருக்கிச் சொல்லில் தேவனுடைய சகல பரிபூரணமும் அவருக்குள்ளே. அவருக்குள் நாமும் பரிபூரணராகிறோம். இப்படிப்பட்ட கல் விலையேறப்பெற்ற கல்லல்லவோ?

ஆகிலும் பேதுரு என்ன சொல்கிறார்? விசுவாசிக்கிற உங்களுக்கு அந்தக் கல் விலையேறப்பெற்ற கல் என்கிறார். ஆம், இந்தக் கல்லின் மகிமையைக் காணக்கூடிய கண் விசுவாசமே. இந்தப் பொக்கிஷப் பெட்டியைத் திறக்கக்கூடிய சாவி விசுவாசமே. விசுவாசிகளேயன்றி அவருடைய அருமையை அறிந்தவர்கள் யார்? அவரோடு பழகினவர்

களேயல்லாமல் அவரை மதிக்கக்கூடியவர்கள் யார்? பக்தனாகிய பவுலுக்கு விலைமதிக்கக்கூடாத பொக்கிஷமானார். ஆகையால் தமக்குள்ளதெல்லாவற்றையும் விற்று இந்த விலையேறப் பெற்ற கல்லை ஆதாயம் பண்ணிக்கொண்டார். சகோதரனே, கிறிஸ்து உனக்கு விலையேறப்பெற்றவராயிருக்கிறாரா? அவரை உனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறாயா? பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? இந்தப் பூலோகத்திலும் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை என்று நீ உண்மையுடன் சொல்லக்கூடுமா? கூடுமானால் நீ பாக்கியவான். உலகப் பார்வையில் நீ அற்பனாயிருந்தாலும் தேவனுடைய பார்வையில் நீ மகா அருமையானவன் என்பதற்குச் சந்தேகமில்லை.

### 3. இடறுதலின் கல், விழுதலின் கன்மலை

இயேசுவை அஸ்திபாரக் கல்லென்றும், விலையேறப் பெற்றக் கல்லென்றும் சொன்ன அப்போஸ்தலன் இப்போது அவரை இடறுதலின் கல்லென்றும் விழுதலின் கன்மலையென்றும் அழைக்கிறார். இங்கே இரண்டு முக்கியமான காரியங்களைக் கவனிக்கிறோம். கல்லென்றும், கன்மலையென்றும் அழைக்கப்படுகிறார். இடறும்போது கல்லாயிருக்கிறார்; விழும்போது கன்மலையாகிறார். இடறும்போது கல் அசையாமல் இருந்த இடத்திலேயே இருக்கிறது; விழும்போது அந்தக் கன்மலை அசைந்து பெயர்ந்து விடுகிறது. இடறுவது அவன் செய்கை; விழுவது யேசுவின் செய்கை. இடறும்போது அவன் தனக்குத்தானே காயத்தை உண்டாக்கிக்கொள்ளுகிறான். மலை விழும்போது அது அவனை நசுக்கிப்போடுகிறது. இடறுகிறதினால் உண்டாகும் காயங்கள் ஆறிப்போகக்கூடும். மலை விழுவதினால் உண்டாகும் அழிவோ நீங்குவதில்லை. இடறுகிற தீமை இப்போதே சம்பவிக்கிறது; விழுகிற ஆக்கினையோ முடிவில் சம்பவிக்கும். சுவிசேஷத்தைக் கேட்டும் அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கிறவர்கள் இந்தக் கல்லில் இடறுகிறார்கள். அவர்கள் கீழ்ப்படியாமையில் நிலைத்திருக்கும்போது கன்மலை அவர்கள்மேல் விழும். இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்து ஒவ்வொருவருக்கும் முன்பாகவும் நிற்கிறார். நாம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லாவிட்டால் தள்ளிப் போட வேண்டும். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவன் தனக்கு இரட்சிப்புண்டாக ஏற்றுக்

கொள்ளுகிறான். அசட்டை பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினையுண்டாக அசட்டை பண்ணுகிறான். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவனுக்குச் சமாதானமேது? அவரை விசுவாசியாதவனுக்கு ஆறுதலேது? அவருக்குக் கீழ்ப்படியாதவனுக்குச் சுகமேது? அவன் மனச்சாட்சி அவனை வாதிக்கும். அவன் கலக்கமும் திகிலும் நிறைந்தவனாயிருப்பான். வலியவந்த பாக்கியத்தைக் காலால் உதைக்கிறவன் தன்னைத்தானே கெடுத்துக்கொள்ளுகிறான். இந்தக் கல்லில் இடறுவதினால் தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளுகிறான். இந்தக் காயத்தை ஆற்றிக் கொள்ள நற்காலமிதுவே. இதுவரை எதிர்த்து நின்றவன் இன்றைக்கு இரட்சிக்கப்படலாம். நீ மனந்திரும்பி வந்தால் இரக்கத்தைக் கண்டடைவாய். "இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு" என்று கர்த்தர் சொல்லுகிறார் **(ஓசி. 13:9).**

விழப்போகிற கன்மலையைக் கவனியுங்கள். இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும். நாம் மலைகளைப் பார்த்திருக்கிறோம். அங்கே மகா பிரம்மாண்டமான கற்கள் மலையின் அடிவாரத்திலும் மலைகளின் மத்தியிலும் நிற்கிறதுண்டு. இப்பிரம்மாண்டமான கற்கள் இங்கே எப்படி வந்ததென்று யோசிக்கிறோம். மழைகள் பெய்து இடையிலுள்ள மண்களைக் கரைத்து விடுவதாலும், பூமியதிர்ச்சி உண்டாகி பர்வதங்கள் அதிர்ந்ததினாலும் இப்பெரும் கற்கள் தங்கள் ஸ்தானத்தை விட்டுப் பெயர்ந்து உருண்டு வந்திருக்கலாம் என்று அறிந்து கொள்கிறோம். அவைகள் சிகரங்களிலிருந்து உருண்டு வரும்போது இடிபோன்ற பெரிய சத்தம் உண்டாகும். பார்க்க மகா பயங்கரமாயிருக்கும். ஒருவன் தன் ஆடுகளை மலையடி வாரத்தில் விட்டு மேய்த்துக்கொண்டிருந்தபோது அம்மலைச் சிகரத்திலிருந்து ஒரு பிரம்மாண்டமான கல் தன்னிடம் விட்டுப் பெயர்ந்து வேகமாய் உருண்டுவந்த அந்த மனுஷன் மேல் விழுந்து அவனை அப்படியே நசுக்கி விட்டது. அவனை அப்புறம் ஒருவரும் கண்டதில்லை. இரட்சிக்கப்படாத சகோதரனே! மலையிலிருந்து உருண்டுவரும் கல்லல்ல. கன்மலையே உன்மேல் விழுமானால் உன் முடிவு என்னமாயிருக்கும்? அப்படிப்பட்ட பயங்கரமான அழிவு உனக்கு நேரிடாதபடி இயேசுவென்னும் அஸ்திபாரக்

கல்லின்மேல் உன் நம்பிக்கையாகிய வீட்டைக் கட்டு. உன் முழு இருதயத்தோடும் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாளிலே நீ பயப்படாதிருப்பாய்.

## 54. ஆண்டவர் பிரலாபம்

**"அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவா. 5:40).**

ஓர் பெரிய கல்லறைத் தோட்டத்தைப் பார்ப்போமானால் திரளான பிரேதங்கள் அங்கே அடக்கம்பண்ணப் பட்டிருப்பதைக் காண்போம். குழந்தைகளும் வாலிபப்பிராயமுள்ளவர்களும் முதிர்வயதுள்ளவர்களுமான அநேகர் அங்கே புதைக்கப்பட்டிருப்பார்கள். தேவ பார்வையில் இவ்வுலகம் ஓர் பெரிய கல்லறைத் தோட்டம் போலிருக்கிறது. கணக்கற்ற மனுஷர் அவர் பார்வையில் செத்த பிரேதங்களாயிருக்கிறார்கள். நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று ஆதாமுக்குச் சொல்லப்பட்டது. புசித்த நாளிலேயே அவன் தேவ ஜீவனை இழந்து செத்தான். அந்த மரணம் எல்லா மனுஷரையும் ஆண்டுகொண்டது. கிருபையுள்ள தேவன் செத்தோருக்கு ஜீவன் அருளச் சித்தமானார். "தம்முடைய குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தமது அன்பை வெளிப்படுத்தினார்." ஜீவனாகிய இயேசு உலகத்தில் வெளிப்பட்டார். மனுஷருக்குள் சஞ்சரித்து ஜீவனையும் ஆசீர்வதத்தையும் அருளினார். மரித்தோருக்கு உயிரைக் கொடுத்து தமது வல்ல செய்கையினால் தாம் நித்திய ஜீவனை அருள வல்லவரென்று ரூபித்தார். சிறு பெண்ணே எழுந்திரு எனச் செத்தவள் பிழைத்தாள். வாலிபனே எழுந்திரு எனக் கல்லறைக் குழிக்குள் போக வேண்டியவன் தன் தாயோடு மகிழ்ச்சியாய் வீட்டிற்குச் சென்றான். லாசருவே வெளியே வாவென நாறிப்போனவன் வெளியேறி வந்து அவரோடு போஜன பந்தியிருந்தான். இதுபோலவே ஞானஜீவனை தாம் அருளக் கூடியவரென்று அவர் போதித்தும் அநேகர் அவரை

விசுவாசிக்கவில்லை. அப்படிப்பட்ட ஓர் சமயத்தில் கூடி நின்றவர்களைப் பார்த்து நமது ஆண்டவர் இந்த மகா துயரமான வார்த்தைகளைச் சொன்னார். "உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே" என்கிறார்.

"அப்படியிருந்தும்" என்று ஆண்டவர் சொல்வதைப் பார்க்கும்போது ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் அவரிடத்தில் வரும்படியான தகுந்த முகாந்தரங்களிருந்தும் அவர்கள் வர மனமில்லாமற்போனார்கள் என்று தெரிய வருகிறது. ஆகையால் நாலு சாட்சிகளை அழைத்து அவர்களுடைய குற்றத்தை உணர்த்துகிறார்.

**1. முதலாம் சாட்சி வனப்பிரசங்கியின் சாட்சி**

"நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள். அவன் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான். ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களிடத்தில் யோவானைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" தீர்க்கதரிசனத்தால் முன் குறிக்கப்பட்டவன். தேவதூதனால் அறிவிக்கப்பட்டுப் பிறந்தவன். தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டிருந்தான். உலகத்தை விட்டுப் பிரிந்து தேவஊழியத்துக்குத் தன்னை சமூலமாகத் தத்தம் செய்தவன். வல்லமையான பிரசங்கி. எரிந்து பிரகாசிக்கிற விளக்கு. நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்தில் களிகூர மனதாயிருந்தீர்கள். அவன் வெளிச்சம் யூதேயாவில் மாத்திரமல்ல. எபேசு வரை எட்டினது. அவனே கிறிஸ்து என்று நீங்கள் நினைத்து அவனிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள். அவன் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான். அவன் சொன்னதென்ன? நான் கிறிஸ்துவல்ல. இயேசுவானவரே கிறிஸ்து. அவர் எனக்குப் பிந்திவந்தும் எனக்கு முன்னமே இருக்கிறார். "அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல. அவர் பெருக வேண்டும். நான் சிறுக வேண்டும். நான் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். அவரோ பரித்தாவியினாலும் அக்கினியினாலும் ஸ்நானம் கொடுப்பார். நான் பாவங்களைக்குறித்து கண்டித்துப் பிரசங்கிக்கிறேன். அவரோ பாவங்களைச் சுமந்து தீர்த்துப்போடுகிற தேவ ஆட்டுக்குட்டி.

நான் நியாயத்தீர்ப்பைப்பற்றி பேசுகிறேன். கோடரி மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது. நல்ல கனி கொடாத மரங்கள் வெட்டப்படும் என்கிறேன். அவரோ உலகத்தை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி. தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. தமது களத்தை நன்றாய் விளக்கிக் கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார். நான் அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன்; அவரோ தேவகுமாரனாயிருக்கிறார். நான் பூமியிலிருந்து உண்டானவன். அவரோ பரலோகத்திலிருந்து வந்தவர். அவர் எல்லாரிலும் மேலானவர். தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமற் கொடுத்திருக்கிறார். எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றான். இவ்வாறு என்னைக் குறித்து அவன் திட்டமாகச் சொல்லியிருந்தும் என்னிடத்தில் வந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு மனதில்லையே என்கிறார்.

**2. இரண்டாம் சாட்சி வல்ல கிரியைகளின் சாட்சி**

"நான் செய்து வருகிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றன." என் கிரியைகள் யோவானுடைய சாட்சியிலும் மேன்மையானவை. நீங்கள் யோவானைக் கிறிஸ்துவென்று நினைத்தீர்களே யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லையே. கிறிஸ்து வரும்போது அற்புத கிரியைகளைச் செய்வார் என்று தீர்க்கதரிசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவாக வருகிறவர் அற்புத கிரியைகளைச் செய்வாரென்று யூதர்களும் அறிந்திருந்தார்கள். நிக்கோதெமு இயேசுவினிடத்தில் வந்தபோது ரபீ, நீர் தேவனிடத்தில் இருந்து வந்தவர், ஒருவன் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டானே என்றான். பிறவிக்குருடனாயிருந்து கண் திறக்கப்பட்டவன். பரிசேயரைப் பார்த்து: பிறவிக் குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

மாரிகாலத்தில் அவர் சாலமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருக்கையில் யூதர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்று கேட்டார்கள். நான் கிறிஸ்துதான் என்று சொன்னாரா? அல்ல; நான் அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை. நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறது என்றார். யோவான் சிறையிலிருந்த தன் சீஷர்களை அனுப்பி; வருகிறவர் நீர்தானாவென்று விசாரிக்கச் சொன்னான். தான் முற்றிலும் கைவிடப்பட்டதுபோல் தோன்றினபடியால் மனங்கலங்கி விசாரிக்க ஆட்களை அனுப்பினான். நான் கிறிஸ்துதான் என்று சொன்னாரா? அல்ல. நீங்கள் காண்கிற கிரியைகளைப்போய் யோவானுக்குச் சொல்லுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இதைப் போய்ச் சொல்லுங்கள். யோவான் கண்டு கொள்வான் என்றார். ஆம் அற்புத கிரியை செய்கிறவராக கிறிஸ்து உலகத்தில் வந்தார். அவருடைய கிரியைகளைக் கண்டும் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாதது அவருக்கு மகா துக்கம்.

மேலும் அவர் அவர்களைப் பார்த்து: நான் செய்த அற்புத கிரியைகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் பெரிய கிரியைகள் அல்லவா? யாராகிலும் அப்படிப்பட்ட கிரியைகளைச் செய்ததுண்டா? ஒருவனும் செய்யாத கிரியைகளை நான் செய்யாதிருந்தேனானால் உங்களுக்குப் பாவமிராது. நீங்கள் அவைகளைக் கண்டும் என்னைப் பகைக்கிறீர்களே! (யோவா. **15:24**). அவைகளை ஏராளமாக நான் செய்யவில்லையா? சில கிரியைகளை மாத்திரம் செய்து அப்புறம் நிறுத்திவிட்டேனா? சகல நோயாளிகளையும் சகல பேய்பிடித்தவர்களையும் இடைவிடாமல் நான் குணமாக்க வில்லையா? அவைகளை எல்லாரும் அறிய நான் நடப்பிக்கவில்லையா? மறைவிலே நான் ஒன்றும் செய்ததில்லையே. திரள் கூட்டம் கூடியிருந்த சமயங்களில் யாவரும் காணத்தக்கதாக நான் எத்தனையோ அற்புதங்களைச் செய்தேனே. என்னை விரோதிக்கிறவர்களுங்கூட அவைகளைக் கண்டார்களே. மேலும் வேறு நோக்கத்தோடு நான் அற்புதங்களைச் செய்யாமல் நோயாளிகள்மேல் மன துருகியல்லவோ அவைகளைச் செய்தேன். என்னிடத்தில்

நன்மை பெற்றவர்கள் உள்ளாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்களே. நான் கிறிஸ்துவென்பதற்கு என் கிரியைகள் சாட்சியல்லவா? என்றார்.

ஆண்டவர் செய்த அற்புதங்கள் மகா முக்கியமானவைகள். தற்காலத்தில் அநேகர் அவைகளைப் பழங்கதைகள்போல் எண்ணுகிறார்கள். சிலர் அவைகள் நடந்ததோ என்னமோவெனச் சந்தேகிக்கிறார்கள். வேறு சிலர் உவமானமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்கிறார்கள். கிறிஸ்துவின் கிரியைகளைச் சந்தேகிக்கிறவர்கள் எப்படி கிறிஸ்தவர்களாயிருப்பார்களோ நமக்குத் தோன்றவில்லை. ஆனால் கிறிஸ்துவின் சத்துருக்களோ அவர் செய்த அற்புதங்களைச் சந்தேகிக்காமல் ஒப்புக்கொண்டார்கள். "இவன் நாம் காணத்தக்கதாக அநேக அற்புதங்களைச் செய்கிறானே" என்றார்கள். ஆனால் அவர் சாத்தானுடைய உதவியைக் கொண்டு செய்கிறதாகச் சொன்னார்கள். அற்புதங்கள் செய்யப்படவில்லையென்று சொல்லாமல், செய்யப்பட்ட அற்புதங்கள் பிசாசினாலே என்று தப்பாய் நினைத்தார்கள். அவர்கள் இருதயம் திருக்குள்ளதாயிருந்தபடியால் அப்படி நினைத்தார்கள்.

### 3. மூன்றாம் சாட்சி பரமபிதாவின் சாட்சி

"என்னை அனுப்பின பிதாதாமே என்னைக் குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார்" அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினபோது "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று பிதா சாட்சி பகர்ந்தார். மறுரூப மலையில் இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று சாட்சி கொடுத்தார். கிரேக்கர் அவரைப் பார்க்க ஆசைப்பட்டு வந்தபோது "மகிமைப்படுத்தினேன் இன்னும் மகிமைப்படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்றவர்கள்: இது இடி முழக்கம் என்றார்கள். வேறுசிலர் தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள். இயேசுவோ அவர்களைப் பார்த்து: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று என்றார். பிதாவினால் உண்டான சாட்சிக்கு அவர்கள் செவிகொடுக்க வேண்டியது எவ்வளவு நியாயம்! ஒரு பெரிய ஆலயத்தில் ஒருவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் போது வானத்திலிருந்து: இவன் என்னுடைய ஊழியக்காரன்,

இவன் பேசும் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள் ஜனங்களே! என்று ஒரு சத்தம் தொனிக்குமானால் சபையார் எவ்வளவோ பயத்தோடும் கவனத்தோடும் செவிகொடுப்பார் கள்! ஆனால் இயேசுவின் நாட்களில் இருந்தவர்களோ அவருடைய உபதேசத்திற்குச் செவிகொடாமற் கெட்டுப் போனார்கள். பரிசுத்த பேதுரு வெகுகாலத்திற்குப் பிறகு பிதா கொடுத்த சாட்சியைக் குறித்து என்ன சொல்லுகிறார்? "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேச குமாரன். இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது. அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்" **(2 பேதுரு 1:16–18)** அப்படியிருந்தும் ஜீவனுண்டாகும்படி அவரிடத்தில் போக அவர்களுக்கு மனமில்லாமற்போயிற்று.

**4. நாலாம் சாட்சி வசனத்தின் சாட்சி**

"வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே." யூதர்கள் தங்கள் வேதத்தை மதித்தார்கள். அடிக்கடி வாசிக்கக் கேட்டார்கள். ஒரு குருட்டுப் பக்திபோல் அதை வாசித்தார்களே யன்றி ஆராய்ந்து பார்க்கவில்லை. பெரேயா ஊராரைக் குறித்து: அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கே பட்டணத்திலுள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலியாயிருந்தார்கள் என்று சொல்லியிருக் கிறது. வெறும் வாசிப்புக்கும் ஆவலோடு வேத வாக்கியங்களை ஆராய்ந்து படிப்பதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆபேலின் பலியால் குறிக்கப்பட்டவன் யார்? நோவாவின் பேழை போதித்ததென்ன? பஸ்கா ஆடு யாருக்கு அடையாளம்? யாக்கோபின் ஏணி போதிக்கிறதென்ன? ஆசரிப்புக்கூடாரம், வானத்தின் மன்னா, வெண்கல சர்ப்பம், கன்மலையின் தண்ணீர் இவைகளெல்லாம் யாரைக் காட்டுகின்றன? ஸ்திரீயின் வித்தென்றும், ஆபிரகாமின் சந்ததி என்றும், சமாதானக் கர்த்தரென்றும் அழைக்கப்பட்டவர் யார்? நமது

மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டு, நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டாரென்று ஏசாயா யாரைக் குறித்துச் சொன்னார்? சகல ஜாதிகளாலும் விரும்பப்படத்தக்கவர் வருவார் என்று ஆகாய் யாரைக் குறித்து முன்னறிவித்தார்? வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளையெல்லாம் என்னில் நிறைவேறுகிற மாதிரி வேறே யாரிலேயாகிலும் நிறைவேறினதுண்டா? அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவனுண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே என்கிறார்.

ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் ஏன் வரவில்லை? ஆண்டவர் சொல்லுகிற காரணமென்ன? மனமில்லாததினாலேயே என்கிறார். மனம்தான் காரணம். என்னை ஏன் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை? என் உபதேசத்தைக் கேட்க மனமில்லாததினால் அல்லவா? எத்தனை தரமோ நான் உங்களைச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன், 'உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று' நீங்கள் சாகிறது எனக்குப் பிரியமேயில்லை. உங்கள் ஒவ்வொருவனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்திருக்கிறேன். உங்கள் ஒவ்வொரு வனையும் அழைக்கிறேன். உங்கள் ஒவ்வொருவனையும் ரட்சிக்க மகா ஆசையாயிருக்கிறேன். அதற்காக எவ்வளவோ பாடுகளைப் பட்டேன். அப்படியிருந்தும் உங்களுக்கு மனமில்லாமற் போனால் நான் என்ன செய்வேன்? நீ கெட்டுப் போனால் நீ தான் காரணம். என்பேரில் தோஷமில்லை. நடக்கமாட்டாத 38 வருஷம் வியாதிக்காரனுக்கு சொஸ்தமாக மனமாவென்று கேட்டேன். மனமுண்டென்று கண்டபொழுது எழுந்து நடக்கச் செய்தேன். எல்லா இடங்களிலும் நன்மை செய்தது போல நாசரேத்தூராருக்கும் நன்மை செய்ய நாடிப் போனேன். அவர்களுக்கு மனமில்லை. என்னால் ஒன்றும் செய்யக்கூடாமற் போயிற்று.

நாம் மார்க்கத்தில் இருக்கலாம். சபையில் சேர்ந்திருக்கலாம். ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். இராப்போஜனத்தில் சேர்ந்திருக்கலாம். வேதத்தைத் திறந்து வாசித்திருக்கலாம். போதகரிடம் அடிக்கடி போயிருக்கலாம். இவை நல்ல காரியங்களே. ஒருவன் கிறிஸ்துவிடம் போகாவிட்டால் அவனுக்கு ஜீவன் இல்லை. இருளும் ஒளியும் ஒன்றல்ல. மரணமும் ஜீவனும் ஒன்றல்ல. ஜீவனைக் கண்டவன்

பெரிய மாறுதலைக் கண்டவன். மரண நிலைமை மூச்சற்று, பேச்சற்று, முயற்சியற்று இருக்கிற நிலைமை. ஜீவ நிலைமையோ ஆவிக்குரிய பெரிய மாறுதலுள்ள நிலைமை. உன்னில் நல்ல மாறுதல்கள் உண்டா? தேவன் உனக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனுக்குள்ளே இருக்கிறது. குமாரனையுடையவன் ஜீவனையுடையவன். தேவகுமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்.

## 55. எங்கள் போர்

**"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்கு கிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது." (2 கொரி. 10:4).**

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் குறித்துக் கேள்விப்படுகிறோம். ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்புகிறது. இதினால் பலவிடங்களிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் உலகத்துக்கு என்ன சம்பவிக்குமோவென்று கலங்குகிறார்கள். எருசலேம் ஆலயம் அழிந்தால் உலகமே அழிந்து போகுமென்பது யூதருடைய தாற்பரியம். எருசலேம் அழிந்தது. ஆகிலும் முடிவு உடனே வரவில்லை. இப்படிப்பட்ட காரியங்கள் சம்பவிக்க வேண்டியதென்றும், ஆனாலும் முடிவு உடனே வராதென்றும், கர்த்தர் சொல்லியிருக்கிறபடியால் நாம் கலங்காமல் அவர் பேரில் நம்பிக்கையாயிருக்கவேண்டும். ஆகிலும் இவைகள் அவருடைய வருகைக்கு முன் காணப்பட வேண்டிய அடையாளங்கள் என்பதையும் நாம் மறந்து போகலாகாது. மேற்காட்டிய வசனத்தில் மூன்று காரியங்களைக் கவனிக்கலாம். அந்த மூன்றையும் மூன்று வார்த்தைகளாக எடுத்துக் கொள்ளுவோம். போர், போராயுதங்கள், போரின் பலன்.

### 1. போர்

தேவனுடைய பிள்ளைகளுக்குப் பேராட்டமுண்டு. "மாம்சத்தோடும் ரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும்,

அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதி பதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு" மாம்சத்துக்குரிய போர்வீரரிடத்தில் விளங்கும் வீரதீரத்தை ஆவிக்குரிய போர்வீரர் கவனிப்பது நல்லது. யுத்தத்தில் வெற்றியடையும்படி அவர்கள் எவ்வளவு ஆயத்தம் செய்கிறார்கள்! இந்தப் போருக்கென்று தங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து விடுகிறார்கள். தங்கள் அருமையான மனைவி பிள்ளைகளை மனப்பூர்வமாய் விட்டுப் பிரிகிறார்கள். சேனாபதியின் சொல்லுக்குக் கீழடங்கி அணியணியாகச் சேர்ந்து எத்திசை போக வேண்டுமோ அத்திசை முன்னேறிச் செல்லுகிறார்கள். தங்கள் பிராணனையும் அவர்கள் அருமையாக எண்ணுகிறதில்லை. தங்கள் வீடுகளுக்குத் திரும்புவோமென்கிற நிச்சயமில்லை. எவ்வளவோ ஏராளமான பணங்களை இந்தப் போருக்காக உற்சாகமாய்க் கொடுத்து விடுகிறார்கள்.

இயேசுவின் போர்வீரராகிய நாம் வெட்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். ஐயோ! நாம் எவ்வளவு அபாத்திரர். போர்வீரர் என்னும் பேர் நமக்குத் தகுமோ? போர்வீரர்களுக்குள் ஐக்கியமில்லை. சேனாதிபதிக்குக் கீழ்ப்படியும் சிந்தையில்லை. முன்னேறிச்செல்ல தைரியமில்லை. சமூலமாய் நம்மைப் பிரதிஷ்டை செய்யவுமில்லை. சத்துருவின் தந்திரங்களை நாம் கவனிக்கிறதில்லை. தேவனுடைய ராஜ்யத்துக்காகச் செலவழிக்கவும் செலவழிக்கப்படவும் நமக்கு மனதில்லை. இயேசு ராஜா மகிமைப்பட வேண்டுமென்கிற நாட்டமில்லை. இன்னும் எவ்வளவோ குறைவுகள் நம்மிடத்திலுண்டே! இப்படிப்பட்ட நம்மையும் தமது போர்வீரராக வைத்திருப்பது என்ன அதிசயம்! ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு சகல மகிமையும் அவருக்கே உண்டாகத்தக்கதாக இப்படிப்பட்ட பலவீனரையும், கோழைகளையும் ஒன்றுக்கும் உதவாதவர்களையும் தமது சேனையில் சேர்ந்து அவர்களை நடத்தி அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுப்பது அவருடைய திருவுளத்திற்குப் பிரியமாயிருக்கிறது.

இயேசு ராஜாவின் கொடியின் கீழ்நின்று ஆத்துமாக்களை ரட்சிப்பதற்கு ஆயிரக்கணக்கான போர்வீரர் சேனை

சேனையாகப் புறப்பட்டால் எவ்வளவு மாட்சிமையாயிருக்கும்; நம்மையும் நமது செல்வம் பலம் யாவற்றையும் ராஜாவின் பாதத்தில் காணிக்கையாகப் படைத்துவிட்டு, அவருடைய ராஜ்யத்துக்காக யுத்தஞ்செய்வோமானால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்! நமக்கு அருமையானவர்களை ஆண்டவரின் பாதுகாப்புக்கு ஒப்புவித்து, நமது பிராணனையும் அருமையாய் எண்ணாமல் சுவிசேஷ ஊழியத்துக்காகப் போராடுவோமானால் பலன் எவ்வளவு மிகுதியாயிருக்கும்! நமது சத்துருவாகிய சாத்தானின் தந்திரங்களையும் மறைவிடங்களையும் அறிந்து அவனுக்குச் சற்றும் இடங் கொடாமல் தைரியமாய் அவனுக்கு எதிர்த்து நிற்போமானால் ஜெயம் எவ்வளவு பெரிதாயிருக்கும்! போரில்லாமல் ஜெயமில்லை. சிலுவையில்லாமல் கிரீடமில்லை என்கிற சத்தியத்தை மனதில் வைத்துக்கொள்வோமாக.

**2. போராயுதங்கள்**

போருக்குப் போராயுதங்கள் வேண்டும். பல வகையான போராயுதங்கள் உண்டு. சில போராயுதங்கள் போர்வீரர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மற்றவைகள் சத்துருக்களை நிர்மூலமாக்குகிறதற்கும் உதவும். நம்முடைய போர் மாம்சத்துக்குரிய போரல்ல. நமது போராயுதங்களும் மாம்சத்துக்கேற்றவைகளல்ல. ஆகிலும் மாம்சத்துக்குரிய போராயுதங்களைப் பார்க்கிலும் ஆவிக்குரிய போராயுதங்கள் அதிகப் பலமுள்ளவைகள். ஏனென்றால் அவைகள் மனுஷனால் உண்டானதல்ல. தேவனால் உண்டான தேவபலமுள்ள போராயுதங்களாயிருக்கின்றன. இந்தப் போராயுதங்களைக் குறித்தும் அவைகளைத் தரித்துக் கொள்ளவேண்டிய விதத்தைக் குறித்தும், அப்போஸ்தலன் எபேசியர் 6-ல் விவரமாய்ச் சொல்லியிருக்கிறார். அதிலே இடுப்புக்குக்கச்சையுண்டு, மார்புக்கு மார்க்கவசமுண்டு. கால்களுக்கு பாதரட்சையுண்டு, ஒரு கைக்கு கேடகமுண்டு, மறுகைக்கு பட்டயமுண்டு, தலைக்கு தலைச்சீராவுண்டு. ஆனால் முதுக்கோ ஆயுதத்தைக் காணோம். கிறிஸ்தவ போர்வீரன் சத்துருவுக்கு முதுகுகாட்டவே கூடாதென்பது சேனாபதியின் தீர்மானம் ஆனபடியால் முதுகுக்கு ஆயுதம் கொடுக்கப்படவில்லை.

இப்பொழுது ஆயுதங்களின் விவரங்களைச் சுருக்கமாய் பார்ப்போம்.

***(1) சத்தியம் என்னும் கச்சை:*** அரையில் கட்டப் பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவைக் குறித்து: "நீதி அவருக்கு அரைக்கட்டு, சத்தியம் அவருக்கு இடைக் கச்சையுமாயிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஏசா. 11:5) சேனாபதியைப்போலவே அவருடைய சேனைக்கும் அரைக்கச்சை கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவானவர் சத்தியமும், சத்தியத்தைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவரு மாயிருக்கிறார். போர்வீரன் உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும். கர்த்தர் உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறார். உள்ளான மனுஷருடைய இடுப்புக்குப் பெலன் சத்தியமே. "என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்களென்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்று யோவான் சொன்னார்.

***(2) மார்பைக் காக்க வேண்டிய ஆயுதம் நீதி:*** சுயநீதியாகிய அத்தி இலையும் அழுக்குக் கந்தையும் ஒன்றுக்கும் உதவாது. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால், நாம் கிருபையாகப் பெற்றுக் கொண்ட தேவநீதியே நமது மார்பைக்காக்கக்கூடிய மார்க்கவசம். பெரும்பாவியாயிருந்த நான் என் ரட்சகர் மூலமாய் நீதிமானாக்கப்பட்டேன் என்கிற நம்பிக்கையை உடைக்க சாத்தானின் சேனையால் கூடாது.

***(3) சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை:*** கோலியாத் வெண்கலப் பாதரட்சை தரித்திருந்தான். லேசாய்க் கிழிந்து போகக்கூடிய சாதாரணமான பாதரட்சை போருக்கு உதவாது. கல் இடறியோ, கூர்மையான ஆணிகள் பாய்ந்தோ, காலில் காயமுண்டாகுமானால் போர்வீரன் நொண்ட வேண்டியதாகும். ஆகையால் போருக்கேற்ற பலமான பாதரட்சைகள் வேண்டும். அது சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னம் பாதரட்சை என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவசமா தானத்தைப் பெற்றுக் கொள்ளாதவன் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஆயத்தமுள்ளவனல்ல. "உங்களி லிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு

சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று பேதுரு சொல்லியிருக்கிறார். *(1 பேதுரு 3:15)* தேவனே நான் ஆயத்தமாயிருக்கிறேன். என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது என்று சங்கீதக்காரன் சொன்னதுபோல் நாமும் பாடவோ, ஜெபிக்கவோ, புத்தி சொல்லவோ, பிரசங்கிக்கவோ, வேறெந்த நன்மைசெய்யவோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இதுவே நம்முடைய கால்களுக்குப் பலமான பாதரட்சை.

***(4) விசுவாசம் என்னும் கேடகம்:*** இது கையில் பிடித்து நிற்க வேண்டிய பிரதான ஆயுதம். எல்லா ஆயுதங்களிலும் இது மேலானது. மார்க்கவசம் முக்கியந்தான். ஆனால் இதுவோ எப்பக்கத்துக்கும் உதவக்கூடிய இணையில்லா ஆயுதம். பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் இந்தக் கேடகம் அவித்துப் போடக் கூடியது. சத்துருவின் சோதனைகள் அஸ்திரத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அஸ்திரம் மகா வேகமாய் பாயக்கூடியதும் படுகாயப்படுத்தக் கூடியதுமான ஆயுதம். பின்னும் அது அக்கினியாஸ்திரம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சர்ப்பங்களில் கொள்ளி வாய்ச் சர்ப்பங்கள் அக்கினி போன்ற விஷமுள்ளவை. அதினால் கடியுண்டவன் எரியுது எரியுது என்று கதறுவான். அக்னியாஸ்திரங்களம் அதைப் போலவே கொடிய விஷமுள்ளவை. அது போர்வீரனைக் காயப்படுத்தி அக்காயத்தில் விஷத்தை ஊற்றிக் கொல்லக் கூடியதாயிருக்கிறது. சாத்தான் வேகமாய் அனுப்பின பொல்லாத சிந்தனைகள் நமதிருதயத்திலும் பாய்ந்து நரகத்தீயை அங்கே கொளுத்துவதால் உண்டாகும் வேதனை கொஞ்சமல்ல. என்றாலும் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கின பார்வை, கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் விஷத்தை அவித்து, மரணத்தை அகற்றிவிட்டதுபோல், அருமை ரட்சகரை நோக்கும் விசுவாசப் பார்வையினால் எப்பேர்ப்பட்ட அக்கினியாஸ்திரங்களும் அவிந்து போகக் கூடும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; விசுவாசமாகிய கேடகத்தைப் போர்வீரன் எக்காலத்திலும் பிடித்தவனாக நிற்க வேண்டும்.

***(5) இரட்சணியமென்னும் தலைச்சீரா:*** முழுச்சரீரத்துக்கும் சிரசே பிரதானம். தலையைக் காப்பாற்ற ஆண்டவர் தலைச்சீராவைக் கொடுத்தார். இதை இன்னும் தெளிவாக *1 தெச. 5:8*ல் இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீரா வென்று அப்போஸ்தலன் அழைக்கிறார். ரட்சிக்கப்பட்டிருக்

கிறேன் என்கிற நிச்சயம் போர்வீரனுக்கிருக்க வேண்டும். அந்த நிச்சயமில்லாதவன் போர்வீரனாக மாட்டான். போரில் ஜெயிக்கவுமாட்டான்.

***(6) தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்:*** இதுவரை நாம் பார்த்த போராயுதங்கள் போர்வீரனைக் காக்கக் கூடியவைகள். பட்டயமோ சத்துருவை சங்கரிக்கக்கூடியது. சேனாதிபதி வனாந்தரத்தில் தம்மை எதிர்த்த சத்துருவை இந்த ஆயுதத்தைக் கொண்டே மேற்கொண்டார். தேவவசனமாகிய பட்டயத்தைப் பிடிக்க, உபயோகிக்க நாம் நன்றாய்ப் பழகவேண்டும். ஆவியானவரால் நாம் போதிக்கப்படவேண்டும். இருபுறமும் கருக்குள்ள இந்தப் பட்டயம் போர்வீரனுடைய கையை விட்டு நீங்கலாகாது. இவைகள் எல்லாவற்றோடும் இன்னும் ஒரு காரியத்தை நாம் கவனிக்கவேண்டும். நம்முடைய சேனாதிபதி யாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனை நோக்கி பரிசுத்தவான்களாகிய சகல போர்வீரரையும் அவர் ஆசீர்வதிக்கவும், இந்தப் போரில் நமக்கு வெற்றி கொடுக்கவும் ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும்.

### 3. போரின் பலன்

மாம்சத்துக்குரிய போரின் பலன் எவ்வளவு பயங்கரம்! மாம்ச போராயுதங்கள் கண்காணக்கூடிய பிரம்மாண்டமான கோட்டைகளையும், பலத்த அரண்களையும், மனுஷன் வாசஞ்செய்யும் அழகான வீடுகளையும் நிர்மூலமாக்கி விடுகின்றன. போர் நடக்கும் பட்டணம் பாழாய்ப்போகும். ஆயிரக்கணக்கான மனுஷர் தங்குவதற்கிடமில்லாமலும், சாப்பிட உணவில்லாமலும் ஏங்கித் தவிப்பார்கள். எத்தனையோ மனுஷர் கைகால்கள் இழந்து சரீரத்தில் பலவிடங்களிலும் காயப்பட்டுக் குற்றுயிராய் விடப்படுவார்கள். இன்னும் அநேகர் குண்டுகள் பட்டும் பட்டயத்தால் வெட்டுண்டும் பிரேதங்களா வார்கள். தங்கள் உயிருக்குயிரான புருஷரை இழந்த நேசமனைவிகளின் துயரம் எவ்வளவு! அருமைத் தகப்பன் மாரை இழந்த பிள்ளைகளின் புலம்பலும் அழுகையும் எவ்வளவு? மனுஷனுடைய பாவத்தின் தண்டனைகளில் யுத்தம் மகா கொடூரமானது. வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டாம் முத்திரை உடைக்கப்பட்டபோது சிவப்பு குதிரை புறப்பட்டது. மூன்றாம் முத்திரை உடைக்கப்பட்டபோது கருப்பு

குதிரை புறப்பட்டது. நான்காம் முத்திரையில் மங்கின குதிரை புறப்பட்டது. இதில் சிவப்பு யுத்தத்திற்கும், கருப்பு பஞ்சத்திற்கும், மங்கல் சாவுக்கும் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே யுத்தமுண்டோ, அங்கே பஞ்சமும், சாவுமுண்டு. தாவீது இஸ்ரவேலரைத் தொகையிட்டபோது, கர்த்தர் இந்த மூன்று தண்டனைகளையும் அவருக்கு முன்வைத்து ஒன்றைத் தெரிந்து கொள்ளச் சொன்னார். அப்போது தாவீது நான் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன் என்று புலம்பினார்.

ஆவிக்குரிய போரின் பலனோ அளவிலடங்காத ஆசீர்வாதம். கெட்டுப்போன பாவிகள் தேவனுடைய மகிமையான ரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி செய்வதே இந்தப் போரின் நோக்கம். இந்தப் போரின் மூலமாய் அந்தகாரத்திலிருந்த அநேகர் ஆச்சரியமான ஒளியைக் கண்டிருக்கிறார்கள். தேவபகைஞராயிருந்த அநேகர் அவரோடு சமாதானம் பெற்றிருக்கிறார்கள். செத்த நிலைமையிலிருந்த அநேகர் நித்திய ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்கள். பிசாசின் மக்களெனச் சொல்லப்பட்ட அநேகர் தேவபுத்திரரா யிருக்கிறார்கள். பிசாசின் சிறைகளாயிருந்த அநேகர் இயேசுவுக்கு உத்தம ஊழியர்களாயிருக்கிறார்கள். இந்தப் போர் மண்ணுக்குரியவர்களை விண்ணுக்குரியவர்களாக்கியிருக்கிறது. மாமிசதேகிகளை மகிமையான தேகிகளாக்கியிருக்கிறது. உலக மக்களை பரம சுதந்தரராக்கியிருக்கிறது. நரகத்துக்குரியவர்களை மோட்சவாசிகளாக்கியிருக்கிறது. இன்னும் என்ன சொல்லலாம்? இந்தப் போர் அநேகருடைய கண்ணீரைத் துடைத்து ஆறுதல் படுத்தியிருக்கிறது. கவலை விசாரத்தை நீக்கி மெய்ச் சமாதானத்தைக் கொடுத்திருக்கிறது. விதவைகளைத் தேற்றி, ஏழைப்பிள்ளைகளை ஆதரித்து, பேதைகளை ஞானியாக்கி, மிலேச்சர்களை உயர்த்தியிருக்கிறது. ஆ! சுவிசேஷ ஊழியத்தின் போர் எவ்வளவு மாட்சிமையுள்ளது? ஆவிக்குரிய இந்தப்போர் கிறிஸ்துவினாலும் அவருடைய உத்தம போர்வீரராலும் நடத்தப்பட்டிராவிட்டால் இந்த உலகத்தின் கதி எப்படியிருக்கும்? பலவானின் கையிலிருந்து பாவிகள் எப்படி விடுவிக்கப்படுவார்கள்?

கிறிஸ்துவின் போர்வீரராகிய தேவனுடைய பிள்ளைகளே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக் கொண்டு சேனாபதியைப் பின் செல்லுவோமாக.

இந்தப் போரில் பல கஷ்டங்கள் உண்டு. 'நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி' என்று அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதினார். எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காக்க கர்த்தர் கூடயிருக்கிறார். யுத்தத்தில் எந்தப் பக்கம் பலமாயிருக்கிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்து கொள்வது இயல்பு. ஆவிக்குரிய இந்தப் போரில் எந்தப் பக்கம் ஜெயமுண்டாகுமோவென்று நாம் சந்தேகிக்க வேண்டிய தில்லை. இயேசுவே ஜெயிப்பார்! இயேசுவே ஜெயிப்பார் என்று பரலோகம் பாடுகிறது. இயேசுவே ஜெயிப்பார் என்று மறுமைக்குட்சென்ற திரளான சாட்சிகள் பாடுகிறார்கள். இயேசுவே ஜெயிப்பார் என்று பாலியர் சேனை பாடுகிறது. இயேசுவே ஜெயிப்பார் என்று சாத்தானும் சொல்லுகிறான். ஆம், இயேசுவே ஜெயிப்பார் அவர் வல்லமையும் பராக்கிரமு முள்ள கர்த்தர். அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவர். நாம் அற்பராயிருந்தாலும் அவரைப் பின்சென்று போவோமே யானால் அவருடைய ஜெயம் நம்முடைய ஜெயமாகும். அவருடைய ஆளுகையிலும் மகிமையிலும் நமக்குப் பங்குண்டாகும். அவருடைய வெற்றி அவருடைய சேனைக்கு வெற்றி. யார் இந்த ராஜாவைச் சேவியாமலும் அவருக்காகப் போர் செய்யாமலும் இருக்கலாம்?

## 56. ஓடுவோம்

**"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமான இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி. 12:1).**

கிறிஸ்தவ ஜீவியம் ஓர் ஓட்டம். அது இருக்கிறதல்ல, நிற்கிறதல்ல, நடக்கிறதல்ல. "நீங்கள் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுங்கள்" "நன்றாக ஓடினீர்களே, தடைசெய்தவன் யார்?" பவுல் தம்மைக் குறித்து "ஓட்டத்தை முடித்தேன்" என்றும், தீமோத்தேயுவைப் பார்த்து: "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டு ஓடு" என்றும் சொன்னார். கிறிஸ்துவைக் குறித்து; "நமக்கு முன்னோடினவராகிய இயேசு" என்று இந்த நிருபத்திலேயே சொல்லியிருக்கிறது. அந்த இயேசுவைப் பார்த்து, அதாவது முன்னோடினவராகிய

அவர்மேல் நமது கண்களை ஊன்றி நாமும் நமது ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடவேண்டும். ஓடுதல் என்பது காலோட்டம் அல்ல. கிறிஸ்து ஒரு போதும் அவ்வாறு ஓடினவரல்ல. ஓட்டம் என்பது ஆவிக்குரிய முயற்சியைக் குறிக்கும். சகலத்தையும் மறந்து பந்தயத்தை நோக்கி ஓடுகிறவனைப்போல, நமது இலக்காகிய கிறிஸ்துவை நோக்கி நாம் தொடர வேண்டும். இந்த ஓட்டத்திற்கு ஆண்டவரே நமக்கு மாதிரி.

### 1. கிறிஸ்துவின் விசுவாச ஓட்டம்

ஆண்டவர் பலத்த விசுவாசி. தமது விசுவாச ஜீவியத்தைத் தொடங்கி வெற்றியுடன் முடித்தார். நம்மைப்போல் விசுவாசப் பிரமாணத்தை அவர் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. விசுவாசிக்கிறேன் என்று சொல்லும் நம்மிடத்தில் விசுவாசமில்லையே. ஆண்டவருடைய ஜீவியத்தின் விசுவாசம் என்கிற வார்த்தையைக் காணோம். ஆனால் அவருள்ளம் விசுவாசத்தால் நிறைந்திருந்தது. கடிகாரத்தின் மறைவான வில் நேரங்காட்டும் வேலையை நடப்பிக்கிறதுபோல, அவருடைய விசுவாசம் அவர் நடப்பித்த கிரியைகளில் விளங்கினது. பிதாவிடத்தில் பூரண நம்பிக்கையுள்ளவராயிருந்தார். இது கடவுள் மீதுள்ள அன்பு, ஐக்கியம், கீழ்ப்படிதலில் விளங்கினது. "இவன் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்தானே" என்று சத்துருக்களும் சொல்லத்தக்கதாக, தமது பிதாவினிடத்தில் அவ்வளவு பூரண பற்றுதலுடையவராயிருந்தார். அது மாத்திரமல்ல, மனுமக்களிடமும் அவர் நம்பிக்கை வைத்தார். "பண்டிகையில் அநேகர் அவர் நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். ஆனால் அவரோ அவர்களை நம்பி இணங்கவில்லை." என்று சொல்லியிருப்பது உண்மைதான். அநேகர் விஷயத்தில் இன்னும் அவர் அப்படியே செய்கிறார். அது உண்மையான விசுவாசமல்ல. ஆனால் மொத்தத்தில் பாவிகள்மீது அவருக்கிருந்த நம்பிக்கை ஆச்சரியம். ஆகாதவர்கள் என்று தள்ளப்பட்ட மனுஷரை அன்போடு ஏற்றுக்கொண்டு அவர்களோடு எவ்வளவோ அந்நியோன்யமா யிருந்தார். அவர்கள் ராஜ்யத்தின் பிள்ளைகளாகக்கூடுமென்று நம்பினார். பாவங்களின் மத்தியில் மனுஷரிடம் எவ்வளவோ குறைகளைக் கண்டும் அவர் மனஞ்சோர்ந்து போகவில்லை. அவர்கள் பரிசுத்தவான்களாவார்களென்று நம்பினார். மறுதலிக்கும் கோழைப் பேதுருவைப்பார்த்து: நீ கன்மலை

என்கிறார். இதுவே அவர் நம்பிக்கை. நம்மை இருக்கிறபடி பாராமல், நாம் எவ்விதம் மாறக்கூடும் என்பதையே பார்க்கிறார். இந்த விசுவாசத்தினாலேயே நமக்காகச் சகல பாடுகளையும் ஏற்றுக்கொண்டார். வருங்காலத்தைப்பற்றியும் விசுவாசமுள்ளவராயிருந்தார். அவர் கண்களுக்கு முன்பாகச் சகலமும் தாறுமாறாகத் தோன்றினபோதும், சீஷரில் ஒருவன் காட்டிக்கொடுக்க, வேறொருவன் மறுதலிக்க, மற்றவர்கள் ஓட்டம்பிடிக்க நேரிட்டாலும், உலகமே தம்மைப் பகைத்து சிலுவையிலறைந்து கொன்றாலும் முடிவு வெற்றியாயிருக்கும் என்பது அவர் பூரண நம்பிக்கை. வியாழன் இரவில் சகலமும் அந்தகாரமாயிருக்கும் சமயத்தில் வாசஸ்தலங்களைக் குறித்தும், உலகம் தம்மை விசுவாசிப்பதைக் குறித்தும் பேசுகிறார். கடவுள் மீதுள்ள நம்பிக்கையும், மனுஷர் மீதுள்ள நம்பிக்கையும் சேர்ந்து வருங்காலத்தைப்பற்றிய நம்பிக்கையை அவருக்குக் கொடுத்தது.

## 2. அவருடைய விசுவாச ஓட்டத்துக்குத் தூண்டுதல் எது?

"தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" அதுவே அவர் நாடி ஓடின பந்தயப் பொருள். அந்தச் சந்தோஷம் என்ன? இந்தப் பொல்லாத உலகை விட்டுச் சீக்கிரம் பிதாவிடம் போகிற சந்தோஷமா? அல்ல. தாம் வரும்போது வெறுமையாக்கி வந்த தமது மகிமையைத் திரும்பப் பெற்றுக் கொள்வோம் என்கிற சந்தோஷமா? அல்ல. எதைச் சந்தோஷமாகக் கருதி ஜீவித்தாரோ அது பூரணப்படுவதே அவரது சந்தோஷம். தேவ சித்தத்தையே தமது உயிராகக் கொண்டிருந்தார். உமது போஜனம் என்ன ஆண்டவரே? பிதாவின் சித்தப்படி செய்வதே. உமது இனத்தார் யார் ஆண்டவரே? என் பிதாவின் சித்தப்படி செய்கிறவர்களே. உமது ராஜ்யம் யாருக்கு ஆண்டவரே? என் பிதாவின் சித்தப்படி நடப்பவர்களுக்கே. நாம் சுவிசேஷத்தைப் படிக்கும்போது, தேவசித்தத்தை நிறைவேற்றுவதில் அவருக்கிருந்த பேராவலைக் காண்கிறோம். மொத்தத்தில் "என் சித்தப்படியல்ல. என் பிதாவின் சித்தப்படி செய்யவே வந்தேன்" என்பதே அவர் ஜீவியப்பிரமாணம். "தேவனே உமது சித்தப்படி செய்ய மகிழ்ச்சியாயிருக்கிறேன்" என்கிறார். அதுதான் சந்தோஷம். அந்தச் சித்தமாவது என்ன? சகல பாவங்களும் இடறல்களும் அகற்றப்பட்டு நீதியும் சமாதானமும் ஆளுகை செய்யும் ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும். மனுமக்கள் பரிசுத்தராகி

அவரது அன்பின் ராஜ்யத்தில் பங்கடைய வேண்டும். இதுவே அவர் கண்களுக்கு முன் வைக்கப்பட்ட சந்தோஷம். இந்தச் சந்தோஷமே அவரது விசுவாச ஓட்டத்துக்கு தூண்டுதல்.

**3. அவர் ஓடின விதம் எப்படி?**

"அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து" அவிசுவாசம் நிறைந்த உலகத்தில் விசுவாசி பாடுகளுக்குத் தப்பமாட்டான். மாம்சத்திற்குரியவர்கள் மத்தியில் ஆவிக்குரியவர் அவமானப் படாமல் முடியாது. ஓநாய்களுக்குள் அகப்பட்ட ஆடுபோல் நமதாண்டவர் பொல்லாதவர்களால் கொடிய வேதனைகளை அநுபவித்தார். அப்படியிருந்தும் அவர் எதிர்வழக்காடவில்லை. தமக்கு நேரிட்ட அவமானங்களை எண்ணாமல் அதாவது சட்டைபண்ணாமல், அவமானங்களை அவமதித்தார். இது நமக்கு மிஞ்சின காரியம். ஒருவேளை நாம் பொறுமையாய்ச் சகிக்கலாம். மனதுக்குள்ளே கஷ்டமாயிருந்தாலும் வாய் பேசாதிருக்கலாம். ஆண்டவரோ அவமானத்தை அவமதித்தார். அதைச் சற்றும் பொருட்படுத்தாது தமது காரியத்திலே கண்ணாயிருந்தார். அவர் சகித்த சிலுவை எது? பாவிகளால் தமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட விபரீதங்களே! அவர் விசுவாச ஓட்டத்தில் தம்மை எதிர்த்து நின்ற சகல தீமைகளையும் பொறுமையாய்ச் சகித்து வெற்றியடைந்தார். அவரைப் பின்செல்லும் அடியார்களுக்கும் ஓரளவில் இவ்வாறான விபரீதங்களில் பங்குண்டு.

**4. ஓட்டத்தின் பயன்**

"தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்." விசுவாசத்தைத் தொடங்கி அதைப் பூரணப்படுத்தினபோது ஆண்டவர் அடைந்த வெற்றி இதுவே. எல்லாக்கட்டுகளுக்கும் விலகினவராய், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ளவராய் வீற்றிருக்கிறார். வானத்திலும் பூமியிலுமுள்ள சகலமும் அவர் பாதத்திற்கு கீழ்ப்பட்டிருக் கின்றன. இவ்வாறு விசுவாசத்தில் வெற்றியடைந்த இயேசுவை நாம் நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும். அவரையே நினைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு காரியம். அவர் ஓடினபோது அவர் நோக்கிப் பார்த்து ஓட, அவருக்கு முன்னோடினவர் ஒருவருமில்லை. அல்லது அவரைத் தைரியப்படுத்தும்படி அவர் பக்கத்தில் ஓடினவர்களுமில்லை. அவர் ஒருவரே தனித்து ஓடினார். அதுதான் நாம் காணவேண்டிய ஆச்சரியமான காட்சி. இயேசுவை நோக்கி என்பது வெறும் பார்வையல்ல. சகலத்தையும் மறந்து அவர் ஒருவரையே ஆச்சரியத்தோடு பார்க்கும் பார்வையாகும். இவ்வாறு நமது விசுவாச ஓட்டத்திற்கு அவர் மாதிரியாயிருப்பதோடு, அவரே நமக்குள் விசுவாசத்தை உண்டாக்கி, அதைப் பூரணப்படுத்துகிற வருமாயிருக்கிறார். நாம் தனிமையாய் ஓடுவதில்லை. அவரே நமக்கு முன்மாதிரியாகவும், நமது பக்கத்தில் துணையாகவும், நமக்கும் நம்மை ஓடப்பண்ணும் ஜீவ சக்தியுமாயிருக்கிறார். இந்த ஓட்டத்தில் நமக்குப் பொறுமை வேண்டும். எத்தனையோ தீமைகள் நம்மைச் சூழ்ந்து நிற்கின்றன. நாம் அடிக்கடி தவறுகிறோம். சோர்ந்து போகக் கூடாது. பொறுமையினால் சகலத்தையும் மேற்கொண்டு ஓடவேண்டும். அப்படி ஓடினால் அவருடைய வெற்றியிலும் மகிமையிலும் நாமும் பங்கடைவோம்.

## 57. ஆண்டவர் பேரறிவு

***"கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்" (2 சாமு. 7:20).***

நாம் கடவுளை அறிய நாடுகிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவின் மேன்மைக்காக பவுல் எல்லாவற்றையும் குப்பையாக எண்ணினார். நமக்கும் அந்த ஆவலுண்டு. தேவ அறிவு நித்திய ஜீவன். "ஒன்றான மெய் தேவனை உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று ஆண்டவர் சொன்னார். ஆனால் கடவுள் அறிவு தானாக வராது. எப்படி அவர் நம்மில் வைத்த அன்பை நாம் அறிந்து அவரில் அன்பு கூறுகிறோமோ, அதுபோலவே அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவதாலே, அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தினாலே, அவர் நம்மை நடத்தும் அனுபவத்தின்

மூலமாய் நாம் கடவுளை அறிகிறோம். தாவீதைக் குறித்து தேவன் சொன்ன காரியங்களை தாவீது அறிந்தவுடன் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். "கர்த்தாவே! நீர் உமது அடியேனை அறிவீர்" ஆண்டவர் நம்மை அறிந்திருக்கிறார் என்பது நமக்கு எவ்வளவு ஆறுதல்! அவர் நமது காரியங்களை அறிந்திருக்கிறார் என்னும் நிச்சயம் நாம் அவரை அறிவதிலும் முக்கியமானது அவர் நடத்துதல் நமக்கு விளங்காதிருக்கலாம், ஆனால் நம்மைப்பற்றி ஆண்டவருக்கு எல்லாம் தெரியும் என்பது நமக்குள் நம்பிக்கையை உண்டாக்குகிறது.

## 1. கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் (2 தீமோ. 2:10)

தமக்குச்சொந்தமான பிள்ளைகளை பரமபிதா திட்டமாய் அறிந்திருக்கிறார். ஒரு மேய்ப்பனுக்குத் திரளான ஆடுகளிருந் தாலும், அவைகளை ஓர் மந்தையாக அல்ல. மொத்தமாக அல்ல, ஒவ்வொரு ஆட்டையும் அவன் திட்டமாய் அறிந்திருக்கிறான். அதனதன் அடையாளக் குறிப்புகள் குணபேதங்கள், பலவீனங்கள் முதலியவைகளை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் அவைகளை நடத்துகிறான். ஆண்டவரும் தமது பிள்ளைகளைப் பேர்பேறாக அறிந்திருக்கிறார். ஒருவரை இன்னொருவரைப்போல் இருக்கும்படி அவர் எதிர்பார்க்கிற தில்லை. ஒவ்வொருவரையும் தனித்தனியே அறிந்து நடத்துகிறார். அவர்கள் பலவீனங்கள், கவலைகள், பாவங்கள், போராட்டங்கள் அவருக்குத் தெரியும். அவர்களை அடித்துக் கால்களை ஒடிக்காமல் தூக்கிச் சுமக்கும் அனுதாபமுள்ள மேய்ப்பனாயிருக்கிறார். மனுஷர் ஒருவரையொருவர் சரியாய் அறியாததினாலேதான் தப்பெண்ணங்களும் சமுசயங்களும் ஏற்படுகின்றன. ஆண்டவரோ நம்மை உள்ளபடி அறிந்திருக்கிறார். நாத்தான்வேல் அவரிடம் வந்தபோது "இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்றார். நீர் என்னை எப்படி அறிவீர்? என்று நாத்தான்வேல் கேட்டார். அத்திமரத்தின் கீழ் உன்னைக் கண்டேன் என்றார். உடனே நாத்தான்வேல் பரவசமடைந்து "ரபீ, நீர் தேவனுடைய குமாரன் இஸ்ரவேலின் ராஜா" என்றார். நாத்தான்வேலின் ஆச்சரியம் அத்திமரத்தின் கீழ் உன்னைக் கண்டேன் என்பதல்ல. அப்பக்கம் யாராவது போயிருந்தால் அவர்களும் கண்டிருப்பார்கள். ஆண்டவர் அவ்வாறு கண்டு சொன்னவரல்ல. "கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்ற வார்த்தைகளே நாத்தான்வேலுக்கு

ஆச்சரியத்தை உண்டாக்கினது. மரத்தின்கீழ் நடந்த உள்ளான போராட்டத்தை இவர் எப்படி அறிந்தார்? நான் கபடும் கேடுபாடுமான இழிவான சிந்தையிலிருந்து மேலான சிறந்த குணத்தை அடையும்படியல்லவோ போராடினேன். அதை இவர் அறிந்து கொண்டாரே. அப்படியானால் இவர் யார் என்பதே நாத்தான்வேலின் ஆச்சரியம். ஆண்டவர் தமக்குச் சொந்தமானவர்களை அறிந்திருக்கிறார், நமது காரியங்கள் யாவும் அவருக்குத் தெரியும். நாம் அவருக்குச் சொந்தமானதால் மேய்ப்பன் தன் ஆடுகளைக் காப்பாற்றுவதுபோல இவரும் நம்மைக் காப்பாற்றுகிறார்.

**2. கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிவார் (நாகூம் 1:7)**

எருசலேம் பண்டிகையில் அநேகர் அவர் நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். ஆண்டவரோ அவர்களை நம்பி இணங்கவில்லை. இன்றும் அப்படியே. விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகிற அநேகரில் அவருக்கு விசுவாசம் கிடையாது. ஏனென்றால் அவர்கள் அறிக்கை அறிவேயன்றி இருதய பற்றல்ல. ஆண்டவரை உறுதியாய்ப் பற்றிப் பிடிப்பதே உண்மையான விசுவாசம். வேறொன்றிலும் பற்றுதல் வைக்காமல் தம்மையே நம்பியிருக்கிறவர்களை அவர் அறிவார். அவர்கள் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் அவரை நம்பிப் பிழைக்கிறார்கள். ஆண்டவர் அந்த நம்பிக்கையை கனம் பண்ணுகிறார். "அவரை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவர்கள் அவரையே நம்பிக் கொண்டிருப்பதால் அவர் அவர்களைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்கிறார்" (ஏசா. *26:3*). கர்த்தர்மேல் நமக்குச் சரியான நம்பிக்கையில்லை. காணப்படுகிற மனுஷர், காணப்படுகிற காரியங்களே நமது கவனத்தை ஆண்டு கொள்ளுகின்றன. பக்கத்தில் உள்ளவைகளில் நமக்குள்ள பற்றுதல் பரமபிதாவின் பேரில் இல்லை. காரியங்கள் வாய்ப்பது சந்தோஷமும், அவைகள் தவறுவது துக்கமுமாயிருக்கிறது. நமது கலக்கம், ஆத்திரம், பதஷ்டம் நாம் கர்த்தரைச் சரியாய் நம்பவில்லை என்பதற்கு அடையாளங்கள். கர்த்தர் தம்மை உறுதியாய் நம்பும் பிள்ளைகளை அறிந்திருக்கிறார். அவர்களை இந்த மாறுதலுள்ள உலகத்தில் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்ளுகிறார். வேத ஆராய்ச்சியும், தனி ஜெபமும் நமக்குள் நம்பிக்கையை உண்டாக்கும்.

### 3. தேவபக்தியுள்ளவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:9)

இங்கே ரட்சிக்க என்கிற வார்த்தை பாவ மன்னிப்பை அல்ல. ஆபத்து அழிவினின்று காப்பாற்றுவதாகும். ஏனென்றால் பேதுரு வரிசையாய் மூன்று அழிவுகளைச் சொல்லி உடனே கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார் என்கிறார். பாவஞ்செய்த தூதர்கள் ஆக்கினை அடைந்தார்கள். அவபக்தியுள்ள பூர்வ உலகத்தார் ஜலப்பிரளயத்தால் அழிந்தார்கள். அக்கிரமக்காரரான சோதோம் கொமோராப் பட்டணத்தார் அக்கினிக்கு இரையானார்கள். ஆனால் தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் ரட்சித்தார். சோதோம் அழிவிலிருந்து லோத்தை ரட்சித்தார். தேவபக்தியுள்ளவர்களைக் காப்பாற்ற அறிந்திருக்கிறார். உலகம் கொடிய அழிவுக்குச் சமீபிக்கிற தென்பது நிச்சயம். தேவவாக்கு அப்படியே கூறுகிறது. பூகம்பங்களாலும் அக்கினி பொங்குவதாலும் பூமியில் உண்டாகிற அழிவு கொஞ்சமல்ல. நமது தலைமுறையில் அடுக்கடுக்காய் எத்தனையோ ஆபத்துக்கள் பூமியில் சம்பவித்திருக்கின்றன. **1931**-ம் வருடம் பிப்ரவரி மாதம் நியுஜீலண்டு தீவில் நேரிட்ட பூகம்பத்தால் உண்டான அழிவு பயங்கரம். பூமியின் உட்பாகத்தில் அதிகப் பிளப்புகள் உண்டாயிருக்கின்றனவென்று சாஸ்திரிகள் கூறுகிறார்கள். மனுஷருடைய காரியங்களும் மோசமாகவேயிருக்கின்றன. கடவுளை மறுப்பவர்களும் கிறிஸ்துவை இகழ்வோரும், வேதப் புரட்டரும், சபைகளைத் தூஷிக்கிறவர்களும் ஏராளமாய்ப் பெருகுகிறார்கள். இவர்கள் கிறிஸ்து மார்க்கத்தில் பிறந்து வளர்ந்தார்களே. சாஸ்திர அறிவு சாத்தான் கைவசமானதால் அழிவின் கருவிகள் ஏராளமாகப் பெருகின. கடந்த யுத்தம் அவ்வளவு பயங்கரமானதல்ல. திடீரென உலகயுத்தம் ஆரம்பிக்குமானால் ஒரு நிமிஷத்தில் உண்டாகும் அழிவைக் கணக்கிட முடியாது. "பூமியின்மேல் மிகுந்த இடுக்கண் உண்டாகும்" ஆகிலும் கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை அழிவிலிருந்து ரட்சிக்க அறிந்திருக்கிறார்.

### 4. கர்த்தர் தமது பிள்ளைகளைப் பராமரிக்க அறிந்திருக்கிறார் (மத். 6:8,32)

இவ்வுலகில் நமது பிழைப்பு அதிகக் கஷ்டமாகிவிட்டது. என்னத்தைப் புசிப்போம்? என்னத்தை உடுப்போம்? எங்கு

குடியிருப்போம்? எப்படிப் பிழைப்போம்? என்கிற கவலைகள் நாள்தோறும் நம்மைப் பாரப்படுத்துகின்றன. அருமை ரட்சகர் சொல்லுகிறார். "உங்கள் பிதாவைநோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுமுன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். இவைகளையெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்?" நமக்காக உயிரைக் கொடுத்த அன்புள்ள ரட்சகர் சொல்லும் வாக்கு நம்மைத் தைரியப்படுத்தாவிட்டால் வேறு எங்கே நமக்கு ஆறுதல் கிடைக்கும்? நமது சரீரத்துக்கு வேண்டியவைகளை அவர் கொடுக்காவிட்டால் மோட்சத்தைக் கொடுப்பாரென்பதில் என்ன நிச்சயம்? ஆண்டவர் பொய் சொல்லமாட்டார். அவரிடத்தில் அன்புவைத்து, அவரது ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடும் பிள்ளைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுக்க அவர் உத்தரவாதியா யிருக்கிறார். நாம் பாவத்தில் நடந்து, நமது சுய இஷ்டப்படி காரியங்களை நடப்பிக்கத் துணிவோமானால், அவரை விட்டு விலகிப்போகிறோம். அவர் பராமரிப்பு, நமக்குக் கிடைப்ப தில்லை. ஆனால் ஆண்டவர் மகிமைக்கென்று பிழைக்கும் பிள்ளைகளை அவர் கைவிட்டாரென்று இதுவரை நாம் கேட்டதில்லை. அவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைக் கொடுக்க அவர் கடனாளியாயிருக்கிறார். வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் தவறமாட்டார்.

"தேவை" "வேண்டியவைகள்" என்னும் இரண்டு வார்த்தைகளையும் கவனிக்க வேண்டும். பேராசை கூடாது. அவர்களைப் போலிருக்கவேண்டும். இவர்களைப்போலிருக்க வேண்டும், என்னும் ஆசை அதிருப்தியையும் வீண் கவலைகளையும் உண்டாக்கும். நமது சம்பாத்தியம், போஷிப்பு, உடை, குடியிருப்பு, எப்படியிருந்தால் நமது ஆத்தும வாழ்வுக்கு அனுகூலமோ, அவ்விதமாகவே ஆண்டவர் நமக்குக் கொடுத்து நம்மை நடத்துவார். நமது தேவை கிடைத்தால் அதுவே நமக்கு ஆசீர்வாதம். தேவைக்கு மிஞ்சினது நம்மைக் கெடுக்கும். ஓர் அளவான நிலைமையிலிருக்கையில் தேவபக்தியாய் ஜீவித்தவர்கள், கையில் பணம் பெருகவே அவபக்தர் களானதை நாம் அறிவோம். "போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" ஐசுவரியவான்கள் பட்டினியாய் கிடந்ததுண்டு; கர்த்தருடைய பிள்ளைகளுக்கோ ஒரு நன்மையும் குறைவாயிருந்ததில்லை.

# 58. நடவாத வழி

**"இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை" (யோசுவா 3:4)**

இஸ்ரவேல் புத்திரருக்கும் நமக்கும் பழக்க வழக்கங்களிலும் உடை நடை பாவனைகளிலும் இன்னும் பலவகையிலும் மிகுந்த பேதமுண்டென்பது உண்மையாயினும், ஜீவியத்துக் கடுத்த விஷயத்தில் நாமும் அவர்களும் ஒன்றுதான். அவர்களுடைய வனாந்தரப் பிரயாணம் புது வருஷத்தில் பிரவேசிக்கிற நமக்கு எவ்வளவோ போதனை நிறைந்ததாயிருக்கிறது. கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்து அடக்கம்பண்ணப்பட்டார். நூனின் குமாரர் யோசுவாவை கர்த்தர் தெரிந்து கொண்டு மோசேக்குப் பதிலாக ஏற்படுத்தினார். இஸ்ரவேலர் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நடத்தவேண்டியது யோசுவாவின் வேலை. ஜனங்கள் சித்தீமிலிருந்து பிரயாணம்பண்ணி யோர்தான் நதிக்கரை வந்து சேர்ந்தார்கள். நதியைக் கடக்கு முன்னே யோசுவா ஜனங்களைப் பார்த்து 'இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை' என்கிறார். வனாந்தர ஜீவியத்தை முடித்து நல்ல தேசத்தை நோக்கினவர்களாய் நிற்கிறார்கள். பழைய வருடத்தைக் கடந்து புது வருடத்தின் ஓரத்தில் நிற்கிற நமக்கும் இவை ஏற்ற வார்த்தைகளே புது வருடம் நமக்கு முன் நிற்கிறது. அதில் அநேக மாதங்களும் வாரங்களும் நாட்களுமுண்டு. ஆகிலும் அது இதற்கு முன்னே நாம் ஒருபோதும் கடவாத வழி என்பது நிச்சயம்.

இரண்டு காரியங்களை எடுத்துத் தியானிப்போம். முதலாவது, புது வருடத்தைப்பற்றிய அநிச்சயம். இரண்டாவது புது வருடத்தைப்பற்றிய நிச்சயம்.

## 1. புது வருடத்தைப்பற்றிய அநிச்சயம்

இதோ யோர்தான் நதிக்கரையில் நிற்கும் ஜனங்களைப் பாருங்கள். வாக்குத்தத்த தேசத்தை நோக்கினவர்களாக நிற்கிறார்கள். ஆனாலும் ஒருபோதும் அவ்வழியாக இதற்குமுன் அவர்கள் போனவர்களல்ல. நாற்பது வருடங்களுக்கு முன்

இவர்கள் இந்த இடத்திற்கு வந்தார்கள். தேசத்தை வேவு பார்க்கப் போனவர்கள் மூலமாய் அந்தத் தேசத்தின் மலைகள், பள்ளத்தாக்குகள், கோட்டை கொத்தளங்கள், பெரிய வீடுகள், நதிகள், அங்கே வசித்த ஜனங்கள் தேசத்தின் செழிப்பு முதலான காரியங்களைக் குறித்து அப்பொழுது கேள்விப்பட்டிருந்தார்கள். அக்காலத்தில் பெரியவர்களாயிருந்தவர்கள் தங்களுடைய அவிசுவாசம், முறுமுறுப்பு, மற்றும் பாவங்களினிமித்தம் வனாந்தரத்தில் மடிந்துபோனார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தேசத்தைக் கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தார். பிள்ளைகள் பெரியவர்களாகி யோர்தான் நதிக்கரையில் நின்றபோதிலும் தாங்கள் சிறுவர்களா யிருந்தபோது தேசத்தைப்பற்றிக் கேள்விப்பட்டது ஞாபகமிருக்கலாம். ஆகிலும் திட்டமாக இவர்களுக்கு ஒன்றும் தெரியாது. முன் ஒருபோதும் இவர்கள் நடவாதவழி. முன் ஒருபோதும் இவர்கள் பிரவேசிக்காத தேசம். யோசுவா சொன்ன வார்த்தைகள் உண்மையே. புதிய வருஷம் நமக்கு முன் இருந்தபோதிலும் அவ்வருஷத்தைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? நமக்கு என்ன நிச்சயமுண்டு? முன் ஒருபோதும் நாம் நடவாத வழியில் நடக்கப் போகிறோம். புது வருடத்தில் அறியாமையிலிருந்து மூன்று காரியங்கள் உதிக்கின்றன.

ஒரு ஆசை. பாலும் தேனும் ஓடுகின்ற நல்ல தேசத்தை காணும்படி ஜனங்களுக்கு எவ்வளவோ ஆசையிருந்திருக்கும்! ஆபிரகாமுக்கு ஆதியில் வாக்குப்பண்ணப்பட்டு அநேக வருஷங்களாக ஞாபகப்படுத்தப்பட்டு ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட தேசம். அதில் பிரவேசிக்கப்போகிறோம் என்கிற செய்தி அவர்களுக்கு எவ்வளவோ ஆசையை உண்டாக்கியிருக்க வேண்டும். நூதனமான காரியங்களை அறிய நாடுவதும், மறைவான விஷயங்களைக் காணும்படி ஆசிப்பதும் மனுஷ இயல்பே. உலகத்தில் நடக்கும் விசேஷங்களை அறியும்படியான ஆசை வர்த்தமான பத்திரிகைகளை ஆவலோடு வாசிக்கும்படி ஏவுகிறது. இந்தப் புது வருடம் நமக்கு மறைவான வருடம் போலிருக்கிறது. அதில் என்னனென்ன சம்பவிக்கும் என்று தெரியாது. ஆகையால் இயல்பாகவே இந்த வருடத்தில் ஏதாகிலும் ஒரு ஆசீர்வாதம், ஒரு அனுகூலம் வந்துவிடாதாவென்று நாம் ஆசைப்படுகிறோம். கடந்த வருடத்தில் கஷ்டப்பட்டேனே, இந்த வருடத்திலாவது கஷ்டம்

நீங்கிவிடாதா? தரித்திரம் ஒழிந்து ஒரு நற்காலம் பிறந்து விடாதா? என் பிள்ளைகளுக்கு ஒரு ஒழுங்காகாதா? உத்தியோகத்தில் உயர்வு வந்துவிடாதா? நோயும் நொம்பளமும் நீங்கி தேக ஆரோக்கியம் கிடைக்காதா? என் ஜீவியத்தில் இன்னும் பரிசுத்தமாக மாட்டேனா? என் ஊழியத்தில் இன்னும் அதிகப் பலன் காணமாட்டேனா என்று நன்மையான பல காரியங்களை புது வருஷத்தில் ஆசையோடு எதிர்பார்ப்பதும் இயல்பே. தேவன் நம்மை நம்புகிறவர்களைக் கைவிடாமல் புது வருடத்தில் புதிய நன்மைகளினால் நிரப்பச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஆசைமாத்திரமல்ல. ஒரு அச்சமும் உண்டாகிறது. இதற்கு முன் ஒரு போதும் நடவாத பாதையாயிருக்கிறதே, வழியில் என்ன ஆபத்து சம்பவிக்குமோ? வனாந்தரத்தின் பயங்கரங்களை அறிவோம். இனிமேல் போகும் வழியில் எத்தனை பயங்கரங்களோ? கடக்க வேண்டிய ஆறு எவ்வளவு ஆழமோ? சகிக்க வேண்டிய சங்கடங்கள் எவ்வளவு அகோரமோ? நடக்க வேண்டிய வழி எவ்வளவு தூரமோ? மறைவான சத்துருக்கள் மேல் விழுந்து அடிப்பார்களோ? பலத்த போர் வீரர்களோடு போராட நமக்குப் பலமுண்டோ? இப்படி அறியாத வழியைக் குறித்து அநேக திகில்கள் அவர்களுக்கு உண்டாயிருக்கும். புதிய வருடத்தின் பயம் நம்மையும் பிடிக்கக்கூடியதே. நமக்கு விரோதமாகப் போர்செய்ய புதிய சத்துருக்கள் வழியிலிருக்கலாம். குடும்பத்தில் என்னென்ன மாறுதல்களோ? எதிர்பாராத துன்பம் நேரிடுமோ? அருமையானவர்கள் நோய்க்குள்ளாகி நம்மைவிட்டுப் பிரிவாரோ? உத்தியோகத்துக்கு மோசம் வருமோ? மனுஷருடைய விரோதங்கள் ஏற்படுமோ? நாம் இன்னும் காணாத புதிய வருடத்தைக் குறித்து இவ்வாறு அச்சமும் பயமும் உண்டாவது இயல்பே.

அச்சம் மாத்திரமல்ல. ஒரு ஆயத்தமும் உண்டாகிறது. புது வருடத்தில் பிரவேசிக்கும்போது அடையக்கூடிய நன்மைகளை நினைத்துச் சந்தோஷமும், நேரிடக்கூடிய சங்கடங்களை நினைத்துப் பயமும் உண்டானாலும், நம்மை ஆயத்தம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணமும் உண்டாகிறது. புது வருடத்தில் என்னென்ன காரியங்கள் சம்பவித்தாலும் தேவகிருபையினால் நாம் அதற்கெல்லாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். வனாந்தரம் பின்னும், தேசம் முன்னுமாக நிற்கிற

ஜனங்களைப் பார்த்து யோசுவா; "உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள், நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்" என்கிறார். இந்த வருடத்தில் சம்பவிக்கப்போகிறதையெல்லாம் நாம் இன்றைக்கே அறியக் கூடுமானால் கவலையற்றவர்களாயிருப்போம். அறியாத படியினால்தான் ஆயத்தம் அவசியம். எதிரியின் பலத்தை அறியாதிருக்கும்போது எவ்வளவோ பெரிய ஆயத்தம் அவசியம். ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பித்தபோது ஜெர்மானியர் தகுந்த ஆயத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். மற்றவர்களுக்கு அவ்வளவு ஆயத்தமில்லை, அதனால் நேரிட்ட கலக்கமும் கவலையும் இவ்வளவென்று சொல்ல முடியாது. ஆகிலும் அதிக ஜாக்கிரதையோடும், விழிப்போடும் சகல விஷயத்திலும் இவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணிக் கொண்டபோது எதிரியோடு போரடக்கூடியவர்களானார்கள். முன் நடவாத பாதையில் நடக்கப்போகிற நமக்கு ஆயத்தம் வேண்டும். சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளத் தக்க உன்னத பலத்தோடு இவ்வருஷத்தில் பிரவேசிப்போமாக. சாத்தானுடைய சகல உபாய தந்திரங்களையும் ஜெயிக்கத் தக்கதாக சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொண்டு முன் செல்லுவோமாக. பரிசுத்தமே சிறந்த ஆயத்தம். நாளைக்கு மாத்திரமல்ல, நாட்களெல்லாம் தேவதுணையைப்பற்றிக் கொண்டு நடப்போமாக.

## 2. புது வருடத்தைப்பற்றிய நிச்சயம்

"இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை" என்ற வார்த்தைகள் நமக்குள் ஒருவகையான அச்சத்தையும் திகிலையும் உண்டாக்கின போதிலும் நாம் தைரியத்தோடும், சந்தோஷத்தோடும், நிச்சயத்தோடும் நாம் அறியாத வழியில் நடக்கும்படி நம்மை ஏவிவிடுகிற காரியங்களும் உண்டு. அவை மூன்று காலங் களைக் காட்டும்.

முதலாவது கடந்த காலத்தை நினைவுகூர வேண்டும். மோசே கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் மகா முக்கியம். "கர்த்தர் உன்னை இந்த நாற்பது வருடமளவும் நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" என்றார். கடந்த காலத்தில் கர்த்தர் செய்த செயல்களை நினைப்பதே வருங்காலத்தைப் பற்றி நமக்கிருக்கிற தைரியம். கடந்த காலத்தில் கடவுள் நம்மை

நடத்திவந்த விதத்தை சந்தேகிக்கப்பண்ண யாராலும் முடியாது. ஒருவேளை இனிவருங்காலத்தைக் குறித்து ஒருவன் நம்மை கலங்கப்பண்ணலாம். இப்படி அப்படி நடக்கப்போகிறதென்று பயப்படுத்தலாம். சில வருஷங்களுக்கு முன்னே ஒரு ஜோதிடன் தென் இந்தியாவில் பயங்கரமான பூமியதிர்ச்சி உண்டாகப் போகிறதென்று அறிவித்தான். அநேக ஜனங்கள் கலங்கி அன்றிரவில் வீடுகளையும் ஊர்களையும் விட்டு ஓடி வெளியிற்போய்த் தங்கினார்கள். ஆனால் கடந்தகால அனுபவத்தை மாற்ற யாரால் முடியும். அது நாம் திட்டமாய் அறிந்த விஷயம். நிச்சயமாய் கண்ட காரியம்.

இந்த ஜனங்கள் மோசேயின் வார்த்தைப்படி தேவன் தங்களை நாற்பது வருடமாக நடத்தின அதிசய நடத்துதல்களை நினைத்துப் பார்க்கிறார்கள். பெரிய தைரியம் உண்டாகிறது. என்ன, எகிப்தின் பலத்த அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த ஆண்டவர் கானானில் பிரவேசிக்கப்பண்ணமாட்டாரா? சிவந்த சமுத்திரத்தில் வழியை உண்டாக்கின வல்லவர் யோர்தான் ஆற்றிலும் வழியை உண்டாக்கமாட்டாரா? வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்தவர் தேசத்தின் நன்மையினால் திருப்தி செய்யக்கூடாதா? கன்மலையிலிருந்து தண்ணீர் வரப்பண்ணினவர் பாலும் தேனும் கொடுப்பது பெரிய காரியமா? பயங்கரமான வனாந்தரத்திலே வழிநடத்தினவர் தேசத்திலும் வழிநடத்தமாட்டாரா? என்று கடவுள் தங்களை இதற்குமுன் நடத்திவந்த விதத்தை நினைத்துப் பார்த்து இனிமேலும் அப்படி நடத்துவார் என்று தைரியம் கொண்டார்கள். தாவீது ராட்சதனாகிய கோலியாத்துக்கு முன்னின்றபோது தான் முன்னே சிங்கத்தையும் காரடியையும் கொன்றதை நினைவுகூர்ந்து மேற்கொண்டார். தனக்கு கலக்கமும் சோர்வும் உண்டாகும்போதெல்லாம்: கர்த்தர் எனக்குச்செய்த நன்மைகளை நினைவு கூருவேன்! பூர்வகாலத்து அதிசயங்களை நினைவு கூருவேன் என்று சொல்லியிருக்கிறார். இஸ்ரவேலர் கர்த்தர் தங்களுக்குச் செய்த நன்மைகளையும் அதிசயங்களையும் மறந்துபோனபோதெல்லாம் முறுமுறுத்து கலகம்பண்ணி தேவகோபாக்கினைக்கு உள்ளானார்கள். சகோதரரே, அறியாத புது வருடத்தில் சந்தோஷத்தோடும் நம்பிக்கையோடும் பிரவேசிக்கத்தக்கதாக கடவுள் கடந்த வருடத்திலே நமக்குச் செய்த நன்மைகளை நினைப்போமாக.

அவைகளைத் திரும்பவும் திரும்பவும் நினைத்து அவரைத் துதிப்போமாக. முன் நடத்தின வல்ல தேவன் இந்த வருடத்திலும் நடத்துவது எவ்வளவு நிச்சயம் என்று சொல்லுவோமாக.

இரண்டாவது, தற்காலத்தையும் கவனிக்க வேண்டும். அறியாத பாதையில் இஸ்ரவேலர் தைரியமாய் நடக்கத்தக்கதாக தேவன் இரண்டு காரியங்களை அவர்கள் கண்களுக்கு முன்பாக வைத்தார். ஒருபெட்டி, ஒரு தலைவன், பிரயாண விஷயத்தில் சில மாறுதல்களைக் காண்கிறோம். பயங்கரமான வனாந்திர பிரயாணம் ஒழிந்தது. தேசப்பிரயாணம் ஆரம்பித்திருக்கிறது. இதுவரை அவர்களை வழிநடத்திவந்த மேகஸ்தம்பம் அக்கினிஸ்தம்பம் நின்று விட்டன. கர்த்தருடைய பெட்டி இதுமுதல் அவர்களை நடத்தும். இந்தப் பெட்டி இதற்கு முந்தியே அவர்களோடு இருந்தது. ஆனால் அது அவர்களை வழிநடத்தாமல் மேகம் வழிநடத்திற்று. மேகம் நிற்க அவர்கள் நிற்பார்கள். மேகம் முன்செல்ல அவர்கள் பின் செல்லுவார்கள். இனிமேல் பெட்டி முன்செல்ல அவர்கள் தூரத்தில் பயபக்தியோடு பின்செல்ல வேண்டும். வனாந்தரத்தில் மோசே தலைவனாயிருந்து நடத்திவந்தார். இப்பொழுது யோசுவா நடத்தப்போகிறார். இதிலும் மாறுதலைக் காண்கிறோம். எங்களுக்கு மேகம்தான் வேண்டுமென்று அவர்கள் சொல்லக்கூடாது. எங்களுக்கு மோசேதான் வேண்டுமென்று சொல்லக்கூடாது. கடவுள் தமது ஞானத்தின்படியே காலத்துக்கும் சமயத்துக்கும் எற்ற மாறுதல்களை உண்டாக்குவார். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து முன் செல்ல வேண்டியதே அவர்கள் கடமை.

நாம் திக்கற்றவர்களாக இந்த அறியாத வருஷத்தில் பிரவேசிக்கிறதில்லை. நமக்கும் இரண்டு காரியங்கள் உண்டு. கர்த்தருடைய வசனமும் தலைவராகிய இயேசுவும், கர்த்தருடைய வார்த்தையினால் உண்டாகும் நம்பிக்கை, ஆறுதல், தைரியம், விசுவாசம், மகிழ்ச்சி இவ்வளவென்று சொல்ல முடியாது. நாம் நடக்கும்போது அது வழிகாட்டும். படுக்கும்போது அது நம்மைக் காப்பாற்றும். விழிக்கும்போது அது நம்மோடு சம்பாஷிக்கும். நமது பாதைக்கு அது வெளிச்சம். இக்கொடிய காலத்தில் மனுஷர் வேதத்தை அசட்டை செய்யத்

துணிந்தார்கள். ஆகையால் உலகமும் பிசாசும் பாவமும் அப்படிபட்டவர்களைப் முழுவதுமாக ஆண்டுகொண்டு வதைக்கின்றன. தேவனுடைய பிள்ளைகளே! நீங்கள் இந்த வருடத்தில் நன்றாயிருக்க வேண்டுமானால் வேதத்தை ஆராய்ந்து அடிக்கடி தியானியுங்கள். அவருடைய கிருபையால் திருவசனத்துக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். எப்பேர்ப்பட்ட தீங்கும் உங்களை மேற்கொள்ளமாட்டாது. புதுவருடப் பிரயாணம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்.

எபிரேயர் நிருபத்தில் மோசே ஜனங்களுக்கு விடுதலை கொடுத்தபோதிலும், தேசத்தில் பிரவேசிக்கச் செய்யவில்லையென்றும், யோசுவா அவர்களைப் பிரவேசிக்கச் செய்தபோதிலும் இளைப்பாறுதல் கொடுக்கவில்லையென்றும் சொல்லியிருப்பதைக் காணலாம். இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவோ மோசேயிலும், யோசுவாவிலும் பெரியவரா யிருக்கிறார். அவர் நம்மை விடுவிக்கிறவரும், சுதந்திரத்தில் பிரவேசிக்கச் செய்கிறவரும், இளைப்பாறுதல் கொடுக்கிற வருமாயிருக்கிறார். எவரோடும் ஒப்பிடக்கூடாத நிகரற்ற இரட்சகர் இவர்! இவரை அறிந்து இவரோடு பழகப் பழக இவர் நம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். இக்காலத்தில் அநேகர் வேதத்தை அசட்டை செய்வதுபோலவே இரட்சகனையும் அசட்டை செய்து மற்ற ஞானிகள் ரிஷிகள் என்று சொல்லப்படுகிறவர்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்த பக்தி கிறிஸ்தவர்களுக்குப் பெருக பெருக சபைகளின் நிலைமை எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட பள்ளத்தாக்கின் எலும்பு காட்சிப்போலாகும். ஒரு கிறிஸ்தவன் நாசரேத் தூரானாகிய இயேசுவை "என் ஆண்டவரே, என் தேவனே?" என்று உள்ளத்திலிருந்து சொல்லுகிறவரையில் அவன் அவரை அறிந்தவனல்ல. சகோதரரே தேவனுடைய சகல பரிபூரணமும் மகிமையும் நிறைந்த வல்ல இயேசு நம்மோடு கூடயிருந்து நம்மை நடத்துவாரானால் நமக்குப் பயமேது? குறைவேது? என் ரட்சகர் என்னோடு கூடயிருக்கின்றார்; அவர் என்னை நடத்துகிறார் என்கிற நிச்சயம் நமக்கு எவ்வளவோ ஆறுதலையும், சந்தோஷத்தையும் கொடுக்கின்றன.

மூன்றாவது வருங்காலத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது விசுவாசமே ஜெயம். கடந்த காலத்தின்

அனுபவம் நமக்குத் தைரியம் என்பது சரி. தற்காலத்தில் கிருபையின் எத்தனங்களும் அதிபதியாகிய இயேசுவும் நமக்குத் தைரியம் என்பதும் சரி. வருங்காலத்தில் நமக்கு என்ன தைரியமுண்டு? வருங்காலம் அநிச்சயகாலமல்லவா? அநிச்சயத்திலிருந்து நிச்சயம் எப்படி வருமென்று கேட்கலாம். அவருடைய வாக்கின்மேல் வைக்கும் நம்பிக்கையே நமக்குத் தைரியும். யோசுவாவையும் ஜனங்களையும் முன் ஒரு போதும் நடவாத பாதையில் புறப்பட்டுப் போங்கள் என்று சொன்ன கடவுள் ஒரு வாக்கை அவர்களுக்குக் கொடுத்தார். "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடேயிருந்ததுபோல உன்னோடும் இருப்பேன்; நான் உன்னை விட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை, பலங்கொண்டு திடமனதாயிரு" சகோதரரே, இந்த வாக்கைவிட வேறே என்ன நமக்கு வேண்டும்? ஒவ்வொரு வார்த்தையாக எடுத்துத் தியானித்தால் எவ்வளவு உற்சாகத்தையும், தைரியத்தையும் நமக்குக் கொடுக்கிறது! கப்பர்நகூம் ராஜாவின் மனுஷனுடைய நம்பிக்கையை நாம் மறக்கக் கூடாது. அவன் வீட்டுக்குத் திரும்பினபோது அவன் பிடிக்கிறதற்கு கர்த்தருடைய வார்த்தையையன்றி வேறொன்றுமில்லை. பிள்ளையும் பிழைத்தது, குடும்பமும் ரட்சிக்கப்பட்டது. இந்தக் வருடத்தில் ஆண்டவருடய வாக்குகளை நம்பி அதின் உண்மையை சோதித்துப் பார்ப்போமாக. வாக்குகளை உறுதியாய்ப் பிடித்துக் கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோமாக. முன் ஒருபோதும் நடவாத இந்தப் புதிய வருடத்தில் நாம் நிச்சயத்தோடும் தைரியத்தோடும் நடக்க வேண்டுமானால் பூர்வகாலத்து அதிசயங்களை நினைவு கூறுவோமாக. நமக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் திருவசனத்தையும் சேனாபதியாகிய இயேசுவையும் நோக்கிப்பின் செல்லுவோமாக வருங் காலத்துக்கு அவருடைய வாக்கு நம்மைத் தேற்றுவதாக. தேசத்தில் ராட்சதர்கள் உண்டோ? கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்போம். பெரிய பெரிய பட்டணங்கள் உண்டோ? கர்த்தரின் கிருபையால் அவைகளைச் சுதந்தரித்துக் கொள்வோம். கஷ்டங்கள் நேரிடுமோ? உன்னத பலத்தால் அவைகளை மேற்கொள்ளுவோம்.

# 59. தேவ பராமரிப்பு

***"இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள்" (லூக். 12.6).***

வேதத்தில் உவமானங்களுக்கு குறைவில்லை. மாடுகளின் பொறுமை, ஆடுகளின் பேதைமை, எறும்பின் சுறுசுறுப்பு, சிலந்திப் பூச்சியின் சாமர்த்தியம், மான்களின் ஓட்டம், கழுகுகளின் வேகம், புறாக்களின் சத்தம், பாம்பின் வினா, இப்படிப்பட்ட அனந்தம் உண்டு. இவைகளோடு அற்பமான அடைக்கலான் குருவிகளையும் ஆண்டவர் மறந்து போகவில்லை. மத்தேயு காசுக்கு இரண்டு என்கிறார். லூக்கா இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் என்கிறார். இதிலே விரோதம் ஒன்றுமில்லை. காசுக்கு இரண்டு பழங்கள் என்று கடைக்காரன் சொல்லும்போது இரண்டு காசுக்கு ஐந்து தரக்கூடாதா என்று கேட்க, அப்படியும் ஒன்றுபோட்டுக் கொடுப்பது வழக்கமே. இரண்டு காசுக்கு வாங்கும்போதுகூட ஒரு குருவி போட்டுக்கொடுப்பது பெரிய காரியமல்ல. அடைக்கலான் குருவிகள் அற்பமானவைகள் என்பதை இது காட்டுகிறது. அவைகள் அற்பமானவைகளே, சிரகில் அழகில்லை. குரலில் இனிமையில்லை. விருந்தாக்கிச் சாப்பிட உடலில் இறைச்சியுமில்லை. அவ்வளவு அற்பமான அடைக்கலான் குருவிகளில் ஒன்றாகிலும் கடவுளால் மறக்கப்படுகிறதில்லையே. அப்படியிருக்க எவ்வளவோ விசேஷித்தவர்களாகிய உங்களை அவர் மறப்பாராவென்று கிறிஸ்து நம்மைத் தைரியப்படுத்துகிறார்.

கடவுள் மகா பெரியவராயிருப்பதால் பெரிய காரியங்களைத்தான் அவர் கவனிப்பார் என்று நாம் நினைக்கலாம். பெரிதும் உன்னதமுமான சிகரங்களை மாத்திரமல்ல, ஒரு சிறு புல்லையும் அவர் கவனிக்கிறார். திராளன தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தை மாத்திரமல்ல, நமது கண்களில் சுரக்கும் ஒரு துளிக்கண்ணீரும் அவருக்கு மறைவானதல்ல. வானத்தின் நட்சத்திரங்களை மாத்திரமல்ல. நமது தலை உரோமங்களையும் எண்ணி வைத்திருக்கிறார். இலட்சக்கணக்கான இஸ்ரவேலரின் பெருமூச்சை மாத்திரமல்ல ஏழை அன்னாளின் பெருமூச்சும் அவருக்குத் தெரியும். இஸ்ரவேலின் திரள் சேனையைப் போஷிக்கிறவராக

மாத்திரமல்ல சீதோன் காட்டு ஏழை விதவையையும் போஷிக்க அவருக்கு கவனம் உண்டு. உலகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆகாயத்தை மாத்திரமல்ல, நாம் சுவாசிக்கிற கொஞ்ச அளவான ஆகாயத்திலும் அவர் கவனம் வைத்திருக்கிறார். கடவுள் மகா பெரியவராயிருந்தாலும் தாழ்வானவைகளையும் அற்பமாக எண்ணப்பட்டவர்களையும் அவர் மறக்கிறவரல்ல.

## தேவ பராமரிப்பு எவ்விதமாக வெளிப்படுகிறது?

### 1. நமக்கு உத்தியோகங்களைத் தெரிந்து கொள்ளுகிறவர் அவரே

தோட்டத்துக்கு எஜமான்கள் வேலையாட்களை அனுப்புகிறபோது: நீ ஏர் பூட்டி உழும்படிபோ, நீ வேலிகளை ஜாக்கிரதையாக அடை, நீ கல்லுகளை பொறுக்கு, நீ வளர்ந்திருக்கும் செடிகளை வெட்டு, நீ களைகளைப் பிடுங்கு, நீ தண்ணீர் இறை, என்று அவனவனுடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுத்து அனுப்புவது போல கடவுளும் நமக்காக வேலைகளைத் தெரிந்து கொள்ளுகிறார். நாம் விரும்புகிறதின்படியல்ல, அவருடைய சித்தப்படியே அவர் தமது பிள்ளைகளை உத்தியோகத்தில் நடத்துகிறார். நாம் தெரிந்து கொண்டதும் நாமே ஆயத்தம்பண்ணிக் கொண்டதுமான வேலை ஒன்றாயிருக்கலாம், நாம் இன்று செய்துவரும் வேலை இன்னொன்றாயிருக்கலாம். கலப்பை பிடித்து உழுகிறவனை தீர்க்கதரிசியாக அழைக்கிறார். ஆடுகளை மேய்க்கிறவன் சர்வ இஸ்ரவேலருக்கும் இராஜாவாகிறான். கழுதையைத் தேடப்புறப்பட்டவன் ராஜ அபிஷேகம் பெறுகிறான். ஆயத்துறையிலிருக்கிறவன் அப்போஸ்தலனாகிறான். மீன்பிடிக்கிறவர்கள் மனுஷரைப் பிடிக்கிற மகாத்துமாக்களாகிறார்கள். வக்கீல் வேலைக்குப் படித்துத்தேறின பின்னி என்பவர் சபைகளை உயிர்ப்பிக்கும் வல்ல பிரசங்கியானார். சப்பாத்துக்கடையில் அலுவல் பார்த்த மூடி ஜாதிகளுக்குச் சுவிசேஷத்தைக் கூறும் தேவ ஊழியனானார், நிலக்கரிக்கேணியில் வேலை செய்த பில்லிபிரே ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவும் அநேக கோவில்களைக் கட்டவும் அதிசமாய் நடத்தப்பட்டார். தேக அப்பியாசத்தில் தேறி சமர்த்தன் எனப் பேரெடுத்தவன் போதகனும் பிரசங்கியுமானான். இவைகள் நமது கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கின்றன. தன் வழியை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்ல. கடவுள் நம்மை அறிந்திருக்

கிறார். நமது தகுதி அவருக்குத் தெரியும். வைத்திய வேலைக்குப் படிக்கிறார்கள். போதகர் ஊழியம் பார்க்கிறார்கள். போதகர் வேலைக்குப் படிக்கிறார்கள். போலீஸ் வேலைக்கோ, வியாபாரத் தொழிலுக்கோ போகிறார்கள். வக்கீல் வேலைக்குப் படிக்கிறவர்கள், தேவ ஊழியத்துக்கு வந்து விடுகிறார்கள். தேவ ஊழியத்துக்குப் படிக்கிறவர்கள், வக்கீல் வேலைக்குப் போய் விடுகிறார்கள். இவ்விதமாக, அநேகர் தாங்கள் நாடினதும் ஆயத்தம்பண்ணினதுமான உத்தியோகத்தில் வைக்கப்படாமல் எதிர்பாராத உத்தியோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் நமக்காக உத்தியோகங்களைத் தெரிந்து கொள்ளுகிறார். நாம் செய்து வரும் உத்தியோகங்களைக் குறித்து முறுமுறுக்கக் கூடாது. இந்த வேலையை விட்டுப் போட்டு அந்த வேலைக்குப் போனால் நன்றாயிருப்பேன் என்று நினைக்கக் கூடாது. எந்த வேளையில் கர்த்தர் நம்மை வைத்திருக்கிறாரோ அந்த வேலையை உற்சாகத்தோடும் உண்மையோடும் செய்ய வேண்டியது நமது கடமை. உத்தியோகத்தில் ஏதாவது மாறுதல் உண்டாகவேண்டும் என்று கடவுள் காண்பாரானால் ஏற்ற காலத்தில் அவரே அதைச் செய்வார்.

### 2. நமக்கு வீடுவாசல் ஏற்படுத்துகிறவர் அவரே

"நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன், ஆகிலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் கண்டதில்லை" என்று சங்கீதக்காரன் சாட்சி பகர்ந்தார். கர்த்தரையே நம்பியிருக்கிறவர்கள் கைவிடப்படார்கள். தாவீது அடைக்கலான் குருவிகளைக்குறித்து, உமது பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்ததே என்று பாடினார். அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய தமது பிள்ளைகளைத் திக்கற்றவர்களாக கடவுள் விடமாட்டார். எந்தப் பட்டணத்தில் அல்லது கிராமத்தில், எந்தப் பாகத்தில், எந்தத் தெருவில், எந்த வீட்டில் நாம் குடியிருக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அதற்கேற்றவிதமான அவர் நடத்துகிறார். குடியிருப்பின் விஷயத்தில் நாம் சில சமயங்களில் தேவ ஆலோசனையைத் தேடாமல் ஆத்திரமாக ஒரு வீட்டைத் தெரிந்து கொண்டோமானால் அதை விட்டு நம்மை வெளியேற்ற தேவனுக்கு அதிக நாட்செல்லாது. இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு அவர்கள்

வசிக்க வேண்டிய பாகங்களையும் வீடுகளையும் தெரிந்து கொண்டவர் தமது பிள்ளைகளைத் தாம் தெரிந்து கொள்ளும் இடத்தில் வசிக்க விரும்புகிறார். ஒருவேளை இது விஷயத்தை நாம் அதிகமாக எண்ணாதிருந்தாலும் தேவன் மெய்யாகவே நம்மை நடத்தி வந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு வீட்டில் நாம் குடியிருக்கும்போது வீட்டுக்குச் சொந்தக்காரன் திடீரென வீட்டைக்காலி பண்ணும்படி சொல்லலாம். இனி எங்கேபோய் குடியிருக்கிறதென்கிற கவலை நமக்கு உண்டாகலாம். வீடுதேடப் புறப்படுகிறோம். எந்தத் தெருவில் வீடு இருக்கிறதோ, அது எந்த வீடோ, காலியாயிருக்கிற வீடுதான் அகப்படுமோ என்னமோ ஒன்றும் தெரியவில்லை. தெருத்தெருவாய் போகும்போது ஒரு வீடு அன்றுதான் காலியாயிருக்கிறது. உள்ளே போய்ப் பார்த்தால் நமக்கே ஆயத்தம்பண்ணி வைத்ததுபோல அவ்வளவு திருப்தியாயிருக்கிறது. இது தற்செயலோ, தேவச்செயலோ? ஒரு நாளாகிலும் தெருவில் நின்று தவிக்காமல் நமக்காக இன்னொரு வீட்டைக் காலி பண்ணினவர் கடவுளல்லவா? "அடைக்கலான் குருவிக்கு வீடு கொடுத்தவர் நமக்கு வீடு" கொடாமலிருப்பாரோ? "அவரே தமக்குப் பிரியமானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்துகிறார்."

### 3. கடவுள் தமக்குச் சிநேகிதர்களைக் கொடுக்கிறார்

அவருடைய கோபம் மனுஷர் மூலமாக விளங்குகிறது. அவருடைய பட்சமும் மனுஷர் மூலமுமாக விளங்குகிறது. இந்த உலகத்தில் நமக்கு நல்ல சிநேகிதர்கள் கிடைத்திருப்பது தேவையென்றே சொல்லவேண்டும். சிநேகிதர்களின் அன்பு, ஆதரவு, தைரியம், ஆலோசனை, நமக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கிறது. புதிதாக ஒரு இடத்துக்குப் போகும்போது அங்கே யாரும் நமக்குத் தெரியாதிருக்க, ஒருவர் நம்மைக் கண்டு விசாரித்து பட்சமாக வீட்டுக்கழைத்துப்போய் சகல உபசரணைகளையும் செய்து அவ்விடத்தில் நமக்காக வேண்டிய வேலை விஷயத்திலும் நமக்கு ஒத்தாசை செய்வாரானால் நமக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமே. இப்பேர்ப்பட்ட ஓர் சிநேகிதன் கிடைத்தது தற்செயலல்ல; தேவச் செயலே, தாவீது சவுலால் பகைக்கப்பட்ட காலத்தில் யோனத்தானின் சிநேகம் அவருக்கு எவ்வளவோ ஆறுதலையும் தைரியத்தையும் கொடுத்தது. சிநேகிதரற்றவன் நிர்ப்பந்தன்.

இவ்வுலகில் எனக்கு ஒரு சிநேகிதனுமில்லை என்று ஒருவன் சொல்வானானால் அது அவனுடைய துர்க்குணத்தைக் காண்பிக்கிறதேயன்றி மற்றவர்களுடைய தப்பிதமல்ல.

### 4. கடவுள் நம்மை வழிநடத்துகிறார்

தேவ பராமரிப்பில் அவர் நம்மை வழிநடத்துவது மிகவும் முக்கியம். அவருடைய நடத்துதல் அதிசயமானது. அது நமது புத்திக்கேற்றபடி இருக்கமாட்டாது. கடவுள் இஸ்ரவேலரை வானாந்தரத்தில் நடத்தினார். அவர்கள் செய்த பிரயாணத்தைப் பார்த்தால் நேரே ஒருமுகமாகத் தோன்றாமல், முன்னும் பின்னும், இப்பக்கமும் அப்பக்கமும் நதி மார்க்கமும் சமுத்திர மார்க்கமும், இப்படியும் அப்படியுமாக தாறுமாறாகத் தோன்றும். சங்கீதக்காரன்: "தேவன் அவர்களைச் செவ்வையான வழியில் நடத்தினார்." என்று கூறினார். கர்த்தருடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல. நமது ஜீவியத்தைக் கவனிக்கும் போது சந்தோஷம் துக்கம், சுகம் சுகவீனம், திருப்தி வறுமை, லாபம் நஷ்டம் முதலான பல மாறுதல்கள் நிறைந்திருந்தன என்று காணலாம். ஆகிலும் இவ்வழியாக நடத்தினவர் கடவுளே என்று உணரும்போது அது செவ்வையான வழிதான் என்று நாம் அறிய வேண்டும். "நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" என்று சொன்னவர் உண்மையுள்ள பரம பிதா. இப்போது விளங்காத அநேக விஷயங்கள் பிற்பாடு விளங்கும். இரத்தினக் கம்பளம் பார்க்க மிகவும் அழகாயிருக்கும். அது செய்யப்படுகிற இடத்தை ஒருவர் பார்க்கப்போனார், முதல் அறையில் கயிறும் பஞ்சுமாக அலங்கோலமாகத் தோன்றிற்று. இதுதானா இரத்தினக் கம்பளம் என்று கேட்டார். மேலறைக்குப் போய்ப்பாரும் என்றார்கள். மேலறைக்குப் போனால் கயிறும் கம்பளியும் சேர்ந்து இணைக்கப்பட்ட போதிலும், இரத்தினக் கம்பளத்தின் அழகு தோன்றவில்லை. இதுதானா இரத்தினக் கம்பளம் என்று கேட்டார். மேலே போய்ப் பாரும் என்றார்கள். இவ்விதமாக மேலே கடைசி அறைக்கு அவர் போனபோது பூரணமாக முடிந்திருந்த அழகான இரத்தினக் கம்பளியைக் கண்டு மகிழ்ந்தார். நமது ஜீவியத்துக்கடுத்த அநேக காரியங்கள் இப்போது அரைகுறையாகத் தோன்றுகின்றன. மேலே மறுமைக்குள் நாம் பிரவேசிக்கும்போது கடவுளுடைய அதிசயமும் ஞானமும் நிறைந்த நடத்துதலின் மாட்சியைக்கண்டு ஆனந்த பரவசமடைவோம்.

# 60. பிலாத்து

**"இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நிற்கிறார்" (மத். 27:11)**

பிலாத்து யூதேயாவுக்கு தேசாதிபதியாக நியமனம் பெற்றுச் செசரியாவில் வந்து வசித்தான். நல்ல குடும்பம், நல்ல கல்வி, நல்ல ஒழுங்குள்ள ரோமன். இவன் பஸ்காப் பண்டிகை தோறும் எருசலேமுக்கு வந்து பெரிய அரமணையில் தங்குவான். இவனுக்கு கடவுள் என்பதும், மார்க்கம் என்பதும் வெறும் பேச்சு. யூதரின் மார்க்க ஆசாரங்கள் அவனுக்கு வெறுப்பை உண்டாக்கின. இவனுடைய அவபக்தி அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கினது. ஆகவே இவன் குணம் அவர்களுக்கும், அவர்கள் குணம் இவனுக்கும் பிடிக்கவில்லை. அவர்கள் சம்பந்தம் பாம்பும், கீரியும் போலிருந்தது. இவன் செய்த சில அடாத காரியங்களால் அவர்களைப் பகைத்துக்கொண்டான். முதலாவது ரோமை ராஜாங்கத்துக்குக் கழுகுச் சின்னங்களை பரிசுத்த நகரில் பறக்க விட்டான். அவைகள் செசரியாவில் இருக்கவேண்டியவை. யூதர் செசரியாவுக்குச் சென்று அவைகளை உடனே அகற்றும்படி கேட்டார்கள். அவன் சம்மதிக்கவில்லை. உருவின பட்டயங்களோடு சேனை அவர்களைச் சூழ்ந்து நின்றது. நீங்கள் கலைந்து போகாவிட்டால் அழிந்து போவீர்கள் என்றான். அவர்களோ: நாங்கள் செத்தாலும் சாவோம், நீர் அவைகளை அகற்றினாலன்றி நாங்கள் அசைவதில்லை என்றார்கள். அவர்கள் பிடிவாதத்தைக் கண்டு அந்தச் சின்னங்களை அகற்றி விட்டான். இரண்டாவது நகரத்துக்குத் தண்ணீர் வசதி வேண்டும், அதற்காக வாய்க்கால்களை வெட்டப்போகிறேன் என்று சொல்லி தேவாலயத்துத் திரவியத்தை வேண்டிய மட்டும் செலவு செய்தான். பணவெறி கொண்ட காய்பாவுக்கு பிராணண் போனதுபோலிருந்தது. பெரும் கலகம் உண்டாயிற்று. இதில் ரோமைச் சேவகர் யூதரைப்போல வேஷமாறி கூட்டத்திற்குள் சென்று, தாங்கள் மறைவாய் வைத்திருந்த ஆயுதங்களால் கலகக்காரரை வெட்டி கலகத்தை அடக்கினார்கள். மூன்றாவது அஞ்ஞானச் சின்னங்களுள்ள கேடகங்களை எருசலேமுக்குக் கொண்டு வந்து பிலாத்து தன் அரமனையில் வைத்திருந்தான். இதை யூதர் அறிந்து

ராயனுக்குப் பிராது பண்ண, அவன் பிலாத்துவை எச்சரிக்க, அவன் அவைகளை அகற்றினான். நாலாவது, பண்டிகைக்கு வந்த கலிலேயரைக் கொன்று அவர்கள் இரத்தத்தை அவர்கள் பலிகளோடு கலந்தான். இதைச் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். இக்காரணங்களால் யூதருக்கும் பிலாத்துவுக்கும் கொஞ்சமும் ஆகாது. ஆனால் இயேசுவைக் கொலைசெய்யும் விஷயத்தில் பிலாத்துவின் தயவு தங்களுக்கு வேணும். அவன் அனுமதியில்லாமல் தாங்களாக அவரைச் சிலுவையில் அறைய முடியாது. ஆகையால் அவனோடு வெகு பக்குவமாக நடந்து கொள்ளுகிறார்கள்.

ஆண்டவரைக் கட்டினபடியே பிலாத்துவின் அரமனைக்குக் கொண்டுபோய் அவரை உள்ளே அனுப்பி, தீட்டுப்படாதபடி தாங்கள் வெளியே நின்றார்கள். காலை சுமார் ஆறுமணி இருக்கும். தொந்தரவுகார யூதர் கூட்டத்தைக் கண்டதும் பிலாத்துவுக்கு வந்த கோபம் கொஞ்சமல்ல. அதை மனதில் வைத்துக்கொண்டு வெளியே வந்து; இந்த மனுஷன் மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்று கேட்டான். இப்படிக் கேட்பான் என்று அவர்கள் நினைக்கவில்லை. தாங்கள் இரவில் நிறைவேற்றின மரண ஆக்கினையை மறுவார்த்தை பேசாமல் ஊர்ஜிதப்படுத்திவிடுவான் என்று நினைத்தார்கள். விசாரணை செய்யப்போகிறானே என்று கண்டதும், குற்றம் இன்னதென்று சொல்லாமல் இவன் குற்றவாளியாயிரா விட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுப்போமா என்றார்கள். குற்றவாளியானால் நீங்களே கொண்டுபோய் நியாயந்தீர்க்கலாமே என்றான். அதற்கு அவர்கள்: ஒருவனையும் மரணாக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லையே என்றார்கள். ஆகா, இவரைக் கொல்லவே தீர்மானித்திருக் கிறார்கள் என்பதை பிலாத்து கண்டு தீர விசாரிப்பது சரியெனத் தீர்மானித்தான்.

மூன்று குற்றங்களை அவருக்கு விரோமாகச் சாட்டினார்கள். இவன் கலிலேயா தொடங்கி யூதேயா வரைக்கும் ஜனங்களுக்குள் கலகத்தை உண்டுபண்ணுகிறான். ராயனுக்கு வரிகொடுக்கக் கூடாது என்று ஜனங்களுக்குப் போதிக்கிறான். தன்னை ராஜாவென்று எங்கும் பிரஸ்தாபிக்கிறான் என்றார்கள். இவற்றில் இரண்டு குற்றங்கள் பொய்யென பிலாத்து தள்ளிவிட்டான். ஏனென்றால் அவர்

ராஜ்யத்துக்கு விரோதமாகக் கலகம் உண்டாக்கினதாக இதுவரை யாதொரு பிராதும் வரவில்லை. வரி செலுத்துவது நிறுத்தப்பட்டிருந்தால் அரசாங்கக் கணக்கில் குறைந்திருக்கும். இந்தியாவில் வரி மறுப்புண்டான காலத்தில் லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமென அரசாங்கத்தில் வெளியிட்டார்கள். வரியில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை. ஆகையால் பிலாத்து மூன்றாம் குற்றத்தை விசாரிக்கும்படி உள்ளேபோய் ஆண்டவரைப் பார்த்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அவன் உள்ளத்தையறிந்த பகவான் பதில் சொல்லாமல், பிலாத்துவைப்பார்த்து இது நீர்தாமே கேட்கும்கேள்வியோ அல்லது மற்றவர் உம்மைக் கேட்கச் சொல்லிக் கேட்கும் கேள்வியோ என்று கேட்டார். பிலாத்து பிரமித்து: நான் யூதனா? உன் ஜனங்கள் தானே உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். அப்படி நீ செய்தது என்ன என்று கேட்டான். இந்தக் கேள்விக்கும் ஆண்டவர் பதில் சொல்லாமல், தமது ராஜ்யத்தின் தன்மையை அவனுக்கு உணர்த்தும்படி: என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல, அப்படியிருந்தால் நான் யூதர்கையில் அகப்படாதபடி என் சேனை போராடியிருக்குமே; இவ்வளவு பரிதாபமான கோலத்துடன் நான் நிற்க வேண்டியதென்ன? ஆகையால் என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்றார். என் ராஜ்யம் என்று அவர் சொன்னதால் பிலாத்து அவரைப் பார்த்து: அப்படியானால் நீ ராஜாவா என்றான். நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். சத்தியமாவது என்னவென்று சொல்லிக்கொண்டே பிலாத்து மறுபடியும் வெளியே வந்து நான் அவரிடம் ஒரு குற்றமும் காணேன் என்று அறிக்கையிட்டான். அவர்களோ கூக்குரலிட்டார்கள். பிலாத்து ஆண்டவரை அவர்கள் முன் கொண்டு வந்தான். அவர்கள் அவரைக் கண்டவுடனே எத்தனையோ குற்றங்களைச் சரமாரியாய்ச் சாட்டினார்கள், பிலாத்து அவரைப் பார்த்து: இவர்கள் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே. நீ அவைகளை கேட்கவில்லையா என்றான். ஆண்டவர் ஒன்றுமே பேசவில்லை. பிலாத்து ஆச்சரியப்பட்டான். அவரை விடுதலை செய்ய வேண்டுமென்பதே அவன் எண்ணம்.

இச்சமயத்தில் பிலாத்துவுக்கு ஒரு யோசனை பிறந்தது. இவன் கலிலேயாவைச் சேர்ந்தவனானால் ஏரோதினால் விசாரிக்கப்படவேண்டியது நியாயம் என்று சொல்லி அவர்களை எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதிடம் அனுப்பினான். இந்தப் பொல்லாத யூதர் தொல்லைக்குத் தப்ப வேண்டுமென்பது அவன் கருத்து. ஆண்டவர் ஏரோதிடம் போனார். அவன் பல கேள்விகள் கேட்டான். ஆண்டவர் பேசவேயில்லை. பரியாசம் செய்து திரும்ப பிலாத்துவிடமே அவரை அனுப்பி விட்டான். பிலாத்து அவர்களைப் பார்த்து: நான் விசாரித்ததில் குற்றங்காணவில்லை; ஏரோது விசாரித்ததிலும் குற்றங்காணவில்லை; ஆகையால் இவனை விடுதலை செய்தோம் என்று சொல்லியிருக்கவேண்டியது. அவனோ அவர்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாக இவனை அடித்து விரட்டி விடுவேன் என்றான். சிலுவையிலறைந்தே தீரவேண்டுமென்பது சத்துருக்களின் ஒரே தீர்மானம். ஆகையால் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை.

பிலாத்துவுக்கு வேறொரு யோசனை பிறந்தது. பண்டிகை தோறும் ஒரு கைதியை விடுதலை செய்வது யூதருக்குப் பிரியம். ஜனங்கள் அதை எதிர்பார்த்தார்கள். பரபாஸ் என்று பேர்போன கொலைபாதகன் ஒருவன் கைதியாயிருந்தான். பிலாத்து அவர்களைப் பார்த்து: எவனை நான் உங்களுக்கு விடுதலை செய்ய விரும்புகிறீர்கள் என்று கேட்டான். பிரதான ஆசாரியர் தூண்டுதலால் பரபாஸை விடுதலை செய்யும்படி ஜனங்கள் கேட்டார்கள். இயேசுவைத்தான் கேட்பார்கள் என்று நினைத்து பிலாத்து இந்த உபாயத்தைக் கையாடினான். தான் எண்ணியபடி காரியம் பலிக்காததால் கலங்கினான். இத்தருணத்தில் இன்னும் அவன் கலங்கத்தக்கதாக ஒரு காரியம் சம்பவித்தது. "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன்" என்று சொல்லும்படி பிலாத்துவின் மனைவி ஒரு ஆளை அனுப்பினாள். இச்செய்தி கேட்டு பிலாத்து திடுக்கிட்டு, மனம் பதறி ஜனங்களைப் பார்த்து: "கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். அவனைச் சிலுவையிலறைய வேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள். ஏன்? என்ன பொல்லாப்புச்செய்தான் என்று கேட்டான். இன்ன

பொல்லாப்பு என்று சொல்லாமல், அவனைச் சிலுவையிலறைய வேண்டுமென அதிகம் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். தப்பவழியில்லை என்று கண்டு மனங்கலங்கித் தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி இந்தப் பாவத்துக்கும் பழிக்கும் நான் உத்தரவாதியல்ல. இந்தப் பழி உங்களையே சேரும் என்றான். அப்படியே ஆகட்டும் என்றார்கள்.

அவரை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுக்க பிலாத்துவுக்கு இன்னும் மனம் வரவில்லை. பரபாஸ் விடுதலையடைந்து தப்பி ஓடிவிட்டான். மாசற்ற ஆட்டுக்குட்டியோ தப்ப வழியில்லை. அவரை வாரினால் அடித்து அவர்கள் முன் நிறுத்தினால் மனமிரங்குவார்கள் என்று பிலாத்து நினைத்து, அவரைத் தூணோடு கட்டி வாரினால் அடிக்கக் கற்பித்தான். அவர் முதுகின் தோலுரிந்து ரத்தமயமாயிற்று. இத்தோடு நிறுத்தாமல் சேவகர் கூடி பலவாறு அவரைப் பாடுபடுத்தி அரை உயிராக்கி விட்டார்கள். ஆண்டவர் மகா பரிதாபமான கோலத்தோடு முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் ஜனங்கள் முன்பாக கொண்டுவரப்பட்டார். பிலாத்து ஜனங்களைப்பார்த்து, இதோ: இந்த மனுஷன்! இவனிடத்தில் யாதொரு குற்றமும் காணேன் என்றான். அவர்களோ அவனைச் சிலுவையிலறையும் சிலுவையிலறையும் என்று சத்தமிட்டார்கள். பிலாத்துவுக்கு கோபம் வந்தது. சரி, நீங்களே இவனைக் கொண்டுபோய் சிலுவையிலறையுங்கள், நான் இவனிடம் ஒரு குற்றமும் காணேன் என்றான். தாங்கள் இதுவரை பட்டபாடெல்லாம் வீணாகுமோவென்று பயந்து, இதுவரை மறைத்து வைத்திருந்த குற்றத்தை வெளியிட்டார்கள். இவன் தன்னை தேவகுமாரன் என்றான். எவன் தன்னை தேவகுமாரன் என்று சொல்லுகிறானோ அவன் எங்கள் நியாயப்பிரமாணத்தின்படி சாகத்தான் வேண்டும் என்றார்கள். இந்த வார்த்தை பிலாத்துவுக்கு பயத்தை உண்டாக்கிற்று. மதவெறிகொண்ட இந்த ஜனங்களோடு இதற்குமுன் அவன் பட்டபாடு அதிகம். ஆகையால் பிலாத்து எழுந்து உள்ளே போய் தேவகுமாரன் என்பது மெய்யோ பொய்யோவென அறிய விரும்பினான். இரவில் தோட்டத்தில் சேவகர் விழுந்தது, மனைவி அனுப்பின செய்தி, ஆண்டவர் நிற்கும் கம்பீரமும் அமைதியும்

சாந்தமுமான சாயல், அவர் பேசின ராஜரீக வார்த்தைகள், இவைகள் யாவும் சேர்ந்து அவனுக்கு அதிகக் கலக்கத்தை உண்டாக்கின. அவன் ஆண்டவரைப்பார்த்து: நீ எங்கேயிருந்து வந்தவன் என்று கேட்டான். இதுவரை ஆண்டவர் பேசின வார்த்தைகளுக்கு அவன் உள்ளத்தில் இடமில்லாதபடியால் அவர் பதில் சொல்லவில்லை. நீ என்னோடு பேசுகிற தில்லையா? உன்னை சிலுவையிலறையவும் விடுதலை பண்ணவும் எனக்கு அதிகாரமுண்டென்று உனக்குத் தெரியாதா? என்றான். பரத்திலிருந்தது உமக்குக் கொடுக்கப் படாதிருந்தால் என்மேல் உமக்கொரு அதிகாரமுமில்லை, ஆகையால் என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிகப் பாவம் உண்டு என்றார். இதைக் கேட்டதும் இவரை விடுதலைபண்ணுவதே சரியெனத் தீர்மானித்து யூதரிடத்தில் வந்தான். இதற்கிடையில் அவர்கள்: எவ்வளவு நேரம் நாம் இங்கே நிற்கிறது? என்னென்ன சொன்னாலும் இவன் இணங்கமாட்டேன் என்கிறான், விடுதலைபண்ணவே தீர்மானித்திருக்கிறான். இனி அவன் வெளிவந்தால் அவன் பேசுமுன்னே நாம் அவனை கவிழ்த்த வேண்டும் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பிலாத்து வெளியே வந்து: நான் விடுதலை பண்ணப்போகிறேன் என்றான். உடனே அவர்கள்: நீர் அவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்கு சிநேகிதன் அல்ல என்றார்கள். அவன் ஆண்டவரை அழைத்து வந்து இதோ, உங்கள் ராஜா என்றான். இவனைச் சிலுவையிலறையும் என்று சத்தமிட்டார்கள், உங்கள் ராஜாவை நான் சிலுவையிலறையலாமா என்றான். ராயனேயல்லாமல் எங்களுக்கு வேறு ராஜா இல்லை என்றார்கள். அப்பொழுது அவரை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான். அவர்கள் அவரைக் கொண்டுபோய்ச் சிலுவையிலறைந்தார்கள்.

பிலாத்துவுக்குக் கிடைத்த நற்சமயம் வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. ஐந்து அல்லது ஆறு மணி நேரம் ஆண்டவர் அவனோடிருந்தார். வேறே யாரிடமும் பேசாத முக்கியமான காரியங்களை அவனோடு பேசினார். நான் ராஜாதான்; என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல; நீராய்க் கேட்கிறீரோ? அல்லது வேறு யாரும் சொல்லிக் கேட்கிறீரோ? நான் சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்கப் பிறந்தேன்,

அதற்காகவே இவ்வுலகில் வந்தேன். பரத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்படாவிட்டால் என்மேல் உமக்கு யாதொரு அதிகாரமும் இராது. தேவ தீர்மானப்படியே இது நடக்கிறதென்று அறிந்துகொள்ளும். என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்த காய்பாவுக்கு அதிகப் பாவமுண்டு என்றார். இவன் இயல்பிலே கடவுள் பக்தி உள்ளவனாயிருந்தால் ஆண்டவரைக் கண்டு அவரோடு பேசினது அவனுக்கு ரட்சிப்பாயிருந்திருக்கும். உலகக் கல்வியும் அந்தஸ்தும் இவன் மனக்கண்களை குருடாக்க, தன்முன் நின்றவரை இன்னா ரென்று அறியாமல் மோசம் போனான். மேலதிகாரிகளைப் பிரியப்படுத்தி, பிழைக்க நினைத்த பிலாத்து மூன்று வருடத்திற்குள் உத்தியோகமிழந்து வீடு வாசல்களையும் இழந்து, ஓர் சிற்றூரில் குடியிருந்து யூதாஸைப்போல் தற்கொலை புரிந்தான் என்பது சரித்திரம்.

# 61. கிறிஸ்து வெளிப்படல்

**"பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" (எபி. 9:26).**

இந்த அதிகாரத்தின் கடைசிப் பாகத்தில் கிறிஸ்துவின் மூன்று வெளிப்படுத்தல்களைப்பற்றி வாசிக்கிறோம். ஆங்கில திருப்புதலில் மூன்று வாக்கியங்களிலும் வெளிப்பட்டார் என்ற ஒரே வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் திருப்புதலில் அந்த வார்த்தை மூன்று வெவ்வேறு கருத்துக்களில் வருகிறது. மூன்று வாக்கியங்களையும் வரிசைப்படுத்திப் பார்ப்போம். வரிசைப்படி 26-ம் வசனத்தை முதலில் எடுக்க வேண்டியது. "அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" இரண்டாவது 24-ம் வசனம். "பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக் கிறார்" மூன்றாவதாக 28-ம் வசனம். "தமக்காக காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" மூன்று இடங்களிலும் வெளிப்பட்டார். வெளிப்பட்டிருக்கிறார், வெளிப்படுவார் என்பது ஆங்கில திருப்புதல். தமிழில் "வெளிப்பட்டார்,"

"பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்," "தரிசனமாவார்" என்று திருப்பியிருக்கிறது. ஆண்டவர் செய்த ரட்சிப்பின் வேலை மூன்று இடங்களில் அல்லது மூன்று காலங்களில் திட்டமாகக் காணப்படுகிறது. முழு ரட்சிப்புக்கும் அவரே காரணர். அவரே தொடங்கினவர். அவரே முடிக்கிறவர். இந்த மூன்று கால வேலையை தமிழ் திருப்புதலில் வரும் மூன்று வார்த்தைகள் திட்டமாகவும், விபரமாகவும் காண்பிப்பதுபோல், "வெளிப்பட்டார்" என்னும் ஒரே வார்த்தை காட்டாது. வரிசையாய்க் கவனிப்போம்.

**1. அவர் உலகத்தில் வெளிப்பட்டது (எபி. 9:26)**

"கடைசிக்காலத்தில் அவர் ஒரே தரம் வெளிப்பட்டார்" இது பிதாவாகிய கடவுளின் வேலை. அவர் தமது குமாரனை மாம்ச சரீரத்தில் அனுப்பி மனுமக்கள் அவரைப் பார்க்கும்படி வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து பிறப்பு முதல், மரணம் வரை, அவர் பிதாவால் உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட்டவராயிருந்தார். இதன் உண்மையை பேதுரு எடுத்துக்காட்டுகிறார். "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்." (அப். 2:22). இவ்வாறு அவர் உலகத்தில் வெளிப்பட்ட பிரதான நோக்கம் தமது மரணத்தின் மூலமாக நமது பாவங்களை நீக்கிப் போடவேண்டுமென்பதே, அவர் நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு, நமக்காகப் பாவமாகி, பாவத்தின் சம்பளமாகிய கொடிய மரணத்தை சிலுவையில் ருசிபார்த்து, மரணத்தின்மேல் வெற்றியடைந்ததினிமித்தம், தம்மை நம்பி ஏற்றுக்கொள்வோர் அனைவருடைய பாவங்களை மன்னிக்கவும், ஆக்கினையினின்று அவர்களை விடுவிக்கவும் வல்லவரானார். அவர்களுக்கு இனி ஆக்கினைத் தீர்ப்பில்லை. இது அவர் உலகத்தில் வெளிப்பட்டுச் செய்து முடித்த வேலையின் முதற்பாகம்.

**2. பரத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்தது (எபி. 9:24)**

தாம் முன்னிருந்த இடத்துக்குப் போனபோதிலும் நடந்த காரியம் வேறே. பரத்தை விட்டு வரும்போது தேவகுமாரனாக வந்தார். பரத்துக்குத் திரும்பினபோது தேவமனிதனாகத்

திரும்பினார். இது பரலோகத்துக்கு நூதனமான, ஆச்சரியமான காட்சி. அது மாத்திரமல்ல, மாம்சத்திலிருந்தபோது மகத்துவமான வேலையில் ஈடுபட்டு, பிசாசு பாவம் உலகத்தோடு கொடிய போர் நடத்தி, மனுமக்களை இரட்சிக்கும்படி தமது பிராணனை மனப்பூர்வமாய் ஒப்புகொடுத்து, பிதாவின் சித்தத்தை மகா பூரணமாய் நிறைவேற்றி, மகா பெரிய வெற்றியடைந்து, பாவிகட்கு ரட்சிப்பை உண்டாக்கி, ஜெயகோலமாக அவர் பிதாவின் முன் போய் நின்ற காட்சி என்றும் மறக்கத்தக்கதல்ல. வீட்டிலிருந்து ஊருக்குப்போன மகன் மறுபடியும் வீட்டுக்குத் திரும்பி வருவது போல் அல்ல இந்தக்காட்சி. பிதா அளவில்லாத சந்தோஷத்தோடும், ஆச்சரியத்தோடும் அவரையே பார்த்தவண்ணமாயிருக்கும்படி செய்த காட்சி. "தேவ சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" "வாசல்களே! உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசித் திருக்கிறார். யார் இந்த மகிமையின் ராஜா! அவர் வல்லமையும் பராக்கிரமுமுள்ள கர்த்தர்" என்று பரத்தின் சேனைகள் மாறி மாறி போற்ற, நமது அருமை அப்பன் நமக்காக பிதாவிடம் சென்று, அவரால் அளவில்லாத கனத்தையும், மகிமையையும் பெற்று, அவரது வலது பாரிச ஆசனத்தில் எழுந்தருளின காட்சி! அவர் அங்கிருந்து நமக்காகச் செய்கிறதென்ன? அவர் நமக்குள் தொடங்கின ரட்சிப்பைப் பூரணப்படுத்தும் வேலையிலிருக்கிறார். அது பிதாவின் மூலமாய் அவர் செய்யும் வேலை. நாம் அவர் மரணத்தின் மூலமாய் மன்னிப்புப் பெற்று தேவமக்களானபோதிலும் சோதனைகள் இன்னும் நம்மைத் தாக்குகின்றன. பாவ வல்லமை நம்மை மேற்கொள்ளப் பார்க்கிறது. ஆகையால் மகிமையடைந்த ஆண்டவர் தமது வெற்றியின் பலனாக பிதாவிடமிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்று நம்மை நிரப்பித் தம்மோடும், பிதாவோடும் நம்மை ஐக்கியப்படுத்துகிறார். நாம் பாவ ஆளுகையிலிருந்து விடுவிக்கப்பெற்று கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக உள்ளான மனுஷனில் நாளுக்கு நாள் மாற்றப்படுகிறோம். ஆண்டவர் தமது ஆவியால் நமக்குள் வசித்து, தம்மை நமக்குள் வெளிப்படுத்தி, தமது வசனங்களின் ரகசியங்களை நமக்குள் போதித்து, நமது ஜீவியத்தைப் பலப்படுத்தி நடத்துகிறார். இதுவே பெந்தெகொஸ்தின் பேராசீர்வாதம். இது அவர் பிதாவின் சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்ததின் பலன். இது

மாத்திரமல்ல. நமது சகல கவலைகள் கஷ்டங்களில் நமக்காக இடைவிடாது பரிந்து பேசி உதவி செய்யும் அனுதாபம் நிறைந்த ஆசாரியனாகவும் இருக்கிறார். அநேகர் அவர் உலகத்தில் வெளிப்பட்டதின் பலனாக பாவமன்னிப்பை மாத்திரம் தேடுகிறார்களேயல்லாமல், அவர் இப்பொழுது நமக்காக பிதாவின் சமுகத்திலிருந்து நிறைவேற்றும் மேலான ஆசீர்வாதத்தை அறியாதிருக்கிறார்கள்.

**3. இரண்டாந்தரம் உலகில் தரிசனமாவது (எபி. 9:28)**

"தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." இவ்வாறு அவர் உலகத்தில் முதலாந்தரம் வெளிப்பட்டதின் பலனாகிய பாவமன்னிப்பையும், புத்திரசுவிகாரத்தையும் பெற்றவர்கள், அவர் பிதாவுக்குமுன் பிரத்தியட்சமானதின் பலனாகிய தேவ ஐக்கியத்தையும், திவ்ய சுபாவத்தையும் அடைந்தவர்கள், தங்கள் ஆண்டவர் வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கிருபைகளை அவர்கள் அடைந்திருந்தபோதிலும் இன்னும் முற்றிலும் பூரணப்பட்டவர்களல்ல. பவுல் முதல் சகல பரிசுத்தவான்களும் இந்தச் சரீர வாழ்வில் பாரஞ் சுமந்து தவிக்கிறார்கள். தங்கள் பலவீனங்களை அறிந்திருக்கிறார்கள் தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் இன்னும் எவ்வளவோ குறைவுள்ளவர்கள் என்பதை அறிக்கையிடுகிறார்கள். ஏனென்றால் சரீர மீட்பாகிய இரட்சிப்பு இன்னும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆண்டவர் வரும்போதுதான் அது கிடைக்கும். ஆகையால்தான் அவர் வருகைக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் வரும்போது, "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" *(பிலி. 3:21).* அப்பொழுதுதான் ஆண்டவர் நம்மில் தொடங்கின இரட்சிப்பு பூரணமாகும். நம்மைப் "பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்" நாள் அதுவே.

இந்த வருகையில் இரண்டு காரியங்களை வசனத்தில் காண்கிறோம். ஒன்று "பாவமில்லாமல்" என்பது. பாவஞ்சுமக்கிறவராக அல்ல, பாவத்துக்காக மரிக்கிறவராக

அல்ல. பாவம் என்கிற பேச்சேயல்லாமல் வருவார். ஏனென்றால் அவர் மக்களிடத்தில் பாவம் என்கிற நாமகரணமே அற்றுப்போம். இன்னொரு வார்த்தை "தரிசனமாவார்" என்பது. முதலில் நாம் கவனித்த "வெளிப்பட்டார்" என்கிற வார்த்தையும் "தரிசனமாவார்" என்னும் வார்த்தையும் ஒன்றல்ல. வெளிப்பட்டார் என்பது பிதா தமது குமாரனை உலகத்துக்குக் காண்பிப்பது. மனுஷர் அவரை அறியாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் கடவுள் கிறிஸ்துவை உலகத்துக்கு வெளிப்படுத்தும் முயற்சியை எடுத்துக்கொள்ளுகிறார். தரிசனமாவார் என்பது உலகம் தானாகவே அவரை இன்னாரென்று கண்டுகொள்ளும். அந்தக் காட்சி அவ்வளவு மகிமையாயிருக்கும். போதிக்கவேண்டிய தில்லை. கண்கள் யாவும் அவரைக் காணும். பூமியின் கோத்திரத்தார் யாவரும் அவரைக் கண்டு புலம்புவார்கள். "வருகிறவர் இன்னும் கொஞ்ச காலத்தில் வருவார்."

# 62. சாந்தமுள்ள ராஜா

**"இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய் ...... உன்னிடத்தில் வருகிறார்" (மத். 21:4).**

## 1. யூதஜாதியின் ஒரே வாஞ்சை ராஜ்யம்

ராஜ்யம் என்பது யூதருக்கு விளங்காத வார்த்தையல்ல. தேவராஜ்யம் அவர்களுக்குள் ஸ்தாபிக்கப்படுமென்றும், அவர்கள் சுயாதீனமடைந்து ஐசுவரியத்திலும் சகல உலக நன்மைகளிலும் திருப்தியடைந்திருப்பார்களென்றும் தீர்க்க தரிசிகள் காலத்துக்கு காலம் அறிவித்து வந்தார்கள். பொல்லாத ராஜாக்கள் அவர்களை ஆண்டு வந்த காலங்களில் கடவுள் வாக்களித்த ராஜ்யம் எப்போது வருமென்று ஏங்கித் தவித்தார்கள். அவர்கள் சிறைப்பட்டிருந்த காலங்களில் ராஜ்யம் சீக்கிரம் வரமாட்டாதாவென்று எதிர்பார்த்தார்கள். கடைசியாக ரோமர் ஆளுகை செய்த காலத்தில் தாங்கள் சுயாதீன மடையவும், மேசியா வந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து தங்களுக்கு நல்ல காலத்தைக் கொடுக்கவும் அதிக நாட்ட முடையவர்களாயிருந்தார்கள். அதிகாரிகள் பொதுஜனங்கள்

எல்லாருடைய ஒரே வாஞ்சையும் எதிர்பார்க்குதலும் ராஜ்யமாகவே இருந்தது.

## 2. கிறிஸ்து போதனையின் மொத்தப் பொருள் ராஜ்யமே

அவர் பிரசங்கிக்கத் தொடங்கவே ராஜ்யம் என்னும் வார்த்தை அவர் வாயில் தொனித்தது. அவர் செய்த பிரசங்கங்கள், உவமைகள் எல்லாம் தேவராஜ்யத்தைப் பற்றினதாகவேயிருந்தது. அவர் நிகரற்ற ஜீவியமும், போதனை அதிகாரமும், அவர் நடப்பித்த பலத்த செயல்களும் தேவராஜ்யத்தின் மகிமையை வெளிப்படுத்தின. ராஜ்யத்திற்காக எதிர்பார்த்திருந்த யூத ஜனங்களுக்கு அவர் ராஜ்யத்தைப்பற்றி இடைவிடாது பேசினதும் பலத்த கிரியைகளைச் செய்ததும் அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தன. திரள்திரளாக அவரைப் பின்பற்றினார்கள். அதிகாரிகளும் அவர்மீது மதிப்புற்று அவரைக் கொண்டாடினார்கள். அவரால் தாங்கள் நெடுகிலும் எதிர்பார்த்திருந்த ராஜ்யம் சீக்கிரம் ஸ்தாபிக்கப் படுமென்றும், சத்துருக்களின் கையினின்று அவர் தங்களை விடுவித்து மகா செல்வமான நிலைமைக்குத் தங்களை உயர்த்துவாரென்றும் நம்பினார்கள். ஒரு சமயம் அவரை ராஜாவாக்கவும் எத்தனித்தார்கள். நாட்கள் செல்லச்செல்ல தாங்கள் எதிர்பார்த்த ராஜ்யம் வரவேயில்லை என்று கண்டு அவரை விட்டு விலகி அவரைப் பகைக்கவும் சமயம் வாய்த்தால் கொல்லவும் தீர்மானித்தார்கள். ஆண்டவர் ரோமை ராஜ்யம் சம்பந்தமாக ஒன்றுமே பேசாதிருந்தது அவர்களுக்கு அதிக ஏமாற்றத்தைக் கொடுத்தது. அந்நியரால் ஆளப்பட்ட ஜனங்களுக்குள் பிறந்தவரே தேவராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தவர். கடவுளோடு நமக்கு ஐக்கியமுண்டாகுமானால் அடிமைத்தனம் தானாக நீங்கும் என்பது அவர் துணிவு. ஆகையால் ராஜ்ய விஷயத்தில் அவர் தலையிடவில்லை.

## 3. பஸ்காப் பண்டிகையின் ஒரே நோக்கம் இயேசுவே

ஆண்டவர் கடைசியாக எருசலேமுக்குப் போன பஸ்கா விசேஷித்தது. அவர் கடைசியாக எருசலேமை விட்டு நீங்கினபோது "கர்த்தரின் நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று நீங்கள் சொல்லுங் காலம் வருமளவும் இனி என்னைக் காண மாட்டீர்கள். என்று சொல்லிப் போனார். இப்போது அவர் எருசலேமில்

பிரவேசிக்கையில் அவர் சொன்ன வாக்கு நிறைவேறினது. பஸ்காப் பண்டிகை யூதருக்கு மகா விசேஷம். உலகத்தில் பலவிடங்களிலும் சிதறுண்டுபோன யூதர்கள் தூரமான இடங்களிலிருந்து திரள் திரளாக இந்தப்பண்டிகையில் எருசலேமுக்கு வருவார்கள். முப்பது இலட்சம் ஜனமிருக்கும். அவ்வாறு கூடுங்காலத்தில் தங்கள் பந்துக்களை சந்திப்பதிலும், விவாகம், வியாபாரம் முதலான காரியங்களை ஒழுங்கு செய்வதிலும் முயற்சியாயிருப்பார்கள். அவர்கள் கொண்டாட்டங்களுக்கு அளவிராது. ஆனால் இந்தப் பண்டிகையிலோ சகலத்திரள் ஜனத்தினுடைய எண்ணமும் கிறிஸ்துவைப்பற்றியே இருந்தது. அவருடைய கீர்த்தி ஏற்கனவே தூரமான இடங்களுக்குச் சென்றிருந்ததால் எல்லாரும் அவரைக் காணவேண்டுமென்கிற ஆவலோடே எருசலேமுக்கு வந்திருந்தார்கள். அவர் இந்தப் பண்டிகைக்கு வரமாட்டாரா? வரமாட்டாரா? என்பதே எங்கும் கேள்வியாயிருந்தது. இந்தப் பஸ்கா கிறிஸ்துவை எதிர்பார்த்த பஸ்காவென உறுதியாய்ச் சொல்லலாம்.

### 4. கிறிஸ்து தம்மை ராஜாவாக வெளிப்படுத்தல்

அவர் பெத்தானியாவுக்கு வந்து அங்கே தங்கினார். அவரோடு எரிகோ வழி வந்த திரள் கூட்டமோ நேரே எருசலேமுக்கு வந்தார்கள். கிறிஸ்து பெத்தானியாவுக்கு வந்துவிட்டாரெனவும், அவர் எருசலேமுக்கு வருகிறாரென்றும் இவர்கள் எருசலேம் கூட்டத்தாருக்கு அறிவித்தார்கள். இதற்கிடையில் அவர் உயிரோடெழுப்பின லாசருவைப் பார்க்கும்படி எருசலேமிலிருந்து பெத்தானியாவுக்குப் போன கூட்டமுமுண்டு. ஆண்டவர் தமது சீஷரோடு ஞாயிறு காலையில் எருசலேமுக்கு வந்தார். ஜனங்களெல்லாரும் தம்மை ராஜாவாக எதிர்பார்ப்பதை அவர் அறிந்து அவர்கள் எண்ணத்தின்படியே தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தவும் சித்தங்கொண்டார். சகரியாவின் தீர்க்கதரிசனம் அவர்களுக்குத் தெரியும். "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேமின் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" (சகரி. 9:9). இப்பேர்ப்பட்ட டம்பம் ஆண்டவருடைய தாழ்மையான சிந்தைக்கு ஏற்றதல்ல. ஆகிலும் எதிர்பார்த்த

ஜனங்களுக்கு தாமே அந்த ராஜாவென்பதை துக்கத்துடன் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். அவர் வாகனமீது ஏறி வந்தபோதிலும் தமது ராஜ்யத்தின் தன்மையை அறியாமல் மடிந்து போகிற ஜனங்களுக்காக கண்ணீர் விட்டு அழுதார்.

ஜனங்களுடைய ஆர்ப்பரிப்புக்கோ அளவில்லை. ராஜா வந்து விட்டார். ரோமை ராஜ்யம் அகன்று போகும். இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். ஓசன்னா, ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினால் வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப் பட்டவர் என்று போற்றி, மிகுந்த சந்தோஷத்துடன், தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரிக்கிறதும், மரக்கிளைகளைத் தரித்து பரப்புகிறதுமாயிருந்தார்கள். ஏரோது அசையவுமில்லை, பிலாத்துவும் அவன் சேனையும் விலகவுமில்லை. நீ ராஜாவா என்று பிலாத்து கேட்டதற்கு "நான் ராஜாதான் ஆனால் என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல" என்றார். ஒன்றும் சம்பவிக்காததைக்கண்டு ஜனங்களெல்லாரும் ஏமாற்ற மடைந்தார்கள். இந்த ஆர்ப்பரிப்பில் சீஷர்கள் ஜனங்களுக்கு எவ்வளவும் பிந்தினவர்கள் அல்ல. ராஜ்யத்தைக் குறித்த ஜனங்களுக்கு தவறான எண்ணமே சீஷர்களுடைய எண்ணமுமாயிருந்தது. கடைசிவரை உலகராஜ்யமே அவர்கள் நம்பிக்கையும் தர்க்கமுமாயிருந்தது. ஆகையால் சீஷர்களும் ஏமாற்றமடைந்தார்கள்.

**5. கிறிஸ்து போதித்த தேவராஜ்யம்**

இது ஆவிக்குரியது. ஜீவியத்துக்கடுத்தது. அது சாந்தம், மனத்தாழ்மை, அன்பு, அனுதாபம், இரக்கம் என்னும் இலட்சணங்கள் உள்ளது. அது நீதியும், பரிசுத்தமும், சமாதானமும், நிறைந்தது. இந்த ரகசியத்தை சீஷர்களும் அறியவில்லை, ஜனங்களும் அறியவில்லை. உலக அனுபவம் நாம் அறிந்தது. ஒருவன் ராஜாவென்றால் அவனுக்கு ராஜ்யம், ஐசுவரியம், சேனை, யுத்த ஆயுதங்கள், அதிகாரம் இருக்கவேண்டும். அவன் யுத்தஞ்செய்து, தேசங்களையும் ஜனங்களையும் அழித்து, வெற்றியடைந்தால் அவன் பராக்கிரமத்தை மனுஷர் போற்றுவார்கள். இதுவே யூதர் எதிர்பார்த்த ராஜ்யம். ஆனால் ஆண்டவரோ மனத்தாழ்மையும் சாந்தமுமுள்ள ராஜா. தேசமில்லா ராஜா. வீடில்லா ராஜா, தலைசாய்க்க இடமில்லா ராஜா, காசில்லா ராஜா,

சேனையில்லா ராஜா, யுத்த ஆயுதங்களில்லாத ராஜா, ஒரு பிராணிக்காகிலும் செய்யாத, அடிதடி அரசாங்கமற்ற ராஜா இப்படிப்பட்டவர் ராஜாவாயிருக்கக் கூடுமோ? ஆம்; இவரே மெய்யான ராஜா! மகா அலெக்சாந்தர் தன் சேனையாலும் யுத்த ஆயுதங்களாலும் பட்டணங்களையும் ஜனங்களையும் அழித்து என்ன பலனைக் கண்டான்? அவன் ராஜ்யம் எங்கே? நெப்போலியன் நிகரற்ற யுத்தங்களை நடத்தி தேசங்களை நாசமாக்கினானே, அவன் ராஜ்யம் எங்கே? கொடிய அரசனுக்குப் பயந்து மனுஷர் தலை குனியலாம். அவர்கள் இருதயமோ அவனைத் தூஷிக்கும். இருதயத்தை ஆளும் சக்கரவர்த்தி உலகில் எவனும் இல்லை. இந்தச் சாந்தமுள்ள ராஜாவின் வெற்றியே வெற்றி. ஆயிரமாயிரமானபேர் தங்கள் ஆவி, உடல், பொருள் யாவையும் மனப்பூர்வமாய் அவருக்குப் பாத காணிக்கையாகப் படைத்திருக்கிறார்கள். தங்கள் உயிரையும் கொடுத்திருக்கிறார்கள். சாந்தத்தின் சக்தியை அளவிட யாரால் கூடும்? ஆண்டவர் கையாடுகிற ஆயுதம் அன்பே. அவரது ராஜ்யம் அன்பின் ராஜ்யம். தமது அன்பினால் உலகத்தை ஜெயித்தார். மனுஷருள்ளத்தை ஆண்டு கொண்டார். அவரது ஆளுகை உள்ளங்களில் ஸ்தாபிக்கபட்டிருக்கிறது. இன்னும் எல்லாரும் அவர் ராஜ்ய ஆளுகையில் பிரவேசிக்கவில்லை. அவரது அன்பின் ராஜ்யம் இன்னும் பிரத்தியட்சமாய் பூமியில் ஸ்தாபிக்கப்படவில்லை. இன்னும் சகலமும் தமது பாதங்களுக்குக் கீழாக்கப்படவில்லை. ஆகிலும் அங்கங்கு அவரை ராஜாவாக ஏற்றுக்கொண்டு அவரால் ஆளப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். சாத்தான் தற்காலத்தில் இந்த ராஜ்யத்திற்கு விரோதமாய்ப் பலத்த கிரியை செய்து வருகிறான். உலகம் வெறி கொண்டதுபோல் தோன்றுகிறது. எங்கே பார்த்தாலும் முன்னில்லாத பிரகாரம் கலகங்களும், ஏராளமான கொலைகளும், சண்டைகளும், யுத்தமுயற்சிகளும் தீவிரமாகவேயிருக்கின்றன. இத்தீமைகள் யாவும் நமது பிரயத்தனத்தால் நீங்காது. சகல தீமைகளையும் இடறல்களையும் அழித்து அன்பின் ராஜ்யத்தைப் பகிரங்கமாக ஸ்தாபிக்க கர்த்தர் வருகிறார். அதுவரை ராஜ்யத்தின் புத்திரர் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். நாம் ஒரே பிதாவின் மக்கள். ஒருவருக்கொருவர் சகோதரர். ஆகையால் நாம் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்களாய், அன்பினால் ஒருவரோடொருவர் இணைக்கப்பெற்று, ஏக சிந்தையோடு,

நமது பிதாவின் ராஜ்யத்துக்காக உழைக்க வேண்டும். மறுபிறப்பு, சிறுபிள்ளைச்சுபாவம், ஆவியில் எளிமை, சாந்தகுணம், அன்பு, அனுதாபம், இரக்கம் முதலானவை ராஜ்யத்தின் புத்திரருடைய அடையாளங்களாகும். கிறிஸ்து அனுதினமும் நம்மை ஆண்டு நடத்தும் ராஜாவாயிருக்கிறாரா?

# 63. சரீரத்தின் நோக்கம்

***"ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" (எபி. 10:5).***

கிறிஸ்து பிதாவைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் இவைகள். இப்படிச் சொன்னவர் சரீரத்துக்கு முன்னிருந்தவர். அவர் நம்மைப்போல் பிறந்தபோது உண்டானவரல்ல. மனுஷர் ரட்சிக்கப்படுவதற்கு மிருக பலிகளை நீர் விரும்புகிறதில்லை. தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய வருகிறேன். அந்தச் சித்தத்தை நான் நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒரு சரீரம் அவசியம். நீர் அந்தச் சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர். அந்தச் சரீரத்தில் நான் வசித்து உமது சித்தத்தை அந்தச் சரீரத்தில் நிறைவேற்றுவதினால் பாவிகள் ரட்சிக்கப்படக் கூடும் என்று ஆண்டவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது பிதாவைப் பார்த்துச் சொன்னார். இதனாலே அவர் உலகத்தில் பிரவேசிக்குமுன் இருந்தவரென்றும், தேவசித்தத்தை நிறைவேற்றும்படி உலகத்தில் பிரவேசித்தாரென்றும், அப்படிப் பிரவேசித்தவர் வாசம்பண்ணும்படி பிதா அவருக்கு ஒரு சரீரத்தை ஆயத்தப்படுத்தினாரென்றும் தெரிகிறது. அது பரிசுத்த ஆவியின் மூலமாய் மரியம்மாளிடம் உண்டான சரீரமென்பதைச் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். பரமபிதா நம்மீது கொண்ட அளவில்லாத அன்பையும் கிருபையின் ஐசுவரியத்தையும் இதிலே காண்கிறோம். பூர்வகாலம் தொடங்கி பங்குபங்காய், வகைவகையாய், பற்பல விதமாய், தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்தின கடவுள் கடைசியாகத் தமது குமாரன் மூலமாக நமக்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். திருக்குமாரன் தமக்குரிய தெய்வீக மகிமையை வெறுமையாக்காமல் மனுஷர் சாயலில் வந்து

மனுமக்கள் நடுவில் சஞ்சரிப்பது கஷ்டம். அவர் சகல விஷயத்திலும் நம்மில் ஒருவராயிருந்து நம்மை உயர்த்த வேண்டுமானால் நமக்கொப்பாக வேண்டும். அவர் இவ்வாறு சரீரத்தில் வந்தபோது கடவுள் மாம்சத்தில் வெளிப்பட்டார். கடவுள் நமக்கும் சரீரங்கள் தந்திருக்கிறார். நமது சரீரத்தின் நோக்கம் என்னவென்பதை ஆண்டவர் சரீரத்தைக் கொண்டு படிக்க வேண்டும்.

## 1. அது பிதாவை வெளிப்படுத்தின சரீரம்

கடவுள் எப்படிப்பட்டவரென்பதையும், அவர் தன்மை என்னவென்பதையும், அவருக்கும் நமக்குமுள்ள சம்பந்தமென்ன வென்பதையும் அறியாதிருக்கிறோம். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று யோவான் சொல்லுகிறார். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று ஆண்டவரே சொன்னார். கிறிஸ்து கடவுளை வெளிப்படுத்தினாரா? அப்படியானால் அவரது சர்வ வல்லமை, சர்வ ஞானம், சர்வ மகிமை எங்கே என்று நாம் கேட்கலாம். பாவி ரட்சிக்கப்படுவதற்கு கடவுளைப்பற்றிய எவ்விதமான அறிவு வேண்டுமோ. அவ்விதமான வெளிப் படுத்தலே நமக்கு அவசியம். இதை ஒருபோதும் மறக்கக் கூடாது. கடவுளை நமது அன்புள்ள பிதாவாக வெளிப்படுத்த வேண்டுமென்பதே கிறிஸ்து சரீரத்தில் தோன்றின நோக்கம். இதன் உண்மையை சுவிசேஷத்தில் தாராளமாகக் காண்கிறோம். தவித்தவன் தாகத்தை தண்ணீர் தீர்க்குமேயன்றி விலையேறப் பெற்ற வைரங்கள் தீர்க்காது. "பிதாவை எங்களுக்குக் காண்பியும். அது எங்களுக்குப் போதும்" என்று பிலிப்பு கேட்டதே சர்வ ஜனத்தாருடைய தாகம். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். ஆவியாயிருக்கிற பிதாவை நாம் காணக்கூடாததாகையால் ஆண்டவர் தமது சரீரத்தின் மூலமாய் பிதா எப்படிப்பட்டவரென்பதை வெளிப்படுத்தினார். நாம் கிறிஸ்துவில் காண்கிற அன்பு, அனுதாபம், பரிதாபம், இரக்கம், சாந்தம், பொறுமை, தாழ்மை, கண்ணீர், பட்சம், மன்னிப்பு, உபதேசம், அற்புதகிரியைகள், பாடுகள் சகலமும் பிதாவினுடையவைகளே. பிதா சித்தம் ஒன்றே அவர் சரீரத்தில் முதலிலிருந்து கடைசிவரை நிறைவேறினதால் பிதாவே அங்கே காணப்படுகிறார். பிதாவை உலகத்துக்கு வெளிப்படுத்துவதற்கு

அந்தச் சரீரம் ஒரு சாதனமாயிற்று. நமது சரீரத்தின் நோக்கம் என்ன? கிறிஸ்துவை உலகத்துக்குக் காட்டவேண்டும் என்பதே. கடவுள் நமக்கு சரீரம் கொடுத்த நோக்கம், நாம் யாரைக் காட்டுகிறோம்? நமது நினைவுகள், பேச்சுகள், செய்கைகள், நோக்கங்கள் மற்றவர்களுக்கு யாரைக் காட்டுகின்றன? யார் நமக்குள் வசிக்கிறது? கிறிஸ்து நமக்குள் வசித்து, நாம் அவர் சித்தம்போல் பிழைத்தால் நமது சரீரம் ஓரளவில் கிறிஸ்துவை வெளிப்படுத்தும்.

## 2. அது மனிதனை வெளிப்படுத்தின சரீரம்

கடவுள் மனுஷனைத் தமது சாயலின்படியும் தமது ரூபத்தின்படியும் உண்டாக்கினார். மனுஷன் பாவத்தால் அந்தச் சாயலை இழந்தான். தேவ சாயலுள்ளவனுக்கே மனுஷன் என்று பேர். பாவத்தால் நமது புத்தி அந்தகாரப்பட்டு, சித்தம் பலவீனமாகி, பலவிதத்திலும் நாம் சீர்கெட்டுப் போனோம். என்றாலும் மனுஷன் என்னும் அந்தச் சிறந்த பேரை நாம் விடவில்லை. நாம் அந்த மேலான பேருக்கு எவ்வளவு அபாத்திரராய் போனோம் என்பது முதலாய் நமக்குத் தெரியவில்லை. ஆனால் தங்கள் உள் வினையை உணர்ந்த பக்தர்கள் தாங்களை மனுஷரல்லவென்றும், புழுக்களென்றும், மிருகங்களென்றும், நாயினும் கேடென்றும் புலம்பியிருக்கிறார்கள். தங்கள் இருக்கவேண்டிய நிலைமையில் இல்லையென்றும், எவ்வளவோ இழிவான நிலைமைக்கு வந்துவிட்டோம் என்றும் உணர்ந்து தங்களைத் தூசியிலும் சாம்பலிலும் தாழ்த்தியிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மக்கள் நடுவில் கிறிஸ்து மனுஷனாக வெளிப்பட்டார். அவர் ஜீவியம் எப்படிப்பட்டதென்பதை அவர் சரீரம் வெளிப்படுத்தினது. தம்மை மனுஷகுமாரன் என்று தாராளமாக அழைத்தார் அவர் கிட்ட நெருங்கினவர்கள், அவரைக் கவனித்தவர்கள், அவரும் மனுஷன், நாமும் மனுஷராவென்று வெட்கி நாணவேண்டிய தாயிற்று. தன் அழுக்கு வஸ்திரத்தைச் சற்றும் கவனியாத ஒருவன் மகா வெண்மையான வஸ்திரங் கட்டினவன் பக்கத்தில் வந்தவுடனே விலகி மறைவதுபோல, அவரது பரிசுத்த ஜீவியம் நமது பாவ அழுக்கை வெளிப்படுத்தி நம்மைத் துக்கத்தில் அமிழ்த்தினது. பரமபிதாவின் பிள்ளைகளான நமது சரீரத்தின் நோக்கமும் அதுதான். மனுஷன் மனுஷி எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்பதை நமது சரீரம் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நாம் இன்னும் பூரண

புருஷராகவில்லையென்றாலும் பூரண புருஷரான கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தின் பலனாக மற்றவர்களுக்கு நமது ஜீவியம் மாதிரியாயிருக்க வேண்டும். நமது உள்ளான தன்மையை நமது சரீரம் வெளிப்படுத்தும். ஆராதனைகளும், ஆசாரங்களுமே மெய்மார்க்கமென்றெண்ணி அநேகர் மோசம் போகிறார்கள். நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மாறுவதே கிறிஸ்து மார்க்கத்தின் நோக்கம். கிறிஸ்தவர்களில் அநேகர் இதை யோசிப்பதேயில்லை.

### 3. அது ஊழியம் செய்த சரீரம்

அவர் ஊழியங்கொள்ளும்படி வராமல் மனுஷருக்கு ஊழியம் செய்யவே வந்தார். அவ்வாறு ஊழியஞ் செய்வதற்கு அவருக்குச் சரீரம் வேண்டியதாயிருந்தது. கிருபையுள்ள கண்களால் ஜனங்களைப் பார்த்தார். தமது திருவாயினால் தேவகாரியங்களை மனுஷருக்குப் போதித்தார். அவருடைய கால்கள் மனுஷருக்கு நன்மை செய்யும் நோக்கமாய் எங்கும் நடந்து திரிந்தன. அவரது கரங்களால் ஜனங்களுக்கு ஏராளமான நன்மை செய்தார். பிசாசினால் கட்டுண்டவர்களை விடுவித்து சகல நோயாளிகளையும் குணமாக்கி, மரித்தோரை எழுப்பிக் கொடுத்தார். தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்த அவரது சரீரம் எங்கும் எல்லாருக்கும் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையான நன்மைகளைக் கொடுக்கும் பாத்திரமாயிருந்தது. ஆண்டவர் உலகத்துக்குச் செய்ய விரும்பின பணிவிடையைத் தமது சரீரத்தைக் கொண்டு செய்தார். நமது சரீரத்தை நாம் எப்படி உபயோகிக்கிறோம்? "என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் பாயும்" என்று சொன்னாரே. நமது எண்ணங்கள், பார்வைகள், பேச்சுகள், எழுத்துக்கள், கையின் கிரியைகள், பலவித முயற்சிகள் மற்றவர்களுக்கு ஜீவனையும் ஆறுதலையும் ரட்சிப்பையும் கொடுக்கின்றனவா? அல்லது நாம் மற்றவர்களுக்குப் பாரமும், சஞ்சலமும், மனக்கசப்பும், திகிலும், வெறுப்பும், கண்ணீரும் வரத்தக்கதாக நடக்கிறோமா? நமது சரீரம் பிறருக்கு ஆசீர்வாதமோ அல்லது சாபமோ?

### 4. அது மரணத்திற்கு மனதார ஒப்புவித்த சரீரம்

எபிரேயர் நிருபத்தார் கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றிப் பேசும்போது மரணத்தையே முக்கியப்படுத்திப் பேசுகிறார். "தேவனே உமது சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்"

என்றும், அந்த சித்தத்தை நிறைவேற்ற தமக்கு ஒரு சரீரம் அவசியமென்றும் சொன்னார். அந்தச் சித்தத்தில் முந்தின மூன்றும் அடங்கியிருக்கிறது. தமது சரீரத்திலிருந்து பிதாவை வெளிப்படுத்தினார். தமது சரீரத்தினால் பூரணமான மனுஷன் எப்படியிருக்கவேண்டும் என்று வெளிப்படுத்தினார். அந்தச் சரீரத்தைக் கொண்டு எங்கும் எல்லாருக்கும் இடைவிடாமல் நம்மை செய்தார். கடைசியாக நம்மை இரட்சிக்கும்படி, நமது பாவங்களை நீக்கி நம்மை கடவுளுக்குப் பிரியமான மனுஷராக்கும்படி தமது சரீரத்தை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தார். முந்தின மூன்றினாலும் மனுஷன் ஈடேற வழியில்லை. அவர் பிதாவை வெளிப்படுத்தினதுபோல் நாம் பிதாவை வெளிப்படுத்த முடியவில்லை. அவர் நற்கிரியை செய்ததுபோல் நாம் செய்ய முடியவில்லை. ஏனென்றால் பாவம் இந்த மூன்றுக்கும் தடையாயிருந்தது. ஆகையால் "அவர் தமது மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தால் இப்பொழுது நம்மை ஒப்புரவாக்கினார்" (கொலோ. *1:21*). "இயேசு கிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்." (எபி. *10:10*). கிறிஸ்துவின் மூலமாய் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் பிதாவுக்குப் பிரியமான பிள்ளைகளாகி திவ்ய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகிறோம். தேவ ராஜ்யத்திற்காக பாடுபடுவதற்கும் நமது சரீரத்தை ஒப்புக்கொடுக்கிறோம். கடவுள் நமக்குக் கொடுத்த சரீரத்தின் நோக்கம் இவ்வாறு நம்மிலும் நிறைவேறுகிறது.

## 64. தம்மை ரட்சிக்காத ரட்சகன்

***"மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" (மத். 27:42).***

ஆண்டவர் சிலுவை மீதிருந்து மொழிந்த ஏழுவசனங்கள் திருச்சபையின் பொக்கிஷம். நமக்கருமையானவர்கள் மரிக்கும்போது சொல்லும் கடைசி வார்த்தைகளை நாம் ஆவலோடு கவனிப்போம். தேவபக்தரின் கடைசி வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம். ஆண்டவர் ஜீவனோடிருந்த போது பேசின வார்த்தைகள் அருமையானபோதிலும், ஜீவன் பிரியும் வேளையில் அவர் சொன்ன வார்த்தைகள்

அருமையிலும் அருமையே. பாடுபடும் இரட்சகனுடைய மனநிலைமையை அவைகள் வெளிப்படுத்துகின்றன. கடவுளடியார் காலத்துக்குக் காலம் அவ்வசனங்களிலிருந்து புதிதும் ஆழமுமான கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். பெரிய வெள்ளிக்கிழமையில் ஆலயங்கள் தோறும் இந்த ஏழு வார்த்தைகள் மேல் பிரசங்கம் நடந்து வருகிறது. இவையாவும் சரியே. ஆனால் கீழேயிருந்து சிலுவைக்குச் சென்ற வார்த்தைகளை நாம் கவனிக்கிறோமா? கவனிக்கிறதுமில்லை, அவைகளை விரும்புகிறதுமில்லை. ஏனென்றால் அவைகள் சத்துருக்களால் பேசப்பட்ட அவமானமும் பரியாசமுமான வார்த்தைகள். அவைகளை நமது நாவினால் உச்சரிக்கவும் பிரியவில்லை. என்றாலும் அந்த வார்த்தைகளிலும் நமக்குப் போதனை உண்டு. வேதத்தில் ஒன்றும் பொருளற்றதல்ல. வழிப்போக்கர் செய்த பரியாச முதல் நூற்றுக்கதிபதி செய்த அறிக்கை வரை சிலுவையைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளை எடுத்துப் படித்தால் எவ்வளவோ போதனைகளைக் காணலாம். அவைகளில் ஒன்று "மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" என்பதாகும்.

ஆண்டவர் காதுகேட்க அதிகாரிகள் இந்தப் பரியாசமான வார்த்தைகளைக் கூறினார்கள். அவர் ஊழிய நாட்களிலும் அவருக்கு நிந்தை. இவன் தச்சன்; இவன் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்! போஜனப்பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன். பாவிகளோடு சேர்ந்து போஜனம் பண்ணுகிறவன்; பிசாசு பிடித்தவன் என்று பலவிதமாய் நிந்தித்தார்கள். இப்போது அவர் சிலுவையில் கொடிய வேதனைப்படும் வேளையிலும் நிந்தை. சாகும் மனுஷனை சக்கந்தம் பண்ணுவோர் சண்டாளராவர். கொலைபாதகமும், மிலேச்சக் குணமும் படைத்த இவர்களா கடவுள் ஊழியர்? "மற்றவர்களை ரட்சித்தான்" என்கிறார்கள். அதை மறுக்கப் பிசாசுகளாலும் முடியாது. தேவகுமாரன் என்று சொல்லி நோயாளிகளைவிட்டுவிலகின பிசாசுகளுக்கு ஆண்டவர் ரட்சிக்கிறவர் என்று தெரியும். அவர் இடைவிடாமல் செய்து வந்த அற்புத கிரியைகளை, நோயாளிகள் குணமாகி மரித்தோர் பிழைத்ததை இவர்கள் திட்டமாய் அறிவார்கள். ஆகையால் இவன் மற்றவர்களை ரட்சித்தான் என்று ஒப்புக்கொள்ளு கிறார்கள். ஆனால், "தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத்

திராணியில்லை, நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்த இறங்கி வா, அப்பொழுது உன்னை விசுவாசிப்போம்” என்கிறார்கள். இந்த வார்த்தைகள் ஆண்டவருக்குப் பலத்த சோதனையாயிருந்தன. ஏனென்றால் சிலுவையிலிருந்து இறங்கி வரக்கூடிய சக்தி அவருக்குண்டு. இது வனாந்தர சோதனையைப்போல் வஞ்சகமானது. நீர் ஏன் பசியாயிருக்க வேண்டும்? கடவுள் குமாரன் என்பது மெய்யானால் இந்தக் கல்லை அப்பமாக்கிப் புசிக்கலாமே என்றான் பிசாசு. நீர் கடவுள் குமாரனானால் சிலுவையை விட்டு இறங்கி வரலாமே, நாங்களும் விசுவாசிப்போமே என்று அந்தப் பிசாசின் தூண்டுதலால் இவர்கள் பேசுகிறார்கள். இந்த வார்த்தைகள் ஆண்டவருக்கு ஓர் பலத்த சபதம்போல் தோன்றின. அந்தச் சபதத்தை ஏற்றுக்கொண்டு அவர் இறங்கிவிட்டால் உலகம் ரட்சிக்கப்படுவது எப்படி? அவர் மற்றவர்களை ரட்சிக்க வேண்டுமானால், அந்த இரட்சிப்புக்கு அவசியமான பாடுகளை அவர் சகிக்க வேண்டும் என்கிற தத்துவத்தை தன்னலங் கொண்ட காய்பாவின் கூட்டத்தார் அறிவில்லை. உலகத்தில் ஒருவனுக்கோ அல்லது அநேகருக்கோ ரட்சிப்பை உண்டாக்கத் தன்னை ஒப்புவித்தவன் அதனால் ஏற்படும் போராட்டங்களுக்கும் பாடுகளுக்கும் ஒருவேளை மரணத்துக்கும் தப்ப முடியாது. இந்த ரட்சிப்பின் பிரமாணம் அவர்கள் கண்களுக்கு மறைவாயிருந்தது.

## ஆண்டவர் பாடுபட வேண்டியது அவசியம்

“கிறிஸ்து இவ்விதமாய் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?” ஒரு பக்கம் பாடில்லாமல் மறுபக்கம் பலனில்லை. இதன் உண்மையை இயற்கையில் நாம் காண்கிறோம். ஒன்றின் நஷ்டம் மற்றதுக்கு லாபம். ஒன்றின் சாவு மற்றதுக்கு ஜீவன். நமது ரட்சிப்புக்குத் தமது மரணம் அவசியமென்பதற்கு ஆண்டவர் இயற்கையிலிருந்து ஒரு திருஷ்டாந்தம் சொன்னார். “கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்” என்றார். தானிய விதைகள் சாகாமல் பலன் கொடுப்பதில்லை. மனுஷர் பிழைப்பதற்கு ஆகாரமுமில்லை. ஆகையால் நாம் பிழைக்க ஆண்டவர் மரிக்க வேண்டும். அவர் உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனே நமக்கு நித்திய ஜீவன்.

இந்தப் பிரமாணத்தை மனுஷருக்குள்ளும் காண்கிறோம். பற்பல துறைகளில் வேலை செய்து பாடுபடுகிறவர்களால் அவர்கள் குடும்பத்தார் சௌகரியமாக வாழுகிறார்கள். ஆழமான கேணிகளில், ரெயிலில், துறைமுகத்தில், தொழிற்சாலைகளில், வைத்தியசாலையில் இவ்வாறு பற்பல வேளைகளில் இரவு பகலாய் மனுஷர் பாடுபடுகிறார்கள். இவற்றில் கை கால்கள் போனவர்களும் உயிர் இழந்தோரும் அனந்தம். இவ்வாறு ஒரு பக்கம் மனுஷர் படும் பாடுகளால் மறுபக்கம் மனைவிகள் மக்களுக்கு குடியிருக்க நல்ல வீடுகளும், உடுத்த வஸ்திரங்களும் உண்ண ஆகாரமும் கிடைக்கின்றன. இத்தொழிலாளர் எங்களுக்கேன் இந்தப் பாடுகள் என்று நின்று விடுவார்களானால் மக்கள் கதி என்னவாகும்? கடலில் அமிழ்ந்தவர்களை இரட்சிக்கும்படி ஓர் வாலிபன் குதித்தான். அவன் சிலரைக் கரையில் கொண்டுவந்து சேர்த்தான். இன்னும் ஒருவனை நான் ரட்சிக்க வேணும் என்று மறுபடியும் தண்ணீருக்குள் போனபோது, அவன் மிகக்களைத்திருந்த படியால், அவன் சிநேகிதர் போகக்கூடாதெனத் தடுத்தார்கள். அவனோ பாய்ந்துபோய் அந்த ஒருவனை கரை சேர்த்ததும் கீழே விழுந்து உயிர்விட்டான். மற்றவர்களை ரட்சித்தான்; தன்னை ரட்சிக்க முடியவில்லை.

## பாடுகள் சிறப்புப்பெற மூன்று காரியங்கள் அவசியம்

### 1. பரிசேயன் மனப்பூர்வமுள்ளதாயிருக்க வேண்டும்

அநேகர் பாடு, கஷ்டங்களை வேறு போக்கில்லாமல் சகிக்கிறார்கள். மனமோ முறுமுறுத்தவண்ணமாயிருக்கும். பிழைக்க வேறு வழியில்லையே, என்ன செய்கிறது? பட்டுத் தொலைக்க வேண்டியதுதான் என்பது போல் கஷ்டப்படு கிறார்கள். அது மனப்பூர்வமான பாடல்ல. ஆண்டவரைப் பாடுபடுத்தவோ, கொல்லவோ ஒருவனாலும் முடியாது. உலகத்தின் ரட்சிப்புக்காக அவர் தமது ஜீவனை மனப்பூர்வமாக உற்சாகமாக ஒப்புவித்தார். “என் பிதா எனக்குத் தந்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்றார். தப்ப மார்க்கமில்லாமல் அகப்பட்டுக்கொண்டு படும் பாடல்ல. பிறர் நன்மைக்காக நாம் மனப்பூர்வமாகப் படும் பாடுகள் சிறந்ததாகும்.

### 2. பாடுகளின் நோக்கம் மேன்மையுள்ளதாயிருக்கவேண்டும்

தன் லாபத்திற்காகப் பாடுபடுவோர் அநேகர். ஒருவன் ஐசுவரியவனாகும்படி எவ்வளவோ பாடுபடலாம், தூங்க மாட்டான், சரியாய்ச் சாப்பிடமாட்டான். அவன் கால்கள் ஒரு நிலையில் நிற்காது. அவன் மனம் யோசித்த வண்ணமாகவே யிருக்கும். இந்த மனுஷன் ஏன் இவ்வளவு பாடுபடுகிறான்? பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசையே. பொருளாசை பிடித்தவனை ஜனங்கள் இகழ்வார்கள். ஆனால் அந்த மனுஷன் ஏழைகளைக் காப்பாற்றும்படி பொருள் சேர்ப்பதில் பாடுபடுவானானால் அவன் நோக்கம் மேன்மையுள்ளதா யிருக்கும். தன்மக்கள் உலகத்தில் சாங்கோபாங்கமாய் வாழும்படி, பெருமையாயிருக்கும்படி மாத்திரம் பாடுபடுகிறவன் தந்நயமுள்ளவன். ஆனால் மக்கள் தேவபக்தர்களாகி உலகத்துக்குப் பிரயோஜனமாயிருக்கும்படி பாடுபடுகிறவன் சுய வெறுப்புள்ளவன். அவன் படும்பாடு சிறப்புப் பெறும். நமது பாடுகளின் நோக்கம் மேலானதாயிருக்க வேண்டும். நமது பாவங்களை மன்னித்து, நம்மை தேவமக்களாக்கி கடவுளுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர் களாகும்படி சகல பாடுகளையும் அவமானங்களையும் ஆண்டவர் சகித்தார். ஆ! இது எவ்வளவு சிறந்த நோக்கம்.

### 3. அன்பின் பாடுகளாயிருக்க வேண்டும்

பாடுகள் மனப்பூர்வமுள்ளதாயிருந்தும், நோக்கம் சிறப்பாயிருந்தும், அன்பில்லாவிட்டால் பிரயோஜனமில்லை. "எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" என்றார் பவுல். சகல சம்பத்தும் சகல சௌகரியமும் உள்ள ஒரு அழகிய பெண் குஷ்டரோக வியாதியால் கஷ்டப்பட்ட தன் சகோதரிக்கு உதவி செய்ய நாடி, சகலத்தையும் விட்டுத் தன் சகோதரியிடம் போய்ச் சேர்ந்தார். உருக்கமாய்ப் பணிவிடை செய்யுங்காலத்தில் அந்த வியாதியால் மாண்டாள். அன்பின் மாட்சிமையை அவளிடம் காண்கிறோம். ஆண்டவர் பாடு மரணத்துக்குக் காரணம் அவர் நமது மீது வைத்த அன்பே. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலுமில்லை" என்றார். அவருடன் ஐக்கியப்படும் பிள்ளைகளுக்கு அவரைப்போல்

மற்றவர்களுக்காகப் பாடுபடும் சிந்தையுண்டாகும். நமக்குக் கஷ்டமில்லாமல் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமில்லை.

# 65. வானவில்

**"நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்" (ஆதி. 9:14).**

ஆகாயத்தில் தோன்றும் வானவில் மிகவும் அழகான காட்சி. நாம் அதை எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை. பரம சித்திரக்காரனாகிய பகவான் அடுக்கடுக்காய் பூசிய ஏழுநிறங்கள் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்துகின்றன. பயங்கரமான ஜலப்பிரளயத்துக்குப் பின் நோவாவும் அவன் குடும்பமும் பேழையை விட்டு வெளியேறினார்கள். ஆனால் பயம் என்னமோ அவன் மனதை விட்டு வெளியேறவில்லை. கிருபையுள்ள கடவுள் அதை அறிந்து, இனி ஜலப்பிரளயத்தால் பூமிக்கு அழிவில்லையென்பதை அவனுக்கு உணர்த்தும்படி வானவில்லை அடையாளமாகக் காண்பித்தார். நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்; என் உடன்படிக்கையை நினைவுகூரும்படி நான் அதை நோக்கிப்பார்ப்பேன், அது நம் இருபட்சத்தாருக்கும் அடையாளம் என்றார். ஆகையால் வானவில் தோன்றும்போதெல்லாம் கடவுள் அதை நோக்கிப்பார்க்கிறார். தமது உடன்படிக்கையை நினைவு கூருகிறார். அவர் கண்களும் நமது கண்களும் ஒரே நேரத்தில் வானவில்லை நோக்குகின்றன. நாம் அழகுக்காக மாத்திரம் அதைப் பார்க்கிறோமா? அல்லது கடவுள் அதைப் பார்க்கிறார் என்பதையும், தமது உடன்படிக்கையையும் நினைவு கூருகிறார் என்பதையும் உணர்ந்து பார்க்கிறோமா? ஒருவேளை நாம் மறந்தாலும் அவர் மறப்பதில்லை. நாம் உடன்படிக்கையில் நிலைத்திருப்பதில்லை. பூர்வ பிதாக்களும், அப்போஸ்தலர்களும், பரிசுத்தவான்களும் தவறினவர்களே. ஆண்டவர் நமது உண்மைக்கு தக்கபடி நம்மை நடத்தாமல் தமது உண்மையின்படியே நம்மை நடத்துவதால் நாம் பிழைத்திருக்கிறோம். "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார்".

கடவுள் கிருபை என்றென்றைக்கும் உள்ளது. இந்த வில்லின் விசாலம் ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை எட்டுகிறது. நோவாவுக்குத் தோன்றின வானவில் ஒழிந்துபோகாமல் வானத்திலுள்ள சிங்காசனத்தை சுற்றி வளைந்துநிற்க யோவான் கண்டார். பரமபிதாவின் உடன்படிக்கை ஒருபோதும் மாறாது. ஜலப்பிரளயத்துக்கு ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்குப்பின் தேவன் ஏசாயாவைக் கொண்டு “நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின் மேல் புரளுவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன் மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்து கொள்வதில்லை என்றும் ஆணையிட்டேன்” என்றார். இதற்கு எண்ணூறு வருஷங்களுக்குப்பின் யோவான் கண்ட தரிசனத்தில் சிங்காசனத்தைச் சூழ அந்த வானவில்லைக் காண்கிறோம். அவருடைய உண்மை வானபரியந்தம் எட்டுகிறது. ஒரு வித்தியாசம். இப்போது நாம் பார்க்கிற வானவில்லுக்கு ஏழு நிறங்கள் இருக்கின்றன. யோவான் கண்ட வில்லோ “பார்வைக்கு மரகதம்போல் இருந்தது” என்கிறார்.

மரகதம் என்பது பச்சை நிறமான கல். காலமெல்லாம் ஏழு நிறங்களோடு தோன்றிய வானவில் பரத்தில் ஒரே பச்சை நிறமாகத் தோன்றுகிறது. இதிலும் போதனையில்லாமல் போகவில்லை. நாம் காண்கிற ஏழு நிறங்களில் சிவப்பு, மஞ்சள், நீலம் பிரதானமானவை. மற்ற நிறங்கள் மங்கலாய்த் தோன்றும். நாம் அறிந்திருக்கிறபடி சிவப்புநிறம் மோசத்துக்கும் பாடுகளுக்கும் அடையாளம். மோட்சத்தில் ஆபத்தும் பாடுகளுமில்லை. ஆகையால் சிவப்பைத் தள்ளிவிட வேண்டியது. இதுபோக மஞ்சளையும், நீலத்தையும் சேர்த்தால் நேர்த்தியான பச்சை நிறம் உண்டாகும். பச்சை கண்ணுக்கு இன்பம். வீட்டிலிருந்து வாசிப்பு எழுத்து முதலிய பலவேளை செய்பவர்கள் மாலையில் கிராமத்துக்கு வெளியே சென்று உலாவப் போகும்போது, இருபக்கங்களிலுள்ள பசுமையான நெற்பயிர், தரையை மூடியிருக்கும் புல்லுகள், இலைகள் அடர்ந்த விருட்சங்கள் இவைகளைக் கண்டால் அவர்கள் கண்களுக்கு எவ்வளவோ ஆரோக்கியமும் களிப்பும் உண்டாகின்றன. மோட்சவாசிகள் சகல பாடுகளும் நீங்கி இளைப்பாறுதலையும் சந்தோஷத்தையும் அனுபவிப்பார்கள் என்பதற்கு பச்சைவில் அடையாளம்.

இன்னொரு குறிப்பு: யோவான் பரத்தில் கண்ட பச்சைவில் பூரண வட்டவடிவமுள்ளதாயிருந்தது. இங்கே தோன்றுகிற வாணவில்லில் பாதியையே நாம் காண்கிறோம். இவ்வாழ்வில் தேவகாரியங்களை நாம் அரைகுறையாகவே அறிகிறோம். ஒன்றையும் பூரணமாய் அறிய முடியவில்லை. நமக்கடுத்த காரியங்கள் முதலாய், நமக்கே தெரியவில்லை. அவைகளை யோசித்து யோசித்து மனதைப் புண்படுத்திக் கொள்ளுகிறோம். குருடரை அவர்கள் அறியாத வழியில் நடத்தும் பரமபிதா தம்மைச் சார்ந்து பிழைக்கும் பிள்ளைகளைப் படிப்படியாய் நடத்துகிறார். கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும் நாம் குறைவுள்ளவர்களே. வானவில்லில் பாதியையே காண்கிறோம். மறுமையில் முழுவில்லையும் காண்போம். "இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன். அப்பொழுது அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்வேன்" என்றும், "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும்" என்றும் அப்போஸ்தலன் சொன்னது உண்மை.

வானவில் தோன்றுவதற்கு மூன்று காரியங்கள் அவசியம். மேகம், சூரியன், மழை, மேகமின்றி வெறும் ஆகாயத்தில் வானவில் தோன்றாது. மேகம் பாவம் பாடுகளுக்கு அடையாளம். மேகமில்லாத வானவில்லைக் காணவேண்டு மென்பது நமக்கு ஆவல். சூரியனுடைய ஏழுநிறங்கள் அடங்கிய வானவில் ஆகாயத்தில் தோன்றுவதற்கு மேகம் கட்டாயம் அவசியம். கடவுள் தமது அன்பை நமக்குக் காண்பிப்பதற்கு அவருக்குப் பாடுகளாகிய மேகம் அவசியம். கிறிஸ்துவின் பாடுகளில் தேவ அன்பின் மாட்சிமையைக் காண்கிறோம். அதுபோலவே அவர் தமது கிருபையை, உண்மையை, அன்பை வெளிப்படுத்துவதற்கு நம்மைப் பாடுகள் வழியாய் நடத்துகிறார். இந்த நோக்கத்தை நாம் அறியாமல் இருண்ட மேகத்தைக் கண்டு பயப்படுகிறோம். யாக்கோபின் விஷயத்தில் மேகமுண்டாகி அடுக்கடுக்காய் எழும்பினபோது அவர் கலங்கின கலக்கம் கொஞ்சமல்ல. ராகேல் மரித்தாள். யோசேப்பும் மறைந்தான். அவன் செத்ததாக நினைத்து வருந்தினார். தேசத்தில் பஞ்சமுண்டாகி பிழைக்க வழியற்றுப் போயிற்று. யாக்கோபின் மேகத்தில் தோன்றின வானவில்லை கடவுள் பார்த்தார். யாக்கோபோ அதைக் காணவில்லை. இன்னும் அந்த மேகம் கறுக்கவில்லை. மக்கள் எகிப்திற்குப்

போனார்கள். சிமியோன் திரும்பிவரவில்லை. எகிப்தின் அதிபதி பென்யமீனைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். இவ்வளவுதான்; யாக்கோபுக்குப் பிராணன் போவது போலிருந்தது. "என் நரைமயிரைச் சஞ்சலத்தோடு குழியி லிறங்கப்பண்ணுகிறீர்கள்; எல்லாம் எனக்கு விரோதமாகவே யிருக்கிறது" என்று புலம்பினார். கடவுள் யாக்கோபின் மேகத்தை கனத்த இருளாக்கினார். திடீரென அழகான வானவில் அந்த மேகத்தில் தோன்றிற்று. யோசேப்பு உயிரோடிருக்கிறான். அவனே எகிப்திற்கு அதிபதி. யாக்கோபுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. நமது பாடுகளாகிய மேகத்தைமாத்திரம் பார்த்து அங்கலாய்க்கிறோம். ஆனால் அதில் வானவில் தோன்றுவதைக் கண்டவுடனே இருண்ட மேகத்தை மறந்து போகிறோம்.

வானவில்லுக்கு மேகம் மாத்திரமல்ல, சூரியப்பிரகாசமும் மழையும் அவசியம். மேகமாத்திரம் வானவில்லை உண்டாக்காது. சூரியன் தேவநீதி, பரிசுத்தம், சத்தியத்துக்கு அடையாளம். தேவன் ஒளியாயிருக்கிறார். நீதியுள்ள தேவன் தமது சத்தியமாகிய ஒளியைக் கொண்டு, பாடுகள் துன்பங்கள் மூலமாய் நம்மைப் புடமிடுகிறார். "நீதியின்படியே நீர் என்னை உபத்திரவப் படுத்தினீர் என்று அறிவேன்." "சத்தியத்தினாலே இவர்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம்" ஆகவே மேகம்போன்ற நமது பாடுகளில் சத்தியமாகிய ஒளி பிரகாசித்தது. நாம் அதிகமாய் உணர்த்தப்பட்டுத் தாழ்த்தப்படுகிறோம். துயரத்தாலும் கண்ணீராலும் நிறைந்திருக்கிறோம். வானவில் தோன்றுவதற்கு சூரியப்பிரகாசம் மாத்திரம் போதாது. மழையும் வேண்டும். மழை அவருடைய கிருபையையும் அன்பையும் வெளிப்படுத்துகிறது. தேவநீதியால் மாத்திரம் நமக்கு ரட்சிப்பில்லை. சத்தியத்தால் மாத்திரம் நமக்கு ஆறுதல் இல்லை. "நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று சந்திக்கும்; கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும்" இவ்வாறு மேகமும் சூரியனும் மழையும் சேர்ந்து அழகான வானவில்லை நமது ஜீவியத்தில் உண்டாக்குகின்றன. மேகம் மெல்லிசாய் இருக்கும்போது வானவில் மங்கலாயிருக்கும். இருண்ட மேகத்தில்தான் வானவில்லின் பூரண அழகைக் காணலாம். துன்பத்தின் மேல் துன்பம் அதிகரிக்கும்போது கலங்குகிறோம். ஆனால் பரம பிதாவோ

நமது வானவில்லைப் பூரண அழகுடன் காண்பிப்பதற்காக நமது மேகங்களை கனத்த இருளாகச் செய்கிறார். அவர் நடத்துதலின் நோக்கம் நமக்குத் தெரியாததாலேயே நாம் மனஞ் சோர்ந்து போகிறோம். அவர் தமது கார்மேகங்களைத் தமக்கு ரதமாக்கித் தமக்கு அருமையான பிள்ளைகளைச் சந்திக்கிறார். அவர் அவ்வாறு சந்திக்கும் நோக்கம் நமது ஆசீர்வாதமே. நாம் படும்பாடுகளின் காரணம். நமக்கு விளங்காவிட்டாலும் அதன் பலனை மற்றவர்கள் அனுபவிப்பார்கள். கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாகும்படி விரும்புகிறவர்கள் அந்தகாரத்தில் நடக்காமல் முடியாது. நமது பாவங்களுக்குக் காரணம் அவரது அன்பே. பாடுபடும் சிலாக்கியம் எல்லாருக்கும் கிடைப்பதில்லை

# 66. கப்பர் நகூம்

**"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்" (மத். 11:23).**

கலிலேயாக் கடலின் வடமேற்கில் ஓர் அழகிய சிறு மைதானமுண்டு. பூர்வத்தில் அது கெனேசரேத் நாடென்று அழைக்கப்பெற்றது. அது நீளத்தில் நாலு மைலும் அகலத்தில் இரண்டுமைலுமுள்ளது. தோற்றத்தில் அந்நாடு வளர்பிறைக் கொப்பாயிருக்கும். மலையிலிருந்தோடி வரும் இரண்டாறுகளும் இரண்டு நீருற்றுகளும் அந்நாட்டிலுண்டு ஆகையால் அது நீர்வளமும் செல்வமும் பொருந்திய தேசமாயிருந்தது. அங்குதான் கோராசீன், பெத்சாயிதா, கப்பர்நகூம் என்னும் பட்டணங்களிருந்தன. நமது இரட்சகர் தமது பலத்த செய்கைகளில் அதிகமானவைகளை இவ்விடத்தில்தான் செய்தார். ஆயினும் அப்பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியால் அவைகளைக் கடிந்து கொண்டு அவைகளுக்கு விரோதமான தீர்ப்பைக் கூறினார். கொஞ்சகாலத்திற்குள் அப்பட்டணங்கள் அழிந்து போயின.

### கப்பர்நகூமின் உயர்வு

"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே" என்று கர்த்தர் சொல்லுகிறார். எதினாலே கப்பர்நகூம் உயர்ந்தது? அதற்கருளப்பட்ட சிலாக்கியங்களினாலே.

**1. உலக இரட்சகர் அங்கே வாசம்பண்ணினார்**

நாசரேத் அவருடைய சொந்த ஊர். அங்கே அவர் வளர்ந்தார். ஆகிலும் நாசரேத்தூரார் அவரை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்ட பொழுது "கப்பர்நகூமுக்கு வந்து அங்கே வாசம்பண்ணினார்" அவர் கலிலேயாவுக்கு வந்தபோதெல்லாம் கப்பர்நகூமிலேயே தங்கிச் சுற்றிலும் வேலை செய்து வந்தார். அங்கே அவர் வசிக்க ஒரு வீடும் இருந்தது. ஆகையால் கப்பர்நகூம் அவருடைய பட்டணம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. "அவர் தம்முடைய பட்டணத்துக்கு வந்தபோது" என்று மத். 9–ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவானவர் அவர்கள் மத்தியில் வாசம்பண்ணினது அவர்களுக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம்.

**2. அவருடைய அப்போஸ்தலரில் மிகுதியானவர்கள் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள்**

அவர்களில் பிரதானமானவர்கள் கப்பர்நகூம் பெத்சாயிதாவிலுள்ளவர்கள். கப்பர்நகூம் ஊரார் இவர்களை அறிவார்கள். இவர்கள் மீன் பிடித்து வியாபாரம் பண்ணுகிறதைக் கண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லா வற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பின்சென்றதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களறிந்த இந்த அப்போஸ் தலர்களும் கிறிஸ்துவோடுகூட அவருடைய சாட்சிகளாக கப்பர்நகூமில் வாசம்பண்ணினது அப்பட்டணத் தாருக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம்.

**3. தம்முடைய பலத்த செய்கைகளில் மிகுதியானவைகளை அங்கே செய்தார்**

நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், பேதுருவின் மாமி, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன், திமிர்வாதக்காரன், பெரும்பாடுள்ள ஸ்திரீ, இரு குருடர், இன்னும் பற்பல அகோரமான வியாதிகளால் வேதனைப்பட்டவர்களை அவர்களுடைய கண்கள் காணக் குணமாக்கினார். மரித்துப் போன யவீரின் மகளை உயிரோடெழுப்பினார். "நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ, அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுகிறீர்கள்" என்று ஆண்டவர் கூறியதைக் கவனிக்கும்

போது அவருடைய கிரியைகள் அவ்வளவு பிரபல்யமாயிருந்தது என்று தெரிகிறது. இதுவும் பெரிய சிலாக்கியமல்லவோ?

## 4. அநேக உவமைகளினாலே அவர்களோடு பேசினார்

விதைக்கிறவனுடைய உவமை, களைகளைப்பற்றிய உவமை, கடுகுவிதையின் உவமை, புளித்தமாவின் உவமை, நிலத்தில் மறைந்திருந்த பொக்கிஷம், முத்து தேடின வியாபாரி, பல மீன்களைப் பிடித்த உவமை, ஆகிய இவ்வுமைகளைக் கொண்டு தேவனுடைய ராஜ்யத்தின் ரகசியங்களை அவர்களுக்குப் பிரசங்கித்தார். "என் வாயை உவமைகளினால் திறப்பேன். உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப் பட்டது" அவ்விடத்தில் நிறைவேறிற்று. இதுவும் அவர்களுக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியமல்லவா?

## 5. அவர் அவர்களுக்காக ஜெபம்பண்ணினார்

ஒருநாள் தம்மிடத்தில் வந்த திரளான வியாதிக்காரரைக் குணமாக்கினபின்பு, மறுநாள் 'அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய் அங்கே ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.' அந்தப் பட்டணத்திலிருந்த ஜனங்கள் பேரில் மனதுருகி, அவர்களுக்காக அவர் ஒருதரமல்ல, பலதரமும் ஜெபித்திருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.

## 6. ஆவியானவரின் கிரியையும் அங்கே காணப்பட்டது

ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட இரட்சகர் தங்குமிடத்தில் ஆவியானவர் தங்குவதும் ஆச்சரியமா? மீன் பிடித்தவர்கள் தங்கள் படவுகளை விட்டு அவரைப் பின்சென்றது யாருடைய செயல்? நூற்றுக்கதிபதியின் புகழ்ச்சிக்குரிய விசுவாசமும், பெரும்பாடுள்ள ஸ்திரீயின் பெரிய விசுவாசமும் எங்கேயிருந்து வந்தது? மேற்சொன்ன எல்லாச் சிலாக்கியங்களையும் கவனிக்கும்போது நிச்சயமாகவே கப்பர்நகூம் வானபரியந்தம் உயர்த்தப்பட்டது. ஆம், அது ஒரு சிறு மோட்சம்போலிருந்தது.

நமக்கருளப்பட்ட சிலாக்கியங்களைப் பார்க்கும்போது நாமும் உயர்த்தப்பட்டவர்களல்லவா? உத்தியோகத்தினிமித்தம் அயலிடங்களுக்குப் போனவர்கள், தங்களுக்குக் கோவில்

களில்லையென்றும், கோயில்களிருந்தாலும் திருவசனத்தைப் பிரசங்கிக்கத்தகுந்த ஊழியர்களில்லை என்றும் அடிக்கடி நமக்கு எழுதுகிறார்களே. நாம் அப்படிப் புலம்ப அவசியமில்லை. தேவகிருபையால் நம்முடைய நாட்டில் எத்தனையோ சிறந்த ஆலயங்கள் உண்டு. ஆராதனைகள் ஒழுங்காய் நடந்து வருகின்றன. தெளிவான போதனைகளை நாம் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சமுகம் நமக்குக் கிடைத்திருக்கிறது. நம்மில் அநேகரை அவர் ரட்சித்துத் தமக்குச் சாட்சியாக நமது நடுவில் வைத்திருக்கிறார். உத்தம ஊழியர் கர்த்தர் அருளும் ஈவு, வேதாகமம் விலை உயர்ந்த பொக்கிஷம். ஆவியானவரின் வல்ல செயல்களையும் நாம் கண்டிருக்கிறோம். நோயாளிகளைக் குணமாக்கித் துஷ்டர்களை தேவபக்தர்களாக மாற்றியிருக்கிறார். சொல்லப்போனால் கப்பர்நகூம் பட்டணத்தாரைவிட நாம் அதிகச் சிலாக்கியங்களைப் பெற்றவர்கள் என்பதற்கு ஆட்சேபனையில்லை. இந்த நண்மைகளுக்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்!

## கப்பர்நகூமின் பாவம்

கர்த்தர் இவர்களிடத்தில் கண்ட குற்றம் என்ன? "அவர்கள் மனந்திரும்பாமற் போனார்கள்" என்பதே. அவர்கள் மனந்திரும்பாமற்போனபடியினால் அவர்களைக் கடிந்து கொண்டு அவர்களுக்கு நேரிடும் ஆக்கினையைக் கூறினார். "மரண இருளின் திசையிலுள்ளவர்களுக்குப் பெரிய வெளிச்சம் உதித்தது" என்ற வாக்கின்படி பாவ அந்தகாரத்திலிருந்த அந்த ஜனங்களுக்கு கிறிஸ்து பிரகாசிக்கிற ஒளியாகத் தோன்றினார். சிலர் மாத்திரம் அந்த ஒளியினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அநேகர் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

### 1. இவர்களில் நிர்விசாரிகள் ஒரு வகுப்பார்

கிறிஸ்துவினிடம் போய் அவர் செய்த அதிசயங்களைக் கண்டு, அவருடைய உபதேசத்தைக் கேட்ட மற்றவர்கள் இந்த நிர்விசாரிகளுக்கு விவரித்துச் சொன்னபோதிலும், இவர்கள் புறப்பட்டுப் போய் அவரைப் பார்க்க விரும்பவில்லை. எங்களுக்குப் பிரிய நேரமில்லை என்பாரும், வியாபார முயற்சி அதிகம் என்பாரும், கொடுக்கல்வாங்கலில் நாளெல்லாம் போகிறது என்பாரும், இவ்விதமாய் உலகப்பற்றிலும், பொருளின் மயக்கத்திலும், சிற்றின்ப ஆசையிலும் சிக்குண்டு.

தங்கள் நடுவில் எழுந்தருளித் தங்களை அழைத்த பரம ராஜாவின் திருமுகத்தை அசட்டை செய்து விட்டார்கள்.

தேவசபையில் தேவன் எழுந்தருளியிருக்கிறார். பக்தர்களின் மத்தியில் அருமை ஆண்டவர் மெய்யாகவே பிரசன்னமாகிறார். பூர்வகாலந் தொடங்கி ஸ்திரீ புருஷர் பிள்ளைகள் ஏகமாய் சபைகூடி தேவனைச் சந்திப்பதும், திருவசனத்தைக் கேட்பதும் தேவ ஏற்பாடாகவே இருக்கிறது. தேவாராதனைகளையும் ஜெபக்கூட்டங்களையும் அசட்டை செய்கிறவர்கள், மனுஷரையல்ல, கடவுளையே அசட்டை செய்கிறார்கள். யார், யார் தேவ சமுகத்தை வெறுத்து, தேவாராதனைகளை அசட்டை செய்கிறார்களோ, அவர்கள் பலப்படுவதில்லை.

## 2. கொஞ்சதூரம் அவரைப் பின்பற்றி அப்புறம் பின்வாங்கிப் போனவர்கள் இன்னொரு வகுப்பார்

இவர்கள் லோத்தின் மனைவிக்கொப்பானவர்கள். அவள் கொஞ்சதூரம் ஜீவன் தப்பும்படி ஓடினபோதிலும் திரும்பிப் பார்த்து மோசம்போனவள். இவர்கள் காரியமும் அப்படித்தான். அவருடைய அற்புதங்களைக் கண்டு அதிசயப்பட்டார்கள். அவர்போன இடமெல்லாம் கூடவே வழிநடந்தார்கள். புல்லின்மேல் பந்தியிருந்து அற்புதமாய்ப் பெருகின அப்பத்தைத் திருப்தியாய்ப் புசித்தார்கள். கடற்கரையோரம் நின்று அவருடைய உபதேசங்களுக்குச் செவிகொடுத்தார்கள். அவர்களுக்கு ஜீவனுண்டாகும்படி அவர்கள் தம்மோடு ஒன்றாய் ஐக்கியப்படவேண்டுமென்று அவர் போதித்ததை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு மனதில்லை. "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய ரத்தத்தைப் பானம்பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். "இது கடினமான உபதேசம். யார் இதைக் கேட்பார்கள்" என்று சொல்லிக் கொண்டு "அதுமுதல் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்"

கப்பர்நகூமியரைப்போன்ற கிறிஸ்தவர்கள் நமக்குள்ளுண்டு, பஜனைப் பிரசங்கம், கதாப்பிரசங்கம் முதலிய

பொதுவான பிரசங்கங்களில் இவர்களுக்கு வெகுபிரீதி. ஈசல் மொய்த்தாற்போல் மொய்ப்பார்கள். முகமலர்ச்சியோடு கேட்பார்கள். ஆனால் பாவங்களைக் கண்டித்து உணர்த்தும் பிரசங்கங்களோ அவர்களுக்குக் கடினமான உபதேசம். மனந்திரும்பாதிருந்துகொண்டு கிறிஸ்தவர்களாயிருக்கப் பார்க்கிறார்கள். அது ஒருபோதும் கூடாது. ஜீவன் வேண்டுமானால் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். கிறிஸ்து சொந்தமாகவேண்டுமானால் சொந்தமாயிருந்த பாவம் நீங்க வேண்டும். பாவத்தைவிட்டுத் திரும்புதல் கடினம்தான். ஆண்டவர் அன்பை ருசித்தால் அது கடினமல்ல.

### 3. வெகுதூரம் அவரைப் பின்பற்றியும் தம்மையடையாமல் போனவர்கள் இன்னொரு வகுப்பார்

அவர் செய்த பிரசங்கத்தில் ஒன்றையாகிலும் இவர்கள் தவறவிட்டவர்களமல்ல. அற்புதக் கிரியைகளைக் கண்டு அதிகமாய்ப் புகழ்ந்துகொண்டார்கள். அவரைக் கொஞ்சநேரம் விட்டுப் பிரியமாட்டார்கள். அவர் படவில் ஏறி அக்கரைக்குப் போய்விட்டார் என்று கண்டால், தொடர்ந்து செல்ல வேறுபடவுகள் இல்லாமறபோனாலும், கரையைச் சுற்றியாகிலும் விரைவாய் நடந்து அவரைக்கண்டு களிகூருவார்கள். அப்படியிருந்தும் இவர்கள் நன்மையடையாததற்குக் காரணமென்ன? இவர்கள் கேள்விப்பிரியர்களாயிருந்தார்களேயன்றி செய்கைப்பிரியராயிருந்தார்களில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சிந்தை அவர்களிடத்தில் காணோம். மனந்திரும்பாமற் கெட்டுப்போனார்கள்.

தற்காலத்தின் பெரிய குறைவும் இதுவே. வேத அறிவு அதிகம். பிரசங்கக் கேள்வி அதிகம். மார்க்கசம்பந்தமாய் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி அதிகம். கீழ்ப்படிதலோ இல்லை. கீழ்ப்படியாமையின் மக்களிடத்தில் கிரியை செய்கிறவன் சத்துரு. நம்முடைய செய்கைகள் பிசாசின் செய்கையாயிருக்குமானால் நமக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் என்னத்துக்கு? நமக்கு ஆலயங்கள் என்னத்துக்கு? ஆராதனைகள் என்னத்துக்கு? காணிக்கைகள் என்னத்துக்கு? பிரசங்கக் கூட்டங்கள் ஜெபக்கூட்டங்கள் என்னத்துக்கு? பிசாசு நம்மை ஆண்டுகொண்டு அவன் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படுமானால்

மற்றவவைகளைக் குறித்த நாம் ஏன் மேன்மை பாராட்ட வேண்டும்? அறிவுக்கும் செய்கைக்கும் வித்தியாசம் மிகுதி. அதைக் குறித்துக் கர்த்தர் என்ன சொல்லுகிறார்? என்னிடத்தில் வந்து என் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்தவனைக் கன்மலையின்மேல் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். என்னிடத்தில் வந்து என் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்யாதவனை மணலின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடுவவேன். ஆபத்து வந்தபோது ஒருவீடு நின்றது. மற்றதோ விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். இதில் ஆண்டவரிடத்தில் வந்ததில் இருவருக்கும் வித்தியாசமில்லை. வசனத்தைக்கேட்டு அறிந்துகொண்டதில் இருவருக்கும் வித்தியாசமில்லை. ஆனால் ஒருவன் அறிந்தபடி செய்தான். மற்றவனோ அப்படிச் செய்யவில்லை. அறிவல்ல! அநுபவமே காரியம்.

## கப்பர்நகூமில் தண்டனை

"நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய். நியாயத்தீர்ப்பு நாளில் உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" என்றார்.

சிலாக்கியங்களின் அளவுக்குத்தக்கதாக தண்டனையு மிருக்கும். சிலாக்கியங்களை நன்கு மதிக்கும்போது ஆசீர்வாதம் மிகுதி. அவைகளை அசட்டைபண்ணும்போது ஆக்கினையும் மிகுதி 'எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்' உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் தாழ்த்தப்படும். வானபரியந்தம் உயர்த்தப்பட்டபடியால் பாதாளபரியந்தம் தாழ்த்தப்படும். ஒருவன் எவ்வளவுக்கு உயரத்திலிருந்து விழுகிறானோ அவ்வளவுக்குச் சின்னாபின்னா மாய்ப் போவான். உன்னதத்திலிருக்கிற தூதன் பாவம் செய்தபோது பாதாளத்துக்குரிய இருண்ட பிசாசானான். "தன் மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள் செடிகளையும் முள் பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" (எபி. 6:7,8).

"உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" என்றார். விசுவாசிகள் யாவரும் மோட்சத்திற்குரியவர்களானாலும் அனுபவ அளவில் வித்தியாசமுண்டு. தண்ணீர் நிறைந்த அநேக பாத்திரங்களிருக்கின்றன. எல்லாம் நிறைவாயிருந்தாலும் பாத்திரங்களின் அளவுக்குத்தக்கபடி சிலவற்றில் கொஞ்சமாகவும் மற்றவைகளில் அதிகமாகவும் இருக்கும். கள்ளனும் பவுலும் குணப்பட்டவர்கள்தான். மோட்ச பேரின்பத்தை இருவரும் அனுபவிப்பார்கள். ஆயினும் மகிமையில் இருவருக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கும். அப்படியே நரகவேதனையிலும் வித்தியாசமுண்டு. சோதோம் நாட்டாருக்கிருக்கும் வேதனையைவிட கப்பர்நகூம் பட்டணத்தாருக்கு வேதனை அதிகம். "எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாதவர்கள் அநேக அடிகளால் அடிக்கப்படுவார்கள்."

தங்களுக்கு அருளப்பட்ட சிலாக்கியங்களுக்கு ஏற்றபடி நடந்து கொள்ளாதவர்களின் முடிவு மிகவும் பயங்கரம். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. நியாயத்தீர்ப்புவரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. இப்பொழுதே அதைக் காண்கிறோம். கர்த்தரால் விசேஷித்த தயவுபெற்ற ஜனம் அவருடைய நாமத்தை உலகத்தாருக்கு முன் நிந்தைக்குள்ளாக்கும்போது அவருடைய கோபம் தப்பாமல் அவர்கள்மேல் வரும். இயேசுவானவர் தம்மை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு இரட்சிப்பாயிருக்கிறார். அசட்டைக்காரருக்கு ஆக்கினையாயிருக்கிறார். அவருடைய ரத்தம் விசுவாசிகளுக்குப் பெரிய ஆசீர்வாதம். அவிசுவாசிகளுக்குப் பெரிய சாபம். அவருடைய வசனம் கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவன். கீழ்ப்படியாதவர்களுக்கு நித்திய மரணம். அவருடைய ஆவி ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்குத் தேற்றரவாளர்; எதிர்த்து நிற்கிறவர்களுக்குச் சத்துரு. அவருடைய ஊழியர் ரட்சிப்பை விரும்புவோருக்கு ஜீவ வாசனை; கெட்டுப்போகிறவர்களுக்கு மரண வாசனை. ஆ! சகோதரரே, "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்."

# 67. காய்பா

**"இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டு போனார்கள்" (மத். 26:57).**

சுவிசேஷத்தை நாம் வாசிக்கையில் கிறிஸ்துவின் மரணம் திடீரென நடந்ததாகத் தோன்றும். அது உண்மையே. ஆண்டவருக்கு அது நன்றாய்த் தெரியும். ஆனால் மற்றவர்களுக்கு அது எதிர்பாராத சம்பவம். ஏனென்றால் அவர் ஊழியம் வரவர வளர்ந்து பெருகி அவர் கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிருந்தது. திரளான ஜனங்கள் அவரைப் பின்சென்றார்கள். அவர் செய்த போதனை ஆச்சரியம். அவர் நடப்பித்த கிரியைகள் அதிசயம். சீஷர்கள் சந்தோஷப் பட்டார்கள். பெரிய காரியங்களை எதிர்பார்த்தார்கள். ஆண்டவர் எருசலேமுக்குப் போனார். தேசத்தார் அவரை ராஜாவாகப் போற்றினார்கள். ஒரு வாரத்துக்குள் அவரைச் சிலுவையிலறைந்து கொன்றார்கள். எழும்பிப் பிரகாசித்த ஒளி திடீரென அவிந்தது.

இதற்குக் காரணம் சதுசேயர். இவர்களே அவரைச் சிலுவையிலறைந்தவர்கள். பரிசேயர் ஆண்டவரை அடிக்கடி சந்தித்து, உபதேசத்தைக் குறித்து அவரோடு தர்க்கித்தார்கள். அவர் ஆலயத்தைச் சுத்திகரித்தது அவர்களுக்குப்பிரியம். சதுசேயருக்கோ கோபம். பரிசேயரில் அநேகர் அவருக்குச் சிநேகிதராயிருந்தார்கள். ஒருவன் அவருக்குச் சீஷனானான். ஒருவன் அவருக்குக் கல்லறை கொடுத்தான். அவரைச் சிநேகித்துத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ளலாமென்பது பரிசேயர் நோக்கம். ஆகையால் பரிசேயர் மாத்திரம் அவரைச் சிலுவையிலறையமாட்டார்கள். சதுசேயரே அவர் சிலுவைக்குக் காரணம். அவர்கள் ஆண்டவரை விரும்பவில்லை. அவரை விட்டுத் தூரமாய் விலகிநின்றார்கள். ஒரே ஒரு சமயமாத்திரம் உயிர்த்தெழுதலைப்பற்றி அவரோடு தர்க்கித்தார்கள். மறுவார்த்தை பேசாதபடி ஆண்டவர் அவர்கள் வாயை அடைத்தார். சதுசேயர் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் குடியிருப்பு எருசலேம். அவர்கள் கவனம் தேவாலயம். ஆண்டவரடைந்த கீர்த்தியை தங்களுக்கு ஆபத்தாக

எண்ணினார்கள். அவரைக் கொலைசெய்வதே சரியெனத் தீர்மானித்தார்கள். தீர்மானித்தபடியே செய்து முடித்தார்கள்.

இந்தச் சதுசேயருக்கு தலைவன் காய்பா. அந்த வருஷத்தில் அவனோ பிரதான ஆசாரியன். அவன் எவ்வளவு கொடியவன் என்பது சீஷருக்குத் தெரியும். சுவிசேஷகத்தில் அவன் பேரை அடிக்கடி காண்பிக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமாகக் கூடின சங்கத்தில் அவனே தீர்க்கமாய்ப் பேசுகிறான். அவரை முகமுகமாய் சந்தித்தபோது பலகேள்விகள் கேட்டவனும் மரணாக்கினை கூறினவனும் அவனே. பிலாத்துவை தன் இஷ்டப்படி ஆட்டிவைத்தான். யூதாஸ் காசைக் கொண்டு போனபோது அது உன்பாடு என்று துரத்தினான். பேதுருவையும் யோவானையும் பிரசங்கிக்கக் கூடாதெனக் கட்டளையிட்டான். இந்தக் காய்பா யார்? இவனே பிரதான ஆசாரியன். காரிய சமர்த்தன். கபடு, தந்திரம், தீர்க்கம், தைரியம் உள்ளவன். இவனைப்பற்றி மூன்று குறிப்புகளைப் பார்ப்போம்.

## 1. காய்பாவும் கடவுள் ஜனங்களும்

இவன் பிரதான ஆசாரியனானால் ஜனங்களை எப்படி நடத்தியிருக்க வேண்டும்? தேவசத்தியங்களை இவன் ஜனங்களுக்குப் போதித்து, தேவகிருபையை, அவர் சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் ஆண்டவருக்குப் பிரியமான ஜனங்களாகும்படி இவன் செய்திருக்க வேண்டும். அவர்கள் பாவமன்னிப்பையும் பரிசுத்தத்தையும் அடைய இவன் கருவியாயிருக்க வேண்டும். துன்பங்களில் அவர்களை ஆறுதல்படுத்தி கடவுளை நம்பும்படி செய்ய வேண்டும். இவனுடைய மேலான ஊழியத்தின் நோக்கம் அதுவே. இவ்வாறு காய்பா தன் ஜனங்களை ஆவிக்குரிய விஷயத்தில் பழக்கி வந்திருந்தால், எதிர்பார்த்த மேசியா வந்தபோது ஜனங்கள் அவரை அறிந்து ஏற்றுக் கொண்டிருப்பார்கள். "நான் உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற்போனாயே" என்று ஆண்டவர் கண்ணீர் விட்டழ அவசியமாயிராது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொல்ல இடமிராது.

காய்பாவுக்கு சபையல்ல, தன் சுயநலமே பிரதானம். தான் செயலாக வாழ, சடங்காச்சாரங்களை நிறைவேற்றி ஜனங்களிடம் வேண்டிய திரவியம் சம்பாதிக்க, தன்

செல்வாக்கை நிலைநிறுத்த, இந்த உத்தியோகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டான். தன் அதிகாரத்தை நடத்தி ஜனங்களுடைய மதிப்பை நாடினான். காய்பாவுக்கு பிரதான ஆசாரிய வேலையின் அருத்தம் இதுதான். தன் சுயநலத்துக்கு ஏதாவது இடையூறு நேரிட்டால் அதை உடனே அழித்து விட வேண்டும். புதிய சத்தியம், புதிய ஞானம், புதிய கருத்து, புதிய வெளிப்படுத்தல் அவன் கிட்ட வரக்கூடாது. வந்தால் தன் நோக்கத்துக்கு ஆபத்து வரும். உலகமேன்மை, உலகசிந்தை, உலக ஆதாயமே அவன் ஜீவியத்தின் பிரதான நோக்கம். அவன் பிரதான ஆசாரியப் பதவிபெற்றதும் உலக மக்களாகிய அந்நிய அதிகாரிகள் தயவினாலேயே தன் ஜனங்களுக்கல்ல, அந்நிய அதிகாரிகளுக்கே பிரியமாய் நடந்து தன் உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்வதில் கவனமுள்ளவன். இயேசுவுக்கு இடங்கொடுத்தால் "ரோமர் வந்து நம்மையும் நமது ஸ்தலத்தையும் அழித்து விடுவார்களே" என்று கபடாய்ச் சொன்னவன் இவனே. ஜனங்களுக்காகவும், ஆலயத்துக்காகவும் இவன் கவலைப்படாமல், தன் ஆதாயத்துக்காகவே கவலைப்பட்டான். அவன் உண்மையில் கடவுளுக்குப் பிரதான ஆசாரியனாயிருந்தால், உண்மையில் ஜனங்கள் ரட்சிப்புக்காக அவன் கவலைப்பட்டிருந்தால், கிறிஸ்துவைப்போல் அவனுக்குப் பிராண சிநேகிதரை அவன் எங்கும் காணமாட்டான்.

## 2. காய்பாவும் கொள்கையும்

கொள்கையில் காய்பா கண்டிப்பானவன். தன் போதனை, தன் கொள்கை ஒரு போதும் மாறக்கூடாது. புதிய அறிவு, புதிய கருத்து, புதிய அர்த்தம் அவன் அருகில் அண்டக்கூடாது. ஏன்? சபைகாரியங்கள் குழப்பமாகும். தன் சுயநல ஒழுங்குக்கு ஆபத்து வரும். ஆவிக்குரிய யாதொரு எழுப்புதலும் வரக்கூடாது. ஜீவனற்ற தன் சடங்காச்சாரங்களாலே ஜனங்களை கட்டிவைத்திருப்பதே தனக்கு அனுகூலம். அவர்கள் அறியாமையிலிருப்பதே தன் ஆளுகைக்கு ஏற்றது. அவர்கள் விழித்துக் கொண்டால் தன் ஜம்பம் பலிக்காது. ஆண்டவர் அதிகாரத்தோடு செய்த போதனை அவனைத் திகைக்கப்பண்ணிற்று. "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது; நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சகலத்தையும் மாற்றிப் புதிய மேலான கருத்தில் அவர் பிரசங்கித்தது அவனுக்கு

இடிவிழுந்ததுபோலிருந்தது. அவன் தன் சுயநலத்துக்காக ஆசரித்து வந்த ஆசாரங்கள் நிர்மூலமாகும் போல் தோன்றின. ஆகையால் காரியசமர்த்தன் "ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கும்" என்று யூதருக்கு ஆலோசனை சொல்லுகிறான். ஆண்டவர் போதனை சரியா? ஜனங்களுக்கு அது பிரயோஜனமா? என்று அவன் கேளாமல் புதிய உபதேசம். புதிய கொள்கைகள் வந்தால் தன் ஆதாயத்துக்கு ஆபத்து வருமே என்று அவன் கலங்குகிறான். ஆகையால் அவரை முடித்துவிட்டால் தான் சௌக்கியமாக வாழலாம் என்பது அவன் கோரிக்கை. இவன் தான் பிரதான ஆசாரியன். ஜனங்களுடைய ஆத்ம லாபத்தைக் கருதாத சுயநலத்தார் யாவரும் இந்தப்பிரதான ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களே.

### 3. காய்பாவும் கிறிஸ்துவும்

கிறிஸ்து எவனுக்கு முன் நிற்கிறாரோ அவனுடைய இருதய சிந்தனைகள் கட்டாயம் வெளிப்படும். காய்பாவுக்கு கிறிஸ்து யாரென்று தெரியும். அவர் ஆரம்பத்தில் ஆலயத்தைச் சுத்திகரித்ததை அவன் மறக்கவில்லை. மன்னிக்கவுமில்லை. ஏனென்றால் ஆண்டவர் செய்தது ஆலய வியாபார ஒப்பந்தத்தினால் தனக்கு வரும் பெருத்த லாபத்துக்கு ஆபத்தாயிருந்தது. என்றாலும் இயேசு நாட்டுப்புறத்தான், குருட்டு வைராக்கியத்தினால் அப்படிச் செய்துவிட்டான். அதனால் முழுகிப்போகிற காரியம் ஒன்றும் இல்லை, அதைக் கவனியாது விட்டுவிடுவதே ஞானம் என்பதுபோல் அச்சமயம் நடந்து கொண்டான். ஆனால் வரவர அவர் செய்த அற்புதங்கள், பேர்ப்பிரஸ்தாபம், ஜனத்திரள் அவரைப் பின்செல்லுதல் இவைகளை அவன் கண்டபோது, ஆகா, இனி விடக்கூடாது. இந்த ஆலயத்துக்கும் நமது ஆதாயத்துக்கும் ஆபத்து வந்தே தீரும். இவனை முடித்துவிட்டு மறு ஜோலி பார்ப்பதே நல்லது என்பதாகத் தீர்மானித்தான். இராப்பகலாக இதுவே அவன் விசாரம். அவர் எருசலேமுக்கு வர, ஜனங்கள் ஓசன்னா பாடிக் கோஷ்டிக்க, அதன் ஆர்ப்பரிப்பு நகரத்தில் எதிரொலிக்க, காய்பா கோபங்கொண்டு ஆத்திரப்பட்டு நாம் செய்கிறதெல்லாம் வீணென்று நாம் அறியவில்லையா? இதோ, உலகமே அவனைப் பின்பற்றிப் போயிற்றே! என்றான். சீக்கிரமாய் காரியத்தை முடிக்க வேண்டும். யூதாஸைக் கருவியாகக் கொண்டான். சேனையை அனுப்பி ஆண்டவரைப்

பிடித்தான். அருள்நாதர் கட்டுண்டவராய் காய்பா முன் நிற்கிறார். அவர் யார்? எங்கிருந்து வந்தார்? எதற்காக வந்தார்? அவர் உபதேசங்கள் எப்படிப்பட்டவை? அவர் செய்த கிரியைகள் எப்படிப்பட்டவை? அவர் குணமென்ன? சிந்தையென்ன? புருஷர் ஸ்திரீகள், பிள்ளைகளுக்கு அவர் எப்படிப்பட்டவர்? அவரிடத்தில் என்ன குற்றமுண்டு. சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறவன் யார்? அவன் முன் கட்டுண்டு நிற்கிறவர் யார்? காய்பா மாத்திரம் உண்மையில் பிரதான ஆசாரியனாயிருந்திருந்திருந்தால், கிறிஸ்து யோவான் ஸ்நானகனிடம் வந்ததும் யோவான் அவரை இனம் அறிந்ததுபோல, இவனும் தன் முன் நிற்பவர் மாசற்ற ஆண்டவர் என்பதைக் கண்டு, ஆசனம் விட்டுக் கீழே குதித்து, ஆண்டவரை ஆசனத்தில் வைத்து: நீரே தேவ ஆட்டுக்குட்டி, இஸ்ரவேலின் ராஜா, மகா பிரதான ஆசாரியர், எங்களை மீட்டு ரட்சிப்பவர் என்று அவரை வணங்கியிருப்பான். ஆனால் இவனோ அவரை அநியாயமாய் ஆக்கினைக்குள்ளாக்கி சிலுவையிலறையும்படி செய்தான். இவன் கொடிய முடிவடைந்தான் என்று சரித்திரம் கூறுகிறது.

# 68. புது உடன்படிக்கை

**"அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது" (எபி. 8:10).**

எபிரெயர் எட்டாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் புது உடன்படிக்கையின் வாக்குகள் அறுநூறு வருஷங்களுக்கு முன் எரேமியாவால் கூறப்பெற்றவைகள். கடவுள் சீனாய் மலையில் மோசே மூலமாய் பலவிதிகளை ஏற்படுத்தித் தமது ஜனத்தோடு உடன்படிக்கை செய்தார். இவைகளை ஜனங்கள் ஆசரித்து வந்தும் அவர்கள் ஜீவியம் மாற்றப்படவில்லை, எங்கும் பலிபீடங்களை ஸ்தாபித்து மனங்கொண்டபடி ஆராதனை செய்தார்கள். சகலமும் புறம்பான கொண்டாட்டமாயிருந்த தேயல்லாமல் அவர்கள் கடவுளை அறிவதற்கும், பரிசுத்தமா வதற்கும், இடமில்லை. மார்க்கத்தின் பேரிலே அக்கிரமங்கள் அதிகரிப்பதைக் கண்ட ஓசியா இராஜா எருசலேமுக்கு

வெளியில் பலிகள் செலுத்தக்கூடாதென்றும், எல்லாரும் எருசலேமிலேயே கர்த்தரைத் தொழுது கொள்ள வேண்டுமென்றும் கட்டளையிட்டான். எங்கும் முறுமுறுப்புண்டானது. ஆகிலும் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எருசலேமுக்கு வந்து கிரமமாகத் தொழுது கொண்டார்கள். இந்தச் சீர்திருத்தம் எரேமியாவுக்குச் சந்தோஷமாயிருந்தும் ஜனங்கள் எப்பொழுதும்போலவே சீர்கெட்டவர்களாயிருப்பதைக் கண்டு துயரமடைந்தார். ஏனென்றால் இடம் மாறினதேயன்றி அவர்கள் இருதயம் மாறவில்லை. ஆலயத்தில் நடந்த பலிகளும், ஆசாரியர் ஊழியமும், பலவித ஸ்நானங்களும், ஆசாரங்களும் பார்வைக்குப் பகட்டாயிருந்ததேயன்றி ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக இல்லை என்றறிந்தார். கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி இந்தப் புதிய உடன்படிக்கைகளின் வாக்குகளை வெளியிட்டார். "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போக காலமாயிற்று" என்று எபிரேய நிருபத்தார் சொல்லுகிறார். கடவுளோடு நெருங்கிய ஐக்கியத்தில் பிழைப்பதே மார்க்கத்தின் நோக்கம். ஜனங்களுக்கு அவரோடு ஐக்கியமில்லை என்பதே ஏரேமியாவின் துயரம், இதைப்பற்றி அவர் யோசிக்கையில் கடவுள் ஐக்கியமும் அறிவும் எவ்வாறு கிடைக்கும் என்பதை நாலு வாக்குகள் அடங்கிய புது உடன்படிக்கையால் எரேமியாவுக்குத் தெரிவித்தார். அந்த நாலு வாக்குகளையும் முறையே பார்ப்போம்.

### 1. முதல் வாக்கு

"என்னுடைய பிரமாணங்களை அவர்கள் மனதிலே வைத்து, அவர்கள் இருதயங்களில் அவைகளை எழுதுவேன்" பிரமாணத்தின் மேல் பிரமாணமும், சட்டத்தின் மேல் சட்டமும் பலிக்கவில்லை. நாளுக்கு நாள் அக்கிரமங்களும் மீறுதல்களும் பெருகுகிற இந்த உலகத்துக்கு எத்தனை பிரமாணங்களைத் தான் உண்டாக்குகிறது? அவசரச் சட்டங்களை உண்டாக்கினால் அதற்கு முடிவெங்கே? கடவுள் கொடுத்த பிரமாணங்களில் ஜனங்கள் நிலைத்திருக்கவில்லை. புறம்பான கிரியைகளை ஆசரித்தார்களேயன்றி, நடக்கையோ மாறவில்லை. உடன்படிக்கை உள்ளத்துக்குரியதாயிருக்க வேண்டும்.

புஸ்தகத்தில் எழுதப்பெற்ற பிரமாணங்களை மனிதன் வாசிக்கலாம். அவைகள் அவனுக்குப் புறம்பே யிருக்குமேயல்லாமல் அவன் உள்ளத்தைத் தொடாது. ஒருவேளை அந்தப் பிரமாணங்களை நமது மனதில் ஏற்றுக்கொள்ளலாம். அவை நமது எண்ணங்களோடு கலந்து நமது ஆசை விருப்பங்களை ஆண்டு நடத்தலாம். பிரமாணம் புஸ்தகத்திலிருப்பதைவிட மனதில் பிரவேசிப்பது நல்லது. ஆனால் அவைகள் நமது இருதயங்களில் தங்குவதே விசேஷம். இருதயம் அன்பின் ஸ்தானம். மனுஷனுக்கு இருதயமே முக்கியம். ஆண்டவர் தமது பிரமாணங்களை நமது இருதயங்களில் எழுதுவேன் என்கிறார். இதன் கருத்தென்ன? ஆண்டவர் தமது சீஷர்களுக்குப் பிரமாணங்களையும் சட்டங்களையும் உண்டாக்கவில்லை. ஞானஸ்நான ஆராதனை, ராப்போஜன ஆராதனை விவாக அடக்க ஆராதனைகள் எவ்வாறு நடத்தப்படவேண்டுமென்று அவர் போதிக்கவில்லை. ஆலயக்கட்டுமானம், ஆராதனை ஒழுங்கு இவைகளைப்பற்றி விதிகள் ஏற்படுத்தவுமில்லை. அவர் ஒன்று செய்தால் சகலமும் நன்றாய் நடக்கும் என்பதை அவர் அறிவார். தமது ஆவியை அவர்கள் இருதயங்களில் வைத்தால் சகலத்திலும் தேவ சித்தத்தை அறிந்து, சகலத்திலும் கடவுளுக்குப்பிரியமானதைச் செய்வார்கள் என்று நிச்சயித்தார். ஆண்டவர் விருப்பம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. கிறிஸ்துவே அவர்களுக்கு பிரமாணமானார். அவர் தமது ஆவியால் அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்தினார். தேவசித்தமே அவர்கள் சித்தமாயிற்று. கிறிஸ்துவின் சிந்தையே சகல பிரமாணங்களுக்கு மேலான பிரமாணம். இதுவே புது உடன்படிக்கையின் மேன்மையும் சுயாதீனமுமாகும்.

**2. இரண்டாம் வாக்கு**

"நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" எவ்வளவு உன்னதமான சம்பந்தம்! எவ்வளவு ஐசுவரியமுள்ள சம்பந்தம்! எவ்வளவு அன்புள்ள சம்பந்தம்! பாவம் கடவுளையும் மனுஷனையும் பிரித்தது. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரான கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாய் அந்தப் பிரிவை அகற்றி பரமபிதாவையும் நம்மையும் இணைக்கிறார். இந்த ஐக்கியத்துக்குக் குறைந்தது கிறிஸ்து மார்க்கமல்ல, பாவத்தால் இழந்ததைத் திரும்ப நாம் பெற்றுக்

கொள்வதே ரட்சிப்பாகும். "கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் சேர்ப்பதற்காக மரித்தார்" பிதாவே நீர் என்னுடையவர், நான் உம்முடையவன் என்னும் இந்த ஐக்கியத்தை அறியாமல் புறம்பான ஆசாரங்களிலே நம்பிக்கை வைத்திருப்பவர் அநேகர். இந்தப் புது உடன்படிக்கைப்படி நாம் கடவுளுக்குச் சொந்தமும், அவரும் அவர் ஆசீர்வாதங்களும் நமக்குச் சொந்தமும் ஆகின்றன. "மகனே, நீ எப்போதும் என்னோடிருக் கிறாய். எனக்குள்ள தெல்லாம் உன்னுடையதே" என்று தகப்பன் மூத்தவனுக்குச் சொன்னதுபோல பரமபிதாவும் நமக்குச் சொல்லுகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். நாம் அவைகளை அனுபவியாதிருப்பது நமது குற்றமே, நான் உன் பிதா, நீ என் பிள்ளை என்று அவர் உடன்படிக்கை செய்திருந்தும் நாம் அவரைச் சந்தேகித்து ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம். ஆனால் ஒன்று கவனிக்கவேணும். "நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" என்று சொன்னவர் உண்மையுள்ளவர். தமது வாக்கைக் காத்துக்கொள்ளுகிறவர். "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" என்ற விஷயத்தில் நாம் உண்மையாயிருக்கிறோமா? நம்மையும் நமக்குள்ள யாவையும் அவருக்குச் சொந்தமாக்கியிருக்கிறோமா? இல்லையென்றால் நாம் ஆசீர்வதிக்கப்படாதிருப்பது ஆண்டவர் குற்றமல்ல. எந்த ஐக்கியத்துக்கும், இருபட்சத்தாருடைய சம்பந்தமும் இணக்கமும் அவசியம்.

### 3. மூன்றாம் வாக்கு

"சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரை எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டியதில்லை" கடவுள் அறிவுக்கு நிகரான அறிவு மேலுமில்லை கீழுமில்லை. பற்பல சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் தாங்கள் கண்ட நூதன விஷயங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். உலகமும் அவர்களைப் போற்றுகிறது. சர்வத்தையும் சிருஷ்டித்து ஆண்டு நடந்தும் கடவுளை அறியும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? அந்த அறிவுதான் நித்திய ஜீவன். புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரான கிறிஸ்துமூலம் கடவுள் ஐக்கியமும் அறிவும் நமக்குக் கிடைக்கும். "எல்லாரும் என்னை அறிவார்கள்"

என்கிறார். கடவுளைப்பற்றி அறியும் அறிவு வேறே; கடவுளையே அறியும் அறிவு வேறே. நாம் எல்லாரும் நமது சக்கரவர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டு அறிந்திருக்கிறோம். அவரை முகமுகமாய் நாம் அறிந்ததில்லை. நாம் தம்மை நேருக்கு நேர் அறியவேண்டுமென்று பரமபிதா விரும்புகிறார். அநேகருடைய அறிவு இரண்டாம்கை அறிவாகயிருக்கிறது. அது கேள்வி அறிவேயன்றி அனுபவ அறிவல்ல. போதகர் கடவுளைப்பற்றிச் சொல்வதுதான் தெரியும். தாங்களாக கடவுளோடு பழகவுமில்லை, அவரை அறியவுமில்லை. இது எவ்வளவு பரிதாபம்! மற்றவர்கள் போதனை நமக்கு அவசியமானாலும் நாமே நேரில் சென்று கடவுளை அறிய வேண்டும். இஸ்ரவேலர் மார்க்கம் ஏக மார்க்கம். கடவுள் அவர்களை மொத்தமாக நடத்தினார். ஆசாரியன் எல்லாருக்காகவும் காரியங்களை நிறைவேற்றுவான். இஸ்ரவேலன் தன் காணிக்கையைச் செலுத்திவிடவேண்டியது. அவ்வளவு தான் முடிந்தது. தனிப்பந்தி என்பது பேசக்கூடாது. புது உடன்படிக்கையில் இந்த மோசம் அடிபட்டது. சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரை ஒவ்வொருவனும் கடவுளை அனுபவத்தில் அறிந்திருக்கவேண்டும். பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பரானவர்களை ஒதுக்கி, என்னிடத்தில் நேரே வந்து கற்றுக்கொள்ளுங்கள் என்றார் பகவான். சர்க்கார் உத்தியோகத்தின் மேலான பதவியிலிருந்த ஒரு வைத்தியரைப் பார்த்து: தேவபக்திக்குரிய உங்கள் அனுபவமென்னவென்று கேட்க, அதற்கு அவர்: எனக்கு வேதம் வாசிக்கவும், தியானம் பண்ணவும் நேரமில்லை. எனக்காகச் சாமியாரே எல்லாம் பார்த்துக்கொள்ளுவார் என்றார்.

## 4. நாலாம் வாக்கு

"ஏனென்றால், நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என்கிறார். இந்த நாலாவது வாக்கின் மூலமாகத்தான் முதல் மூன்று வாக்குகளும் நிறைவேற வேண்டியது. இருதயம் பாவதோஷங்களால் கெட்டு, மனச்சாட்சி வேதனையுண்டாக்கும்போது, பிரமாணங்களை இருதயங்களில் எழுதுவதும், பிதாவும் பிள்ளையும்போல் கடவுளோடு நாம் உறவாடுவதும், கடவுளை அறிகிற அறிவில் வளருவதும் எப்படி முடியும்? ஆகையால்

ஆண்டவர் இந்த காலம் வாக்கைக் கூறுமுன் "ஏனென்றால்" என்கிறார். நமது பாவங்களை முந்தி மன்னித்து, அக்கிரமங்களை அகற்றி, அவைகளை இனி நினைக்கவும் மாட்டேன் என்று வாக்கருளுகிறார். மனுஷருடைய சுயநீதி, நற்கிரியையினிமித்தம் அவர் நமது பாவத்தை மன்னிக்காமல் கிறிஸ்துவின் மரணத்தினிமித்தம் நமக்குத் தயவாய் இலவசமாய் மன்னிக்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் இந்த மன்னிப்பை உண்டாக்கி, கிறிஸ்துவுக்குள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். இது அவருடைய அளவில்லாத அன்பு. இதை அறிந்ததும் பாவியின் உள்ளம் உருகிப்போகிறது. பிதாவின் கிருபையை அனுதாபத்தை கிறிஸ்துவில் பிரத்தியட்சமாய் காண்கிறோம். மன்னிப்பின் மூலமாய் மற்ற மூன்று வாக்குகளும் பலிக்கின்றன. பட்டணத்தில் ஊர்க்குப்பைகளை நெடுங்காலமாகக் கொட்டிவந்த ஓரிடத்தை நகர அதிகாரிகள் வாங்கி அதைப் பூந்தோட்டமாக்கினபோது, அதன் அழகைக் கண்டு மகிழாதவர்கள் இல்லை. பாவத்தால் கெட்டுப்போன ஒரு பாவியை ஆண்டவர் பிடித்து எல்லாரும் விரும்பும் அழகுவாய்ந்த பக்தனாக்குவதும் இதுபோலவே.

## 69. முடிந்தது

**"முடிந்தது என்று சொல்லித் தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவா. 19:30).**

இது ஒரே சிறு வார்த்தையாயினும் அளவில்லாத ஆசீர் வதங்கள் அடங்கின வார்த்தையாகும். சாகப்போகிறவர்கள் கஷ்டமெல்லாம் ஓய்ந்து, ஆவிபிரியும் வேளையில் பெருமூச்சோடு முடிந்ததென்று சொல்வதுபோல் இது சொல்லப்பட்டதல்ல. மகாபெரிய வேலையை எடுத்துக் கொண்டவன் அது முடியுங்காலம் வரும்போது முடிந்தது என்று மகிழ்ச்சியோடு சொல்வதுபோலவும், பெரிய யுத்தத்தை நடத்துகிறவன் ஜெயம்பெறும் நாளில் முடிந்தது என்று வெற்றியுடன் சொல்வதுபோலவும் கூறப்பட்ட வார்த்தை இது. இந்த வார்த்தைமேல் பிரசங்கிப்போர் நியாயப்பிரமாணங்கள் முடிந்தன. தீர்க்கதரிசனங்கள் முடிந்தன; பலிகள் சடங்குகள் அடையாளங்கள் முடிந்தன. தேவ தீர்மானம் முடிந்தது. ரட்சிப்பு

முடிந்தது என்று எத்தனையோ முடிந்ததாக தொடர்ச்சியாகப் பேசுவதுண்டு. ஒருவகையில் இது சரிதான். ஆனால் பேதுரு "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். **(அப். 3:21).** இதனால் இன்னும் நிறைவேறி முடியவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டென விளங்குகிறது. ஆண்டவரைச் சம்பந்தப்பட்ட காரியங்கள் நிறைவேறினதென்பது உண்மையே. ஆனால் அவர் நம்மில் நடப்பிக்க வேண்டிய காரியங்களோ இன்னும் முடியவில்லை. சிலுவையில் சம்பாதிக்கப்பெற்ற ரட்சிப்பு இன்னும் நம்மில் பூரணப்படவில்லை. மேலும் அவர் முடிந்தது என்று சொன்னபோது அவர் மனதில் இருந்த எண்ணமென்ன என்பதையே நாம் கண்டுபிடிக்க வேண்டும். நாமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு போவதில் பிரயோஜனமில்லை.

**1. அவர் செய்யும்படி வந்த வேலை முடிந்தது**

இது அவருக்குப் பெரிய வெற்றியாகயிருந்தது. தாம் ஒரு விசேஷித்த வேலையைச் செய்து முடிக்க பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதை அவர் ஒருபோதும் மறந்தவரல்ல. பன்னிருபிராயத்தில் சிறுவனாயிருக்கையில்: "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்று கேட்டார். தாம் நிறைவேற்றவேண்டிய வேலையின் உணர்ச்சி அப்போதே அவருக்குள் தோன்றினது. நாசரேத்திலிருந்த காலத்தில் இந்த உணர்ச்சி அதிகமாய் வளர்ந்து புலப்பட்டது. அவர் தனித்து ஜெபித்த நேரங்களில், பிதாவோடுள்ள ஐக்கியத்தால் தமது வேலையை உறுதிப்படுத்திக் கொண்டார். வேதாகமத்தை ஆராய்ந்து படிக்கையில் தம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிற யாவையும் கண்டு, தாம் நிறைவேற்ற வேண்டிய வேலையின் ஒழுங்கைத் திட்டமாய் அறிந்தார். மனுமக்கள் பாவங்களையும் அவர்கள் படும் பாடுகளையும் பார்த்து தமது வேலையில் பிரவேசிக்க மகா ஆவலுள்ளவரா யிருந்தார். அவர் வேலையில் பிரவேசித்தபின் எல்லாருக்கும், எப்பொழுதும் எல்லா இடங்களிலும் வேலை செய்யும் ஊழியக்காரரானார். பிதா தமக்குக் கற்பித்த வேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்பது அவரது ஒரே

நோக்கமாயிருந்தது. "நான் முழுக வேண்டிய ஓர் ஸ்நானம் உண்டு. அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்றார். பசியாயிருக்கிறீரே, போஜனம்பண்ண வேண்டாமா என்று கேட்டால், நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்குண்டு. "என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே எனக்குப் போஜனம்" என்கிறார். "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்" என்கிறார். கடைசி இரவில் பிதாவைப் பார்த்து: "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" என்றார். அவர் ஜீவியத்தைப் படிப்போமானால் பிதா அவருக்கு ஒரு விசேஷித்த வேலையைக் கொடுத்தாரென்பதும், அந்த வேலையை முடிக்க வேண்டுமென்கிற ஆவல் ஆண்டவரைப் பூரணமாய் ஆண்டு நடத்தினதென்பதும் திட்டமாய் விளங்கும்.

இந்த வேலைக்கொப்பான வேலையைச் செய்தவர் பூமியில் எவருமில்லை. யுத்தவீரன் ராஜ்யங்களைக் கைப்பற்றப் போராடுகிறான். தேசாபிமானி தேசத்தை விடுவிக்க முயற்சிக்கிறான். தத்துவஞானி அறிவைப் பெருக்க ஆராய்ச்சி செய்கிறான். சாஸ்திரி இயற்கையிலுள்ள அரிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும்படி சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறான். நூதன தேசங்களைக் கண்டு பிடிப்பவன் ஆபத்துக்கஞ்சாமல்போய் மடிகிறான். பாவத்தையும் மரணத்தையும் அழித்து மனுமக்களை ரட்சிக்கும்படி போராடினவன் யார்? மகா உன்னதமான வேலையைச் செய்யும்படி ஆண்டவர் உலகில் வந்தார். சிலுவையில் தொங்கினபோது தமது ஜீவியம் முழுவதையும் பின்னாக நோக்கினார். தாம் செய்யவேண்டிய காரியங்களில் ஏதாவது ஒன்று விடப்பட்டிருக்கிறதா? தமது பலத்தை, வரத்தை, நேரத்தை வீணாக்கினதுண்டா? இல்லை. எல்லாம் ஒழுங்காய் பூரணமாய் நிறைவேறினதென்பதை அறிந்து முடிந்தது என்னும் வெற்றிவார்த்தை கூறினார். பல வருடங்களாக கஷ்டப்பட்டு ஒரு பெரிய புஸ்தகத்தை எழுதுபவன் கடைசி அதிகாரம் முடிந்தவுடன் "முற்றிற்று" என்று எழுதும் வண்ணமாய், ஆண்டவர் பிதாவின் மகிமைக்காகவும் பாவிகள் ரட்சிப்புக்காகவும் தாம் ஏற்றுக்கொண்ட மகத்தான வேலை நிறைவேறினபோது "முடிந்தது" என்றார்.

## 2. மனுமக்களுக்காக நிறைவேற்றின வேலை

ஆண்டவர் முடித்த வேலை பிதா தமக்குக் கொடுத்த வேலையாக அவர் உணர்ந்து, அடிக்கடி அதைப்பற்றிப்பேசி, அதைப் பூரணமாய் முடிந்தபோதிலும், அது மனுமக்களுக்காகவே செய்யப்பட்டவேலை என்பதும் நிச்சயம். ஒரு கிராமத்து ஜனங்கள் வீடற்று, ஆகாரமற்று, கொடிய தரித்திரத்தில் சஞ்சலமடைந்திருந்தபோது, அரசன் ஸ்தானாதிபதியை அனுப்பி அவர்களுக்கு வேண்டிய சகல நன்மைகளையும் செய்யும்படி கட்டளையிட்டான். இவன் அங்குபோய் நான் அரசன் கட்டளைப்படி செய்ய வந்தேன் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டு, வீடுகளைக் கட்டுகிறதும், கிணறுகளை வெட்டுகிறதும் ஆகார வஸ்திரங்களைக் கொடுப்பதும், பயிரிடுகிறதற்கு வேண்டிய மாடுகளைக் கொடுப்பதுமாகயிருக்கிறான். இவைகளை அவன் செய்யும்போது, என்னை அனுப்பினவருடைய சித்தப்படி ஒன்றும் தவறாமல் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டே காரியங்களை முடித்தான். உண்மையாக அவன் செய்ததென்ன? அக்கிராமத்து ஜனங்களுக்காகவே எல்லாவற்றையும் செய்தான். வேலைக்கு பெயர் அரசன் வேலை; வேலையின் பலனோ கிராம ஜனங்களுக்கு ஆண்டவர் “பிதாவின் வேலை” “பிதாவின் வேலை” என்று இடைவிடாமல் சொன்னபோதிலும் அது நமக்காகவே செய்யப்பட்ட வேலை என்பது நிச்சயம்.

## 3. பாடுகளும் முடிந்தன

வேலையோடு பாடும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பாடில்லாத வேலையில்லை. வேலையின் தன்மைக்குத் தக்கபடி பாடுண்டு. ஒரு குடிசையையும் கட்டி முடிக்கிறவனும், தன் கஷ்டம் முடிந்ததென்கிறான். ஒரு பெரிய மாளிகையைக் கட்டி முடிக்கிறவனும் தன் கஷ்டம் முடிந்ததென்கிறான். இரு கஷ்டங்களுக்கும் வித்தியாசமில்லையா? ஒரு சிறிய பரீட்சை எழுதும் மாணாக்கனும் கஷ்டம் தீர்ந்ததென்கிறான். உயர்ந்த பரீட்சை எழுதும் மாணாக்கனும் தன் கஷ்டம் தீர்ந்ததென் கிறான். இருவர் பட்ட கஷ்டங்களும் ஒன்றல்ல. ஆண்டவர் பூமியில் நிறைவேற்ற வந்த வேலை ஒப்பற்றதென்பதை முன்னமே கூறினோம். அந்த ஒப்பற்ற வேலைக்கு ஒப்பற்ற பாடு அவசியம். அவர் பாடு அனுபவிப்பதற்கு அவரில்

குற்றமொன்றுமில்லை. ஆனால் பாவமும் அக்கிரமும் அநியாயமும் நிறைந்த உலகத்தில் அவர் மாசற்ற நன்மைச் சொரூபியாய் வந்தபோது, சாத்தான் சகிக்க முடியாமல், தன் ஆட்களைக் கொண்டு அவரைப் பாடுபடுத்தினான். நாம் ஒரு நல்ல காரியத்தைக் கஷ்டமின்றிச்செய்ய முடியாது. நல்ல விஷயங்களுக்கு எப்போதும் இடையூறுகள் நேரிடும். பாடுகளுக்கு அஞ்சுகிறவர்கள் நற்காரியங்களைச் செய்து முடிக்க மாட்டார்கள். அவைகளைப் பொறுமையோடு சகிப்பவர்களே வெற்றியடைவார்கள். ஆண்டவருடைய மகத்தான வேலை திடீரென முடிவடைந்தது. அவர் சிலுவைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்ததைக் கண்டதும், அவரது சீஷர்கள் ஓடி மறைந்தார்கள். இது ஒரு பெரிய தோல்வியாக அவர்களுக்குத் தோன்றிற்று. இனத்தாரும் அப்படியே நினைத்துத் துயரமடைந்தார்கள். சிநேகிதரும் அப்படியே எண்ணினார்கள். அவரால் நன்மைபெற்ற திரளான மனுஷரும் அப்படியே நினைத்து அங்கலாய்த்தார்கள். சத்துருக்களோ அதைப்போல் அவர்கள் அடைந்த வெற்றி வேறில்லை. தாங்கள் நினைத்தபடி அவரைக் கொன்றுவிட்டதால், அவர் தோல்வியடைந்தார் என்றே அவர்களும் பேசிக்கொண்டார்கள். உலகத்தின் பார்வையில் ஆண்டவர் மரணம் பெரிய தோல்வியாகவே காணப்பட்டது. அவர் பாடுகளின் சரித்திரத்தை வாசிக்கும் போது சத்துருக்களை வெற்றியடைந்ததாகவும் அவரோ தோல்வியடைந்ததாகவும் தோன்றும்.

ஆனால் அவர் முடிந்தது என்று சொன்னபோது நிகரற்ற வெற்றிடைந்தார். எப்படியென்றால் சத்துருக்கள் தம்மை பாடுபடுத்திக் கொன்றபோதிலும், பிதா தமக்குத் தந்த வேலையின் பாடுகளும் சம்பந்தப்பட்டிருப்பதை அவர் அறிவார். தமது வேலை, பிதாவின் சித்தம் என்பது அவருக்குத் தெரியும். தமது ஜீவியம், உபதேசம், நற்கிரியைகளால் மாத்திரம் உலகம் ரட்சிக்கப்படாதென்றும், நமது இரட்சிப்புக்குத் தமது பாடுகள் மரணம் அவசியமென்றும், அவர் நிச்சயமாய் அறிவார். இங்கே சத்துருக்கள் வீரம் பேச இடமில்லை. தங்கள் சாமர்த்தியம் திறமையால் கொன்று போட்டார்கள் என்று சொல்லவும் இடமில்லை. அவர் ஜீவனை எடுக்க ஒருவனாலும் முடியாது. பாடுபடவேண்டுமென்பது பிதாவின் ஒழுங்காயிருந்த

படியால் தேவாட்டுக்குட்டியாகிய அவர், சத்துருக்களின் கையில் மனதாரத் தம்மை ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய முன்னறிவின்படியேயும் ஆலோசனையின்படியேயும் பாடுகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இயேசுவை அவர்கள் பிடித்துக் கொலை செய்தார்கள். இதை ஏற்கனவே சீஷருக்குச் சொன்னார். இந்த இரகசியத்தை அவர்கள் அறிந்து கொள்ள முடியாமல் இடறலடைந்தார்கள். சகலமும் பின்னுக்கு விளங்கும் என்ற நம்பிக்கையுடன் ஆண்டவர் தம்மை மரணத்துக்கு ஒப்புவித்தார். இரட்சிப்பின் அதிபதியாகிய ஆண்டவர் தமது பாடுகளால் பூரணராகி முடிந்தது என்று சொல்லி வெற்றி கூறினார்.

### 4. முடிந்தது என்றாலும் முடியவில்லை

ஆண்டவர் முடிந்தது என்று சொன்னபோது நமது ரட்சிப்புக்காக அவர் நிறைவேற்றவேண்டிய வேலையும், அதன் சம்பந்தமான பாடுகளும் முடிந்ததென்பதே அவர் கருத்து. ஆனால் அவர் சம்பாதித்த ரட்சிப்பு நம்மில் தொடங்கிப் பூரணப்பட வேண்டியதாயிருக்கிறது. இந்த இரட்சிப்பின் சுவிசேஷம் எருசலேம் தொடங்கி பூமியின் கடைசி பரியந்தமும் பிரசங்கிக்கப்படவேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளு கிறவர்கள் பாவமன்னிப்புப்பெற்று தேவமக்களாகிறார்கள். இது ரட்சிப்பின் ஆரம்பம். இது முதல் அவர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிலும், அன்பிலும், ஐக்கியத்திலும், நாளுக்குநாள் வளர்ந்து அவருடைய நிறைவான வளர்ச்சிக்கு வரவேண்டியது. கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான நாம் மாறுவதே இரட்சிப்பின் முடிவான நோக்கம். இதை அநேகர் கவனிக்கிறதில்லை. விசேஷித்த கூட்டங்களில் பாவ உணர்வடைந்து கிறிஸ்துவை நம்பி பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் உண்டு. பிரசங்கிமார் அந்த நாளைக் குறித்துக்கொள்ளும்படி அவர்களுக்குச் சொல்லுவார்கள். அவர்களும் அப்படியே குறித்துக்கொண்டு இத்தனாம் வருடம் குணப்பட்டோம் என்று பழைய வருடங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். உண்மையாய் ரட்சிப்பைப் பெற்றிருந்தால் நல்ல காரியந்தான். ஆனால் இரட்சிப்பு அன்றோடு முடிந்த காரியமல்ல. ஒரு விதை முளைத்து பெரிய விருட்சமாவது போலவும், ஒரு குழந்தை பிறந்து பூரண புருஷனாக வளருவதுபோலவும், மறுபடி பிறந்த வர்கள் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக வளர வேண்டும்.

நம்மில் ஆரம்பித்த ஜீவன் பரிபூரண ஜீவனாக வேண்டும். இதற்கு கிறிஸ்துவோடுள்ள இடைவிடாத ஐக்கியம் அவசியம். தங்கள் மனம்போல் நடந்து கொண்டு, இன்ன வருடத்தில் இரட்சிக்கபட்டோம் என்று நினைத்துக் கொண்டிருப்பது மோசம். நம்மில் ஆரம்பித்த ரட்சிப்பு முடியவில்லை.

நமது வேலை முடியவில்லை: ஆண்டவர் எவர்களை இரட்சிக்கிறாரோ அவர்களைத் தமது சாட்சிகளாக்குகிறார். நமது அறிவுக்கும், பலத்துக்கும், வரத்துக்கும், சமயத்துக்கும் ஏற்றபடி நாம் தேவராஜ்யத்திற்காக ஊழியஞ் செய்யவேண்டும். இந்த ஊழியத்தில் இடைவிடாமல் நிலைத்திருக்கவேண்டும். முழுமனதோடும் மற்றவர்களுடைய ரட்சிப்புக்காகவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் பலப்படுவதற்காகவும் நாம் வேலை செய்ய வேண்டும். இளைப்பாறுதலின் காலம் இனி வருகிறதாயிருக்கிறது. அதுவரை நமதாண்டவரைப்போல் மரணபரியந்தம் நாம் கிரியை செய்யவேண்டும்.

தமது பாடுகள் முடியவில்லை: கிறிஸ்துவை பின் செல்லுகிறவர்கள் தேவபக்தியாய் நடப்பவர்கள் பாடுபடு வார்கள். பாடுகள் கிறிஸ்தவ ஜீவியத்தோடு சம்பந்தப் பட்டிருக்கின்றன. இந்த உலகம் மோட்சமாக மாறிவிடவில்லை. சகல மனுஷரும் தேவபக்தர்களாகிவிடவில்லை. பொல்லா தவர்கள் நடுவில் எஜமான் பாடுபட்டதுபோல, அவரைப் பின் செல்பவர்களும் பாடனுபவிக்க வேண்டும். பரம பிதா நம்மைப் பாடுபடுத்துகிறதில்லை. ஆனால் அவபக்தர்கள் மத்தியில் நமக்குப் பாடுகள் உண்டென்று அவர் அறிவார். இந்தப் பாடுகளை நாம் பொறுமையாய்ச் சகித்து, கிறிஸ்தவ ஜீவியத்தில் பூரணப்பட வேண்டுமென்பது அவரது சித்தம். ஆகையால் நமது பாடுகள் இன்னும் முடியவில்லை.

சகலமும் இன்னும் நமது பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்படவில்லை. ஆண்டவர் பாதத்துக்குச் சகலமும் கீழ்ப்பட்டாயிற்று. நமக்கு இன்னும் கீழ்ப்படுத்தப்படவில்லை. பாடுகள், போராட்டங்கள், சகல இடையூறுகள் மத்தியிலிருந்து இப்போது நாம் ஆண்டவரைச் சேவிக்கிறோம். சகல இடறல்களும் நீக்கப்பட்டு, யாதொரு போராட்டமில்லாமல் தேவராஜ்யத்தில் நம் மகிழ்ச்சியோடு ஊழியஞ்செய்யும் காலம் இனிவருகிறது. அப்போது பிதாவுக்கு முன்பாக நாம்

ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருப்போம். அந்தக் காலம் இன்னும் வரவில்லை.

# 70. லோத்து தீர்மானம்

***"லோத்து யோர்தானுக்கருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான்" (ஆதி. 13:11).***

உலகத்தில் முன்னுக்கு வருவது யாவருக்கும் பிரியமே. முன்னுக்கு வருவது என்றால் என்னவென்பதற்கு அர்த்தம் தெரியவேண்டும். எதை ஒருவன் மேன்மையாக எண்ணுகிறானோ அதுவே அவனுக்கு முன்னுக்கு வருவது. ஒருவனுக்குச் சிறந்த கல்விமானாவது முன்னுக்கு வருவது. ஒருவனுக்கு பலத்த போர்வீரனாவது முன்னுக்கு வருவது. ஒருவனுக்கு செல்வாக்குண்டாவது முன்னுக்கு வருவது, ஒருவனுக்கு திரண்ட ஆஸ்தியிருப்பது முன்னுக்கு வருவது. ஒருவனுக்கு அநேக ஏக்கர் நிலங்கள் இருப்பது முன்னுக்கு வருவது, ஒருவனுக்கு அநேக வீடுகள் இருப்பது முன்னுக்கு வருவது, இவ்வாறு அவனவன் எதை அடைய விரும்புகிறானோ அதுவே அவனுக்கு மேன்மையாய்த் தோன்றுகிறது. இது இளமையில் தோன்றாவிட்டாலும் தகுந்த வயது வரும்போது அவனவனுடைய வாழ்க்கையின் நோக்கம் என்னவென்பது வெளிப்படாமற்போகாது. அவனவன் தன் ஆவி, ஆத்துமா, சரீரம், பலம், நேரம், யாவற்றையும் ஏதோ ஒரு விஷயத்துக்குத் தத்தஞ்செய்யும் வேளை கட்டாயம் வரும். ஒருவனுடைய ஜீவியத்தில் அதைப்போல் பயபக்திக்குரிய சமயம் வேறெதுவுமில்லை. அந்தச் சமயத்தில்: நான் இதற்காகவே பிழைக்கப்போகிறேன் என்று மனுஷன் தீர்மானிக்கிறான்.

### 1. லோத்தின் தீர்மானம்

சமயம் வரும்போதுதான் அவனவனுடைய உட்கருத்து வெளியாகும். ஆபிரகாமை கடவுள் அழைத்தபோது லோத்துவும் ஆபிரகாமோடு சேர்ந்து புறப்பட்டான். ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாத வாக்கில்

லோத்துக்கும் பங்குண்டென்பதுபோல் தோன்றுகிறது. ஆபிரகாமோடுகூடவே பிரயாணம் செய்தான். கூடாரங்களில் பரதேசிபோல் வசித்தான். ஆபிரகாம் பலிபீடம் போட்டுத் தொழுதுகொள்ளும்போது இவனும் கூடவேயிருந்தான். ஆபிரகாம் எகிப்திலிருந்து திரும்பினபோது திரண்ட ஐசுவரியத்தோடு வந்தார். லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களுமிருந்தன. அவர்கள் ஆஸ்தி மிகுதியாயிருந்த படியால் ஒருமித்து வாசம் பண்ண முடியவில்லை. இது காரணத்தால் ஆபிரகாம் மந்தை மேய்ப்பருக்கும் லோத்து மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. இச்சமயத்தில் ஆபிரகாம் லோத்தைப் பார்த்து: நாம் சகோதரர், நமக்குள் வாக்குவாதம் வேண்டாம். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன்பாகயிருக்கிறது. நீ உன் இஷ்டப்படி போகலாம். நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன் என்று சொல்லி லோத்தே தெரிந்துகொள்ளும்படி கேட்டுக் கொண்டார். தீர்மானிக்கும் வேளை வந்தது. இப்போதுதான் லோத்து யாரென்று வெளிப்படப்போகிறது. இதுவரை யாரும் அவன்மேல் எவ்வித சந்தேகங்கொள்ளவும் இடமில்லை. இப்போது அவன் செய்யப்போகிற தீர்மானத்திலிருந்துதான் இதுவரை அவனுக்குள் மறைவாயிருந்த ஜீவியத்தின் நோக்கம் தெரியப்போகிறது.

லோத்து மறுவார்த்தையின்றி உடனே தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். யோர்தான் நதிக்கருகான சமபூமிமுழுவதும் நீர்வளம் பொருந்தியிருக்கக்கண்டான். சோதோம் கொமோரா கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்தைப்போலவும் செழிப்பாயிருந்தது. உடனே அந்தச் சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு கிழக்கே புறப்பட்டுப் போனான். இவ்வாறு அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். ஐயோ, என்ன பரிதாபம்! எகிப்தின் ஐசுவரியத்தைக் கண்ட நாள் முதல் அவன் சரீரம் ஆபிரகாமோடேயிருந்தாலும் அவன் இருதயம் எகிப்திலிருந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. ஆண்டவர்மேல் அன்பில்லா திருந்தும் ஆராதனைக்கு மனுஷர் ஒழுங்காய் வந்து உட்காருவத போல, லோத்தும் ஆபிரகாம் தொழுதுகொள்ளும்போது கூடவேயிருந்தான். அவன் உத்தம பக்தனாயிருந்தால்,

பிரிந்துபோகும்படி ஆபிரகாம் ஆலோசனை சொன்னவுடனே கண்ணீர் விட்டு: கடவுள் சிநேகிதனாகிய ஆபிரகாமே! உம்மை விட்டுப் பிரியலாமா? என் ஆஸ்தியாகிலும் போகட்டும். நீரும் உமது தேவனும் எனக்கு வேண்டும். பிரிந்து போகிற பேச்சை விட்டு விடும் என்று மன்றாடியிருப்பான். அப்படிச் செய்யவில்லை. எகிப்தைப்போல் செழிப்பான சோதோம் கொமோரோ அவன் உள்ளத்தில் பதிந்திருந்தது. சமயம் வாய்த்தவுடனே தான் நாடின இடத்தை நோக்கிப் போய்விட்டான். லோத்து செய்த தீர்மானம் இதுவே.

## 2. லோத்து முன்னுக்கு வருவது

மனுஷர் எவைகளை முன்னுக்கு வருவதாக கருதுகிறார்கள் என்பதை ஏற்கனவே கவனித்தோம். லோத்து முன்னுக்கு வரப்பார்ப்பது அவைகளில் ஒன்றாகும். அவன் திரண்ட ஆஸ்தியுள்ளவனாகும்படி விரும்பினான். இது முன்னுக்கு வருவதோ அல்லது பின்னுக்குப் போவதோ என்பதை இவன் விஷயத்தில் படிப்படியாய்ப் பார்ப்போம். அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து சமபூமியிலுள்ள செழிப்பான நகரங்களைக் கண்டான். வியாபாரம் செய்வதற்கும் விரைவில் பொருள் சம்பாதிப்பதற்கும் நகரங்கள் தகுந்த இடங்களாகும். பட்டணங்கள் எப்பொழுதுமே சகல தீமைகளுக்கும் உறைவிடமென்பதை வேத சரித்திரத்திலும், உலக சரித்திரத்திலும் காணலாம். "சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள்?" இவர்கள் செய்த பாவங்கள் எவையென்பதை எசேக்கியேல் *16:49*–ல் காணலாம். தேவனுடைய நகரம் வெளிப்படும் வரை உலகத்தில் நகரங்கள் அக்கிரமங்கள் நிறைந்தேயிருக்கும். கடவுள் மனுஷனை உண்டாக்கி ஒரு நகரத்தில் வைக்காமல் அவனைத் தோட்டத்தில் வைத்த ஞானத்தையும் நாம் யோசிக்க வேண்டும்.

லோத்து "சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்" *(ஆதி. 13:12)*. நான் கடவுளை அறிந்த மனுஷன். அவர்கள் கடவுளை அறியாத பொல்லாதவர்கள். அவர்கள் மத்தியில் போய் குடியிருப்பது நல்லதல்ல. பட்டணத்துக்கு வெளியே கூடாரம் போட்டுக்கொண்டு இங்கிருந்தே அவர்களோடு வியாபாரம்பண்ணி ஆஸ்தியைச் சேர்க்கக் கூடும். நான்

அவர்கள் மத்தியில் வசித்தால் அவர்கள் பாவத்தால் நானும் கெட்டுப்போக நேரிடும், அவர்களுக்கு எதிரே வசிப்பேனானால் என் வியாபாரத்துக்கு அனுகூலமாயிருக்கும், என் பக்திக்கும் ஆபத்துவராது என்று எண்ணினவனாக சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்.

லோத்து "சோதோமிலே குடியிருந்தான்" *(ஆதி. 14:12)*. அவன் முன்னுக்கு வருகிற வழியைப் பாருங்கள். அவன் சோதோமுக்கு வெளியே கூடாரம் போட்டிருக்கையில், பட்டணத்து வியாபாரிகள் வியாபார விஷயமாய் அவனிடத்தில் வருகிறதும், போகிறதுமாயிருந்தார்கள். லோத்தின் கையில் பொருள் பெருக ஆரம்பித்தது. என்றாலும் பட்டணத்துக்கு வெளியிலிருப்பது அவ்வளவு அனுகூலமல்ல. வியாபாரிகள் தன்னைத் தேடி வரவேண்டியதாயிருக்கிறது. அவர்கள் மத்தியில் வசித்தால் வியாபாரத்துக்கு மிகவும் அனுகூலமா யிருக்கும். ஆஸ்தி விரைவில் பெருகவும் ஏதுவாயிருக்கும். ஆகையால் அவன் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டு பட்டணத்தார் மத்தியில் போய் வாசம்பண்ணினான். சோதோம் கொமொரோவின் அக்கிரமங்கள் வானபரியந்தம் எட்டின. ஐந்து ராஜாக்கள் யுத்தஞ்செய்து சோதோம் கொமோரோ விலுள்ள ஜனங்களையும் பொருள்களையும் கொள்ளை கொண்டு போனார்கள். லோத்தும் அவன் குடும்பமும் அவன் பொருள்களோடு கொள்ளைபோயினர். ஆபிரகாம் இதைக் கேள்விப்பட்டுப் புறப்பட்டுப்போய், அந்த ராஜாக்களை முறியடித்து லோத்தையும் அவன் பொருள்களையும் திருப்பிக் கொண்டு வந்தார். இது லோத்துக்கு தேவ எச்சரிப்பு. ஆபிரகாமே! நான் உம்மை விட்டுப் பிரிந்து போனது பெரிய பிசகு. இனி நான் உம்மோடேயே தங்கியிருப்பேன் என்று லோத்து சொல்லியிருக்கவேண்டியது.

லோத்து "சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான்" *(ஆதி. 19:1)* வாசலிலே உட்கார்ந்திருந்தார்கள் என்பது சாதாரண காரியமல்ல. அவன் சேதோமில் பெரிய மனுஷனாக நியாயாதிபதியாக இருந்தான் என்பது கருத்து. பட்டணத்தில் கிளம்பும் வழக்கு வாதங்களை விசாரிப்பவனா கவும், பட்டணத்துக்கு வருவோரை ஏற்றுக்கொண்டு உபசரிக்கும் பட்டணத்துப் பிரதிநிதியாகவும் இருந்தான். ஆபிரகாம் தன்னை

மீட்டு இரட்சித்ததை உணராமல் பொருளாசையால் ஏவப்பட்டு மறுபடியும் சோதோமுக்கு வந்து, தன் சாமர்த்தியத்தினால் பட்டணத்துக்கே பெரிய நாட்டாண்மைக்காரனாகிவிட்டான். இது முன்னுக்கு வருவதென்றால் லோத்தைப் பார்க்கிலும் முன்னுக்கு வரக்கூடியவன் யார்? ஆபிரகாம் லோத்தின் காரிய சமர்த்துக்கு ஈடாவாரா? அவரோ பாவம் கூடாரத்தை அடிக்கிறவரும், கூடாரத்தைப் பிடுங்குகிறதுமான ஓர் பரதேசியைப்போல அலைந்து திரிந்தார். லோத்தல்லவோ சமர்த்தன். முன்னுக்கு வரவேண்டுமானால் லோத்தினிடமல்லவோ சென்று படிக்கவேண்டும்.

### 3. லோத்து கண்ட பலன் என்ன?

சோதோம் பட்டணத்தார் பார்வையில் அவன் மேன்மை பெற்றவனே. அவன் வியாபார சாமர்த்தியத்தை அவர்கள் மெச்சிக் கொள்ளாதிருப்பதில்லை. என்ன, ஒரு மனுஷன்! பட்டணத்துக்கு வெளியே கூடாரம் போட்டான். அப்புறம் பட்டணத்தின் நடுவில் வந்து ஐசுவரியவானான். அப்புறம் பட்டணத்திற்கே பிரதானியாகி, நியாயம் விசாரிக்கும் அதிபதியுமாகி பட்டணவாசலில் உட்கார்ந்தான். இவனல்லவோ மனுஷன் என்று எல்லாரும் பெருமையாய்ப் பேசியிருப்பார்கள். நாம் இப்பொழுது விசாரிக்கவேண்டிய ஒரு காரியம் உண்டு. அதாவது பட்டணத்தார் எண்ணிபடி அவன் முன்னுக்குத்தான் வந்தானா? அல்லது பின்னுக்குத்தான் போனானா?

அவன் சாமர்த்தியத்தினால் அவன் தனக்குத்தானே கண்ட பலன் என்ன? "நாள்தோறும் தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட லோத்து" (2பேதுரு 2:8) பெரிய வீடு, பெரிய வியாபாரம், பெரிய ஆஸ்தி, பெரிய அந்தஸ்து, ஆனால் ஏழை மனுஷன் இருதயத்திலோ சமாதானமில்லை. இரவும் பகலும் ஓயாத மனவேதனை. அவன் கடவுளை அறிந்தவன். நீதிமானாயிருந்திருக்கலாம். சோதோம் பட்டணத்தார் நல்லவர்களாகும்படி அவன் விரும்பியிருக்கலாம். காரியம் பலிக்கவில்லை. சுய இஷ்டப்படி நடந்த மனுஷன் மற்றவர்களுக்கு எப்படி ஆசீர்வாதமாயிருப்பான்? அக்கிரமம் நிறைந்த பட்டணத்தில் அவன் பக்தி கடலில் காயம் கரைத்தது போலாயிற்று. அவன் ஐசுவரியம் ஒரு பக்கம் பெருக, அவன் மனவேதனையும் மறுபக்கம் பெருகினது. பணமிருந்தென்ன?

புகழ்ச்சியிருந்தென்ன? லோத்துக்குச் கொஞ்சமேனும் சமாதானமென்பதில்லை. அவன் முன்னுக்கு வந்தது இதுதான்.

தன் குடும்பத்தில் கண்ட பலன் என்ன? சோதோம் அழிக்கப்படுமுன்னே அங்கே வந்த புருஷர் லோத்தை நோக்கி: உனக்கு குமாரர், குமாரத்திகள், மருமக்கள்மார், இனபந்துக்கள் யாராகிலும் இருந்தால் துரிதமாய் வெளியேற்று. நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம் என்றார்கள். லோத்து பந்துக்களோடு பேசினார். அவர்கள் பார்வைக்கு அவன் பரியாசம் பண்ணுகிறதாகக் கண்டது. இவ்வளவுதான் குடும்பத்தில் அவனுக்குள்ள செல்வாக்கு. ஒருவனுடைய தேவபக்தியின் உண்மையை அறிவதற்கு அவன் குடும்பத்தைப்போல் ஏற்ற இடம் வேறில்லை. லோத்தினுடைய ஜீவியத்தின் நோக்கம் என்னவென்பதை அவர்கள் திட்டமாய் அறிவார்கள். அப்படியிருக்க அவனுடைய உபதேசம் அங்கே செல்லுமா? கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தால் அவனையும், அவன் மனைவியையும், அவன் குமாரத்திகளையும் கைகளைப் பிடித்து வெளியேற்றும்படி நேரிட்டது. சேர்த்த ஆஸ்தியை விட்டுப்போக அவர்களுக்கு மனம் வரவில்லை.

பட்டணத்தில் அவன் கண்ட பலன் என்ன? நீதிமானாகிய லோத்து எத்தனைபேரை இரட்சித்தார்? எவ்வளவோ காலம் அவர்கள் நடுவில் சஞ்சரித்தானே. பெரிய மனுஷன் என்று புகழ் பெற்றானே. நியாய விசாரணையும் நடத்தினானே. ஜனங்கள் மேல் அவனுக்குள்ள செல்வாக்கு எவ்வளவு? ஒன்றுமில்லை. ஒரு ஐந்நூறு பேரையாவது நீதிமானாக்கினானா? இல்லை. இதற்குக் காரணமென்ன? லோத்து யாரென்று அவர்கள் திட்டமாய் அறிவார்கள். அவன் பொருள் சம்பாதிக்கும்படிக்கே தங்களிடத்தில் வந்தவன் என்பது அவர்கள் திட்டமாய் அறிந்த விஷயம். பொருளாசை அவன் ஆத்ம சக்தியை அழித்தது. அப்புறம் அவர் பிரசங்கத்தைக் கேட்டவன் யார்?

பொருளிலேதான் அவன் கண்ட பலன் என்ன? உடுத்தியிருந்த துணியோடு ஓட்டம் பிடித்ததே கண்ட பலன். அவன் வீடும், ஆஸ்தியும், சகல பொருட்களும் அக்கினிக்கு இரையாகின. மனைவி எங்கே? மக்கள் காரியமென்ன! பின்

சரித்திரம் மிகப்பரிதாபம். இவனல்லவா காரியசமர்த்தன்! இவனல்லவா முன்னுக்கு வந்தவன்! கடவுள் பேரைச் சொல்லிக்கொண்டு பொருளாசையிலும் உலக நாட்டத்திலும் வெகு முயற்சியாய் இறங்குகிறவர்கள் எல்லாரும் இதுபோலவே முன்னுக்கு வருவார்கள். லோத்து பிந்தி யோசித்திருப் பானானால் கடவுள் சித்தத்துக்கு விலகி, தானே தன் வழியைத் தெரிந்து கொண்டதின் கசப்பை நிச்சயமாக உணர்ந்திருப்பான்? அவன் முன்னுக்கு வராமல் பின்னுக்கே போய் வேதனையையும் அவமானத்தையும் அடைந்தான். நாம் சுய இஷ்டம்போல் ஒன்றைத் தெரிந்து கொள்ளாமல் கடவுள் நம்மை நடத்தும்படி நம்மை அவர் கையில் விட்டுவிட வேண்டும். முதற்கோணல் முற்றும் கோணலாகும். சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டவன் அங்கேயே தங்குவது நிச்சயமல்ல.

### 4. ஆபிரகாமைக் கவனிப்போம்

ஆபிரகாம் தன் இஷ்டப்படி தெரிந்து கொள்ளவில்லை. லோத்து பிரிந்துபோனபின் "கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்தேன்" என்றார். ஆண்டவரே, கிழக்குத் தேசத்தை லோத்து சுதந்தரித்துக் கொண்டானே. அப்படியல்ல ஆபிரகாமே, நான் எவனுக்குக் கொடுப்பேனோ அவனே அதற்குச் சுதந்தரவாளியாவான்: தன் சுய இஷ்டப்படி தெரிந்து கொள்ளுகிறவன் சுதந்தரவாளியாக மாட்டான். "கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அவர் அதோடே வேதனையைக் கூட்டார்" "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" தன் வழியைத் தானே தெரிந்துகொள்ளுகிறவன் சகலத்தையும் இழந்துபோவான். கடவுள் தனக்காகத் தெரிந்துகொள்ளும்படி விரும்புகிறவன் பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெறுவான். சுய தீர்மானமும் சுயதெரிந்துகொள்ளுதலும் வேதனையை உண்டாக்கும். பரமபிதா தமது சித்தம்போல் நம்மை நடத்துவது இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதம்.

# 71. நன்மைபேசும் இரத்தம்

**"ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தம்" (எபி. 12:24).**

காயீன் ஆபேலைக் கொலைசெய்து அவன் ரத்தத்தை தரையில் சிந்தினான். கர்த்தர் காயீனைப் பார்த்து "நீ என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" என்றார். ஆபேலின் இரத்தம் பேசுகிற பாவனையாக எபிரெயர் நிருபத்தார் பாவித்து கிறிஸ்துவின் இரத்தமும் பேசுகிறது என்கிறார். ஆபேலின் இரத்தம் கர்த்தரை நோக்கி: என் சகோதரன் என்னைக் கொன்று போட்டானே என்று பேசினது. ஆண்டவரின் இரத்தமோ மனுஷர் என்னைக் கொன்று போட்டார்களே என்று கூறாமல், நன்மையான காரியங்களைப் பேசுகிறது. அது நமக்காக கடவுளோடும் கடவுளுக்காக நம்மோடும் பேசுகிறது. ஆபேலின் இரத்தம் தேவ கோபத்தைக் கொண்டு வந்தது. தேவாட்டுக்குட்டியின் இரத்தமோ ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் நமக்குக் கொண்டு வருகிறது. கல்வாரிச் சிலுவையடியில் சிந்துண்ட இரத்தத்தை நமது மனக்கண்கள் பார்க்கட்டும். அது மனுஷரத்தமாகத் தோன்றுகிறது. ஆகிலும் அது தேவ இரத்தம். கடவுள் ஆவியாயிருக்கிறார். ஆவியில் ரத்தமில்லை. அவர் மாம்சத்தில் வந்து நமது ரட்சிப்புக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார். "தேவன் தமது சுயரத்தத்தால் சம்பாதித்த சபை" என்று பவுல் சொன்னார். இரத்தம் என்பது ஜீவன். கடவுள் தமது ஜீவனைக் கொடுத்து நம்மை மீட்டுக் கொண்டார். அந்த இரத்தம் பேசுகிற நன்மையான காரியங்கள் எவை?

## 1. பாவமன்னிப்பு

"அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்." என்றார். பாவமன்னிப்பின் நிச்சயத்தையடைந்த பவுல்: "அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" என்றார். (கொலோ. 1:14).

கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்டவர்களின் பாவம் மன்னிக்கப்பட வேண்டுமென்று அவருடைய ரத்தம் பிதாவைப் பார்த்துப் பேசுகிறது. நாம் செய்யும் எந்த நற்கிரியைகளினிமித்தமல்ல, அவருடைய ரத்தத்தினாலே நமது பாவம் மன்னிக்கப்படுகிறது. "இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை" இது ஆதிமுதல் தேவ ஏற்பாடாகயிருக்கிறது. இதன் ரகசியத்தை விவரிக்கும் வேலை இங்கே நமக்கு இல்லை. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தில் நம்பிக்கை வைத்தவர்கள் இதன் உண்மையை அறிந்திருக்கிறார்கள். நிகரற்ற அவருடைய மன்னிப்பு மகா மாட்சிமையுள்ளது.

## 2. சமாதானம்

"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்" (கொலோ. 1:20). "துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை." பாவமுள்ள இடத்தில் கலக்கமும் குழப்பமும் உண்டு. நமக்கும் கடவுளுக்கும் சமாதானமில்லை. நமக்குள்ளேயே சமாதானமில்லை. நமக்கும் பிறருக்கும் சமாதானமில்லை. நமக்கும் சிருஷ்டிக்கும் சமாதானமில்லை. பாவம் சகலத்தையும் கெடுத்தது. இப்படியிருக்க கிறிஸ்துவின் இரத்தம் நமக்குள் தெளிக்கப்பட்ட மாத்திரத்தில் நாம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்கிறோம். பாவத்தாலுண்டான பகை நீக்கி, தேவனோடும், நமக்குள்ளும், மற்றவர்களோடும் சமாதானத்தைப் பெற்று வாழ்கிறோம். தேவாட்டுக்குட்டியின் இரத்தம் பேசுகிற நன்மையான காரியங்களில் இதுவும் ஒன்று.

## 3. நீதி

"நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம்" (ரோமர் 5:9). பாவமன்னிப்பு வேறே. நீதிமான்களாக்கப்படுவது வேறே. ஒருவன் ஒரு பெரிய குற்றத்தைச் செய்து நியாயாதிபதியால் விசாரிக்கப்படுகிறான். நியாயாதிபதி கிருபைகூர்ந்து அவனுக்கு மன்னித்து விடுகிறான். அவன் நியாயஸ்தலத்தை விட்டுப் பறப்பட்டுப் போகிறான். அவனைப் பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்? நீதிமான் போகிறார் என்று சொல்லுவார்களா? ஒருக்காலும் அப்படிச் சொல்லமாட்டார்கள் குற்றவாளி தப்பித்துக்கொண்டானே என்று தான் சொல்லுவார்கள். அவனுக்கு கிடைத்த

மன்னிப்பால் அவன் தண்டனைக்குத் தப்பித்துக்கொண்டானேயன்றி, அவன் குற்றமற்ற நீதிமான் அல்ல. மன்னிப்பு தண்டனையை நீக்கும். குற்றவாளியை நீதிமானாக்காது. கிறிஸ்துவின் இரத்தமோ நமது பாவத்தை மன்னித்துத் தண்டனையிலிருந்து நம்மை இரட்சிப்பதோடு நம்மை நீதிமான்களாக்குகிறது. நீதிமான் என்பவன் யாதொரு குற்றமும் அறியாத மனுஷன். கிறிஸ்து ஒருவரைத் தவிர யாதொரு பாவமுமில்லாத மனுஷன் உலகில் இல்லை. ஆகையால் இது நமது சொந்த நீதியல்ல. ஒருவனுடைய கந்தையை அகற்றி அவனுக்கு உயர்ந்த வஸ்திரத்தை உடுத்துவதுபோல ஆண்டவர் தமது நீதியால் நம்மை உடுத்துகிறார். கிறிஸ்துவே நமது நீதி ஆட்டுக்குட்டியின் இரத்தம் பேசுகிற நன்மையான காரியங்களில் இதுவும் ஒன்று.

**4. வெற்றி**

"ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" (வெளி 2:11). சாத்தானால் உண்டான கேடுகள் கொஞ்சமல்ல. சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போட்டான். நமது ஆவி, ஆத்துமா, சரீரம், சாத்தானால் கேடடைந்தான். பயமும் திகிலும் நம்மை மேற்கொண்டன. பாவமும் நோயும் பாடுகளும் மரணமும் நம்மை நடுங்க வைத்தன. சத்துருவை மேற்கொள்ளும் சக்தி நமக்கில்லை. நம்மை நடுங்க வைக்கும் சாத்தானை நடுங்க வைப்பது ஆட்டுக்குட்டியின் இரத்தமே. எகிப்தில் சங்காரத்தூதன் புறப்பட்டு, வீடுகள் தோறும் உள்ள தலைப்பிள்ளைகளைச் சங்காரம் பண்ணினான். அவன் இஸ்ரவேலர் பக்கம் வந்தபோது நடுங்கி விலகினான். காரணம் என்ன? இஸ்ரவேலின் பரிசுத்தமோ? அல்ல. ஆட்டுக்குட்டியின் இரத்தம் ஒவ்வொருவருடைய வீட்டின் வாசல் நிலைக்கால்களிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்டிருந்தது. இந்த இரத்தமே அவர்களுக்கு வெற்றியளித்தது. சத்துருவின் சகல தீமைகளிலும் நமக்கு வெற்றி கொடுப்பது கிறிஸ்துவின் இரத்தம். நோயாளிகளுக்குச் சுகமளிப்பது கிறிஸ்துவின் இரத்தம். சாத்தானுடைய சகல தந்திரங்களையும் அவமாக்குவது கிறிஸ்துவின் இரத்தம். நாம் அவருடைய இரத்தத்தை உச்சரிக்கும்போது வெற்றியடைகிறோம். அவருடைய ரத்தம் பேசுகிற நன்மையான காரியங்களில் இதுவும் ஒன்று.

**5. நம்மை ராஜாக்களும் ஆசாரியர்ளுமாக்கி ரத்தம்**

*"நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நமது பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களு மாக்கினார்." (வெளி. 1:6).* கிறிஸ்துவின் ரத்தம் நமது பாவத்தை அகற்றி, நமக்குச் சமாதானமளித்து, நம்மை நீதிமான்களாக்கி, நமக்கு வெற்றி கொடுத்து, பிதாவுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்குகிறது. ஆ, அந்த ரத்தத்தின் வல்லமையை அளவிட யாரால் ஆகும்? தேவராஜ்யத்தில் நாம் அரசாளும் ராஜாக்களும், பணிவிடைசெய்யும் ஆசாரியர்களுமாய் விளங்குவோம். தேவராஜ்யத்தில் நாம் சோம்பலாயிருக்கமாட்டோம். இன்னும் சகலமும் நமது பாதங்களுக்குக் கீழாக்கப்படவில்லை. வெற்றியடைந்த ஆண்டவர் சகல அக்கிரமங்களையும் அழித்து, நீதியும் சமாதானமும் ஆளுகை செய்யும் காலத்தைக் கொண்டு வருவார். அப்போது அவரது அடியார் ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருந்து அவருடன் அரசாளுவார்கள். அவர்கள் செய்யும் மேலான ஊழியத்துக்கு முடிவிராது.

# 72. நமது எருசலேம்

***"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்" (லூக். 18:31).***

ஆண்டவர் பல சமயங்களிலும் எருசலேமுக்குப் போனதுண்டு. ஆனால் இப்பொழுதோ ஒரு யுத்த வீரனைப் போல் எருசலேமை நோக்கி நடக்கிறார். அவரது சீஷர்கள் பயம் நிறைந்தவர்களாய் அமைதலாக அவருக்குப்பின் செல்லு கிறார்கள். எருசலேமில் எவ்வளவோ பாடுகள் அவருக்கிருக் கின்றன. சிலுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆபத்துள்ள நகரத்துக்குப் போகிறாரே என்பதுதான் சீஷர்கள் பயம். அவர் முகத்தைப் பார்த்தால் ஓர் எதிரியை மேற்கொள்ளப்போகும் வீரனுடைய தோற்றம் இருக்கிறது. இவ்வாறு போகும் வழியில் தமக்கு நேரிடப்போகிற பாடுகளைக் குறித்து சீஷர்களுக்கு விவரமாகச்சொன்னார். அவர்களோ அவைகளை அறிந்துகொள்ளவில்லை. இதிலிருந்து சில குறிப்புகளைக் கவனிப்போம்.

## 1. நமது வருங்கால மறைவு

நமது காரியங்கள் நமக்கே தெரியவில்லை. வருங் காலத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? இன்று மாலை நடப்பது நமக்குத் தெரியாது. நாளைய தினத்தைப்பற்றி நாம் என்ன சொல்லக் கூடும்? ஞானமும் கிருபையுமுள்ள பரமபிதா வருங்காலத்தை நமக்கு மறைத்திருக்கிறார். ஆனால் நமது ஜீவகால ஒழுங்கு முழுவதும் அவர் கையில் இருக்கிறது. நமக்குச் சம்பவிக்கும் யாவும் அவருக்குத் தெரியும். நமக்கோ அவைகளை மறைத்திருக்கிறார். அன்றன்றுள்ள காரியங்களில் நாம் சம்பந்தப்பட்டு, அவர் கிருபையை முன்னிட்டு அவைகளை நடத்தி வருகிறோம். படிப்படியாகக் காரியங்களை அறிந்து அவைகளுக்கேற்றபடி நடந்து கொள்ளுகிறோம். அவ்வளவு தான். அதற்குமேல் நாம் அறிந்ததும் நடப்பிக்கக் கூடியதும் ஒன்றுமில்லை. சம்பவிக்கும் காரியங்களை நாம் அறியாதிருப்பதால், ஆண்டவரை அடிக்கடி தேடவும், அவரிடம் நமது கஷ்டங்களை அறிவிக்கவும், அவர் நம்மை நடத்தும்படி கேட்கவும் ஏதுவாயிருக்கிறது. நமது ஜீவ கால ஒழுங்கு முழுவதும் நமக்கு ஒரே சமயத்தில் தெரியுமானால் நாம் கடவுளைத் தேடவும், அவர் நடத்துதலைப் பெற்றுக் கொள்ளவும் ஏதுவிராது. அது மாத்திரமல்ல, நமக்கு நேரிடும் சகல காரியங்களையும் நாம் இப்போதே அறியக்கூடுமானால், அது நமது ஜீவியத்தில் பெருங்குழப்பத்தை உண்டாக்கும். நமக்கு நேரிடக்கூடிய பாடுகள், அவமானங்கள், நஷ்டங்கள், நோய்கள், மரணங்கள் முதலானவை நம்மில் கொடிய துயரத்தை உண்டாக்கி, நமது மனதைக் குழப்பி, தற்சமயம் நாம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாதபடி நம்மைத் தடுத்துவிடும். நாளைச் சம்பவிப்பது நமக்குத் தெரியாத தினாலேயே இன்று சந்தோஷத்தோடே வேலை செய்கிறோம். நமது பலவீனத்தை அறிந்த கடவுள் நமது நன்மைக்கேதுவாக வருங்காரியங்களை நமக்கு மறைந்திருக்கிறார்.

## 2. கிறிஸ்துவின் முன்னறிவு

ஆண்டவர் தமக்கு நேரிடப்போகிற சகல பாடுகளையும் ஆரம்பமுதல் அறிந்திருந்தார். இதன் உண்மையை அவர் பேச்சுகளில் அங்கங்கே காணலாம். தாம் அவைகளை அறிந்திருந்தபோதிலும் மற்றவர்களுக்கு வெளிப்படையாகச் சொல்லவில்லை. இதிலும் அவர் ஞானமும் அனுதாபமும்

விளங்குகின்றன. எல்லாவற்றையும் விட்டுத் தம்மைப் பின்பற்றும்படி வந்த சீஷர்களிடம் தமக்கு நேரிடப்போகிற அவமானம் பாடு மரணத்தைப்பற்றி அவர்கள் வந்த நாளிலேயே அவர் சொல்லியிருப்பாரானால், அவர்கள் எவ்வளவு துரிதமாய் வந்தார்களோ, அவ்வளவு துரிதமாய் அவரை விட்டுப் போயிருப்பார்கள். நமக்கு லாபமான வேலைகளை விட்டு, குடும்பத்தையும் மறந்து, அவமானப்பட்டுச் சாகப்போகிறவரையா பின்பற்றுவது என்று சொல்லி வேகம் மறைந்திருப்பார்கள். ஆகையால் தமது பாடுகளைக் குறித்து பிந்தியே அவர்களுக்கு அறிவித்தார். ஆனால் ஆண்டவரோ தமக்கு நேரிடும் சகல பாடுகளையும் ஏற்கனவே அறிந்திருந்தார். அவர் தமது பாடுகளை எவ்வளவு நுட்பமாய் அறிந்திருந்தார் என்பதை அவர் தமது சீஷரிடம் சொல்லுகிற விபரத்தில் காணலாம். பொதுவாக அல்ல, இன்னின்ன பிரகாரமாய்த் தமக்குச் செய்யப்படும் என்கிறார். அவர் ஒருவரே தமது வருங்காலத்தை அறிந்தும் எவ்வித குழப்பமுமின்றித் தமது வேலையைச் செய்யக்கூடிய வல்லவர். அப்படிப்பட்டவருக்கே வருங்கால அறிவு ஏற்கும். நம்மைப் போன்றவர்களுக்கு ஏற்காது. தமது முடிவைப்பற்றிய அறிவு அவரது ஊழியத்தில் எவ்வளவேனும் இடையூறாக நிற்கவில்லை. அவர் ஜீவியத்தைப் படிக்கும்போது அவர் பேசின, செய்த சகல காரியங்களிலும் எவ்வளவோ தாராளமாய் உற்சாகமாய் நடந்து கொண்டாரென்பது தெரியும். புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள், நோயாளிகள், சகல மனுஷரிடத்திலும் எவ்வளவோ காருண்யத்தோடும் அனுதாபத்தோடும் நடந்து கொண்டார். யாதொரு கஷ்டமுமில்லாத மனுஷன் தன் வாழக்கையில் எவ்வளவு உற்சாகமாய் நடந்துகொள்வானோ அதுபோலவே அவர் முயற்சிகளும் இருந்தன. வரப்போகும் பாடுகளை நினைத்து மூலையில் போய்ப் படுத்துக்கொண்டவரல்ல. வேளை வந்தபோதோ தமது பாடுகளை ஏற்றுக்கொள்ள மகா தைரியமுள்ள வீரனைப்போல எருசலேமுக்குப் போகிறார்.

### 3. சீஷர்கள் அறியாமை

ஆண்டவர் தமது பாடு மரணத்தைக் குறித்துச் சொன்னபோது சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறது, "இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை, அவைகளின் பொருள் அவர்களுக்கு

மறைவாயிருந்தது. அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை." இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அவர் கிரந்தத்தில் பேசவில்லையே. எப்பொழுதும் பேசின பாஷையில்தானே பேசினார். சிறுபிள்ளையும் அறிந்து கொள்ளுமே. பின்னே ஏன் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை? மற்றமற்ற காரியங்களை அறிந்து கொண்டவர்கள், பாடு மரணத்தைப்பற்றிப் பேசினபோது ஏன் அறிந்து கொள்ளவில்லை? அவர் அறிவித்தது பரம ரகசியமல்லவே! ஆழமான தத்துவமல்லவே! சாதாரணமான இந்த விஷயம் அவர்களுக்கு மறைபொருளாயிருப்பானேன்? அவர்கள் அறியாமைக்குக் காரணம் சிலுவையைப்பற்றிய வெறுப்பே. பாடப்புஸ்தகத்தில் விருப்பமும் கருத்துமுள்ள பையனுக்கு அவன் படிப்பது விளங்கும். புஸ்தகத்தில் வெறுப்புள்ளவனுக்கு எத்தனை முறை வாசித்தாலும் ஒன்றும் மனதில் ஏறாது. இவர்களுக்கு பாடுகள் சிலுவையென்பது முழுவெறுப்பு. ஆண்டவர் எத்தனை முறை அவைகளைப் பற்றிப் பேசினாலும் கொஞ்சமேனும் அவர்கள் கவனிப்ப தில்லை. அவைகள் அவர்கள் காதில் நுழைவதில்லை. இதுதான் அவர்கள் அறியாமைக்குக் காரணம். ஒருவன் தான் வெறுக்கும் காரியத்துக்குச் செவிகொடுக்கமாட்டான். தனக்குப் பிரியமானதையோ மனதில் வைத்து சிந்திப்பான்.

மேலும் கடைசிவரை அவர்கள் முழுக்கவனத்தையும் ஆண்டுகொண்டிருந்த வேறொரு விஷயமும் உண்டு. ராஜ்யம் என்பதே அந்த விஷயம். ஆண்டவர் ராஜ்யத்தைப்பற்றித் தாராளமாகப் பேசினார். அவர் கருத்து வேறே. இவர்களோ தாவீதின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும், கிறிஸ்து அதில் வீற்றிருந்து அரசாளுவார், தாங்களும் அவரோடிருந்து மேலான பதவியடைந்து, யாதொரு குறைவின்றி சேமமாய் வாழலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்தவர்கள். எப்பொழுது பார்த்தாலும் அதுவே அவர்கள் நினைவு, அதுவே பேச்சு, அதுவே தாக்கம், எருசலேமுக்குப் போகும் வழியில்கூட செபெதேயுவின் மக்கள் தங்கள் தாயாரோடு வந்து, அந்த ராஜ்யத்தில் யோவானும் யாக்கோபும் வலது இடது பக்கம் இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள். வியாழன் இரவிலுங்கூட ராஜ்யத்தில் யார் பெரியவன் என்கிற தர்க்கம் ஓயவில்லை. இவ்வாறு உலக ராஜ்யத்தையும் அதன்

மேன்மையையும் மனதில் ஆழமாய்க் கொண்டவர்களுக்கு, ராஜா துன்பப்படுவதும், அவமானப்படுவதும், சிலுவையிலறையப் படுவதுமான பேச்சு எவ்வளவேனும் பிரியமாயிருக்குமா? அவர்கள் காதுகளில் நுழையுமா? ஒருக்காலும் நுழையாது. இதுவே அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதின் கருத்து.

**4. தமக்கும் எருசலேம் உண்டு**

நம்மை இரட்சிக்கும் ஆண்டவர் தமது பாடுகளை அனுபவிக்கும்படி எருசலேமுக்குப் போனார். நமது எருசலேமுக்கு நாமும் போகவேண்டும். நாம் ஆண்டவரை உத்தமமாய் பின்பற்றினால் ஓரளவில் நமக்கும் பாடு உண்டு. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்றார். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து மோட்சம் போகமாத்திரமல்ல. அவர் நாமத்தினிமித்தம் பாடனுபவிக்கவும் அழைப்புப் பெற்றிருக்கிறோம். நமக்கு நேரிடும் அவமானம் கஷ்டங்களைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஒருவன் தேவபக்தன் என்பது மெய்யானால் கட்டாயம் அவன் கஷ்டப்படுவான். சாத்தான் உபத்திரவப்படுத்துவான். இந்த உபத்திரவம் நம்மையும் நமது ஊழியத்தையும் பூரணப்படுத்தும். நாம் படும்பாடு நமக்குக் கஷ்டமாயிருந்தாலும், காரணம் தெரியாதிருந்தாலும் நமது ஜீவியம் பிறருக்கு ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கும் என்பது நிச்சயம்.

# 73. பிலாத்துவின் மனைவி

***"அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி; நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்" (மத். 27:19).***

பிலாத்துவின் மனைவியைப்பற்றி அறிவதற்கு இந்த ஒரு வசனமேயன்றி வேறு வசனங்கள் இல்லை, என்றாலும் இவ்வசனத்தில் வரும் குறிப்புகளே நமது தியானத்துக்குப்

போதும். பற்பல தேசத்து ஸ்திரீகள் தங்கள் புருஷரைத் தெரிந்துகொண்டு நேசிக்கும் விதத்தைப்பற்றி ஓர் ஆசிரியர் கூறியதை இங்கே கவனிப்போம். "பிரான்சு ஸ்திரீ சாமர்த்தியமும் விகடமுமான புருஷனை விரும்புவாளாம். ஜெர்மன் ஸ்திரீ உண்மையுள்ள புருஷனை விரும்புவாளாம். டச்சு ஸ்திரீ தன் சந்தோஷத்திற்கும் சௌகரியத்திற்கும் தடைசெய்யாத புருஷனை விரும்புவாளாம். ஸ்பானிய ஸ்திரீ தீமை செய்தவனுக்குக் கட்டாயம் பதில் தீமை செய்யக் கூடியவனை விரும்புவாளாம். இத்தாலியா ஸ்திரீ ஆழ்ந்த யோசனையுள்ளவனும் கவிஞனுமானவனை விரும்புவாளாம். தானிய ஸ்திரீ தன் தேசமே உலகத்தில் சிறந்ததென்று நினைக்கிறவனை விரும்புவாளாம். ருஷிய ஸ்திரீ தனக்கு மேற்கிலுள்ள தேசத்தார் யாவரும் மிலேச்சர் என்று வெறுக்கிறவனை விரும்புவாளாம். ஆங்கில ஸ்திரீ மந்திராலோசனைச் சபையில் பேர்பெற்றவனை விரும்புவாளாம். அமெரிக்க ஸ்திரீ பணம் எவனிடத்தில் அதிகமுண்டோ அவனை விரும்புவாளாம்" ஆசிரியர் ஆசியா தேசத்தை மறந்து போனார். ஆனால் அவர் யோசனையோடேதான் விட்டுவிட்டார். ஏனென்றால் நமது தேசத்தில் அநேகமாய் பெற்றோரே பெண்கள் விவாக விஷயத்தில் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். நமது பெண்கள் தங்கள் இஷ்டப்படி தெரிந்துகொள்ளத் துணியார்கள். இது நிற்க, பிலாத்துவின் மனைவி இத்தாலியாவைச் சேர்ந்தவள். மேற்கூறியபடி அவள் கல்வியும் யோசனையுமுள்ள பிலாத்துவைத் தனக்குப் புருஷனாகத் தெரிந்து கொண்டாள்.

பிலாத்துவின் மனைவி பெயர் கிளாதியா புரோக்கியுலா என்பதை சரித்திரத்திலிருந்து அறிகிறோம். இவள் உயர்குடியில் பிறந்தவள். கல்வியும் சொல்வாக்குமுடையவள். ரோமை அஞ்ஞானக்கொள்கையை தள்ளி மெய்க்கடவுளை அறியும்படியான நாட்டமுள்ளவள். இவள் செல்வாக்காலேயே பிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதியாக அனுப்பப்பட்டான். கப்பல் மாலுமிகள் எப்படி தங்கள் மனைவிகளைக் கப்பலில் கொண்டுபோகக் கூடாதென்பது சட்டமோ, அதுபோலவே தேசாதிபதிகளும் தாங்கள்போகும் மாகாணங்களுக்குத் தங்கள் மனைவிகளை அழைத்துப்போகக் கூடாதென்பது ரோமைச்

சட்டம். இந்த விதி அநேகமாய் இருபட்சத்தாருக்கும் பிரியம். ஏனென்றால் கடவுள்பயமற்ற தேசாதிபதிகள் அந்நிய தேசத்தில் மனங்கொண்டபடி நடப்பதற்கும், அவர்கள் விட்டுப்போகும் மனைவிகள் ரோமில் உல்லாசமாய் வாழ்வதற்கும் இந்த ஏற்பாடு சந்தர்ப்பம் அளித்தது. ஆனால் கிளாதியா புரோக்கியுலோவோ காரியத்தைச் சமாளித்துத் தன் புருஷன் பிலாத்துவோடு யூதேயா தேசத்துக்கு வந்துவிட்டாள். தன் புருஷன் மீதுள்ள அன்பினால் சட்டத்தையும் மேற்கொண்டாள். சுவிசேஷத்தில் ஆண்களான ரோமர் பலருடைய பேர் வந்தாலும் இவள் ஒருத்தியே ரோமை ஸ்திரீ.

## இப்பொழுது இவளுடைய காரியத்தைக் கவனிப்போம்

### 1. அவள் தனக்குள் அடைந்த மறைவான துயரம்

புருஷன் மனைவி என்ற சம்பந்தமாக ஒருவரையொருவர் நேசித்தபோதிலும் வரவர குணத்தில் இருவருக்கும் பேதமுண்டானது. தான் எதிர்பார்த்த பிரகாரம் பிலாத்து இல்லை. தேசாதிபதி என்னும் உயர்ந்த பதவி கிடைத்ததும், அவன் யூதரிடம் கடினமும் பிடிவாதமுமாய் நடந்து கொண்டான். பிலாத்துவுக்கு கடவுள் கிடையாது. தேவமார்க்கம் இன்னதென்பதை அறியான். ஆண்டவரைப் பார்த்து: சத்தியமென்றால் என்னவென்று அசட்டையாய்க் கேட்டவன். இவனே. இவன் கல்வியின் கர்வத்தால் யூதருடைய மார்க்க ஆசாரங்களைப் பரியாசம் பண்ணினான். யூதருக்கு மிகவும் அருவருப்பான காரியங்களைச் செய்து அநியாயமாய் அவர்களைக் கொலை செய்தான். பிலாத்து என்றால் யூதருக்கு ஆகாது. யூதரென்றால் பிலாத்துவுக்கு ஆகாது. இவ்வாறு அவன் ஆளுகையில் எப்பொழுதும், குழப்பமும் கலகமும் இருந்தபடியால் கிளாதியாளுக்கு மன வேதனையாயிருந்தது. இவன் இப்படி நடப்பான் என்று அவனை விவாகம் செய்த காலத்தில் அவளுக்குத் தெரியாது. வெளித்தோற்றத்தையும் இனிய பேச்சையும் நம்பி மோசம்போனாள். சாந்தமும் விவேகமும் தேவபயமுமுள்ள கிளாதியாளுக்கு பிலாத்து செய்த காரியங்களும் அவற்றால் விளைந்த பயங்கரமான சம்பவங்களும் அவள் இருதயத்தை புண்படுத்தி ஆறாத்துயரத்தை உண்டாக்கின. அவள் மனச் சஞ்சலத்தை மற்றவர்கள் அறியார்கள். அவளை அரண்மனையில் உலாவக் கண்ட எருசலேம் ஸ்திரீகள்: இவளுக்கென்ன குறை, மகராசி,

கவர்னர் பெஞ்சாதியாயிருக்கிறாள். நம்மைச் சொல்லு என்று பெருமூச்சு விட்டிருக்கலாம். ஆனால் அவளுக்கிருந்த இடைவிடாத துக்கத்தையும் பெருமூச்சையும் அவர்கள் அறியார்கள். இப்பேர்க்கொத்த முரடனும் கலகக் குணமும் உள்ள மனுஷனுக்கு வாழ்க்கைப்பட்டோமே என்று துயரமடைந்தாள் கிளாதியா புரோகியுளா.

## 2. தன் புருஷனைக் காப்பாற்ற அவள் செய்த வேலை

இவளுக்கு எருசலேமில் தாதிகள் இருந்தார்கள். அவர்கள் மூலமாய் இவள் நகரத்துக் காரியங்களை அறியலானாள். கிறிஸ்துவைத் தோட்டத்தில் பிடித்துக்கட்டி, காய்பா முன் நிறுத்தி, இரவோடு இரவாக விசாரணை நடத்தி அவரைச் சிலுவையிலறையும்படி தீர்மானித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டாள். அடிக்கடி அவள் கேள்விப்பட்ட ஆண்டவரின் நல்ல ஜீவியமும், காருண்ய செயல்களும், பக்தியுள்ள அவள் இருதயத்தை அவர்பால் திருப்பியிருந்தது. பிலாத்துவைப்போல அவள் உணர்வற்றவள் அல்ல. அவருக்கு நேரிட்ட ஆபத்தை அவள் கேள்வியுற்றதும் அன்று ராத்திரி அவளுக்கு நித்திரை வரவேயில்லை. அவரை நினைத்த வண்ணமாகவே படுக்கையில் பெருமூச்சு விட்டு புரண்டாள். விடியும் நேரத்தில் அவள் அயர்ந்து நித்திரைசெய்கையில் கடவுளால் அருளப்பட்ட சொப்பனம் கிடைத்தது. காலையில் கண்ட சொப்பனமாகையால் அவள் இன்று சொப்பனம் கண்டேன் என்று சொன்னது சரி. காலையிற் காணும் சொப்பனம் முக்கியமென்று நமக்குள்ளும் பேசிக்கொள்ளு கிறார்கள். "அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்" என்கிறாள். கிறிஸ்து அவளைப் பாடுபடுத்தினார் என்பதல்ல. அவர் நிமித்தம் அவள் பாடுபட்டாள். அதாவது ஆண்டவர் பட்டபாடுகளையும், அவமானங்களையும், அவர் சாந்தமாய் அவைகளைச் சகிப்பதையும் தன் சொப்பனத்தில் கண்டாள். அவளால் சகிக்கக்கூடவில்லை. அவள் இருதயம் வெகுபாடுபட்டது. அவள் கண்களில் கண்ணீர் ஓடியிருக்கும். விடிந்ததும் அவர் பிலாத்துமுன் கொண்டுவரப்பட்டதையும், அவனைச் சிலுவையிலறையும் என்று ஜனங்கள் கூக்குரலிடுவதையும் அறிந்தாள். தன் புருஷனை இந்த மகாகொடிய பாதகத்திலிருந்து தப்புவிக்கும்படி தீர்மானித்து ஒரு ஆளை அவனிடம் அனுப்பினாள். நியாயாதிபதி

சிங்காசனத்திலிருந்து நியாயம் விசாரிக்கையில், நியாயாதிபதியின் மனதை மாற்றும்படி பிரயத்தனம் செய்வது தண்டிக்கப்படவேண்டிய மாபெரும் குற்றமாகும். அவளோ அதற்கு அஞ்சவில்லை. ஆண்டவர் மீதுள்ள மதிப்பே அந்தத் தைரியத்துக்குக் காரணம், என்ன வந்தாலும் வரட்டும். நான் செய்யவேண்டிய கடமையைச் செய்வேன் என்று துணிந்து நின்றாள்.

மனைவியின் செல்வாக்கு வல்லமையுள்ளது. நன்மைக்கோ தீமைக்கோ இரண்டுக்கும் வல்லமையுள்ளது. தேவபக்தியும் தயாளசிந்தையுமுள்ள மனைவிகள் குடும்பத்துக்கு நிகரற்ற ஆசீர்வாதம் புருஷர் பல தொல்லைகளால் அவதிப்பட்டு, மனந்தடுமாறிக் கலங்கிநிற்கும் சமயத்தில், அமைதியும் ஞானமும் புத்தியுள்ள மனைவிகள் தங்கள் நல்லாலோசனையால் தங்கள் புருஷரைத் திடப்படுத்தும் ரட்சகனாக விளங்குகிறார்கள். அன்னாள், எஸ்தர், எலிசபெத் போன்றவர்கள் குடும்பத்துக்கு பெரிய ஆசீர்வாதமாய் இருந்தார்கள். நல்ல மனைவிகளால் புருஷர் மேன்மையடைவார்கள். அதுபோலவே தேவபக்தியற்ற ஸ்திரீகளால் பெருத்த சங்கடங்களும் நேரிடும். யேசபேல் ஆகாபை தன் இஷ்டப்படி ஆட்டி முழுக்குடும்பத்தையும் நாசமாக்கினாள். ஏரோதியாள் ஏரோதை தன் பிடிவாதப்படி நடத்தி இருபேரும் அழிந்தார்கள். சப்பீராள் அனனியாவுக்குத் துர்ப்போதனை போதித்து இருவரும் ஒரே நாளில் மாண்டார்கள். புருஷன் பதஷ்டமாய் ஒன்றைச் செய்யப் போனால், அவனைச் சாந்தப்படுத்துவதற்குப் பதிலாக, மனைவியும் கூடச் சேர்ந்து கோஷ்டம் செய்கிறதாயிருந்தால் அதைப்போல் ஆபத்தில்லை. பிலாத்துவை ஏற்ற சமயத்தில் எச்சரித்த கிளாதியாள் நமக்கு நல்ல மாதிரி.

### 3. கிறிஸ்துவுக்காக பரிந்துபேசினாள்

"அந்த நீதிமானுக்கு நீர் ஒன்றும் செய்ய வேண்டாம்" அதாவது அவர் விஷயத்தில் நீர் மாட்டிக்கொள்ளாதேயும், ஏனென்றால் அவர் நீதிமான். அது இவளுக்கு எப்படித் தெரியும்? ஆண்டவரைப்பற்றிய சகல காரியங்களையும் தன் தாதிகள் மூலமாகவே கேட்டு, தன் நல்ல இருதயத்தில் வைத்து கிரகித்து அவரை நீதிமான் என்று முடிவு செய்தாள். ஒருவேளை அவர் தேவாலயத்தில் பிரவேசிக்கும்போதும்

வெளியேறும் போதும் அவர் சாயலை அரமனை ஜன்னல் வழியாய்ப் பார்த்திருக்கலாம். இவள் அந்தரங்க வாஞ்சையை அறிந்த ஆண்டவர் சொப்பனத்தில் தம்மை அவளுக்கு வெளிப்படுத்தினார். இதனாலேயே அவள் அவரை அந்தக் கொடியர் கையிலிருந்து விடுவிக்கும்படி முயன்றாள். அவருக்காகத் தன் புருஷனிடம் பரிந்து பேசினாள். கிரேக்குச் சபை கொண்டாடும் பரிசுத்தவான்கள் வரிசையில் கிளாதியா புரோக்கியுலா பேரும் வருகிறது. எப்படியிருந்தபோதிலும் ஜீவ புஸ்தகத்தில் அவள் பேர் எழுதப்பட்டிருக்கிறது. புருஷன் காரியம் என்ன? அவனும் மறக்கப்பட்டவனல்ல. ரோமை ராயர்கள் தேசாதிபதிகள் பேர்களை உலகம் மறந்தாலும் பொந்தியு பிலாத்துவை மறக்காது. திருச்சபை எங்கும் சொல்லப்படும் விசுவாசப்பிரமாணத்தில் அவர் பரிசுத்த ஆவியினால் கன்னிமரியாளிடத்தில் உற்பவித்து பிறந்தாரென்றும், பொந்தியு பிலாத்துவின்கீழ் பாடுபட்டு மரித்தாரென்றும் வருகிறது. பெற்றது மரியம்மாள், கொன்றது பிலாத்து. இந்தப் பேர் பிரஸ்தாபம் அவனுக்குப் போதாதா? மனைவிக்கும் புருஷனுக்கும் எவ்வளவு வித்தியாசம்!

### 4. கிளாதியாள் ஆண்டவரைப் பூரணமாய் அறிந்தவள் அல்ல

அது அவள் குற்றமுமல்ல. அவளுக்கு எவ்வளவு அறிவு கிடைத்ததோ அவ்வளவுக்கும் அவள் உண்மையாய் நடந்து கொண்டாள். எல்லாம் கேள்வி அறிவே தவிர நேரில் அவரைக் கண்டவள் அல்ல. அவரது நல்ல ஜீவியம், அவர் செய்த உபதேசம், அவர் நிறைவேற்றின இவைகளைக் கேள்விப்பட்டு, அவரை நீதிமான் என்று அறிக்கையிட்டான். யாதொரு குற்றமில்லாத நற்புத்திரனை ரோமர் நீதிமான் என்பார்கள். லேசிலே எவனையும் நீதிமான் என்று சொல்லமாட்டார்கள். சிலுவையினடியில் நின்ற ரோமை நூற்றுக்கதிபதியும் தகுந்த ஆதாரங்களைக்கொண்டுதான் "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமான்?" என்று அறிக்கையிட்டான். அது மேலான கருத்துள்ள வார்த்தை. இதற்குமேல் அவள் அவரை அறிய அவளுக்கு வழியில்லை. அவள் பெத்தானியா மரியாளைப்போல அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு அவரோடு தனித்து சம்பாஷிக்கக் கூடுமானால், மற்ற ஸ்திரீகளைப்போல் அவரோடு கிராமம் கிராமமாய்க் பிரயாணம் செய்து, அவர் உபதேசங்களைக் கேட்டு, அவர் அற்புதங்களைக் கண்ணால் காணக்கூடுமானால்,

அவர் வியாழன் இரவில் மேல் வீட்டில் தமது சீஷரோடு பேசின நெஞ்சுருகும் பரம ரகசியங்களை இவள் நேரிலிருந்து கேட்டிருப்பாளானால், அவள் ஆள் மூலமாய்ப் பிலாத்துவுக்குச் செய்தி அனுப்பாமல், தானே நியாயஸ்தலத்துக்கு ஓடி, விரோதிகளோடு போராடி அவரை விடுவிக்க முயன்றிருப்பாள். ஒருவேளை உறுதியற்ற தன் புருஷன் அவரை சிலுவையிலறையும்படி ஒப்புவித்ததைக் கண்டால், தானும் கூடவே அவர் சிலுவைக்குப் பின்சென்று, மரியம்மாளோடும் மற்ற மரியாளோடும் சிலுவையடியில் நின்று, தன் ஆண்டவர் சரீரத்தை நல்லடக்கம் செய்திருப்பாள். எருசலேம் குமாரத்திகளே, ஆண்டவரை அறிவதற்கு உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் கிளாதியாளுக்குக் கிடைக்கவில்லையே. அப்படியிருந்தும் உங்களைப்பார்க்கிலும் பெரிய காரியத்தை அவள் செய்தாள். அவள் பாதரட்சையின் வாரை அவிழ்க்கவும் நீங்கள் பாத்திரரல்ல.

## 74. கிறிஸ்துவின் முகம்

***"சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகம்" (வெளி. 6:16).***

நமதாண்டவர் முகச்சாயல் எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியாது. அவரைப் பார்த்தவர்கள் அதைப்பற்றி ஒரு குறிப்பும் சொல்லவில்லை. அவர் முகச்சாயலை வரையவு மில்லை. சுவிசேஷத்தையும் நிருபங்களையும் நாம் படிக்கும்போது அவரது முகச்சாயலைப்பற்றி யாதொரு வார்த்தைகூட காணமாட்டோம். அவருடைய முகம் என்று பொதுவாய் வாசிக்கிறோமேயன்றி அந்த முகச்சாயல் எப்படிப்பட்டதென்று விவரம் இல்லை. உலகத்தில் ஒரு விசேஷித்த மனுஷனுடைய ஜீவிய சரித்திரத்தை எழுதுகிறவர்கள் அந்த ஆளுடைய சரீரத்தோற்றம் முகச்சாயலை வருணிப்பது வழக்கம். சர்வமனுஷரிலும் மேலானவருடைய சரித்திரத்தை எழுதினவர்கள் அவரது முகச்சாயலைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டது ஆச்சரியம்.

நமக்கு அவருடைய சாயலைக்காண ஆவல் அதிகம். ஆனால் ஆதிச்சபையில் கிறிஸ்துவைக் காண்பிக்கும் படங்கள்

இருந்ததில்லை. வெகுகாலத்திற்குப் பிந்தி சித்திர நிபுணர் சுவிசேஷத்தை ஆதாரமாகக் கொண்டு அவருடைய சாயலை வரைய முயற்சித்தார்கள். இந்தப் படங்கள் அருமையாய் எண்ணப்பெற்ற போதிலும் அவைகள் மனோராஜ்யமேயன்றி அவருடைய உண்மையான சாயலல்ல. அவருடைய சாயலை உண்டாக்க வேண்டுமானால் அவரைக் கண்ணால் கண்டவர்களுடைய உதவி வேண்டும். அவரைக் கண்டவர்கள் அவருடைய முகச் சாயலைக் குறித்து ஒன்றுமே சொல்ல வில்லை. ஆகையால் ஒருவர் ஒரு படத்தைக் காண்பித்து இது கிறிஸ்துவின் உண்மையான சாயல் என்று சொன்னால் நம்பிவிடக்கூடாது.

உத்தேசத்தின்மேல் வரையப்பட்டுள்ள படங்கள் உபயோகமற்றவையென்று நாம் சொல்லுகிறதில்லை. பிலாத்துமுன் அவர் கட்டுண்டவராய் நிற்கும் படம் எவ்வளவோ நிச்சயம்போல் தோன்றிற்று. அதைச் சுவரில் தொங்கக் கண்ட ஒரு சிறு பிள்ளை: என்னைத் தூக்குங்கள், நான் அவர் கைகளின் கட்டை அவிழ்க்கட்டும் என்று சொன்னது. கெத்செமனே தோட்டத்தில் அவர் ஜெபிக்கும் படம் பார்ப்போர் மனதைப் பரவசப் படுத்தாதிருப்பதில்லை. அவருடைய சிலுவைப்படம் எப்பேர்க்கொத்த இருதயத்தையும் உருகச் செய்யும். சித்திரக்காரர் எவ்வளவோ கிருபையோடும் கிறிஸ்துவின் சிந்தையோடும் அவருடைய சாயலை வரையப் பிரயாசப்பட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படங் களைப் பார்த்து உணர்வடைந்தோர் அநேகர். நற்குணம் பெற்றவர் அநேகர். மனமாறினவர்கள் அநேகர். இந்து நண்பர்கள் கிறிஸ்துவின் படங்களைத் தங்கள் வீடுகளில் வைத்து எவ்வளவோ அருமையாய்க் கொண்டாடுகிறார்கள். இப்படியெல்லாமிருந்தும் அந்தப் படங்கள் கிறிஸ்துவின் முகச்சாயலைக் காட்டும் உண்மையான படங்கள் அல்லவென்பது நிச்சயம். ஏனென்றால் அவரைக் கண்ணால் கண்ட ஆதிச்சபையாரிடமிருந்து இந்தப்படங்கள் வராமல் ஏழுநூறு வருஷங்களுக்குப் பின்னுள்ள சித்திரக்காரரால் வரையப்பட்டவைகளாகும்.

ஆதிச்சபையார் ஆண்டவர் சாயலைக் கல்லிலோ, மரத்திலோ, காகிதத்திலோ வரையாமல் விட்ட காரணமென்ன? அவர் எங்கெங்கே போனாலும் திராளன ஜனங்கள் அவரை

நோக்கிப் பார்த்தவண்ணமாகவேயிருந்தார்கள். எத்தனையோ சீஷர்கள் அவரை விடாது பின்சென்றார்கள். விசேஷமாக அப்போஸ்தலர் அவரோடுகூடவேயிருந்து அவர் திருமுகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தார்கள். அவர் சரீரத் தோற்றத்தைக் குறித்தும், முகச்சாயலைக் குறித்தும் வருணிக்க வேண்டுமானால் அவர்களைப்போல வேறு யார் செய்யக் கூடும். அவர் பிரிந்தாலும் மனதில் பதிந்த அவர் சாயலை மறக்கமுடியுமா? சிநேகிதர் நம்மை விட்டுப்போனாலும் அவர்கள் முகச்சாயலை நாம் மறக்க முடியவில்லையே. பின்னே ஏன் அவர் முகச்சாயலைப்பற்றி அவர்கள் ஒரு விவரமும் சொல்லவில்லை. அதற்குத் தகுந்த காரணங்களுண்டு. முதலாவது அப்போஸ்தலர் முற்றிலும் ஆவிக்குரியவர்களாயிருந்ததால் ஆண்டவரோடுள்ள ஆவிக்குரிய ஐக்கியமே அவர்களுக்குப் பிரதானமாயிருந்தது. பவுல் சொன்னதுபோல, அவர்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தபோதிலும் அவர்கள் ஆவிக்குரியவர்களானபின் அவரை மாம்சத்தின்படி அறிய நாடவில்லை. இரண்டாவது கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் அவர் சாயல் மாறினது. அதே ஆண்டவர்தான், அதே சத்தந்தான், அதே பட்சந்தான், அதே பிரசங்கந்தான், ஆனால் அவர் தோற்றத்தில் வேறு ரூபமாய்க் காணப்பட்டார். முந்தின சரீரத்திலும் உயிர்த்தெழுந்த சரீரத்திற்கும் வித்தியாசம் மிகுதி. முந்தின சரீரம், பசி, தாகம், களைப்பு, வேர்வை, பாடு, மரணத்துக்குரியது. உயிர்த்தெழுந்த சரீரமோ இவை யாவற்றையும் மேற்கொண்ட மேலான ஆவிக்குரிய சரீரம். ஒருவர் அவரைப் பிடிக்கவோ, அடிக்கவோ, ஓரிடத்தில் நிறுத்தவோ, கொல்லவோ முடியாத சரீரம். இந்த மேலான சரீரத்தைக் கண்டவர்கள் முந்தின பலவீனமான சரீரத்தையும் அதன் சாயலையும் மறந்தார்கள். ஆவிக்குரிய அவரைக்கண்டு: “எங்கள் ஆண்டவரே, எங்கள் தேவனே” என்று போற்றினவர்களுக்கு முந்தின சரீரசாயலை நினைப்பது குறைவாகயிருந்தது பிந்தின சாயல் அவர்கள் கவனத்தை ஆண்டுகொண்டபடியால் முந்தின சாயலுக்கு இடமில்லை. மூன்றாவது, அவர் பரத்துக்குப்போய் பிதாவால் மகிமையையும் கனத்தையும் பெற்றார். இது அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். இந்த மகிமை உயிர்த்தெழுந்த மகிமையிலும் உன்னதமானது. மகிமையடைந்த ஆண்டவரைத் தரிசித்த சவுல் சூரியப்பிரகாசத்திலும் அதிகப் பிரகாசமாய் ஜொலித்த அவர்

திருமுகவொளியைத் தாங்கக்கூடாமல் கீழே விழுந்து கண்பார்வையற்றார். அவர் மார்பில் சாய்ந்திருந்த அன்பின் சீஷனாகிய யோவானுக்கு அவர் காட்சியருளினபோது செத்தவனைப்போல் அவர் பாதத்தில் விழுந்தார். இவ்வாறு மகிமையின்மேல் மகிமையடைந்த கிறிஸ்துவை ஜோதிமயமாய்த் துலங்கும் ஜெகதீசனை எந்தச் சாயலில் வரைவது? இப்பேர்க்கொத்த மகிமையின் ஆண்டவரை வரையக்கூடிய சித்திரக்காரன் யார்? வரையக்கூடிய சாதனங்கள் யாவை? நாலாவது ஆண்டவர் தமது ஆவியால் அவர்களுக்குள் வசிப்பதை நிச்சயமாய் அறிந்திருந்தார்கள். அவர் தங்களுக்குள்ளிருந்து தம்மை வெளிப்படுத்துகிறவராய் உள்ளத்தில் போதிக்கிறவராய், பலப்படுத்தி நடத்துகிறவராய் இருக்கையில் உயிரற்ற ஒரு சரீர சாயலை அவர்கள் எப்படி விரும்புவார்கள்? சிநேகிதனே நம்மோடிருந்து சம்பாஷிக்கையில் அவன் போட்டோவைத் தேடிப்போய் நிற்க மாட்டோம். இவ்வளவு உன்னதமான ஆண்டவரோடு அவர்கள் அந்நியோன்யமாயிருக்கையில் நாசரேத்து இயேசுவின் பலவீனமான சரீர சாயலை எப்படி விரும்புவார்கள்? மேலும் அந்தச் சரீரம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு கொஞ்சக் காலம் அவர் உபயோகித்த சாதனம். அந்தச் சாயலே எப்போதும் நிலையுள்ளதாக இருந்தால் சீஷர்கள் அதைப்பற்றி விவரம் கூறாதிருக்கமாட்டார்கள். அது மகிமையான சரீரமாக மாற்றப்பெற்றதால் அற்பமான அவரது முந்தின சரீர சாயலை அவர்கள் மறந்தார்கள். இதுவும் தேவச் செயலே. கிறிஸ்து உலக ரட்சகர். தீர்க்கதரிசன ஒழுங்கின்படி அவர் யூதர் குலத்தில் பிறந்தாலும் மனுஷகுமாரன் என்பதே அவரது நாமம். மனுக்குல முழுவதற்கும் அவரே பிரதிநிதி. அவர் ஒரு தேசத்துக்கும் ஒரு குலத்துக்கும் உரியவரல்ல. அப்பேர்க் கொத்தவரை எந்தச் சாயலில் வரைவது? உலகத்தில் மனுஷர் பலநிறத்தவராயிருக்கிறார்கள். கிறிஸ்துவை எந்த நிறத்தில் வரைவது? இப்பொழுதோ உலகத்திலுள்ள சகல தேசத்தாரும் அவரைத் தம் தம் சொந்த இரட்சகரெனப் பாராட்டி வருகிறார்களே.

அவர் முகச்சாயல் எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியாவிட்டாலும் அவர் முகத்தைப் பற்றிய போதனையைச் சுருக்கமாய்க் கவனிப்போம்.

**1. எருசலேமை நோக்கின முகம்**

*"அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார்" (லூக். 9:51). திருப்பினார் என்ற வார்த்தை அதிகக் கருத்துள்ளது. அவர் தமது ஊழிய நாட்களில் எங்கெங்கே போனாரோ, யார் யாரைப் பார்த்தாரோ, தமது முகத்தைத் திருப்பியே அப்படிச் செய்தார். நாம் நமது முகங்களை இப்பக்கம் அப்பக்கம் திருப்புவது போலாகும். ஆனால் எருசலேமுக்கு நேராகத் தமது முகத்தைத் திருப்பினார் என்பது தனக்கு விரோதமாக வரும் எதிரியைத் தாக்கி மேற்கொள்ளும் தீரமுள்ள வீரன், எவ்வளவு தைரியமுள்ள பார்வையோடு முன்னோக்கி நடப்பானோ, அதே வீரதீர தோற்றம் அவர் முகத்தில் இருந்தது. இதற்கு முந்தியுள்ள பார்வைக்கும் இந்தப் பார்வைக்கும் வித்தியாசமிருந்ததினாலே தான் சீஷர்கள் பயந்துகொண்டு அவருக்குப்பின் நடந்தார்கள். தமக்கு விரோதமாகச் செய்யப்படும் சகல ஏற்பாடுகளையும், கொடிய பாடுகளையும் அவர் திட்டமாய் அறிந்திருந்தும் கொஞ்ச மாகிலும் பின்வாங்காமலும் மனஞ்சோராமலும் வெற்றி காணும் யுத்தவீரனைப்போல் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார். அந்தமுகம் தைரியத்துக்கும் வெற்றிக்கும் அடையாளம்.*

**2. மண்ணில் புதைந்த முகம்**

*"தரையில் அவர் முகங்குப்புற விழுந்தார்" (மத். 26:39). எருசலேமுக்கு இவ்வளவு தைரியமாகப் போனமுகம். தோட்டத்தில் முகங்குப்புற விழுவதின் காரணமென்ன? அவர் வாயினின்று பிறந்த வார்த்தைகளால் மாத்திரம் அதன் ரகசியத்தைக் கொஞ்சம் அறியலாம். அவர் அங்கே மிகுந்த துக்கமடைந்தார். மிகவும் வியாகுலப்பட்டார். தரையிலே விழுந்தார். திகிலடைந்தார். அதிக ஊக்கத்தோடும், பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் வேண்டிக் கொண்டார். அவர் வேர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது. இந்தப் பயங்கரமான போராட்டத்துக்கும் கொடிய அவஸ்தைக்கும் காரணமென்ன? பாவத்தின் பலனாகிய மரணத்தை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டிய சமயம் வந்தது. "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்றார். இந்த மரணத்தை பாத்திரம் என்றும், வேளை என்றும் அழைக்கிறார். இந்தப் பாத்திரம் தம்மை விட்டு*

நீங்கக்கூடுமாவென்று பிதாவைக் கேட்கிறார். ஆகிலும் எனது சித்தம் வேண்டாம். உம்முடைய சித்தம் போலாகட்டும் என்று சொல்லி பாத்திரத்தில் பானம் பண்ண ஒப்புக்கொள்ளுகிறார். தோட்டத்தில் அவர் பட்ட பாடுகளுக்கும் அவர் திருமுகம் மண்ணில் புதைந்ததற்கும் காரணம் மரணபயமே. என்ன மரணம்? சிலுவையிலறையப்பட்டு ஜீவன் பிரிகிற மரணமா? ஒருக்காலும் அல்ல. சரீரத்தைவிட்டு ஆவி பிரிவதை ஆண்டவர் மரணம் என்று சொல்லாமல் நித்திரையென்றே சொன்னார். மற்றவர்களுக்கு நித்திரையும் தமக்கு மாத்திரம் மரணமாகுமா? அவர் தமது ஆவியை பிதாவின் கையில் ஒப்புக்கொடுத்து நித்திரையடைந்தார். உயிர்த்தபோது நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். இவர் சிலுவையில் மெய்யாகவே மரித்தார். அவர் நித்திரையடையுமுன்பு மரணத்தைருசிபார்த்தார். "எல்லாருக்காகவும் அவர் ஒருவரே மரித்தார்" "ஒவ்வொரு வருக்காகவும் அவர் மரணத்தை ருசி பார்த்தார்." இந்த மரணமே அவருக்குக் கொடிய பயங்கரமும் கசப்புமாயிருந்தது. சிலுயையில் மூன்றாம் வசனத்தைக் கூறின பின்பு மூன்றுமணிநேரமாக அவர் பேசவேயில்லை. சூரியன் இருண்டு எங்கும் அந்தகாரம் மூடிக்கொண்டது. ஆண்டவர் பட்டகஸ்தியை மனுஷன் பார்க்காதபடி இருள் கண்களை மறைந்தது. அவர் ஆத்துமாவையும் கொடிய இருள் மூடிக்கொண்டது. அவர் அச்சமயத்தில் அனுபவித்த மரணம் எது? கடவுளால் கைவிடப்படுவதே அவர் உள்ளான போராட்டத்தை நாலாம் வசனம் வெளிப்படுத்துகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். ஆண்டவர் நமக்காகப் பாவமானதால் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அதாவது கடவுளால் முற்றிலும் கைவிடப்படும் அனுபவத்தைக் கண்டார். உலகத்தில் எப்பேர்ப்பட்ட பாவியும் கடவுளால் முற்றிலும் கைவிடப்படுவதில்லை. கடவுளற்ற மனுஷர் அவரது நன்மைகளை அனுபவித்து மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். இவர் ஒருவரே நமக்காக கைவிடப்பட்டவர். இவ்வாறு கொடிய மரணத்தை அவர் ருசிபார்த்து வெற்றியடைந்ததால். மரணத்துக்குரியவர்களை ரட்சிக்க வல்லவரானார்.

**3. துப்பப்பட்ட முகம்**

*"அவருடைய முகத்தில் துப்பினார்கள்" (மத். 26:37)* பிரதான ஆசாரியன் முன் நிற்கிறார். சாட்சிகளுக்கு அவர்

பதில் சொல்லவில்லை. நீ பேசுகிறதில்லையாவென்று பிரதான ஆசாரியன் கேட்கிறான். பேச்சில்லை. நீ தேவகுமாரனாகிய கிறிஸ்துவாவென்று ஜீவனுள்ள கடவுள் மேல் ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். நீர் சொல்லுகிறபடிதான் என்றார். உடனே இவன் மரணத்துக்குப் பாத்திரன் என்று தீர்மானித்து விட்டார்கள். சூழநின்ற வீணர்கள் அவர் முகத்தில் துப்பி, அவரைக் குட்டி அவரைக் கன்னத்தில் அடித்தார்கள். சகலத்தையும் அவர் பொறுமையாய்ச் சகித்துக் கொண்டார். தோட்டத்தில் அவர் ஏற்றுக்கொண்ட கொடிய மரணத்துக்கு முன்பாக இந்த அவமானங்கள் எம்மாத்திரம்! பாவிகள் மீதுள்ள அன்பின் பெருக்கம் சகல அவமானங்களையும் சகிக்கச் செய்தது. மறுரூபமலையில் சூரினைப்போல் பிரகாசிக்கிற திருமுகத்தில் எச்சில் வடிவதைப் பாருங்கள்.

### 4. நீதி செலுத்தும் முகம் (வெளி. 6:16)

இனி வெளிப்படும் அவர் முகத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? வியாபாரமும், ஐசுவரியமும், உத்தியோகமும், அந்தஸ்தும், அதிகாரமும், யுத்தவெறியும் உலகமக்களைப் பிடித்து ஆட்டுகின்றன. கிறிஸ்தவை நினைப்பவரும் மதிப்பவரும் யார்? வேதப்புரட்டும், ஆலய அசட்டையும், ஆண்டவரை மறுதலிப்பதும், கொள்ளையும், கொலையும், துணிகரமான அக்கிரமங்களும், மானங்கெட்ட செய்கைகளும், பத்திரிகைகளை வாசிப்போருக்கு நடுக்கத்தை உண்டாக்குகின்றன. எங்கள் தேசம் கிறிஸ்துவ தேசம் என்று பெருமை பாராட்டுவது வெட்கமான காரியம். இவைகளுக்கு முடிவென்ன? சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்துக்கு முன்பாக இவர்கள் நடுங்கி மறைந்துகொள்ளப்பார்ப்பார்கள். கன்மலைகளே, குகைகளே, கோபாக்கினையின் நாள் வந்துவிட்டதே. அவர் முகத்துக்கு எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் என்பார்கள். மறைத்துக் கொள்ள முடியுமா? இந்த மதிகெட்ட தீக்குருவிகளை ஆண்டவர் நியாயந்தீர்க்காமல் விடார்.

தேவனுடைய குமாரர் குமாரத்திகளுக்கோ அவர் முகம் ஆனந்தமாயிருக்கும். அவரைத் தரிசிக்க எவ்வளவோ ஆவலோடிருந்தார்கள். அவர் வெளிப்படும் நாள் சகல

பாடுகளும் நீங்கிப் பாக்கியம் பெறும் நாள். அவர்களுக்கு அவர் முகத்தில் பயமில்லை. "நீதியில் அவர் முகத்தைத் தரிசிப்போம்; விழிக்கும்போது அவர் சாயலால் திருப்தியாவோம்" என்கிறார்கள். அவருடைய பிரகாசத்திலும் மகிமையிலும் பங்குபெற்று அவருக்கொப்பாவார்கள். அவரது அன்பின் ராஜ்யத்தில் பிரவேசித்து அவரோடு அரசாளுவார்கள். அவரை இப்போது நேசிக்கிறவர்களையும் நேசிக்காதவர்களையும் அந்நாளில் அவர் முகம் பிரிக்கும். "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் ஆத்துமா உம்மிடத்தில் சொல்லிற்று"

## 75. "நீ அறிந்திருந்தால்"

**"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கேற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்" (லூக். *19:42*).**

பஸ்காப் பண்டிகை! நாலாதிசையிலுமிருந்து ஜனங்கள் வந்ததால் எருசலேமின் முப்பதுலட்சம் கூட்டம். நகரத்தில் இடம்போதாததால் நகரத்தைச் சுற்றிலும் மலைச் சார்பிலும் ஜனங்கள் கிளைகளாலும் இலைகளாலும் போட்ட கூடாரங்களில் தங்குவார்கள். பஸ்காவைப்போல் யூதனுக்கு மகிழ்ச்சி வேறில்லை. தோரணங்களும் பல அலங்காரங்களும் கண்ணைக் கவரும், பண்டிகைக்குரிய ஆயத்தங்கள் விமரிசையாய் நடைபெறும். ஆடல் பாடலுக்கும் ஆனந்தக் கூத்துக்கும் அளவில்லை. இவ்வாறு நகரமுழுவதும் சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்திருக்கும் வேளையில் ஒருவர் மாத்திரம் நகரத்தைப் பார்த்து அழுகிறார். ஒலிவமலையின் ஒரு பக்கம் வரும்போது ஓர் குறித்தயிடத்தில் நகரத்தின் சிறப்புத் தோன்றும். காலைச் சூரியன் நகரமீது விழவே பளிங்குக் கோபுரங்களும் பொன்முலாம் பூசின கூரைகளும் பிரகாசித்து ஜொலிக்கும் அந்த இடத்திற்கு ஆண்டவர் வந்தபோது நகரத்தின் சிறப்பைக்கண்டு மகிழ்வதற்குப் பதிலாகக் கண்ணீர் விட்டுத் தேம்பித்தேம்பி அழுதார். அப்படி அழும்போது: "உனக்குக்

கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக் கேற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்" என்று சொன்னார். நகரமோ தனக்கு வரப்போகிற அழிவை அறியவில்லை.

### 1. தங்களைச் சந்தித்தவரை இன்னாரென்று அறியாமற்போனார்கள்

அவிசுவாசம் அவர்கள் கண்களைக் குருடாக்கிற்று. அவரை விசுவாசித்தவர்கள் அவரைக் குறித்துச் சொல்லுகிறதென்ன? "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்" (பிலி. 2:6,7). "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன. பரலோகத்திலுள்ளவைகளும். பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங் களானாலும் கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங் களானாலும் அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கின்றன (கொலோ. 1:15–17). இது பவுலடியாரின் அறிக்கை. எபிரெயர் நிருபத்தார் சொல்லுகிறதென்ன? கடைசி நாட்களில் கடவுள் தமது "குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார், இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் தன்மையின் சொரூபமுமாயிருந்தது, சர்வத்தையும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார்" (எபி. 1:2,3). யோவான் சொல்லுகிறதென்ன? "ஆதியில் வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை கடவுளிடமிருந்தது, அந்த வார்த்தை கடவுளாயிருந்தது அவர் ஆதியில் கடவுளோடு இருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயின, உண்டானதென்றும் அவரையல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவா. 1:1–3,14). இவ்வாறு அவரை அனுபவத்தில் அறிந்த பக்தர்களுக்கு கிறிஸ்து

மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள். இந்த யூதரோ தங்களைச் சந்தித்த அவரை இன்னாரென்று அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் தேவபக்தராயிருந்திருந்தால் அறிந்திருப்பார்கள். தாங்கள் அடிக்கடி வாசித்துப்படிக்க வேதம் அவரைப்பற்றித் திட்டமாய் கூறினது. அப்படியிருந்தும் அவர் வெளிப்பட்ட போது அவரை அறியாமற்போனார்கள். அவரது நிகரற்ற பரிசுத்த ஜீவியம், அவர் செய்த அரிய உபதேசம், அவர் நிறைவேற்றின மகத்துவமான கிரியைகள் அவரை இன்னாரென்று கண்டுகொள்ளப் போதுமானதாயிருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை. காரணமென்ன? இனமே இனத்தை அறியும். பக்தன் பக்தனை அறிவான். கல்விமான் கல்விமானை அறிவான். சங்கீத வித்வான் சங்கீத வித்வானை அறிவான். பரிசுத்தன் பரிசுத்தனை அறிவான். ஆண்டவர் முற்றிலும் ஆவிக்குரியவர். அவர்களோ மாம்சத்துக்குரியவர்கள். அவர் பரமசிந்தையுள்ளவர், அவர்களோ உலக சிந்தையுள்ளவர்கள். அவர் பரிசுத்தர், அவர்கள் தங்கள் பாவங்களில் செத்தவர்கள். இந்நிலையில் அவர்கள் அவரை அறிந்துகொள்ளாதது ஆச்சரியமல்ல. ஆண்டவர் அடியாரை மதிப்பவர்கள் யார்? தங்களை அறியாதவர்கள் மத்தியிலே அவர்கள் சஞ்சரித்து ஊழியம் செய்கிறார்கள். உலகப் பார்வையில் அவர்கள் அற்பமானவர்கள். கிறிஸ்தவர்கள் என்னும் பேரைத் தரித்தவர்கள் மத்தியிலும் அவர்களுக்கு மதிப்பில்லை. இதைக் குறித்து விசனப்படுவதில் என்ன பிரயோஜனம்? ஆவிக்குரியவர்களே ஆவிக்குரியவர்களை அறிவார்கள். நமக்குள்ள பாடுகளில் இதுவும் ஒன்று.

**2. தங்களுக்கு வந்த ரட்சிப்பை அவர்கள் அறியவில்லை**

உன்னைச் சந்திக்கும் நற்காலத்தை நீ அறியவில்லையென்றும், உன் சமாதானத்துக்கேற்றவைகளை நீ அறியாமற் போனாயென்றும் ஆண்டவர் சொன்னார். தேவனுடைய சகல பரிபூரண ஆசீர்வாதங்களும் நிறைந்த திருக்குமாரன் சொந்த ஜனமாகிய இஸ்ரவேலை ஆசீர்வதிக்கப் பூரண வாஞ்சை கொண்டு அவர்கள் நடுவில் தோன்றினார் அவரிடத்தில் பாவமன்னிப்பு, சமாதானம், நீதி, பிதாவோடு ஐக்கியம் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருந்தன அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டால் இவையாவும் அவர்களுக்கு

இலவசமாகக் கிடைக்கும். அவர்களை எப்படியும் இரட்சிக்கும்படி எவ்வளவோ பிரயாசப்பட்டார் "எத்தனைதரமோ உங்களைச் சேர்த்துக்கொள்ள நான் மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனமில்லாமற்போயிற்று" என்று புலம்பினார். தங்களைச் சந்தித்த ஆண்டவரையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அவரால் தாங்கள் பெற்று அனுபவிக்கக் கூடிய ஆசீர்வாதங்களையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அது மாத்திரமல்ல.

### 3. தங்களுக்கு சம்பவிக்கும் அழிவையும் அவர்கள் அறியவில்லை

ரட்சிப்பை அசட்டை செய்யும்போது அழிவே பலனாகும். ஆண்டவர் கொண்டுவந்த ஆசீர்வாதங்கள் அவர்கள் கண்களுக்கு மறைவாயிருந்ததுபோலவே தங்களுக்கு வரப்போகிற அழிவும் மறைவாயிருந்தது. ஆண்டவர் கண்களுக்கோ அவைகள் பிரத்தியட்சமாய்த் தோன்றின. அந் அழிவைக்குறித்து அவர் பொதுவாய்ப் பேசாமல் அதிக விவரமாய்த் தெரிவித்தார். "உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச்செய்யும் நாட்கள் உனக்கு வரும்" என்றார். "எருசலேம் குமாரத்திகள் தமக்காக அழுதபோது எருசலேம் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார். பிலாத்து அவருடைய ரத்தத்துக்காக பயந்து கைகளைக் கழுவினபோது யூதர்கள் அவனைப் பார்த்து: "இவனுடைய ரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் வருவதாக" என்றார்கள். நாற்பது வருஷங்களுக்குள் ஆண்டவா சொல்லியிருந்தபடியே அவர்களுக்குச் சம்பவித்தது. ரோமைச்சேனை அவர்களைச் சூழ்ந்துகொண்டு நெருக்கினார்கள். ஆலயத்தையும், நகரத்தையும், ஜனத்தையும் முற்றிலுமே அழித்துவிடவேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல. ஆனால் இந்த முரட்டாட்டமும் கலகக்குணமுள்ள யூதர் அவர்களை எதிர்த்துக் கோபமூட்டினதால் ஆலயமும் நகரமும் தரைமட்டமாயின. ஆயிரமாயிரமான சிலுவைகளில் அறையப்பட்டார்கள். சிலுவைக்கு மரமில்லாதபோது பட்டயத்தால் வெட்டுண்டு அங்கேயே புதைக்கப்பட்டார்கள்.

எருசலேம் பெரிய கல்லறைத் தோட்டம்போலாயிற்று. அநேகர் சிறையானார்கள். முதியோர் மரித்துப்போயிருக்கலாம்; ஆனால் ஆண்டவர் இந்த அழிவைப்பற்றிக் கூறுகையில் கேட்டிருந்த வாலிபர், சிறுவர் தங்களுக்கு நேரிட்ட அழிவை அவர் சொன்னபடியே கண்டார்கள்.

தேசமிழந்து உலகெங்கும் சிதறுண்டுபோன யூதர் கிறிஸ்துவை அசட்டை பண்ணுகிறவர்களுக்கு எச்சரிப்பா யிருக்கிறார்கள். யூதர் தங்களைச் சந்தித்தவரை அறியவில்லை என்பது உண்மைதான். நாம் அவரை இன்னாரென்று அறிந்திருக்கிறோமா? நமது மார்க்கம், ஸ்நானம், நற்கருணை, ஆராதனை, வேத அறிவு, ஊழியம் இவையாவும் நல்லதே. ஆகிலும் கிறிஸ்துவை இன்னாரென்று நமது அனுபவத்தில் அறிந்திருக்கிறோமா? கிறிஸ்துவை அறியாத கிறிஸ்தவர்கள் எத்தனையோபேர் நமக்குள்ளும் இருக்கிறார்களே. எப்படித் தெரியும்? அவர்கள் பேச்சு நடக்கை பலகாரியங்கள் அதை வெளிப்படுத்துகின்றன. அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதல்ல. வேதத்தில் சொல்லியிருக்கிறதென்பதல்ல அவரோடு பழகி, நமது அனுபவத்தில் அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள்தான் என்று அறிந்திருக்கிறோமா? இரண்டாவது, அவரருளச் சித்தமாயிருக்கும் ஆசீர்வாதங்களில் எவ்வளவு பெற்றுத் தேறியிருக்கிறோம்? ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஆவிக்குரிய ஊழியத்திலும் நம்மில் காலத்துக்குக் காலம் வளர்ச்சியுண்டா? அல்லது இருபது முப்பது வருஷங்களுக்குமுன் இருந்த மாதிரிதான் இன்றிருக்கிறோமா? கடைசியாக ஆண்டவரையும் அவரது ஆசீர்வாதங்களையும் மறந்து மனம்போன போக்கில் நாம் போய்க்கொண்டிருந்தால் நமது முடிவு பயங்கரமாயிருக்கும். "இப்பொழுதே ரட்சண்ய நாள்; இப்பொழுதே அனுக்கிரக காலம்"

## 76 மாராவின் கசப்பு

***"அவ்விடத்துக்கு மாரா என்று பேர்" (யாத். 15:23).***

மனுஷர் வாழ்க்கை முதலிலிருந்து கடைசிவரை முழுவதும் இன்பமாகயில்லையே. அது சந்தோஷமும் சஞ்சலமும், நேசமும்

பகையும், லாபமும் நஷ்டமும், செல்வமும், தரித்திரமும், சுகமும், நோயும் கலந்தேயிருக்கிறது. ஒன்று மறைந்து மற்றது தோன்றும் வேளையை நாமறியோம். சமாதானம் சௌக்கியம் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே சங்கடங்களும் ஆபத்துக்களும் வந்து விடுகின்றன. இவ்வாறான பாதையில் நாம் நடக்கவேண்டுமென்பது தேவ ஏற்பாடாகயிருக்கிறது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இம்மாறுதலுள்ள வாழ்வே நமது ஆத்ம வளர்ச்சிக்கு அவசியம் என்பது புலப்படும். கடவுள் இஸ்ரவேலை நடத்தின நோக்கமும் அதுவே.

என்றாலும் வாழ்க்கையின் ஏமாற்றம் மனதுக்குச் சஞ்சலமாகவேயிருக்கிறது. சகலமும் மனரம்மியமாய் இருக்கவேண்டுமென்பது நமது வாஞ்சை. இஸ்ரவேலர் எகிப்தை விட்டு விடுதலையாகி, சமுத்திரத்தை அதிசயமாகக் கடந்து கரைசேர்ந்தபின், மோசேயின் பாட்டைப்பாடி கர்த்தரைப் போற்றினார்கள். அவர்களடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை அதிலிருந்து மூன்றுநாள் வனாந்தரத்தில் பிரயாணப்பண்ணினார்கள் மூன்று நாளும் குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் மகிழ்ச்சி சஞ்சலமாகமாறிற்று. வெயில் அகோரம் சகிக்கக்கூடவில்லை. எல்லாருடைய நாவும் வறண்டு போயிற்று. அவர்கள் மாரா என்னும் இடத்துக்கு வந்தபோது தண்ணீரைக் கண்டு, ஆவலோடே அதைக் குடிக்கப் போனார்கள். வாயில் வைத்தாலோ கொடிய கசப்பு, எல்லாரும் ஏமாந்து போனார்கள். கடற்கரையில் மோசேயின் பாட்டை, ஆனந்தத்தோடு பாடின அவர்கள் மோசேக்கு விரோதமாய், முறுமுறுத்தார்கள். மூன்று நாட்களுக்குள் எவ்வளவு மாறுதல்!

முறுமுறுத்த அவர்களை நாம் குற்றப்படுத்தக்கூடாது. நாம் அந்த நிலைமையிலிருந்தால் நாமும் முறுமுறுத்திருப்போம். அவர்கள் கஷ்டம் கடவுளுககுத் தெரியும். அவர்கள் முறுமுறுத்ததினிமித்தம் அவர் அவர்களைக் கடிந்து கொள்ளவில்லை நோயினால் பாடுபடும் பிள்ளை பேசும் வார்த்தைகளையும் கொடுக்கும் கஷ்டங்களையும் கவனியாது, அதற்கு உதவிசெய்யும் அன்புள்ள தாயைப்போல கடவுளும் அவர்கள் விஷயத்தில் தயவாய் நடந்து கொண்டார். தண்ணீரின் கசப்பை மாற்றி அவர்கள் தாகத்தைத் தீர்த்தார். இங்கே மூன்று குறிப்புகளை கவனிப்போம்.

**1. மாராவின் கசப்பு**

"ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" வனாந்தரமாகிய இவ்வுலக பிரயாணத்தில் கசப்பான விஷயங்கள் அநேகமுண்டு. அவரவருடைய தனி ஜீவியத்திலுள்ள கசப்புகள்: வேலையில்லாமை, தரித்திரம், நோய், மரணம், பகை, தப்பெண்ணம், பலவகை உபத்திரவம் இவை முதலியவைகளால் நமக்குள்ளே எவ்வளவோ சஞ்சலப்படுகிறோம். இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் பறந்துபோகின்றன. குடும்பக் கசப்புகள்: குடும்ப பாரம் பெரும்பாரம், போஷிக்க, உடுத்த, கல்வி கொடுக்க, குடியிருக்கப் போதுமான வருமானமில்லை. இன்னும் மக்கள் அடங்காமல் தங்களிஷ்டப்படி நடக்கிறதாயிருந்தால் மனவேதனைக்கு அளவில்லை. சபைக்கசப்புகள்: அன்பும் ஏகசிந்தையுமாயிருக்க வேண்டிய சபையில் பகையும் பிரிவினையும் உலக சிந்தையும் தந்நயமும் காணப்பட்டால் அதைப்போல் கசப்பான காரியம் வேறில்லை. உலக கசப்புகள்: தற்சமயம் உலகத்தின் நிலைமையை வெறிகொண்டதுபோல் தோன்றுகிறது. எங்கே பார்த்தாலும் குழப்பம். ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும், குடும்பத்துக்கு விரோதமாய் குடும்பமும், மனுஷனுக்கு விரோதமாய் மனுஷனும் போருக்கு நிற்கிறார்கள். கொலைகள் ஒரு பொருட்டல்ல. சினிமாக் காட்சி வந்தது முதல் மனுஷருடைய துன்மார்க்க விஷயங்களுக்கு அளவில்லை. இவை யாவையும் கவனிக்கும்போது தேவபக்தர்களுக்கு எவ்வளவோ கசப்பு.

இவ்வாறான கசப்புகள் முறுமுறுப்புக்குக் காரணமாகின்றன. கடவுளடியாரும் இந்த முறுமுறுப்புக்குத் தப்பினவர்கள் அல்ல. தாகத்தோடு குடிக்கப்போகும்போது தண்ணீர் கசப்பாயிருந்தால் யார்தான் முறுமுறுக்காதிருக்கக் கூடும்? அப்படிப்பட்டவர்களைப் பார்த்து; நீங்கள் முறுமுறுப்பது சரியல்ல, இது கடவுளுக்கு விரோதமான பாவம் என்று நாம் சொல்லுவது லேசு. ஆனால் நமக்கே கஷ்டங்களும் ஏமாற்றங்களும் நேரிடும்போது நமது மனநிலை எவ்வாறிருக்கிறதென்பதை நாம் அறியாதவர்களல்ல. வல்ல பக்தர்களும் தங்கள் இடுக்கண்களில் வாய்விட்டுப் புலம்பியிருக்கிறார்கள்? யாக்கோபு, எலியா, யோனா முதலானவர்கள் புலம்பவில்லையா? எல்லாம் சௌகரியமாயிருக்கும்போது நாம்

ஸ்தோத்திர கீதம் பாடுவது லேசு. எல்லாம் விரோதமாகத் தோன்றும் சமயத்தில் நாம் மனதில் எவ்வளவோ முறுமுறுக்கிறோம். இது நமது குறைவைக் காண்பிக்கிறது. நாம் விரும்புகிறது நடக்கவேணுமென்கிற சுயசித்தத்தைக் காட்டுகிறது. அவிசுவாசம் ஆண்டுகொள்ளு கிறது. பொறுமை, பூரண கிரியை செய்ய இடமில்லை. முறுமுறுப்பினால் பிரயோஜனம் யாதுமில்லை முறுமுறுப்பு நமது கசப்பை மாற்றாது. மனதைக் கடினப்படுத்தும். கசப்பை அதிகப்படுத்தும் சந்தோஷம் கிடையாது. ஆவி சோர்ந்து போகும். அந்தகாரம் மனதை ஆண்டுகொள்ளும்.

## 2. கசப்புக்குப் பரிகாரம்

கடவுளுக்குத் தெரியப்படுத்துவதே மோசே தாமதமின்றி உடனே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். தங்களுக்கு நேரிட்ட கொடிய சங்கடத்தை கடவுளுக்குத் தெரிவித்தார். எந்தக் கசப்பிலும் ஜெபத்துக்கு நிகரான நிவாரணம் இல்லை. நமது கஷ்டங்களைப் பற்றி நாமே சிந்திப்பதாலும், ஆலோசிப்பதாலும் கசப்பு நீங்காது. நமது கசப்பை ஆண்டவரிடத்தில் கொட்டவேண்டும். நமது கவலைகளை அவர்மேல்போட வேண்டும். நமக்குள்ள சஞ்சலத்தை உள்ளபடியே பிதாவுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லிவிடவேண்டும். நொறுங்குண்ட இருதயத்தின் விண்ணப்பங்களை ஆண்டவர் ஒரு போதும் புறக்கணியார். எல்லாம் அறிந்த ஆண்டவரிடத்தில் மரியாதை ஜெபம் என்னத்துக்கு? நமது கசப்பையும் முறுமுறுப்பையும் அவிசுவாசத்தையும் இருக்கிறபடியே அவருக்குச்சொல்லி அவர் பாதத்தில் நமது கண்ணீரை வடிக்க வேண்டும். உண்மையுள்ள ஜெபத்துக்கு உதவி தீவிரமாய் வரும். அப்படிப்பட்ட ஜெபங்களை கடவுள் மதிக்கிறார். நமது அங்கலாய்ப்பை மாற்றி எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை நமக்கருளினார்.

மோசேயின் ஜெபம் கேட்கப்பட்டது. கசப்புக்குப் பரிகாரம் கிடைத்தது. கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அது பக்கத்திலேயே இருந்தது. அது அற்புதமாக அந்த நிமிஷத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மரமல்ல. ஏற்கனவே நின்ற ஒரு மரத்தையே ஆண்டவர் மோசேக்குக் காண்பித்தார். அதை அவர் தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமான

தண்ணீராயிற்று. புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் தங்கள் தாகந்தீர குடித்தார்கள் நமது கசப்புகளை மாற்றும் மருந்து நமது பக்கத்திலேயே இருக்கிறது. நாம் அதைக் காணவில்லை. ஆண்டவர் நமது கசப்பை மாற்றும்படி ஓர் புதிய காரியத்தைச் செய்வாரோ என்று எதிர்பார்க்கிறோம். ஓர் புதிய வேதாகமத்தையோ, ஓர் புதிய கிறிஸ்துவையோ, ஓர் புதிய வாக்கையோ, ஓர் புதிய சிலுவையையோ, ஓர் புதிய ஆறுதலையோ அவர் கொண்டுவருவதில்லை. நமது கசப்பை மாற்றும் பரிகாரம் நமது பக்கத்திலிருப்பதை நாம் காணும்படி நமது கண்களை அவர் திறக்கிறார். நாம் அதை உபயோகிக்கும் படியான பலத்தைக் கொடுக்கிறார். நாம் அதை உபயோகிக்கும்போது எப்பேர்க்கொத்த கசப்பும் மாறி மதுரமான தண்ணீராகிறது. ஆகார் தன் பக்கத்திலிருந்த தண்ணீரைக் காணாதபடி கண்ணீர் அவள் கண்களை மறைத்தன. கர்த்தர் அவள் கண்களைத் திறந்தபோது தண்ணீரைக் கண்டாள். நமது பரிகாரம் நாம் நினைப்பதைப் பார்க்கிலும் அதிகம் சமீபமாகவேயிருக்கிறது. அந்தப் பரிகாரி கிறிஸ்துவே. அவரருளும் பரிகார மரம் சிலுவையே, சிலுவைக் காட்சியைப் போல் நமது கசப்பை மாற்றக்கூடிய மருந்து வேறெதுவும் இல்லை.

### 3. மாராவுக்குப் பின் ஏலிம்

நமது ஜீவியம் எப்பொழுதும் கசப்புள்ளதல்ல. மாராவுக்குப் பிறகு நிச்சயமாய் ஏலிம் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளே இதை நிச்சயமாய் நம்புங்கள். ஏலிம் அதிகத்தூரமுமல்ல. அவர்கள் மாராவைவிட்டு ஆறுமைல் மாத்திரம் நடந்து ஏலிமுக்கு வந்தார்கள். இரண்டு மூன்றுமணி நேரம்பிரயாணம். ஏலிமில் பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்தன. அங்கே மதுரமான தண்ணீர் அருகே பாளையமிறங்கினார்கள். மாராவின் கசப்பை முற்றிலும் மறந்தார்கள். ஏலிமில் தண்ணீரைக் குடித்து மகிழ்ச்சியடைந்தார்கள். மனுஷனுடைய வாழ்வு முழுவதுமே சஞ்சலமென்று நினைப்பவர்கள் உண்டு. ஆனால் அது மாராவும் ஏலிமும் கலந்தேயிருக்கிறது. ஒன்றுக்கொன்று அதிகத்தூரமுமல்ல. பல மாறுதல்கள் வழியாக மனுஷனை நடத்துவது கடவுளுடைய ஏற்பாடு. அவன் பூரணப்படுவதற்கு அது அவசியம். ஆதிமுதல் எல்லாப் பக்தர்கள் ஜீவியத்திலும் மாராவும் ஏலிமும் கலந்தே வந்திருப்பதைக் காணலாம்.

எப்பொழுதுமே மகிழ்ச்சியானால் நாம் பலவீனமான குழந்தைக்கொப்பாயிருப்போம்; நம்மைத் தூக்கிச் சுமக்க தாதிகள் வேண்டும். எப்பொழுதுமே கசப்பானால் நாம் துக்க சாகரத்தில் அமிழ்ந்து போவோம். தற்கொலைகளுக்குக் குறைவிராது. ஆகையால் பரமபிதா இரண்டும் கலந்த அனுபவத்தை நமக்குத் தருகிறார். பாடுகள் நமது குறைவை நமக்கு உணர்த்தி, நாம் கடவுளைப் பற்றிப்பிடிக்கும்படி செய்கின்றன. பரமபிதா நம்மைக் கைதூக்கி ரட்சிப்பதினால் நாம் அவரை ஸ்தோத்திரிக்கவும், அவரை நம்பிப் பிழைக்கவும் ஏதுவாகிறது. ஆகையால் நாம் கசப்பான பாத்திரத்தைப் பானம் பண்ண நேரிட்டால் தேவன் நம்மேல் கோபமாயிருக்கிறார் என்று நினைக்கக் கூடாது. இஸ்ரவேலர் மாராவுக்கு வந்தது தேவ கோபமல்ல. அவர் ஏலிமில் எவ்வளவு அன்பாயிருந் தாரோ அதுபோலவே மாராவிலும் இருந்தார். அவர்களைப் பக்குவப்படுத்துவதற்கு ஆண்டவர் தெரிந்து கொண்ட பாதை அது. தற்சமயம் கசப்பாய்த் தோன்றும் காரியங்கள் பிந்தி நமக்கு நன்மையாகத் தோன்றும் ஆகையால் எப்பொழுதும் தேவசித்தத்திற்கு அடங்கி நடப்பதே சிறந்த ஞானம்.

# 77. சிரேனே ஊர் சீமோன்

***"சிரேனே ஊரானாகிய சீமோன் என்னும் ஒரு மனுஷனை அவர்கள் கண்டு அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்" (மத். 27:32).***

இஸ்ரவேலின் பூர்வ சரித்திரத்தைக் கவனித்தால் பலஸ்தீனாவை விட்டு எந்த யூதனும் புறம்பே போக விரும்புவதில்லை என்பது தெரியும். தங்கள் பூர்வ சரித்திரத்தை மதித்து, கடவுள் தங்களுக்கு கொடுத்த வாக்குகளை நினைத்து, வரப்போகும் நன்மைகளையும் எதிர்பார்த்து, தேசம் விட்டுப் பிரியாமல் மத்தியதரைக்கடலுக்கும் யோர்தானுக்கும் இடையிலுள்ள மலைகள் சூழ்ந்த நாட்டிலேயே வசித்து வந்தார்கள். அது கடவுள் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசம் என்று பெருமையாய்ப் பேசிக்கொள்வார்கள். இந்த எண்ணம் நிலைக்கவில்லை. அந்நியரால் சிறையாக்கப் பட்டார்கள். அடிக்கடி நடந்த யுத்தங்களால் தேசம் தரித்திர

திசையடைந்தது. அந்நிய ஆளுகையும் வந்து அவர்கள் மனதைப் புண்படுத்தினது. தேசத்தில் வசிக்கமுடியாமல் எங்கும் சிதறுண்டு அந்நிய தேசங்களில் குடியேறினார்கள். ஆகிலும் அத்தேசங்களைத் தங்கள் சுயதேசமென்று அவர்கள் நினைக்கவில்லை. இரவும் பகலும் அவர்கள் இருதயம் எருசலேமையே நாடினது.

அந்நியதேசத்தில் அவர்கள் இருந்த காலத்தில்: "எருசலேமே! நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக என்றும், நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கிய மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால் என் நாவு என் மேல்வாயோடே ஒட்டிக்கொள்வதாக" என்றும் சொல்லுவார்கள். அந்நிய தேசத்தில் தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, சாமுவேல், தாவீது, சீமோன், பென்யமீன் என்று பெயரிட்டு முற்பிதாக்களை ஞாபகம் பண்ணுவார்கள். அத்துடன் அவர்கள் ஜீவிய சரித்திரத்தை மக்களுக்குப் போதித்து ஜாதி அபிமானத்தை உண்டாக்கு வார்கள். மக்கள் வளர, வளர சுயதேசமாகிய எருசலேமைப் பற்றிய வாஞ்சை அதிகரிக்கும். பிதாக்களின் தேசத்தைப் பார்க்க வேணும். எருசலேமின் வீதியில் உலாவவேண்டும். தேவாலயத்தில் பிரவேசித்து தொழுது கொள்ள வேண்டும் என்கிற ஆவல் அவர்களுக்குள் பெருகும்.

இவ்வாறு சிதறுண்டு போனவர்களில் சிலர் வட ஆப்பிரிக்காவில் குடியேறினார்கள். அங்கே சிரேனே என்றொரு பட்டணம் உண்டு. பவுல் தர்சுப் பட்டணத்தில் பிறந்ததுபோல சீமோனும் சிரேனே பட்டணத்தில் பிறந்தார். பஸ்கா பண்டிகை சமீபமாயிற்று. சீமோனுக்கு எருசலேமைத் தரிசிக்க ஆவலுண்டாயிற்று. "கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று அவர்கள் எனக்குச் சொன்ன போது நான் மகிழ்ச்சியாயிருந்தேன். எருசலேமே உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாக கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்தரிப்பதற்குப் போகும்" என்றபடி சீமோனும் எருசலேமுக்குப் புறப்பட்டார்.

எருசலேம் பண்டிகைக்கு ஏற்கனவே லட்சக்கணக்கான ஜனங்கள் வந்து சேர்ந்தபடியால் சீமோனுக்கு நகரத்தில்

இடமில்லை. அவர் பக்கத்துக் கிராமம் ஒன்றில் தங்கியிருந்து காலைதோறும் எருசலேமுக்கு வந்து ஆராதித்து மாலைதோறும் கிராமத்துக்குத் திரும்பிவிடுவார். வெள்ளிக்கிழமை காலையில் எழுந்து, அதிக மகிழ்ச்சியோடும் ஜெபசிந்தையோடும் நடந்து, காலை ஆராதனையில் பங்கு பெறும்படி எருசலேமை நோக்கி வந்தார். நடக்கப்போகிற காரியம் அவருக்குத் தெரியாது நகரவாசலண்டை சீமோன் வந்தபோது எதிரே வரும் பெருங்கூட்டத்தைக் கண்டார். சமீபத்தில் வந்து பார்த்தபோது ஒரு மனுஷன் சிலுவையைச் சுமக்க முடியாமல் கீழே விழுந்து கிடப்பதையும், ரோமப் போர்வீரர் சூழ்ந்து நிற்பதையும் கண்டார். விழுந்து கிடக்கிற மனுஷன் யாரென்று சீமோனுக்குத் தெரியாது. ஆண்டவர் இரவிலிருந்து இதுவரை பட்டபாடுகளால் அவர் தேகத்தில் கொஞ்சமேனும் பலமேயில்லை. நடக்கக்கூடமுடியாது. அவர் இருதயம் சிலுவையைப் பிடித்துக்கொண்டிருந்தது, சரீரத்துக்கோ சுமக்கப் பலமில்லை. கொல்கொதா போய்ச் சேரவேணும். யூதன் சிலுவையைத் தொடமாட்டான். ரோமனும் தொடமாட்டான். பின்னே யார்தான் அதைச் சுமக்கிறது? ஏழை சீமோன் அகப்பட்டான். அவர் யூதனாயிருந்தும் ஆப்பிரிக்க உஷ்ணத்தால் கறுத்திருந்தார். உடையிலும் வித்தியாசமிருந்தது. உடனே அவரைப்பிடித்து சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம் பண்ணினார்கள். சீமோனோ திகைத்து, இது என்ன ரகசியமோ, என்ன விதிவசமோ, கடவுளே நான் உம்மைத் தேடி உமது ஆலயத்துக்கு வர, எனக்கு இக்கதியா? ஆகிலும் தேவபக்தனானதால் மறுவார்த்தை பேசாமல் சிலுவையைச் சுமந்து கொண்டு போனார். அதைக் கண்டவர்கள்: பாவி! இவன் என்ன கொடுமை செய்தானோ? கடவுள் பக்தன் போல் மாய்மாலம் பண்ணி எருசலேமுக்கு வந்தானோ, வினை அவனை விடவில்லை என்று பேசிக்கொண்டார்கள், உலகத் தீர்ப்புக்கும் கடவுள் தீர்ப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்!

## சீமோனைக் கவனிப்போம்

### 1. ஆண்டவருக்குச் சீமோன் செய்த நிகரற்ற ஊழியம்

ஆண்டவர் சரீரத்திலிருந்த காலத்தில் அவருக்குப் பணிவிடை செய்தவர்கள் பலர். மார்த்தாள் அவர் களைத்து வந்தபோதெல்லாம் அவருக்கு விருந்து செய்து உபசரித்தாள். மரியாள் அவர் பாதத்தருகே உட்கார்ந்து அவர் திருவாய்

மொழிகளைக் கேட்டாள். சில ஸ்திரீகள் அவரோடு கிராமம் கிராமமாக நடந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். ஒரு ஸ்திரீ அவருக்குப் பரிமளதைலம் பூசினார். பேதுரு தன் படவை அவர் பிரசங்கிக்கக் கொடுத்தார். அவர் எருசலேமுக்குப் பவனிபோக ஒருவன் தன் கழுதையைக் கொடுத்தான். அவர் பஸ்காவை ஆசரிக்க ஒருவன் தன் மேல் வீட்டைக்கொடுத்தான். அவர் சரீரம் புதைக்கப்பதற்கு யோசேப்பு தன் கல்லறையைக் கொடுத்தாள். இவ்வாறு பலரும் நமதாண்டவருக்கு ஊழியம் செய்யும் சிலாக்கியம் பெற்றார்கள். நாம் ஆண்டவருக்கு நன்றும் செய்யவில்லையே என்று நினைக்கலாம். அப்படியல்ல, அவருடைய பிள்ளைகளுக்கு, அவருக்கென்று பிழைக்கிறவர் களுக்கு, நாம் எதைச் செய்கிறோமோ அதை ஆண்டவருக்கே செய்கிறோம் என்பது நிச்சயம்

ஆனால் இவை யாவற்றிலும் சிறந்த ஊழியத்தை சீமோன் செய்தார். உலகரட்சகர் தமது சிலுவையைச் சுமக்க முடியாமல் விழவே, அதை ஆண்டவருக்காக சீமோன் சுமந்த ஊழியத்திற்கு நிகரான ஊழியம் வேறெதுவுமில்லை. நாம் ஆலயங்களை கட்டலாம். பாடசாலைகளை ஏற்படுத்தலாம், வைத்திய சாலைகளை உண்டாக்கலாம், தர்ம விஷயத்துக்குப் பணத்தைக் கொடுக்கலாம். ஏழைகளை பராமரிக்கலாம். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கலாம். இவையாவும் நல்ல காரியங்களே என்றாலும் சிலுவை சுமப்பதைப்போல் பாக்கியமும் ஆசீர்வாதமுமான ஊழியம் வேறெதுவுமில்லை. சீமோன் சுமந்த சிலுவையின் கருத்தென்ன? உலகத்தை இரட்சிக்கும்படி ஆண்டவர் நிறைவேற்றும் பாடுகளில் சீமோனுக்குப் பங்கு கிடைத்தது? அவருடைய நாமத்துக்காக, அவருடைய ராஜ்யத்துக்காக நாம் படும் பாடுகள் எல்லா ஊழியங்களிலும் மேலான ஊழியம். சுய சித்தத்தை வெறுத்து தேவசித்தப்படி பிழைப்பது லேசல்ல. எப்பொழுதும் எல்லாவற்றிலும் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்வது லேசல்ல. அநியாயமான பாடுகளையும் அவமானங்களையும் பொறுமையாய்ச் சகிப்பது லேசல்ல. பேர்க்கிறிஸ்தவர்கள் நடுவில் கிறிஸ்துவின் சிந்தையோடு பிழைப்பது லேசல்ல. நாம் அவரைப்பின்பற்றும்போது நமக்குப் பாடுகளுண்டு. எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அவருக்கு ஊழியம் செய்வதே சிலுவை சுமப்பதாகும். சிலுவை சுமப்பதே நிகரற்ற ஊழியம். இது அலங்காரமான வெள்ளி, தங்கச்சிலுவையை அணிந்து கொள்வதல்ல.

## 2. சிலுவை சுமந்த சீமோன் அடைந்த பலன் என்ன?

ஆண்டவர் தமக்கு மற்றவர்கள் செய்யும் எந்த உபகாரத்துக்கும் பதில் செய்யாமலிருப்பதில்லை. கானாவூர் மணமகன் கலியாணத்துக்கு அழைத்தால் தண்ணீரை ரசமாக்குவார். பேதுரு அவரைத்தன் வீட்டில் உபசரித்தால் பேதுரு மாமி ஜுரம் நீங்கும். சமாரிய ஸ்திரீ தண்ணீர் கொடுத்தால் ஜீவ தண்ணீர் கொடுப்பார். தன் பாதத்தை முத்தம் செய்தவளுடைய பாவங்களை மன்னித்தார். எல்லாவற்றையும் விட்டுத் தம்மைப் பின் சென்ற சீஷர்களுக்குச் சிங்காசனங்களை வாக்குப் பண்ணினார். ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கிறவனும் அதன் பலனை அடையாமற்போவதில்லை என்று சொன்னவரும் அவரே.

சீமோன் அடைந்த பிரதி பலன் என்ன? கர்த்தர் சீமோனை ரட்சித்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. தமக்கு இவ்வளவு தயவு புரிந்தவனை ராஜ்யத்துக்குப் புறம்பே விட்டுவிடுவாரா? சிரேனேப் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டபோது ஒரு காரியம் சீமோன் மனதிலிருந்தது. அதற்காகவே அவர் விசேஷமாக ஜெபித்து வந்தார். அதாவது தன் இரண்டு சிறு குமாரரும் தேவமக்களாகவேண்டும் என்பது. அந்த ஆசையோடுதான் அவர் எருசலேமுக்கும் வந்தார். கடவுளையறிந்த பெற்றோருக்குத் தங்கள் மக்கள் தேவபக்தியுள்ளவர்களாக வேண்டும் என்பதே தீராத கவலை. தங்களுக்குப்பின் அவர்கள் உலகில் நன்றாயிருக்க வேண்டுமானால், அவர்கள் பரமபிதாவின் பிள்ளைகளாகி, அவரை நம்பிப் பிழைக்க வேண்டும். மக்கள் தேவனைச் சார்ந்து பிழைக்கக் கற்றுக்கொண்டார்கள் என்று அறிந்தவுடன் நமது கவலை நீங்கிவிடுகிறது. தம் சிலுவையைச் சுமந்து வந்த சீமோன் இருதய வாஞ்சையை ஆண்டவர் அறிந்தார். தான் விரும்பினது சீமோனுக்குக் கிடைத்தது. தன் மக்கள் இருவரும் கிறிஸ்துவின் அடியாராகி, திருச்சபையின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாயிருப்பதை சீமோன் கண்டுகளித்தார். மாற்கு அவர்கள் பேரை சுவிசேஷத்தில் சேர்த்தார். "அலெக்சாந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனாகிய சீமோன்" என்கிறார். (மாற்கு **15:21**) சுவிசேஷம் எழுதப்படும் முன்பே அவ்விருவரும் கிறிஸ்துவடியாரானார்கள் என்பது நிச்சயம். மாற்கு சுவிசேஷம் ரோமருக்கு எழுதப்பட்டது. பவுலும் ரோமர் நிருபத்தில் "கர்த்தருக்குள் தெரிந்து கொள்ளப்பட்ட ரூபையும், எனக்குத்

தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள்" என்றெழுதினார். இவ்வாறு சீமோனும், மனைவியும், மக்கள் இருவரும் கிறிஸ்துவுக்குள் சொந்தமான அடியாராகும் பாக்கியம் பெற்றார்கள்.

சிலுவை சுமந்ததின் பலன் இதுவே. மக்கள் கடவுளை மறந்து, தகாத வழிநடந்து, கெட்டுப்போனார்கள் என்பதைப் போல் மகாகொடிய வேதனை வேறெதுவுமில்லை. வீடுகள் ஆஸ்திகள் உத்தியோகங்கள் முதலானவை இருந்தும் என்ன பிரயோஜனம்? தேவபக்தியுள்ள மக்களே சிறந்த அழியாத பொக்கிஷம். பிள்ளைகள் துன்மார்க்க வழி சென்றுவிட்டால், நாம் உயிரோடே சாக வேண்டியதுதான். சீமோன் பாக்கியவான். ரட்சிக்கப்பட்ட மக்களைக்கண்டு மகிழ்ச்சி யடைந்தான். பிள்ளைகளை ஆதாயம் பண்ணுவது எப்படி? நாம் அவர்களுக்கு வேதம் கற்பிக்கலாம், ஆலயத்துக்குப் போகும்படி ஏவலாம். வாக்கியங்களை மனப்பாடம் பண்ணும்படி செய்யலாம். எச்சரிக்கலாம், ஆலோசனை சொல்லலாம். அடித்து வளர்க்கலாம், இவையாவும் ஒருவகையில் சரிதான். இவற்றால் மாத்திரம் காரியம் பலிக்காது. சிலுவை சுமப்பதே பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். நமது வார்த்தைகளைப்பார்க்கிலும் நமது உத்தம ஜீவியமே வல்லமையுள்ளது. மக்கள் நமது ஜீவியத்தை நுட்பமாய்க் கவனிக்கிறார்கள். நாம் ஆண்டவருக்காக எடுத்துக்கொள்ளும் உண்மையான முயற்சிகளை, அவருடைய நாமத்துக்காக நாம் பாடுகளைப் பொறுமையாய்ச் சகிப்பதை அவர்கள் கவனிக்கிறார்கள். இந்தக் கவனிப்பு ஏற்றகாலத்தில் அவர்கள் இருதயத்தை கர்த்தரிடமாய்த் திருப்புகிறது. பக்தியுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் நாம் அறிவோம். அவர்கள் பிதாக்கள், முற்பிதாக்கள் கிறிஸ்துவுக்காக எவ்வளவோ பாடுகளைச் சகித்தவர்களென்றும், ரத்தச் சாட்சிகளுமா யிருந்தார்கள் என்றும் சரித்திரத்தில் விளங்குகிறது. தந்நயமும் சொகுசான வாழ்க்கையுமுள்ள பெற்றார் தங்கள் மக்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கமாட்டார்கள்.

### 3. சீமோனுக்கு வாய்த்த நற்சமயம்

கிறிஸ்துவின் சிலுவையைச் சுமக்கும் சிலாக்கியம் எதிர்பாராத விதமாய் சீமோனுக்குக் கிடைத்தது. அரைமணிநேரம் முந்தி வந்திருந்தால் அல்லது பிந்தி

வந்திருந்தால் இந்தச் சிலாக்கியம் சீமோனுக்கு கிடைத்திராது. சீமோன் அங்கே வந்து சேர்ந்ததற்கும், ஆண்டவர் கீழே விழுந்ததற்கும் சரியாய் வாய்த்தது. இது தற்செயல் அல்ல; தேவச்செயலே. சீமோன் சிலுவையை ஏற்றுக்கொண்டவிதம் எப்படி? நான் ஏன் சுமக்கவேண்டும் என்று முறுமுறுத் திருப்பாரோ? அல்லது ரோமருக்குப் பயந்து வேண்டா வெறுப்போடே சிலுவையைச் சுமந்திருப்பாரோ? சீமோன் தேவபக்தன். ஜெபசிந்தையுள்ளவர் தான் எதிர்பாராத சங்கடமும் அவமானமுமான காரியமாயிருந்தாலும் கடவுள் சித்தமில்லாமல் அவர் பிள்ளைகளுக்கு ஒன்றும் நேரிடுவ தில்லை என்னும் பாடம் கற்றவர். ஆகையால் உற்சாகமாகவே சிலுவையை ஏற்றுக்கொண்டு ஆண்டவரோடு நடந்தார். தமது பாரத்தை இலகுவாக்கின சீமோனோடே ஆண்டவர் வழியில் ஏதாவது பேசியிருப்பாரா? நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயம். அவர் சீமோன் முகத்தைப் பார்த்திருப்பார். அதுவே போதும். அவர் திரும்பி பேதுருவைப் பார்த்தபோது மறுதலித்த பேதுரு மனங்கசந்து அழநேரிட்டது. இந்த சீமோனை ஆண்டவர் பார்த்தபோது, அவர் பார்வை சீமோனோடு பேசினது. சீமோனே! நீ பாக்கியவான். உலகத்திலுள்ள இத்தனை மனுஷரில் என் சிலுவையைச் சுமந்து எனக்கு உதவிசெய்யும் சிலாக்கியம் உனக்குக் கிடைத்ததே. என் ஆசீர்வாதம் உன்னோடும் உன் குடும்பத்தோடும் இருப்பதாக என்பதுபோல் அவர் பார்வை பேசியிருக்கும். நான் யாருடைய சிலுவையைச்சுமந்தேன் என்பது அந்தச் சமயத்தில் சீமோனுக்குத் தெரியாவிட்டாலும், பிந்தி கிறிஸ்துவை அறிகிற அறிவில் சீமோன் வளர்ந்தபோது அளவில்லாத சந்தோஷங்கொண்டிருப்பார். இந்தச் சிலாக்கியம் தேவதூதரில் ஒருவனுக்கும் கிடைக்கவில்லையே. அப்போஸ்தலரில் ஒருவருக்கும் கிடைக்கவில்லையே. பரலோகத்தின் தேவன் தமது குமாரனுடைய சிலுவையைச் சுமப்பதற்கு சிரேனே பட்டணத்துச் சீமோனையல்லவா தெரிந்து கொண்டார். பவுலுக்குக் கூடக் கிடைக்கவில்லையே. மறுமையில் எல்லாரும் சீமோனைச் சூழ்ந்து கொண்டு இதைப்பற்றிப் பேசுவார்கள் என்பது நிச்சயம். சிலுவை சுமக்கும் சமயத்தை ஆண்டவர் நமக்குக் கொடுக்கும்போது சீமோனைப்போல் தேவசித்தத்திற்குக் கீழடங்குவோமாக. சாதாரண வழியில் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப்பார்க்கிலும் துன்பம் பாடுகள் மூலமாக வரும் ஆசீர்வாதங்கள் மேலானவைகள்.

# 78. கிறிஸ்துவின் சிநேகிதர்

**"நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்" (யோவா. 15:15).**

சிநேகிதர் என்னும் வார்த்தையை ஆண்டவர் இவ்விடத்தில் மூன்று முறை உபயோகிக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்றார். உலகம் அவரை அறியாதிருந்தும், அவர் அவர்களை அறிந்து, அவர்களுக்காகப் பரிதபித்து, அவர்களை இரட்சிக்கும்படி தமது உயிரைக்கொடுப்பதால் அவர்களை தமது சிநேகிதர் என்கிறார். அவர்களும் தம்மை இன்னாரென்று அறிந்து, தம்மில் அன்புவைத்து, தமக்குச் சிநேகிதராக வேண்டுமென்பது அவள் விருப்பம். ஆண்டவர் கற்பிப்பவைகளைச் செய்கிறவர்களும் தமக்குச் சிநேகிதராவார் என்றார். முடிவாக "நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்று அழுத்தமாகக் கூறினார். இந்த வார்த்தையைக் கேட்டு சீஷர் திகைக்கிறார்கள். அவர் யார்? நாம் யார்? அவர் நம்மைச் சிநேகிதர் என்று அழைக்க நாம் யோக்கியர்களா? அவர்கள் அவ்வாறு திகைத்தது ஆச்சரியமல்ல. அவர்கள் இதுவரை அவரிட்ட கட்டளைகளை நிறைவேற்றும் ஊழியக்காரராயிருந்தார்கள். இச்சமயத்தில் ஆண்டவர் அவர்களைப் பார்த்து: இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, நீங்கள் என் சிநேகிதர் என்கிறார். சிநேகம் என்பது ஒருபட்சத்துக்குரியதல்ல. அது இருபட்சத்தாரையும் பொறுத்தது. ஒருவன் எவ்வளவு அன்புள்ளவனாயிருந்தாலும், மற்றவன் அந்த அன்புக்குப் பதில் அன்பு கொடுக்காவிட்டால் அது சிநேகமானது. ஆண்டவர் நமது சிநேகிதர் என்பது உண்மையே. நாமும் அதுபோல அவரில் அன்பு வைக்கும்போது அவர் சிநேகிதராவோம். சில குறிப்புகளை இங்கே கவனிப்போம்.

### 1. சிநேகிதர் ஆண்டவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" கற்பிக்கிற யாவையும் என்றால் எவை? எத்தனை காரியங்களைத்தான் அவர் கற்பிப்பது, எத்தனை காரியங்களைத்தான் நாம்

செய்வது? "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும்" என்று ஆண்டவர் சொன்னது உண்மைதான். அந்தக் கற்பனைகள் எவையென்று விபரம் சொல்லப்படவில்லை. பத்துக்கற்பனை களைப்போல் இவரும் தமதடியாருக்குக் கற்பனைகளை உண்டுபண்ணினாரோ? அவைகளின் தொகை என்ன? சுவிசேஷத்தில் அவைகளை நாம் காண்பதில்லை. ஆண்டவர் தேவராஜ்யத்தின் லட்சணங்களைக் குறித்து அநேக நல்ல காரியங்களைப் போதித்திருக்கிறார். எல்லாம் அவைகளுக்குள் அடங்கினதோ? இப்போது இரண்டாயிர வருஷக் காலங்களாகின்றன. காலத்துக்குக்காலம் புதிது புதிதான பாவங்களும் மீறுதல்களும் அதிகரித்துக்கொண்டுபோகின்றன. ஒருவன் செய்யும் பாவம்போல் மற்றவன் செய்வதில்லை. இவ்வாறு மனுமக்களின்பாவங்களுக்குக் கணக்கில்லை. எத்தனை கற்பனைகளை உண்டாக்குவது? அரசாங்கத்தில் புதிய மீறுதல்கள் உண்டாகும்போது சர்க்கார் புதுப்புதுச் சட்டங்களை உண்டாக்குவதுபோல் கற்பனைகளை உண்டாக்கிக் கொண்டிருப்பதுதானா ஆண்டவர் வேலை? கற்பனைகளைக் கணக்கு பார்க்கிறவர்கள் காரியம் அறியாதவர்கள். உண்மையான சிநேகம் சில கற்பனைகளில் அடங்கினதல்ல.

அப்படியானால் ஆண்டவர் கருத்தென்ன? அவருடைய சிந்தையைத் தரித்து அவர் சித்தம்போல் பிழைப்பதே கற்பனைகளின் பொருளாகும். அன்புக்குள் சகல கற்பனை களும் அடங்கியிருக்கின்றன. சில கற்பனைகளை முக்கியப்படுத்துகிறவர்கள் அநேக விஷயங்களில் தவறுவார்கள். கிறிஸ்துவின் சிந்தையாகிய மேலான பிரமாணத்தால் ஆளப்படுகிறவர்களோ ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை அறிவார்கள். அவருடைய சித்தம்போல் நடப்பவர்கள் அவருக்குச் சகோதரரும், சகோதரிகளும், தாயுமாகிறார்கள். சிநேகிகத்திலும் இது மேலான சம்பந்தம். கிறிஸ்துவினுடைய ஆவியின் பிரமாணம் நாம் எப்பொழுதும் அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய நம்மை ஏவுகிறது. ஆண்டவருடைய மனதுக்கிசைந்து நடப்பவர்களே அவருக்குச் சிநேகிதர். கற்பனைகளைக் கணக்குப் பார்க்கிறவர்கள் சிநேகிதரல்ல. அன்பே கற்பனை. அவருக்குப் பிரியமாய் நடப்பது அன்பருக்குப் பாரமல்ல.

### 2. ஆண்டவர் தம் சிநேகிதரிடம் நடந்து கொள்வது எப்படி?

"இனி நான் உங்களை வேலைக்காரரென்று சொல்லுகிற தில்லை. வேலைக்காரன் தன் எஜமான் செய்வதை அறியமாட்டான்" எஜமான் செய்வதை வேலைக்காரன் பார்க்கலாம், ஆனாலும் அதன் நோக்கத்தை அறியான், கேட்கவும் துணியான். இதைச் செய்யென்று எஜமான் கற்பிக்க அவன் செய்யவேண்டியதேயன்றி, ஏன்? என்னத்திற்கென்று அவன் கேட்கக்கூடாது. நான் உங்களை வேலைக்காரரென்று சொல்லுகிறதில்லை, உங்களைச் சிநேகிதர் என்றேன். "ஏனென்றால் என் பிதாவினிடத்தில் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." இரகசியத்தை மறைக்காது சொல்வதே சிநேகத்தின் லட்சணம். சிநேகிதர் தங்கள் உள்ளத்தில் உள்ளதை இருக்கிறபடியே பேசுகிறார்கள். ஏதாவதொன்றை மறைக்கும்போது சிநேகம் கெட்டுப்போகும். வியாழன் இரவில் எத்தனையோ அருமையான விஷயங்களை ஆண்டவர் தம் சீஷருக்குச் சொன்னார். இன்னும் சொல்லவேண்டிய அநேக விஷயங்கள் இருந்தன. சீஷர் அவைகளை அப்பொழுது கிரகித்துக்கொள்ள முடியாததால் பிந்தி அவைகளை அறிவித்தார். "நான் செய்யப்போகிறதை என் சிநேகிதனாகிய ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" கிறிஸ்துவின் அன்பர்களே பரம காரியங்களை அறியத்தகுந்தவர்கள். அவர்கள் தங்கள் காரியங்களை அவருக்கு மறைப்பதில்லை; அவரும் தமது ரகசியங்களை அவர்களுக்கு மறைப்பதில்லை. இந்த வெளிப்படுத்தல் அவரவருடைய சிநேக அளவுக்குத்தக்கபடியிருக்கும்.

### 3. இந்த சிநேகம் எப்படி உண்டானது?

எப்படியும் ஒருவர் முந்தி ஆரம்பிக்க வேண்டும். ஒருவரையொருவர் பார்க்கலாம், மனதில் அன்புகூறலாம். இருவரும் பேசாதிருக்கிறவரை சிநேகிதத்துக்கு இடமில்லை. ஒருவர் சிநேகத்தை தொடங்க வேண்டும். நமது சிநேகத்தை ஆண்டவரே முந்தித் தொடங்கினார். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்" "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல; அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்." அன்பு என்னும் பதத்தை மலையாள வேதாகமத்தில் சிநேகம் என்றே திருப்பியிருக்கிறது.

அன்பில்லாத சிநேகத்தையும் சிநேகமில்லாத அன்பையும் நாமறியோம். அன்பும் சிநேகமும் ஒன்றே.

ஏன் நம்மை சிநேகிதராகத் தெரிந்து கொண்டார்? இரண்டு காரியங்ளுக்காக, நாம் கனிகொடுக்கவும், நமது கனி நிலைத்திருக்கவும். இது ஒன்றே. விருட்சத்தின் கனிகள் சீக்கிரம் கெட்டுப்போகும். நமது ஊழியமாகிய கனியோ நித்தியமாய் நிலைத்திருக்கும். இது சிநேகத்தின் ஊழியமாகையால் சிறந்த ஊழியம். எந்த அக்கினியும் அதை அழிக்காது. நம்மைக் கனிகொடுக்கச் செய்கிறவர் கர்த்தரே. இரண்டாவது நாம் பிதாவிடம் கேட்டுக்கொள்வது கிடைக்கும். "என் நாமத்தினாலே பிதாவை நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" நமது விண்ணப்பம் தந்நயமாயிராது. அவர் அன்பு நமக்குள்ளிருக்கும்போது அவருக்குச் சித்தமான வைகளையே கேட்போம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக் கிறாரென்பதே அவரைப்பற்றி நாம்கொண்டிருக்கிற தைரியம்" ஆண்டவர் சிநேகத்தை தாமே முந்தி ஆரம்பித்து நமது ஊழியத்தையும் ஜெபத்தையும் ஆசீர்வதிக்கிறார்.

**4. சிநேகிதர் ஒருவருக்கொருவருள்ள சம்பந்தம் என்ன?**

ஆண்டவர் தமது சிநேகிதரைப் பார்த்து: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" என்கிறார். ஒருவருடைய சிநேகிதர்கள் தங்களுக்குள் சிநேகமாயிருப்பார் கள். இது இயல்பு. ஆனால் உலகத்தில் இதற்கு எதிரான முறையும் கையாடப்படப்படுகிறது. மற்றவர்கள்மேல் தீதான காரியங்களை சிநேகிதருக்குச்சொல்லி, அவருடைய சிநேகிதத்தைத் தாங்களே முழுவதும் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தமுறை பலிக்காது. ஆமான் கதைபோல் முடியும். கிறிஸ்துவின் சிநேகிதரிடம் இத்தீயகுணம் ஆகாது. அவரது அன்பர்களைப் பகைத்துக் கொண்டு அவரிடம் சிநேகமாயிருப்பது முடியாத காரியம். ஒரே ரட்சிப்பு, ஒரே ஆவி, ஒரே ஜீவன். நம்மெல்லாருக்குள்ளும் பாயும் ஜீவன் அவருடைய ஜீவனே, நாம் அனுபவிக்கும் அன்பு அவர் அன்பே. அந்த ஒரே அன்பு நமக்குள்ளிருக்குமானால் நாம் ஒருவரையொருவர் நேசிக்கத்தான் வேண்டும். ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனோடு பட்சமாய் நடந்து கொள்ள வில்லையென்றால், அந்தச் சகோதரன் கிறிஸ்துவோடுள்ள

ஐக்கியத்தில் சரியாயில்லை என்பது நிச்சயம். கிறிஸ்துவின் அடியார் அவரோடுள்ள அன்பில் சரியாயிருந்தால், தங்களுக்குள் அவர்கள் அன்பாகவேயிருப்பார்கள். சகோதர சிநேகத்தைக் குறித்து ஆண்டவர் பிரதானமாய்க் கட்டளையிட்டிருக்கிறார். இந்தப் பிரதான கட்டளையே நமக்குள் பிரதானமாய் மீறப்படுகிறது. ஆண்டவர் சீஷருக்கு அன்பே அடையாளம்.

# 79. ஜீவனுள்ளோர் கடவுள்

**"அவர் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்" (லூக். 20:38).**

மரணம் என்பது எல்லாருக்குமே கொடிய கசப்பாயிருக்கிறது. நாம் எதை இழந்தாலும் உயிரிருக்குமானால் திரும்பவும் சம்பாதித்துக் கொள்ளலாமென்கிற நம்பிக்கையுண்டு. சுகமிழந்தால் பலப்படுத்திக்கொள்ளலாம். பணம் இழந்தால் சம்பாதித்துக் கொள்ளலாம். உத்தியோகமிழந்தால் வேறுவேலை பார்க்கலாம். சிநேகிதரை இழந்தால் வேறு சிநேகிதரைச் சம்பாதிக்கலாம். உயிரையிழந்தால் என்ன செய்வது? உயிரை வைத்துத்தானே சகலமும் நடக்கிறது. ஆகையால் மரணம் மகா கசப்பாய்த் தோன்றுகிறது. அதுமாத்திரமல்ல. நம்மைச் சூழ்ந்திருக்கும் காரியங்கள் நீடித்த காலமிருக்க, மனுஷன் மாத்திரம் சீக்கிரமாய் மறைந்து போவதும் சஞ்சலமாயிருக்கிறது. ஆபிரகாம் பார்த்த நட்சத்திரங்கள் இன்றும் ஆகாயத்தில் பிரகாசிக்கின்றன. ஆண்டவர் காலத்து கெத்செமனேத் தோட்டத்திலிருந்த ஒலிவ மரங்களில் சில இன்னும் அங்கிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆதிமுதல் மலைகளும் நின்றவண்ணமாகயிருக்கின்றன. அறிவும் உணர்வுமற்ற சிருஷ்டிகள் இவ்வாறு நீண்டகாலமாகயிருக்க மனுஷன் மாத்திரம் திடீர்திடீரென மறைந்து போகிறது நம்மால் சகிக்கக்கூடவில்லை. மரணமாவது என்ன? மரணத்தில் சம்பவிப்பது என்ன?

மனுஷன் ஆவியாயிருக்கிறான். அவன் வசிக்கும் வீடு சரீரம். தேவன் ஆவி. தேவதூதர்கள் ஆவிகள். கடவுளுக்கு நம்மைப்போல் சரீரமில்லாவிட்டாலும் அவர் பிழைத்திருந்து

சகலத்தையும் நடத்துகிறார். தேவதூதர்களுக்கு நம்மைப்போல் சரீரமில்லாவிட்டாலும் அவர்களும் பிழைத்திருந்து பணிவிடை செய்கிறார்கள். மனுஷன் ஆவியாயிருந்தாலும் அவன் பூமிக்குரியவனாகையால் அவன் இங்கே சஞ்சரிப்பதற்கு சரீரம் அவசியம். அவன் ஆவியில் கடவுளோடும் சரீரத்தில் பூமியோடும் சம்பந்தப்பட்டிருக்கிறான். இவ்வாறு அவன் சரீரத்தில் குடியிருந்தாலும் பரத்தில் வசிக்கவேண்டியவனே. "எங்களுடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது" அவன் இங்கேயிருக்கும்வரை கடவுளை அறிந்து அவர் சித்தத்தைப் பூமியில் நிறைவேற்றும்படி சரீரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமிக்குரியவைகளோடு அவன் சம்பந்தப்படுவதற்கு சரீரம் அவனுக்கு அவசியம். ஆவியாயிருக்கிற தேவகுமாரன் மனுமக்கள் நடுவில் வசித்து அவர்களை இரட்சிக்க விரும்பினபோது அவருக்கும் ஒரு சரீரம் கொடுக்கப்பட்டது. அவர் வெற்றியடைந்தபின் அந்தச் சரீரத்தை மகிமைப்படுத்தினார்.

சரீரமாகிய வீடு அழிந்தாலும் ஆவியாகிய மனுஷனுக்கு அழிவில்லை. நாம் மரணம் என்று நினைப்பது அழிவல்ல. மனுஷன் இடம் மாறுவதாகும். அதுவரை சரீரத்தில் வசித்த மனுஷன் அதைவிட்டு நீங்கி ஆண்டவரிடம் போகிறான். அவனுக்கு அழிவில்லை. அவன் ஒரே தொடர்ச்சியாகப் பிழைத்திருக்கிறான். அவன் சரீரத்திலிருக்கும்போது நாம் அவனைக் கண்டு பேசிப்பழக அனுகூலமாயிருக்கிறது. அவன் சரீரத்தை விட்டதும், சரீரத்தை நாம் அடக்கம் செய்கிறோம். ஆள் கண்ணுக்கு மறைந்துபோகிறான். ஆனாலும் கடவுள் பார்வையில் அவன் மறையாமல் இன்னும் பிழைத்திருக்கிறான். சரீரத்தையே மனுஷனாக நாம் கொண்டாடினபடியால் சரீரம் மறைந்ததும் அவன் மரித்துப்போனான் என்கிறோம். ஆண்டவரோ: அவன் மரிக்கவில்லை என்கிறார். அவர் அறிவும் அவர் பார்வையும் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. யவீரின் மகள் மரித்தாளென்று வீட்டாரும் மற்றவர்களும் அழுது புரண்டார்கள். யார்தான் அதைச் சகிப்பார்கள்? ஆண்டவர் அந்த வீட்டுக்குள் யாதொரு துயரமும் துக்கமுமில்லாதவராகப் போகிறார். ஏன் அழுகிறீர்கள்? "இந்தப் பிள்ளை மரிக்கவில்லை?" என்கிறார். அதைப் பரியாசமாக நினைத்தார்களேயன்றி நம்பவேயில்லை. ஆண்டவருடைய

பார்வை அவர்களுக்குமில்லை, நமக்குமில்லை. மறுமைக்குரிய நிச்சயமும் அனுபவமும் எவ்வளவுக்கு நமக்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக்குத்தக்கதாய் நமது துக்கமும் சஞ்சலமும் மாறும்.

ஆவியாகிய மனுஷன் அழிவதில்லை. அறிவற்ற உணர்வற்ற சிருஷ்டி நீண்டகாலம் நிலைத்திருக்க, அறிவும் அன்புமுள்ள மனுஷன் அழிந்துபோவதெப்படி? நாம் கடவுளைப் பிதாவாக அறிந்து, அவரோடு பழகி, அன்புகூர்ந்து, ஐக்கியமாகி ஜீவிக்கும்போது இந்த அன்பின் ஐக்கியம் இடையில் அழிந்துபோக விடுவாரா? சாகும் தருவாயிலிருக்கும் பிள்ளை தன் தகப்பனைப் புன்னகையுடன் பார்த்து: அப்பாவென்று சொன்னால் அவன் தனக்குள்ளதெல்லாம் கொடுத்தாவது அதன் உயிரைக் காப்பாற்றத் துணிவானே. நமது அன்புக்குரிய ஆண்டவர் தமது பிள்ளைகளை இழந்து போவாரா? ஒருக்காலுமல்ல. "நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்பதல்லவா அவர் வாக்கு. "அன்பு ஒருக்காலும் ஒழியாது" ஆகையால் மரணம் என்பது அழிவாயிராமல் சரீரத்தில் வசித்த மனுஷன் அதைவிட்டு நீங்கி கர்த்தரிடம் பிழைப்பதாகும்.

**1. சதுசேயரின் சாமர்த்தியக் கேள்வி**

சதுசேயர் மறுமையை நம்புவதில்லை. ஆகையால் உயிர்த்தெழுதலை மறுத்தார்கள். ஆண்டவர் மறுமையைப் பற்றியும் உயிர்த்தெழுதலைப்பற்றியும் தெளிவாய்ப் போதித்தார். அவரை மடக்கும்படி வெகு சாமர்த்தியமாக ஒரு கதையை உண்டுபண்ணி அவரிடம் கேள்வி கேட்டார்கள். ஒருவன் குழந்தையில்லாமல் இறந்துபோனால் அவன் சகோதரன் அவளை விவாகம்பண்ணி சந்தானமுண்டாக்கவேண்டுமென்று மோசே சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் இவர்களோ ஒரு ஸ்திரீயை ஏழுபேர் முறையே விவாகம்பண்ணியும் அவர்கள் ஒருவருக்கும் பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள். அவளும் இறந்துபோனாள். உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இது இவர்கள் உற்பத்தியேயல்லாது உண்மையல்ல. அவளை விவாகம் பண்ணுகிறவன் செத்துப்போகிறான் என்று கண்டவுடனே ஒருவனும் அவள் கிட்டப்போகமாட்டான். இப்படியிருக்க ஏழுபேரும் வரிசையாய்

அவளைக்கிட்டிச் செத்துப்போனார்களென்றால் அவர்கள் மடையர்களாயிருக்கவேண்டும். இதைப் பொய்யென்று ஆண்டவர் அறிந்திருந்தும், அவர்கள் சொன்னபடியே ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு விடைபகர்ந்தார். மேலும் மோசேயின் ஐந்து ஆகமங்களில் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லாததால் சதுசேயர் உயிர்த்தெழுதலை நம்பவில்லை. ஆண்டவரோ மோசேயின் இரண்டாம் ஆகமத்திலிருந்தே அவர்களுக்குச் சரியான உத்தரவு கொடுத்து வாயடைத்தார். வேதத்தை எத்தனை முறை வாசித்தாலும் அதில் மறைந்திருக்கும் அரிய கருத்துக்களை அறியாதவர்கள் அநேகர்.

## 2. ஆண்டவர் கொடுத்த உத்தரவு

நீங்கள் வேதவாக்கியங்களைச் சரியாய் அறியாததினால் தப்பெண்ணங்கொள்ளுகிறீர்கள். இவ்வுலக சம்பந்தம் போலவே மறுமையிலும் இருக்குமென்று நீங்கள் நினைப்பது சுத்தப் பிசகு. இந்தச் சரீரத்தில் குடியிருக்கும்போது மனுஷருடைய காரியங்கள் ஒருவிதம். மறுமையின் காரியங்களோ வேறுவிதம். இங்கே விவாகம், குழந்தை பிறக்குதல், மரணம் முதலானவை உண்டு. மறுமையில் விவாகமுமில்லை மரணமுமில்லை, மறுமைக்குரியவர்கள் தேவதூதரைப்போல் ஆவிக்குரியவர்களாய் தேவமக்களாக விளங்குவார்கள். அவர்களுக்குள் அன்பும் ஐக்கியமும் இருக்கும்; ஆனால் சரீர சம்பந்தம் போலிராது என்று முதலில் சொல்லிப் பின்பு யாத்திராகமத்திலிருந்து மறுமையின் நிச்சயத்தைப்பற்றி விளக்கிக் காட்டுகிறார். கர்த்தர் மோசேக்கு முட்செடியில் தரிசனமானபோது: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று சொன்னார். அவர் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குள் பிழைத்திருக்கிறார்களே என்றார்.

நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருந்தேன் என்று சொல்லாமல் இருக்கிறேன் என்று சொல்லுகிறார். அவர்கள் சரீரத்திலிருந்த காலத்தில் மாத்திரம் அவர் அவர்கள் தேவனாயிருந்திருந்தால், அவர்கள் மரித்தபின் அவர் அவர்களுக்குத் தேவனாயிருக்க முடியாது. ஒருவர் என்னைப் பார்த்து: நான் உம்முடைய

தகப்பனாருடைய சிநேகிதனாயிருந்தேன் என்று சொன்னால் அதில் இரண்டு அர்த்தம் உண்டு. என் தகப்பனார் இப்போது உயிரோடில்லை என்பது ஒன்று. மற்றது, என் தகப்பனார் உயிரோடிருந்தும் இவர் அவருக்கு இப்போது சிநேகிதன் அல்ல. நான் உமது தகப்பனாருடைய சிநேகிதனாயிருக்கிறேன் என்று அவர் சொன்னால் அதிலும் இரண்டு கருத்துக்கள் உண்டு. என் தகப்பனார் மரிக்கவில்லை. அவருக்கும் இவருக்கும் உள்ள சிநேகமும் ஒழியவில்லை. முற்பிதாக்கள் எவ்வளவோ காலத்துக்கு முன் மரித்துப்போயிருந்தும் அவர் அவர்கள் தேவனாயிருக்கிறேன் என்கிறார். ஆகையால் அவர்கள் ஆண்டவர் சொல்லுகிறபடி, மனுஷர் பார்வையில் மறைந்தாலும் கடவுளுக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறார்கள். அழிந்து இல்லாமற்போனவர்களுக்கு அவர் கடவுளாயிருக்க முடியாது. தமக்கு முன்பாகப் பிழைத்திருக்கிறவர்களுக்கே கடவுளாயிருக்கிறார். ஆண்டவர் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சதுசேயர் மறுவார்த்தை பேசமுடியாமல் போய்விட்டார்கள். நாம் நமது ஜீவனாகிய கிறிஸ்துவோடு நெருங்கி ஜீவித்து, மறுமைக்குரிய காரியங்களில் பூரண நம்பிக்கை கொள்வோமானால் மரணம் என்னும் விஷயத்தில் நமது எண்ணம் ஆண்டவருக்கொப்பாக மாறும்.

# 80. மாறாத கிறிஸ்து

***"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி. 13:8).***

எபிரெயர் நிருபம் மகா நெருக்கடியான சமயத்தில் எழுதப்பெற்றது. ராஜ்ய விஷயமாகவும் மார்க்க விஷயமாகவும் ஜனங்கள் அதிக நெருக்கடியில் இருந்தார்கள். யூதருக்குப் பயங்கரமான முடிவு சமீபித்திருந்தது. அவர்கள் ஆலயத்துக்கும் தேசத்துக்கும் ஆபத்து கிட்டினது. அவர்களோ அதை அறியவில்லை. யூத அதிகாரிகள் இதை அறியாமல் மூர்க்கரான தம் ஜனத்தைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு கலகத்துக்கு எழும்பினார்கள். எவ்வளவு சடுதியாய் தாங்கள் அழிந்து போவோம் என்பதை அவர்கள் கொஞ்சமும் உணரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் யூதக் கிறிஸ்தவர்களுக்கு இருபக்கமும்

உபத்திரவங்கள் ஏற்பட்டன. எருசலேமிலிருந்த பரிசேயராலும் பகைக்கப்பட்டார்கள். ரோமருடைய கொடுங்கோல் ஆளுகையாலும் உபத்திரவப்பட்டார்கள். இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆஸ்திகளையும் இழந்து, பட்டயத்தால் மடிந்து, அக்கினிக்கும் இரையானார்கள். சகலமும் ஆபத்தும் தத்தளிப்புமாயிருந்த இந்தச் சமயத்தில் எபிரெயர் நிருபம் எழுதப்பட்டது. கொடிய சஞ்சலத்துக்குள்ளான எபிரெய கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் தேசமும் அழிந்து சகலமும் மாறிப்போகிற வேளையில் தேவசத்தம் தொனிக்கிறது. அதாவது, எல்லாம் மாறிப்போனாலும், "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்பதே.

### 1. நேற்று கிறிஸ்து

நேற்று என்பது நேற்றைய நாள் அல்ல. கடந்த காலத்தைக் குறிக்கும். அதாவது கிறிஸ்து இறந்த காலத்திலும் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மாறாதவராகவே இருக்கிறார். இறந்தகால கிறிஸ்துவை நாம் சுவிசேஷங்களிலும் காண்கிறோம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னே பலஸ்தீனா நாட்டில் அவர் சஞ்சரித்தார். அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவர் சரித்திரத்தால் அறிகிறோம். அவரைக் குறித்த எல்லாவற்றையும் இங்கே கவனிப்பது அசாத்தியம். பாவிகளான மனுமக்கள் விஷயத்தில் அவர் எப்படி நடந்து கொண்டார்? அதுதான் நமக்கு வேண்டும். அவர் பாவமற்றவர் பாவத்தை முழுப்பகையாய்ப் பகைத்தவர். பாவத்தை அகற்றும்படி உயிரையும் தத்தஞ்செய்த வைராக்கியம் நிறைந்தவர். ஆனால் பாவிகளிடத்திலோ பூரண கிருபையுள்ளவர், பாவஞ்செய்த ஓர் ஸ்திரீயை நியாயப்பிரமாணத்தின்படி கல்லெறிந்து கொல்ல யூதர்கள் தீர்மானித்திருந்தபோது அவள் நிலைமையை நன்கறிந்த ஆண்டவர் எதிரிகளை வெட்கத்தோடு திரும்பிப்போகப்பண்ணி, ஏழை ஸ்திரீயைப் பார்த்து: நானும் உன்னை ஆக்கினைக் குள்ளாக்குகிறதில்லை. இனி ஜாக்கிரதையாயிரு என்று சொல்லி அனுப்பினார். யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குப் போக வழக்கமான பாதையிருந்தும் சமாரியா வழிபோக நாடினார். காரணமென்ன? அங்கே ஒரு ஸ்திரீ தன் பாவ ஜீவியத்தால் தன்னை முழுவதும் பாழாக்கிப் பாவதாகம் தீராமலும் பாவ வல்லமைக்குத் தப்பும் வழி அறியாமலும்

வேகாமல் வெந்து கொண்டிருக்கிறாள். அவளை ரட்சிக்க வேணும். சரியாய் அவள் கிணற்றண்டைக்கு வரும் சமயம் பார்த்து அங்கே வந்து சேர்ந்தார். தாமே மேசியாவென்று அவளுக்குப் பகிரங்கமாய் வெளிப்படுத்தி அவளுக்கு ஜீவதண்ணீரை அளித்தார். எல்லாராலும் புறக்கணிக்கப் பட்டவள் ஏகன் மகளானாள். பொருளாசைக் குள்ளன் ஒருவன் இருந்தான். யூதர்கள் அவனைச் சபிக்கப்பட்டவனாகத் தள்ளி வைத்திருந்தார்கள். பொருளாசையோடுகூட இயேசுவைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையும் அவனுக்குள்ளிருந்தது. அந்த ஆசையை அறிந்த ஆண்டவர் அவன் வீட்டில் தங்கும்படி சித்தங்கொண்டு, அவனுக்கு இரட்சிப்பை அளித்து அவனை ஆசீர்வதித்தார். அவர் இவ்வாறு பாவிகளிடத்தில் அன்பாய் நடந்து கொண்டதைக் கண்ட சத்துருக்கள் அவருக்குப் பாவிகள் சிநேகிதன் என்னும் ஒப்பற்ற நாமத்தைச் சூட்டினார்கள். அவரோடு சம்பந்தப்பட்ட பாவிகள் ஜீவியம் எவ்வாறு மாற்றப்பெற்றதென்பதையோ அவர்கள் கவனிக்கவில்லை. இது நிற்க, மனுஷரடைந்த பல பாடுகளில் அவருக்கிருந்த அனுதாபம் கொஞ்சமல்ல. சகல நோயாளிகளையும் குணமாக்கி, மனக்கவலை நிறைந்தவர்களை ஆறுதல்படுத்தி, மரித்தோரை எழுப்பி மகிழ்ச்சியாக்கி, இவ்வாறு எங்கும் எல்லாருக்கும் நன்மை செய்கிறவராக விளங்கினார். இவரே நேற்று கிறிஸ்து. இவரே கடந்த காலத்து கிறிஸ்து. இந்தக் கடந்தகால கிறிஸ்து இன்றும் மாறாதவராகவேயிருக்கிறாா.

### 2. இன்று கிறிஸ்து

இதுதான் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். ஏனென்றால் நாம் கடந்தகாலத்தில் பிழைக்கிறவர்கள் அல்ல. கடந்த காலத்தில் நமது காரியங்கள் ஷேமமாய், சந்தோஷமாய் அல்லது சங்கடமாய் இருந்திருக்கலாம். ஆனால் அவையாவும் கடந்தன. நாம் வருங்காலத்தில் பிழைக்கிறவர்களுமல்ல. வருங்காலத்தைப்பற்றி இப்பொழுது நமக்கொன்றும் தெரியாது. தற்கால வாழ்வே நமக்குக் கிடைத்த வாழ்வு. இதில் என்னென்ன உண்டோ, நன்மையோ தீமையோ, லாபமோ நஷ்டமோ, சந்தோஷமோ துக்கமோ அதுவே நமது அனுபவம். நமது தற்கால அனுபவத்துக்கு கிறிஸ்து எப்படிப்பட்டவர்? கடந்த கால கிறிஸ்துவை நாம் நம்புகிறோம். சுவிசேஷத்தில்

படிக்கிற அவரது அன்பையும், அனுதாபத்தையும், இரக்கத்தையும் ரட்சிப்பின் வல்லமையையும் நம்புகிறோம். ஆனால் இன்றும் அவர் அதேபோல இருக்கிறாரா? அப்படி இல்லையென்றே நமக்குத் தோன்றுகிறது. நேற்று கிறிஸ்து இன்று மாறிப்போனதுபோல் காணப்படுகிறது. நமது பாவங்களையும், பாடுகளையும், பல தொல்லைகளையும் கவனிக்கும்போது கிறிஸ்து நமக்கு ஒன்றுமே செய்யாததுபோல் தோன்றுகிறது. ஆ, சுவிசேஷத்திலுள்ள கிறிஸ்து இன்று என்னையும் சந்தித்து எனக்கு அன்பு பாராட்டமாட்டாரா? அவரைக் காணோமே. அவர் மாறிப்போனாரோ? முந்தின அன்பும் கிருபையும் வல்லமையும் இப்பொழுது அவருக்கில்லையோ? என்று பலவாறாய் நாம் புலம்புகிறோம். "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவேயிருக்கிறார்" சுவிசேஷத்தில் எப்படிப்பட்ட கிறிஸ்துவைக் காண்கிறோமோ, அதே கிறிஸ்து முன்னைப் பார்க்கிலும் மகா மேன்மையான நிலைமையில், முன்னைப் பாரக்கிலும் மகா மேன்மையான கிரியைகளை நடப்பிக்கிறவராயிருக்கிறார். நமது ஞாபக கிறிஸ்துவாக அல்ல. மரித்துப்போன பெரியோரை நாம் ஞாபகப்படுத்தலாம். ஆனால் கிறிஸ்துவோ இன்று உயிருள்ளவராகயிருக்கிறார். நமது பக்கத்தில் இருக்கிறார். அன்பர்கள் உள்ளத்தில் இருக்கிறார். அவர் நமக்கு இல்லாததுபோலிருந்தால் அது நமது குற்றமே. தேடுகிறவன் எவனும் கண்டடைகிறான். அவரிடத்தில் நாம் சேரும்போது அவர் நம்மிடத்தில் சேருகிறார். நாம் சும்மாயிருந்துகொண்டு, ஆண்டவரைக் காணோமே என்றும், அவர் மாறிப்போனாரோவென்றும் புலம்புவது சரியல்ல. அவரை முகமுகமாய்த் தரிசித்து மனக்கவலைகளை அவருக்குச் சொல்லவேண்டும். தனி ஜெபம் செய்யாதவர்களுக்கு கிறிஸ்துவின் சமுகம் இல்லாததுபோலவே தோன்றும். அவரை அடிக்கடி தேடி, அவரோடு சம்பாஷிக்கும் மக்களுக்கு அவர் கூடயிருப்பதும் நடத்துவதும் ஆசீர்வதிப்பதும் பிரத்தியட்சம். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் மாறாதவராகவேயிருக்கிறார்.

### 3. என்றும் கிறிஸ்து

எதிர்காலத்துக்கும் இவரே கிறிஸ்து. கடந்தகால மாத்திரமல்ல, இன்று மாத்திரமல்ல, என்றும் இவரே கிறிஸ்து. நமது வருங்காலத்தைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? நமது

உத்தியோகம், சம்பாத்தியம், மக்கள் விஷயம் இக்காரியங்களைப் பற்றி நினைக்கும்போது கலங்குகிறோம். நாம் நமது காலத்தை எப்படியோ கழித்துவிட்டோம். இப்பொல்லாத உலகத்தில் நமது மக்கள் எப்படிப் பிழைப்பார்களோ என்று கவலைகொள்ளுகிறோம். வருங்காலத்தைப்பற்றிய அறியாமையே இந்தக் கலக்கத்துக்குக் காரணம். நமது கால ஒழுங்கு முழுவதும் நமது ஆண்டவர் கையில் இருக்கிறது. கடந்த காலத்தில் நம்மை நடத்தின கிறிஸ்து, இன்று நம்மை நடத்திவரும் கிறிஸ்து, இனிமேலும் நம்மை நடத்துவாரென்பது நிச்சயம். ஏனென்றால் அவர் மாறுகிறவரல்ல. மாறாத சிநேகமே உண்மையான சிநேகம். "அவர் தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தம் அன்பு வைத்தார்" உலகத்தில் சிநேகிதர் மாறிப்போவார்கள். பல விதத்திலும் நமக்கு ஆதரவும் அனுகூலமாயிருந்த சிநேகிதர் இம்மையைவிட்டுப் பிரிந்து போவார்கள். இம்மையிலேயே சில சிநேகிதர் தப்பெண்ணத்தினால், வீண் சந்தேகத்தினால், கேள்விப்பேச்சினால் மாறிவிடுவார்கள். கிறிஸ்துவோ நமது பாவங்கள், குறைவுகளை அறிந்திருந்தும் தமது அன்பில், தமது உண்மையில் மாறுகிறவரல்ல. அவரது மாறாத சிந்தையே நமது எதிர்கால நம்பிக்கை. நமது காரியங்கள் யாவையும் நம்மையும் அவர் கையில் விட்டுவிட்டு, அவருக்குப் பிரியமானவர்களாய் நாம் நடந்து கொள்வோமானால் நிச்சயமாகவே நமது வருங்கால விஷயங்கள் யாவும் நமக்கு அனுகூலமாகவே முடியும். அதற்குச் சந்தேகமேயில்லை. கிறிஸ்துவை இவ்வாறு அறிந்த பக்தன் கலங்குவதில்லை. ஏனென்றால் தன் ஆண்டவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதை அவன் நிச்சயித்திருக்கிறான். மறுமையில் என்றும் நம்மோடிருப்பவர் அவரே.

## 81. நாலுவகைப் பாவிகள்

***"மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரத்தில் மிகுந்த சந்தோஷம்" (லூக். 15:7).***

பாவிகளை ரட்சிக்க வந்தவர் பாவிகளை விட்டு விலகிக் கொள்வதெப்படி? சகல ஆயக்காரரும் பாவிகளும் ஆண்டவரிடத்தில் வந்தபோது, பரிசேயரும் வேதபாரகரும்

முறுமுறுத்து, இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்களே. வேறொரு சமயம் அவரை ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்றார்கள். ஆனால் அவர் பாவிகளை ஏற்றுக் கொண்டதினால் உண்டான நன்மையை அவர்கள் கவனிக்கவில்லை. ஜலத்தில் அமிழ்ந்தவனை ஜலத்தில் விழுந்து ரட்சிக்கும் வண்ணமாய், அக்கினியில் அகப்பட்டவனை அக்கினிக்குட் பிரவேசித்துக் காப்பாற்றும் வண்ணமாய், பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலும் அமிழ்ந்துபோன மனுமக்களை கைதூக்கி ரட்சிக்கவந்த ஆண்டவர் அவர்கள் கிடக்கும் இடத்துக்கு இறங்காமல் முடியாது. அவர் நமக்காகப் பாவமான ரகசியம் இதுவே. இதையறியாத சத்துருக்கள் அநியாயமாய் அவரைக் குற்றப்படுத்தினார்கள். அச்சமயத்தில் லூக்கா **15**-ல் வருகிற அருமையான உவமைகளைச் சொன்னார். மூன்று உவமைகளாகத் தோன்றினாலும் மூத்த குமாரனையும் சேர்த்துக்கொண்டால் நாலாகும். காணாமற் போன ஆடு, காணமற்போன வெள்ளிக்காசு, காணமற்போன இளையகுமாரன், காணாமற்போன மூத்தகுமாரன், மூத்த குமாரன் வீட்டைவிட்டுக் காணாமற்போகவில்லையே என்றால், அவன் வீட்டிலிருந்தும் தகப்பனுக்கு அந்நியனே. அவன் துர்க்குணத்தினிமித்தம் வீட்டுக்குள் போகாமல் வெளியே நின்றபோது தகப்பன் வெளியே வந்து அவனை வருந்தி அழைக்க வேண்டியதாயிற்று. அவன் உள்ளே போனதும் போகாததும் தெரியாது. ஆண்டவர் மூத்தகுமாரனையும் உவமையில் சேர்த்து அவனைப் பற்றி அதிகமாய்ச் சொல்லி யிருப்பதால் அவன் காரியத்தையும் நாம் கவனிக்கத்தான் வேண்டும். நாலுவகையான பாவிகள் நிலைமையை இவ்வுவமைகள் காட்டுகின்றன. முதல் மூன்று உவமைகளைத் தமக்காகவும், மூத்தகுமாரன் உவமையைப் பரிசேயருக்காகவும் சொன்னார்.

### 1. காணாமற்போன ஆட்டைப் போன்ற பாவிகள்

ஆடு மனதாரக் காணமற்போகிறதில்லை. அறியாமலே தவறிப் போகிறது. அது தரையைப் பார்த்துக்கொண்டே புல்லை மேய்ந்து கொண்டு போகிறது. அது புல்லை மேய்ந்து, மேய்ந்து, மேய்ந்து அப்படியே வெகுதூரமாய்ப் போகிறது. கடைசியாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தால் மந்தையையும் காணோம். மேய்ப்பனையும் காணோம். ஆடு காணாமற்போயிற்று.

வேண்டுமென்று காணாமற்போகவில்லை. புல்லை மேய்ந்து கொண்டே போனதாலே காணாமற்போயிற்று. அநேகர் இந்த வகுப்பைச்சேர்ந்தவர்கள் ஏதோ ஒரு விஷயத்தில் பற்றுக்கொண்டு, கவனத்தை அதிலேயே செலுத்தி தாங்கள் போகுமிடம் இன்னதென்று கொஞ்சமும் யோசியாமல் விலகிப் போகிறார்கள். தங்கள் ஜீவியத்தைப்பற்றிய ஒரு திட்டமான நோக்கம் அவர்களுக்கு இல்லை. செத்தமீன்கள் வெள்ளத்தால் இழுப்புண்டு போவது போலும், சுக்கானில்லாக் கப்பல்கள் அலை எங்கெங்கே கொண்டு போகிறதோ, அங்கெல்லாம் அலைவது போலும், இவர்கள் நிற்க நிலையற்று நேரிடும் சோதனைகளாலும் பலவித பாவங்களாலும் இழுப்புண்டு போகிறார்கள். பகுத்தறிவில்லாத பேதைகளாய் என்ன எது என்று கேளாமல் கூட்டத்தோடு கூட்டமாய், காலத்திற்கேற்ப கோலமாய் தங்கள் வாழ்நாளைப் போக்கி வருகிறார்கள். என்னென்ன நேரிடுமோ அது நன்மையோ தீமையோ ஒன்றும் விசாரியாமல் எல்லாவற்றிலும் இணங்கிவிடுவார்கள். இவர்கள் ஜீவிய நோக்கமற்றவர்கள். புல்லை மேய்ந்து மேய்ந்து ஆடு வழிதவறிப்போகிறதுபோலவே இவர்கள் காரியமும் இருக்கிறது. இவர்கள் செய்கைகள் பாவமானாலும் அவர்கள் அறியாமையை நினைத்து ஆண்டவர் பரிதபித்து இவர்களை ஆட்டுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். வேண்டுமென்றல்ல, தங்கள் மதியீனத்தாலேயே அநேகர் வழிவிலகி கெட்டுப்போகிறார்கள்.

**2. காணாமற்போன காசைப்போன்ற பாவிகள்**

காசு தானாகக் காணாமற் போகிறதில்லை. அதை வைத்திருந்தவளுடைய அஜாக்கிரதையினாலே அது காணாமற் போயிற்று. பத்துக் காசுகளை வைத்திருந்த அந்த ஸ்திரீ ஒரு காசை எப்படியோ தவற விட்டாள். காணாமற்போன காசின் குற்றமல்ல. ஆண்டவரை விட்டு விலகி அநேகர் கெட்டுப் போயிருப்பதற்குக் காரணம். மற்றவர்களுடைய பாவமே. மனுஷன் சுயசித்தமுள்ளவனாதலால் அவன் செய்யும் பாவங்களுக்கு அவன் உத்திரவாதியென்பது உண்மையே. ஆகிலும் ஒருவனுடைய நற்குணம் அல்லது துர்க்குணம் உண்டாவதற்கு அவனுடைய பிறப்பு, வளர்ப்பு, குடும்பம், சந்தர்ப்பம் இன்னும் அவனைச் சூழ்ந்துள்ள காரியங்களையும் நாம் கவனிக்க வேண்டும். ஒரு சேரியை எடுத்துக்கொள்வோம். அங்கே அநேக பிள்ளைகளைக் காண்கிறோம். அங்குள்ள

மனுஷர் குடிவெறியிலும், துன்மார்க்கத்திலும், சண்டையிலும், தூஷணத்திலும் நிறைந்தவர்கள். கல்வி அறிவோ, ஒழுங்கோ, சுத்தமோ, நாகரீகமோ ஒன்றும் அங்கில்லை. இதன் மத்தியில் வளரும் பிள்ளைகள் எப்படியிருப்பார்கள்? தாங்கள் கெட்டுப்போக வேண்டுமென்கிற விருப்பம் அந்தப்பிள்ளைகளுக்கு இல்லை, ஆனால் அவர்கள் நல்லவர்களாய் நடக்கவும் வழியில்லை. தாங்கள் தங்கள் பெற்றோரிடம் மற்றவர்களிடம் இடைவிடாது காண்பதையும் கேட்பதையும் அவர்கள் பின்பற்றுவார்கள். ஆகையால் அவர்கள் செய்யும் குற்றம் குற்றமல்லவென்று நாம் சொல்லுகிறதில்லை. ஆனால் அவ்வாறு கெடுவதற்கு அவர்களைச் சூழ்ந்திருக்கும் காரியங்கள் காரணமாகும். ஸ்திரீயினுடைய அஜாக்கிரதையால் அந்தக்காசு காணாமற்போனதுபோல மற்றவர்கள் பாவத்தால் இவர்களும் கெட்டுப்போகிறார்கள். இதையும் ஆண்டவர் அறிவார். இப்படிப்பட்டவர்களுக்கு ரட்சிப்பின் வழியை அறிவிப்பது நமது கடமையாகும்.

### 3. இளையகுமாரனைப் போன்ற பாவிகள்

இவர்கள் ஆட்டைப்போல பேதைமையால் காணாமற்போனவர்களுமல்ல, அல்லது வெள்ளிக்காசைப்போல் மற்றவர்களுடைய தவறால், கெட்டமாதிரியால் காணமற்போனவர்ளுமல்ல. இவர்கள் சுய தீர்மானத்தோடே பரமபிதாவை விட்டு விலகிப்போகிறவர்கள். தகப்பன் சித்தப்படி பிழைப்பது இவர்களுக்கு கஷ்டமாய்த் தோன்றுகிறது. யாதொரு கட்டுக்காவல் இல்லாமல் தங்கள் இஷ்டம்போல் நடந்ததால் உலக சந்தோஷங்களை அனுபவிக்கலாம் என்று தீர்மானித்துப் புறப்பட்டார்கள். பிதாவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது இவர்களுக்குக் கசப்பாயிருக்கிறது. மனங்கொண்டபடி நடப்பதோ இன்பமாகத் தோன்றுகிறது. இவர்கள் தூரதேசம் போய், தங்கள் மாம்சமும் மனசும் விரும்பினபடி நடந்த பின்புதான் தாங்கள் செய்தது சரியோ தப்பிதமோ என்பதை அறிவார்கள். நம்மில் அநேகருக்கு இளையகுமாரனுடைய வழிதான் பிரியம். இளையகுமாரனுடைய வழியை விரும்புகிறவர்கள் அவனுடைய முடிவையும் நினைத்துக் கொள்ள வேண்டும். பன்றியையும் தவிட்டையும் மறந்து விடக் கூடாது. ஐயோ, பசியினால் சாகிறேனே என்று அவன் புலம்பினதையும் மறந்து விடக்கூடாது.

**4. மூத்த குமாரனைப் போன்ற பாவிகள்**

மூத்த குமாரனால் நமக்குப் போதனையில்லையென்றால் ஆண்டவர் அவனைப்பற்றி இங்கே இவ்வளவுதூரம் பேசியிருக்கமாட்டார். இவன் தகப்பனோடிருந்தபோதிலும் இவன் காணாமற் போனவனே. ஆட்டைப் பார்க்கிலும், வெள்ளிக்காசைப் பார்க்கிலும், இளைய குமாரனைப் பார்க்கிலும் அதிகத் தூரம் காணாமற்போனவன் இவனே. அவனை நல்லவனென்றும், அவன் கேட்டது சரிதான் என்றும் நினைப்பவர்களும் இருக்கிறார்கள். இவன் வீட்டிலிருந்தும் இவன் உள்ளத்தில் தகப்பன் மீதாவது, தன் சகோதரன் மீதாவது கடுகளவு அன்பில்லை. இவன் வீட்டிலிருந்தும், தகப்பனுக்குள்ள தெல்லாம் அவனுடையதாயிருந்தும் இவன் அந்நியனே. தன்னைப் பாவமற்ற நீதிமானாக நினைத்துத் தன் சகோதரன் பாவத்தைத் தூற்றிப் பேசுகிறான். தம்பி தகப்பனிடம் திரும்பி வந்ததும், தகப்பன் தான் பெற்ற பிள்ளையைக் கண்டு சந்தோஷித்ததும் இவனுக்குக் கொடிய வெறுப்பாகயிருந்தது. இவனா மகன்? இவனா சகோதரன்? இவன் காணாமற்போன அந்நியனே. தகப்பனுடையவைகள் தன்னுடையவைகள் என்ற மதிக்காமல், இத்தனை வருடக்காலம் நான் உமக்கு ஊழியஞ் செய்தேனே, நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லையே என்று தகப்பனை மனம் நோகப் பேசுகிறான். காலமெல்லாம் இவன் மனதிலே ஒரு அந்நியனைப்போலவே நடந்து வந்திருக்கிறான் என்பது இவன் பேச்சால் வெளிப்படுகிறது. அன்பற்றவனும் சுயநீதிக் காரனுமான இவன் முடிவு என்னவாயிற்றென்பது சொல்லப்படவில்லை. ஆண்டவர் அவனை வீட்டுக்கு வெளியிலே நிறுத்தி விட்டார். பாவிகளை ஏற்றுக்கொள்ளு கிறார் என்று குற்றப்படுத்தின பரிசேயருக்கு இந்த உவமையைச் சொல்லி நீங்களும் அந்த மூத்த குமாரனைப்போலவே இருக்கிறீர்கள் என்பதாக முடித்தார். இது பரிசேயருக்கு ஆண்டவர் கொடுத்த சவுக்கடி.

முடிவாக நாம் கவனிக்க வேண்டியதென்னவென்றால் ஆட்டைப்போன்ற அறியாமையால் கெட்டுப்போன பாவிகளானாலும் சரி, காசைப்போல மற்றவர்களால் கெட்டுப்போன பாவிகளானாலும் சரி, இளைய குமாரனைப் போல சுய இஷ்டப்படி நடந்து கெட்டுப்போன பாவி களானாலும் சரி. மனந்திரும்பி ஆண்டவரிடம் வரும்போது

அவர் நமது பாவங்களை மன்னித்து நம்மை அருமையாய்ச் சேர்த்துக் கொள்ளுகிறார் என்பது நிச்சயம். அது அவருக்கு எவ்வளவோ சந்தோஷம்! பரத்திலும் மிகுந்த சந்தோஷம். மற்றவர்களை அற்பமாய் நினைக்கிற சுயநீதிக்காரரர் முடிவோ மிகவும் பயங்கரம்.

## 82. சாஸ்திரிகளும் மேய்ப்பரும்

**"மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து ... பிள்ளையைக் கண்டார்கள்" கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள்" (லூக். 2:15,16; மத். 2:1)**

பெத்லகேம் சத்திரத்தில் மாட்டுக்கொட்டிலிலே துணிகளால் சுற்றப்பெற்ற ஒரு சிறுகுழந்தையைக் காண்கிறோம். குழந்தை இன்னாரென்பதை அங்குள்ளோர் அறியவில்லை. உலகமும் அறியவில்லை. அது ஏழைக்கோலமாய்ப் பிறந்திருந்தாலும் மனுமக்களை இரட்சிக்கும்படி கடவுள் அனுப்பின அவரது திருப்புதல்வன் என்பது நிச்சயம். அச்சமயம் தோன்றின அடையாளங்களே அதற்கு ஆதாரம். பாலகனைத் தரிசிக்க இருதிறத்தார் வந்தனர். மேய்ப்பர்கள் ஒருபக்கம்; கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் ஒரு பக்கம். இரு திறத்தாரும் குழந்தையைப் பணிந்து வணங்கினர். மேய்ப்பரும் சாஸ்திரிகளும் வந்ததை ஒரு சுவிசேஷகனே சொல்லுகிற தில்லை. புறஜாதிகளுக்கு சுவிசேஷகத்தை எழுதின லூக்கா மேய்ப்பர் வந்ததைப் பற்றிச் சொல்லுகிறார். இருதிறத்தாரும் ஒரே சமயத்தில் சாஸ்திரிகள் வந்ததைப் பற்றிச் சொல்லுகிறார். இருதிறத்தாரும் ஒரே சமயத்தில் வந்தவர்கள் அல்ல. மேய்ப்பர் முந்தியும் சாஸ்திரிகள் பிந்தியும் வந்தார்கள். இருபட்சத் தாரையும் சேர்த்துக் கவனிக்கும்போது கிறிஸ்து எல்லாருக்கும் இரட்சகர் என்பது விளங்கும்.

உலக ரட்சகரின் பிறப்பு முதல் முதல் சாதராணமான மேய்ப்பருக்கு வெளிப்படுத்தப்படுவானேன்? எருசலேமில் சபை அதிகாரிகளான வேதபாரகர், பரிசேயர், மூப்பர், பிரதான ஆசாரியருக்கு ஏன் வெளிப்படுத்தப்படவில்லை? கடவுளுடைய முறை இதுவே. பரமகாரியங்களை ஏற்றுக் கொள்ளத்தக்க இருதயம் எங்கே உண்டோ அங்கே அவைகளை

வெளிப்படுத்துகிறார். மனுஷர் பார்வையில் இடையர் அற்பமானவர்களே. ஆகிலும் அவர்கள் இருதய நிலைமை கடவுளுக்குப்பிரியமாயிருந்தது. வேலை எவ்வளவு அற்பாமாயினும் அதை உண்மையாய் நிறைவேற்றுவோருக்கு கடவுள் காடாட்சம் கிடைக்கும். பரம தரிசனம் நமக்குக் கிடைக்கவில்லையே. ஆண்டவர் ஓர் விசேஷித்த அடையாளத்தை நமக்குக் காட்டுகிறாரில்லையே என்று நாம் முறையிடலாம். அப்படியல்ல, ஆண்டவர் அருளும் காட்சியைக் காணக்கூடாமலும், அவர் பேசும் சத்தத்தைக் கேட்கக்கூடாமலும், நாம் வேறுபல காரியங்களால் நிறைந்திருக்கிறோம். நடக்கும் சம்பவங்களைக் கொண்டும், மற்ற மனுஷரைக் கொண்டும் ஆண்டவர் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். நாமோ மேலான ஆச்சரியமான அடையாளத்துக்காகக் காத்திருந்து ஏமாந்து போகிறோம். கடவுள் நம்மை வைத்திருக்கும் நிலைமையில் நமது சாதாரண வேலையை உண்மையாய் நிவேற்றும்போது தேவசத்தத்தை நாம் கேட்கலாம். அவருடைய சித்தத்தின்படி நடப்பவர்களுக்கே தேவ ரகசியம் வெளிப்படும்.

### 1. சாஸ்திரிகளும் மேய்ப்பரும்

கிறிஸ்து பிறந்தவுடன் கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரைத் தரிசிக்க வந்ததாக மத்தேயு சொல்லுகிறார். அவர் பிறந்தவுடன் மேய்ப்பர்கள் அவரைக் காண வந்ததாக லூக்கா சொல்லுகிறார். மத்தேயு சொல்வதைப் பார்க்கும்போது ஞானிகளான சாஸ்திரிகளே முதலில் வந்தததுபோல் தோன்றும் லூக்கா சொல்வதைக் கவனித்தால் மேய்ப்பரே முதலில் வந்ததாகத் தெரியும். பெத்லகேம் வயலிலிருந்த மேய்ப்பரே முதலில் வந்தவர்கள். தூரமான கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பிந்தி வந்தவர்கள். இதிலே நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று. பேதைகளான மேய்ப்பரும் ஞானிகளான சாஸ்திரிகளும் ஆண்டவரிடம் வந்தார்கள். இருதிறத்தாருக்கும் ஆண்டவரிடத்தில் இடமுண்டு. இருதிறத்தாரும் ஆண்டவருக்கு வேண்டியவர்களே. மார்க்கம் அறிவாளிகளான ஞானிகளுக்கே உரியது என்று நினைப்பவர் அநேகர். ஒரு சமயம் ஒரு இந்து நண்பரோடு பேசிக் கொண்டிருந்தபோது அவர்: கிறிஸ்து மதத்தில் தத்துவ மில்லையே, எல்லாம் வெகு சாதாரணமாயிருக்கிறதே என்றார். அவர் சொன்னது ஒருவிதத்தில் உண்மைதான். ஆழமான

தேவரகசியங்களை ஆண்டவர் வெகு சாதாரணமான வார்த்தையில் பேசியிருக்கிறார். வாக்குகள் சாதாரணமாயினும் பொருளோ மகா ஆழம் தற்காலத்தில் சாஸ்திரிகளான தேவபண்டிதர்கள் எழுதும் நூல்கள் தத்துவமாகவேயிருக் கின்றன. ஆவிக்குரிய அனுபவமும் யோசிக்கும் அப்பியாசமும் இல்லாதவர்கள் அந்தப் புஸ்தகங்களே வாசித்து அறிய முடியாது. ஏழு எட்டு ரூபாய் மதிப்புள்ள அப்புஸ்தகங்களை அவர்கள் ஒரு அணாக் காசு கொடுத்துக்கூட வாங்கவிரும்பார் கள். ஏனென்றால் அவை அவர்களுக்கு கிரந்தம்போலிருக் கின்றன. ஆனால் அதே புஸ்தகங்களை மகா விருப்பத்தோடு வாங்கிப்படித்து ஆனந்திக்கும் மனுஷருமுண்டு. தத்துவ ஆராய்ச்சிக் குணமுள்ளவர்களுக்கு ஆழமான கருத்துள்ள போதனைகள் அருமையாயிருக்கின்றன. தேவ அறிவின் வளர்ச்சிக்குத் தக்கதாக அவர்கள் இருதயம் மாத்திரமல்ல. அவர்கள் புத்தியும் ஆழமான விஷயங்களை விரும்புகிறது. ஆகையால் கிறிஸ்துவைத் தரிசிக்க சாஸ்திரிகளும் வேண்டும். அவர் ராஜ்யத்தில் உழைக்க ஞானிகளும் வேண்டும். இது இப்படியிருக்க மறுபட்சத்தார். கிறிஸ்துமார்க்கம் சாதாரணமான ஜனங்களுக்கே ஏற்றது. ஆடு மேய்க்கிறவர்களுக்கும், மீன்பிடிக்கிறவர்களுக்கும், சமுசாரிகளுக்குமே தகுந்தது என்றும், சாஸ்திர அறிவாளிகளான ஞானிகளுக்கு அது ஏற்றதல்லவென்றும் பேசுகிறார்கள். ஆனால் பெத்லகேமின் பிறந்த பிள்ளை தமக்கு இருதிறத்தாருமே வேண்டும் என்று சொல்லுகிறது. பேதைகளையும் ஞானிகளையும் ஆண்டவர் அழைக்கிறார். மேய்ப்பரும் வந்து அவரைப் பணிந்து கொண்டார்கள். ஞானிகளும் வந்து பணிந்து கொண்டார்கள். மார்க்கம் சாதாரணமும் ஆழமுமானது. அது தெளிவும் கருகலுமானது. அது வெளிப்பட்டதும் மறைவுமானது. ஞானிகள் அறிய முடியாததை பேதைகள் அறிவார்கள். பேதையருக்கு விளங்காததை ஞானிகள் காண்பார்கள். ஆகையால் கிறிஸ்து மார்க்கம் பேதையரான மேய்ப்பருக்கே உரிய மார்க்கமல்ல. அல்லது சாஸ்திரிகளான ஞானிகளுக்கே உரிய மார்க்கமுமல்ல. அது இருதிறத்தாருக்கும் பொதுவான மார்க்கம். காலத்தைக் கவனிக்கும்போது தேவ காரியங்களை சிறுபிள்ளைகளும் அறியத்தக்கவிதமாய் பேசவேண்டும்; அறிவாளிகளும் உணரத்தக்கவிதமாய் பேச வேண்டும். பேதையரின் சிறுபிள்ளைக்கொப்பான நம்பிக்கை ஞானிகளுக்கு ஆசீர்வாதம்; ஞானிகளின் ஆழமான ஆராய்ச்சி பேதைகளுக்குப்

பிரயோஜனம். ஆகையால் உலக ரட்சகரைத் தரிசிக்க பேதையரான மேய்ப்பரும், ஞானிகளான சாஸ்திரிகளும் பெத்லகேமுக்கு வந்தார்கள்.

**2. எந்த வழி வந்தார்கள்?**

சாஸ்திரிகள் ஆண்டவரைக் கண்டுபிடிக்குமுன் பட்டபாடு கொஞ்சமல்ல. தூரமான கிழக்கிலிருந்து இரவும் பகலும் பிரயாணம்பண்ணி, நாட்களும் மாதங்களும் சென்று கொஞ்சங் குறைய இரண்டாவது வருஷத்தில் கிறிஸ்துவைக் கண்டார்கள். அதுவும் நேராக அல்ல. ஏரோதிடம் சென்று விசாரித்து அப்புறம் பெத்லகேம் வந்தார்கள். நட்சத்திரத்திலேயே கவனம் வைத்த சாஸ்திரிகள் அந்த நட்சத்திரத்தையும் இழந்து மறுபடியும் அதைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். ஏரோது நட்சத்திரம் காணப்பட்ட காலத்தை விசாரித்து இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொலை செய்யும்படி கட்டளையிட்டதாலே அவர்கள் செய்த பிரயாணகாலம் தெரிகிறது. மெய்யாகவே சாஸ்திரிகள் கிறிஸ்துவைக் காணும்படி எடுத்துக்கொண்ட பிரயாசம் அதிகம். பேதைகளான மேய்ப்பரோ வெகு எளிதாக அவரைத் தரிசித்தார்கள். இவர்கள் வானத்தைப் பார்த்தவர்களுமல்ல, நட்சத்திரங்களை ஆராய்ச்சி செய்தவர்களுமல்ல. அவர்கள் தரையைப் பார்த்த கண்ணாகத் தங்கள் ஆடுகளை பாதுகாப்பதில் கவனமுற்றிருந் தார்கள். இவ்வாறு சாதாரணமான இடையர்களுக்கு பரலோகத்தின் தேவன் தமது திருக்குமாரனுடைய பிறப்பை அறிவித்தார். உடனே அவர்கள் புறப்பட்டுப்போய் தங்கள் மீட்பரைக் கண்டு சந்தோஷப்பட்டு மற்றவர்களுக்கு விஷயத்தைப் பிரசித்தம் பண்ணினார்கள். அதைக் கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

இதன் உண்மையை இன்றும் காண்கிறோம். கிறிஸ்து மூலம் வெளிப்பட்ட தேவகாரியங்களை புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். பாவமாவது என்ன? ரட்சிப்பாவது என்ன? கிறிஸ்துவில் மரணம் என்றால் என்ன? அந்த மரணத்தால் நாம் ஒப்புரவாகிறது எப்படி? பரிசுத்த ஆவியானவர் யார்? திரித்துவத்தின் ரகசியமென்ன? தேவராஜ்யமென்றால் என்ன? கிறிஸ்துவின் தெய்வீக மனுஷீக தன்மையின் சம்பந்தமென்ன? இப்பேர்க்கொத்த கேள்விகள் கடவுள் பிள்ளைகள் மனதில் வரும். ஆண்டவரோடு நெருங்கிப் பிழைப்பவர்கள் யார் யாரோ

அவர்கள் மனதில் அநேக கேள்விகள் கிளம்பும், இவை சந்தேகமல்ல. காரியங்களைத் தெளிவாய்த் திட்டமாய் அறியும்படியான ஆவலே. இவ்வாறு ஆராய்ச்சி செய்பவர்களின் வழி சாஸ்திரிகளின் வழியைப்போல் கஷ்டமாயினும் அவர்கள் ஆராய்ச்சியின்பலன் மற்றவர்களுக்குப் பெருத்த ஆதாயம். பேதையர்கள் மறுகேள்வியின்றி வேதவாக்கை நம்பி ஆசீர்வாதம் பெறுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் அவர்களைப் பார்த்து அது எப்படி, இது எப்படி என்று கேட்கும்போது: அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது, நம்பினோம் ரட்சித்தார் என்பார்கள். இது உண்மையே. மேய்ப்பரான இவர்கள் ஆழமாய் ஆராய்ச்சி செய்த கடவுள் பிள்ளைகளிடம் கற்றுக்கொள்ளும்போது இவர்களுடைய பக்தியும் புத்தியும் பலப்படுகின்றன. சிறுபிள்ளைகள்போல் நம்பும் தேவமக்களும் திருச்சபைக்கு அவசியம். நம்பின சத்தியங்களின் உள்ளான ரகசியங்களை ஆராய்ச்சி செய்து தீர்க்கமாகப் பேசும் சாஸ்திரிகளும் அவசியம். ஆண்டவர் ராஜ்யத்தில் இருதிறத்தாருக்கும் இடமும் வேலையுமுண்டு.

## 83. பாதுகாப்பின் வாக்கு

**"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபி. 13:5).**

நமக்கும் பரமபிதாவாகிய கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை நாம் சரியாய் அறியவில்லை. நமது மனம்போல் அவரை நினைத்துக்கொள்ளுகிறோம். நமது மனமோ நேரத்துக்கு ஒருவிதம். அது நம்மை வஞ்சிக்கக்கூடியது. கடவுளைப்பற்றி நமக்கு உற்சாகமான சமயத்தில் ஒரு விதமாகவும், நமக்கு உபத்திரவம் வந்த சமயத்தில் வேறுவிதமாகவும் நினைக்கிறோம். இவ்வாறான சுய எண்ணமே நமது ஜீவியத்தைப் பாழாக்குவது. பரமபிதா ஒருபோதும் மாறுகிறவரல்ல. அவன் தன்மையில், உண்மையில், அன்பில், வல்லமையில் எப்போதும் ஒன்றுபோலிருக்கிறார். அவரை இருக்கிறபடி அறிவதே நமக்கு ஜீவமார்க்கமாகும். அவர் வாக்குகளை நம்பிப் பிழைப்பதே நமக்கு அனுகூலமாகும். நமது பிரசங்கவாக்கியம் ஓர் நிகரற்ற வாக்கு. அதை உண்மையாய்

நாம் நம்பி ஏற்றுக்கொள்ளும்போது கடவுள் பாதுகாப்பின் மாட்சிமை நமக்கு விளங்கும். வசனத்தை சரியானபடி திருப்புவோமானால்: "நான் ஒருபோதும் உன்னை விட்டு விலகுவதுமில்லை, நான் ஒருபோதும் உன்னைக் கைவிடுவது மில்லை" என்று இருக்க வேண்டும். அவர் தமது வாக்குப்படி இடைவிடாமல் நம்மோடிருப்பது உண்மையே. அந்த உண்மையை நாம் அறியாமலும், நம்பாமலும் தவிக்கிறோம். உலகில் பல கவலைகளும் கஷ்டங்களும் நம்மை நெருக்கி நமது கவனத்தை ஆண்டுகொள்ளவே கடவுள் கூடயிருப்பதை நாம் மறந்துபோகிறோம்.

இந்த அருமையான வாக்கு பிதாவின் அளவற்ற அன்பையும் அவருக்கு நம்மீதுள் வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறது. ஒருவன் எவ்வளவு பெரும்பாவியா யிருந்தாலும், எவ்வளவு தூரம் அவன் தன்னைக் கெடுத்துக்கொண்டாலும் அவர் அவனைத் தொடர்ந்த வண்ணமாகவே இருக்கிறார். அவனை விட்டுவிட அவருக்கு மனமில்லை. அவன் பாவம் எத்தனை திரளாயிருந்தாலும் அவர் அன்பை மேற்கொள்ள முடியாது. அவனைத் தமக்குச் சொந்தமாக்காமல் திரும்ப அவருக்கு மனம் வரவில்லை. "ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?" "ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால் அவள் அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாம லிருப்பாளோ?" இவ்வசனங்களில் பிதாவின் இருதய வாஞ்சையை அறிகிறோம். "நான் ஒருக்காலும் உன்னை விட்டு விலகுவதேயில்லை. நான் ஒருக்காலும் உன்னைக் கைவிடுவதேயில்லை" "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு ஒன்றும் நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று பவுல் சொல்லுகிறார். பிரசங்க வாக்கியத்தில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

## 1. நான் உன்னை விட்டு ஒருக்காலும் விலகமாட்டேன்

விலகமாட்டேன் என்பது அவர் நம்மோடு கூடயிருப்பதை மாத்திரமல்ல. அவர் நம்மைப் பிடித்திருக்கும் பிடியை விடுவதில்லை என்பதையும் குறிக்கும். அவர்பிடி தளர்ந்து போவதில்லை. நாம் அமிழ்ந்துபோக அவர் விடமாட்டார். ஒரு

பையனுக்கு நீந்தக் கற்றுக்கொடுப்பவர் அவன் இடுப்பில் கயிறு கட்டித் தமது கையில் பிடித்துக் கொள்ளுகிறார். அவன் தண்ணீரில் இருக்கிறான். அவர் தரையில் நிற்கிறார். அவன் கைகளையும் கால்களையும் அடித்து நீந்த முயற்சிக்கிறான். ஒரு சமயம் சரியா நீந்துகிறான். திடீரென அமிழப்பார்க்கிறான். ஆனால் அவன் அமிழ்ந்து போவதில்லை. ஏனென்றால் அந்தக் கயிற்றின் மறுபக்கம் கற்றுக்கொடுப்பவர் கையிலிருக்கிறது. அதுவே இங்கு அர்த்தம். நமது சுயாதீன சித்தமாகிய கயிற்றை வெகுதூரம் விட்டுப் பிடிக்கிறார். அவர் மீதுள்ள நம்பிக்கையின் ஜீவியத்தில் நாம் பழக விரும்புகிறார். இந்தக் கயிறு நீளமாயிருப்பதால் சிலசமயம் நாம் நீந்துவதும் மறுசமயம் நாம் அமிழ்வதுமாயிருக்கிறோம். ஆனால் அவர் ஒருக்காலும் நம்மை அமிழ்ந்து போக விடமாட்டார். நமது சுயசித்தத்தை அவருக்கேற்றவழியில் அப்பியாசிக்கும்படி அவர் நமக்கு இடங்கொடுக்கிறார். சுயசித்தத்தை உபயோகிப்பதில் அநேக தப்பிதங்களை நாம் செய்கிறோம். பலவந்தத்தினாலும் அல்ல. நாமே மனப்பூர்வமாய் கடவுள் சித்தத்தை நிறைவேற்றும்படி அவர் நமக்குச் சுயாதீனம் கொடுத்திருப்பதே நமது தவறுதல்களுக்குக் காரணம். பாடுபட்டாகிலும் நாம் நல்வழியைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பது அவர் சித்தம். நாம் எவ்வளவு தூரம் வழிவிலகினாலும் அவரது அன்பைக் கடந்து செல்ல முடியாது. நாம் எவ்வளவு ஆழமாய் அமிழ்ந்தாலும் நம்மைத் தாங்கும் அவரது நித்திய புயத்துக்குக் கீழே போக முடியாது. நாம் எவ்வளவாய் நம்மைக் கெடுத்துக் கொண்டாலும் நம்மை இரட்சிக்கும் அவர் கிருபைக்கும் மிஞ்சி நம்மைக் கெடுக்க முடியாது. அவர் வாக்கு நமக்கு ஆதாரம். "நான் ஒருக்காலும் உன்னை விட்டு விலகுவதில்லை" என்கிறார்.

இதன் பொருள் என்னவென்றால் நாம் கடவுளைப் பிடிப்பதிலும் அவர் நம்மைப் பிடித்திருக்கும் பிடியே நமது ரட்சிப்புக்கு ஆதாரம். நமது விசுவாசம் அவசியம், விசுவாசப்பிடியில்லாமல் கடவுளிடமிருந்து யாதொரு நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் நமது பிடியே பிரதானமாயிருக்குமானால் நம்மைப்போல நிர்ப்பாக்கியரில்லை. நமது விசுவாசம் உறுதியாயிருக்க வில்லையே. நமது அன்பு மாறாதிருக்கவில்லையே. நமது கீழ்ப்படிதல் ஒழுங்காயிருக்கவில்லையே. நமது பக்தி காலையில்

தோன்றும் மேகத்தைப்போலவும் அதிகாலையில் தோன்றும் பனியைப்போலவும் மாறிப்போகிறது. நமது பிடியின் அளவுக்குத்தக்கதாக கடவுள் நம்மை ரட்சிக்கிறதாயிருந்தால் ஒருவனும் ஈடேற மாட்டான். நாம் ஆழத்தில் அமிழ்ந்தே போகவேண்டியது. நமது பிடியை விட்டாலும் பிதா தமது பிடியை விடுவதேயில்லை. எத்தனையோ பாவங்கள்! எத்தனையோ தவறுதல்கள்! எவ்வளவோ அவிசுவாசம்! எவ்வளவோ முறுமுறுப்பு! எத்தனையோ சமயங்களில் நாஸ்தீகம் இப்படியெல்லாமிருந்தும் நாம் கெட்டுப்போகா திருப்தின் ரகசியமென்ன? "நான் ஒருக்காலும் உன்னை விட்டு விலகுவதில்லை" நமது புத்தியீனமான வழிகளில் வெகுதூரம் நம்மைப் போகவிட்டிருந்தும், அதன் கசப்பை நாம் ருசிபார்க்கும்படி இடங்கொடுத்திருந்தும் நம்மைக் கட்டியிருக்கும் அன்பின் கயிறு அவர் கையிலிருக்கிறதென்பது நிச்சயம். ஆகையால் நாம் அமிழ்ந்து போகவில்லை. நமது பிடி தளர்ந்தாலும், நிற்கக்கூடாமல் நாம் விழுந்தாலும், மனஞ்சோர்ந்து ஒன்றுமே செய்யமுடியாதிருந்தாலும் பரமபிதா நமக்காகச் செய்யும் கிரியையில் ஓய்வதில்லை என்பது நிச்சயம். "நான் ஒருக்காலும் உன்னை விட்டு விலகுவதில்லை".

**2. நான் ஒருக்காலும் உன்னைக் கைவிடுவதில்லை.**

முந்தின வாக்குக்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாதது போல் தோன்றினாலும் இதன் கருத்து வேறே. "துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை" என்று பவுல் சொன்னார். ஆண்டவரோ "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டார். உலகத்தின் பாவத்தை ஏற்றுக்கொண்டு சுமந்த ரட்சகனைத்தவிர கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்டவர்கள் யாருமில்லை. நமக்கு நேரிடும் பாடுகள் துன்பங்களைச் சகிக்கமுடியாமல் கடவுள் நம்மைக் கைவிட்டதாகப் புலம்பியிருக்கிறோம். அது உண்மையல்ல. கொடிய துன்மார்க்கனையும்கூட அவர் கைவிட்டதில்லை. நாம் கடவுளைக் கைவிட்டாலும் அவர் நம்மைக் கைவிடுகிறதில்லை. கடவுளை மறந்து தங்கள் துன்மார்க்க வழியில் நடப்பவர்கள் எவ்வளவோ உலக நன்மைகளை அனுபவிக்கிறார்கள். கடவுள் அவர்களைக் கைவிட்டிருந்தால் அவர்கள் அழிந்தே போயிருப்பார்கள். கடவுளால் முற்றிலும் கைவிடப்படுகிற அனுபவத்தை

கிறிஸ்துவையன்றி வேறொருவராலும் அறியான். பாவிகள் கைவிடப்படாதிருக்கும்படி பாவிகளின் மீட்பர் கைவிடப்பட்டார். மக்களைப் பெற்றவர்கள் அவர்களைப் போஷிக்காமலும் காப்பாற்றாமலும் விட்டுவிடுவது கைவிடுவதாகும். மனைவியைக் கவனியாது விட்டுவிடுகிறவன் அவளைக் கைவிடுகிறான். நம்பின சிநேகிதனை விட்டுவிடு கிறவன் அவனைக் கைவிடுகிறான். இது மகா துயரமான காரியம். கிறிஸ்துவை சத்துருக்கள் பிடித்தபோது சீஷர்கள் அவரைக் கைவிட்டார்கள். நமக்குக்கஷ்ட காலமுண்டாகி, உத்தியோகமிழந்து, தரித்திரத்துக்குள்ளாகும் போது மனுஷர் நம்மை விட்டு தூரத்தில் விலகி கைவிடுவார்கள். ஆனால் நமது பரமபிதாவோ ஒருக்காலும் நம்மைக் கைவிடுகிறததில்லை. நாம் கவலை கஷ்டங்களுக்குள்ளாகி மனுஷரால் புறக்கணிக்கப்பட்டுத் தவித்து நிற்கும் சமயத்தில் ஆண்டவர் நமது பக்கத்தில் நின்று: உன் தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும், உன் சிநேகிதர்கள் தூரத்தில் விலகிப் போனாலும் நானோ ஒருக்காலும் உன்னைக் கைவிடுவதில்லை என்கிறார். ஆபத்துக்காலத்தில் நமக்கு உதவி செய்கிறவர் அவரே. அவர் சமயசகாயராயிருந்தார் என்பதையும் எவ்வளவு அதிசயமாய், விரைவாய் நமக்கு உதவி செய்தார் என்பதையும் நாம் பல முறை கண்டிருக்கிறோம். “நான் ஒருக்காலும் உன்னைக் கைவிடுகிறதில்லை.” கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் வளரும்படி நாம் போராடுவதை அவர் பார்க்கிறார். நமது தவறுதலால் மனஞ்சோர்ந்து பெருமூச்சு விடுவதை அவர் கவனிக்கிறார். ஆண்டவருக்காக நாம் பற்பல ஊழியங்களை நிறைவேற்றுகிறோம். வருஷங்களாகியும் ஏற்ற பலனைக் காணோமே என்று சோர்ந்து போகிறோம். பயப்படாதே, நான் உன்னைக் கைவிடுவதில்லை என்கிறார். குடும்பப் பாரம் நம்மை அமிழ்த்துகிறது. எப்படிப் பிழைப்போம் என்று கலங்குகிறோம். கலங்காதே, நான் உன்னைக்கைவிடுகிறதில்லை என்கிறார்.

அப்படியானால் அவருக்கு நாம் பதில் சொல்ல வேண்டும். “நான்உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அப்படியானால் “நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வானென்று சொல்லலாமே” (எபி. *13:6*). பிதாவின் வாக்கை நம்பி ஏற்றுக்கொள்ளும்போது நமது கலக்கங்களும்

சந்தேகங்களும் நீங்கி தைரியமும் மனச் சமாதானமும் நமக்குக் கிடைக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தை திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக்கொண்டிருப்போமாக. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"

# 84. அனுதாபமுள்ள கிறிஸ்து

***"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கில்லை" (எபி. 4:15).***

ஆண்டவர் நமக்காகப் பரிதபித்து அனுதாபப்படக்கூடிய நிலைமையில் வந்தார். கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கி ரட்சிக்க வந்தவருக்கு கடவுளோடும் மனுஷரோடும் பூரண சம்பந்தம் இருக்க வேண்டும். அவர் மனுஷனுடைய நிலைமையைச் சரியாய் அறியாவிட்டால் அவனுக்காக கடவுளிடம் ஏதும் செய்ய முடியாது. அவர் கடவுளோடு சம்பந்தம் அற்றிருந்தால் அவரால் மனுஷனுக்குப் பிரயோஜனம் ஒன்றும் கிடையாது. ஆகையால் இந்த அற்புத புருஷனுடைய தன்மையில் தெய்வீகமும் மனுஷீகமும் பூரண ஒற்றுமையுள்ளதாயிருந்தது. அவர் பிதாவோடிருந்த காலத்தில் மனுஷருடைய காரியங்களை அறியாதவரல்ல. அறிவு வேறே, அனுபவம் வேறே. அனுபவம் என்பது ஒன்றோடு சம்பந்தப்பட்டு பரீட்சையில் காண்பது. நோயாளிகளை நாம் காண்கிறோம். ஆனால் நாமே நோய்க்குள்ளாகிப் பாடுபடுவது நமக்கு அனுபவமாகும். ஆண்டவர் நமது அனுபவத்துக்குள் பிரவேசித்தார். மிருக வைத்தியன் மிருகத்துக்குப் பரிகாரம் செய்யலாம், ஆனால் அதன் கஷ்டத்தை அறிய முடியாது. ஆண்டவர் மனுஷனாகாமலே நமது பலவீனங்களை அறியக்கூடும், ஆனால் அனுபவம் அவருக்கிராது. ஆகையால் நம்மைப்போல் மாம்சத்தையும் ரத்தத்தையும் உடையவராகி, தம்மை நம்மோடு ஒன்றாக்கி, நமது சோதனைகள், பாவங்கள், பாடுகள், மரணம் முதலானவைகளை ஏற்றுக்கொண்டு அவற்றின் அனுபவத்தை அறிந்தார். பாவத்தின் வஞ்சகத்தை அவரைப்போல் அறிந்தவர்கள் யாருமில்லை. இது பாவஞ்செய்ததினால் கிடைத்த அனுபவமில்லை. பாவத்தை மேற்கொண்டதினால் உண்டான அனுபவம். வெள்ளத்தின்

பலன் வெள்ளத்தில் அமிழ்ந்து போகிறவனுக்கல்ல, வெள்ளத்தை மேற்கொண்டு கரையேறுகிறவனுக்கே தெரியும். இவ்வாறு எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து நமக்காகப் பரிதபிக்கக் கூடியவராயிருக்கிறார். அவருக்கு நம்மீதுள்ள அனுதாபம் மகா பெரிது.

**1. அவரது அனுதாபம் மகா தீவிரமானது**

மனுஷருக்குள் அனுதாபமற்றவர்கள் இருக்கிறார்கள். துக்கமோ சந்தோஷமோ ஒன்றுக்கும் அவர்கள் இருதயம் அசையாது. அவர்களுக்கு உணர்ச்சி என்பது இல்லை. அந்தப் பையன் ரெயில் சக்கரத்தில் அகப்பட்டு அரைக்கப்பட்டான் என்றால், முகத்தில் யாதொரு மாறுதலுமின்றி அப்படியா என்பார்கள். அவ்வளவுதான். அந்தத் துயரமான செய்தி அவர்கள் காதில் நுழைந்ததோ என்னமோ தெரியாது. தங்களுக்கு நேரிடுகிற கஷ்டங்களையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களுக்கு எல்லாம் சரிதான். உணர்ச்சியற்ற மனுஷர் தாங்களும் உருப்படார்கள், மற்றவர்களுக்கும் பிரயோஜனப்படமாட்டார்கள். மிருகங்கள் கூட கண்ணீர் வடிக்கும். இரை தின்னாது. கிறஸ்துவுக்கொப்பான அனுதாப உணர்ச்சியுள்ளவர்கள் யாருமில்லை. மற்றவர்களுடைய பசி, பாடுகள், கவலைகள், சோதனைகள், அவமானங்கள் அவர் மனதைக் கொடிய சஞ்சலத்துக்குள்ளாக்கின. மற்றவர்களுக்காக அவர் அழுதார். பாடனுபவிக்கும் மக்களுக்காக துக்கம் நிறைந்திருந்தார். அநேகர் தங்களுக்கு நேரிடும் சங்கடங்களுக்காகத் துக்கப்படுவதுமில்லை. மற்றவர்களுடைய அனுதாபத்தை நாடுவதுமில்லை. ஆண்டவரோ பாடனுபவிக்கிறவராயிருந்தபடியால் மனுஷர் அனுதாபத்தையும், தமது பிதாவின் அனுதாபத்தையும் இடைவிடாது தேடினார். மற்றவர்கள் அனுதாபம் தமக்குக் கிடைத்தபோது நன்றியுள்ளவராயிருந்தார். மனதுருக்கம் நிறைந்த அவரது திருவுள்ளம் மற்றவர்கள் விஷயத்தில் மகாதீவிரமாய் அனுதாபப்பட்டது. யார் யாருக்கு என்னென்ன உதவி வேண்டியிருந்ததோ உடனே உதவிசெய்து அவர்களை மகிழ்ச்சியாக்கினார். அவர்கள் சந்தோஷம் அவருக்குச் சந்தோஷமாயிருந்தது.

**2. அவரது அனுதாபம் விசாலமானது**

மனுஷருக்குள் அனுதாபம் மிகச் சுருங்கினது. இனத்தாருக்காக இனத்தார், சிநேகிதருக்காக சிநேகிதர் அனுதாபப்படலாம். நமக்காக அனுதாபப்படுவோரிடம் நமக்கும் அனுதாபம் உண்டு. அவ்வளவுதான், அதற்குமேல் நமக்கு அனுதாபமில்லை. நாமறியாதவர்கள் என்ன பாடுபட்டால் என்ன? நம்மை நேசிக்காதவர்கள் எவ்வளவு துன்பத்துக் குள்ளானால் என்ன? அதைப்பற்றி நமக்கு ஒன்றுமில்லை. நம்மைச் சிநேகிக்கிறவர்களையே நாம் சிநேகிக்கிறோம். நமக்கு உபகாரம் செய்கிறவர்களுக்கே நாம் உபகாரம் செய்ய விரும்புகிறோம். நமக்காக அனுதாபப்படுகிறவர்களிடத்தில் மாத்திரம் நமக்கு அனுதாபமுண்டு. அந்த அனுதாபம்கூட சிலரிடத்தில் இல்லை. ஆண்டவரது அனுதாபமோ மகா விசாலமானது. அது மனுக்குல முழுவதுக்கும் உரியது ஏனென்றால், அவர் அன்புக்குரியவர்களையும், தம்மை நேசிக்கிறவர்களையும் மாத்திரம் நேசியாமல் மனுஷ ரெல்லாரிடத்திலும் அன்புள்ளவராயிருக்கிறார். காட்டுப் புல்லிலுள்ள புஷ்பத்தைக் கண்டவுடன் முகமலர்ச்சியோடு அதை உற்று நோக்குவதும் ஒரு குருவி செத்துக்கிடந்தால் உடனே பிதாவின் சித்தத்தைச் சிந்திப்பதுமான அவ்வளவு நுட்பமான உணர்ச்சியுள்ளவர் அவர். மனுஷருடைய சந்தோஷமோ துக்கமோ உடனே அவர் இருதயத்தை தொட்டது. மனுமக்களுடைய துக்கத்தில் துக்கிக்கிறவரும் அவர்கள் சந்தோஷத்தில் சந்தோஷப்படுகிறவருமாயிருந்தார். ஒருவேளை நாம் துக்கப்படுகிறவர்களோடு துக்கப்பட்டாலும் சந்தோஷப் படுகிறவர்களோடு சந்தோஷபட மனம் வருகிறதில்லை. பிறர் மேன்மையடைவதும் சந்தோஷப்படுவதும் நமக்குப் பொறாமையாயிருக்கிறது. சீஷர்கள் சுபாவத்தில் தங்களுக்குள் வித்தியாசமுள்ளவர்களாயிருந்தும் அவர்களெல்லார்மீதும் ஆண்டவர் அனுதாபம் ஒன்று போலவே இருந்தது. அவருடைய விசாலமான அனுதாபம் நமக்கு வேண்டுமானால் மற்றவர்களை நமது உடன் சகோதரர் சகோதரிகளாகப் பாவிக்க வேண்டும். நம் தேசத்தில் மதப் பிரிவினைகளும் ஜாதிப்பிரிவினைகளும் இந்த விசாலமான அனுதாபத்துக்குப் பெருந்தடையாயிருக் கின்றன என்றபோதிலும் அவர்களை மனுஷராகப் பாவித்து நமது ஆண்டவரைப்போல் அனுதாபங்கொள்ளவேணும். கிறிஸ்தவர்களுக்குள்ளேயே இந்த அனுதாபமற்றிருப்பது மிகவும்

துக்கமான விஷயம். நாட்கள், ஸ்நானம், கொள்கைகளை முக்கியப்படுத்திப் பற்பல வகுப்புகளாக பிரிந்து ஒருவரையொருவர் வெறுப்பாய்ப் பார்ப்பது கிறிஸ்துவின் சிந்தைக்கு நேர் விரோதம். கிறிஸ்துவைப் பிரதானமாகப் பிடிக்காமல் கொள்கைகளை முக்கியப்படுத்தினதின் பலன் இது. ஆண்டவர் எல்லா மனுஷரிடத்திலும் அனுதாப முள்ளவராயிருந்தார். அவரோடு நெருங்கிப் பழகுவதாலும் அவர் நமது உள்ளத்தில் வசிப்பதாலும் அவருடைய விசாலமான அனுதாபம் நமக்கும் வரும்.

### 3. அவரது அனுதாபம் ஆழமானது

நாம் அனுதாபம் காண்பித்தபோதிலும் நமது அனுதாபம் ஆழமுள்ளதல்ல. துக்கவீட்டில் நமது கண்கலங்கினாலும், அழுகிறவர்களோடு நாம் அழுதாலும் வாசலுக்கு வெளியே வந்தவுடனே சகலத்தையும் மறந்து நமது காரியங்களைப் பேசுகிறோம். கால்கள் கல்லறையை நோக்கி நடந்தாலும் நமது எண்ணங்களெல்லாம் வேறே. நமது அனுதாபத்தில் ஆழமில்லை. நமக்கு அருமையானவர்களை கல்லறைக்கு எடுத்துச் சென்றால் நமது கண்ணீர் நிற்காது ஓடிக் கொண்டிருக்கும். மற்றவர்கள் விஷயத்தில் நமது இருதயம் உருகுகிறதில்லை. கொஞ்சம் துக்கம் காண்பிக்கிறோம். சீக்கிரத்தில் மறந்து விடுகிறோம். சுயநலம் மறந்து பிறர்நலம் தேடும் சிந்தை இன்னும் நமக்கு வரவில்லை. ஆகையால் நமது அனுதாபத்தில் ஆழமில்லை. ஆண்டவர் அனுதாபமோ ஆழமும் உண்மையும் நிலையுள்ளதுமாயிருக்கிறது. இதற்குக் காரணமென்ன? அவர்தாமே சகல பாடுகளையும் பட்டவராயிருந்தார். பசியோ, தரித்திரமோ, திகிலோ, பகையோ, பாடுகளோ, அவமானமோ, கொடிய மரணமோ சகலத்தையும் அனுபவத்தில் அறிந்தவர். ஆகையால் எல்லா மனுஷருக்காகவும் அனுதாபப்படக்கூடியவராயிருக்கிறார். அவமானப்பட்டவனே அவமானப்பட்டவனுக்காக அனுதாபப் படுவான். பசி பட்டினி அறிந்தவனோ பசியுள்ளவனுக்காக அனுதாபப்படுவான் நோயாயிருந்தவனே நோயாளிக்காகப் பரிதபிப்பான். ஐசுவரியவான் பணத்தை சகாயமாக அனுப்பிவிட்டு சும்மாயிருப்பான். ஆனால் தரித்திரனோ ஏழைகளுக்காகப் பரிதபிப்பான். பெற்றாரே பெற்றாரின் கவலைகளை அறிவார்கள். வாலிபர் விருத்தாப்பியருக்கு உற்சாகமாய் உதவி செய்யலாம். ஆனால் விருத்தாப்பிய

முள்ளவரே விருத்தாப்பியருக்காக அனுதாபப்படக்கூடியவர். வயது சென்றவர்கள் தோழர்களாகச் சேர்ந்துகொள்வதை நாம் கண்டிருக்கிறோம். மரண வீட்டில் யாரும் பொதுவாய் துக்கப்படுவார்கள். ஆகிலும் தங்களுக்கு அருமையான மனைவி மக்களைச் சாகக் கொடுத்தவர்கள்தான் உள்ளபடி அனுதாபக் கண்ணீர் சிந்தக் கூடும். அன்புள்ள ரட்சகர் நமக்காக பட்டபாடுகள் கொஞ்சமல்ல. எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாடுபட்டதால் பாடுபடும் ம்க்களுக்காக அனுதாபப்படவும் உதவி செய்யவும் வல்லவராயிருக்கிறார். நமக்கு அனுதாபமிருந்தாலும் அந்த அனுதாப அளவுக்குத்தக்கதாக உதவி செய்யும் சக்தி நமக்கில்லை. ஏழைகளுக்காகப் பரிதபிக்கிறோம். ஆனால் அவர்கள் குறைவை நீக்க முடியாதவர்களாய் இருக்கிறோம். நோயாளிகளுக்காகப் பரிதபிக்கிறோம்; அவர்களைப் பிழைக்க வைக்கக் கூடாதவர்களாயிருக்கிறோம். நமது ஆண்டவருக்கு அனுதாபமும் வல்லமையும் உண்டு. பசித்தோருக்காகப் பரிதபித்து உடனே அவர்களைப் போஷித்தார். கல்லறையண்டை கண்ணீர்விட்டு உடனே லாசருவை எழுப்பினார். நமது காரியங்களிலும் ஆண்டவர் அதுபோலவே நடந்து கொள்ளுகிறார். அவருக்கொப்பான அனுதாபமுள்ள நேசர் நமக்கு யாருண்டு?

## 85. ரட்சிப்பாவது என்ன?

**"இழந்து போனதைத் தேடவும் ரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக். 19:10).**

ஆண்டவர் வாயிலிருந்து பிறந்த இந்தக் கிருபையுள்ள வார்த்தைகள் சத்துருக்களுக்காக அவர் கொடுத்த மறுமொழியாகும். சகேயு அவரைப் பார்க்க விரும்பினான். ஆண்டவரோ அவன் விரும்பினதிலும் மேலான ஆசீர்வாதத்தை அவனுக்குக் கொடுத்தார். சகேயுவே, நீ என்னைப் பார்ப்பது போதாது. நான் இன்றைக்கு உன் வீட்டிலேயே தங்கப் போகிறேன் என்று அவனோடுகூடப் போனார். அதைக் கண்டவர்கள்: ஆகா, இவர் பாவியின் வீட்டிலே தங்கும்படி போகிறாரே என்று அவரைக் குற்றப்படுத்திப் பேசினார்கள். அவரை இன்னாரென்று அவர்கள் அறியாததே இந்த

முறுமுறுப்புக்குக் காரணம். ஆண்டவர் அவர்களைப் பார்த்து: நான் காணாமற்போனதைத் தேடவும் ரட்சிக்கவுமே வந்திருக்கிறேன்; ஆகையால் நான் பாவியை ஏற்றுக்கொண்டது சரிதான் என்றார். வசனத்தில் மூன்று காரியங்களைக் காண்கிறோம். பாவியின் நிலைமை, ஆண்டவர் செய்த வேலை, பாவியின் ரட்சிப்பு.

### 1. பாவியின் நிலைமை

"இழந்து போனதை" என்கிறார். பாவத்தால் மனுஷன் கடவுளை இழந்தான். கடவுளும் மனுஷனை இழந்தார். அவன் உண்டாக்கப்பட்ட நிலைமை ஆசீர்வாதமானது. அதில் கடவுளே அவனுக்குள் ஜீவன், ஞானம், ஒளி, பலம், நீதி, பரிசுத்தம் சகலமுமாயிருந்தார். அவன் அவரையே முற்றிலும் சார்ந்து பிழைத்தான். அவர் சித்தமே அவன் சித்தம், அவர் மகிமையே அவன் மகிமை. இவ்வாறு பிதாவாகிய கடவுளும் மகனாகிய மனுஷனும் பூரண அன்பிலும் ஐக்கியத்திலும் இணைக்கப் பெற்றிருந்தார்கள். சாத்தானுடைய வஞ்சமான வார்த்தைக்குச் செவிகொடுத்ததும், மனுஷன் கடவுளை இழந்தான். இந்தப் பிரிவே பாவமாயிற்று. மனுஷரிடம் காணப்படும் தீய செயல்களை நாம் பாவங்கள் என்று பேசுகிறோம். கடவுளை விட்டு இருதயம் பிரிந்ததே பாவம். மற்றத் தீய செயல்கள் யாவும் இந்தப் பிரிவின் பலனேயாகும். இவ்வாறு மனுஷன் கடவுளை இழந்து, அவருக்கு அந்நியனாகி, துர்க்கிரியையினால் மனதிலே சத்துருவானான். ஆகவே பாவியின் நிலைமை காணாமற்போன நிலமை. காணாமற்போனவர்களைத் தேடி இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்தார்.

கடவுளுக்கு மனுஷன் காணாமற்போகக் கூடுமா? ஆடு காணாமற்போனது சரி. மேய்ப்பனுக்கு ஆடு எங்கேயிருக்கிறது என்பது தெரியாது. ஆட்டுக்கும் மேய்ப்பன் இருக்கிற இடம் தெரியாது. வெள்ளிக்காசு காணாமற்போனது சரி, வெள்ளிக்காசு எங்கே கிடக்கிறதென்பது அந்த ஸ்திரீக்குத் தெரியாது. மனுஷன் கடவுளுக்குக் காணாமற்போகக் கூடுமோ? அவர் எங்கும் இருக்கிறாரே, எல்லாரையும் காண்கிறாரே, அவர் ஆவிக்கு மறைவாக எங்கே ஓடலாம்? அவர் சமுகத்தை விட்டு எங்கே போகலாம்? எங்கெங்கே போனாலும் அங்கங்கெல்லாம் அவர் இருக்கிறாரே. அப்படியானால்

மனுஷன் கடவுளுக்கு எப்படி காணாமல் போகக்கூடும்? ஒரு வீட்டிலிருக்கும் இருவர் ஒருவரையொருவர் பார்த்து ஒன்றாய்க் குடியிருந்தாலும் அவர்கள் இருதயம் வேறுபட்டு, ஒருவரிலொருவர் அன்பற்று பேச்சற்று இருப்பார்களானால் அவர்கள் ஒருவருக்கொருவர் காணாமற்போனவர்களே. ஒரு அறையில் வசிக்கும் உபாத்திமார் ஒருவரோடொருவர் பேசாமல், முகத்தைப் பாராமல் தன் தன் மட்டில் காரியங்களை நடத்திக் கொண்டு போவார்களானால் அவர்கள் ஒரே அறையில் குடியிருந்தும் ஒருவருக்கொருவர் அந்நியரே. இதுவே கடவுளுக்கு நாம் காணாமற்போன கருத்து. அவருக்கும் நமக்கும் அன்பில்லை, ஐக்கியமில்லை, சம்பாஷணையில்லை. அவர் யாரோ? நாம் யாரோ? பாவத்தாலுண்டான பிரிவினை இது. கடவுள் நம்மை இழந்தார். நாம் கடவுளை இழந்தோம்.

பிள்ளையை இழந்த தாய் அதைக் கண்டுபிடிக்க வாஞ்சிப்பதுபோலும், தாயை இழந்த பிள்ளை தாயைக் காணத் தவிப்பதுபோலவும் கடவுளைக் காண நமக்குள் தாகமுண்டு. "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும். அது எங்களுக்குப் போதும்" என்று பிலிப்பு கேட்டது மனுமக்கள் உள்ளான தாகத்தைக் காட்டுகிறது. ஆனால் மனுஷனோ ஜீவதண்ணீராகிய கடவுளை விட்டுவிட்டு, தாகந் தீர்க்கமுடியாத நிலத்திலும், பொருளிலும், கல்வி உத்தியோகத்திலும், கண்காட்சி வேடிக்கைகளிலும் தன் முழு ஆசையைச் செலுத்துகிறான். உள்ளான தாகம் கடவுளால் மாத்திரம் தீருமென்பதை அறியாமல் எத்தனையோ தண்ணீர்களைப் பானம் பண்ணுகிறான். இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

### 2. ஆண்டவர் செய்த வேலை

காணாமற்போன மனுஷனைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. காணாமற்போன ஆட்டைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். ஆடு பேதைமையுள்ளது. நாம் ஆடு போன்ற மிருகமல்ல. காணாமற்போன வெள்ளிக்காசை அந்த ஸ்திரீ ஜாக்கிரதையாய்த் தேடி கண்டுபிடிக்க வேண்டும். வெள்ளிக்காசு தானாக வராது. நாம் வெள்ளிபோன்ற உலோகமல்ல. மேய்ப்பன் ஆட்டைத் தேடிக்கண்டு பிடித்தான். ஸ்திரீ காசைத் தேடிக் கண்டுபிடித்தாள். தகப்பனோ மகனைத் தேடி தூரதேசம் போய் அவனைத் தூக்கிக்கொண்டு

வரவில்லை. ஆனால் அவன் மகன் போன திசையை நோக்கினவனாய், மகன் திரும்பி வரமாட்டானாவென்று எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான். மகன், பட்ட கஷ்டங்களால் உணர்வடைந்து, புத்தி தெளிந்து, தகப்பன் அன்பையும், ஐசுவரியத்தையும், வேலைக்காரனையும் மேன்மையான சாப்பாட்டையும் தான் பசியினால் ஒடுங்கிச் சாவதையும் தானே யோசித்துத் தானே எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடம் வந்தான். இதுவே ஆசீர்வாதமான மனந்திரும்புதல். இருதயத்தில் மாறாதவன் சரீரத்தைப்பிடித்து பலவந்தமாய் வீட்டுக்குக் கொண்டு வந்தாலும் அவன் வீட்டிலும் தகப்பனுக்கு அந்நியனாகவேயிருப்பான். அன்புள்ள பிதா நம்மிடத்தில் நடந்து கொள்வதும் இது போலவே. நாமே உணர்ந்து தம்மிடம் வரவேண்டும் என்று விரும்புகிறார். நமக்குள் உணர்வுண்டாக்கதக்க காரியங்களை அவர் தமது குமாரனைக் கொண்டு செய்திருக்கிறார். அவைகளை கிறிஸ்துவில் காண்கிறோம்.

அவர் இழந்து போனதைத் தேடிவந்த ஆண்டவர். அவர் நம்மைக் கண்டுபிடிக்கும்படி அதாவது நாம் பிதாவைக் கண்டடையும்படி செய்த காரியங்கள் எவை? அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். மகா தரித்திரமான மனுஷனாக வெளிப்பட்டார். பிதாவின் அன்பை உபதேசத்தால் காண்பித்தார். இடைவிடாமல் நன்மைசெய்து மனுமக்களைத் தேற்றினார். பாவத்தை ஏற்றுக்கொண்டு படாத பாடுபட்டு மரித்தார். வெற்றியாய் உயிர்த்தெழுந்து, மகிமையில் பிரவேசித்து, ஆவியைப் பொழிந்தருளினார். நாம் பிதாவைக் கண்டடையும்படி அவர் நிறைவேற்றின கிரியைகள் இவைகளே. இதுவே அவர் இழந்துபோனதைத் தேடின விதம். பாவத்திலிருக்கும் மனுஷனைப் பலவந்தமாய்த் தூக்கிப் பிதாவிடம் சேர்ப்பதல்ல. குமாரனில் நமக்காகப் பிதா நிறைவேற்றின கிரியைகளை நாம் அறிந்து உணர்ந்து, புத்தி தெளிந்து, பாவவழியை விட்டு மனந்திரும்பி நாமாகப் பிதாவிடம் போகவேண்டு மென்பதே தேவசித்தம். பிதாவை குமாரனில் காண்கிறோம். கிறிஸ்துவை நாம் அறியும்போது பிதாவை அறிகிறோம். கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளும் போது பிதாவை ஏற்றுக்கொள்ளுகிறோம். கிறிஸ்துவோடு ஐக்கியப்படும்போது பிதாவோடு ஐக்கியப்படுகிறோம்.

இழந்துபோன மனுஷனை பிதா பெந்தெகொஸ்தே நாளிலே கண்டுபிடித்தார். ஆவியானவர் அவர்களை நிரப்பினபோது கிறிஸ்துவும் அவர்களுக்குள் வந்தார். குமாரன் வந்தபோதே பிதாவும் வந்தார். இவ்வாறு கடவுள் மனுஷனைக் கண்டடைந்தார். மனுஷனும் கடவுளைக் கண்டடைந்தான். தேவ ஐக்கியம் திரும்பவும் ஏற்பட்டது. தேவசித்தம் செய்யப்பட்டது.

### 3. பாவியின் இரட்சிப்பு

கடவுள் மனுஷனைக் கண்டடைவதும், மனுஷன் கடவுளைக் கண்டடைவதுமே இரட்சிப்பு. ஞானஸ்நானம் பெறுவதும், சபையில் சேருவதும், ஆராதனைக்குப் போவதும் நல்லகாரியமே. இதுவே கிறிஸ்துமார்க்கமல்ல. கிறிஸ்தவர் களல்லாதிருந்தும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலும் உலகத் திலுள்ளவைகளிலும் ஆழமாய் அமிழ்ந்து கொண்டு, இவைகளுக்காகவே பிரதானமாய் நீண்ட ஜெபம் செய்து, முடிக்கப்போகும்போது “கடைசியில் எங்களை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்” என்று ஜெபிக்கிறவர்கள் ஆவிக்குரிய காரியங்களை அறிந்தவர்களல்ல. காலமெல்லாம் பாவ மன்னிப்பு கேட்டுக்கொண்டிருப்பதே ரட்சிப்பின் முடிவான நோக்கமல்ல. எங்கே பாவத்தை உணருகிறோமோ அப்போது மன்னிப்பு கேட்பது பரிசுத்தவான்களும் செய்ய வேண்டிய காரியமாகும். ஆனால் காலமெல்லாம் பாவமன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தால் மேலான ஆசீர்வாதங்களை நாம் காண்பதெப்போ? ரட்சிப்பின் முடிவான நோக்கம் அதுவல்ல.

ஆடு மேய்ப்பனுக்குச் சொந்தமாவதே ஆட்டுக்கு இரட்சிப்பு. வெள்ளிக்காசு ஸ்திரீக்குச்சொந்தமாவதே காசுக்கு இரட்சிப்பு. கெட்ட குமாரன் மறுபடியும் தகப்பனுக்குச் சொந்தமாகி, வீட்டின் நன்மைகளை அனுபவிப்பதே அவனுக்கு இரட்சிப்பு. நாம் பிதாவுக்குச் சொந்தமும் பிதா நமக்குச் சொந்தமுமாகி, அவருடைய அன்பின் ஐக்கியத்தில் நாம் இடைவிடாது பிழைப்பதே நமக்கு இரட்சிப்பு. ஆராதனைகளில் உண்டாகும் பரவசமல்ல, ஜெபக்கூட்டங்களின் உற்சாகமல்ல, நம்மை முழுவதுமாய் பிதாவுக்கு ஒப்புவித்து அவர் சித்தப்படிப் பிழைப்பதே ரட்சிப்பு. அவரால் பராமரிக்கப்பட்டு ஒவ்வொரு காரியத்திலும் அவரால் நடத்தப்படுவதே ரட்சிப்பு.

"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று சொல்லக்கூடிய அனுபவமே இரட்சிப்பு. பிதாவோடு நம்மை ஐக்கியப்படுத்தவே கிறிஸ்து மரித்தார். "கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி நமது பாவங்களுக்காக பாடுபட்டு மரித்தார்" *(1 பேதுரு 3:18)*. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் ஐக்கியத்தில் பிழைக்கும்போது நமது ஜீவியம் முற்றிலும் மாறும். கிறிஸ்துவின் சிந்தை நமக்குண்டாகாவிட்டால் நாம் கிறிஸ்தவர்கள் அல்ல. ஆண்டவர் சகல இரகசியங்களையும் அறிந்திருக்கிறார். நமக்காக ஒருவனும் அவரிடம் சிபாரிசு செய்யவேண்டியதில்லை. நமது புறம்பான மார்க்க ஆசாரங்களை கொண்டாட்டங்களாலே அவரை ஏமாற்ற முடியாது. ஒருவனுடைய இருதயம் எத்தன்மையுள்ளதென்பது அவருக்குத் தெரியும்.

சகேயு ரட்சிக்கப்பட்டான். "இன்றைக்கு இந்த வீட்டுக்கு ரட்சிப்பு வந்தது" என்று சொன்னார். அவன் பழைய ஜீவியத்திலேயே அவனை இரட்சித்தாரோ? அநியாயம், லஞ்சம், பொருள் மயக்கம் என்னும் அவன் பாவங்களில் நிலைத்திருக்கும்படி ரட்சித்தாரோ? அல்ல. சகேயு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருக்குச் சொந்தமானான். அவன் முழு ஜீவியமும் நிமிடத்தில் மாறிற்று. அவன் அறிக்கை எவ்வளவு உண்மை! "ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்." என்றான். இது உண்மைதான் என்பதை ஆண்டவர் அறிந்தார். ஆகையால் அவனுக்கு இரட்சிப்பைக் கூறினார். நமது ஜீவியத்தை மாற்றாத இரட்சிப்பு இரட்சிப்பல்ல. சகலவிதமான பாவங்களையும் நடப்பித்துக் கொண்டு, நாமும் கடவுள் பிள்ளைகள்தாம் என்று நினைப்பது மோசம். நாம் ஆண்டவருக்குச் சொந்தமானால் அவர் நமக்குள் வசித்து நம்மை ஆசீர்வதிக்காதிருக்கமாட்டார். ஆண்டவர் நமக்குச் சொந்தமாயிருப்பது நமக்கு எவ்வளவு ஆறுதல்! கெட்ட குமாரனைத் தகப்பன் கண்டடைந்தது தகப்பனுக்கு அளவில்லாத சந்தோஷமும், மகனுக்கு அளவில்லாத ஆசீர்வாதமுமாக இருந்தது. நமது அனுபவமென்ன?

# 86. மகதலேனா மரியாள்

***"ஏழு பிசாசுகள் நீங்கின. மகதலேனா என்னப்பட்ட மரியாள்" (லூக். 8:2).***

மகதலேனா என்னும் பேரை ஆதிமுதல் துர்ப்பிரயோகம் செய்திருக்கிறார்கள். கெட்டுப்போன பெண்களைச் சேர்த்து பராமரிக்கும் இடத்துக்கு மகதலேனா மடம் என்று பேர். இது என்ன அநியாயம்! மகதலேனா என்பது ஸ்திரீயின் பெயராயிராமல் அவள் ஊரின் பெயராயிருந்தது. அவள் மக்தலா என்னும் ஊரிலிருந்த ஸ்திரீ. அவள் பேரோ மரியாள். அவளை ஏழு பிசாசுகள் பிடித்திருந்ததேயல்லாமல் அவள் ஊரைப் பிடிக்கவில்லை. பாவத்திலிருந்து மீட்கப்படும் ஸ்திரீகள் வசிக்கும் சாலைக்கு மரியாளிருந்த ஊரைப் பேரிடுவது, காரியம் அறியாதவர்கள் செய்கையாகும். அவளையே மகதலேனா என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் அதற்கு ஆதாரமில்லை. அவளை மாத்திரமல்ல. அவள் ஊரில் வசித்த ரபிமாரையும், மகதலேனா ரபிகள் என்று அழைப்பார்கள். மேலும் இந்த மரியாள் துன்மார்க்கமான ஸ்திரீ என்பதற்கும் ஆதாரமில்லை. அவளைப்பற்றி வாசிக்கிற இடங்களில் ஒரே காரிய மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. "ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனா மரியாள்" இது தவிர அவள் முன்னிலைமையைக் குறித்து ஒன்றும் சொல்லப் படவில்லை. ஆண்டவர் மக்தலாவின் எல்லைகளுக்குப் போனதுண்டு (மத். 15:39). அவர் அவளை அங்கேதான் சந்தித்தாரோ அல்லது வேறிடத்தில் சந்தித்தாரோ தெரியாது. ஒன்று நிச்சயம். அவர் அவளை எங்கேயோ சந்தித்து அவளை ஆண்டு கொண்டிருந்த ஏழு பிசாசுகளைத் துரத்தினார். அவள் அச்சமயம் ஆண்டவரோடு என்ன பேசினாள் என்றாவது, அவர் அவளோடு என்ன பேசினார் என்றாவது நமக்குத் தெரியாது. கிறிஸ்து அடியாருக்குள் அவள் விசேஷித்த சாட்சியாயிருந்தாள் என்பதை பின்னுள்ள சரித்திரத்தால் அறிகிறோம்.

### 1. அவள் பழைய நிலைமை

ஏழு பிசாசுகள் அவளை ஆண்டுகொண்டிருந்தன. அவள் ஊராகிய மக்தலா திபேரியாவுக்கு வடக்கே மூன்று மைல்கள் தூரத்தில் உள்ளது. அது கெட்டிச் சாயத்திற்கும் அழகிய

கம்பளிச் சால்வைகள் செய்வதற்கும் விசேஷித்த இடம். வியாபாரச் செழிப்போடு பொல்லாப்புக்கும் அது உறைவிடம். சூழ்ந்துள்ள மலைக்கெபிகளில் தேன் மிகுதி. அத்தோடு கள்ளரும் அங்கே தங்குவார்கள். மரியாளைப் பிசாசுகள் எவ்விதமாய் ஆண்டுகொண்டதென்று தெரியவில்லை. அவள் பிசாசு பிடித்தவள் என்பதை துன்மார்க்கமான பாவங்களைச் செய்தவளென்று அருத்தப்படுத்துவார்கள். முந்தின ஏழாம் அதிகாரத்தில் வருகிற பாவியான ஸ்திரீயே இவள் என்பார்கள். அவள் காரியம் வேறே; இவள் காரியம் வேறே. அவள் பட்டணத்துப் பாவி என்று அறியப்பட்டவள். அவள் அநேக பாவங்கள் செய்தவள். சீமோன் வீட்டுக்கு வந்து ஆண்டவருக்குப் பரிமள தைலம் பூசி பாதத்தருகே நின்று அழுதாள். ஆண்டவர் அவள் பாவங்களை மன்னித்து சமாதானம் அருளியனுப்பினார். அது ஏழாம் அதிகாரத்தோடு முடிந்தது. மகதலேனா மரியாளைக் குறித்தோ சுவிசேஷகர் ஏகவாக்காய் "ஏழு பிசாசுகள் நீங்கின மரியாள்" என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள். எட்டாம் அதிகாரத்தை ஆரம்பிக்கிற லூக்கா, ஆண்டவருக்குப் பரிமளதைலம் பூசி பாவமன்னிப்புப் பெற்றவள் இவளே என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

மேலும் அவள் பிசாசுகள் பிடித்திருந்ததால்தாலே துன்மார்க்கமான ஸ்திரீயாயிருந்தாள் என்று நாம் சொல்லக் கூடாது. பிசாசுகள் மனுஷரை ஆண்டுகொள்ளும் போது பல குறிப்புகள் அவர்களில் காணப்படும். பொல்லாத ஆவிகள் நமது புத்தி சித்தம் ஆவியைக் கெடுக்கக்கூடும். மூர்க்கமான காரியங்களைச்செய்யும்படி ஏவக்கூடும். லேகியோன் துன்மார்க்கப் பாவங்களைச் செய்யவில்லை. ஆனால் அவன் மகா குரூரமான காரியங்களைச் செய்தான். சாத்தான் நோய்களால் நம்மை வாதிக்கக் கூடும். கூனியாயிருக்கிறவளைப் பிசாசு பிடித்தவள் என்று நாம் சொல்லுவோமா? ஆண்டவர் அந்தக் கூனியான ஸ்திரீயைக் குறித்து: பதினெட்டு வருஷம் சாத்தானால் கட்டப்பட்டவள் என்றார். சந்திரரோகமுள்ள சிறுவனிடத்தில் வந்து அசுத்த ஆவியைத் துரத்தி அவனைக் குணமாக்கினார். அசுத்த ஆவி மனுஷர் புத்தியைக் கெடுத்து பைத்தியக்காரராக்குகிறது. பிசாசின் கிரியைகள் பலவிதம். அவன் சிலரை லேசாய், சிலரைக் கொஞ்சமாய், சிலரை அதிகமாய், சிலரை முழுவதுமாய் ஆண்டுகொண்டு

அலைக்கழிக்கிறான். ஆவிக்குரிய பார்வையுள்ளவர்கள் அதைக் காண்பார்கள். மரியாளை அலைக்கழித்தது பைத்தியமோ, காக்காய் வலிப்போ, வேறு நோயோ, குரூரமோ, சரீர இச்சைகளோ நமக்குத் தெரியாது. பைத்தியக்காரர் தங்கள் செய்கைக்கு உத்திரவாதிகள் அல்ல. அவர்களை கோர்ட்டில் விசாரிக்கமாட்டார்கள். அதிகாரிகள் இவளை ஜெப ஆலயத்தை விட்டு நீக்கிவிட்டார்கள். ஊராரும் இவளை ஆகாதவளென்று தள்ளிவிட்டார்கள். கிருபையுள்ள ரட்சகரோ அவளைச் சேர்த்துக் கொண்டார்.

**2. ஆண்டவர் நடப்பித்த மாறுதல்**

கடவுள் கிரியை எப்போதும் முந்தினது. இதை நாம் உணருகிறதில்லை. நாம் அவரைப் பற்றிக்கொண்டது மெய்யானால் நாமே அவரைத் தேடிக் கண்டடைந்ததுபோல் பேசுகிறோம். அது சரியல்ல. அவர் நம்மைத் தொடுவதாலேயே நாம் அவருக்குச் சொந்தமாகிறோம். நாம் அவரை அறிவதும் அவருக்குச் சொந்தமாவதும் பிந்தி நடப்பதாயிருந்தாலும், அவர் முந்தி நம்மைத் தமக்குச் சொந்தமாய்க் குறித்துக் கொண்டாரென்பது நிச்சயம். அவர் நம்மைத் தமக்குப் பிரதிஷ்டையாக்கிக் கொள்ளுகிறார்; நாம் பிந்தி நம்மை அவருக்கு ஒப்புவிக்கிறோம். பவுல் சபைக்குச் சத்துருவாயிருக்கும்போதே ஆண்டவர் அவரைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். பவுலுக்கு இது தெரியாது. தமஸ்குப் பட்டணத்தில் அனனியா பவுலைச் சந்திக்கப் பயந்தபோது "பவுல் நான் தெரிந்து கொண்ட பாத்திரம்" என்று ஆண்டவர் சொன்னார். ஊழியத்தில் பிரவேசித்தபின் இதைப்பற்றி பவுல் யோசித்து: "என் தாயின் வயிற்றிலிருக்கும் போதே என்னைப் பிரித்து தமக்குச்சொந்த மாக்கின ஆண்டவர்!" என்கிறார். மகதலேனா மரியாள் காரியமும் இது போலவே. அந்த ஏழை ஸ்திரீ பிசாசுகளால் அவதிப்பட்டாலும் ஆண்டவர் அவளைத் தமக்கு ஊழியக்காரியாக்கும் நோக்கமாய் அவளை நினைவு கூர்ந்தார். அவளை ஏதோ ஓரிடத்தில் சந்தித்து அவள் பிசாசுகளை அகற்றிக் குணமாக்கினார். அவருடைய அனுதாபமும் வல்லமையும் அவள் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டது. அவரை விட்டுப் பிரிய அவளால் முடியவில்லை. தன்னைச் சொந்தமாக்கிக் கொண்ட ஆண்டவருக்கு தன்னை முழுவதுமாய் ஒப்புவித்தாள்.

இரும்பைக் காந்தம் இழுப்பது போல ஆண்டவர் அன்பு அவளை இழுத்துக் கொண்டது.

### 3. மகதலேனா மரியாள் கிறிஸ்துவின் அடியாள்

ஐந்து இடங்களில் அவளைக் காண்கிறோம்.

#### அ. அவள் செய்த திருப்பணிவிடை

ஆண்டவர் தமது சீஷருடனே பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம் பண்ணி ஊழியம் செய்து கொண்டு வந்தார். அவரால் நன்மைபெற்ற அநேகம் ஸ்தீரிகளும் அவரோடு சென்று அவருக்குப் பணிவிடை செய்தார்கள். அவர்களில் மகதலேனா மரியாள் ஒருத்தி. ஆண்டவர் நாசரேத்தை விட்டு வெறுங்கையாய் புறப்பட்டார். தலைசாய்க்க இடமற்ற தரித்திரனாயிருந்தார். பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி ஊழியம் செய்ய வேண்டுமானால் அவருக்கும் அவர் சீஷர்களுக்கும் போஷிப்பு வேண்டும். அவர் எங்கும் நடந்து ஓயாது வேலை செய்தபடியால் அவருக்குப் பராமரிப்பு மிகவும் அவசியம். அவரைத் தேடி வந்தவர்களும் உண்டு. அவர்களையும் போஷிக்க வேண்டும். செலவு அதிகம். அவரால் ஆசீர்வதிக்கப்பெற்ற அநேகம் ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் பணிவிடை செய்தார்கள். அவர் கலிலேயா யூதேயாவில் எங்கெங்கே போனாரோ அங்கெல்லாம் இவர்கள் கூடவே சென்று, அவரைப் போஷிக்கவும் அவருக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்யவும் உற்சாகமுள்ளவர்களா யிருந்தார்கள். சற்றும் சோர்ந்து போகாமல் தினந்தோறும் சாப்பாடு செய்து அவருக்குக் கொடுத்து அவர் சரீரத்தைப் பலப்படுத்தினார்கள். இவ்வாறு அவர்கள் அவரைப் போஷித்துக் களைப்பாற்றினதால் ஆண்டவர் தமது பலத்த ஆவிக்குரிய வேலைகளைச் செய்ய சக்தியுள்ளவராயிருந்தார். அவர்கள் பணிவிடை மாத்திரமல்ல, அவர்கள் தம்மோடு கூடயிருந்ததே ஆண்டவருக்கு எவ்வளவோ ஆறுதலாயிருந்தது. தேவதூதருக்கும் கிடைக்காத சிலாக்கியம் அவர்களுக்குக் கிடைத்தது. இந்த ஸ்திரீகள் பரம பிதாவின் வீட்டில் எவ்வளவோ கனத்தைப் பெற்றிருப்பார்கள். உலகத்தை

ரட்சிக்கும்படி வந்த தேவகுமாரனைப் போஷித்தும் பராமரிக்கும் கிருபை அவர்களுக்குக் கிடைத்ததே. இவர்களில் அதிக அன்பும் உற்சாகமும் காண்பித்தவள் மகதலேனா மரியாள்.

**ஆ. அவள் சிலுவையின் அடியில் நிற்கிறாள்**

ஆண்டவர் பிடிபட்டபோது சீஷர்கள் அவரை விட்டு ஓடிப்போனார்கள். மரியாளோ சிலுவையின் பக்கமாய் நிற்கிறாள். மத்தேயு, மாற்கு, லூக்கா மூவரும் அவள் சிலுவையின் அருகே நின்றதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆண்டவரில் அன்பு கூர்ந்து, அவரை விடாமல் பின்சென்று அவருக்குப் பணிவிடை செய்து, அவர் செய்த திரளான நன்மைகளைக் கண்ணால் கண்ட மரியாளுக்கு, அவர் சிலுவையில் தொங்கின பரிதாபமான காட்சி எப்படியிருந்திருக்கும்? அவருக்குப் பதிலாகத் தான் அறைபட்டிருந்தால் நல்லதே என்று நினைத்திருப்பாள். ஆண்டவர் தமது தாயாரைப் பார்த்துப் பேசின சமயத்தில் கூடநின்ற மகதலேனோ மரியாளையும் அவர் பார்த்தார். அவள் மனத்துயரங்களையும் எண்ணங்களையும் அறிந்திருப்பார். யோவான் இயேசுவின் தாயாரை அழைத்துச் சென்ற பின்பும் மகதலேனா மரியாள் அங்கேயே நின்றாள். அவர் அடக்கத்தைப் பார்க்க வேண்டுமென்பது அவள் ஆவல் என்பதை மாற்கு சொல்லுகிறார். யோசேப்பு அவர் சரீரத்தை அடக்கஞ் செய்யக் கொண்டு போனபோது இவளும் யோசேயின் தாய் மரியாளும் கூடவே போய் "அவரை வைத்த இடத்தைப் பார்த்தார்கள்' அடக்கத்தில் அவளும் சேர்ந்து தன் கடைசி மரியாதையை கண்ணீரோடு செய்து முடித்தாள்.

**இ. அவளைக் கல்லறையின் பக்கம் காண்கிறோம்**

மத்தேயு சொல்லுகிறபடி, முதல் ராத்திரி அவர் கல்லறைக்குக் காவல் இருந்ததில்லை. அதிகாரிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் மறுநாள் தான் காவல் வைத்தார்கள். அப்படியானால் முதல் ராத்திரி கல்லறையைக் காத்தது யார்? மகதலேனா மரியாளும் மற்ற மரியாளுமே. அவள் இரவெல்லாம் அங்கேயே இருந்தாள். ஆண்டவர் தன்னைச் சந்தித்து ரட்சித்த நாள் முதற்கொண்டு, தான் அவரைப் பின்சென்ற நாட்களையும், அவர் செய்த காருண்ய

கிரியைகளையும், கடைசியாகத் திடீரென அவர் சிலுவையில் மரித்ததையும் எண்ணி எண்ணி, மனம்நொந்து, அழுது கொண்டேயிருந்தாள். அவர் மரித்தபோது சீஷர்கள் நம்பிக்கை ஒழிந்தது. இராஜ்யத்தைப்பற்றி அவர் சொன்ன காரியங்கள் வீணாய்ப்போனதுபோல் அவர்களுக்குத் தோன்றிற்று. மரியாளின் நம்பிக்கையோ அழியவில்லை. இன்னும் தன் ஆண்டவரோடு ஒட்டிக் கொண்டிருக்கிறாள். அன்பு இருளின் பயத்தை மேற்கொண்டது. ஆண்டவர் மரித்து அவர் சரீரம் புதைக்கப்பட்டாலும், அவள் அவர்மீது வைத்த அன்போ மாறவில்லை. போர்ச்சேவகர் அந்த இடத்துக்கு வந்த பின்புதான் மரியாள் கல்லறையை விட்டுப் போனாள்.

### ஈ. ஆண்டவர் உயிர்த்தெழுதலில் அவளைக் காண்கிறோம்

மரியாள் கல்லறையை விட்டுப்போனதால் ஆண்டவரை மறந்தாள் என்று அருத்தமல்ல. ஏன் போனாள்? அவர் சரீரத்துக்குச் சுகந்தவர்க்கமிடும்படி அதை ஆயத்தஞ் செய்யப் போனாள். அவரை மறக்க அவளால் முடியாது. சிலுவையண்டை அவரையே நோக்கின கண்ணாய் நின்று, மரியாதையாய் அவர் சரீரத்தை அடக்கஞ் செய்து, இரவெல்லாம் கல்லறைக்கு எதிரே உட்கார்ந்திருந்து, வீட்டுக்குத் திரும்பி வாசனைத் திரவியம் சம்பாதித்து, அதிகாலையில் கல்லறையைத் தேடி வருகிறாள். கல் புரட்டப்பட்டிருக்கிறது. சரீரத்தையோ காணோம். சீஷர்களிடம் போய் அதை அறிவித்து மறுபடியும் கல்லறையண்டை வந்தாள். தேவதூதர் அவளைப் பார்த்து: அவர் இங்கே இல்லை, உயிர்த்தெழுந்தார் என்றார்கள். துக்கம் அதிகரித்தது. கண்ணீர் தாரைதாரையாக ஓடுகிறது. ஐயோ, என் ஆண்டவரை யாரோ எடுத்துக் கொண்டார்களே, ஐயா, தோட்டக்காரரே! நீர் எடுத்துக்கொண்டதுண்டானால் வைத்த இடத்தை எனக்குச் சொல்லமாட்டீரா? நான் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள். அந்தத் தோட்டக்காரரே ஆண்டவர். மரியாளே என்றார். இந்த ஒரே சொல் போதும். எத்தனை முறை மரியாளே என்று அவர் பட்சமாய்க் கூப்பிட்டிருப்பார். மரியாளே என்றதும் உடனே பாய்ந்து அவரைத் தாவிக் கட்டிப் பிடிக்கப்போனாள். என்னைத் தொடாதே, அதாவது என்னைப் பிடித்து வைத்துக் கொள்ள நினையாதே என்றார். தொடவே

வேண்டாம் என்பது ஆண்டவர் நோக்கமல்ல. பிந்தி ஸ்திரீகள் அவரைத் தொட்டார்கள். தோமாவைத் தம்மைத் தொடும்படி சொன்னார். மரியாளே நீ விரும்புகிறபடி அல்ல, அதிலும் மேலான ஐக்கியத்தில் நான் உன்னோடு இடைவிடாமலிருக்கும் நாள் வருகிறது. அதற்கு முன் என் பிதாவிடம் போக வேண்டும் என்றார். இன்னும் ஏழுதரம் பொறுத்துக்கொள். உன்னோடு மாத்திரமல்ல. உனக்குள்ளேயே நான் இருப்பதைக் காண்பாய் என்றார். அன்பருக்குத் தம்மை வெளிப்படுத்தும் ஆண்டவர், முதல் முதல் மகதலேனா மரியாளுக்கே தம்மை வெளிப்படுத்தினார். தாயார் மரியம்மாள் இல்லையா? அன்பின் சீஷன் யோவான் இல்லையா? சிரேஷ்டன் பேதுரு இல்லையா? மகதலேனா மரியாளுக்கல்லவோ இந்தப் பாக்கியம் கிடைத்தது.

**எ. பெந்தேகோஸ்தே நாளில் அவளைக் காண்கிறோம்**

“சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தபோது சில ஸ்திரீகளும் கூடயிருந்து ஆவியைப் பெற்றார்கள். ஆண்டவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து மகதலேனா மரியாளும் கட்டாயம் அவர்களோடு இருந்திருக்க வேண்டும். உயிர்த்தெழுந்த அன்பரை முதல் முதல் தரிசித்தவள் வேறு எங்கே போவாள்? அவளும் ஆவியினால் நிறைந்தாள். முன்னே ஏழு பிசாசுகளாலே நிறைந்திருந்தாள். அவைகளை ஆண்டவர் அவளைவிட்டு நீக்கினார். இப்போது ஏழு வரங்கள் உள்ள ஆவியானவரால் நிரப்பப்பட்டார். மற்றவர்களைப்போலவும் மற்றவர்களைப்பார்க்கிலும் தன்னை மீட்டு ரட்சித்த ஆண்டவருக்குப் பலத்த சாட்சியானாள். ஆவியின் நிறைவினாலே ஆண்டவர் வாக்குப்படி அவளுக்குள் வந்து வசித்தார். முன்னே அவரைப் போதகரே என்று அழைத்த மரியாள் இப்போது அவரை வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராக, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் உடையவராகக் கண்டு ஆனந்தித்தாள். தன்னோடும் தனக்குள்ளும் நிமிஷந்தோறும் இடைவிடாமல் வசித்து, தன்னை நடத்தும் கர்த்தாவாகக் கண்டாள். ஆண்டவர் அவளைத் தமக்குச் சொந்தமாக்கினதாலும், அவள் ஆண்டவருக்குத் தன்னைச் சமூலமாய் ஒப்புவித்ததாலும் உண்டான மாறுதல் எவ்வளவு அதிகம்!

# 87. எதுவரைக்கும் இருக்கும்?

**"பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே நீங்கள் நிந்தனையில் பிரியப்படவதும், மதியீனரே, நீங்கள் ஞானத்தை வெறுப்பதும் எதுவரைக்கும் இருக்கும்?" *(நீதி. 1:22).***

இப்படிக் கேட்பவர் ஞானம் என்னும் நாமமுடையவர். எட்டாம் அதிகாரத்தை வாசிப்போமானால் ஞானம் என்பவர் சொல்லுகிற அருமையான காரியங்களை அறியலாம். அதில் ஞானமாகிய ஆண்டவரை பிதாவாகிய கடவுள் தமது கிரியைகளுக்கும் ஆதியாகக் கொண்டிருந்தாரென்றும், சகலமும் சிருஷ்டிக்கப்படுமுன்னே ஆதிமுதற்கொண்டு அநாதியாய் அவர் அபிஷேகம் பண்ணப்பட்டவரென்றும், பிதாவின் அருகில் அவர் செல்லப்பிள்ளையாகவும் நித்தம் அவரது மனமகிழ்ச்சி யாகவுமிருந்து. அவர் சமுகத்தில் களிகூர்ந்ததாகவும் சொல்லுகிறார். இதற்கிசைய "உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று யோவானும் இவரைக் குறித்தே பேசுகிறார். பவுல் கிறிஸ்துவே அந்த ஞானம் என்கிறார். இந்த ஞானம் என்பவர் வழியருகேயுள்ள மேடைகள், நாற்சந்திகள், ஊர்வாசல்களின் ஓரங்கள், பட்டணத்தின் முகப்புகள், நடைகூடங்களில் நின்று சத்தமிட்டு மனுஷரைத் தம்மிடம் அழைப்பதாக எட்டாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இது சரியாய் நமது ஆண்டவர் மாமிசத்திலிருந்தபோது செய்த வேலையைக் காண்பிக்கிறது. அவரே மனுஷரைப் பார்த்து: "பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவதும், நிந்தனைக்காரரே, நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவதும், மதியீனரே நீங்கள் ஞானத்தை வெறுப்பதும் எதுவரைக்கும் இருக்கும்" என்று கேட்கிறார். ஞானமாகிய ஆண்டவர் தாம் செய்த வேலையை நிறுத்திவிடவில்லை. அவர் பூமியில் தொடங்கின வேலையை ஆவியின் மூலமாய் நடத்திக் கொண்டு போகிறார்.

## ஆண்டவர் மூன்று வகுப்பாரோடு பேசுகிறார்

அவர் கேட்கும் கேள்விகள் பரிசுத்தவான்களைப் பார்த்தல்ல. தேவனுடைய பிள்ளைகளைப் பார்த்தல்ல, அல்லது தங்கள் பாவங்களை உணர்ந்து ரட்சிக்கப்படும்படி விரும்பு

கிறவர்களைப் பார்த்துமல்ல. வித்தியாசமான மூன்று வகுப்பாரோடு பேசுகிறார்.

**1. பேதையர்களைப் பார்த்து**

பேதைகளே, நீங்கள் பேதைமையை விரும்புவது எதுவரைக்குமிருக்கும்? இவர்கள் நிர்விசாரிகள். ஒன்றைக் குறித்தும் கவலைப்படமாட்டார்கள். அவர்களுக்கு நன்மையும் தீமையும், சந்தோஷமும் துக்கமும் எல்லாம் ஒன்றுதான். ஆழமாய் யோசிக்கும் குணமில்லாததே காரணம். இது மிகவும் மோசமான நிலைமை. கிறிஸ்து இருக்கிறாரா? அவர் மரணத்தின் நோக்கமென்ன? அவருக்கும் தங்களுக்கும் சம்பந்தமுண்டா? ரட்சிப்பென்றால் என்ன? உலகவாழ்வு சதமா? உலகத்தை விட்டால் மறுமையில் பிரவேசிக்க ஆயத்தமா? இப்பேர்க்கொத்த கேள்விகள் அவர்கள் மனதில் உதிக்கிறதில்லை. சம்பாதிப்பதும் சாப்பிடுவதும் உறங்குவதுமே அவர்கள் தேகமெடுத்த நோக்கம். ஆவிக்குரிய காரியங்களில் கொடிய நிர்விசாரம். இவர்கள் பேதையர் மாத்திரமல்ல. ஆண்டவர் சொல்லுகிறபடி பேதைமையை விரும்புகிறவர் களாகவுமிருக்கிறார்கள். வீண்பேச்சு, வீண் காரியங்களில் விருப்பம். வெள்ளத்தோடு இழுப்புண்டு போகும் செத்த மீன்களைப்போல, உலகத்தால் பலவகையிலும் இழுப்புண்டு யாதொரு ஜீவிய நோக்கமின்றிக் காலந்தள்ளுகிறார்கள். இந்தப் பைத்தியக்காரக்குணம் எதுவரைக்கும் இருக்கும் என்பது ஆண்டவர் அவர்களைக் கேட்கும் கேள்வி.

**2. நிந்தனைக்காரரைப் பார்த்து**

நிந்தனைக்காரரே நீங்கள் நிந்தனையில் பிரியப்படுவது எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்கிறார். இவர்கள் கண்ணும் கருத்தும் பிறர் பேரிலேயே. அவர்கள் யார்? இவர்கள் யார்? அவர்கள் எங்கே போகிறார்கள்? இவர்கள் என்ன செய்கிறார்கள்? என்ன சம்பாதிக்கிறார்கள்? எப்படிச் சாப்பிடுகிறார்கள்? இவை போன்ற ஆராய்ச்சியே இவர்கள் சுபாவம். மற்றவர்கள் விஷயங்களைக் கவனிப்பதின் பலனாக அவர்கள் மேல் பொறாமை கொள்ளவும், அவதூறாகப் பேசவும், நிந்திக்கவும் இடமுண்டாகிறது. இதுவே சுபாவமாகிவிடும்போது யார் வழியே போனாலும், யாரைக் கண்டாலும் பரியாசமாய்ப் பேசாதிருக்க முடியாது. தங்கள் குறைகள் எவ்வளவோ இருந்தும் அவைகளைக் கொஞ்சமும்

உணராமல் பிறரிடம் குறை கண்டுபிடிப்பதும் தூற்றுவதும் இவர்கள் இயல்பு. இப்படிப்பட்டவர்கள் கடவுள் பார்வையில் அருவருப்பானவர்களும், ஆக்கினைக்குள்ளானவர்களுமா யிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை நிந்திப்பது மாத்திரமல்ல. அப்படிச் செய்வது அவர்களுக்குப் பிரிமாயிருக்கிறது என்று ஆண்டவர் சொல்லுகிறார். இந்த அருவருப்பான குணம் எதுவரைக்கும் இருக்கும் என்பது ஆண்டவர் கேள்வி.

### 3. மதியீனரைப் பார்த்து

மதியீனரே நீங்கள் ஞானத்தை வெறுப்பது எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்கிறார். அறிவே ஞானம். ஞானம் என்பவர் கிறிஸ்து. உலகத்தின் ஐசுவரியமெல்லாம் ஞானத்துக்கு ஈடாகாது. உலகத்தின் கல்வியெல்லாம் கிறிஸ்துவை அறிகிற அறிவுக்கு நிகராகாது. ஆண்டவராகிய கிறிஸ்துவை அறிவது நித்திய ஜீவன். சகல நித்திய ஆசீர்வாதங்களும் அவரிலுண்டு. இதை அறிந்த பவுல்: "என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுகிறேன்" என்றார். "நம்முடைய கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வாருங்கள்" என்றார். (2பேதுரு 3:18). மதியீனரோ ஞானத்தை வெறுக்கிறார்கள். ஜீவனுக்கேதுவான அறிவை வெறுத்து, அழிவுக்கேதுவான மதியீனத்தில் நிலைத்திருக்கிறார்கள். இது எதுவரைக்கும் இருக்கும் என்பது ஆண்டவர் கேள்வி.

## இப்படிக் கேட்பதற்கு நியாயங்கள்

### 1. நாம் ரட்சிக்கப்படும்படி ஆண்டவர் எல்லாவற்றையும் செய்திருக்கிறாரே

கடவுள் நம்மைப் பேதைமை, நிந்தனை, மதியீனமாகிய பொல்லாப்பில் விட்டுவிடவில்லை. தமது கிருபையையும் அன்பையும் தமது குமாரன் மூலமாய் சிலுவையில் வெளிப்படுத்தி, நாம் அவரது இலவசமான ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி வருந்தி அழைக்கிறார். நமது பாவங்கள் மன்னிக்கப்படவும், கடவுளோடு நாம் ஒப்புரவாகி, பிதாவும் பிள்ளைகளுமாக நாம் பிழைக்கும்படி கிறிஸ்து மரித்திருக்கிறார். அவர் தமது ஆவியை நமக்கருளி நமது ஜீவியத்தைப் புதுப்பிக்கச் சித்தமாயிருக்கிறார். இப்படியெல்லா

மிருக்க, பேதைமையிலும், நிந்தனையிலும், மதியீனத்திலும் நாம் நிலைத்திருப்பது சரியா?

**2. காலங்கடத்துவது இருதய கடினம் என்பது நிச்சயமே**

பாவத்தின் வஞ்சகம் மனதைக் கடினப்படுத்தும். நாட்கள் ஆக, ஆக, நாம் பாவத்திலே நீடித்திருக்கும்போது. ஓர் காலத்திலிருந்த உணர்ச்சி நீங்கிப்போம். எத்தனை பிரசங்கங் களைக் கேட்டாலும், யார் எச்சரித்தாலும் கொஞ்சமும் உணர்வுண்டாகாது. ஆவிக்குரிய காரியங்கள் வெறுப்பாகும். பாவத்தின் வஞ்சகத்தால் கடினப்பட்டுப் போகக் கூடாதென்றும் வேதம் எச்சரிக்கிறது. இதை அறிந்துதான் ஆண்டவர் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்கிறார்.

**3. நமது காலம் அவர் கரத்திலிருப்பதாலே**

நம்மை உலகத்தில் அனுப்பினவர் அவர். நம்மை அழைப்பவரும் அவர். அவர் ஒருவருக்கே நமது முடிவு தெரியும். நாமோ இங்கே சதாகாலமிருப்பவர்களைப்போல பாவ வழியில் நடக்கிறோம். ஜீவாதிபதி நம்மைப் பார்த்து: மனுஷரே, உங்கள் ஜீவன் என் கரத்தில் அல்லவோ இருக்கிறது. நீங்களே உங்கள் ஜீவனுக்கு அதிகாரிகள்போல நிர்விசாரமாய் பிழைப்பதென்ன? திடீரென நான் உங்களை அழைத்தால் உங்கள் கதி என்னவாகும் என்கிறார்.

**4. முடிவு பயங்கரமே**

அவர் கூப்பிட்டும் செவி கொடாதவர்களைப் பயங்கரமாய் எச்சரிக்கிறார். நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள். நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையை யெல்லாம் நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத்தீர்கள். ஆகையால் நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படும் காரியங்கள் வரும்போது ஆகடியம் பண்ணுவேன். நீங்கள் கூப்பிடாமலும், மறு உத்தரவு கொடேன், நீங்கள் தேடினாலும் என்னைக் காணமாட்டீர்கள். என் ஆலோசனையை நீங்கள் வெறுத்தீர்கள். ஆகையால் உங்கள் கேடான வழியின் பலனைப் புசிப்பீர்கள். உங்கள் மாறுபாடு உங்களைக் கொல்லும். உங்கள் நிர்விசாரம் உங்களை அழிக்கும் என்கிறார். ***(நீதி. 1:24–32).***

### அவரிடம் திரும்புவதின் பலன்

"என் கடிந்து கொள்ளுதலுக்குத் திரும்புங்கள், இதோ, என் ஆவியை உங்களுக்கு அருளுவேன். என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன். எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்" (வச. 23,33). அவர் நமது நிர்விசாரத்தினிமித்தம் நம்மை எச்சரித்து, வரும் அழிவை கூறினபோதிலும், நமது அழிவை அவர் விரும்புகிறவரல்ல. ஆகையால் நாம் நமது பொல்லாத வழிகளை விட்டு அவரிடம் திரும்பும்படியாகவும், அப்படித் திரும்பும்போது அவர் நம்மை ரட்சித்து, தமது பிள்ளைகளாக்கி, சகல ஆசீர்வாதங்களாலும் நம்மை நிரப்புவதாகச் சொல்லுகிறார். தீர்மானிக்க வேண்டியது நமது கடமை. பழைய பொல்லாத வழியிலேதான் நிலைத்திருப்போமோ? அல்லது அன்புள்ள பிதாவிடம் திரும்பி அவர் கிருபையைப் பெற்றுக் கொள்ளுவோமோ?

# 88. உத்தமனான காலேப்

***"என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்ளு வார்கள்?" (எண். 14:24).***

இஸ்ரவேல் புத்திரர் ஏறக்குறைய ஒருவருஷம் சீனாய் மலையோரம் பாளையமிறங்கியிருந்து, பின்பு அதைவிட்டுப் புறப்பட்டு, கர்த்தரால் நடத்தப்பட்டு காதேஸ்பர்னேயாவுக்கு வந்தார்கள். கானான் தேசம் சமீபமாயிருந்ததால் கர்த்தர் உத்தரவுப்படி மோசே அங்கிருந்து பன்னிரண்டு கோத்திரங்களி லிருந்தும் பன்னிரண்டு பிரபுக்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் போய் தேசத்திலுள்ள சகல காரியங்களையும் விவரமாய்த் தெரிந்து கொண்டு வரும்படி அனுப்பினார். அவர்களில் யோசுவாவும் காலேபும் இருவர். பிரபுக்கள் போய் தேசத்தைச் சுற்றிப்பார்த்து நாற்பது நாட்களுக்குப்பின் திரும்பிவந்து சமாச்சாரத்தை ஜனங்களுக்கு அறிவித்தார்கள். தேசம் மகா செழிப்புள்ளதென்று சொல்லித் தாங்கள்

கொண்டுவந்த கனிவர்க்கங்களையும் காண்பித்தார்கள். ஆனால் அது இராட்சதர் குடியிருக்கிற தேசம், அவர்களோடு எதிர்க்க நம்மால் முடியாது. அவர்கள் பார்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகள். நாம் அங்கே போனால் அவர்கள் நம்மைப் பட்சித்துவிடுவார்கள் என்றார்கள். இவைகளைக் கேட்டவுடனே ஜனங்கள் அழ ஆரம்பித்தார்கள். நாம் மறுபடியும் எகிப்திற்குத் திரும்பிவிடுவதே சரி அல்லது இந்த வனாந்தரத்திலே மடிவதே சரியென்று எல்லாரும் முறுமுறுத்தார்கள். அச்சமயத்தில் காலேப் முன்வந்து: அப்படியல்ல. நீங்கள் கலங்கவேண்டாம். நாம் உடனே போய் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்து விடலாம். அவர்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு அகன்றது. கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்றார். இவ்வளவுதான், ஜனங்கள் கற்களை எடுத்துக் கொண்டார்கள். உடனே கர்த்தருடைய மகிமை காணப்பட்டு அவர்கள் பொல்லாப்பைத் தடுத்தது. இந்த முறுமுறுப்பின் நிமித்தம் உடனே சுதந்தரிக்க வேண்டிய தேசத்தை நாற்பது வருஷங்கழித்துப் பிரவேசிக்க வேண்டியதாயிற்று. எகிப்திலிருந்து பிள்ளைகள் தவிர ஆறுலட்சம் புருஷர் புறப்பட்டவர்கள். இவர்களில் யோசுவாவும் காலேபுமாகிய இரண்டுபேர்தான் கானான் தேசத்தில் பிரவேசித்தார்கள். மற்றெல்லாரும் வனாந்தரத்தில் அழிந்தார்கள். அவர்கள் பிள்ளைகள் தேசத்தைச் சுதந்தரித்தார்கள். காலேப் கொடுத்த நல்லறிக்கையினிமித்தம் கடவுள் அவருக்குச் சிறப்பான சுதந்தரத்தை வாக்குப் பண்ணினார். நாற்பது வருடங்களுக்குப்பின் காலேப் அதைச் சுதந்தரித்துக் கொண்டார். இதுவே சரித்திர சுருக்கம்.

### 1. காலேபின் தேவ பக்தி

கர்த்தர் மோசேயைப் பார்த்து : "என் தாசனாகிய காலேப் உத்தமாய் என்னைப் பின்பற்றி வந்தவன்" என்கிறார். காலேப் தானும் பிற்காலத்தில் யோசுவாவைப் பார்த்து: "நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்" என்கிறார். நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை கடவுள் அறிவார், நாமும் அறிவோம். கடவுளும் நாமும் அறியாத பக்தியில்லை. முரட்டாட்டமும் கலகக்குணமும் சகலவித பாவங்களும் நிறைந்த ஜனங்கள் மத்தியிலிருந்தவர் காலேப்.

அவர் லேசாய் கெட்டுப்போகக்கூடிய சோதனைகளை அவரைச் சூழ்ந்து நெருங்கின. தம்மோடிருந்த மனுஷருடைய குணம், அவர்கள் பேச்சு, அவர்கள் செய்கை முழுவதும் கேடுபாடுள்ளதாயிருந்தன. காலேபும் அவர்களோடுதான் காலமெல்லாம் இருந்தார். ஆனாலும் அவர் காரியம் வேறே. அதரிசனமான கடவுளைத் தரிசிக்கிறவர்போல் நடந்தார். எகிப்தின் கொடுமையிலிருந்து தங்களை விடுவித்தவல்ல கர்த்தரை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. மற்றவர்களுக்கு நேரிட்ட கஷ்டங்களே அவருக்கும் இருந்தன. மற்றவர்கள் வனாந்தரத்தில் அலைந்ததுபோலவே அவரும் அலைந்தார். என்றாலும் கடவுள்மீதுள்ள பக்தி கொஞ்சமும் குறையவில்லை. தமது தனி ஜெபம் தியானங்கள் மூலமாய் கடவுளோடு அந்நியோன்னியமாய் பிழைத்தார். அவர் இருதயம் கடவுளை இடைவிடாமல் வாஞ்சித்தது. யாதொரு முறுமுறுப்போ, அவநம்பிக்கையோயின்றிச் சகலவிஷயங்களிலும் கடவுள் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்தார். அவருக்கு வயசு ஆக ஆக அவரது தேவபக்தியும் வளர்ந்துகொண்டே போனது. ஆகையால் கர்த்தர்: “என் தாசனாகிய காலேப் உத்தமமாய் என்னைப்பின்பற்றி வந்தவன்” என்று பகிரங்கமாய் சாட்சி பகர்ந்து எல்லா ஜனங்களுக்கு முன்பாக அவரை மேன்மைப்படுத்தினார்.

**2. காலேபின் விசுவாசம்**

தேசத்தைப் பார்த்து வரப்போயிருந்தவர்களுடைய பார்வை வேறேதான்; காலேபின் பார்வை வேறேதான். அவர்கள் தேசத்தைப் பார்த்துப் பிரமித்தார்கள். அரணிப்பான பட்டணங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். தேசத்து ஜனங்களைக் கண்டு அவர்கள் பலவான்களென்று அஞ்சினாாகள். கனி விருட்சங்களைக்கண்டு வாய் ஊறினார்கள். மொத்தத்தில் அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான் என்று ஒத்துக்கொண்டார்கள். அத்தேசத்தை தங்களுக்குக் கொடுப்பதாக வாக்குப்பண்ணின கடவுளை மறந்தார்கள். எல்லாம் அவர்கள் பார்வையும் அவர்கள் எண்ணமுமாகவே இருந்தன. அவர்கள் எண்ணத்தில் கடவுள் இல்லை. அவர்கள் தேசத்தைப்பற்றிப் பொய்யான அறிக்கை கொடுத்தார்கள் என்பதல்ல அவர்கள் குற்றம். தேசத்தின்

காரியங்களைப்பற்றி காலேப் சொன்னதுபோலவே அவர்களும் சொன்னார்கள். அறிக்கையில் அவர்களுக்கும் காலேபுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் அவர்கள் அங்குள்ள பெரிய பட்டணங்களையும் இராட்சதர்களையும் மாத்திரம் கண்டார்களே அன்றி தங்களுக்கு அந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்று சொன்ன வல்லமையும் உண்மையுமுள்ள ஆண்டவரை முற்றிலும் மறந்தார்கள். காலேபோ, கடவுள் பக்தனானதால் அவர் அதிசயமான நடத்துதலை உணர்ந்தவராதலால் கொஞ்சமும் அலையாமல் நாம் உடனே போய் தேசத்தை லேசாய்க் சுதந்தரித்துக் கொள்ளலாம் என்றார். இதற்குக் காரணம் அவர் விசுவாசமே. கண்களுக்குக் காணப்பட்ட பெரிய அரண்கள், இராட்சதர்களைப் பார்க்கிலும் கடவுள் அவர் மனக்கண்களுக்குப் பிரத்தியட்சமாகக் காணப்பட்டார். தேசத்தின் பலத்த காரியங்கள் கடவுளுக்கும் தனக்கும் இடையில் வர அவர் இடங்கொடுக்கவில்லை. கடவுளைக் கொண்டு அவைகளைப் பார்த்தார். இதுவே அவர் விசுவாச வெற்றிக்குக் காரணம்.

### 3. காலேபின் தைரியம்

"நாம் உடனே போய் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவோம். ஜனங்களுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள்" என்று அவர் இந்த சமயத்தில் சொன்னது மாத்திரமல்ல, இன்னும் நாற்பத்தைந்து வருஷங்களுக்குப் பின்னும் இதே தைரியம் அவரில் விளங்கினது. ஜனங்கள் முறுமுறுப்பினிமித்தம் உத்தமனாகிய காலேபும் சங்கடப்பட்டார். தேசத்தில் உடனே பிரவேசிக்காமல் முறுமுறுத்தவர்கள் யாவரும் சாகும்வரை, கர்த்தர் நாற்பது வருஷகாலமாய் அவர்களை வனாந்தரத்தில் அலைந்து திரியும்படி செய்தார். காலேபும் கூடவே அலைந்து திரிந்தார். ஆகிலும் கடவுளுக்கு விரோதமாய் அவர் முறுமுறுத்தவரல்ல. அவருடைய பக்தியும் நம்பிக்கையும் வரவர வளர்ந்து கொண்டே போயின. அதனாலேதான் கர்த்தர்: "என் தாசனாகிய காலேப் உத்தமமாய் என்னைப்பின்பற்றி வந்தான்" என்று சாட்சி பகர்ந்தார். அவர் விசுவாசம் வளர்ந்தது போலவே அவர் தைரியம் வளர்ந்தது. தேசத்தைப் பங்கிடும் காலம் வந்தபோது அவர் யோசுவாவைப் பார்த்து: "தேசத்தை வேவு பார்க்க கர்த்தரின் தாசனாகிய மோசே என்னை

காதேஸ்பர்னேயாவிலிருந்து அனுப்புகிறபோது எனக்கு நாற்பது வயதாயிருந்தது. என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறு செய்திகொண்டு வந்தேன். அந்நாளிலே மோசே: நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியால் உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் சுதந்தரமாயிருக்கக்கடவது என்று சொல்லி ஆணையிட்டார். இப்போதும் இதோ கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார். கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருடமாயிற்று. இதோ இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது. யுத்தத்திற்கும் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பலம் இப்போதும் எனக்கு இருக்கிறது என்றார் *(யோசு. 14:7–11)*. "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பலன் அடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்".

## 4. காலேபின் சுதந்தரம்

எபிரோன் அவருக்குச் சொந்தமாயிற்று. கானான் தேசத்தில் மனுஷர் பொதுவாய் விரும்பத்தக்க பல இடங்களுண்டு. அவைகளை விட்டு விட்டு மலை நாடாகிய எபிரோனை காலேப் விரும்பினார். தேவன் அவருக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணின இடமும் அதுவே. அது அரணான பட்டணங்கள் உள்ள தேசம். பலவான்களான ராட்சதர்கள் சஞ்சரித்த இடம். உயிர்போனாலும் தங்கள் தேசத்தை விடமாட்டார்கள். அப்படியிருந்தும் எண்பத்தைந்து வயதுள்ள காலேப் அந்த நாட்டையே தனக்குக் கொடுக்கும்படி கேட்கிறார். "கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும். அங்கே ஏனோக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான். அப்பொழுது யோசுவா எப்புன்னேயின் குமாரனான காலேபை ஆசீர்வதித்து எபிரோனை அவனுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான். காலேப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியால் இந்நாள் மட்டும் இருக்கிறபடி

எபிரோன் அவனுக்குச் சுதந்தரமாயிற்று" (யோசு. 14:12–14). தேசத்தைச் சுதந்தரித்த இஸ்ரவேல் கோத்திரங்களில் காலேப் மாத்திரம் தாம் சுதந்தரித்த நாட்டிலுள்ள ஜனங்களை முற்றிலும் துரத்தினவர். மற்றவர்களைக் குறித்து: அவர்களால் துரத்த முடியவில்லை என்று திரும்பத் திரும்ப வாசிக்கின்றோம். இதற்குக் காரணம் காலேபுக்கு இருந்த பலத்த விசுவாசமும் தைரியமும் அவர்களுக்கில்லை. கர்த்தர் காலேபோடு கூடயிருந்து பூரண ஜெயத்தைக் கொடுத்தார்.

எபிரோன்மேல் காலேபுக்கு ஆசையிருந்ததை அறிந்த தேவன் அவர் விரும்பின நாட்டையே அவருக்குத் தந்தார். இதிலும் காலேபுடைய தேவபக்தி விளங்குகிறது. மனுஷன் விரும்பத்தக்க செழிப்பான பாகங்கள் பலவிருந்தன. அவைகளை நாடாமல் எபிரோனை தெரிந்து கொண்டதன் காரணமென்ன? விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் கர்த்தரால் நடத்தப்பட்டு எபிரோனுக்கு வந்து அங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினார். அங்கே ஆபிரகாமை கர்த்தர் தரிசித்து அவரோடே பேசினார். சாராள், ஆபிரகாம், ஈசாக்கு, ரெபேக்காள், யாக்கோபு, லேயாள் என்ற முற்பிதாக்களின் சரீரங்கள் எபிரோனில் புதைக்கப்பட்டன. தேவபக்தியுள்ள காலேப் தேவபக்தர்களான முற்பிதாக்கள் அடக்கமான நாட்டை விரும்பினதும் ஆவிக்குரிய லட்சணமே. தம்மில் அன்புள்ளவர்கள் விரும்பும் காரியங்களை கொடுக்கும் கடவுள், காலேப் விரும்பின நாட்டையே அவருக்கும் அவர் சந்ததிக்கும் கொடுத்தார். நாம் உத்தமமாய் பரமபிதாவுக்கு ஊழியஞ் செய்யும்போது அவர் நம்மையும் நமது பிள்ளைகளையும் ஆசீர்வதிக்கிறார். பூரணமாய் அவரைப் பின்பற்றுதல் பூரண வெற்றியை நமக்குக் கொடுக்கும்.

## 89. குருட்டாட்டம்

**"கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" (2 இரா. 6:17).**

சீரியாவின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய்ப் பலமுறை படையெடுத்தான். எலிசாவினால் எச்சரிக்கப்பெற்று இஸ்ரவேல் ராஜா சீரியாவின் கையில்

அகப்படவில்லை. என் காரியங்களை இஸ்ரவேல் ராஜாவுக்கு அறிவிக்கிறவன் யாரென்று சீரியா ராஜா கேட்டான். எலிசா என்றார்கள். அவன் எங்கேயிருக்கிறான் என்று கேட்டான். அவன் தோத்தானில் இருப்பதாக அறிவித்தார்கள். உடனே அவன் எலிசாவுக்கு விரோதமாகத் தன் சேனையை அனுப்பினான். அவர்கள் இராக்காலத்தில் வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள். அதிகாலையில் எழுந்த எலிசாவின் வேலைக்காரன், இராணுவம், குதிரைகள், இரதங்கள் பட்டணத்தைச் சூழ்ந்து கொண்டதைக் கண்டு பயந்து, எலிசாவைப் பார்த்து: "ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்?" என்றான். அதற்கு எலிசா: "பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக் கிறவர்கள் அதிகம்" என்றான். அச்சமயத்தில் எலிசா ஜெபம்பண்ணி, "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" கர்த்தர் அவன் கண்களைத் திறந்தார். இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளும் இரதங்களும் மலையைச் சூழ்ந்திருப்பதை வேலைக்காரன் கண்டான். இதுவே சரித்திரச் சுருக்கம். இதிலிருந்து சில குருட்டாட்டங்களைப் பார்ப்போம்.

### 1. மெய்பொருளைக் காணக்கூடாத குருட்டாட்டம்

எலிசா தைரியமாயிருந்ததற்கும் வேலைக்காரன் பயந்து நடுங்கினதற்கும் காரணம் என்ன? எலிசா கண்டவைகளை வேலைக்காரன் காணவில்லை. கர்த்தர் அவன் கண்களைத் திறந்தபோதுதான் கண்டான். இதனாலே வேலைக்காரன் கண்களின் பார்வை கூர்மையற்றவன் அல்ல. சொல்ல வேண்டுமானால் தோத்தானிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் அவன் கூர்மையான பார்வையுள்ளவன். என்ன பார்வை? உலகப் பார்வை. உலகத்திலுள்ள காரியங்களைக் கூர்மையாகப் பார்த்தான். ஆவிக்குரிய மேலான உண்மையான காரியங்களையோ காணக்கூடாத குருடனாயிருந்தான். எலிசா ஜெபித்தபோது தான் அந்தப் பார்வை அவனுக்குக் கிடைத்தது.

தேவசமுகம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. நாம் அவருக்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். கடவுள் அன்பு உலகத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. நாம் அந்த அன்புக்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். தேவகிருபை

நம்மைச் சூழ்ந்திருக்கிறது. நாம் அதற்குள் இருக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம். தேவபலம் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. தேவசேனை நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இவைகளை நாம் காண்பதில்லை. நாம் வெயிலில் போகும்போது அதன் உஷ்ணத்தை உணருகிறோம். நாம் குளிரில் போகும்போது அதன் குளிர்ச்சியை உணருகிறோம். நாம் புயல்காற்றில் நடக்கும்போது அதன் பலத்தை உணருகிறோம். நாம் மல்லிகை ரோஜாத் தோட்டங்களில் உலாவும்போது அவைகளின் நறுமணத்தை முகருகிறோம். இவையாவும் நமக்கு எவ்வளவு நிச்சயமா யிருக்கின்றன! ஆனால் இவைகள் நமது சரீரசம்பந்தமான உணர்ச்சிகளே. நமது ஆவியைப்பற்றி என்ன? நமது மனக்கண்களுக்குப் பார்வையுண்டோ? அது தானே எலிசாவின் வேலைக்காரனுக்கு இல்லை. அவன் சீரியாவின் சேனையைத் திட்டமாய்க் கண்டதுபோல தன்னைச் சூழ்ந்திருக்கும் தேவசேனையை அவன் காணவில்லை. மாறி அழிந்து போகும் உலகக் கரியங்களை நாம் பார்க்கிறதுபோல, மாறாத, அழியாத நித்திய காரியங்களை நாம் பார்க்கிறதில்லை. கடவுளுக்கும் அவர் காரியங்களுக்கும் நாம் குருடராயிருக்கிறோம். நமக்கு ஆவிக்குரிய பார்வையில்லை. ஆவிக்குரிய பார்வையுள்ள தாவீது : தேவனே, உமது ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உமது சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் எங்கெங்கே போனாலும் அங்கெல்லாம் நீர் இருக்கிறீர் என்றார். கடவுள் நம்மைச் சூழ்ந்திருக்கிறார். ஆண்டவர் உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடுகூடவே இருக்கிறார். அவர் இருந்தும் நமக்குப் பிரயோஜனப் படவில்லை. ஏனென்றால் நமது ஆவிக்குரிய கண்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஆண்டவர் நமது கண்களைத் திறக்க வேண்டும்.

இந்தக் குருட்டாட்டத்துக்குக் காரணமென்ன? "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்கள் மனதைக் குருடாக்கினான்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். **(2கொரி. 4:4)**. "இருளானது அவன் கண்களைக் குருடாக்கினது" என்று யோவானும் சொல்லுகிறார். **(1 யோவா. 2:11)**. "குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்கள்" என்று ஆண்டவரும் சொன்னார். கண் பார்வையுள்ளவர்களையே ஆண்டவர் குருடர் என்று

அழைக்கிறார். இது பாவக்குருட்டாட்டம். சாத்தான் அந்தகார அதிபதி. அவன் தன் பாவத்தால் மனுஷருடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்கிப் போடுகிறான். அவர்கள் காண்கிறோம் என்று நினைத்தாலும் தேவபார்வையில் எலிசாவின் வேலைக் காரனைப்போல குருடர்களே, உலகத்தின் காரியங்களைக் கூர்மையாகக் காண்கிறார்கள். காணப்படுகிறவைகள் சரீரத்தோடு சம்பந்தப்பட்டவைகளாதலால் அவைகள் நமது கவனத்தை முழுமையாய் ஆண்டுகொள்ளுகின்றன. இவைகள் பிரத்தியட்சமாய்க் காணப்படுவதுபோல ஆவிக்குரிய நித்திய காரியங்கள் காணப்படுவதில்லை. நமது சந்தோஷமும் துக்கமும் இம்மையைப்பற்றினதாகவேயிருக்கின்றன. கிறிஸ்து நம்மோடிருந்தும் அவரை நாம் காண்பதில்லை. நமது வீட்டில் குடும்பத்தோடு பேசிக்கொண்டிருக்கும்போது, காலியாயிருக்கும் ஓர் நாற்காலியில் திடீரென இயேசு தோன்றி, ஒவ்வொருவர் சுகத்தையும் விசாரித்து மறுபடியும் மறைந்து விடுவாரானால் நாம் என்ன பேசுவோம்? ஆண்டவர் திடீரென வந்தார். மறுபடியும் போய்விட்டாரே என்போம். ஆனால் அவர் வரவுமில்லை, போகவுமில்லை. அங்கேதானே இருந்தார், அங்கேதான் இருக்கிறார் என்ற உண்மையை நாம் அறியவில்லையே. ஆண்டவர் நமது கண்களைத் திறக்க வேண்டும். நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆவிக்குரிய காரியங்களைக் காண பிரகாசமான மனக் கண்களை ஆண்டவர் அருளுவாராக.

### 2. ஆசீர்வதமான குருட்டாட்டம்

கடவுள் மக்களுக்கு இந்தக் குருட்டாட்டம் உண்டு. நம்மை நாம் அறியோம். பிறப்பு முதல் கடைசிவரை நமது ஜீவியத்தின் வரலாறுகள் நமக்கு மறைவு. எல்லாம் தெரிந்தால் நல்லதே என்று நினைப்போம். தங்கள் வருங்கால விஷயங்களை அறியும்படி மனுஷர் எவ்வளவோ துடிக்கிறார்கள். இதையறிந்து ஜோதிடர்களும் பெருகினார்கள். தன்னையறியக் கூடாத மனுஷன் பிறர் காரியங்களை அறிவதெப்படி? நமது காரியங்களை மனுஷன் வெளிப்படுத்தக்கூடுமானால் கடவுள் என்னத்துக்கு? ஜோதிடத்தின் நோக்கம் பொருள் சம்பாதிப்பதல்லவா? நாளை நடப்பது நமக்குத் தெரியாது. பரமபிதா தம்மை நம்பியிருக்கும் பிள்ளைகளைப் படிப்படியாய் நடத்துகிறார். நாம் சகலத்தையும் அறியக்கூடுமானால் கடவுள் நடத்துதல் நமக்கு அவசியமில்லை. "என் தாசனையல்லாமல்

குருடன் யார்? உத்தமனையல்லாமல் குருடன் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனையல்லாமல் குருடன் யார்?" கடவுள் தமது பிள்ளைகளைப்பற்றிச் சொல்லும் வார்த்தைகள் இவைகள். தங்களைச் சிருஷ்டித்து மீட்டுக்கொண்ட பிதா தங்கள் காரியங்களை அறிந்திருக்கிறாரென்றும், அவர் தமது சித்தப்படி தங்களை நடத்துகிறாரென்றும் அறிவார்கள். வருங்காரியங்களைப்பற்றி அவர்களிடம் கேட்டால் தெரியாதென்று சொல்லுவார்கள். அதைப்பற்றி அவர்கள் கவலைப்பட்டுக் கலங்குவதுமில்லை. இதுவே ஆசீர்வாதமான குருட்டாட்டம்.

இது எப்படி ஆசீர்வாதம்? கண்தெரியாத குருடன் கண்பார்வையுள்ள ஒருவனைத் தன் வழிகாட்டியாக நம்பியிருக்கிறதுபோல, இவர்களும் தங்கள் காரியங்களை முதலிலிருந்து கடைசிவரை அறிந்திருக்கிற பரமபிதாவை நம்பிப் பிழைக்கிறார்கள். நாங்கள் காண்கிறோம், எங்கள் காரியங்களை நடத்திக்கொள்ள எங்களுக்குத் தெரியும் என்று இவர்கள் சொல்லாமல், தங்கள் அறியாமையை உணர்ந்து சகல காரியங்களையும் பிதாவின் கரத்தில் ஒப்புவித்து அவர் சித்தத்தின்படி பிழைக்கிறார்கள். அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால் அவர் அவர்களை நடத்துகிறார். இதைக் குறித்து : "குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதையிலே அழைத்து வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கோணலைச் செவ்வையுமாக்குவேன்" என்கிறார். (ஏசா. **42:16**). இந்த ஆசீர்வாதமான நடத்துதலைப் பரிசேயர் விரும்பவில்லை. நாங்கள் காண்கிறோம். எங்களை நடத்திக் கொள்ள எங்களுக்குத் தெரியும் என்றார்கள். "நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; காண்கிறோம் என்று நீங்கள் சொல்லுகிறபடியால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" என்றார்.

### 3. மோசமான குருட்டாட்டம்

எலிசாவைத் தேடிவந்த சீரியர் சேனைக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி அவர் ஜெபித்தார். அவர்களுக்கு கண்மயக்கம் உண்டாயிற்று. எலிசா அவர்களைப் பார்த்து, இது வழியுமல்ல, பட்டணமுமல்ல. நீங்கள் தேடுகிற மனுஷனை உங்களுக்குக் காட்டுகிறேன். நீங்கள் மாத்திரம் என் பின்னே வாருங்கள் என்று சொல்லி, அவர்களைச் சமாரியாவின் மத்தியில்

கொண்டு வந்து நிறுத்தி: ஆண்டவரே இவர்கள் கண்களைத் திறந்தருளும் என்றார். ஆண்டவர் அவர்கள் கண்களைத் திறந்தார். பட்டணத்தில் மத்தியில் தாங்கள் நிற்பதைக்கண்டு பிரமித்துப் போனார்கள். இஸ்ரவேலின் ராஜா எலிசாவைப் பார்த்து: என் தகப்பனே இவர்களை வெட்டிப்போடலாமா என்று கேட்டான். எலிசா அந்த எண்ணத்தைத் தடுத்து அவர்களைத் திருப்தியாய் உபசரிக்கும்படி செய்தான். அவர்கள் பயமடைந்து சீரியாவுக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். அப்புறம் ஒருபோதும் வரவில்லை. இதுபோலவே லோத்துக்குத் தீங்கு செய்யும்படி நெருங்கின சோதோம் பட்டணத்தாருக்கும் குருட்டாட்டம் உண்டாகி அலைந்து அலைந்து தவித்துப் போனார்கள். கிறிஸ்துவின் சபையை அழிக்க முயன்ற சவுலை கர்த்தர் சந்தித்தபோது கீழே விழுந்து மூன்று நாட்கள் கண்பார்வை இழந்தார். அவர் அப்போஸ்தலனாகி ஊழியஞ் செய்த காலத்தில் செர்கியு பவுல் என்னும் அதிபதிக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அந்த அதிபதியோடிருந்த மாயவித்தைக் காரனான எலிமா என்பவன் பவுலோடு எதிர்த்து நின்றார். பவுல் ஆவியில் நிறைந்து அவனைக் கடிந்துகொண்டு: நீ சிலகாலம் சூரியனைக் காணாமல் குருடனாய் இருப்பாய் என்றார். உடனே அவன் கண்கள் இருளடைந்து, அவன் தள்ளாடினான்.

கடவுளுக்கு விரோதமாகவும் அவர் பிள்ளைகளுக்கு விரோதமாகவும் எழும்புகிறவர்கள் கண்கள் அந்தகாரப்பட்டு, தேவமக்கள் கைகளிலேயே சிக்கிக் கொள்ளுகிறார்கள்.

# 90. ஏற்றகாலத்தில் அறுப்பு

**"நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருப் போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" (கலா. 6:9).**

கிறிஸ்தவ ஜீவியமும் ஊழியமும் எளிதான காரியமல்ல. நாம் கடவுளையும் பரலோக மகிமைகளையும் கண்ணாலே பார்த்துப் பிழைக்கிறவர்கள் அல்ல. முதலிலிருந்து கடைசி வரை நமது பிழைப்பு விசுவாசமே. விசுவாசம் என்று சொல்லும்போது, நாம் நம்பிக்கொண்டே போக வேண்டியதுதான். இம்மையில் காணப்போகிறது ஒன்றமில்லை

என்று அர்த்தமல்ல. விசுவாசத்தின் மூலமாய் ஆண்டவரைத் தரிசித்து, அவருடைய ஆசீர்வாதங்களைப்பெற்று, அந்த அனுபவ நிச்சயத்தாலேயே ஊழியம் செய்கிறோம். ஆனால் இந்த அருமையான விசுவாச ஜீவியத்துக்கு இடையூறுகள் வரும். இடையூறுகளால் மனச் சோர்வும் தளர்ச்சியும் உண்டாகும். இதை அறிந்துதான் அப்போஸ்தலன் நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகக் கூடாதென்றும், நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்பது நிச்சயம் என்றும் சொல்லி நம்மைத் தைரியப்படுத்துகிறார்.

### 1. அறுப்பு

"நாம் ஏற்றகாலத்தில் அறுப்போம்" அறுப்பாவது என்ன? பாடுகளின் பலனே அறுப்பாகும். அப்போஸ்தலன் இங்கே சொல்லுகிறபடி அறுப்பு உடனே நடப்பதல்ல. நமது ஜீவியத்தின் ஆசீர்வாதங்களே; நாம் செய்யும் பற்பல முயற்சிகளின் பலனை இங்கேயே நாம் காணலாம். கிறிஸ்துவுக்குள்ளான ரட்சிப்பின் ஆசீர்வாதங்களை இங்கேயே அனுபவிக்கிறோம். அப்போஸ்தலன் வசனத்தில் நமது சொந்த ரட்சிப்பையல்ல, கிறிஸ்துவின் பாடுகளுக்கு முடிவாகக் கிடைக்கும் பலனைப் பற்றியே அறுப்பு என்று பேசுகிறார். ஆண்டவர் தாமும் அறுப்பு யுகத்தின் முடிவு என்று சொன்னார். ராஜ்யத்தின் பிள்ளைகளாகிய நாம் பிதாவுக்கு உடன் ஊழியராயிருந்து வேலை செய்து வருகிறோம். முடிவாக வெளிப்படப்போகிற பலனே நமது நோக்கமாயிருக்கவேண்டும். "பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்; நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள், கர்த்தரின் வருகை சமீபம்" என்று யாக்கோபு சொல்லுகிறார். (யாக். 5:7,8). யுகத்தின் முடிவில் வெளிப்படும் அறுப்பின் பலனை எதிர்பார்த்து, சமுசாரியைப்போல நாமும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். கடவுள் எதிர்பார்க்கும் முடிவான அறுப்பின் பலன் பூமியின் நற்பலன் என்பது யாக்கோபின் கருத்து. இதற்காகவே ஆண்டவர் பாடுபட்டார். நற்பலனைக் காண்போம் என்கிற நிச்சயம் பிதாவுக்கு உண்டு. அதே நிச்சயம் நமக்கும் இருக்கவேண்டும். அந்த நிச்சயமே நமது ஜீவியத்திலும் ஊழியத்திலும் உண்டாகும் சோர்வை நீக்கத்தக்கது. இந்த நம்பிக்கையே நமக்குப் பொறுமையைத் தருகிறது. கடவுள்

நிச்சயமாகவே வெற்றியடைவார். அவர் தீர்மானம் நிறைவேறும். பூமி தன் நற்பலனைத் தரும். தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். பூமியில் அவர் ராஜ்யம் வரும். அவர் சித்தம் செய்யப்படும். எங்கும் தேவமகிமை விளங்கும். சகலமும் புதிதாக்கப்படும். நாமும் புதிதாக்கப் படுவோம். "தேவசாயலின்படி தேவரூபத்தின்படி மனுஷனை உண்டாக்குவோம்" என்று அவர் ஆதியில் சொன்ன சொல் அந்நாளில் நிறைவேறும். பாவமும் சாபமும் நீங்கும். இதுவே பரமபிதாவும் நாமும் சேர்ந்து அடையப்போகிற நற்பலனாகிய அறுப்பு. எல்லா உலகங்களிலும் நாம் வசிக்கும் பூமி மிகச் சிறியதே. ஆகிலும் இந்த பூமி மூலமாகத்தான் மற்ற உலகங்களுக்கு கடவுள் செய்த அனாதி தீர்மானம் வெளிப்படும். நாம் சோர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் இந்த மேன்மையான அறுப்பைக் காண்போம்.

## 2. அறுப்புக்கு ஆதாரமான விதைப்பு

நன்மை செய்வதே. "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருப்போமாக" சமுசாரி எதிர்பார்க்கும் நற்பலன் அவன்செய்யும் கஷ்டமான வேலையைப் பொறுத்திருக்கிறது. அவன் முயற்சியின்றி அறுப்பில்லை. அவன் பாடுபட்டு வேலைசெய்யாவிட்டால் பலனுக்காகக் காத்திருப்பது பரியாசமாகும். உலகச் சிருஷ்டிப்பிலும் பாவிகள் ரட்சிப்பாகிய மறு சிருஷ்டிப்பிலும் பரம பிதா நிறைவேற்றின முயற்சி கொஞ்சமல்ல. அவர் பாடுபடாமல் நற்பலனை எதிர்பார்ப்பவ ரல்ல. "என் பிதா இது வரைக்கும் கிரியை செய்கிறார். நானும் கிரியை செய்கிறேன்" என்றார். ஆண்டவர் செய்ததும் செய்து வருகிறதுமான வேலையின் நோக்கமென்ன? பாவத்தால் விளைந்த சகல கேடுகளும் நீங்கி, மனுமக்களுக்கு ஆசீர்வாதமும் பாக்கியமுமான காலம் வரும் என்ற நம்பிக்கையே. "அவர் தமது ஆத்ம வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியடைவார்" என்பது நிச்சயம். அவர் தீர்மானத்தைத் தடுக்கக்கூடிய வல்லமை இல்லை. அவரோடு நாமும் சேர்ந்து நற்பலனைக் காணவேண்டுமனால், இப்போது அவரோடு சேர்ந்து உழைக்க வேண்டும். சமுசாரி வானமழையை எதிர்பார்த்து, நிலத்தை உழுது பாடுபடுகிறான். மழை வருமென்று பொறுமையோடு காத்திருக்கிறான். உடனே பலன் இல்லை என்றாலும் வேலை செய்து காத்திருக்கிறான். நமதாண்டவர் பொறுமையும் அதுபோலவே. அவர் எதிர்பார்த்த பலனை உடனே

காணவில்லை. நம்பியிருந்த சீஷரும் கைவிட்டார்கள். என்றாலும் ஆண்டவர் தொடங்கின வேலை நிற்காமல் உலகெங்கும் பரவிக்கொண்டு போகிறது. தமது வேலையின் பூரணபலனாகிய அறுப்பை யுகத்தின் முடிவில் அவர் காண்பார். இந்த நம்பிக்கையே நமக்கும் ஆதாரம். நன்மை செய்கிறதில் நாம் சோர்ந்து போகவேகூடாது.

### 3. விதைப்புக்கு நேரிடும் இடையூறுகள்

அப்போஸ்தலன் இரண்டு வார்த்தைகள் சொல்லுகிறார். சோர்வு; தளர்ச்சி. "நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக." "நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" சோர்வு, தளர்ச்சி இரண்டும் ஒரே கருத்துள்ள வார்த்தைகள்போல் தோன்றினாலும், வித்தியாசமுண்டு. சோர்வு என்பது களைப்பல்ல. நாம் வேலை செய்தால் களைப்புண்டாவது இயல்பு. களைப்பு வராதபடி செய்வது கூடாத காரியம். ஆண்டவரும் தமது வேலையில் களைப்படைந்தார். களைப்பு குற்றமல்ல. நாம் களைப்படைவதும், சற்று இளைப்பாறி மறுபடியும் வேலை செய்வதும் தேவ ஒழுங்கு. சமுசாரி காலை முதல் நிலத்தில் வேலைசெய்கிறான். மத்தியானம் பசியாற்றிக்கொண்டு கொஞ்சம் இளைப்பாறிப் பின்பு மறுபடியும் வேலைசெய்கிறான். இதில் தோஷம் ஒன்றுமில்லை. அப்படியானால் சோர்வு ஆவதென்ன? செய்கிற வேலையில் பிரியமற்றுப் போகுதல், வேலையில் வெறுப்புண்டாகுதல். இதுவே மனச்சோர்பு. இது கூடாதென அப்போஸ்தலன் சொல்லுகிறார். இது மோசம் என்கிறார். மோசம் போகாதேயுங்கள். உடனே பலன் காணவில்லையோ, அல்லது ஏதேனும் இடையூறுகள் நேரிட்டதோ? மனஞ்சோர்ந்து போகக்கூடாதென்கிறார். இந்த ஞாயிறு வேலை முடிந்தது. இனி அடுத்த ஞாயிறு வருமே என்று தேவ ஊழியர் பெருமூச்சு விடுவது இந்த சோர்பைக் காண்பிக்கிறது. அப்படியே தேவமக்கள் அவரவர் செய்யும் வேலையில் வெறுப்படைந்து பெருமூச்சு விடுவது மனச் சோர்வை வெளிப்படுத்துகிறது. "நாம் சோர்ந்த போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்".

வேறொரு வார்த்தை தளர்ச்சி. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். இது சோர்வை விட மோசமான கருத்துள்ளது. சோர்விலிருந்து பிறப்பதே

தளர்ச்சி. சோர்வு நம்மை வேலையில் பிரியமற்றுப் போகப்பண்ணுகிறது. தளர்ச்சி நம்மை வேலைக்கு உதவாதவர்களாக்கிவிடுகிறது. நமக்குள் சோர்வு பெருகும்போது நாம் வேலைசெய்யக்கூடாத நிலைமைக்கு வந்து விடுகிறோம்.

இந்த இரண்டு தீமைகளுக்கும் தப்புவதெப்படி? அறுப்பு நமது கண்முன் இருக்கவேண்டும். அறுப்பை மறந்து வேலையையே பிரதானமாக நோக்குவதால் மனச்சோர்பும், சோர்பின் பலனாக தளர்ச்சியும் ஏற்படுகின்றன. சமுசாரியானவன் வெயில் எரிக்கும்போது, மழை இன்னும் பெய்யாதிருக்கும்போது, ஒரு பட்சை கண்ணுக்குத் தெரியாமலிருக்கும்போது, அந்த வறண்ட நிலத்தில் அவ்வளவு ஊக்கமாய்ப் பாடுபடுவானேன்? சீக்கிரத்தில் மிகுதியான அறுப்பு உண்டாகும் என்கிற நம்பிக்கையே. அவன் வேலை நிலத்திலே, எண்ணம் அறுப்பிலே. நமதாண்டவர் காரியமும் அப்படியே. "தமக்கு முன் வைத்திருந்த (அறுப்பின் பலனாகிய) சந்தோஷத்தினிமித்தம் அவமானத்தை அவமதித்துச் சிலுவையைச் சகித்தார்." "கண்ணீரோடே விதைக்கிறவன் கெம்பீரத்தோடே அறுப்பான். அள்ளித்தூவும் விதையை சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான், ஆகிலும் அவன் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" பாக்கியமான அறுப்பின் காலத்தை நாம் மறக்கக் கூடாது. நமது வேலையையே முடிவாக எண்ணாமல், ஊக்கமான ஊழியத்தால் உண்டாகும் மிகுதியான பலனை ஞாபகத்தில் வைக்க வேண்டாம். அப்போது சோர்வுக்கும் தளர்ச்சிக்கும் இடமிராது.

# 91. நல்ல போதகர்

***"நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" (மாற். 10:18).***

மிலேச்சர் முதற்கொண்டு ஞானிகள் வரை கடவுளைப் பற்றிய எண்ணம் எல்லாருக்கும் உண்டு. என்றாலும் அவர் எப்படிப்பட்டவரென்னும் அறிவில்லாததினாலேயே பல தெய்வ வணக்கம் ஏற்பட்டது. அவரவர் கடவுளை எவ்வாறு நினைத்துக் கொண்டார்களோ அதுவே அவர்கள்

தெய்வமாயிற்று. தாங்கள் நம்பின தெய்வங்களைப் போலவே அவர்கள் காரியங்களும் இருந்தன. பொதுவாய் மனுஷர் இவ்வுலக வாழ்வில் தீங்கில்லாமல் சேமமாய்ப் பிழைப்பதற்கே கடவுளைத் தேடுகிறார்கள். ஆவிக்குரிய நித்திய காரியங்களை வெளிப்படுத்தலின்றி அறிய முடியாது. பூமியில் பற்றுதல் வைத்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களையும் சில சமயம் விரும்பலாம். மேலான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தடையாயிருப்பவைகளை விட்டு விட அவர்களுக்கு மனதில்லை. ஆண்டவரிடம் நித்திய ஜீவனைத் தேடிவந்த இந்த மனுஷனும் அப்படிப்பட்டவனே.

## 1. ஐசுவரியமுள்ள தலைவன் கேட்ட கேள்வி

"நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்" "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் இல்லை" என்று ஆண்டவர் வேறொரு சமயம் சொன்னது. இவன் விஷயத்தில் உண்மையாயிற்று. இவனுடைய ஆஸ்தி இவன் ஆத்துமாவைத் திருப்தி செய்யவில்லை. ஆகையால் இவன் ஆண்டவரிடத்தில் வந்து நித்திய ஜீவனைப்பற்றி விசாரிக்கிறான். இப்படி விசாரிக்கும்படி அவனைத் தூண்டியதென்ன? இரண்டு காரியங்களை அவன் கவனித்தான். புருஷன் மனைவி விஷயமாக அவர் பரிசேயருக்குச் செய்த போதனை. குழந்தைகளை அவர் ஏற்றுக்கொண்டு அவர்களை ஆசீர்வதித்து, ஆண்டவர் இந்தச் சமயத்தில் யோர்தானுக்குக் கீழ்பாகத்தில் இருக்கிறார். அவர் ஞானமுள்ள போதனையையும் அன்பான செய்கையையும் கவனித்தான். தேவராஜ்யம் என்னும் வார்த்தையைத் திரும்பத் திரும்ப ஆண்டவர் சொன்னார். தேவராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களுமுண்டு. குழந்தைகளைக் குறித்து, தேவராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. ஒருவன் சிறுபிள்ளையைப் போலாகாவிட்டால் தேவராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்றார். இவ்வாறு அவர் ராஜ்யத்தைப் பற்றிப்பேசினதும், குழந்தைகளை ஆசீர்வதித்த அன்பான செய்கையும், அவன் மனதைக் கவர்ந்துகொண்டது. தேவராஜ்யம் என்பது நித்திய ஜீவன் முதல் மூன்று சுவிசேஷங்களும் தேவராஜ்ஜியம் வார்த்தையைப் பிரதானமாய் உபயோகிக்க, யோவானோ நித்திய ஜீவன் என்பதை அதற்குப்

பதிலாக உபயோகிக்கிறார். இவர் ஞானமுள்ள போதகர், அன்பான போதகர். மற்றப்போதகர்களைப்போல் அல்ல, இவரிடம் போனால் நித்திய ஜீவனை அடையும் வழியைச் சொல்லுவார் என்று நினைத்து, அந்த மனுஷன் அவரிடம் வந்து, தாழ்மையோடு முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான்.

## 2. ஆண்டவர் கேட்ட மறுகேள்வி

"நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவருமில்லையே" என்றார். தம்மை உலகத்துக்கு வெளிப்படுத்த வந்த ஆண்டவர், தம்மைத் தேடிவந்த பலருக்கும் அவரவர் நிலைமைக்கேற்றபடி பேசுவது வழக்கம். "எந்த அதிகாரத்தினால் இதைச் செய்கிறீர்?" என்று கேட்டவர்களைப்பார்த்து: யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றா? அல்லது மனுஷனால் உண்டாயிற்றா? நான் கேட்கும் கேள்விக்கு உத்தரவு சொன்னால் உங்கள் கேள்விக்கும் உத்தரவு சொல்லுவேன் என்றார். கேட்ட கேள்விக்கு உத்தரவு சொல்ல முடியாதபடி பதில் கேள்வி கேட்டாரென்று அருத்தமல்ல. அவர்கள் கேட்ட கேள்விக்கு உத்தரவு ஆண்டவர் அவர்களைக் கேட்ட கேள்வியில் இருந்தது. நிக்கோதேமன் ஆண்டவரிடத்தில் சொன்னதொன்று, ஆண்டவர் பதில் சொன்னது வேறொன்று. இது போலவே ஆண்டவர் பேசுவதை சுவிசேஷத்தில் காணலாம். இந்த மனுஷனுக்கு நித்திய ஜீவன் வேண்டுமாம். கிறிஸ்துவே அந்த நித்திய ஜீவன் என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் அவர் நல்ல போதகராயிருந்தபடியால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வழியைப் போதிப்பா ரென்பது அவன் நோக்கம். அவன் தப்பெண்ணத்தைத் திருத்தவே ஆண்டவர் மறுகேள்வி கேட்டார். கடவுள் தவிர நல்லவர் ஒருவனுமில்லையே, அப்படியிருக்க நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் என்று கேட்டார்.

## 3. ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் ஆதிமுதல் தர்க்கத்துக் கேதுவானவை

அவரது தெய்வீகத்தை நம்புகிறவர்களுக்கும் குழப்பமாயிருக்கிறது. என்ன, ஆண்டவர் தம்மை நல்லவன் அல்லவென்று சொல்லிவிட்டாரே, அப்படியானால் அவர்

கடவுள் இல்லையா? அவர் தெய்வீகத்தை மறுப்பவர்களுக்கு இது ஆதாரமாயிற்று. இதைவிட வேறு என்ன வேண்டும்? "என்னை நீ நல்லவனென்று சொல்வானேன்? கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" என்று அவரே தெளிவாய்ச் சொல்லிவிட்டாரே என்கிறார்கள். நாம் இதற்கு என்ன சொல்லுகிறது? இந்த வார்த்தைகளைச் சொன்னபோது ஆண்டவர் கருத்தென்ன? அவர் கருத்தை நாம் அறிய வேண்டும் நான் நல்லவரல்லவென்று அவர் சொல்லவில்லை. கிறிஸ்து நல்லவரல்லவென்றால் அவர் கடவுள் அல்ல. கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லை என்று அவரே சொன்னார். கிறிஸ்து நல்லவரென்பது உண்மையானால் அவர் கடவுள் என்பதும் உண்மை. இரண்டிலொன்று நிச்சயம். நீ என்னை நல்லவரென்று சொல்வானேன்? நான் நல்லவரென்று என்று உனக்கு எப்படித் தெரியும்? நல்லது என்பதின் கருத்தை அறிந்து பேசுகிறாயா? அல்லது உலக வழக்கப்படி பேசுகிறாயா?

## 4. கிறிஸ்து நல்லவரா இல்லையா?

அவருடைய சொந்த அறிக்கை என்ன? நமது சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் ஜீவியம் வரையப்பட்டிருக் கிறது. நாம் அவைகளை ஆராய்ந்து படிக்கும்போது, அவர் ஜீவியத்தில், உபதேசத்தில், கிரியைகளில் நாம் காண்பதென்ன? அவருடைய சாட்சி என்ன? அவர் நல்லவரா, கெட்டவரா? நல்லவர் என்பதற்கு இருபாகமுண்டு. தீமையற்றிருக்கவேண்டும். நன்மையே செய்யவேண்டும். அவரிடத்தில் பாவமில்லை. எங்கும் எப்பொழுதும் எல்லாருக்கும் நன்மையே செய்தார். தம்மை இடைவிடாமல் கவனித்துவந்த சத்துருக்களைப்பார்த்து: "என்னிடத்தில் பாவமுண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தமுடியும்?" என்று கேட்டார். ஒரு நாவும் அசையவில்லை. அவர் நன்மைச் சொரூபியாய் விளங்கினார். பிதாவிற்குப் பிரியமானவைகளைச் செய்யப் பிரயாசப்படு கிறேன் என்று அவர் சொல்லாமல், பிரியமானவைகளை எப்பொழுதும் செய்கிறேன் என்று சத்துருக்களுக்குச் சொன்னார். அப்படியல்லவென்று ஒருவனும் சொல்ல வில்லை. அவர் வாக்கு, செய்கை யாவிலும் நன்மையானவை களையே எப்பொழுதும் அவர் செய்திருக்க, இப்போது மாத்திரம் நான் நல்லவன் அல்லவென்று அவர் எப்படிச் சொல்லக்கூடும்?

மற்ற சாட்சிகளையும் விசாரிப்போம். "அவர் குற்றமற்றவர் மாசற்றவா" என்பது அவரோடு இரவு பகல் கூடவேயிருந்த சீஷர்கள் சாட்சி. "உம்மை இன்னாரென்று அறிவோம்; நீர் கடவுளுடைய பரிசுத்தர்" என்பது பிசாசுகள் சாட்சி. "குற்றமற்ற இரத்தம்" என்பது துரோகியின் சாட்சி. "அந்த நீதிமான்" என்பது பிலாத்து மனைவி சாட்சி. "இவரிடத்தில் யாதொரு குற்றத்தையும் காணேன்" என்பது தேசாதிபதி சாட்சி. "இவர் தகாததொன்றையும் செய்யவில்லையே" என்பது வலப்பக்கத்துக் கள்ளன் சாட்சி. "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமான்" என்பது நூற்றுக்கதிபதியின் சாட்சி. அவரை அருமையாய் நேசிக்கும் ஆத்துமாவே உன் சாட்சிதான் என்ன? இவ்வாறு அவர் நல்லவரென்பது ஏக சாட்சியாயிருக்க, இந்த இடத்தில் மாத்திரம் தம்மை நல்லவரல்லவென்பது என்று அவர் எப்படிச் சொல்லக்கூடும்? ஆகையால் ஆண்டவர் சொன்ன வார்த்தைகளின் கருத்தை நாம் அறிய வேண்டும். தம்மை இன்னாரென்று அறியாமல், நித்திய ஜீவனைப்பற்றிய உபதேசம் பண்ணுகிற ஓர் போதகரென்று மாத்திரம் நினைத்து வந்தவனை உணர்த்தும்படி, அவனை யோசிக்கப்பண்ணும்படி ஆண்டவர் இப்படிக்கேட்டார். என்னை நல்லவரென்று நீ சொல்லும்போது உன் கருத்தென்ன? என்னை இன்னாரென்று அறியாத நீ என்னை நல்லவரென்று பொதுவாய்ச் சொல்வது சரியல்ல.

### 5. ஆண்டவர் பிந்தி தம்மை இன்னாரென்று வெளிப்படுத்துகிறார்

முதலாவது அந்த ஐசுவரியவானுக்கும் பின்பு சீஷர்களுக்கும் தாம் யாரென்பதை தெரிவிக்கிறார். "நீ ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்" என்றார். அவன் எவைகளை என்றான். கற்பனைகள் இரண்டு பலகைகளில் எழுதப்பட்டிருந்தன. முதற் பலகையில் நாலும், இரண்டாம் பலகையில் ஆறும். முதல் நாலு கற்பனைகள் கடவுளுக்குச்செய்ய வேண்டிய கடமைகள். பிந்தின ஆறும் மனுஷரோடு சம்பந்தப்பட்ட கற்பனைகள். முதற் பலகையிலுள்ள கற்பனைகளை விட்டு விட்டு, இரண்டாம் பலகையிலுள்ள ஆறு கற்பனைகளையும் பொழிப்புரையாகச் சொன்னார். முதற்பலகை முழுவதும் கடவுள். அவர் நாமம் பரிசுத்தம். அவர் நான் பரிசுத்தம். அவரைத்தவிர வேறு

விக்கிரகம் கூடாது. அந்தப் பலகையிலுள்ளவைகளை நிறுத்தி, மனுஷருக்கடுத்தவைகளை மாத்திரம் கேட்டார். உடனே அவன் உற்சாகமாக நான் அவைகளை அறிந்திருப்பது மாத்திரமா, என் சிறுவயது முதல் அவைகளைக் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இது உண்மையே. எழுத்தின்படி அவன் கைக்கொண்டவன்தான். அப்படியிருந்தும் அவன் ஜீவனைக் காணவில்லை. பொருள் சேர்க்க விரும்புகிறவனுக்கு மனுஷர் இணக்கம் அவசியந்தானே. இரண்டாம் பலகையை அவன் கைக்கொண்டு நடந்தது ஆச்சரியமல்ல. ஆனால் பொருளாசை விக்கிரகமாகும். விக்கிரக வணக்கம் முதற்பலகைக்கு விரோதம். ஆகையால் ஆண்டவர் அவனைப் பார்த்து : உன்னிடத்தில் ஒரு குறையுண்டு, நீ ஜீவனுக்குட்பிரவேசிக்க விரும்பினால், உனக்குள்ளதெல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு, பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அவனுக்கு விக்கிரகமாயிருந்த பொருளைத் தர்மம் செய்துவிட்டு, முதற்பலகையிலுள்ள கடவுளைப் பின்பற்று என்று அவர் சொல்லாமல் என்னைப் பின்பற்று என்று சொல்வது கடவுள் ஸ்தானத்தை எடுத்துக் கொள்வதல்லவா? எல்லாவற்றையும் வெறுத்து; என்னைப் பார், என்னை நம்பு, என்னைப் பின்பற்று, எனக்குக் கீழ்ப்படி அப்பொழுது நித்திய ஜீவனைக் கண்டடைவாய் என்று ஒரு போதகர் சொல்வது துணிகரமல்லவா? கடவுள் ஒருவரே நல்லவரானால், தாம் நல்லவரல்லவென்றால் அவன் ஜீவனைப் பெற்றுக்கொள்ள அந்த நல்ல கடவுளை நம்பும்படியல்லவோ போதிக்க வேண்டும். அப்படியிருக்க கடவுள் ஸ்தானத்தில் தம்மை நிறுத்துகிறாரே. ஒருவன் தன் மனம், புத்தி, ஆவி, ஆத்துமா முழுவதையும் ஒரு மனுஷனுக்குக் கையளிப்பது பாவமல்லவா? கடவுளுக்குரிய வணக்கத்தை மனுஷன் ஏற்றுக் கொள்வது சரியா? நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் என்று இங்கே கேட்டவர், “என் ஆண்டவரே, என் கடவுளே” என்று தோமா சொன்னதை மாத்திரம் ஏற்றுக் கொள்ளலாமோ? ஆகையால் தம்மை நல்லவரல்லவென்று அவர் சொல்லாமல், தம்மை இன்னாரென்று அறியாமல், ஜீவனைப்பற்றிப் போதிக்கிற ஒரு போதகரென்று மாத்திரம் எண்ணிவந்த மனுஷனுக்குத் தம்மை இன்னாரென்று உணர்த்தவும், தாமே

நித்திய ஜீவன் என்று அவன் அறியவும் விரும்பி அப்படிப் பேசினார். கிறிஸ்து நல்லவரானால் அவரே கடவுள்.

அவர் பொருளைப்பற்றி பேசினவுடனே அவன் துக்கத்தோடே போய்விட்டான். அவன் போய்விட்டதும் ஆண்டவர் தமது சீஷரைப் பார்த்து: "ஐசுவரியமுள்ளவர்கள் தேவராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதென்றார்" சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்படியானால் யார்தான் ரட்சிக்கப்படக்கூடுமென்று இன்னும் உலக சிந்தையுள்ள சீஷர்கள் ஆண்டவரைக் கேட்டார்கள். மனுஷரால் இது கூடாததுதான். தேவனால் எல்லாம் கூடும் என்றார். அதாவது ஒரு மனுஷன் தன் சுய பிரயாசத்தால் ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது. அந்த மனுஷன் ஜீவனில் பிரவேசிக்க விரும்பி வந்தானே. நான் அவன் முன் நின்றேன். நானே ஜீவனுக்குட்பிரவேசிக்கிற வாசல், என்னை அவன் பின்பற்றினால் நித்திய ஜீவனைக் கண்டடைவான். என்னைப் பின்பற்ற அவனுக்கு மனமில்லை. கடவுளால் கூடும் என்று சொன்னவர் உடனே தம்மைப்பற்றிப் பேசி கடவுள் ஸ்தானத்தில் தம்மை நிறுத்துகிறார். கடவுள் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே என்பது மெய்யானால், அதாவது தாமும் நல்லவரல்லவென்பது அவர் கருத்தாயிருக்குமானால், அந்த மனுஷன் ஜீவனைப் பெறும்படி, தம்மை மறைத்து கடவுளையல்லவோ காட்டவேண்டும். அப்படிச் செய்யாமல் தம்மையே ஜீவனுக்கு அதிபதியாகப் பேசுகிற ரகசியம் என்ன?

பேதுரு ஆண்டவரைப் பார்த்து : நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் என் நாமத்தினிமித்தம் எல்லாவற்றையும் வெறுத்தவர்கள் இம்மையிலும் பரிபூரணமாய் ஆசீர்வதிக்கப் படுவார்கள்; மறுமையிலும் நித்திய ஜீவனை அடைவார் களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். கடவுள் தவிர வேறு யார் இப்படி வாக்குப்பண்ணக்கூடும்? ஆகையால் கடவுள் நல்லவர், தாமே அந்த நல்லவர், தாம் சரீரத்தில் வெளிப்பட்ட கடவுள் என்பதை வெளியரங்க மாக்கினார்.

# 92. தெய்வபக்தி

**"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தெய்வபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1 தீமோ. 4:8).**

மனுஷன் படும் அரும் பிரயாசங்கள் யாவும் இவ்வாழ்வுக்காகவே. உலகமே ஒரு பெரிய போராட்ட சாலையாயிருக்கிறது. என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம், எங்கே வசிப்போம், என்ன வேலை பார்ப்போம் என்று மனுஷர் படும் பாடு கொஞ்சமல்ல. "பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்பது சுலோகம். பொருள் உலகத்தில் மகா பிரதானமாய் எண்ணப்படுகிறது. பொருளுண்டானால் சகலமும் உண்டென்பார்கள். அதைச் சம்பாதிக்க மனுஷர் எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கு அளவில்லை. ஆயிரக்கணக்கான அடி பூமியைக் குடைந்து, எத்தனை உயிர்கள் மாண்டாலும் பொன்னைச் சுரண்டுவதை மனிதன் விடமாட்டான். ஏழைகள் வயிற்றுப் பிழைப்புக்காக கஷ்டப்படுகிறார்கள். தனவந்தர் சாங்கோபாங்கமாய்ப் பிழைப்பதற்காகப் பணத்தைக் குவிக்கிறார்கள். சரீரமும், அதற்குரிய முயற்சிகளும் மனிதர் கவனத்தைப் பிரதானமாய் ஆண்டுகொண்டன. ஜனப்பெருக்க மாகவே கஷ்டங்களும் கவலைகளும் பெருகின. நமது சரீரம் பிழைப்பதற்கு நாம் உழைக்க வேண்டியது நியாயமே. சோம்பேறி சாப்பிடக்கூடாது. ஆனால் சரீர முயற்சியே பிரதானமல்ல. சரீர முயற்சியால் லாபம் உண்டு. ஆனால் அது அற்பப் பிரயோஜனமுள்ளது. மனுஷன் இம்மைக்கு மாத்திரம் உரியவன் அல்ல. அவன் நித்தியமாய்ப் பிழைக்கவேண்டியவன். பூமிக்குரிய காரியங்களில் அவன் முழுக்கவனம் செல்லும்போது மறுமையை அவன் மறந்து விடுகிறான். மறுமையின் மறதி அவபக்தியை உண்டாக்கும். அவபக்தியின் சம்பாத்தியம் வேதனையைக் கொண்டு வரும். ஆகவே, உலக மனுஷன் எவ்வளவு சம்பாதித்தாலும் கடவுள் சகாயம் அவனுக்கில்லாதபடியால் இம்மையிலும் மறுமையிலும் அவன் மோசமடைவான். சரீரமுயற்சி அற்பப் பிரயோஜனமுள்ளது; தெய்வபக்தியோ இம்மையிலும்

மறுமையிலும் அவனுக்கு ஆசீர்வாதமாகும். ஆகையால் தெய்வபக்தி எல்லாவற்றிலும் பிரயோஜனமானது. நாம் தெய்வபக்தியைப்பற்றிப் பேசுமுன் அவபக்தி, குருட்டுபக்தி என்பவைகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லுவோம்.

## 1. அவபக்தி

அவபக்தி என்பதற்கு பக்தியின்மை என்று அர்த்தம். கடவுளைப்பற்றிய எண்ணமில்லை. அவர் மீது தேட்டம், அன்பு, நம்பிக்கையில்லை. கடவுளற்ற மனிதர், காலை எழுந்தது முதல் மாலைவரை ஓடியாடிச் சம்பாதித்து சாப்பிடவேண்டியது, தூங்க வேண்டியது. சகல அக்கிரமங்களையும் துணிந்து செய்ய வேண்டியது. உலக விஷயங்களில் அவர்களுக்குச் சாமர்த்தியம் இருக்கலாம். என்றாலும் அவர்கள் கடவுளற்றவர்களே. ஏசா அவபக்தன். அவனிடம் பல நல்ல குறிப்புகள் காணப்படு கின்றன. என்றாலும் அவன் அவபக்தனே. கடவுள் ஆசீர் வாதத்தைத் தனக்கு கொண்டுவரும் வழியாகிய சேஷ்டபுத்திர பாகத்தை, அது எனக்கு என்னத்துக்கு என்று அலட்சியம் செய்தான். சீர்கெட்ட ஏசாவுக்கு ஒருவேளைப் போஜனமே பிரதானம், கடவுளைத் தேடாதவர்களும், அவரை நம்பி அவரால் நடத்தப்படாதவர்களும் எவ்வளவு கல்வியறி வுள்ளவர்களானாலும், ஐசுவரியமுள்ளவர்களானாலும், உலக நாகரீகமுள்ளவர்களானாலும் அவபக்தர்களே. அவபக்தர்களின் முடிவு பயங்கரம். "ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ள வர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தம், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடும் கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" (யூதா **14:15**).

## 2. குருட்டுப்பக்தி

குருட்டுப்பக்திக்கும் அவபக்திக்கும் வித்தியாசமுண்டு. அவபக்தி கடவுளற்ற நிலைமை. குருட்டுப் பக்தி கடவுள் பேராலே செய்யப்படும் முயற்சிகளைக் குறிக்கும். அஞ்ஞானம், அறிவீனம், சடங்குகள், வீண்பக்தி முதலானவை இதைச்

சேர்ந்த இனங்களாகும். பிரதானமானதைப் பற்றிக்கொள்ளாமல் பிரதானமற்ற காரியங்களைப் பிடிப்பதே வீண்பக்தி. உள்ளான இருதய பக்தியைக் கவனியாமல் புறம்பான ஆசாரங்களை அநுசரிப்பது குருட்டுப் பக்தியாகும். ஆண்டவர் நாட்களில் இப்படிப்பட்ட குருட்டுப் பக்திக்காரர் அநேகர் இருந்தார்கள். அவர்கள் கடவுளையாவது அவர் ராஜ்யத்தின் தன்மையையாவது அறிந்தவர்களல்ல. ஆனால் அவர்கள் ஆசரித்த ஆசாரங்களுக்கும் வீண் வைராக்கியத்திற்கும் அளவில்லை. பார்வைக்கு நீண்டஜெபம் பண்ணுவார்கள். விதவைகளின் வீடுகளை அபகரிப்பார்கள். ஒருவனைத் தங்கள் மார்க்கத்தில் சேர்க்க உலகம் சுற்றுவார்கள். அவனைச் சேர்ந்தபின் தங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குவார்கள். தேவாலயத்தின் பெயரால் பிரமாணம் பண்ணினால் ஒன்றுமில்லையென்றும், அதிலுள்ள பொன்னின் பெயரால் பிரமாணம்பண்ணினால் குற்றவாளிகள் என்றும் சொல்லுவாரகள். அந்தக் குருடருக்கு எது பிரதானமென்று தெரியாது. அதுபோலவே பலிபீடத்தையும் அதன்மேல் வைக்கப்படும் காணிக்கையையும் வித்தியாசப்படுத்திப் பேசுவார்கள். ஒற்தலாம், வெந்தயம், சீரகம் இவைகளில் தசம பாகம் செலுத்தி, நீதி, இரக்கம், விசுவாசம் என்பவைகளை விட்டு விடுவார்கள். போஜன பாத்திரங்களின் வெளிப்புறத்தை மினுக்கும்படி நன்றாய் விளக்கி உட்புறத்தை நாற வைப்பார்கள். மனிதருக்கு முன்பாகப் புறம்பே தங்களை நீதிமான்கள்போல் காட்டி, உள்ளத்தில் மாயத்தாலும் அக்கிரமங்களாலும் நிறைந்திருப்பார்கள். ஆகையால் ஆண்டவர் இவர்களைப் பாாத்து: குருடரே, மதிகேடரே, எது முக்கியம் என்று கேட்டார். அவர்களைக் குருடரான வழிகாட்டிகள் என்றார். அந்தக் குருட்டுப் பக்தியே உலகத்தை மிகுதியாய் ஆண்டு கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவர்களில் அநேகர் இந்த வஞ்சகத்தில் அகப்பட்டவர்களே.

### 3. தெய்வபக்தி

இது கடவுளை இன்னாரென்று அறிந்து அவரை இடைவிடாமல் பற்றிப் பிடித்து பிழைப்பதாகும். தெய்வபக்தியானது என்னவென்று அறியவேண்டுமானால் கிறிஸ்துவின் ஜீவியத்தை நோக்கவேண்டும். அவர் தமது சித்தப்படி நடவாமல் பிதாவாகிய கடவுள் சித்தப்படி பிழைத்தவர். தமக்குப் பிரியமானதைச் செய்யாமல் பிதாவுக்குப்

பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்தவர். தம்மில் நம்பிக்கை வைக்காமல் பிதாவின் மேல் பூரண நம்பிக்கை வைத்தவர். தமது மகிமையை நாடாமல் பிதாவின் மகிமையையே தேடினவர். பிதாவில் அன்புகூர்ந்து, அவரோடு ஐக்கியப்பட்டு, சகலத்திலும், அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தவர். சுயலாபத்தை தேடியல்ல, பிதாவின் மகிமையையும் உலகத்தின் ரட்சிப்பையும் தேடி அதற்காக உயிர் கொடுத்தவர். தேவபக்தியின் சிறப்பை அவரில் காண்கிறோம். அதன் பாக்கியமான முடிவையும் அவரிலே காண்கிறோம்.

இவ்விதமான தேவபக்தியே நமக்கு வேண்டும். ஆண்டவரிடத்தில் கற்றுக்கொள்ளுகிறவர்கள் அவபக்திக்கும் குருட்டுப்பக்திக்கும் தப்பிக்கொள்ளுவார்கள். தேவபக்தியே பிரதானம். அதற்காகவே நாம் முயற்சி செய்யவேண்டுமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஏனென்றால் அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் நமக்கு உறுதியான வாக்குத்தத்தம். தேவபக்தியை மறந்து சரீரம் பிழைப்பதையே பிரதானமாய்த் தேடுகிறவர்கள் வேதனைக்குள்ளாவார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதமே நிறைந்த செல்வம். கடவுளை மறந்து உலகமுழுவதையும் ஒருவன் சொந்தமாக்கிக் கொள்ளக்கூடு மென்றாலும் அவன் நரகவேதனையிலிருப்பவனே. தேவபக்தியுள்ளவன் கடவுளையே நம்பியிருப்பதால் இம்மையில் அவனுக்குத் தேவையான சகல நன்மைகளையும் அவரே அவனுக்குக் கொடுக்கிறார். சிங்கக் குட்டிகள் பட்டினி கிடந்தாலும், அவன் அப்பமும், அவன் தண்ணீரும் அவனுக்குத் தவறாமல் கிடைக்கும். ஆண்டவர் வாக்கு அதுவே. "நீ தேவராஜ்யத்தையே தேடு, அப்போது இவைகள் யாவும் உனக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்றார். அநேகருக்குப் பிழைக்கும் வழி தெரியவில்லை. அவபக்தியும் குருட்டுப் பக்தியும் ஆபத்துக்கு உதவாது. தேவபக்தியாய்ப் பிழைக்கும் பிள்ளைகளைப் பரமபிதா இந்த ஜீவனிலும் போஷித்துக் காப்பாற்றுகிறார்; இனிவரும் ஜீவனிலும் போஷித்துக் காப்பாற்றுகிறார். ஆகவே தேவபக்திதான் மனிதன் இம்மையிலும் மறுமையிலும் நன்றாயிருப்பதற்கு கடவுள் ஏற்படுத்தின வழி. தேவமக்கள் எல்லாரும் இது உண்மைதான் என்று ஒப்புக்கொள்வார்கள். "இது உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது" என்று அப்போஸ்தலன் தமது அனுபவத்திலிருந்து சொல்லுகிறார்.

# 93. நன்றியுள்ள கிறிஸ்து

**"மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" (லூக். 22:28).**

இது ஒரு தப்பிப் பிறந்த வசனம். லூக்கா மாத்திரம் இந்த வசனத்தைச் சொல்லுகிறார். ஆகையால் இது மிகவும் அருமையான வசனம். இது எப்போது, எந்த இடத்தில் சொல்லப்பட்டது என்பதை நாம் விசாரித்ததுண்டா? இந்த வசனத்துக்கு முன் பின்னுள்ள வசனங்களைப் பார்க்கும்போது அவர் பாடுபட்டதற்கு முந்தின நாள் இரவில் சொன்னதாக அறியலாம். வியாழன் இரவில் ஆண்டவர் பேசின உன்னதமான காரியங்களை யோவான் விவரமாய் எழுதியிருக்கிறார். அத்துடன் சம்பந்தப்பட்ட மற்றக் காரியங்களை மற்றச் சுவிசேஷகரும் எழுதியிருக்கிறார்கள். தங்களில் யார் பெரியவன் என்னும் தர்க்கத்தைப்பற்றியும் இராப்போஜன நியமத்தைப்பற்றியும் மற்றவர்களும் எழுதியிருக்கிறார்கள். அந்தச் சமயத்திலேதான் ஆண்டவர் இந்த வார்த்தைகளைச் சொன்னதாக லூக்கா காண்பிக்கிறார். என்ன ஆச்சரியம்! அறிவீனமும் பெருமையும் சீஷர்களை அலைக்கழிக்கின்றன. ஒருவர் கால்களை ஒருவர் கழுவ மனமில்லாதபோது ஆண்டவன் அடியார் கால்களை கழுவி ஆசனத்தில் உட்கார்ந்து தேவராஜ்யத்தின் தன்மையைக்குறித்துப் பேசுகையில் திடீரென இந்த வார்த்தைகளைச் சொன்னார். இது தப்பிப் பிறந்த வசனம் என்றோம். ஏனென்றால் "நான் உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்போலிருக்கிறேன்" என்றும் "என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்" என்றும் அவர் சொன்ன இரண்டு வசனங்களுக்கும் இடையிலே "மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்த வர்கள் நீங்களே" என்றார். மேலும் என்கிற வார்த்தை திடீரென அவர் மனதில் இடையிலே உதித்த நன்றியின் உணர்ச்சியைக் காட்டுகிறது. சீஷர்களிடத்தில் எவ்வளவோ குறைவுகள் இருந்தபோதிலும் அதைப் பாராட்டாமல் அவர்களைத் தைரியப்படுத்தும்படி இந்த வார்த்தைகளைச் சொன்னார். ஆண்டவர் இவ்வளவு புகழ நாம் என்ன சாதித்து

விட்டோம் என்பதாகச் சீஷர்கள் திகைத்துக் கொண்டிருந்தார் கள்.

## 1. தனித்த கிறிஸ்து

"என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" வித்துவான், ஞானி, சாஸ்திரி முதலான மகாத்துமாக்கள் உலகத்தில் தனித்தவர்களே. அவர்களுடைய உன்னதமான நோக்கம், அறிவு, மேலான சிந்தையில் சாதரணமான ஜனங்கள் கலந்து கொள்ள முடியாது. அவர்கள் குடும்பத்திலிருந்தாலும் மனிதர் மத்தியிலிருந்தாலும் அவர்கள் தனித்தவர்களே. அவர்களைப்போல் யோசிக்க, கலந்து பேச மனிதரில்லாத போது அவர்கள் தனித்தவர்களே. இமய மலையைச்சுற்றி அநேக பர்வதங்கள் உண்டு. அவைகளெல்லாம் ஒரே தோழமையில் மகிழலாம். ஆனால் இமயமலைச்சிகரமோ உன்னதத்திற்கு எழும்பி, பக்கத்தில் வேறுமலையின்றித் தனித்து நிற்கிறது. பனியால் மூடப்பட்ட அந்தச் சிகரம் மனுமக்கள் கண்களுக்கு மறைந்து தனித்து நிற்கிறது. அதைப்போல உலகத்தில் முற்றிலும் தனித்த மனிதர் கிறிஸ்து. ஆதலால் அவர் மனித சிநேகத்தை, அன்பை, அனுதாபத்தை எவ்வளவோ விரும்பினார். அது அவருக்குத் திருப்தியாய்க் கிடைக்கவில்லை. கிடைத்த கொஞ்சத்திலே அவர் எவ்வளவோ சந்தோஷித்தார். "தம்மோடுகூட இருக்கும்படியாகவே" அவர் சீஷர்களைத் தெரிந்து கொண்டார். விசேஷமாய் மூவரைத் தம்மோடு அழைத்துச் சென்றதும் அவர்கள் தோழமையை விரும்பியே "ஒரு மணி நேரமாகிலும் என்னோடு கூட நீங்கள் விழித்திருக்கக் கூடாது" என்று அவர் கேட்ட கேள்வி, மனுஷர் துணையை அவர் நாடினார் என்பதைக் காட்டுகிறது. "பரிதபிப்பார் உண்டோ என்று காத்திருந்தேன். ஒருவனுமில்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன். ஒருவனையும் காணேன்" "நான் ஒண்டியாய் ஆலையை மிதித்தேன்" "நீங்கள் எல்லாரும் என்னைத் தனியே விட்டு அவனவன் தன் தன் இடத்துக்குப் போகுங்காலம் வரும்" கடைசியாகச் சிலுவையிலும் தனித்தவரானார்.

அவர் மனிதரோடிருந்தும் தனிப்பட்டதற்குக் காரணம் என்ன? பாவம் நிறைந்த உலகில் அவர் ஒருவரே பரிசுத்தர். அவர் முழு நோக்கம் தேவராஜ்யம், அவர்கள் முழு நோக்கம்

உலகராஜ்யம். அவர் ஆவிக்குரியவர், அவர்கள் மாமிசத்துக்குரியவர்கள். தன்மையில் ஒற்றுமையில்லை, நோக்கத்தில் ஒற்றுமையில்லை, ஜீவியத்தில் ஒற்றுமையில்லை. ஆகையால் அவர் தனித்தவரே. அவரை அறியாமலும், அவர் பேச்சைக் கிரகிக்கக்கூடாமலும், அவர் அன்புக்குப் பதில் அன்பு கொடாமலும், அவர் ஊழியத்தில் அவரை உற்சாகப்படுத்தாமலும் கைவிட்டார்கள். அப்படியிருந்தும் தமது சீஷர்களைப் பார்த்து "என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" என்கிறார். அவர்களிடத்தில் எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் ஆண்டவரோடுகூடவே அவர்கள் இருந்தது அவருக்கு ஆறுதல். தனித்த கிறிஸ்து நமது தனிமையை அறியவும் நம்மைத் தைரியப்படுத்தவும் ஏற்றவர். அவர் தாமே அந்த வழி சென்றதால் நமது மறைவான துக்கம், கவலை, கண்ணீரை அறிந்து நம்மைத் தேற்ற வல்லவராயிருக்கிறார். அவர் தனித்த நிலைமை அவர் பாடுகளில் ஒன்றாகும்.

## 2. சோதிக்கப்பட்ட கிறிஸ்து

"எனக்கு நேரிட்ட சோதனைகளில்" என்கிறார். ஆண்டவர் தமது சீஷரை விட்டுப் பிரியும் வேளை வந்தது. ஒரு மனிதன் மரிக்கும் சமயத்தில் எதைப் பிரதானமாகப் பேசுவானோ அதுவே அவன் ஜீவியத்தின் பிரதானமாக இருந்திருக்க வேண்டும். ஆண்டவர் ஜீவியத்தில் எத்தனையோ காரியங்கள் உண்டு. அவர் செய்த உபதேசங்கள், நிறைவேற்றின அற்புதங்கள், அடைந்த பல கஷ்டங்கள், பட்ட அநேக பாடுகள், அவமானங்கள் இவைகளைப்பற்றி பேசாமல், "எனக்கு நேரிட்ட சோதனைகளில்" என்கிறார். அப்படியானால் எவ்வளவு பலமாய் அவர் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும். மரிப்பதற்குச் சற்று முந்தி; "நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று வெற்றி வார்த்தை கூறினார். இது சோதனையின் பலத்தைக் காட்டுகிறது. அவர் மகிமையடைந்தபின்பும் தமது போராட்டத்தை மறந்தவரல்ல, சபைகளுக்கு அவர் யோவான் மூலம் அனுப்பின செய்தியில்: "நான் ஜெயங்கொண்ட என் பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதுபோல" என்கிறார்.

"எனக்கு நேரிட்ட சோதனைகள்" இவை எந்தக் காலத்துச் சோதனைகள்? வனாந்தர சோதனைளோ? அல்ல. அவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது சீஷர்கள் இன்னமும் தெரிந்து கொள்ளப்படவில்லை. அவர்கள் அங்கே

அவரோடிருக்கவில்லை. இவை கெத்சமெனே சோதனைகளோ? அல்ல. இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவர் இன்னும் கெத்சமெனேக்குப் போகவில்லை. வனாந்தர சோதனைக்குப் பின் "சாத்தான் சிலகாலம் விலகியிருந்தான்" கெத்சமெனேக்குப் போகும் முன்: "இதோ உலகத்தின் அதிபதி திரும்பவும் வருகிறான்" என்றார். ஆகையால் சீஷர்கள் தம்மோடு கூடயிருந்ததாக ஆண்டவர் சொல்லுகிற சோதனைகள் வனாந்தரத்துக்கும் கெத்சமனேக்கும் இடையிலுள்ள சோதனைகளாயிருக்கவேண்டும். அவர் அக்காலத்தில் சோதிக்கப்பட்டதாக நாம் நினைக்கிறதில்லை. ஆகிலும் அவர் நிச்சயமாகவே தமது ஊழிய நாட்களில் பலமாய்ச் சோதிக்கப்பட்டாரென்பதற்கு ஆண்டவர் வார்த்தைகளே ஆதாரம்.

வனாந்தரத்திலும் தோட்டத்திலும் நேரிட்ட சோதனைகளின் நோக்கமே ஊழிய நாட்களில் உண்டான சோதனைகளின் நோக்கம். பிதா அவருக்கு ஏற்படுத்தின பாதையை விட்டு விலகி தமக்கு இஷ்டமான பாதையில் நடக்கும்படி ஏவினதே அச்சோதனைகளின் நோக்கம். இந்தச் சோதனை அவருக்கு இடைவிடாமல் நேரிட்டது. மற்றவர்களுக்குத் தெரியாது. பிதா அவருக்கு ஏற்படுத்தின பாதை லேசான பாதையல்ல. அவர் தமது பலவீனமான மாம்சத்தில் வந்ததே சாத்தான் அவரைப் பலவிதமாய்ச் சோதிப்பதற்கு அனுகூலமாயிற்று. அந்தச் சோதனைகள் எவை? எவ்வாறு சோதிக்கப்பட்டாரென்று நாம் கேட்க வேண்டியதில்லை. "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார்" என்னும் வேதவாக்கே போதும். எல்லாச் சோதனைகளுக்கும் இணங்குவது நமது சுபாவம் எல்லாச் சோதனைகளையும் மேற்கொண்டதே அவர் வெற்றி. சோதனைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தவர்களுக்கே சோதனையின் பலம் தெரியும். செத்த மீன்களுக்கு வெள்ளத்தின் பலம் தெரியாது. இனத்தாராலும், சீஷர்களாலும், சத்துருக்களாலும் இடைவிடாமல் சோதிக்கப்பட்டார். ஒன்றுக்காவது அவர் இணங்கவில்லை. சோதிக்கப்படுவது பாவமல்ல. இணங்கும்போது பாவம் பிறக்கும். சீஷர்கள் ஆண்டவர் சோதனைக்காலத்தில் கூடவேயிருந்ததை நினைத்து "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடு நிலைத்திருந்தவர்கள்

நீங்களே" என்கிறார். சோதிக்கப்படுகிற நமக்காகப் பரிதபிக்கவும் உதவிசெய்யவும் வல்லவராயிருக்கிறார்.

### 3. நன்றியுள்ள கிறிஸ்து

"எனக்கு நேரிட்ட சோதனைகளில்" இந்த வார்த்தைகள் நன்றியறிதலைக் காண்பிக்கிறது. பெரிய மனிதர் தங்களைப்பற்றி உள்ளான உணர்ச்சியை எளிதில் வெளியிடமாட்டார்கள். ஆண்டவர் தம்மைப் பற்றி அடிக்கடிப் பேசினாலும் அவையாவும் நமது ரட்சிப்பின் சம்பந்தமாகவே ஆனால் தம்மைப்பற்றி அவர் அதிகமாய்ப் பேசுவதில்லை. எவ்வளவு கொடிய அவஸ்தையாயிருந்தாலும் அவைகளைச் சகித்துக் கொள்வார். ஆகையால் அவர் வாய்திறந்து சொன்ன இவ்வார்த்தைகள் அருமையானவைகள். "எனக்கு நேரிட்ட சோதனைகளில் நீங்கள் நிலைத்திருந்தீர்களே" என்றார். இவை நன்றியின் வார்த்தைகள். நமக்கு நன்மைசெய்தவர்களை நினைத்து: என் வியாதியில் நீங்கள் பிரயாசப்பட்டீர்களே, என் பசியில் என்னைப் போஷித்தீர்களே, என் தரித்திரத்தில் எனக்கு உதவி செய்தீர்களே, எனக்கு வேலையில்லாத சமயத்தில் வேலைபார்த்துக் கொடுத்தீர்களே, என் துக்கத்தில் என்னை ஆறுதல் படுத்தினீர்களே என்று நாம் சொல்வேனானால் அது நமது நன்றியை வெளிப்படுத்தும். அதேமாதிரி ஆண்டவர் இங்கே "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே நிலைத்திருந்தீர்களே" என்கிறார். சீஷர்களுக்கு அது எப்படியென்பது தெரியாது.

ஸ்திரீகள் கிராமம் கிராமமாய் அவரோடே கூடச்சென்று அவருக்குப் பணிவிடை செய்து அவரைப் பராமரித்ததை அவர் மறப்பாரோ? பசியால் களைத்து, பகைவரால் புறக்கணிக்கப்பட்டு, பெத்தானியா வந்தபோதெல்லாம் அவருக்கு விருந்து செய்து அவரைத் தேற்றினதை அவர் மறப்பாரோ? சிலுவையைச் சுமக்கக்கூடாமல் அவர் விழுந்த சமயத்தில் சீமோன் அதைத் தமக்காகச் சுமந்ததை மறப்பாரோ? நன்றியுள்ள கிறிஸ்து! "உங்கள் கிரியைகளையும், தமது நாமத்துக்காக நீங்கள் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் தமது நாமத்துக்காக நீங்கள் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுவதற்கு அவர் அநீதியுள்ளவர் அல்லவே." (எபி. 6:10) ஆண்டவர் நமக்கு நன்றி பாராட்டுவது அவசியமா? அவர் அதிகாரத்தோடு நம்மை வேலைகொள்ளக்

கூடுமே என்று நினைக்கலாம். ஆனால் ஆண்டவர் வந்த நிலைமையைக் கவனிக்க வேண்டும். "அவர் கடவுள் ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து வந்தார்." "உங்கள் நடுவில் பணிவிடைக் காரனைப்போல் இருக்கிறேன்" என்றார். "ஊழியங்கொள்ள அல்ல, ஊழியஞ் செய்யவே வந்தேன்" என்றார். இவ்வளவு தாழ்மையான நிலைமையில் சீஷர்கள் தம்மோடே கூடயிருந்தது அவருக்கு நன்றி. தேச அதிகாரிகள் அவரைப் பகைக்கிறார்கள் என்று அறிந்திருந்தும் அவர்கள் அவரை விட்டு விலகவில்லை. நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று ஆண்டவர் அவர்களை ஓர் சமயம் கேட்க; "யாரிடத்தில் போவோம் ஆண்டவரே, நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று சொல்லி அவரைப் பற்றிக்கொண்டார்கள். ஆண்டவர் அதை மறக்கவில்லை.

இது நன்றிகெட்ட காலம். ஆண்டவர் நமக்குச் செய்த சகல நன்மைகளையும் நினைத்து நாம் அவருக்கு நன்றியாயிருக்க வேண்டும். சுத்தமான குஷ்டரோகிகள் பத்துப் பேரல்லவா? இன்னும் ஒன்பது பேர் எங்கே என்று அந்த நன்றி கெட்ட மனிதரைப்பற்றிக் கேட்டார். பரம பிதா நமக்குச் செய்யும் நன்மைகளை நாம் மறந்துபோகும்போது நன்றி கெட்டவர்களாகிறோம். அதுபோலவே மனிதர் நமக்குச் செய்த உபகாரங்களை நினைத்து அவர்களுக்கும் நாம் நன்றியுள்ளவர் களாயிருக்கவேண்டும். "நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ. 3:15).

# 94. குயவன் வனைந்த பாத்திரம்

**"இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக் கூடாதோ" என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 18:6).**

இஸ்ரவேல் தேவன் தெரிந்து கொண்ட பாத்திரம். ஒரு விசேஷித்த நோக்கத்தோடே அவர்களைச் சொந்தமாக்கினார். அவர்களோ அவர் சித்தத்திற்கு விரோதமாய் நடந்து அந்த நோக்கத்தில் தவறினார்கள். அவர் அவர்களை ஆசீர்வாத பாத்திரமாக்கி, அவர்கள் மூலமாய் தம்மை அறியாத

புறஜாதிகளுக்குத் தமது கிருபையை வெளிப்படுத்த வேண்டுமென்பது அவர் நோக்கம். தெரிந்து கொண்ட பாத்திரமாகிய இஸ்ரவேல் கெட்டுப்போனது. என்றாலும் கிருபையுள்ள ஆண்டவர் அவர்களை மறுபடியும் சீர்ப்படுத்தி உபயோகிக்கப் போகிறதாகத் தீர்க்கதரிசிக்கு சொல்லுகிறார். இதை நிச்சயப்படுத்தும்படி கடவுள் தீர்க்கதரிசியை ஒரு குயவன் வீட்டுக்கு அழைத்துப்போனார். குயவன் ஒரு பாத்திரத்தை திரிகையினால் வனைந்துகொண்டிருந்தான். வனைந்து கொண்டிருந்த அந்தப் பாத்திரம் அவன் கையில் கெட்டுப்போயிற்று. அந்தக் குயவனோ தான் விரும்பினபடி அதை வேறே பாத்திரமாக வனைந்தான். கர்த்தர் அதை தீர்க்கதரிசிக்குக் காண்பித்து “இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்ய முடியாதோ” என்று கேட்டார். இதிலிருந்து சில குறிப்புகளைப் பார்ப்போம்.

## 1. குயவன் வனைந்த பாத்திரம்

“நான் தெரிந்து கொண்ட பாத்திரம்” என்று ஆண்டவர் பவுலைக் குறித்துச் சொன்னார். தேவமக்கள் யாவரும் ஆண்டவர் தெரிந்து கொண்ட பாத்திரங்களே. அவர் தமது மகிமைக்கென்று உபயோகிக்கும்படி கிருபையாய் நம்மை உருவாக்கினார். அந்தக்குயவன் களிமண்ணை எடுத்து, தான் விரும்பின ஓர் நோக்கத்திற்கென்று அந்த மண்ணைப் பாத்திரமாக வனைந்ததுபோல, கடவுளும் ஓர் திட்டமான நோக்கத்தோடே, அவருடைய ராஜ்யத்திற்கு நாம் உபயோகப்படும்படி தமது அந்தரங்க வல்லமையால் நம்மை வனைந்தார். நாம் பிரயோஜனமான பாத்திரங்களாயிருக்கிறோமா, இல்லையா என்பதை நாம் அறிய வேண்டும். வெறும் பாத்திரங்கள் உபயோகமற்றவை. உடைந்த பாத்திரங்கள் ஊருக்குப்புறம்பே எறியப்படத்தக்கவை. அலங்காரமான பாத்திரங்கள் காரியத்துக்கு உதவாதவை. தேவன் தெரிந்துகொண்ட பாத்திரங்களோ அவருடைய நோக்கத்தை இடைவிடாது நிறைவேற்றும் உபயோகமுள்ள பாத்திரங்களாயிருக்க வேண்டும். பவுலாகிய பாத்திரத்தை உலகத்துக்குப் பிரயோஜனமாக ஆண்டவர் எவ்வளவு மகிமையாய் உபயோகித்தார் என்பதை நாம் அறிவோம். கர்த்தர் நம்மை உபயோகிக்கிறாரா? இது மகா முக்கியமான கேள்வி. ஆண்டவர் நோக்கம் நம்மில் நிறைவேறுகிறதா? ஆண்டவர் நம்மை உபயோகிக்கிறார் என்பது நிச்சயமானால், நாம் உபயோகமற்ற

பாத்திரங்களாகும்படி அவர் விடவே மாட்டார். ஏனென்றால் அவர் வீட்டுக்கு உபயோகமுள்ள பாத்திரங்கள் அநேகம் தேவை.

## 2. பாத்திரம் கெட்டுப் போகுதல்

"குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று" காரணம் என்ன? வைக்கோல் முதலான எதுவும் மண்ணுக்குள் இருந்ததோ? சிறு கல் அல்லது ஓட்டுத்துண்டு மண்ணோடு கலந்திருந்ததோ? களிமண்ணோடு நனையாத மண்ணும் சேர்ந்திருந்ததோ? பாத்திரம் கெட்டுப் போன காரணம் இன்னதென்று தெரியவில்லை. குயவன் அந்தப் பாத்திரத்தை வேகமாய்ச் சுழன்ற திரிகையில் வைத்து வனைந்து கொண்டிருந்ததை தீர்க்கதரிசி பார்த்தார். திடீரென அவன் திரிகையை நிறுத்தி, அந்தப் பாத்திரத்தைக் கையிலெடுத்து, அதை உற்றுப்பார்த்து, அதன் கேட்டைக் கண்டுபிடித்து: நான் உன்னை உபயோகிக்க ஏதுவில்லையே என்று சொல்லுகிறான்.

நம்மை மீட்டுக்கொண்ட ஆண்டவர் நம்மைத் தமது பாத்திரங்களாக உபயோகிக்க விரும்புகிறார். இடைவிடாத அவரது கிருபை நமக்குள் பெருகவும், நம்மிலிருந்து அது அநேகருக்கு ஆசீர்வாதமாக வழிந்தோடவும் வேண்டுமென்பது அவர் தீர்மானம். ஆனால் கெட்டுப்போன பாத்திரத்தில் அவர் கிருபை தங்காது. ஆண்டவர் அந்தப் பாத்திரத்தை உபயோகிக்க மாட்டார். நாமே வேலை செய்வதற்கும் ஆண்டவர் நம்மை உபயோகிப்பதற்கும் வித்தியாசமுண்டு. கெட்டுப்போன பாத்திரங்களை ஆண்டவர் உபயோகிக்கமுடியாது. ஆனால் நாமோ மும்முரமாய் பற்பல வேலைகளைச் செய்துகொண்டு அவைகளை கடவுள் ஊழியமாக எண்ணலாம். ஆண்டவர் நம்மை உபயோகிக்காவிட்டால் நாம் செய்யும் வேலைகள் யாவும் வீணாகும். பாத்திரங்களாகிய நம்மைக் கெடுப்பதெது? நம்மை ஆண்டவர் உபயோகிக்கக்கூடாதபடி செய்வதென்ன? பாவமே. அது வெளியரங்கமானதல்ல. குயவன் செய்த பாத்திரத்தைக் கெடுத்தது இன்னதென்று தீர்க்கதரிசிக்குத் தெரியவில்லை. குயவனே ஒரு நிமிடத்தில் அதைக் கண்டுபிடித்தான். நமது ஜீவியம் மற்றவர்கள் பார்வையில் நன்றாயிருப்பதுபோல் தோன்றலாம். நாம் செய்யும் ஊழியம் தேவஊழியம்போல் காணப்படலாம். இருதயங்களை ஆராயும் கர்த்தர் நமது கேட்டைக் காண்கிறார். அது நமது நினைவில்

அல்லது நோக்கத்தில் மறைவாயிருக்கலாம். நாம் அதை அற்பமாக நினைக்கலாம். பரம குயவனுடைய கண் அதைக் காண்கிறது. நம்மை உபயோகிக்க முடியாமல் தமது வேலையை நிறுத்தியிருக்கிறார். நாம் இதை அறியாது வேலை செய்து கொண்டு போகிறோம். பிரயோஜனமில்லை. கண்ணாடிப் பாத்திரங்கள் செய்யும் சாலைக்குள் ஒருவர் போய் அங்குள்ள பாத்திரங்களைப் பார்த்தார். மிகவும் விலையேறப்பெற்ற ஒரு அழகான பாத்திரம் ஒன்றைக்கண்டு வியாபாரியிடம் அதன் கிரயத்தை விசாரித்தார். அது விலையேறப்பெற்ற பாத்திரந்தான். ஆனால் ஒன்றுக்கும் உதவாது என்று வியாபாரி சொன்னார். இவர் அதைக் கையில் எடுத்து உள்ளும் புறம்பும் பார்த்து: இதிலே யாதொரு கேடும் இல்லையே என்றார். அது உம்முடைய கண்களுக்குத் தெரியாது. எங்களுக்கு அதன் கேடு தெரியும் என்று வியாபாரி சொன்னார். மனிதரால் புகழப்பட்ட அநேக பாத்திரங்கள் வேலையில் முயற்சியாயிருக்கின்றன. கர்த்தர் அவைகளிலுள்ள மறைவான கேட்டை அறிந்திருப் பதால் அவர் அவைகளை உபயோகிக்கிறதில்லை. நாம் கெட்டுப்போன பாத்திரங்களோ அல்லது ஆண்டவர் உபயோகிக்கிற பாத்திரங்களோ?

### 3. கெட்டுப் போன பாத்திரம் இன்னும் குயவன் கைவசமிருத்தல்

"மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று; களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல் நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்." இதுதான் பெரிய கிருபை. கெட்டுப்போன பாத்திரத்தை அவன் தூர எறிந்துவிடவில்லை. அந்தப் பாத்திரம் இன்னும் குயவன் கையிலேயே இருக்கிறது. அவன் அதை மறுபடியும் புதிதாய்ச் செய்யக்கூடும். குயவன் கைக்களிமண்போல் நாமும் ஆண்டவர் கையிலேதான் இருக்கிறோம். தேவமக்களே! ஆண்டவர்களின் ஊழியர்களே! எத்தனைப் பாவங்களால் நாம் நம்மைக் கெடுத்தோம். ஆண்டவரோ நம்மைத் தள்ளிப்போடவில்லை. அவரைப்போல் மன்னிக்கிறவர் யார்? அவரைப்போல் அனுதாபமுள்ளவர்கள் யார்? அவரைப்போல் நீடிய பொறுமையுள்ளவர்கள் யார்? நமது பாவங்கள் அவர் கிருபையை மேற்கொள்ளவில்லை. நமது மீறுதல்கள் அவர் அன்பை அழிக்கவில்லை. நமது அக்கிரமங்கள் அவர் பொறுமையைக் குறைக்கவில்லை. நாம் கெட்டுப்போன பாத்திரங்களாயினும் இன்னும் காயப்பட்ட ஆண்டவர் கையிலேயே இருக்கிறோம். அவர் கையிலிருந்து

ஒன்றும் நம்மைப் பிரிக்க முடியாது. கெட்டுப் போன பாத்திரங்களாகிய நம்மை ஆண்டவர் மறுபடியும் புதுப்பித்து உபயோகிக்க வல்லவராயிருக்கிறார்.

**4. கெட்டுப்போன பாத்திரம் நல்ல பாத்திரமாயிற்று**

"குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தார்" "இந்தக் குயவன் செய்கிறதுபோல நான் உங்களுக்குச் செய்ய முடியாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" இங்கேதான் நமக்கு நம்பிக்கையிருக்கிறது. கெட்டுப்போன பாத்திரம் அது தூர எறியப்படவில்லை. குயவன் அதைத் திரும்பவும் எடுத்து, தண்ணீரில் நனைத்துப் பிசைந்து, திரிகையில் வைத்து, சக்கரம் வேகமாய் சுற்ற, தான் விரும்பின பிரகாரம் அதை நல்ல பாத்திரமாக செய்து முடித்தான். பாவத்தால் கெட்டுப்போன பாத்திரங்களாகிய நம்மைப் பிரயோஜனமான பாத்திரங்களாக மறுபடியும் உண்டுபண்ண தேவன் வல்லவராயிருக்கிறார். அந்தக் குயவன் செய்ததுபோல நானும் உங்களுக்கு செய்ய முடியாதோ என்று கேட்கிறார்.

நாம் உபயோகமுள்ள நல்ல பாத்திரங்களாக வேண்டுமானால் நம்மில் வேலை நடக்கவேண்டியது அவசியம். அந்தக் குயவன் கெட்டுப்போன பாத்திரத்தை அப்படியே வைத்து வேறு பாத்திரமாக வனையவில்லை. அவன் அதை எடுத்து, பாத்திரத்தைக் கெடுத்த கல்லையோ, ஓட்டையோ, வைக்கோலையோ அகற்றிவிட்டு, தண்ணீர் விட்டுப் பிசைந்து, சக்கரத்தில் வைத்து வேகமாய்ச் சுற்றி, நல்ல பாத்திரமாகச் செய்தான். நாம் மறுபடியும் நல்ல பாத்திரங்களாவது எளிதான காரியமல்ல. ஆண்டவர் கையில் நம்மை விட்டுவிட வேண்டும். நம்மைக் கெடுத்த காரியங்களை அவர் நம்மை விட்டு அகற்ற வேண்டும். அதாவது ஆவியின் சக்கரத்தில் வைத்து நம்மைத் தமக்கேற்ற பாத்திரமாக உருவாக்க வேண்டும். தேவமக்களே! நமக்கு நேரிட்ட சங்கடங்கள், அவமானங்கள், பாடு துன்பங்கள் நமது மனதுக்கு வேதனையைக் கொடுத்ததே. அவைகளைச் சகிக்ககூடாமல் புலம்பினோமே. அது தேவகோபம் அல்ல. அவர் நம்மைக் கைவிட்டதல்ல. நாம் பாடுகளை அனுபவித்தபோது அவர் கையிலேயே இருந்தோம். நம்மைத் தமக்கேற்ற பாத்திரங்களாகும்படி தமது திரிகையில் வைத்து

நம்மைச் சுற்றினதே நமது பாடுகளுக்குக் காரணம். தமது நோக்கத்திற்கு ஏற்ற பாத்திரங்களாக நம்மைச் செய்வதற்கு உபத்திரவமாகிய சக்கரத்தில் வைத்து நம்மைச் சுற்றினார். "நாம் உபத்திரவப்பட்டது நல்லது" மற்றவர்களுக்கு நாம் பிரயோஜனமாயிருப்பதற்கு அது அவசியமாயிருந்தது. எஜமான் வீட்டில் அநேக பாத்திரங்கள் உண்டு. எல்லாம் ஒரே மாதிரியல்ல. எல்லாவற்றிற்கும் ஒரே வேலையுமல்ல. தேவனுடைய பிள்ளைகள் இதை மனதில் வைக்க வேண்டும். நம்மை எதற்காக கடவுள் அழைத்தாரோ அதை நிறைவேற்றுவதே நமது வேலையல்லாமல், இன்னொருவரைப் போல வேலைசெய்ய நாடுவதும், செய்ய முடியாததால் துக்கிப்பதும் தவறாகும். "ஒரு பெரிய வீட்டில் பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுள்ள பாத்திரங்களுமுண்டு" (2 தீமோ. 2:20) வீட்டின் பிரயோஜனத்திற்கு இவைகள் எல்லாம் வேண்டும். பொன் வெள்ளிப் பாத்திரங்கள், மரம், மண் பாத்திரங்களை அற்பமாய் நினைக்கக் கூடாது. பொன் வெள்ளிப் பாத்திரங்கள் மேஜைகளில் உபயோகப்படலாம். நாலுபேர் பார்த்து அவைகளைப் புகழ்ந்து கொள்ளலாம். ஆனால் சமையல் அறையில் மறைந்திருக்கும் மரம் மண்பாத்திரங்கள் இல்லாவிட்டால் பொன் வெள்ளி பாத்திரங்கள் என்னத்திற்காகும்? அழகு பார்க்கவேண்டியதேயல்லாமல் உபயோகப்படமாட்டாது. ஆண்டவர் தமது ராஜ்யத்தின் வேலைக்கென்று பலவகையான பாத்திரங்களை வைத்திருக்கிறார். சிலருடைய ஊழியம் பிரபல்யமாயிருக்கலாம். மனுஷர் அவர்களைப் புகழலாம். வேறு சில பாத்திரங்கள் மறைந்திருக்கலாம். அவர்கள் நாள்தோறும் செய்யும் மறைவான வேலைகளை மற்றவர்கள் அறியார்கள். அறியாவிட்டால் என்ன? புகழாவிட்டால் என்ன? ஆண்டவர் நமக்குத் தந்த வேலையை நாம் உண்மையாய் நிறைவேற்றுவதே நமது பாக்கியம். அப்படிப்பட்ட மறைவான பாத்திரங்களுக்கு கர்த்தரால் வரும் புகழ்ச்சியே போதும். இந்த மறைவான பாத்திரங்களில்லாமல், பிரபல்யமான பாத்திரங்களால் காரியம் வாய்க்காது. பாத்திரங்களெல்லாம் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கிறது.

# 95. "ஆனால்"

***"ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனால்" (லூக். 9:61).***

ஆண்டவரே ஆனால் போடும்போது மனுஷன் ஏன் போடமாட்டான்? எபேசு சபையைக் குறித்து எவ்வளவோ நல்ல காரியங்களைச் சொன்ன ஆண்டவர் முடிவில் ஆனால் என்றார். (வெளி. *2:4*). அந்த ஆனால் என்பது காரியத்தைக் கெடுத்தது. எபேசுவிலுள்ளவர்கள் கர்த்தருக்காக அதிகப் பிரயாசப்பட்டு உழைத்தவர்கள். என்றாலும் ஆண்டவர்மீது அவர்களுக்கிருந்த ஆதி அன்பை இழந்துவிட்டார்கள். அன்பற்றவர்கள் ஆயிரஞ்செய்தாலும் பிரயோஜனம் என்ன? ஆகையால் ஆண்டவர் அவர்களை மனந்திரும்பும்படி எச்சரித்தார். அவர்கள் நிலைமை விளக்குத் தண்டுக்குச் சமானமாயிருந்தது. அந்த விளக்குத் தண்டும் எடுபட்டுப்போகும் என்றார். ஆனால் என்பது சிலவேளை அனுகூலமாகவுமிருக்கும். குற்றத்தினிமித்தம் அவன் தண்டிக்கப்படவேண்டியதே. ஆனால் அவன் சிறுவனாயிருக்கிறபடியால் அவனுக்கு மன்னிக்கிறோம் என்று தீர்ப்புப் பிறக்கிறது. ஆனால் என்பது நன்மையாய் முடிவது போல தீமையாகவும் முடியும். அது ஆனாலுக்குப் பின்வரும் முடிவுக்கேற்றாற்போலிருக்கும். இந்த மனுஷன் தானே ஆண்டவரிடம் வந்து: "நான் உம்மைப் பின்பற்றுவேன் ஆனால்" என்றான். ஆனால் நான் வீட்டாரிடம் போய் கலந்து பேசி வழியனுப்பிக்கொள்ளும்படி, எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அவன் போனால் வரமாட்டான் என்பது ஆண்டவருக்குத் தெரியும். "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிறவனெவனும் தேவ ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்றார். கிறிஸ்துவைப் பின்பற்ற எல்லாருக்கும் ஆசைதான். ஆனால் என்பது வந்து ஊடே நிற்கிறது. பற்பல காரணங்களால் மனிதர் ஆண்டவரைப் பின்செல்ல முடியாதிருக்கிறார்கள்.

**1. உம்மைப் பின்பற்றுவோம்**

ஆனால் இப்பொழுது நாங்கள் சிறுவர். வயதில் நாங்கள் விளையாடித் திரியவேண்டியது. கல்வி கற்கவேண்டியது. உத்தியோகத்துக்காக முயற்சிக்கவேண்டியது பக்தி மார்க்கம்

பெரியவர்களுக்கே ஏற்றது. நாங்களும் பெரியவர்களாகும்போது ஆண்டவரைப் பின்செல்லுவோம் என்கிறார்கள். அவரைப் பின்பற்றுவதென்றால் என்ன? ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, அவரில் அன்புகூர்ந்து, அவரிடத்தில் கற்றுக் கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து அவரால் நடத்தப்படுவதே. அதுவே நமக்கு ரட்சிப்பும் ஆசீர்வாதமுமாகும். அப்படியிருக்க பெரியவர்களாகும்போது உம்மைப் பின்பற்றுவோம் என்று சொல்வதின் அர்த்தமென்ன? ஆண்டவரே இப்போது உம்மை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பொழுது உம்மில் அன்பு கூறமுடியாது. இப்போது உம்மிடத்தில் கற்றுக்கொள்ள முடியாது, இப்போது உமக்குக் கீழ்ப்படிய முடியாது இப்பொழுது உம்மால் நடத்தப்பட முடியாது என்பதே அர்த்தமாகும். அப்படியானால் சிறுவர், வாலிபருக்கு ரட்சிப்பும் ஆண்டவர் ஆசீர்வாதமும் வேண்டியதில்லையா?

பெரியவர்களுக்கு இருக்கும் போராட்டம் சிறுவர்களுக்குத் தெரியாது. இளமைப் பருவத்தின் பாவப் பழக்கம் இன்னும் அவர்களைச் சிறுமைப்படுத்துகிறது. சிறுபிராயத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றினோமில்லையே என்று பரிசுத்தவான் களும் புலம்பியிருக்கிறார்கள். நாங்கள் பெரியவர்களானபின் ஆண்டவரைப் பின்பற்றுவோம் என்று சொல்லுவது காரியம் அறியாத பேச்சு. சிறுவயதில் கிறிஸ்துவைப் பின்பற்ற மனமில்லையென்றால் சாத்தானைத்தான் பின்பற்றவேண்டும். நடுநிலைமை கிடையாது. அவன் பெரியவர்களாகும்வரை காத்திருக்கமாட்டான். ஒன்று கிறிஸ்து நம்மை ஆட்கொண்டு ரட்சிப்பின் வழியிலே நடத்தவேண்டும், அல்லது சாத்தான் நம்மை ஆண்டுகொண்டு பாவவழியிலே நடத்தவேண்டும். எவ்வளவு இளமையில் நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமா கிறோமோ அவ்வளவும் நமக்கு நல்லதே. நாட்செல்லச் செல்ல பாவத்தால் இருதயம் கடினப்படும். பக்திமார்க்கம் வெறுப்பாகும் இளமைப்பருவம் அருமையான காலம். நேபுகாத்நேச்சார் சிலையில் ஐந்து குறிப்புகள் உண்டு. முதலாவது பசும்பொன், அப்புறம் வெள்ளி, அதன்பின் வெண்கலம், அப்புறம் இரும்பு, அதன்பின் பாதி இரும்பும், பாதி களிமண்ணும். இளமைப் பிராயம் பசும்பொன்னுக்குச் சமானம். பிந்தினால் வெள்ளி, இன்னம் பிந்தினால்

வெண்கலம், இன்னும் பிந்தினால் இரும்பு, இன்னும் பிந்தினால் இரும்பும் களிமண்ணும். கடவுள் பக்தியற்றவிருத்தாப்பியர் களிமண்ணுக்குச் சமானம். சிறுவயதில் அருமையாய் கொண்டாடப்பட்ட பிள்ளைகள் தேவபக்தியில்லாமல் வளருகிறதால் எவ்வளவு கேடான மனுஷராகிறார்கள்! மேலும் சிறுவர்கள் பெரியவர்களாவது என்ன நிச்சயம்? காலம் கர்த்தர் கரத்தில் அல்லவோ இருக்கிறது. உம்மைப் பின்பற்றுவோம், ஆனால் இப்பொழுதல்லவென்று சிறுவர்கள் சொல்வது நியாயமல்ல.

**2. உம்மைப் பின்பற்றுவோம்**

ஆனால் எங்கள் வேலை இடங்கொடுக்கவில்லை. தேவமக்கள் தங்கள் குடும்பப் போஷிப்புக்காக பற்பல உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிறார்கள். வேலையில் உண்மை அவசியம். அநேக வேலைகளில் தந்திரமும் பொய்யும் அவசியமாகத் தோன்றுகின்றன. மேல் நடத்துகிறவர்கள் தேவபக்தியற்றவர்களாயிருக்கலாம். உண்மையைப் பார்க்கிலும் லாபமே அவர்களுக்குப் பிரதானம். அநேக வேலைகள் லஞ்சத்தால் கறைப்பட்டிருக்கின்றன. போலீஸ் உத்தியோகம் பெருத்த சோதனைக்கிடமானது. கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றின ஓர் இன்ஸ்பெக்டர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாய்ப் நடக்க மனமில்லாமல் உத்தியோகத்தை விட்டுவிட்டார். அதேமாதிரி தேவபக்தியுள்ள ஒரு வக்கீலும் தமது உத்தியோகத்தை விட்டுவிட்டார். இப்படிப்பட்டவர்கள் சம்பாத்தியத்தையல்ல, ஆண்டவரைப் பின்பற்றுவதையே பிரதானமாக எண்ணினவர்கள். அநேகர் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமான வேலைகளில் இருந்துகொண்டு ஆண்டவரைப் பின்பற்றக்கூடாதிருக்கிறார்கள். உம்மைப் பின்பற்ற விரும்புகிறோம். ஆனால் எங்கள் வேலை இடங் கொடுகிறதில்லை. ஆண்டவரித்தில் நித்திய ஜீவனைத் தேடிவந்த மனுஷன் பொருளாசையினால் அவரைப் பின்பற்றமுடியாமல் போனான். கர்த்தரை நம்புகிற பிள்ளைகளை அவர் கைவிடமாட்டார். இகபர ஆசீர்வாதங்கள் யாவும் அவரிடத்தில் உண்டு. அவரைப் பின்பற்றிக் கெட்டவர்கள் இல்லை. அவரை மறந்து பலவகையாலும் பொருள் சம்பாதித்து வாழ்ந்தவர்களுமில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதமே வேதனையற்ற சம்பாத்தியத்தைக் தரும்.

கிறிஸ்துவை விற்று முப்பது வெள்ளி சம்பாதித்த யூதாஸ் நான்று கொண்டு செத்தான். உத்தியோகமும் சம்பாத்தியமும் கர்த்தர் கரத்திலிருக்கின்றன. அவரைப் பின்பற்றுகிற வர்களுக்குக் குறைவில்லை. ஆகையால் உத்தியோகம் தடையென்று சொல்லுவது நியாயமல்ல.

### 3. உம்மைப் பின்பற்றுவோம்

ஆனால் கஷ்டம் கவலைகள் இடங்கொடுக்கவில்லை. இப்பொழுதுள்ள கஷ்டங்கள் நீங்கி சேமமான காலம் வருமானால் அப்போது ஆண்டவரை பின்பற்றலாம்; பக்திக்குரிய காரியங்களைக் கவனிக்கலாம். கஷ்டம் கவலைகள் எப்போது தீரும்? அவைகள் யாராலே நீங்கும்? நமக்கு நேரிட்டிருக்கிற அநேக தொல்லைகள் ஆண்டவரைப் பின்பற்றாமல் சுயஇஷ்டப்படி நடந்ததால் உண்டானவைகள். இன்னும் நமது வழியில் நடக்க நடக்க கஷ்டங்கள் அதிகரிக்குமேயன்றி நீங்காது. "நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய், என்னிடத்தில் திரும்பு, உனக்குச் சகாயமுண்டு." என்று ஆண்டவர் சொல்லுகிறார். நமது கஷ்டங்களும் கவலைகளும் நீங்குவது அவராலேயே. அப்படியிருக்க அவைகள் நீங்கினபின் அவரைப் பின்பற்றுவேன் என்று சொல்வதெப்படி? நல்ல காலம் வரும் என்று காத்திருப்பது சரியல்ல. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களை ஆண்டவர் தம்மிடம் அழைக்கிறார். உண்மையாய் அவரைத் தேடுகிறவர்கள் ஆறுதலையும் சமாதானத்தையும் கண்டடைகிறார்கள். நமது கஷ்டங்களினிமித்தம் ஆண்டவரை உடனே பின்பற்ற வேண்டுமேதவிர, பின்பற்றாதிருப்பதற்கு அவைகளைக் காரணமாகச் சொல்வது நியாயமல்ல?

### 4. உம்மைப் பின்பற்றுவேன்

ஆனால் சில பாவங்கள் இடங்கொடுக்கவில்லை. அந்தப் பாவங்களை விட முடியவில்லை அவைகள் நீங்கினபின் தாராளமாய் உம்மைப் பின்பற்றுவேன். பக்திக்குரிய காரியங்களைச் சிந்திப்பேன். இதுவும் மோசமான எண்ணமே. அநேகர் ஆண்டவரைப் பின்பற்றாதிருப்பதற்கு அவர்கள் பாவங்களே காரணம். பாவம் எப்படி நீங்கும்? யாராலே நீங்கும்? நாமே நமக்கு மன்னித்துக் கொள்வதா? அல்லது ஆண்டவர் நமக்கு மன்னிப்பதா? பாவ வல்லமையிலிருந்து நாமே நம்மை

விடுவித்துக் கொள்வதா? அல்லது ஆண்டவர் நம்மை விடுவிப்பதா? மேலும் பாவ வழியில் போகப்போக மனம் கடினமாகி, கடவுள் வெறுப்பாகி, மனந்திரும்புவது கஷ்டமாகி விடுமே. அப்படியிருக்க நாம் நினைத்த காலத்தில் எப்படி மனந்திரும்பக்கூடும்? எவ்வளவுக்குத் தாமதிக்கிறோமோ, அவ்வளவுக்கு நாம் கெட்டுப்போகிறோம். ஆகையால் கெட்ட குமாரனைப்போல், உடனே எழுந்து பிதாவிடம் போவது நல்லது. அவர் அழைத்தபோது உடனே பின்சென்ற சீஷரைப் போல் நாமும் அவரைப்பின் செல்லவேண்டும்.

# 96. கிறிஸ்துவை அறிகிற அறிவு

**"கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள்" (2 பேதுரு 3:18).**

ஜீவன் எங்கேயோ அங்கே வளர்ச்சி உண்டு. இது நாம் திட்டமாய் அறிந்த விஷயம். வளர்ச்சியில்லையென்றால் ஜீவனில்லை. அல்லது நோயுண்டாயிருக்கவேண்டும். மக்கள் வளருவது பெற்றொருக்குப் பிரியம். அது சுகத்துக்கு அடையாளம். அவர்கள் சரீரத்தில் வளருவது மாத்திரமல்ல. தங்களைப் பெற்றவர்கள் அறியும் அறிவிலும் வளருகிறார்கள். தேவமக்கள், கிறிஸ்துவின் மூலமாய் மறுபடி பிறந்தவர்கள். இந்தப் பிறப்பின் மூலமாய் தேவஜீவனைப் பெற்றிருக்கிறார்கள். அந்த ஜீவனில் அவர்கள் வளர வேண்டும். கிறிஸ்துவை அறிந்து அவரை ஏற்றுக்கொண்டதால் ஜீவனைக் கண்டவர்கள், அந்த ஜீவன் பெருகும்படி அவரை அறிகிற அறிவிலே வளரவேண்டும், அநேகர் இதைக் கவனிக்காமல்: "என் பாவங்களை மன்னித்தார், என்னை இரட்சித்தார்" என்று சொல்லி அங்கேயே நின்று விடுகிறார்கள். கிறிஸ்துவை அறியும் அறிவில் வளரவேண்டும் என்பதை அவர்கள் யோசிக்கிறதில்லை. ஆகையால் அவர்கள் ஜீவனையிழந்து பலவித பாவங்களில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். தாங்கள் ரட்சிக்கப்பட்டவர்கள் என்று அவர்கள் சொல்லியும், ஆவிக்குரிய ஜீவியமில்லாததால் அநேகருக்கு இடறலாயிருக் கிறார்கள். இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லுகிறவர்களை மனிதர் நம்புவதற்கும் இடமில்லை. நாம் கிறிஸ்துவை அறிகிற

அறிவில் வளருவோமானால் நமது ஜீவியமும் ஊழியமும் பலப்படும். கிறிஸ்துவாகிய ஆள் நாம் அறிந்து விட்டுவிடக் கூடியவரல்ல. நாம் எவ்வளவு அவரை அறிந்தாலும் நேசித்தாலும் இன்னும் அறியவும் நேசிக்கவும் வேண்டிய புருஷன் அவர். தேவபரிபூரணங்களை உடையவர். அவருக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நிறைவாய் உண்டு. ஆகையால் நமது படிப்பும் ஆராய்ச்சியும் அவர்பேரில் இருக்க வேண்டும். நமது மனது அவரைப்பற்றிய தியானத்தில் மகிழ வேண்டும். ஆண்டவரிலுள்ள புதுப்புதுக் காரியங்களை நாம் அறிந்து வளராவிட்டால் நமது ஜீவியத்தில் ஊக்கம் உற்சாகமிராது. நமது மனம் அந்தகாரப்படும். நாள்தோறும் ஆகாரம் புசிக்கிறவன் ஜீவன் பிழைத்து வளருகிறான். ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவில் பிழைத்திருக்கிறவன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவான். ஆகையால் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர வேண்டும். அந்த அறிவு நாலு வகைப்படும்.

### 1. சரித்திர கிறிஸ்து

சரித்திரம் கூறுகிற கிறிஸ்துவை நாம் விட்டு விடக்கூடாது. அவர்பிறப்பு முதல் மரணம் வரையிலுள்ள சரித்திரம் நாலு சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கிறது. நமது ஜீவிய சரித்திரமல்ல, நாலு ஜீவிய விருத்தாந்தத்தை நாலுபேர் எழுதியிருக்கிறார்கள். லூக்கா சொல்லுகிறபடி ஆண்டவர் ஜீவியத்தை எழுத அநேகம் பேர் ஏற்பட்டார்கள். ஆகிலும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய இந்த நாலுபேர் எழுதினவைகளையே ஆண்டவர் நமக்குக் கொடுக்கச் சித்தமானார். ஒரு தேசத்தைப் பார்த்து வரும் நால்வர் அவரவர் மனதில் பதிந்ததைச் சொல்லுவார்கள். நாலுபேரும் நாலவிதமாய் சொன்னாலும் அவர்கள் தேசத்தைப்பற்றிக் கூறின யாவும் உண்மையே. எல்லோரும் ஒன்றுபோல் சொல்வது பேசி வைத்ததும் கட்டுமானமும் ஆகும். கிறிஸ்துவின் சரித்திரத்தை நாலுபேர் எழுதினார்கள். அந்த நாலும் சேர்ந்து பூரண ஒற்றுமையாகி கிறிஸ்துவைப்பற்றி நமக்கு அறிவிக்கின்றன. தற்காலத்தில் ஒருவருடைய ஜீவிய சரித்திரத்தை முதலிலிருந்து கடைசிவரை எழுதுவதுபோல் கிறிஸ்துவின் சரித்திரம் எழுதப்பட்டதல்ல. அவர் முப்பது வருடச் சங்கதி நமக்கு விவரமாய்த் தெரியாது. அவர் பேசினது

செய்ததெல்லாவற்றையும் ஒன்று விடாமல் அவர்கள் எழுதவுமில்லை. ஒருவருடைய ஜீவிய சரித்திரம் கீழும் ஏராளமான காரியங்களில் அல்ல. அவருடைய குணமும் செல்வாக்குமே விசேஷம். கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்று அறிய சுவிசேஷ சரித்திரம் போதும். அதை முழுக் கவனத்துடன் நாம் படிப்போமானால் நாம் அறியாமலே ஆவியானவர் கிறிஸ்துவை நமது மனதில் பதித்துவிடுவார். சுவிசேஷ சரித்திரத்தை அசட்டை செய்கிறவர்கள் அவரை அறிய முடியாது. அவர் பேரில் அன்பும் உண்டாகாது. அவரை அறியமுடியாதபோது அந்த அறிவில் வளருவதெப்படி? ஆகையால் நாம் சரித்திர கிறிஸ்துவை அறிந்து வளருவதற்கு சுவிசேஷகத்தைக் கவனத்துடன் படிக்க வேண்டும். திரும்பத் திரும்ப அதை ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

### 2. மகிமையடைந்த கிறிஸ்து

நான்கு சுவிசேஷங்களுக்கு பின் நாம் அப்போஸ்தலர் நடபடியிலும், நிருபங்களிலும் பிரவேசிக்கிறோம். இங்கே மகியைடைந்த கிறிஸ்துவின் ஜீவியம், அவர் செய்யும் ஊழியம், அவருக்கும் அவரது அடியாருக்குமுள்ள சம்பந்தம் முதலான காரியங்களைக் கவனிக்கிறோம். அவர் தாழ்மையான ஜீவியத்தில் பிரவேசித்து, பணிவிடைக்காரனைப்போல் எங்கும் வேலை செய்து, கடைசியாகச் சிலுவையில் மரித்து உயிர்த்ததைப்பற்றி சுவிசேஷங்களில் படித்தோம். நிருபங்களில் மகிமையின் கர்த்தராக அவரைக் காண்கிறோம். மரித்தபின் அவர் சரீரம் அடக்கமானது. அவர் ஜீவன்போனதும் சத்துருக்கள் வெற்றியடைந்ததாக நினைத்தார்கள், அவர் சரீரத்தைப் புதைத்தார்கள். அவர் ஆவியைப் புதைப்பவன் யார்? அவர் ஆவியில் காவலிலுள்ள ஆவிகளிடத்திற்சென்று, தாம் மரணத்தை அழித்து, சாத்தானையும் அவன் வல்லமைகளையும் பரிகரித்து, மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உரிய திறவுகோல்களை அவன் கையிலிருந்து உரிந்துகொண்ட வெற்றியை அந்த ஆவிகளுக்கு அறிவித்தார். இவர் ஆதிமுதல் எல்லாருக்கும் இரட்சகராதலால் சுவிசேஷத்தின் வெற்றியை அவர்களுக்கு அறிவிப்பது அவருக்கு நியாயமாமிருந்தது. அதனால் என்ன பலனுண்டானதென்று தெரியாது. அவர் ஆவிக்குரிய சரீரத்தோடே நாற்பது நாட்களாகத் தமது

அடியாருக்குத் தரிசனமாகித் தம்மை உயிரோடிருக்கிறவரென நிச்சயப்படுத்தினார். பின்பு அவர்கள் கண்கள் காண பரலோகம் சென்று பிதாவினால் மகிமையையும் கனத்தையும் பெற்று அவர் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். பிதா அவருக்கு அருளிய மகிமையினால் அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார். அவர் மகிமையடைந்தாரென்ற நிச்சயம் அவர் உன்னதத்திலிருந்து அனுப்பின பரிசுத்த ஆவியால் உறுதிப்பட்டது. அடியார் பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஜீவியத்தில் பலப்பட்டு, வல்லமையான ஊழியஞ்செய்தார்கள். அவர் மகிமைப்படாதிருந்தால் பரிசுத்த ஆவி வந்திருக்க மாட்டார். சீஷர்கள் சாட்சிகளாக உலகத்துக்கு அவரை வெளிப்படுத்தும் மாதிரிகளாயிருந்திருக்கமாட்டார்கள். திருச்சபை என்று ஒன்று இருந்திருக்கமாட்டாது. ஸ்தேவான் அவரை பிதாவின் வலது பாரிசத்தில் நிற்கிறவராகக் கண்டார். பவுல் வானத்திலிருந்து தம்மோடு பேசின அவர் வார்த்தைகளைக் கேட்டார். யோவான் பத்மு தீவில் அவரைச் சந்தித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் செய்திகளைப் பெற்றார். மகிமையின் கர்த்தரான இயேசு கிறிஸ்து அது முதல் இதுவரை தமது பிள்ளைகளுக்குத் தம்மை வெளிப்படுத்தி, அவர்கள் ஜெபங்களைக் கேட்டு, கிருபையாய் அவர்களை நடத்திக் கொண்டு வருகிறார்.

இப்படியிருக்க சரித்திர கிறிஸ்துவே போதும் என்று சொல்லுகிறவர்கள் தற்காலம் பெருகியிருக்கிறார்கள். அவர் மாதிரி, உபதேசம் போதும் என்பது இவர்கள் கருத்து. நிருபங்களின் போதனைகளை இவர்கள் ஏற்றுக்கொள்ளு கிறதில்லை. இவர்கள் சரித்திர கிறிஸ்துவைச் சரியாய் நம்புகிறார்களாவென்பது சந்தேகம். சுவிசேஷ சரித்திரத்தை இவர்கள் சரியாய் ஏற்றுக்கொண்டால், கட்டாயம் நடபடி புஸ்தகம் நிருபங்களில் வருகிற மகிமையடைந்த ஆண்டவரை இவர்கள் ஏற்றுக்கொள்ளாதிருக்க முடியாது. சரித்திரக் கிறிஸ்துவே போதும் என்று சொல்லுகிறவர்கள் உண்மை யுள்ளவர்கள் அல்ல. அவர்கள் சுவிசேஷத்தில் சொல்லப் பட்டிருக்கிற கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் இன்னும் அவரைப்பற்றிய முக்கியமான விஷயங்களையும் தள்ளிவிடுகிறார்கள். பவுலுக்கோ மகிமையடைந்த கிறிஸ்துவே

பிரதானம். "நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் இனி ஒருபோதும் மாம்சத்தின்படி அவரை அறியோம்" என்றார். (2 கொரி. 5:16). சரித்திர கிறிஸ்து நமக்கு வேண்டாம் என்பது அவர் கருத்தல்ல. பவுல் சரித்திர கிறிஸ்துவோடு இருந்தவரல்ல. மகிமையடைந்த கிறிஸ்துவைச் சந்தித்து அவரால் பிழைத்தவர். அவருடைய ரட்சிப்பும் அவரடைந்த ஆசீர்வாதங்களும் உன்னதத்துக்குப்போய் மகிமை அடைந்த ஆண்டவரால் கிடைத்தது. ஆகையால் மகிமையின் கர்த்தரை மறந்து மாம்சத்தில் சஞ்சரித்த நசரேயனாகிய இயேசுவின் மனுஷீகத்தை முக்கியப்படுத்த அவருக்கு மனம் வரவில்லை. ஆனால் சரித்திர கிறிஸ்துவையும், அவர் அசட்டை பண்ணினவரல்ல. ஆண்டவர் தமக்குத் தரிசனமானபின்பு அப்போஸ்தரரோடு கூடயிருந்து சரித்திர கிறிஸ்துவின் காரியங்களை விவரமாய் அறிந்துகொண்டார். சரித்திர கிறிஸ்துவின் அறிவு அவருக்குப் பூரணமாயிருந்தது என்பதை அவர் நிருபங்களில் காணலாம். சரித்திர கிறிஸ்துவே போதும் என்று தற்காலம் மனிதர் சொல்லுகிறபடி அவர் சொல்லாமல், சரித்திர கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், அங்கேயே நிற்காமல், மகிமையடைந்திருக்கிற ஆண்டவரைப் ,பிரதானமாய் அறியவேண்டுமென்பதே அவர் கருத்து. ஆகையால் சரித்திர கிறிஸ்துவை அறிந்திருப்பதுபோல மகிமையடைந்த ஆண்டவரை அறிகிற அறிவிலும் நாம் வளரவேண்டும்.

### 3. தீர்க்கதரிசன கிறிஸ்து

ஆண்டவர் பிறப்பு முதல் அவர் மகிமையடைந்துவரை சம்பவிக்கவேண்டிய காரியங்களைக் குறித்து வெகுகாலத்திற்கு முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் வார்த்தை வார்த்தையாக நிறைவேறின. அவ்வாறு நிறைவேறினதை ஆண்டவரும் சீஷர்களுக்கு எடுத்துக் காண்பித்தார். அதுபோலவே அவர் திரும்ப வருவதைப்பற்றியும் இனி சம்பவிக்கப்போகிற பெரிய மாறுதல்களைப்பற்றியும் தீர்க்கதரிசனங்கள் உண்டு. அவை எப்பொழுது சம்பவிக்கும், எப்படிச் சம்பவிக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் என்ன சம்பவிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மகிமையின் ஆண்டவர் ராஜாவாக வெளிப்படும்போது

உலகத்தின் சகல அதிகாரங்களையும் ஆளுகைகளையும் கீழ்ப்படுத்துவார். பாவம், பாடுகள், துக்கம், மரணமாகிய சகல தீமைகளும் முற்றிலும் அகற்றப்படும். சர்வ சிருஷ்டிப்புக்கும் பூரண சுயாதீனம் கிடைக்கும். புதிய வானம் புதிய பூமி என்று சொல்லத்தக்க பாக்கியமான காலம் உதிக்கும். அவர் ராஜ்யம் வரும் பரத்தில் அவர் சித்தம் செய்யப்படுவதுபோல இகத்திலும் செய்யப்படும். கடவுளே சகலத்திலும் சகலமுமாயிருப்பார். நாம் கிறிஸ்துவை அறியும் அறிவில் வளருவது மெய்யானால் இனிச் சம்பவிக்கவேண்டிய தீர்க்கதரிசனங்களைக்குறித்து அஜாக்கிரதையாயிருக்கமாட்டோம். ஏனென்றால் நமது ஆண்வர் தீர்க்கதரிசன ஆண்டவராயிருக்கிறார். ஆகையால் உலகத்திலும், ராஜ்யங்களுக்குள்ளும், ஜாதிகளுக்குள்ளும் நடக்கும் மாறுதல்களையும், சாஸ்திர வளர்ச்சி, நூதன விஷயங்கள், அவபக்தி, அக்கிரமப் பெருக்கங்களையும் நாம் கவனிக்கவேண்டும். காலங்களின் அடையாளங்களை நாம் கவனிக்கும்படி ஆண்வர் கட்டளையிட்டிருக்கிறார். இந்த அறிவிலும் நாம் வளரவேண்டும்.

## 4. இருதய கிறிஸ்து

ஆண்டவர் சீஷர்களைவிட்டுப் பிரியுமுன், சரீரத்தில் தாம் மறைந்தாலும், ஆவியில் அவர்கள் உள்ளத்தில் வந்து வசிப்பதாக வாக்குப்பண்ணினார். பெந்தெகொஸ்தே நாளில் தாம் சொன்னபடியே அவர்களுக்குள் வந்தார். கிறிஸ்துவைத் தங்கள் உள்ளத்தில் அறிந்தார்கள். பவுலுக்கும் அந்த அனுபவம் உண்டு: "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றார். ஆவியைப் பெற்றவர்கள் எல்லாரும் அப்படியே கண்டார்கள். மற்றவர்கள் இதை அறியார்கள். "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:27). "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன்." (கலா. 4:19). "நான் உங்களில் இருக்கிறதை அந்நாளில் அறிவீர்கள்" (யோவா. 14:20) இதுவே நமது ஜீவியத்தின் விசேஷித்த அறிவு. ஆண்டவர் உன்னதத்திலிருக்கிறவராக மாத்திரமல்ல. நமது பக்கத்தில் இருக்கிறவராக மாத்திரமல்ல. நமக்குள் வசிக்கிறவராக நாம்

அவரை அறிய வேண்டும். அவர் நமக்குள் வசிக்கும்போது நமது உள்ளத்தைப் பிரகாசிப்பித்து நமக்கும் பரம காரியங்களைப் போதிக்கிறார். நமது ஜீவியத்தைப் பலப்படுத்தித் தமக்கொப்பாக மாற்றுகிறார். அவருடைய குணத்துக்கும் சிந்தைக்கும் நாம் பங்காளிகளாகிறோம். இன்னும் சோதனைகளும் போராட்டங்களும் தவறுதலும் உண்டு. சோர்ந்து போகக்கூடாது. கிறிஸ்து நமக்குள் வசிக்கிறார் என்பதை திரும்பத்திரும்ப நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது தவறுதல்கள் நம்மை இன்னும் அதிகமாய்த் தாழ்த்தவும் நாம் ஆண்டவரைப் பூரணமாய்ச் சார்ந்து பிழைக்கவும் ஏதுவாயிருக்குமானால் அந்தத் தவறுதல்களும் லாபமே. அவராலேயல்லாமல் நம்மால் ஒன்றும் ஆகாதென்றும், அவர் மூலமாய் எல்லாவற்றையும் செய்ய நமக்குப் பலமுண்டென்றும் அறிய வேண்டும்.

சரித்திர கிறிஸ்து நமக்குப் பின்னே இருக்கிறார். மகிமையடைந்த கிறிஸ்து நமக்கு மேலே உயர்ந்திருக்கிறார். தீர்க்கதரிசன கிறிஸ்து இனி வெளிப்படப்போகிறார். உள்ளத்தில் கிறிஸ்து தமது ஆவியினால் இப்போதே நமக்குள் வசிக்கிறார். சரித்திர கிறிஸ்து நமது மாதிரியும் இரட்சகனுமானவர். மகிமையடைந்த கிறிஸ்து நமது கர்த்தரும் ஆண்டவருமாவார். தீர்க்கதரிசன கிறிஸ்து நமது ராஜாவும் நம்பிக்கையுமாவார். இருதய கிறிஸ்து நமக்கு ஜீவனும் பலமுமாவார். "கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருவோமாக" மனுஷனை அறியும் அறிவே மேலான அறிவு என்று ஒரு கவிஞன் பாடினான். தெய்வமும் மனுஷனுமான அதிசய புருஷனை அறிவதோ நிகரற்ற அறிவு. அவரை ஒருக்காலும் அறிந்து முடியாது. அறியும் அறிவில் வளர்ந்து கொண்டு போவதே நமக்கு நித்திய ஜீவன். சாஸ்திரத்திலும் சாஸ்திரி மேலானவன். கவியிலும் கவிஞன் மேலானவன். சித்திரத்திலும் சித்திரக்காரன் மேலானவன். இவை யாவற்றிலும் கிறிஸ்து மேலானவர். இந்த அறிவை வாஞ்சிப்போமாக. இந்த அறிவில் வளருவோமாக. "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" (பிலி. 3:8).

# 97. தேவசிநேகம்

***"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது." (1யோவா. 1:2).***

கிறிஸ்துமார்க்கத்தின் முடிவான நோக்கத்தை அநேகர் அறிகிறதில்லை. நரகம் தப்பி மோட்சம் சேர்ந்தால் போதுமென்பதே அவர்கள் எண்ணம். அநேகர் பாவமன்னிப்பு கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறார்கள். தங்கள் மனம்போல் நடக்கவேண்டியது. பாவம் செய்தால் ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளவேண்டியது. மார்க்க ஆசாரங்களை ஒழுங்காய் நடத்திக்கொண்டு போவது இன்னும் அநேகருடைய கிறிஸ்துமார்க்கம். நாம் அழைக்கப்பட்ட அழைப்பின் நோக்கம் என்ன? சிலுவையின் முடிவான நோக்கம் என்னவென்று அநேகர் யோசிக்கிறதில்லை. நாம் கடவுளுடைய ஐக்கியத்தில் பிழைக்கவேண்டுமென்பதே கிறிஸ்துமார்க்கத்தின் நோக்கம். அந்த ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ளவே நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. இம்மையில் கடவுளுடைய ஐக்கியத்தில் பிழைக்காதவன் நரகம் தப்பி மோட்சம் சேருகிறதெப்படி? காரியம் அறியாத கிறிஸ்தவர்களால் மார்க்கத்துக்கு குறைவு உண்டாகிறது.

**1. கடவுள் ஐக்கியம் என்பது பிதாவோடு ஒற்றுமையாகி அவர் அன்பில், அவர் சிநேகத்தில் நிலைத்திருப்பதாகும்**

ஆண்டவர் மரணம் நமக்குச் சம்பாதித்த பெரிய சிலாக்கியம் அதுதான். இந்த ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது என்று யோவான் சொல்லுகிறார். இரண்டு ஐக்கியமென்பது அவர் கருத்தல்ல. இதே மாதிரி "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று சொன்னவரும் யோவானே. இங்கே இரண்டு அறிவு இல்லை. கிறிஸ்துவை அறிகிற அறிவே, பிதாவை அறிகிற அறிவு. கிறிஸ்து இல்லாமல் பிதாவை அறிய முடியாது. அதுபோல குமாரனோடுள்ள ஐக்கியமே பிதாவோடுள்ள ஐக்கியம். குமாரனில்லாமல் பிதாவோடு ஐக்கியப்பட வழியில்லை.

யோவான் மாத்திரமல்ல, பவுலும் இந்த ஐக்கியத்தைப் பற்றிப் பேசுகிறார். "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1கொரி. 1:9).

**2. ஐக்கியமென்பது விசேஷமாய் சிநேகத்தைக் குறிக்கும்.**

கடவுளோடு நாம் சிநேகமாயிருக்க முடியுமா? அவர் யார்? நாம் யார்? கடவுள் நமது சிருஷ்டிகரும் சகலத்தையும் ஆண்டு நடத்தும் அதிபதியுமாயிருக்கிறாரே. அவர் தயவால் நாம் பிழைக்கிறோம். பயபக்தியோடு தூரநின்று அவரை நாம் வணங்கவேண்டியதே நியாயம். அப்படியிருக்க அவருக்கு நாம் சிநேகிதராயிருப்பது எப்படி? ஓர் அரசன் பிச்சைக்காரன் ஒருவனைக் கண்டு அவனுக்குத் தர்மம்செய்தால் உபகாரி என்னப்படுவான். அரசனும் பிச்சைக்காரனும் சிநேகிதர் ஆவார்களா? உலகத்தின் காரியங்கள் எப்படியிருந்தாலும் கடவுள் நமது பிதாவென்பதும், நாம் அவர் பிள்ளைகளும் சிநேகிதருமாயிருக்கிறோமென்பதும் நிச்சயம். கிறிஸ்துவின் ஜீவியத்தில் விளங்கின அன்பும் சிநேகமும் கடவுளுடையதென்பது நிச்சயம். சீஷர்கள் கிறிஸ்துவைப் போதகராக, தீர்க்கதரிசியாக ஆண்டவராக மதித்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து "நீங்கள் என் சிநேகிதர். உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்று சொன்னபோது அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. பிந்தி இந்தச் சிநேகத்தின் ஐக்கியத்தைத் தங்கள் அனுபவத்தில் கண்டு: "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று சொன்னார்கள்.

## சிநேகத்தின் இலட்சணங்கள் எவை?

**1. சிநேக ஐக்கியம் இருபட்சத்தாருக்கும் உரியது**

இதைப் பிரதானமாய் நாம் கவனிக்க வேண்டும். அவர் ஒருவரே நம்மில் அன்பு வைப்பது சிநேகமாகாது. அரசன் ஏழைக்குச் சகாயம் செய்வது சிநேகமல்ல. அது தர்மசிந்தையாகும். ஆண்டவரிடம் நாம் சகாயத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அவர் எல்லாருக்கும் நன்மை செய்யும் சுபாவமுள்ளவர். அதினாலே நாம் சிநேகிதராக மாட்டோம்.

அவர் நம்மில் அன்பு கூறுகிறதுபோல நாமும் அவரில் அன்புகூர்ந்தால் மாத்திரம் நாம் அவருக்கு சிநேகிதராவோம். அப்படியில்லையென்றால் சிநேகம் என்றும், ஐக்கியமென்றும் பேச இடமில்லை. யோவான் இதைக் குறித்துத் தமது நிருபங்களில் வெகு திட்டமாய் எழுதியிருக்கிறார். அவர் கிறிஸ்துவில் அன்பு வைத்து அவர் ஐக்கியத்தில் உறவாடினவர். சிநேகம் இருபட்சத்தாரையும் சேர்ந்தது.

## 2. சிநேகத்தின் பேச்சுத் தாராளம்

அந்நியரிடத்தில் பேசும்போது நாம் யோசித்துப் பேசுகிறோம். நம்பக்கூடாத மனிதரிடத்தில் பேசும்போது ஜாக்கிரதையாகப் பேசுகிறோம். சிநேகிதரோடு பேசும்போது தாராளமாகப் பேசுகிறோம். மனதில் உள்ள யாவும் வாயில் வருகிறது. சிநேகிதனை நாம் சந்தேகிக்கிறதில்லை. என்ன நினைப்பானோ என்கிற பயமில்லை. நாம் என்ன பேசினாலும் நலமானதை எடுத்துக்கொண்டு, உதவாதவைகளை அவன் மறந்துவிடுவான். இதுவே சிநேகத்தின் லட்சணம். மறைவு, கபடு, தந்திரம், பொய், மாயம் சிநேகத்தைக் கெடுக்கும். கிறிஸ்துவோடு நமக்குச் சிநேக ஐக்கியமுண்டானால் அவரோடு நாம் தாரளமாகப் பேசுகிறோமா? அல்லது காரியங்களை அவருக்கு மறைக்கிறோமா? அவர் சிநேகம் உண்மை. அவர் காரியங்களை நமக்கு மறைப்பதில்லை. உங்களைச் சிநேகதிர் என்றேன்; ஏனென்றால் "நான் என் பிதாவினிடத்தில் கேள்விப்பட்ட எல்லாற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." "நான் செய்யப்போகிறதை என் சிநேகிதனாகிய ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" ஆண்டவருக்கு தன் காரியங்களை மறைக்கிறவன் அவருக்கு சிநேகிதன் அல்ல. மனதிலுள்ள தெல்லாவற்றையும் அவருக்குத் தாரளமாகச் சொல்ல வேண்டும்.

## 3. சிநேகத்தின் வேலை சுயாதீன வேலை

"நான் உங்களை வேலைக்காரர் என்று சொல்லுகிற தில்லை. வேலைக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதரென்றேன்" இதன் கருத்தென்ன? வேலைக்காரர் அல்லது அடிமைகளுக்கு சுயாதீனமில்லை. தாங்களாக ஒன்றை செய்ய இடமில்லை. எஜமான் என்ன சொல்லுவானோ, அதை ஏன், எப்படி என்று

கேளாமல் செய்யவேண்டியது. அவர்கள் இயந்திரங்கள் போலிருக்கிறார்கள். கட்டாயம் வேலைசெய்து தொலைக்க வேண்டியது. அவர்கள் மனதில் முறுமுறுப்பு இருக்கும். ஆண்டவரோ, நான் உங்களை வேலைக்காரரென்று சொல்லுகிறதில்லை. சிநேகிதர் என்றேன். என் சிநேகிதராகவே நீங்கள் வேலை செய்யவேண்டும் என்கிறார். சிநேகிதர் ஒருவருக்கொருவர் செய்யும் உதவிகள் கட்டளையால் அல்ல. அவர்கள் எடுத்துக்கொள்ளும் சகல கஷ்டங்களுக்கும் அன்பும் சிநேகமுமே காரணம். ஆண்டவர்மீதுள்ள அன்பின் ஐக்கியத்தில் பிழைக்கிறவர்கள். தாங்களாகவே உற்சாகமாய் தேவ ராஜ்யத்திற்காக உழைக்கிறார்கள். அவர்கள் பிரயாணம் செய்த மைல்களையும், நடத்தின கூட்டங்களையும், செய்த பல வேலைகளையும் கணக்கிடமாட்டார்கள். சிநேகம் ஊழியத்துக்குப் பலம். தாய் தன் நோயாளிப் பிள்ளைக்குச் செய்யும் பணிவிடை அன்பின் ஏவுதலாயிருக்கிறது. கிறிஸ்துவின் சிநேகிதர் செய்யும் ஊழியமும் அப்படியே.

### 4. சிநேகத்தின் அனுபவம் இருவருக்கும் பொது

ஐக்கியம் என்னும் வார்த்தை சிநேகம் என்பது மாத்திரமல்ல, கூட்டுறவு பங்குடைமை என்றும் பொருள்படும். உண்மையான சிநேகிதருக்குள் நீ, நான் என்றும், உன்னுடையது, என்னுடையது என்றும் வித்தியாசமில்லை. தேவ ஐக்கியத்தில் பிழைத்த ஆதிக்கிறிஸ்தவர்களுக்குச் சகலமும் பொதுவாயிருந்தது. ஆண்டவரும் நாமும் சிநேகிதர்களானால் சகலமும் பொதுவாயிருக்கும். அவருடையவைகள் நம்முடையவைகள்; நம்முடையவைகள் அவருடையவைகள். லாபம் அவருக்கும் நமக்கும் பொது. மேன்மை அவருக்கும் நமக்கும் பொது, அவமானம் அவருக்கும் நமக்கும் பொது நம்மைக்குறித்து எனக்கென்ன என்று அவரிருக்கமாட்டார். அவரைக் குறித்து நமக்கென்னவென்று தான் நாமிருக்கமாட்டோம். அப்படியிருந்தால் நாம் அவர் சிநேகிதரல்ல. கிநேகத்தின் அனுபவம் இருவருக்கும் பொது.

### 5. மௌனம் சிநேகத்தின் லட்சணங்களுள் ஒன்று

எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பதுதான் சிநேகமல்ல. எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சொல்லிவிடுவதுதான்

சிநேகமல்ல. அன்புள்ள ஆண்டவர் சீஷர்களுக்கு எல்லாவற்றையும் சொன்னார். என்றாலும் அவர் சொல்லாமல் விட்ட காரியங்களுமுண்டு. "நான் இன்னும் உங்களுக்குச் சொல்ல வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு, ஆனால் இப்பொழுது சொல்லமாட்டேன்" உங்கள் சிநேகத்தின் வளர்ச்சிக்கும் அன்புக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பிந்தி அவைகளை அறிவிப்பேன். இங்கே மௌனம் காணப்படுகிறது. தாரளமாகப் பேசுவது எப்படி சிநேகத்தின் லட்சணமோ, அதுபோலவே மௌனமும் சிநேகத்தின் லட்சணமாயிருக்கிறது. நமது சிநேகிதனைச் சந்திக்கும்போது அவன் மௌனமாயிருக்கிறான். ஆகையால் அவன் நம்மைச் சிநேகிறதில்லை என்கிற முடிவுக்கு வரலாமா? ஏன் பேசாதிருக்கிறாய் என்று கேளாமல் இன்னும் அவன் சிநேகத்தை நாம் நம்பவேண்டும். அவன் மௌனமாயிருப்பதை நாம் மதிக்க வேண்டும். கடவுளுடைய சிநேகிதரிடத்தில் அவர் சில சமயங்களில் மௌனமாயிருக்கிறார். ஜெபத்துக்குப் பதில் இல்லை. நடக்க வேண்டிய வழி தெரியவில்லை. அவர் மௌனமாயிருக்கிறார். அந்த மௌனமும் அன்புதான். நாம் கலங்கக்கூடாது. அவர் அன்பைச் சந்தேகிக்கக்கூடாது. அவர் மௌனத்துக்குக் காரணமிருக்கும். அவர் பேசாவிட்டாலும் இன்னும் அவரில் நம்பிக்கையாயிருப்போமானால் பிந்தி அவரன்பை அறிவோம். நாமும்கூட எப்போதும் ஆண்டவரோடு தாரளமாகப் பேசிக் கொண்டிருக்கிறதில்லை. சில சமயங்களில் மௌனம் நம்மையும் ஆண்டுகொள்ளுகிறது. அதனாலே ஆண்டவர் கோபித்துக் கொள்வதில்லை. நமது மௌனத்தின் காரணத்தை அவர் அறிவார்.

**6. சிநேகத்தின் பலன்கள் எவை?**

அ. நமக்கு வேண்டியதைப் பிதாவிடம் பெற்றுக்கொள்ளுகிறோம் (யோவா. 15:16)

ஆ. நிலைத்திருக்கும் கனி, கொடுக்கிறோம் (யோவா. 15:16).

இ. கிறிஸ்துவின் சிநேகிதருக்குள் ஒற்றுமையுண்டாகும் (யோவா. 15:17)

ஈ. பிதா மகிமைப்படுவார் (யோவா. 15:8)

**7. சிநேக ஐக்கியம் எப்படி உண்டாகும்?**

இருவர் சிநேகிதராகவேண்டுமானால் யாராவது ஒருவர் அதை முந்தித் தொடங்கவேண்டும். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டேயிருப்பார்களானால், ஒருவர் மனது ஒருவருக்குத் தெரியாமல், சிநேகிதராகாமலே இருப்பார்கள். ஆண்டவருக்கும் நமக்குமுள்ள சிநேகத்தில் நாமல்ல, ஆண்டவரே சிநேகத்தைத் தொடங்கினார். "நீங்கள் என்னைத்தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்கிறார். ஆண்டவர் சீஷர்களைச் சிநேகிதராகப் பாவித்து நடத்தினது அவர்களுக்குத் தெரியாது. அந்த மூன்றரை வருஷகாலமும் அவர்களைத் தமது சிநேகிதராகவே நடத்தினார். அது அவர்களுக்குத் தெரியாது. இப்போது அதை வெளியிட்டுச் சொல்லுகிறார். "நான் உங்களைச் சிநேகிதர் என்கிறேன்" என்று அப்போதுதான் சிநேகிதரானதுபோல் அவர் சொல்லாமல் "நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்று இறந்தகாலமாகப் பேசுகிறார். ஆண்டவர் அன்பும் சிநேகமும் முந்தினது. நாம் அதைப் பிந்தி அறிந்து அவர் சிநேகிதராகிறோம். "அநாதி சிநேகத்தால் நான் உன்னைச் சிநேகித்தேன்".

# 98. "விசுவாசியாதிருந்தால்"

**"நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்." *(சங். 27:13)*.**

இந்த வசனம் பூர்வ பிரதிகளில் பூரணமாய் முடிவு பெறவில்லை. "விசுவாசியாதிருந்தால்" என்ற வார்த்தையோடு நின்று விடுகிறது. அதைப் பாடின சங்கீதக்காரன் "கெட்டுப் போயிருப்பேன்" என்கிற வார்த்தையைச் சொல்லாது விட்டு விட்டார். மொழிபெயர்த்தவர்கள் வசனம் முடிவு பெறாதிருப்பதைக் கண்டு, "கெட்டுப்போயிருப்பேன்" என்கிற வார்த்தையைச் சேர்த்தார்கள். விசுவாசியாதிருந்தால் எப்படியிருக்கும் என்றும், சங்கீதக்காரன் வசனத்தை முடிக்கிறதாயிருந்தால் எந்த வார்த்தையைப் போட்டிருப்பான்

என்றும் யோசித்து "முற்றிலும் சோர்ந்துபோயிருப்பேன்" அல்லது "கெட்டுப்போயிருப்பேன்" என்கிற வார்த்தைகளைச் சேர்த்தார்கள். சங்கீதக்காரன் வசனத்தை ஏன் முடிக்கவில்லை? என்ன சொல்லுவது என்று அவருக்கே தோன்றவில்லை. முடிவு அவ்வளவு பயங்கரமாயிருக்கும். அதைச் சொல்ல அவருக்கு வார்த்தையில்லை. தகப்பன் மரத்தடியில் நிற்க, மரத்தின் உச்சியில் ஏறின பையன் தவறி விழுந்துவிட்டான். தகப்பன் உடனே மகனை ஏந்திப் பிடித்துக்கொண்டான். பிந்தி அந்த ஆபத்தைப்பற்றி தகப்பன் பேசுகையில்: என் மகன் விழுந்த சமயத்தில் நான் மாத்திரம் மரத்தடியில் நிற்காதிருந்தால் என்று மாத்திரம் சொல்லி அப்புறம் பேசமுடியாமலிருப்பதைப் போலிருக்கிறது. "ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று நான் விசுவாசியாதிருந்தால்" ஆ, என் முடிவு எவ்வளவு பயங்கரமாயிருக்கும் என்பதே சங்கீதக்காரன் வசனத்தை முடிக்காமல் விட்ட காரணம். அதை மொட்டையாய் விடக்கூடாதென்று மொழிபெயர்த்தவர்கள் "கெட்டுப்போயிருப்பேன்" என்னும் வார்த்தையைச் சேர்த்தார்கள்.

## 1. ஜீவனுள்ளோர் தேசத்தின் அனுபவம்

மனுஷப் பிறப்பு அரிதாயினாலும் ஏன்தான் பிறந்தோமோ என்று புலம்புவோர் அனந்தம். உலக வாழ்க்கையில் சகிக்கமுடியாத தொல்லைகள் உண்டு. சிறுபிள்ளைகள் அதை அறியார்கள். அவர்களுக்குச் சாப்பிடுவதும் விளையாடுவதும் தூங்குவதுமே அவர்கள் கண்ட உலகம். வாலிபரும் சரியாய் அறியார்கள். அவர்கள் அனுபவம் அரைகுறையானது. அவர்கள் உலக காரியங்களைப் பூரணமாய் அறிந்தவர்கள் அல்ல. முதியோரான புருஷர் ஸ்திரீகளே உலகத்தின் காரியங்களை அனுபவத்தில் அறிந்தவர்கள். அவர்கள் குழந்தைகளாக விளையாடித் திரிந்த காலங்கள் உண்டு. வாலிபராக உல்லாசமாய்த் திரிந்த நாட்கள் உண்டு. அவை கடந்த காலங்கள். அவர்களுடைய பிந்தின அனுபவமோ பல சிக்கல்களுள்ளவை. இவர்களுக்கே ஜீவனுள்ளோர் தேசம் எப்படிப்பட்டதென்று தெரியும். அவர்கள் அனுபவத்தில் சிலவற்றை ஆராய்வோம்

மனிதரில் பலருடைய அனுபவமும் பலவிதமாயிருக்கிறது. காலம் வேகமாய் பறந்துபோகிறது. நாம் இதுவரை செய்த

காரியங்கள் எவ்வளவோ குறைவாகக் காணப்படுகின்றன. இன்னும் நாம் நிறைவேற்றவேண்டிய வேலைகள், கடமைகள் உண்டு. அவைகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று தெரியும். ஆனால் பலமோ இல்லை. அற்பவேலைகளும் பாரமாகத் தோன்றுகின்றன. செய்த தீர்மானங்கள் பல. நிறைவேற்றும் சக்தியோ இல்லை. இந்தப் பலவீன உணர்ச்சி நமது ஜீவியத்தை அந்தகாரப்படுத்துகிறது. எத்தனையோ விஷயங்களில் நாம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் நமக்குள்ளேயே ஏமாந்தோம். மற்றவர்களால் ஏமாற்றமடைந்தோம். நாம் தீர்மானித்த காரியங்கள் நமது மனம்போல் முடியாததால் ஏமாந்தோம். நிறைவேற்றின காரியங்களும் திருப்தியாக முடியவில்லை. நமது நல்ல ஆசை விருப்பங்கள் கைகூடாமல் காலதாமதமாகிறது. இதுவே சிகரம் என்று நினைத்து ஏறவே இன்னும் பல சிகரங்கள் அதற்குமேல் நிற்கின்றன. நமக்கோ மேல் மூச்சு வாங்குகிறது. ஆகவே ஜீவனுள்ளோர் தேசத்தில் திருப்தியற்ற நிலைமையும் நமது அனுபவமே.

இன்னும் பல காரியங்கள் விளங்காத ரகசியமாகவே இருக்கின்றன. என்னென்ன பிரயாசப்பட்டாலும் காரியம் பலிக்கவில்லை. எத்தனையோ மறைவான விஷயங்களின் மத்தியில் நாம் சஞ்சரிக்கிறோம். நமது மனம் எத்தனையோ கேள்விகளைக் கேட்கிறது. உத்தரவோ இல்லை. விளங்காத படுமுடுச்சுகள் மனதுக்கு சஞ்சலத்தை உண்டாக்கின்றன. இருளில் நடக்கிறவர்கள்போலிருக்கிறோம். இதுவும் ஜீவனுள்ளோர் தேசத்தின் அனுபவமே. இவைமாத்திரமோ, பாவவல்லமையின் போராட்டத்தை அறியாதவர் யார்? அது இல்லாத இடமும் கிரியை நடப்பிக்காத மனிதரும் எங்கே காணலாம்? மனிதன் படும் சகல கேடுபாடுகளுக்கும் காரணம் பாவமல்லவா? இதுவும் ஜீவனுள்ளோர் தேசத்தில் பலத்த அனுபவமாகும். முடிவாக மரணம். மரணம் ஆதிமுதல் மனுஷ ஜாதியை நடுங்கவைத்திருக்கிறது. அது நுழைந்த இடமெல்லாம் சஞ்சலமும் துயரமுமே. அது நுழையாத இடமேயில்லை. இவ்வாறு மனுஷன் படும் சகல பாடுகளையும் சஞ்சலங்களையும் கவலையையும் கண்ணீரையும் கண்ட சங்கீதக்காரன் வேறொரு இடத்தில்: "மனுப்புத்திரர் யாவரையும் நீர் வீணாய்ச் சிருஷ்டிக்க வேண்டியதென்ன?" என்று புலம்பினார். காரியங்களை இருக்கிறபடி கவனித்தால் ஜீவனுள்ளோர் தேசமாகிய இந்த உலகம் விரும்பப்

படத்தக்கதல்ல. இவைகளுக்கு நிவாரணம் என்ன? எந்த ஞானம், எந்த அறிவு, எந்த சாஸ்திரம் எந்தத் தத்துவம் நமக்கு விமோசனம் கொடுக்கும்? கடவுள் இல்லையென்றால் உலகத்தின் கதி அதோகதிதான். "நான் விசுவாசியாதிருந்தால்" என்று சங்கீதக்காரன் வியப்புடன் சொன்னது ஆச்சரியமல்ல.

## 2. ஜீவனுள்ளோர் தேசத்தில் கர்த்தருடைய நன்மை

உலகத்தின் காரியங்கள் எவ்வளவு விபரீதமாயிருந்தாலும், நன்மை செய்யும் கடவுள் அத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதே பெரிய ஆறுதல். அவர் ஞானம், நீதி, பரிசுத்தம், அன்பு, கிருபை, அனுதாபம் நிறைந்த பரம பிதா. பூமியும் அதன் நிறைவும் அவர் கிருபையுள்ள ஆளுகைக்கு விலகினதல்ல. அவர் எப்படிப்பட்டவர் என்பதை சங்கீதக்காரனைப்பார்க்கிலும் நாம் அறிந்திருக்கிறோம். அவர் உலகத்தில் வைத்துள்ள அன்பை கல்வாரிச் சிலுவையில் காண்கிறோம். அவர் நம்மை மறக்கிறவரல்ல, நமக்குத் தூரமானவரல்ல, நமக்குள் வசிக்கும் கடவுள். அவருக்கும் நமக்குமுள்ள பிதா புத்திர சம்பந்தமும், அவர் நமக்கு நன்மை செய்யும் தகப்பன் என்கிற அறிவும் விசுவாசமும், முன் கவனித்த சகல தீமைகளுக்கும் நிவாரணமாயிருக்கிறது. இந்த உலக ஜீவியமே முடிவான ஜீவியமல்ல. மனிதன் நித்திய வாழ்வுக்கென்று குறிக்கப்பட்டவன். ஜீவனுள்ளோர் தேசத்தில் கசப்பான அனுபவம் அந்த ஜீவனை அழிக்கமாட்டாது. தன்னை இரட்சித்துக் காப்பாற்றி வழிநடத்தும் கர்த்தரால் மாராவின் கசப்பான விஷயங்கள் மதுரமாக மாறும் என்று விசுவாசி அறிவான்.

ஜீவனுள்ளோர் தேசத்தில் கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்கிற விசுவாசம் சகல தீமைகள் மேலும் வெற்றி கொடுக்கிறது. தன் பலவீனத்தில் கர்த்தர் பலம் பூரணமாய் விளங்கும். தன் ஏமாற்றம் என்று துக்கித்த காரியங்கள் அனுகூலங்களாக முடியும். விளங்காத ரகசியங்கள் என்று கலங்கின காரியங்கள் கடவுளுக்கு வெளியரங்கமானதால், எனக்கு விளங்காவிட்டாலும், என் பிதா அறிந்திருக்கிறார் என்னும் நம்பிக்கை மன ஆறுதலைக் கொடுக்கிறது பாவம் என்ற விஷயத்தில் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் மன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும் அளிக்கிறது. மரணம் என்னும் திகில் நீங்கி சரீரத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடன்

கூட இருப்போம் என்னும் நம்பிக்கையை கொடுக்கிறது. இவையாவும் ஜீவனுள்ளோர் தேசத்தில் கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்கிற விசுவாசத்தின் பலன்களாகும். அப்படி விசுவாசியாதிருந்தால் வேறு நம்பிக்கை ஏது? விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன். நமது விசுவாசம் நம்மை கடவுளோடு இணைக்கிறது. ஜீவனுள்ளோர் தேசத்தில் சகலத்தையும் சகிக்கவும், சகலத்தையும் மேற்கொள்ளவும் நமக்கு தேவபலமாயிருக்கிறது. "தேவனால் எல்லாம் கூடும்" "விசுவாசிக்கிறவனால் எல்லாம் கூடும்" நாம் பிதாவாகிய கடவுளை மறந்து, ஜீவனுள்ளோர் தேசத்தின் காரியங்களை மாத்திரம் கவனிப்போமானால் நாம் நிலைநிற்க மாட்டோம். "ஜீவனுள்ளோர் தேசத்தில் கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன்" விசுவாசித்தது மெய்யானால் அவருடைய வேளைக்கும் நடத்துதலுக்கும் பொறுமையுடன் காத்திருப்போம். விசுவாசத்தின் பலன் அமரிக்கை. அமரிக்கையும் நம்பிக்கையுமே நமது பலம்.

# 99. பவுலின் முள்

***"என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது" (2 கொரி. 12:7).***

இந்த அதிகாரம் முதல் பத்து வசனங்களில் அப்போஸ்தலன் சில அருமையான அனுபவங்களைக் கூறுகிறார். முதலாவது, அவருக்குக் கிடைத்த விசேஷித்த சிலாக்கியம். இரண்டாவது, தம்மை வேதனைப்படுத்தின முள், மூன்றாவது, அது நீங்கும்படி தாம் செய்த வேண்டுதல். நாலாவது, கிடைத்த உத்தரவு. ஐந்தாவது, தாம் செய்த தீர்மானம். இவைகளை முறையே தியானிப்பது நமக்கு ஆசீர்வதமாகும்.

**1. பவுலுக்குக் கிடைத்த விசேஷித்த சிலாக்கியம்**

அவர் மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டார். அதிலிருந்து பரதீசுக்குள் எடுக்கப்பட்டார். அங்கே அவர் கண்ட மகிமையான காட்சி பிரமிப்பை உண்டாக்கினது. அவர் கேட்ட வார்த்தைகள் ஆச்சரியமானவை. பிதா பேச, ரட்சகர் பேச, தேவதூதர்கள் பேச, பூரணராக்கப்பட்ட ஆவிகள் பேச அவர்

கேட்ட வார்த்தைகளைத் திரும்பச் சொல்ல அவரால் முடியவில்லை. அவைகள் மனிதர் பேச முடியாததும் வாக்குக் கெட்டாததுமான வார்த்தைகள். மற்றவர்களுக்குச் சொல்லமுடியாவிட்டால் அவருக்குக் கிடைத்த தரிசனத்தால் நமக்கென்ன பிரயோஜனம்? இது மற்றவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட தரிசனமல்ல. ஆண்டவர் தமது ஊழியனைப் பலப்படுத்தும்படி அவருக்கென்று அருளிய தரிசனம். மேலும் பரம காரியங்களை பூமிக்குரிய வார்த்தைகளால் பேசுவது முடியாத காரியம். சரீரத்தை விட்டு நாலுநாள் பிரிந்திருந்த லாசரு உயிரோடே வந்தபோது மறுமையைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

அப்போஸ்தலன் இந்தத் தரிசனத்தைப்பற்றி பதினாலு வருஷமாய் ஒன்றுமே பேசவில்லை. அப்படியிருக்க இப்போது அதைப்பற்றி பேசுவானேன்? கொரிந்து சபையிலுள்ளவர்களும் மற்றவர்களும் அவர் எப்படிப்பட்டவரென்று அறியாமல் அவரைக் குறையாய்ப் பேசினார்கள். அதற்கு தாம் எந்த வகையிலும் மற்றவர்களுக்கு தாழ்ந்தவரல்ல என்று தம்மை மேன்மைப்படுத்திப் பேசும்படி பலவந்தம் பண்ணப்பட்டார். அப்படிப் பேசுவது அவருக்குப் பிரியமல்லை. என்றாலும் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவ்வாறு பேசும்போதே மேன்மைபாராட்டி புத்தியீனனானேன் என்று புலம்புகிறார். இதை முந்தின அதிகாரத்தில் காணலாம். அதன் சம்பந்தமாகவே தமது தரிசனத்தையும் சொல்ல நேரிட்டது. அதையும் வேறொரு ஆள் கண்ட தரிசனம்போலவே பேசுகிறார். மற்றவர்கள் தம்மைக் குறைவாகப் பேசித் தமது ஊழியத்துக்கு இடையூறு செய்கிறார்களே என்று நினைத்துத் தான் இந்தத் தரிசனத்தை வெளியிட்டார். தமக்குப் பெருமையைத் தேடியிருப்பாரானால் தரிசனங்கண்ட முதல் நாளிலேயே சொல்லியிருப்பார். பதினாலு வருடம் அதை மறைத்து வைத்திருக்கமாட்டார்.

## 2. அவரை வேதனைப் படுத்தின முள்

மேலான வெளிப்படுத்தல்களையும் தரிசனங்களையும் பெற்று அப்போஸ்தலனுக்கு தம்மை உயர்த்தக் கூடிய சோதனையிருந்தது. "நான் என்னை உயர்த்தாதபடிக்கு" "நான் என்னை உயர்த்தாதபடிக்கு" என்று இருமுறை சொல்லுகிறார். "நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு

அது என்னைக் குட்டும் (வேதனைப்படுத்தும்) சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" என்கிறார். இந்த முள் எதுவாயிருக்கலாம்? இதை ஆதிமுதல் அறியும்படி பிரயாசப்பட்டவர்கள் அநேகர். இன்னும் அந்த முள் மர்மமாகவேயிருக்கிறது. சிலர் காக்காய் வலி என்கிறார்கள். அது கொடிய வியாதிதான். அது பவுலுக்கு அடிக்கடி வந்திருக்குமானால் அவரை உபயோகமற்ற மனுஷராக்கியிருக்கும். ஏனென்றால் அது தேகத்தை பாடுபடுத்துவதோடு புத்தியையும் தாக்கும். மேலும் பவுல் பேசுகிற முள் பரம தரிசனம் தமக்கு கிடைத்தபின் கொடுக்கப்பட்டதாக சொல்லுகிறார். அது காக்காய் வலிப்பானால் பதினாலு வருடம் அந்த நோயால் பாடுபட்ட மனிதன் இரண்டாம் கொரிந்தியர், ரோமர், பிலிப்பியர், கொலோசேயர் எபேசியர் நிருபங்களை எப்படி எழுதியிருக்க முடியும்? அவருடைய பலமும், முயற்சியும், யோசனைகளும், வேலைகளும் கடைசிவரை குன்றினதல்ல.

சிலர் தமஸ்குவுக்குப் போகிற வழியில் அவர் ஆண்டவரைத் தரிசித்தபோது கண்பார்வை இழந்தார், அதிலிருந்து முந்தின பார்வை அவருக்குக் கிடைக்கவில்லை, அதுவே அந்த முள் என்கிறார்கள். அவர் கலாத்தியரைப் பார்த்து: "உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக் கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள்" என்று அவர் சொன்னதை ஆதாரமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். அனனியா வந்து ஜெபிக்கவும் பவுல் பார்வையடைந்தாரென்று வாசிக்கிறோம். கர்த்தர் பார்வை கொடுக்கும்போது அரைக்கண், முக்கால்கண் பார்வை கொடுக்கிறவரல்ல. மேலும் என் மாம்சத்தில் ஒரு முள் என்று சொல்லுகிறாரேயன்றி என் கண்களில் முள் என்று அவர் சொல்லவில்லை. வேறு சிலர் தலைநோவு, காதுவலி, மலைஜுரம் என்கிறார்கள். இவைகளை அவர் பிரமாதமாக எண்ணி அவை நீங்கும்படி ஊக்கமாய் வேண்டிக்கொண்டார் என்று நினைக்க ஏதுவில்லை. அவர் தம்மை அகாலப்பிறவி என்று சொன்னதால் காலத்துக்கு முன் அவர் பிறந்தபடியால் சரீரத்தில் பூரணப்படாதவரும் பலவீனருமாயிருந்தார் என்கிறார்கள். உயிர்த்தெழுந்த இரட்சகர் எல்லாருக்கும் பின்பு தமக்கு அதிசயமான விதமாய்த் தரிசனமானதைக் குறித்து தம்மை அகாலப்பிறவி என்றாரே தவிர, ஆறுமாதத்தில் ஏழு மாதத்தில் தாம் பிறந்தவர் என்பது அவர் கருத்தல்ல. அப்படிப் பிறந்திருந்தாலும் அது

இடைவிடாமல் தன்னை வேதனைப்படுத்தும் முள் ஆகாது. இன்னும் சிலர் அந்த முள் அவரிடத்திலிருந்த மாம்ச சம்பந்தமான ஒரு பாவம் என்கிறார்கள். இது உண்மையானால் கர்த்தர் அதை நீக்க மாட்டேன், இருக்கட்டும் என்று ஒருபோதும் அவர் சொல்லியிருக்கமாட்டார். இப்படிப்பட்ட பாவங்களைக் குறித்து மகா கண்டிப்பாய் நிருபங்களில் எழுதின பவுல் தன் விஷயத்தில் மாத்திரம் அது இருக்க சம்மதிப்பாரா? ஆகையால் மாம்ச இச்சையான பாவம் என்று சொல்லமுடியாது. மாம்சத்துக்குப் பிரியமான பாவம் வேதனைப்படுத்தும் முள் போலிருப்பது எப்படி? மேலும் மாம்சத்துக்குரிய இச்சை மறைவாயிருக்குமேயன்றி மற்றவர்கள் கண்டு அவரைக் குறைவாய் நினைப்பதற்கு ஏதுவாகயிருக்குமா? இந்த முள்ளைப் பற்றி அப்போஸ்தலன் பேசுகையில் மற்றவர்கள் அதினிமித்தம் தம்மை அற்பமாய் நினைக்க இடமிருந்தது போல் பேசுகிறார். அப்படியானால் அந்த முள் எது? இதைப் பற்றி கலாத்தியரோடு சொல்லுகிறார். "என் சரீரத்தில் உண்டாயிருக்கிற அடக்குகிற சோதனையை நீங்கள் அசட்டை பண்ணாமலும், அரோசியாமலும், தேவதூதனைப் போலவும், கிறிஸ்து இயேசுவைப் போலவும் ஏற்றுக்கொண்டீர்கள்" என்கிறார். அவர் சரீரத்தில் ஏதோ வேதனைப்படுத்தும் நோயாயிருக்க வேண்டும். அது அவரைப் பலவீனப்படுத்தினது. அந்த வேதனை வரும்போது அவரால் தாங்க முடியவில்லை. "ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்கிறார். கடவுள் கொடுத்ததல்ல, அது சாத்தானுடைய தூதன். அதாவது சாத்தானுடைய வேலை. கடவுள் அதற்கு இடங்கொடுத்தார். பவுல் தம்மை உயர்த்திக் கெட்டுப் போகாதபடிக்கு இந்த முள் கடவுள் சித்தப்படி அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

### 3. அது நீங்கும்படி அவர் செய்த வேண்டுதல்

அந்த முள் தம்மை விட்டு நீங்கும்படி ஆண்டவரிடம் மூன்று முறை வேண்டிக்கொண்டார். ரட்சகருக்கு பவுல் பேரில் அனுதாபமிருந்தது. ஏனென்றால் அவரே கெத்சமெனேயில் மூன்று தரம் அந்தக் கசப்பான பாத்திரம் தம்மை விட்டு நீங்கக்கூடுமாவென்று ஜெபித்தவர். ஆனால் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. "பிதாவே உமக்குச் சித்தமானால்" என்பது கிறிஸ்துவின் ஜெபம். இந்த முள் நீங்கத்தான் வேண்டுமென்பது பவுல் ஜெபம். தாம் அதைச் சகித்துக் கொண்டாலும் மற்றவர்கள் பார்வையில் நிந்தைக்கும்

அவமானத்திற்கும் காரணமாயிருப்பதால் அது நீங்கி விட்டால் நல்லதே என்பது பவுல் விருப்பம். மோசே யோர்தானைக் கடந்து கானானைப் பார்க்கும்படி கடவுளிடம் ஜெபித்தபோது இனிமேல் இதைப்பற்றி என்னோடு பேசாதே என்று மோசேயைக் கடிந்து கொண்டார். ஆண்டவர் அவ்வாறு பவுலைக் கடிந்து கொள்ளவில்லை. அந்த முள் பவுலுக்கு அவசியமென்று கண்டு அத்தற்கேற்றாற்போல் உத்தரவு கொடுத்தார். ஆண்டவர் நாம் கேட்டதைக்கொடுப்பது ஜெபத்துக்கு உத்தரவாயிருப்பது போலவே, அவர் மறுப்பதும் உத்தரவாகும். இதில் பழகின தேவமக்களுக்கு இதன் ரகசியம் தெரியும்.

**4. கிடைத்த உத்தரவு**

"என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார். உன் பலவீனத்தை நான் அறிவேன். பாவத்தையல்ல, சரீரத்தில் நீ அனுபவிக்கும் வேதனை உனக்கு அவசியம். உன் பார்வையில் நீ எப்போதும் தாழ்ந்திருப்பதற்கு அது அவசியம். ஆனால் நான் உன்னைக் கைவிட மாட்டேன். என் கிருபை உனக்குப் போதும் உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். அதாவது முள்ளை அகற்றாமலே முள்ளைச் சகிக்கும் தமது கிருபையை அளித்து, அவர் பலவீனத்தில் தமது பலத்தைப் பூரணமாய் விளங்கச் செய்கிறார். கிருபை என்னும் வார்த்தையை நாம் எளிதாகச் சொல்லிவிடுகிறோம். அதன் அர்த்தத்தை அறியோம். கிருபை வல்லமையுள்ளது அது சமுத்திரப் பிரவாகம் போல் வந்து நம்மைத் தாக்குகிறது. முள்ளால் உண்டாகும் வேதனைக்கு மேலான பலம் கிருபைக்கு உண்டு. பவுலே என் உள்ளத்திலிருந்து பிரவாகிக்கும் அன்பும், கிருபையும் உன்னைத் தாங்கும். பலவீனம் என்று நீ உணருகிற இடத்திலே தேவபலம் உன்னைக் காக்கும், பயப்படாதே என்கிறார். பவுலின் முள் இன்னதென்று திட்டமாய் தெரியாதிருப்பது ஒரு வகைக்கு நல்லது. நமது முள் அதைப் பார்க்கிலும் கொடியதென்று நாம் சொல்ல நேரிடும். ஒன்று நிச்சயம். நமது முள் தேகத்தைப் பற்றினதோ, மனதைப் பற்றினதோ அது என்ன பாடாயிருந்தாலும் அதனாலே நமது ஜீவியமும் ஊழியமும் பாழாகும் என்று ஆண்டவர் கண்டால், அதை உடனே அகற்றிவிடுவார். அது நமது ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் அவசியம் என்று கண்டால், ஆண்டவர் அதை

நீக்காமல் தமது கிருபையினால் நம்மைத் தாங்கித் தமது பலம் நமது பலவீனத்தில் பூரணமாய் விளங்கச் செய்வார்.

**5. அப்போஸ்தலன் செய்த தீர்மானம்**

ஆண்டவர் சித்தமின்னது என்று பவுல் அறிந்தவுடனே காரியம் முழுவதும் மாறிவிட்டது. தமது முள்ளைப்பற்றிய ஒரு புதுப்பார்வை அவருக்குக் கிடைத்தது. பரதீசுக்குள் பிரவேசித்ததைப்பற்றி இனிப் பேசமாட்டார். தமது முள்ளைப் பற்றியும் இனி நினைக்கமாட்டார். கிறிஸ்துவின் கிருபை தமக்குக் கிடைத்தால் வேதனையுள்ளமுள்ளும் அவமானமும் நீங்கிப்போகும் என்பதல்ல. பாடுகளும் நிந்தைகளும் முன்போலவே இருக்கும். ஆனால் அவர் மனதில் பெரிய அமைதி உண்டானது. என்ன சொல்லுகிறார்? “ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன், ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும் நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்” ஆ, என்ன மாறுதல்! முன்னே அவர் வெறுத்த காரியங்களை, தம்மைவிட்டு நீங்கும்படி ஜெபித்த காரியங்களை இப்போது சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். முள்வேதனை மாறிவிடவில்லை. அவமானங்கள் நீங்கிவிட வில்லை. அவைகள் சந்தோஷமான காரியங்கள் அல்ல. ஆனால் ஆவிக்குரிய மேலான ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதற்கு, பிறருக்கு அவர் பிரயோஜனமா யிருப்பதற்கு தேவ கிருபையால் அவைகள் நல்ல சாதனங்களாயிருந்தன. பரமபிதா நம்மை வேதனையான, சங்கடமான நிலைமையில் வைத்திருப்பது அவருக்குச் சித்தமானால், அது நீங்கும்படி போராடாமல், அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதே கடமை. நமக்கு அது வேதனையாயிருந்தாலும் அதைப் பொறுமையோடு சகித்து ஊழியஞ்செய்யும்போது, மற்றவர்கள் அதனால் ஆசீர்வதிக்கப் படுவார்கள். அநேகருடைய இரட்சிப்பைக் கருதியே ஆண்டவர் நம்மை இடுக்கணில் வைத்திருக்கலாம். அவர் கிருபை நமக்குப் போதும். எந்தத் துன்பமும் தேவகிருபையை மேற்கொள்ள

முடியாது. நாம் நமது பாடுகளை ஒருவாறு சகித்துக் கொள்ளலாம். ஆனால் அப்போஸ்தலனைப்போல அவைகளில் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டும் கிருபை இன்னும் நமக்குக் கிடைக்கவில்லையே. அந்த கிருபையின் பெருக்கத்தை நாம் அறிய வேண்டும்.

# 100. மறைவானவை வெளியானவை

***"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாண வார்த்தை களின்படி எல்லாம் செய்வதற்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா. 29:29).***

## 1. மனிதன் ஆராய்ச்சிக் குணமுள்ளவன்

ஆராயும் சுபாவம் கடவுளால் கொடுக்கப்பட்டது. மறைவான விஷயங்களை, தெரியாத காரியங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மனிதன் விரும்புகிறான். இது தப்பிதமல்ல. அப்படியே குழந்தைகள் பேச ஆரம்பித்தவுடனே, அது ஏன்? என்ன, எங்கே? எப்படியென்று ஆயிரம் கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர்களைச் சும்மாயிருக்கும்படி அதட்டுவது சரியல்ல. மறைவான காரியங்களை அறியும் ஆவல் மனிதனுக்கு இல்லாவிடில் நூதனமான விஷயங்களை அவன் கண்டுபிடிப்பதில்லை. உலகத்தில் யாதொரு அபிவிருத்தி, தேர்ச்சி, அனுகூலங்களை நாம் காணமாட்டோம். மனிதன் எவ்வளவு நூதன காரியங்களைத் தன் ஆராய்ச்சியால் அறிந்து கொண்டாலும், இன்னும் அவனுக்கு மறைவான காரியங்கள் உண்டு. இம்மட்டும் வா, மிஞ்சி வராதே என்று கடவுள் நமது ஆராய்ச்சிக்கும் ஒரு எல்லையைக் குறித்திருக்கிறார். மலையிலுள்ள தோட்டங்களைச்சுற்றிப் பார்க்கும்போது ஓரிடத்தில் வந்ததும் "உட்பிரவேசிக்கக் கூடாது" என்று ஒரு பலகை போட்டிருக்கும். மீறிப் போகிறவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். அந்தப் பாகம் எஜமானுக்கே உரியது. அதுபோலவே கடவுள் விஷயத்திலும் நாம்

அறியக்கூடிய வெளியரங்கமான காரியங்களும், நாம் அறிய முடியாத மறைவான காரியங்களும் உண்டு. இந்த மறைவான காரியங்கள் கர்த்தருக்கே உரியவை. மறைவானவைகளை நாம் அறியமுடியாமற்போகும்போது முறுமுறுக்கிறோம். அல்லது மறைவானவைகள் என்பதில்லை, காணப்படுகிறவைகளே உள்ளவைகள் என்று பேசுகிறோம். வெளியானவைகள் இருப்பதுபோலவே மறைவானவைகளும் இருப்பது நிச்சயம். நாம் அவைகளைக் காணாததினாலே அவைகள் இல்லையென்று மறுப்பது சரியல்ல.

## 2. வெளியான காரியங்களுக்கும் மறைவான காரியங்களுக்கும் சம்பந்தம் உண்டு

வெளியான காரியங்கள் என்பது நாம் காணக்கூடிய, தொடக்கூடிய, அனுபவிக்கக் கூடிய காரியங்கள். மறைவான காரியங்கள் என்பது நாம் காணக்கூடாத, தொடக்கூடாத அனுபவிக்கக்கூடாத காரியங்கள், வெளியான காரியங்கள் இருப்பதுபோலவே மறைவான காரியங்களும் இருக்கின்றன. ஆனால் அவைகள் மூடப்பட்டிருப்பதால் நாம் காண்கிறதில்லை. காணப்படுகிறவைகளோடு நமக்கு அனுபவமிருப்பதால் அவைகள் நமக்கு நிச்சயமாயிருக்கின்றன. காணப்படாதவைகளோடு நமக்கு அனுபவமில்லாததால் அவைகளை நாம் நம்புகிறதில்லை. ஆனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒவ்வொரு காரியமும் மறைவான காரியத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. மறைவான காரியங்களை நாம் அறிந்துகொள்ளும்படிக்கே வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் நமக்கு அருளப்பட்டிருக்கின்றன. நாம் காண்கிற, தொடுகிற ஒவ்வொரு காரியமும் நாம் காணாத, தொடக்கூடாத மறைவான காரியத்துக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் காண்கிறது சடப்பொருள், காணாதது ஆவிக்குரியது. இப்பிரபஞ்சம் சடப்பொருள். நாம் காண்கிற பிரபஞ்சம் நாம் காணமுடியாத பெரிய மனதை வெளிப்படுத்துகிறது. பிரபஞ்சம் தானாக வரவில்லை. அதன் ஒற்றுமை ஆளுகையைக் கவனிக்கும்போது அதை உண்டுபண்ணின ஞானமுள்ளமனது வெளிப்படுகிறது. அந்த மனதே கடவுள், அவரே மறைவானவர். "காணப்படாத அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவை உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே தெளிவாய்க்காணப்படுகின்றன" (ரோம. 1:20). இதிலே வெளிப்படுத்தப்பட்டது உலகம், மறைவானது கடவுள். ஆனால் கடவுளில்லாமல்

உலகமில்லை. ஆகையால் காணப்படும் உலகம் மறைவான கடவுளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

ஆண்டவர் செய்த உபதேசத்தின் போங்கைக் கவனிப்போம். அவர் ஆவிக்குரிய மறைவான காரியங்களை நமக்கு வெளிப்படுத்த வந்தார். மறைவான நித்திய காரியங்களை இருக்கிறபடி சொல்லமுடியாமல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற நமக்குத் தெரிந்த சாதாரணமான காரியங்களைக் கொண்டு உவமைகளாகப் பேசினார். அவர் உபயோகித்த வார்த்தைகள் முடிவான காரியங்களாயிராமல் மறைவானவைகளை வெளிப்படுத்துவதற்கு அடையாளங்களாயிருந்தன. கிறிஸ்துவுக்கும் நமக்கும் இருக்கவேண்டிய ஐக்கியத்துக்கு திராட்சைச் செடியை உவமானமாகப் பேசினார். கடவுளை நமது பிதா என்று போதித்தார். பெற்றோராகிய நம்மிடத்திலிருந்து அவர் இந்த பேரைத் தெரிந்து கொள்ளவில்லை. கடவுள் ஒருவரே மெய்யான பிதா. தகப்பன்மார் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை அந்தப் பிதாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். நாம் புகிக்கிற போஜனம் ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவுக்கு அடையாளம். நாம் பானம்பண்ணும் தண்ணீர் ஜீவதண்ணீருக்கு அடையாளம். நமது வஸ்திரம் நித்தியமாய் நாம் தரிக்கும் நீதியின் வஸ்திரத்திற்கு அடையாளம். நாம் சம்பாதிக்கிற பொருள் பரம பொக்கிஷத்திற்கு அடையாளம். நமக்குள் இருக்கும் அன்பு சிநேகம் கடவுளின் மகத்துவமான அன்புக்கு அடையாளம். ஆகவே காணப்படுகிற, நாம் அனுபவிக்கிற ஒவ்வொன்றும் மறைவான நித்திய காரியங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தப்பட்டவைகள் நம்முடையவைகள் ஏன்? இவைகளின் மூலமாய் நாம் மறைவானவைகளை அறிந்து அவைகளை அனுபவிக்கும்படிக்கே.

### 3. மறைவானவைகளென்றும் வெளியானவையென்றும் கடவுள் பிரித்துவைத்த நோக்கம் என்ன?

“நியாயப்பிரமாணத்தின்படி செய்வதற்கு” என்று வசனம் கூறுகிறது. அதாவது வெளிப்படுத்தப்பட்டவைகளின் பிரமாணத்தை அறிந்து அதற்கு நாம் கீழ்ப்படியும்போது மறைவானவைகளோடு சம்பந்தப்படுகிறோம். மின்சாரத்தின் பிரயோஜனம் எவ்வளவு? ஓர் காலத்தில் மனிதன் அதற்குப் பயந்து நடுங்கினான். அதனால் அழிவுவராதபடி அதை

விலக்கும் உபாயத்தைக் கண்டுபிடித்தான். ஆனால் அவன் பிரமாணத்தைப் பொறுமையுடன் ஆராய்ந்து படித்து, அதற்குக் கீழ்ப்படிந்தபடியால், அதன் சக்தியைக் கொண்டு எவ்வளவோ பிரயோஜனத்தைக் கண்டான். விளக்குகள் ஜோதியாய்ப் பிரகாசிப்பதும், செய்திகள் அனுப்புவதும், அச்சு எந்திரங்கள் வேலை செய்வதும், வண்டிகள் ஓடுவதும், விசிறிகள் அனலைப் போக்குவதும், இன்னும் பலவேலைகள் நடப்பதும் மின்சாரத்தின் சக்தியல்லவா? எத்தனையோ ஆண்டுகளாக மறைந்திருந்த வல்லமையின் பிரயோஜனமும் பிரமாணத்தை அனுசரித்து நடந்தபோது வெளிப்பட்டன ஜெபத்தை எடுத்துக் கொள்வோம். அதிலே மறைவானதும் வெளிப்பட்டதும் உண்டு. கடவுள் மறைவானவர். ஊக்கமான ஜெபத்தில் மனிதன் கடவுளைத் தொடுகிறான். பரத்தின் மறைவான ஆசீர்வாதங்கள் வெளியரங்கமாய் அவனுக்குப்பலிக்கின்றன. ஜெபப் பிரமாணத்துக்கு ஒருவன் கீழ்ப்படியும்போது மறைவான உன்னதத்தோடு அவன் சம்பந்தப்படுகிறான் இவற்றை நாம் இன்னும் அறியாதிருக்கிறோமா? ஒரு புஷ்பத்தை எடுத்து கொள்வோம். அங்கே வடிவம், நிறம், வாசனை வெளியாக்கப் பட்டவைகள். ஒருவன் அதன் பிரமாணத்தை அறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து பயிர்செய்வானானால் கடவுள் சித்தத்திற் கொப்பான புஷ்பங்களைக் கண்டடைவான். அது மாத்திரமல்ல, அந்தப் புஷ்பத்தின் வாசனையை முகரும் பக்தன்: என் பிதா எவ்வளவு நறுமணம் பொருந்தினவரென்று மகிழுகிறான். ஆவிக்குரியவன் சகலத்திலும் கடவுளைக் கண்டானந்திக்கிறான். காற்று வீசுகிறது; அதன் சத்தத்தைக் கேட்கிறோம். அது வெளியான காரியம், ஆனால் அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்பதோ மறைவான காரியம். மறைவானவைகள் கர்த்தருக்கே உரியவை. ஒருவன் காற்றின் பிரமாணத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படியும்போது எத்தனையோ விஷயங்களில் அதைத்தனக்குப் பிரயோஜன மாக்கிக்கொள்ளுகிறான். நமது மனதைப்பற்றி நமக்கென்ன தெரியும்? அதன் தன்மை என்ன? அதன் இருப்பிடம் எங்கே? மனோவாராய்ச்சி சாஸ்திரம் தற்காலம் விசேஷம். மனதைப்பற்றி எத்தனையோ அருமையான காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மனவேகம், வாயுவேகம். ஆனால் மனதிற்கு இருப்பிடம் இன்னும் தெரியவில்லை. சிலர் மூளையே மனது என்கிறார்கள். மற்றவர்கள் மனதுக்கு மூளை கருவி

என்கிறார்கள். மூளையே மனமானால் மூளையிருந்தும் புத்தியில்லாதவர்களிருக்கிறார்களே. மூளையே மனமானால் மூளையைப்பற்றிப் படிக்கிற மனம் அல்லது புத்தி எங்கேயிருந்து வந்தது? மனுஷன் செத்து அவன் மூளை அழிந்தாலும் அவன் மனம், ஞாபகம் அழியாதிருக்கிறதே, ஐசுவரியவான் செத்து அவன் மூளை அழிந்தும், அவன் தன் சகோதரரைப்பற்றி நினைத்ததாக ஆண்டவர் சொல்லுகிறாரே, எண்ணத்துக்கு அழிவில்லை. மனது மறைவான காரியம். மறைவானது கடவுளுக்குரியது. என்றாலும் மனதைப்பற்றி வெளிப்படுத்தப்பட்ட பிரமாணத்தை நாம் அனுசரித்து நடக்கும்போது மனதாலுண்டாகும் நன்மைகள் மிகுதி. வார்த்தைகள், பிரசங்கங்கள், பாட்டுகள், புஸ்தகங்கள், அரிய பெரிய வேலைகள் யாவும் யோசனையின் பலன்களே. இவைகளை நாம் காண்கிறோம். இவைகள் புறப்படும் ஊற்றாகிய மனதோ மறைவாயிருக்கிறது. அதன் இரகசியங்களைக் கடவுள் அறிவார். "என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்" எண்ணம் எனக்குள் உதிக்குமுன்பே, அது வார்த்தைகளாகப் புறப்படுமுன்பே, எண்ணம் எனக்குள் தோன்றாமல் இன்னும் தூரத்திலிருக்கும்போதே கர்த்தர் அதை அறிந்திருக்கிறார். மனதின் ரகசியம் கடவுளுக்குரியது. இதுபோலவே கிறிஸ்துவும் அறியப்பட்டவரும், அறியப்படாத வருமாக இருக்கிறார். அவர் மாம்சத்தில் வெளிப்பட்டதையும், அவர் செய்த காரியங்களையும், அவர் பாடு, மரணம், உயிர்த்தெழுதலையும் சரித்திர உண்மைகளாக ஏற்றுக்கொள் கிறோம். அவரில் வெளிப்பட்ட காரியங்கள் அவைகள். ஆகிலும் நாம் அறிந்தோம் என்று நினைக்கிற ஒவ்வொரு காரியத்திலும் மறைவான விஷயங்களுமுண்டு. அவர் மனிதனாக மாத்திரம் இருந்தால் அவர் காரியங்கள் யாவும் வெளியரங்கமாயிருக்கும். ஆனால் அவர் மறைவான கடவுளும் வெளியான மனுஷனுமான ஒரே புருஷனுமாகத் தோன்றினபடியால், அவரில் மறைவானதும் வெளியானதுமான காரியங்கள் இருக்க வேண்டியது அவசியம். ஆளே அற்புத புருஷனாயிருக்கும்போது அவர் காரியங்களேன் அற்புதமா யிருக்கமாட்டாது? ஆகையால் அவர் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை நாம் அறிந்துகொண்டோம் என்று நினைக்கிற காரியங்களிலே மறைவான ரகசியங்களும் உண்டென்பது நிச்சயம். நாம் அவரை அறிந்து அவர்

பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது அவரில் வெளிப் பட்டிருக்கிற காரியங்கள் மூலமாய் அவரிலுள்ள மறைவான ரகசியங்களையும் படிப்படியாய் அறியக்கூடும்.

கடவுள் சர்வத்தையும் ஆளுகிறவர். அவரை நம்பி யிருக்கும் பிள்ளைகளை விசேஷமாய் கவனித்து நடத்துகிறவர், கடவுள் நம்மை நடத்தும்போதே சில சமயங்களில் நாம் கலங்குகிறோம். அவர் நடத்துதலில் வெளியானவைகளும், மறைவானவைகளும் கலந்திருப்பதே நமது கலக்கத்திற்குக் காரணம். நமது ஜீவியத்தில் சில காரியங்கள் இன்னும் மூடலாகவேயிருக்கின்றன. எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும் காரியம் விளங்கவில்லை. எல்லாம் நமக்கு விளங்கவேண்டு மென்பது தேவசித்தமல்ல. நமக்கு விளங்காத விஷயங்கள், நாம் அறியாத காரியங்கள் நமது பரமபிதாவுக்குப் பிரத்தியட்சமாகத் தெரியும். இது எப்படியாகும் என்று நாம் அறியமாட்டோம், அவர் அறிவார். அவர் அறிந்திருக்கிறார் என்பதே நமக்குப் பெரிய ஆறுதல். நாம் கர்த்தரை முற்றிலும் நம்பிப்பிழைப்பதற்கு காரியங்கள் நமக்கு மறைவாயிருப்பது அவசியம். எல்லாம் அறிந்த பரம பிதாவின் சித்தத்திற்கு நாம் பூரணமாய் கீழடங்கிப் பிழைப்பதே நமக்குப் பாக்கியம். "மறைவானவைகள் நமது தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப் பட்டவைகளோ... நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்."

---------

# எங்களது பிற தமிழ் வெளியீடுகள்

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் | |
|---|---|---|---|
| **1.** | **தெளிதேன் விருந்து - பாகம் 1** | **பாஸ்டர் பி. தங்கமணி** | |
| 2. | தெளிதேன் விருந்து - பாகம் 2 | பாஸ்டர் பி. தங்கமணி | |
| 3. | தெளிதேன் விருந்து - பாகம் 3 | பாஸ்டர் பி. தங்கமணி | |
| **4.** | **தெளிதேன் விருந்து - பாகம் 4** | **பாஸ்டர் பி. தங்கமணி** | |
| **5.** | **தெளிதேன் விருந்து - பாகம் 5** | **பாஸ்டர் பி. தங்கமணி** | |
| 6. | ஓசியா - மீகா | டி.ஏ. துரோவர் | |
| 7. | நாகூம் - மல்கியா | டி.ஏ. துரோவர் | |
| 8. | இயேசு திரும்ப வருகிறார் | தியோடர் வில்லியம்ஸ் | |
| **9.** | **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** | **கிளாரன்ஸ் லார்க்கின்** | |
| 10. | புதிய ஏற்பாடு - ஓர் அறிமுகம் | சே. சுந்தரராசன் | |
| 11. | பழைய ஏற்பாடு - ஓர் அறிமுகம் | சே. சுந்தரராசன் | |
| 12. | ஆமோஸ் | ஜெசுதாசன் ஜெயராஜ் | |
| 13. | வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை | ஆர்.என். ஆசீர்வாதம் | |
| 14. | சத்திய வேதாகமப் பெயர் அகராதி | ஆர்.என். ஆசீர்வாதம் | |
| 15. | பிரசங்கக் குறிப்புகள்(இயேசுவின் உவமைகள்) | கிராப்ட் எம். பென்ட்ஸ் | |
| 16. | பிரசங்கக் குறிப்புகள்(பவுலடியாரின் நிருபங்கள்) | ஆர்ச்சி எல். எட்வர்ட்ஸ் | |
| 17. | பிரசங்கி விளக்கவுரை | எம். சாலமோன் | * |
| 18. | வெளிப்படுத்தல் புத்தகம் | கிளாரன்ஸ் லார்க்கின் | * |
| **19.** | **வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை** | கொர்னீலியஸ் மனோகரன் | |
| 20. | வேத வினா விடை | இ.எல்.எஸ். தொகுப்பு | |
| **21.** | **வேத வியாக்கியானம்** | **மதன்ராஜ்** | |
| 22. | வேதாகமத்திலே 5000 கேள்வி..., விடைகளும் | பாஸ்டர் பி. தங்கமணி | |
| 23. | விசுவாச வாழ்வு | தியோடர் வில்லியம்ஸ் | |
| 24. | கிறிஸ்தவப் புனித வாழ்க்கை | வாச்மன் நீ | |
| 25. | இயேசுவே பிரதான ஆசாரியர் | சே. சுந்தரராசன் | |
| 26. | வேதாகம சொல் அகராதி | எச்.ஜே.ஆப்பில்பி | * |
| 27. | ஆசரிப்புக் கூடாரம் | லாரன்ஸ் டி. சேம்பர்ஸ் | |
| 28. | எபேசியர் விளக்கவுரை | பீட்டர் நேலோ | |
| 29. | பரிசுத்த வேதாகம எண் அகராதி | சா. சௌந்திரராசன் | |
| 30. | நூறு வேத பாடங்கள் - பாகம் 1 | ஆல்பன் டக்ளஸ் | |
| 31. | நூறு வேத பாடங்கள் - பாகம் 2 | ஆல்பன் டக்ளஸ் | |
| 32. | இயேசு வாழ்ந்த நகரங்களும் நிகழ்ச்சிகளும் | சே. சுந்தரராசன் | |
| 33. | திருமறையில் பிற தெய்வங்கள் | ஜெசுதாசன் ஜெயராஜ் | |
| 34. | யாத்திராகமம் | தாமஸ் உவாக்கர் | * |
| 35. | உட்காரு, நட, நில் | வாச்மன் நீ | |
| 36. | திரித்துவம் | டொனால்டு-ரொனால்டு ஹாரிஸ் | |
| 37. | மணவாளனின் தோழன் | ராபர்ட் ஹென்றி சைக்ஸ் | * |
| **38.** | **தேவனுடைய இடது கரம்** | **டேவிட் டபிள்யூ.எஃப்.வாங்** | |
| **39.** | **ஆசரிப்புக் கூடாரம் மற்றும் உடன்படிக்...** | **ஆபிரகாம் பார்க்** | |
| 40. | சரோஜாவின் துணிவு | பக்தி | * |

| | | |
|---|---|---|
| 41. | திருவசனக் கதைகள் | எச்.பி. ராஜ்குமார் |
| 42. | தங்க வசனக் கதைகள் | எச்.பி. ராஜ்குமார் |
| 43. | நல்வழிக் கதைகள் | ஜே. அமிர்தராஜ் |
| 44. | காட்டின் நடுவே | எச்.பி. ராஜ்குமார் |
| 45. | கிறிஸ்தவ குடும்பம் | ஜெசி யார்டி |
| 46. | கிறிஸ்துவை ... கொண்டுள்ள இல்லம் | பில்லி கிரஹாம் |
| 47. | பால் உறவும் திருமணமும் | சகரியா பூணன் |
| 48. | சந்தோஷத்தின் இரகசியம் | பில்லி கிரஹாம் |
| 49. | கொல்லும் கொடிய பாவங்கள் ஏழு | பில்லி கிரஹாம் |
| 50. | ஜெபத்தில் சிறந்த சான்றோர் | சே. சுந்தரராசன் |
| 51. | பரிசுத்த வேதாகமமும் விஞ்ஞானமும் | எஸ்.டி. அம்புரோஸ் |
| 52. | இயேசுவின் பன்னிரண்டு சீடர்கள் | சே. சுந்தரராசன் |
| 53. | தேவதூதரும் மனுக்குலமும் | எஸ்.டி. அம்புரோஸ் |
| 54. | பண்டிகைகளும் பலிகளும் | சே. சுந்தரராசன் |
| 55. | ஸ்பர்ஜன் அறிவுரைகள் | சி.எச். ஸ்பர்ஜன் |
| 56. | நோயுற்ற நேரங்கள் | என். ஜாண் ஜெயானந்தம் |
| 57. | நிலைமாறாத உண்மைகள் | பேசிலியா சிலிங்க் |
| 58. | கடவுளைக் கண்டடைவது எப்படி? | பில்லி கிரஹாம் |
| 59. | கிறிஸ்து எனக்காக சிலுவையில் அறையப்பட்டார் | பவுல் டக்கர் |
| 60. | இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த வார்த் | ஜெறோம் |
| 61. | கிறிஸ்துவின் ஜீவியம் | எஸ். பரமானந்தம் |
| 62. | எதிர்காலத்தின் நம்பிக்கை | பில்லி கிரஹாம் |
| 63. | ஜெபமும் வேதாகம ஜெப வீரரும் | இ.எம். பவுண்ட்ஸ் |
| 64. | என் முழுமையும் அவருக்கே | பேசிலியா சிலிங்க் |
| 65. | பெண்கள் ஜெபிக்கும்போது நடப்பது என்ன? | ஈவ்லின் கிறிஸ்டன்சன் |
| 66. | இஸ்மவேல் என் சகோதரன் | பி.ஏ. ஹட்சன் டேலர் |
| 67. | சிலுவைப் பாதை | ராய் ஹெஸியன் |
| 68. | ஜெபத்தின் மூலம் வல்லமை | இ.எம். பவுண்ட்ஸ் |
| 69. | வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர் | பென்ஜமின் ஞானமாணிக்கம் |
| 70. | ஆத்தும வாஞ்சை | ஆஸ்வால்ட் ஸ்மித் |
| 71. | மோட்சப் பயணம் | ஜாண் பனியன் |
| 72. | மரணம் ஒரு முடிவல்ல | தியோடர் வில்லியம்ஸ் |
| 73. | உத்தம கிறிஸ்தவன் | கிறிஸ்தியான் உவைஸ் |
| 74. | மனந்திரும்புதல் | பேசிலியா சிலிங்க் |
| 75. | வியாதியின் மூலம் கடவுளின் ஆசீர்வாதம் | பேசிலியா சிலிங்க் |
| 76. | அன்பு, அமைதி நிலைகளின் புரட்சி | ஜார்ஜ் வெர்வர் |
| 77. | நீங்கள் எந்த சபை ? | சாமுவேல் விஜயகுமார் |
| 78. | வன்யா | மிர்னா கிராண்ட் |
| 79. | புஷ்பம்மாள் | ஏமி கார்மைக்கல் |
| 80. | டாக்டர் ஐடா ஸ்கடர் | திலகவதி பால் |
| 81. | ஜியார்ஜ் முல்லர் | பேசில் மில்லர் |
| 82. | சி.டி. ஸ்டட் | கோயில் பிச்சை |
| 83. | ரீஸ் ஹவல்ஸ் | இ.எல்.எஸ். தொகுப்பு |
| 84. | அக்கினியால் பதிலளிக்கும் கடவுள் | மார்கரெட் கிளீட்டர் |

| | | |
|---|---|---|
| 85. | செம்புலிங்கம் | யூ. ஹாப்கின்ஸ் |
| 86. | பிதாவே என்று அழைக்கத் துணிந்தேன் | பில்குயிஸ் ஷேக் |
| 87. | படுவேதனையில் பரம வெற்றி | ரிச்சர்ட் உம்பிராண்ட் |
| 88. | சாமுவேல் மாரிஸ் | லின்ட்லே பால்ட்வின் |
| 89. | ஹட்சன் டெய்லர் | ஹோவார்டு டெய்லர் |
| 90. | சாது சுந்தர் சிங் | ஆன்ரு பிரபுகுமார் |
| 91. | மார்ட்டின் லூத்தர் | கோயில் பிச்சை |
| 92. | டேவிட் லிவிங்ஸ்டன் | ஜே.எச். வொர்செஸ்டர் |
| 93. | மூடி பிரசங்கியார் | சாமுவேல் ஜெபசிங் |
| 94. | ஒளிவீசும் சுடர்கள் | A. R. இராஜரத்தினம் |
| 95. | ஜியார்ஜ் ஒயிட்பீல்டு | பிலிப் ஏ. கிறிஸ்ட் |
| 96. | பவுல் அடியாரின் வாழ்க்கை | சே. சுந்தரராசன் |
| 97. | மகத்தான மிஷனெரிகளின் ஆழ்ந்த அனுபவங்கள் | இ.எல்.எஸ். தொகுப்பு |
| 98. | யோனத்தான் கோஃபோர்த் | இ.ஜி. பாக்கியராஜ் |
| 99. | ஒரு யோகியின் மறுபிறப்பு | ரவீந்திரநாத் மகராஜ் |
| 100. | காபாவிலிருந்து கல்வாரிக்கு | பி.ஏ. ஹட்சன் டேலர் |
| 101. | கிளாடிஸ் அயில்வார்டு | என். இராபர்ட் |
| 102. | நடாஷா என்னை மன்னித்துவிடு | இ.ஜி. பாக்கியராஜ் |
| 103. | நிலத்தில் விழுந்த கோதுமை மணி | எஸ். லலிதா செல்லப்பா |
| 104. | ஏமி கார்மைக்கல் அம்மையார் | திலகவதி பால் |
| 105. | வில்லியம் கேரி | ஜே.பி. மிடில் புரூக் |
| 106. | கர்த்தரின் கரத்தில் காட்டு மனிதர் | ஜேம்ஸ் - மார்டி ஹெப்லி |
| 107. | ஜெபவீரன் ஜாண் ஹைடு | சாமுவேல் ஜெயசிங் |
| 107. | இருட்டறை அரசி | கிறிஸ்தீனாள் திசாய் |
| 108. | சிலுவை வீரர்கள் | தியோடர் வில்லியம்ஸ் |
| 110. | **பெண்களின்... பண்டிதமேரி இராமாபாய்** | **சே. சுந்தரராசன்** |
| 111. | சார்லஸ் பின்னியின் பிரசங்கங்கள் | பென்ஜமின் ஞானமாணிக்கம் |
| 112. | மூடி பிரசங்கங்கள் | தாமஸ் இரத்தினம் |
| 113. | அருளுரை உபமானங்கள் | எஸ்.டி. அம்புரோஸ் |
| 114. | பிரசங்கிமார்களுக்கும் வேதாகம மாணவருக்கும் | இ.எல்.எஸ். தொகுப்பு |
| 115. | ஸ்பர்ஜன் பிரசங்கங்கள் | சி.எச். ஸ்பர்ஜன் |
| 116. | வெற்றி வாழ்வுக்குரிய அருளுரைகள் | என். இராபர்ட் |
| 117. | வேதாகம வீரர்கள் | கிளோவிஸ் ஜி. சேப்பல் |
| 118. | விசுவாச தின தியானம் | சி.எச். ஸ்பர்ஜன் |
| 119. | அன்றாடக அமுதம் | ரேய்மண்ட் எட்மன் |
| 120. | பாலைவன நீரோடைகள் | திருமதி சார்லஸ் கௌமேன் |
| 121. | உந்தன் சிலுவை என்தன் மேன்மை | த. சம்பத் பகவான்தாஸ் |
| 122. | மலரைப் பறித்தது யார் | எம்.ஜெ.ஜெக்கப் |

**•குறியிட்ட புத்தகங்கள் இருப்பில் இல்லை**

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையகத்திலும் மற்றும் கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும். (முழுவிலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

## *கிளைகள்*

**EVANGELICAL LITERATURE SERVICE**
69/3, Mookathal Street, (Next to CSI Missionary Chapel) Purasawalkam,
Chennai-600 007, Tamil Nadu.
Tel. : 044-2642 2722 / 2661 0888

**EVANGELICAL LITERATURE SERVICE**
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu. Tel. : 044-2851 4403

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 1, Ground Floor, 200 Feet Road,
Kannagi Nagar, Kolathur,
Chennai - 600 099, Tamil Nadu
Mobile No.: 78240 01747

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004, Tamil Nadu
Tel. : 0416-222 4808, 222 5808

**EVANGELICAL LITERATURE SERVICE**
Vasavi Complex, 1250, Big Bazaar St.,
Coimbatore - 641001, Tamil Nadu.
Tel. : 0422-239 0694

**EVANGELICAL LITERATURE SERVICE**
Jeevan Complex, 84, 100 Feet Road,
Gandhipuram, Coimbatore - 641 012,
Tamil Nadu. Tel. : 0422-249 4434

**EVANGELICAL LITERATURE SERVICE**
G4, Ground Floor, Ashoka Enclave,
12, Nethaji Road, Frazer Town,
Bangalore - 560 005, Karnataka,
Tel. : 080-2547 3388/2547 8833

**EVANGELICAL LITERATURE SERVICE**
582, Oil Mill Road, Aravind Nagar,
Bangalore - 560 084, Karnataka,
Tel. : 080-2546 7014

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 1/1A, Ground Floor, 2nd Main,
(Near Mathikere Signal), Mathikere
Bangalore - 560 054, Karnataka.
Tel.: 080-2337 8087

**EVANGELICAL LITERATURE SERVICE**
Bangalore Baptist Hospital Compound,
Bellary Road, Hebbal,
Bangalore - 560 024, Karnataka.
Tel. : 080-2355 4455

**EVANGELICAL LITERATURE SERVICE**
Kesavadasapuram, Pattom P.O.,
Trivandrum - 695 004, Kerala.
Tel. : 0471-244 8916

**EVANGELICAL LITERATURE SERVICE**
Shop No.430-A3, Ascension Square,
Railway Station Road, Collectorate P.O.,
Kottayam - 686 002, Kerala.
Tel. : 0481-230 4790

**EVANGELICAL LITERATURE SERVICE**
F-II, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028, Maharashtra,
Tel. : 022-2437 9572

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab,
Tel. : 0161-222 1052

**EVANGELICAL LITERATURE SERVICE**
7A/4I, W.E.A. Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005.
Tel. : 011-2575 9431

**EVANGELICAL LITERATURE SERVICE**
CISHR Compound, 4th Mile,
Dimapur - 797 115, Nagaland.
Tel. : 03862-243 222

**EVANGELICAL LITERATURE SERVICE**
New No.35-71/2(Old No.35-73/1),
G.K.Colony (Near Naredmet Cross Road)
Sainikpuri, Secunderabad-500094,
Andhra Pradesh
Tel. : 040-2711 5533

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 50-50-32, Church Street,
T.P.T. Colony, (Near Gurudwar),
Visakhapatnam - 530 013,
Andhra Pradesh
Tel. : 0891-279 9588

**EVANGELICAL LITERATURE SERVICE**
PIMS Campus, Ganapathichettikulam,
Kalapet, Pondicherry - 605 014.
Tel. : 0413-265 5330

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.S.I. Holy Trinity Church,
Commissioner's Road, Ooty - 643 001,
Tamil Nadu, Tel. : 0423-244 6055

**EVANGELICAL LITERATURE SERVICE**
Scudder Memorial Hospital Compound,
Ranipet-632 401, Vellore Dt., Tamil Nadu
Tel. : 04172-27 1733

E.mail: <elshq@elsindia.org> Website: www.elsindia.org

**Online Store: www.christianbooksindia.com**

Pub. No. 368 - TAMIL

நூறு பிரசங்கங்கள் எனும் இந் நூலில் வேதத்தில் நாம் படிக்கும் பல வார்த்தைகள் மற்றும் இயேசுவின் போதனைகள் ஆகியவற்றைக் கொண்டு நேர்த்தியாய் எளிய நடையில் அனைவரும் புரிந்துக்கொள்ளும் வகையில் இந் நூலாசிரியர். கிறிஸ்தவ உலகில் நன்கு அறியப்பட்ட காலஞ்சென்ற தேவ ஊழியர் பரமானந்தம் அவர்கள் தெளிவாக எழுதியுள்ளார்.

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து போதித்த ஆழ்ந்த கருத்துக்களை அறிந்துகொள்ளவும். அவருடைய ஜீவ வார்த்தையான பரிசுத்த வேதாகமத்தில் ஆழமான நம்பிக்கை வைத்து, பல தவறான உபதேசங்களுக்கும். கொள்கைகளுக்கும் விலகிச் செல்லவும் இந் நூல் வழிகாட்டும். ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், போதகருக்கும், பிரசங்கிக்கும் அனைவருக்கும் துணை நூலாயிருக்கும். மேலும் இந் நூலை அவசியம் வாசித்து மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்வது மிகுந்த பலனைத் தரும்.

கர்த்தருடைய ஜனங்கள் இந் நூல் மூலம் ஆசீர்வதிக்கப்படுவதும், அவரோடுள்ள உறவு, ஐக்கியம் ஆகியவற்றில் விசுவாசிகள் மென்மேலும் வளரவேண்டுமென்பதும் இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கமாகும். இப் புத்தகத்தை கருத்துடன் படிப்பதால் தனிநபரும், போதகரும், குடும்பங்களும் இரட்சகரோடு உள்ள உறவில் அசையாமல் நிலைத்திருக்கவும், வளரவும், அவரில் ஐக்கியம் கொண்டு விசுவாசத்தில் பலங்கொண்டு, விபரீதமானக் கொள்கைகளுக்குத் தப்பி, தேவ கிருபையில் வளருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

# ONE HUNDRED SERMONS

## S. PARAMANANDAM

ELS INDIA

EVANGELICAL LITERATURE SERVICE
95A, Vepery High Road, Chennai - 600 007, India.
Tel. 044-25323231, 26420173, 26420743.
E-mail: elshq@elsindia.org, Website: www.elsindia.org,
Online Store: www.christianbooksindia.com

Price Rs. 290.00